கம்பன் காட்டும் வைணவப் பேருலகம்

அமுதன்



கவிதா வெளியிடு

கம்பர் காட்டும்
வைணவப் பேருலகம்

செந்தமிழ் வித்தகர், கம்பன் கலைமணி
முனைவர், புலவர் **அமுதன்**

கவிதா பப்ளிகேஷன்
தபால் பெட்டி எண் : 6123
8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை - 600 017.

கம்பர் காட்டும் வைணவப் பேருலகம்

முதற் பதிப்பு : டிசம்பர், 2005

விலை : ரூ.150.00

KAMBAR KAATTUM VAINAVAP PERULAGAM
by ***Dr. AMUTHAN***

First Edition : December, 2005
320 pages
KAVITHA PUBLICATION
Post Box No. : 6123
8, Masilamani Street,
Pondy Bazaar,
T. Nagar, Chennai - 600 017.
✆ 2436 4243, 2432 2177.
Telefax: 044-2436 4243
E-mail : kavitha_publication@yahoo.com
website : www.kavithapublication.com

ISBN : 81-8345-020-2
Price : Rs.150.00

ஒளி அச்சு : சு. அசோக்குமார் ✆ 94440 09048

அச்சிட்டோர் : சபரி பிராஸஸ்
சென்னை-14. போன் : 8480647

நுழைவாயில்

இன்பத்தை விரும்பும் உயிர்கள், அதனை அடைய முயலும் முயற்சியே வாழ்க்கையாகிறது.

ஆனால், அந்த இன்பம் எல்லோர்க்கும் எளிதில் கையழைக்கும் தூரத்தில் காட்சிப்பட்டு நிற்பதாய் இல்லை.

பலவேளைகளில், இன்பத்தையடைய முயலும் முயற்சிகள், துன்பத்தை மிகுவிக்கும் முயற்சிகளாக முடிந்து போகின்றன. இதற்குக் காரணம், இன்பத்தையடைய உயிர்கள் செல்லும் நெறிகள் சரியாய் அமைந்து விடாமையே.

நெறியல்லா நெறிச்சென்று, துன்புற்று, உயிர்கள் துடிப்பதைக் கண்டு துயர்பொறாச் சான்றோர்கள், தாங்கள் சென்றடைந்து இன்பமுற்ற வழிகளைத், துன்புறுகின்ற உயிர்களுக்குத் துலக்கிக் காட்ட முன் வந்தனர்.

'யாம் பெற்ற இன்பம்; பெறுக இவ்வையகம்' என்று, துன்பத்தால் துவளும் உயிர்கட்கு, அவர்கள் அன்பால் காட்ட விழைந்த விளைவுகளே இலக்கியங்கள் ஆயின; இதிகாசங்கள் ஆயின. அவ்வாறு, உலகத்து மக்கட்கு இன்பம் பெற ஆகும் நெறி இவை; ஆகா நெறி இவையென்று அறிவிக்க முயன்ற சான்றோர்களுள், கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானும் ஒருவர் ஆவார்.

அவர், தம் மக்கள் நல்லின்பம் பெற்று வாழத் தாம் கண்ட நெறிகளைக் 'கம்ப ராமாயணம்' எனும் காவியத்தில் தந்து சென்றுள்ளார். கம்ப ராமாயணம், மக்கள் இறையின்பம் பெற்று, இனிதே வாழ, வைணவ சமய நெறியை உலகுக்கு உரைக்கிறது.

பரம்பொருள் இராமனாய்த் தோன்றி, வாழ்ந்து காட்டிப் போன நெறியைக் கம்பர் மக்களுக்குக் காட்ட முயலுகிறார்.

இராமன் சென்ற நெறி வைணவ சமயம், உலகுக்குக் காட்டும் வாழ்நெறியாக இலங்குவதைக் கம்பர் உணர்கிறார்.

நம் நிலத்தின் தொன்மைமிகு சமயங்களுள் ஒன்றான வைணவ சமயத்தின் இயல்பை, அதன் கோட்பாட்டைக் கம்பர் கசடறக் கற்றுத் தெளிந்திருக்கிறார்.

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஐந்து பொருள்களை அறிந்து கொள்ளும் அறிவுடையராய் இருக்க வேண்டுமென வைணவ சமயம் கருதுகிறது.

இறை இயல்பு, உயிர் இயல்பு, நெறிய இயல்பு, தடை இயல்பு, பேற்றின் இயல்பு ஆகிய இவை ஐந்தின் இயல்புகளையும் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும் என வைணவம் கருதுகிறது.

இந்த ஐந்தையும் அறியும் அறிவையே 'அர்த்த பஞ்சக ஞானம்' என்று அது கூறுகிறது. வேதம், இதிகாசம், புராண இலக்கியங்கள் யாவுமே இந்த அர்த்த பஞ்சக ஞானத்துள் அடங்கி நிற்கின்றன.

இந்த ஐவகை அறிவைத்தான், கம்பராமாயணமும் உலகுக்கு அறிவிக்கிறது. கம்பர் வைணவப் பேருலகில் நுழைந்து கண்ட இந்த ஐந்து பேரறிவின் விசாலம் நம்மை மலைக்க வைக்கிறது; வியப்பின் விளிம்பில் நம்மை நிறுத்தி வைக்கிறது. கம்பர் கண்ட இந்த வைணவ ஞானத்தின் விரிவை, நான் கண்டு வியந்த வியப்பின் விளைவே இந்த நூலாய் விரிந்திருக்கிறது.

பல்லாண்டு கால உழைப்பின் விளைவாய் விளைந்த இந்நூலுக்கு முதுபெரும் தமிழ்ப் பேறிஞர், வாழும் மு.வ.வாக, தளர்விலும் தண்டுகாலூன்றாது, தமிழூன்றி நடந்து வாழும் முனைவர் ம.ரா.போ. குருசாமி ஐயா அவர்கள், அற்புதமான அணிந்துரை ஒன்றை நல்கியுள்ளார்.

அந்தப் பெருமகனார், இந்நூல், "என்று வெளிவரும்? என்று வெளி வரும்? எல்லோரும் அறிய எப்போது உலா வரும்?" என்று கண்டபோதெல்லாம் கனிவுறக் கேட்பார்கள். இந்நூல், இப்போது வெளியாகியிருப்பதை யறிந்து அந்தப் பெருமகனார் உள்ளம், பேருவகையில் திளைக்கும் என்பது திண்ணம்.

இந்நூலின் அழகுக்கு அழகு செய்வதுபோல், கவிஞர் பெருமகனார், 'கவிக்கோ' சிற்பி அவர்கள் அணிந்துரையெனும் பெயரில் ஓர் அழகுரை நல்கியுள்ளார்கள்.

தம்முடைய அழகுக் கவிதைகளால், நாடோறும் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செழிப்பித்து வளர்த்து வரும் அக்கவிஞர் கோவுக்கு என் உளம் நிறைந்த நன்றி மலர்களை உவகையோடு படைத்து மகிழ்கிறேன்.

நூல்களை அச்சில் வார்க்காமல், அழகில் வார்த்து வரும் கவிதா பதிப்பகம், சேது. சொக்கலிங்கம் அவர்கள் இந்நூலையும் அழகுற வடிவமைத்திருக்கும் நேர்த்திக்கு நன்றி குவிக்கின்றேன்.

- அமுதன்

26/76, பாலக்காட்டுப் பாதை,
பொள்ளாச்சி - 642 001.

அணிந்துரை

மூதுதமிழ் அறிஞர். ம.ரா.போ. குருசாமி அவர்கள், கோவை.

கம்ப ராமாயணம் தமிழ் இலக்கிய வாணர்கள் கவனத்தைக் கவர்ந்துள்ள நூல்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது. கம்ப ராமாயணத்தைச் சுவைத்தும் கணித்தும் எழுந்துள்ள நூல்கள் மிகப் பலவாகும். அத்துணை நூல்களிடையே டாக்டர். அமுதன் உருவாக்கிய 'கம்பன் காட்டும் வைணவப் பேருலகம்' என்று மகுடமிட்டு எழுந்துள்ள இந்நூல் பல வகைகளில் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

உலக இலக்கிய அரங்கிலே இடைக்காலம் என்பது சமயச் சார்புடைய நூல்களே மிகுதியாக வழங்கிய பருவமாகும். இது ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளும் கருத்தாகும். எனவே, இடைக்கால இலக்கியங்களை ஆய்வதற்கு முனைவோர் சமய நாட்டம் கொண்டவர்களாகவும் சமயக் கருத்துக்களில் ஆழங் காற் பட்டவர்களாகவும் இருப்பது இன்றியமையாதது. கம்ப ராமாயணம், பெரிய புராணம் போன்ற படைப்புகளை இலக்கிய அணுகுமுறை மட்டுமே கொண்டு ஆராய்வதற்குத் தடை இல்லையெனினும், அத்தகு முயற்சிகள் படைப்பாளர்களாகிய கம்பர், சேக்கிழார் போன்றவர்களின் கவியுளம் காண்பதில் முழு நிறை வெற்றி காண மாட்டா. உவமை முதல் குறிப்புப் பொருள் வரை பாத்திரப் படைப்பு முதல் கட்டமைப்பு வரை... எத்துணைக் கோணங்களில் ஆராய்ந்தாலும் அவை ஆழ்ந்திருக்கும் கவியுளம் கண்டவை ஆகா.

'உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்' முதலான அலகிலா விளையாட்டுடைய தலைவரைச் சரண்புகு வழியிலிருந்து 'உலகம் ஓர்

ஏழும் ஏழும் எம்பெருமான் என்று ஏத்தி இறைஞ்சி' ஏவல் செய்வது வரை பதினாயிரம் பாடல்களின் ஊடும் பாவுமாகச் சமய உணர்வு செறிந்துள்ள கம்ப ராமாயணத்தைச் சமயக் கண்கொண்டு கணிப்பது கம்பருக்கு ஆற்ற வேண்டிய தீராக் கடனாகும். காண்டந்தோறும் கடவுள் வாழ்த்தாக முதற் செய்யுளை அமைத்ததோடு கவந்தன் முத்தி, கருடன் முத்தி போன்ற துதிப் பாடல்களாலும் பொலிவூட்டிய கம்பரின் இதயத்துக்கு நிறைவு தருவது சமயக் கண்கொண்டு ஆராயும் முயற்சி. மூல நூலும் பெரும்பாலான இராம காதைகளும் 'இராமாயணம்' என்றே பெயர் கொண்டு விளங்குகின்றன. ஆனால், கவிச்சக்கரவர்த்தி தாம் படைத்த நூலுக்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டதை மனங் கொள்ள வேண்டும்.

டாக்டர் அமுதன் அவர்கள் பொது நிலையில் சமயக் கருத்துக்கள் கவிச்சக்கரவர்த்தியின் காப்பியத்துள் எவ்வாறு அமைந்துள்ளன என்று ஆராயவில்லை. "கம்ப ராமாயணத்தில் எங்கும் பரந்து நிறைந்து காணப்படுபவன வைணவ சமயக் கருத்துக்களே யாதலால், வைணவ சமயக் கருத்துக்களை ஆய்வதையே இந்நூல் நோக்கமாகக் கொள்கிறது" என்று நுதலிப் புகுகிறார். கொண்ட நோக்கத்தைச் சாலச் சிறந்த உழைப்பால் நிறைவேற்றியிருக்கிறார் முனைவர் அமுதன்.

வைணவ சமயத்துக்குத் தனிச் சிறப்புரிமையுடைய கருத்துக்களே ஆய்வின் கவனத்துக்கு உரியவை என்றாலும், சைவம் போன்ற பிற சமயங்களுக்கும் பொதுவான சமயக் கருத்துக்களையும் கம்பரின் காவியத்திலிருந்து இவர் காட்டத் தவறவில்லை. எடுத்துக் காட்டாக, யோக நெறிக் கருத்துக்கள் ஆசாரியனைத் தெய்வமாகவே போற்றுதல் சைவம் போன்ற சமய நெறிகளாலும் போற்றப்படுபவன. வைணவ நெறிப் பின்னணியில் இவை போன்றவை விளக்கப்படினும் அவற்றின் பொதுமையினை நினைவிற் கொள்ள வேண்டும்.

இறை நிலை, உயிர் நிலை, நெறி, தடை, பேறு ஆகியவற்றை அர்த்த பஞ்சகம் (ஐவகை இயல்பு) என்பர் வைணவர். வேதம் தமிழ் செய்த மாறனின் திருவாய்மொழி இந்த அர்த்த பஞ்சகத்தையே ஓதுவது என்று அதன் தனியன் தெரிவிக்கிறது. திருவாய்மொழியை இந்த அடிப்படையில் வகுத்துணர்த்திய வைணவ மரபினைப் பேணி, முனைவர் அமுதன் இராமாவதாரக் காப்பியத்தை அதே அர்த்த பஞ்சக அடிப்படையில் ஆராய்கிறார். ஆம், இந்நூலின் அதிகாரத் தலைப்புகளே இந்த ஐவகை இயல்புகளின் பெயர்களாலேயே அமைந்துள்ளன. நுழைவாயில், வைணவ மெய்ப்பொருள் என்ற முதல் இரண்டு இயல்கள் முன்னுரை எனக் கொள்ளத் தக்கன. எட்டாம் இயல் முடிவுரை. இடைநின்ற ஐந்து இயல்களும் அர்த்த

பஞ்சகத்தைப் பொருளாகக் கொண்ட பொருளுரையாகும். இந்நூலின் கட்டமைப்பு இது.

தாம் தொகுத்தும் வகுத்தும் கணித்தும் உருவாக்க மேற்கொண்ட முயற்சிக்கு உதவக்கூடிய நூற்கணங்களைத் தேடித் துருவிப் பயன்படுத்துவதில் அலுப்போ அயிர்ப்போ அயர்வோ இன்றிக் கடுமையாக உழைத்துள்ளார் என்பதை இந்நூலை மேற்போக்காகப் பார்ப்பவரும் தெரிந்து கொள்ள முடியும். புகழ்பெற்ற அறிஞரிடம் ஆதாரம் காண்பது போலவே ஊரும் உலகமும் அவ்வளவாக அறிந்திராத அறிஞர்களிடமும் ஆதாரங்களை இந்நூலாசிரியர் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

அர்த்த பஞ்சகச் செய்திகள் மட்டுமின்றி, அச்செய்திகளை விளக்கும் பாங்கிலேயே விசிட்டாத்துவிதத் தத்துவக் கூறுகள் பலவற்றைப் பற்றிய கருத்துகளையும் ஆசிரியர் எடுத்து வைத்து விளக்குகிறார். எடுத்துக் காட்டாக ... தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற முப்பொருள், (சித்து, அசித்து, இறைவன் எனும் தத்துவத் திரயம்) ... இருபத்தாறு வைணவ தத்துவங்கள் - பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை எனப்படும் இறைநிலை ஐந்து - பாரதந்திரியம், சேஷத்துவம் என்ற இரண்டு உயிரியல்புகள் ... போன்ற எண்ணிறந்த நுட்பச் செய்திகளின் விளக்கமெல்லாம் நூல் நெடுகிலும் காணப்படுகின்றன.

இந்த நூல் வாயிலாக வைணவ சமய தத்துவங்களை இலக்கியப் பின்னணி கொண்டு தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும் என்றால் மிகையாகாது. ஆனால், நுனிப்புல் மேய்வார்க்கு இது பயன்படாது.

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் கவிச்சக்கரவர்த்திக்குக் கைகொடுத்துதவிய பாங்கினையும் நூலின் பல்வேறு இடங்களில் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ் இலக்கியத்துக்கு மட்டுமின்றி சமய உலகம் முழுவதுக்குமே வளம் சேர்க்கும் பெருமை வைணவ வியாக்கியானங்களுக்கு உண்டு. மணிப்பிரவாள நடையில் அவை அமைந்து விட்டமையால் எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. வல்லாளர் சிலரே வைணவ உரைகளின் வளத்தையும் வனப்பையும் அனுபவிக்க முடிகிறது. முனைவர் அமுதன் மூல இலக்கியங்களிற் போலவே வியாக்கியானங்களிலும் ஈடுபாடும் புலமையும் உடையவராகப் பொலிகிறார். பெரியவாச்சான் பிள்ளை, நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் ஆகியோர் அருளிய உரைக் கருத்துக்கள் கம்பரின் ராமாயண ஆய்வுக்கு வளம் ஊட்டுவதை டாக்டர் அமுதனின் இவ் ஆய்வேடு மிகப் பல இடங்களில் தெளிவுபடுத்துகிறது. இது, இந்நூலின் தலைமைச் சிறப்பு என்று கூறுவது கூட மிகையாகாது.

எதிர்வரும் அவர்களை இராமபிரான் நலம் உசாவும் செய்தியைக் கம்பர் சொல்வதை எடுத்துக்காட்டி, இராமபிரானுக்குப் பூர்வ பாஷி (முந்துறப் பேசுபவன்) என்ற பெயருண்டு என்று ஓர் இடத்தில் குறிக்கிறார்.

'நாய் அடியேன்' என்று குகன் தன்னைக் குறித்துச் சொல்வதை யாவரும் அறிவர். வைணவ மரபிலே வரும் 'நாயிந்தே' என்ற வழக்கினை ஒட்டியதே குகன் வாக்கு என்று பிறிதோரிடத்தில் விளக்குகிறார்.

இவை போன்ற அரிய செய்திகள் பல இந்நூலில் கொட்டிக் கிடக்கின்றன.

சமயக் கருத்துக்கள் கம்ப ராமாயணத்துள் எவ்வாறு பதிந்துள்ளன என்பதைத் தெளிவுறுத்த எழுந்த முயற்சி கம்ப ராமாயணத்துக்கும் வைணவ மரபுக்கும் வளம் சேர்த்திருக்கிறது. மேலும், தமிழ் இலக்கிய ஆய்வரங்கத்துக்கும் வளம் சேர்த்திருக்கிறது என்பது உறுதி.

'இராமாயணம்' என்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட இராமாநுசன் என்று உடையவரைச் சிறப்பிப்பார் திருவரங்கத்து அமுதனார். உடையவருககு வாய்த்த திருவரங்கத்து அமுதனார் போலக் கம்பருக்கு வாய்த்திருக்கிறார் பொள்ளாச்சி அமுதனார். ஆம், இவர் வைணவ அரங்கிலே இரண்டாவது அமுதனார்.

வாழ்க வளமுற.

அணிந்துரை

கவிக்கோ
சிற்பி அவர்கள்

புனிதப் பயணம்

தமிழர் தத்துவ மரபில் விளைந்தவை தாம் இந்தியத் தத்துவங்களான அத்வைதமும், விசிஷ்டாத்வைதமும், சைவ சித்தாந்தமும்.

கூர்ந்து ஆராய்ந்தால் இந்த உண்மையைக் கண்டுகொள்ள முடியும். 'தத்வமசி' என்ற 'அது நீ ஆகிறாய்' அத்வைதமென்றால் முல்லைக் கொடிக்காக வாடிய உள்ளமும், 'புன்னையைத்' தமக்கையாக நேசித்த நற்றிணைத் தலைவியும் அதைத்தானே நிலைநாட்டிப் போயிருக்கிறார்கள்.

திருவாய்மொழித் தரிசனம் கிட்டாது போயிருந்தால் அண்ணல் இராமாநுசரின் நெஞ்சில் விசிஷ்டாத்வைதம் முளைத்திருக்கவே வாய்ப்பில்லை.

சைவ சித்தாந்தம் தமிழனின் தனிச்சொத்து என்பதை மறுப்பார் இல்லை.

வேதங்களும் ஆகமங்களும் தத்துவங்களை நிறுவ உதவிய பந்தல் கால்களே. மேதைமை தமிழ்ச் சமுதாயத்தின் ஆழத்தில் குடியிருந்து தக்கவர் வாயிலாக வெளிப்பட்டிருக்கிறது என்றே கொள்ள வேண்டும். இது ஒரு பார்வை.

இதனைத் தெளிவுற உணர்ந்தே பேராசிரியர் அமுதன் தம் கருதுகோள்களைக் காண முனைந்துள்ளார் என்பது எனக்குப் பேருவகையும் பெருமகிழ்ச்சியும் தருகிறது.

> 'இவ்வாறு மிகப் பழங்காலத்திலிருந்தே இத்தமிழ்நாட்டில் வழங்கி வந்த வைணவ சமயம் இராமாநுசர் காலத்தில் புத்தொளி பெற்றது...'

என்ற அவர் கூற்று இந்த உண்மைக்கு அடிக்கோடு போடுகிறது.

திருமால் வழிபாடு ஆரியர் வரவுக்கு முன்னரே இருந்ததாகவும், வேதங்களில் வரும் விஷ்ணு, வேதத்துக்கு முந்திய மரபிலிருந்து பல கூறுகளைப் பெற்றுக் கொண்டவன் என்றும் பேரறிஞர் சுநீதி குமார் சட்டர்ஜி மதிப்பிடுவார். கண்ணன் ஆரியரல்லாத விருஷ்ணி குலத்தைச் சேர்ந்தவன் என்றும், நாம் அறிகிறபோது வைணவ சமயத்தின் உருவாக்கம் பெரிதும் திராவிட மரபுகளிலிருந்து பெறப்பட்டது என ஊகிக்கலாம்.

இந்த அடித்தளத்தை நினைவில் இருத்திக் கொண்டால் பேராசிரியர் அமுதன் கம்பனில் தரிசிக்கும் வைணவப் பேருலகத்தை மேலும் கூர்ந்து நம்மால் உணர முடியும். ஏனெனில் வடமொழி மூலத்திலிருந்து இராமாயணத்தைக் கம்பன் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் அவன் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்தும், பண்டைச் சங்க மரபுகளிலிருந்தும் தான் வைணவ தத்துவ மரபை அறிந்திருந்தவன் என்ற மற்றொரு உண்மையையும் நாம் அறிய முடியும். இராமாநுசருக்கு - விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவ விளக்கம் தந்த இராமாநுசருக்குக் - காலத்தால் முந்தியவன் கம்பன். ஆயினும், ‘செய்ய தமிழ் மாலைகள்’ ஓதி இந்தத் தத்துவத்தின் வேர்களைக் கண்டு கொண்டவன் கம்பன்.

கவிச்சக்கரவர்த்தி வெறும் கதை சொல்லி அல்லன். இதிகாசத்தைப் படியெடுத்தவன் அல்லன். தமிழ் மரபுகளில் இலைமறை காயாய் ஊடாடிக் கிடந்த தத்துவத்தை நுனித்தறிந்து, அதன் ‘அர்த்த பஞ்சகக்’ காட்சியில் திளைத்தவன் என்ற அலகிலாப் பரிமாணத்தை உணர வைப்பதால் பேராசிரியரின் ஆய்வு புதிய ஒளியாய் நமக்குள் பரவுகிறது.

அந்த வகையில் இந்நூல் மிகவும் முக்கிய பங்களிப்பாக மாறுகிறது - வைணவச் செந்நெறிக்கும், கம்பன் ஆய்வுக்கும் - ஒரே சமயத்தில்.

‘இருசரம் இன்றி எப்போ ரிடையும்
ஏகார் மதியோர்...’

என்பதைத் திறம்பட நிருபணம் செய்கிறார் அறிஞர் அமுதன்.

*

பேராசிரியர் அமுதன் ‘கற்றனைத் தூறும் அறிவு’ என்ற வள்ளுவத்தின் சாரமாகத் திகழ்பவர். கற்பதும், கேட்பதும், மனம்கொள்ள மொழிவதும், இதயத்தை அள்ள எழுதுவதும் அறம் பொருள் இன்பம் வீடு எனக் கொண்டவர்.

அவருடைய இளமையின் ரகசியம் மருந்துகளில் இல்லை. இலக்கியம் தரும் விருந்துகளில் இருக்கிறது.

தலைமுறைகளைச் சிந்திக்க வைத்த பேரறிவும், சிலிர்க்க வைத்த வாக்கு வளமும் அவருக்கு உண்டு.

எந்த அளவுக்குக் கம்பனுக்குள் வைரங்களைத் தேடித் திரட்ட முடியும் என்பதைப் பேருழைப்பால் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் இந்த ஆய்வு நூலின் மூலம்.

வைணவத்தின் பழைமை, செழுமை, தனித்தன்மை, தத்துவ நெறி என்பனவற்றை 'வைணவ மெய்ப்பொருள்' என்ற இயலில் கச்சிதமாகச் சுட்டிக் காட்டுகின்றார். வைணவச் சாரமான 'அர்த்த பஞ்சகம்' இறைநிலை, உயிர்நிலை, தத்துவ நிலை, தடை நிலை, பேற்று நிலை என ஐவகைப்படும். இவ்வைந்து ஞானங்களும் கம்பனில் துலங்கும் மாட்சிமையைத் தொடர்ந்து வரும் இயல்களால் விளக்கம் செய்கின்றார்.

இறைவனின் ஐவகை நிலைகளான பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகியன கம்பனில் காணுமிடங்களைத் தேடித் தேடித் தொகுக்கின்றார். நாகபாசப் படலத்தில் வரும் 'எழுவாய் எவர்க்கும் முதலாகி' என்ற பாடல் ஐவகை நிலைகளையும் ஒரே இடத்தில் கூறுவதைத் தொட்டுக் காட்டுகின்றார்.

'நீ ஆதி பரம்பரமும்' என்று விராதன் மொழியும் பரத்துவ நிலையும், 'அலைகடல் நடுவன் ஓர் அனந்தன் மீமிசை' தோன்றும் வியூக நிலையும், பல்வகை அவதாரங்களைக் கம்பன் செப்பும் விபவ நிலையும், 'உள்ளும் புறனும் உள'னாகிய அந்தர்யாமி நிலையும், 'கோசலையே கோயிலில் தொழும் விக்கிரக வடிவான அர்ச்சை நிலையும் கம்பனிலிருந்து முக்குளித்து எடுத்து உரைக்கப்படுகின்றன.

இறைவன் 'குணங்களால் நிறைந்த வள்ளல்' என்பதற்கான சான்றுகளையும், வைணவ மரபுப்படி சுவாமித்துவம், வாத்சலியம் முதல் கருணை வரையிலான பண்புகளின் களஞ்சியமாக விளங்குகிறான் என்பதற்கான காவியக் களங்களையும் கண்டு சொல்கிறார் பேராசிரியர்.

அவ்வாறு பொன்னுக்கு மெருகேற்றினாற் போல் விளக்கி எழுதுங்கால் ஈடு முதலிய வியாக்கியானங்களிலிருந்து மேற்கோள்களை வழங்கியிருப்பது அவருடைய பெரும் புலமைக்கு அடையாளம்.

'இரு கை முடவரும் யானை ஏறலாம்படி, யானை
தன்னைத் தாழவிட்டுப் படிந்து நிற்கும் நிலை'

என அவதாரத்தின் சிறப்பை வியாக்யான வழி தெளிவு செய்கின்றார்.

வாமன அவதாரத்தில் திருவிக்கிரம அவதாரம் கோலம் கொண்டதை 'ஓங்கி உலகளந்த' என்ற திருப்பாவை வியாக்கியானத்தின் உயிரோவிய வாக்கியங்களால் புலப்படுத்துகின்றார்.

'திருப்பாற் கடலிலே உயிர்களைக் காத்தல் செய்யா
மையினாலே பனிப்பட்ட மூங்கில் போலே சாய்ந்து

கிடந்தவன், மாவலியாலே நோவுபட்ட தேவர்களின் கூக்குரல் கேட்டவுடன் சூரியகிரணப்பட்ட மூங்கில் போலே ஓங்கினான்'

இவ்வாறு மணிமிடை பவளம் போல ஈடு உரைகள் பேராசிரியரின் ஆய்வு விளக்கங்களை அலங்கரிக்கின்றன.

நான்கு திசைகளிலிருந்தும் கற்றும் கேட்டுமறிந்த நூல்களையும், பாடல்களையும் அங்கங்கே அழகும் நயமும் ததும்ப நூலாசிரியர் சொல்லிச் செல்கிறார்.

'கொற்றவில் ஒன்று தாங்கினான்
உலகம் தாங்கினான்'

என இராமாவதாரத் திருப்புகழ் இசைக்குமிடத்து, இசை நாயகர் தியாகராச சுவாமிகள் 'ஒக பாண' என்று சொன்ன கூற்றைப் பொருத்திக் காட்டுகிறார்.

'உளன் எனில் உளன்' என்ற நம்மாழ்வார் பாசுரமே கம்பனிடம் 'ஒன்றே என்னில் ஒன்றேயாம்' என்ற பாடலாகப் பரிணமித்திருப்பதை நுட்பமாக உணர்த்துகின்றார்.

உயிர் இயல்பு கூறும் இயலில் அடிமைத் தன்மையும், தற்சுதந்தரம் இன்மையுமே உயிரின் பாங்கு என்பதைச் சுட்டிக்காட்டிய பின் கம்பனின் அத்தகு பாத்திரங்களை முன் நிறுத்துகிறார்.

'ஆருளர் எனின் உ்ளேம் யானும் சீதையும்'

என்ற இலக்குவன் கூற்றுக்குள் அவன் அடிமைத் தன்மையும், சீதையின் தற்சுதந்தரம் இன்மையையும் புலப்படுத்தும் அருமை நினைவில் நிற்பது.

'நில்லா உலகின் நிலைநேர் மையினால்
வல்லாரும் உணர்ந்திலர்; மன்னுயிர் தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்'

என்ற கம்பன் பாடலை மாரீசப் படலத்திலிருந்து எடுத்துக்காட்டி உயிர்களின் பன்மைத்துவம் குறித்துப் பேசும்போது ஓர் அரிய உண்மையின் கதவைத் திறந்து காட்டுகின்றார். அது விசிஷ்டாத்வைதத்தின் 'உயிர்க் கொள்கை'யான அசித்தும் நித்தியமே என்பதை உணர்த்தும் அற்புதத்தைச் சொல்லுகின்றார்.

உயிரும் இறையும் ஒன்றே என்னும் அத்வைதம் இங்கே மறுக்கப்படுவதை, 'வல்லாரும் உணர்ந்திலர்' என்று கம்பர் நுணுக்கமாகக் காட்டுவதாகக் கூறும் மதிநுட்பம் வியப்புக்குரியது.

நெறியின் இயல்பை கருமம், ஞானம், பக்தி, பிரபத்தி என வகைப்படுத்தி உரைத்து, அனைத்தும் பிரபத்தி என்ற சரணாகதி நெறிக்கே கொண்டு செலுத்துவதைக் கம்பனிடம் கண்டுரைக்கின்றார்.

789

'தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'

என்று கம்பன் தொடக்கத்திலேயே காட்டிய பிரபத்தி நெறி குகன், பிரகலாதன் என வளர்ந்து வீடணன் சரணாகதியில் நிறைவெய்தும் நேர்த்தியை உணர்த்துகின்றார்.

தடை இயல்பை வரையறுக்கும் முகமாகப் பரம்பொருளிடத்துப் பூணும் பகைமையும், அகங்கார மமகாரங்களும் அடிப்படைத் தடைகளாவதை அருமையாக விளக்குகின்றார். வாலி, இரணியன் ஆகியோர் தடையின் பிம்பங்களாக விளங்குவதையும், முழுமையான தடை இயல்புகள் கொண்டவன் இராவணனே என்பதையும் கம்பனின் சான்றுகளால் நிலைநாட்டுகின்றார்.

காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குறும்பான தடைகளைக் கட்டிப் போடும் அடையாளமே 'திரிதண்டம்' என்பதையும், இவற்றை ஏந்திய துறவிகளே சங்க காலத்து 'முக்கோல் பகவர்' என்பதையும் பொருத்தமுற இணைக்கின்றார்.

பிராட்டியிடம் கூட பாகவத அபசாரம் என்ற தடை நிகழ்ந்ததை நினைவு கூர்கிறார். மாரீச மான் வேட்டைக்குப் போன இராமன் திரும்பி வராத நிலையில்,

'நின்ற நின்நிலை இது நெறியிற் றன்று'

என்று இலக்குவனிடம் கடுமொழி கூறுகிறாள் சீதை. இலக்குவன் என்ற தற்சுதந்தரம் துறந்து அடிமைத்திறம் பூண்ட பாகவதனிடம் இவ்வாறு மொழிந்த குற்றம் அவள் நெஞ்சை அறுக்கிறது. அசோக வனத்தில் தனக்குத் தானே பேசிக்கொண்ட பிராட்டி,

'என்னை நாயகன் இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு அருளிலன் எனத் துறந்தானோ?'

என்று வருந்துகிறாள். இதுவும் 'பாகவத அபசாரம்' என்ற தடையாக நிற்பதை ஆசிரியர் நுணுக்கமாய் எழுதுகின்றார்.

பேறு என்ற நிலையை இறுதியாக விளக்கும் பேராசிரியர் அழிவிலாத உயிர்கள் இறுதியில் அடையும் தனிப்பெரும் பதம் வீடுபேறு எனச் சுட்டிக் காட்டுகின்றார். பல இடங்களில் இப்பரமபதப் பேற்றினைக் கம்பர் கூறிச் செல்வதை மிக அருமையாகப் பேராசிரியர் எடுத்துரைக்கின்றார்.

சரபங்கர் பிறப்பு நீங்கும் படலத்திலிருந்து அவர் காட்டும் பாடல் பளிங்கு போல் ஒளி வீசுகின்றது.

'தேவரும் முனிவரும் உறுவது தெரிவோர்
மாவரும் நறுவரை மலர் அயன் முதலோர்
ஏவரும் அறிவினில், **இருவினை ஒருவிப்**
போவது கருதும்அவ் அருநெறி புக்கார்'

இந்த அரும் பேற்றைக் கம்பன் காவியத்துள் யார் பெற்றார் என ஆராய்கிறது பேராசிரியர் திருவுள்ளம்.

அநுமனுக்குப் பிரம்ம பதம் சித்திப்பதை நினைக்கின்றார் பேராசிரியர். தசரதன், சரபங்கர், முனிவர், சடாயு, வாலி, அநசூயை, சபரி ஆகியோர் அந்தமில் இன்பத்து வீடுபேறு அடைவதாகக் கருதுகின்றார்.

இறைவன் அறக்கருணை பெற்றவர்களாகக் குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோரையும், சிரஞ்சீவித்துவம் பெற்றவர்களாகப் பிரகலாதனையும், அநுமனையும் அடையாளம் காட்டுகின்றார்.

இந்த அரும்பேறு சித்திப்பதற்குப் பயன் கருதாப் பணியாகிய கைங்கரியமே காரணம் என்று அமைதி காண்கிறது பேராசிரியரின் ஆய்வு உள்ளம்.

'தொண்டக் குலமே தொழுகுலம்' என்ற கோட்பாட்டை, வைணவச் செந்நெறி பற்றி, கம்பன் கவிதை என்ற முத்திரை இட்டுக் காண்பதே இந்நூலின் செம்மையான குறிக்கோளாகத் துலங்குகிறது.

எங்கேயோ புறப்பட்ட ஆய்வு 'தொண்டு' என்ற தூய நீரோட்டத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறது - மேகத்திலிருந்து விழும் கருணைத் துளிகள் கைகோத்துக் கொண்டே நடந்து கங்கையாய் காவிரியாய் மாறுவது போல...

உன்னத இலக்கை உணர்த்த எழுந்த பேராசிரியர் அமுதன் என்ற செம்மனச் செம்மலை வாயார வாழ்த்தி மனமாரப் போற்றுகிறது என் நெஞ்சம். பேருழைப்பின் பெட்டகம் இந்நூல்.

வைணவத்தில் முழுகி எழுந்து, கம்பனில் அமுத கலசங்களைத் தேடும் இந்தப் புனித யாத்திரையில்,

'சேர வாரும் செகத்தீரே'

என்று அனைவரையும் அழைக்கிறேன்.

இந்த அரிய ஆய்வு நூலை வெளியிடும் கெழுதகை நண்பர் கவிதா பப்ளிகேஷன் சேது. சொக்கலிங்கம் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

பொள்ளாச்சி **சிற்பி பாலசுப்பிரமணியம்**
12.12.05

பொருளடக்கம்

பக்கம்

1. நுழைவாயில் 3

2. அணிந்துரை 6

அ. அமுதனார் II

முனைவர் ம.ரா.போ. குருசாமி 6

ஆ. புனிதப்பயணம்

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் 10

3. வைணவ மெய்ப்பொருள் 17

4. இறை இயல்பு 33

5. உயிர் இயல்பு 120

6. நெறி இயல்பு 153

7. தடை இயல்பு 210

8. பேற்றின் இயல்பு 251

9. பிற்சேர்க்கைகள் 281

1. சாங்கியமும் 284
2. கம்பரின் இறைக்கொள்கை 284
3. உயிர்களின் பகுப்பு 291
4. பஞ்சீகரணம் 291
5. நூலடைவு 292
6. அடிக்குறிப்புகள் 301

1

வைணவ மெய்ப்பொருள்

இந்திய நாட்டுச் சமயங்கள் பலவும், தாம் வழிபடும் இறைவனின் பெயரையோ அல்லது தலைவனின் பெயரையோ கொண்டே (சைவம், பௌத்தம், அருகம் என்பவை போல) நிலவி வருவதைப் பார்க்கிறோம். அவ்வகையில் வைணவ சமயமும் விஷ்ணு என்னும் திருமாலின் பெயரைக் கொண்டு வைணவம் எனப் பெயர் பெற்றுள்ளது.

சிவம் என்னும் பெயரைக் கொண்டு சைவமும், சக்தி எனும் பெயரைக் கொண்டு சாக்தமும், கணபதியெனும் பெயரைக்கொண்டு காணாபத்தியமும், சூரியன் எனும் பெயரைக் கொண்டு சௌரமும், குமாரன் எனும் பெயரைக் கொண்டு கௌமாரமும் (தத்திதாந்த நாமமாகப்) பெயர் பெற்றிருக்கின்றன.

இறைவனாகிய பரம் பொருளுக்குரிய தனித்தன்மைகளுள் சிறந்தது எங்கும் நிறை தன்மை. அந்த வியாபகத்தை விளக்குகின்ற பெயர்கள், நாராயணன், வாசுதேவன், விஷ்ணு என்னும் மூன்றுமாகும்.

பரம்பொருளான விஷ்ணுவுக்குத் தலைசிறந்த பெயராகக் கருதப்படுவதும், எட்டெழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' எனும் திருமந்திரத்துள் அடங்கியதுமாகிய 'நாராயண' எனும் சொல்லால் இச்சமயத்தின் பெயர் உருவாகவில்லை. விஷ்ணு என்ற சொல்லடியாக 'வைணவம்' என இதன் பெயர் உருவாயிருப்பதற்குக் காரணம் உண்டு. இச்சொல்லின் பகுதியாகிய 'விஷுல்' என்பது மட்டுமே 'எங்கும் நிறைந்து

பரந்துள்ளமை' எனும் பொருளைச் சுட்டிப் பரம்பொருளின் தனித்தன்மையாக வைணவ சமயம் கரந்து எங்கும் நிறைதன்மையாம் உயர் கருத்தைச் சுட்டி நிற்பதேயாகும்[1].

> "நிலம் விசும்பு ஒழிவற, கரந்த சில் இடந்தோறும் இடந்திகழ்
> பொருள் தொறும் கரந்து எங்கும் பரந்துளன்"[2]

இறைவன் என்பது வைணவ சமயம், உலகிற்குத் தந்த உயர் கருத்துக்களுள் ஒன்றாகும். எனவே, இச்சமயத்திற்கு, 'வைணவம்' எனும் பெயர் அமைந்தது தீரச் சிந்தித்த சிந்தனையின் வெளிப்பாடு எனத் துணியலாம்.

வைணவத்தின் பழமை

உலகு பெற்ற நூல்கள் பலவற்றுள்ளும் பழமை வாய்ந்த நூல்களாகக் கருதப்படுகின்ற இருக்கு, யசுர், சாம வேதங்களிலேயே விஷ்ணுவைப் பற்றிய செய்திகள் உள்ளன.

வாமனராகித் தோன்றி, மூவுலகங்களையும் அடியிட்டளந்ததாக விஷ்ணுவைப் புகழ்கிறது இருக்கு வேதம்[3].

"முதலில் இங்கு ஒன்றுமே இல்லை. பரம பதத்திலிருக்கும் நாராயணன் ஒருவனிடமிருந்தே இவை உண்டாகின்றன. அவனைத்தவிர இவைகளுக்கு வேறு காரணமும் இல்லை. ஆதாரமும் இல்லை" என்கிறது சுக்கில யசுர்வேதம்[4].

எனவே, வைணவம் பழமை வாய்ந்த (வேதநெறிப்பட்ட) வைதிக சமயம் என்பது தெளிவு ஆகிறது.

தமிழகத்தின் வைணவத்தின் பழமை

ஆனால், வைதிக விஷ்ணு, திருமால் எனும் பெயரில் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்படுகிறான்.

சங்கப் பாக்களில் மிகுதியாகக் குறிக்கப்பெறும் தெய்வமாகத் திருமால் திகழ்கிறான்[5].

'மாயோன் மேய காடுறை உலகமும்' என முல்லைத் திணைக்குரிய ஆநிரைகளைக் காக்கும் மாயோன்[6] ஆகத் திருமாலைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவன் அனைத்துயிர்களையும் காக்கும் காவலனாகவும் திகழ்வதால், நாடு காக்கும் மன்னர்க்குத் திருமாலை உவமை கூறும் 'பூவைநிலை'த் துறை தமிழிற் கிடைத்த நூல்களில் பழையதாகக் கருதப்படும் தொல்காப்பியத்துள் காணக் கிடக்கிறது[7]. 'திருவுடை

மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்னும் "[7அ] என்று காக்கும் மன்னனைக் காக்கும் கடவுளாகக் கருதும் நம்மாழ்வார் பாசுரமும் இதனை அடி ஒற்றியதே. பாம்பணைப் பள்ளியில் திருமால் படுத்துக் கிடப்பதையும், நீலநிறமுடையோன் ஆன அவன் உந்தித் தாமரையில் நான்முகனைக் கொண்டுள்ளதையும் பெரும்பாண் ஆற்றுப் படை பேசும்[7ஆ].

திருமாலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, ஆறு பாடல்களால் திருமாலின் ஐவகை நிலைகளையும் சங்க நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் புகழ்ந்துரைக்கிறது[8]. இது, வாசுதேவன் சங்கருடணன், காமன், அநிருத்தன் ஆகிய நான்கு வியூக மூர்த்திகளையும் குறிப்பிடுகிறது[8அ].

"நீர் செல நிமிர்ந்த மாஅல்"[9] என்று முல்லைக் கலி திருமாலின் திருவிக்கிரம அவதாரத்தைச் செப்புகின்றது.

"மாயோன் மேய ஓண நன்னாள்" - என்று திருமால் பிறந்த நாளாகத் திருவோணத்தைக் குறிப்பிடுகிறது மதுரைக் காஞ்சி[10].

வேறு மூர்த்திகளின் பெயர்களைச் சுட்டிக் காட்டாத வள்ளுவனார், 'அடியளந்தான்'[10அ], 'தாமரைக் கண்ணான்'[10ஆ] எனத் திருமால், அவன் உலகாகிய பரம பதம், [10இ] தாமரையினாள், [10ஈ] திரு [10உ] என அவன் மனையாட்டியாகிய திருமகள் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

"திருமால் சீர்கேளாத செவி என்ன செவியே"[11]

"நாராயணா, என்னா நா என்ன நாவே?" என்று சிலம்பு கேட்கிறது.

"காதல் கொண்ட கடல்வண்ணன் புராணம்
ஓதினன் நாரணன் காப்பு என்றுரைத்தான்"[12].

என்று மணிமேகலை ஆசிரியர் வைணவ சமயவாதி உரைத்ததாக வைணவக் கருத்தினை அங்கு சுருங்க உரைக்கின்றார். நாரணன் எனும் சொல் இங்கு வழங்கப்படுவதும் குறிக்கொளத்தக்கது.

ஆனால், வைட்டணவன் என்னும் சொல், முதன் முதலாக

"வன்மை யாவது உன் கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மை கண்டாயே"[13]

எனும் பெரியாழ்வார் பாசுரத்திலேயே காணப்படுகிறது.

விசிட்டாத்துவிதம்

இவ்வாறு மிகப் பழங்காலத்திலிருந்தே இத்தமிழ் நாட்டில் வழங்கிவந்த வைணவ சமயம் இராமாநுசர் காலத்தில் புத்தொளி பெற்றது.

வேத உபநிடதங்கள், ஆழ்வார்கள் அருளிச் செயல்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் விரவிக் கிடந்த வைணவ மெய்ப்பொருளின் தத்துவங்களைத் தொகுத்துத் தந்தவர் இராமாநுசர்.

"ஓதிய வேதத்தின் உட்பொருளாய் - அதன் உச்சிமிக்க
சோதியை, நாதன் என அறியாது உழல்கின்ற தொண்டர்,
பேதைமை தீர்த்த இராமாநுசன்"

என்பார் இராமாநுச நூற்றந்தாதியில் (85) திருவரங்கத்து அமுதனார்.

"வேத உபநிடதங்களில் ஆங்காங்கே விளக்கமின்றிக் கிடந்த சித்தாந்தக் கலங்கல் நீரை, ஆழ்வார்கள் பாடல்கள் என்னும் தேற்றாங்கொட்டையினால் தெளிய வைத்து 'விசிட்டாத்துவிதம்' என்ற பெயரில் உலகிற்கு அறிமுகப்படுத்தினார் இராமாநுசர்"[14] என்பது மிகப் பொருந்தும் கூற்றே எனலாம்.

ஆழ்வார்களின் "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெரியாத மறை நிலங்கள் தெளிகின்றோம்" என்பது தேசிகப் பிரபந்தம். (அதிகார சங்.1) வடமொழி மறைகளில் தெளிவு படாமல் கிடந்த தத்துவப் பொருள்களை ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிய திவ்வியப் பிரபந்தங்களைக் கொண்டு தெளிய வைத்தவர் இராமாநுசரே எனும் வேதாந்த தேசிகரின் கூற்று மிக மதிக்கத்தக்க கூற்றாகும்.

அதனால் வைணவ சமயத்திற்கு 'இராமாநுச தரிசனம்' எனும் பெயரும் நிலைப்பதாயிற்று[15]. விசிட்டாத்துவிதம் என்பது தத்துவ நோக்கில் இதற்கு அமைந்த பெயர் எனலாம்.

விசிட்டாத்துவிதம் - சொற்பொருள்

விசிட்டம் அத்வைதம் விசிட்டாத்வைதம் என்றாகும். விசிட்டம் என்பதற்கு, விசேடம் என்பது பொருள்.

பரம்பொருளின் மங்கள வடிவமும், குணங்களும், அவன் காக்கும் உலகங்களும், ஆன்மக் கூட்டத்தின் பாதுகாப்புக்காக அவன் செய்யும் செயல்களும் விசிட்டம் என்னும் சொல்லால் குறிக்கப்படுகின்றன.

அத்வைதம் என்பது தனக்கு அயலாக இரண்டாவது இல்லாதது என்னும் பொருளது.

எனவே, வடிவு, குணங்கள், உலகங்கள் - காக்கும் செயல்கள் ஆகிய விசேடணங்களை உடைய பிம்பம் ஒன்றே. அதனிலிருந்து வேறான, இரண்டாவதொரு பிரம்மம் இல்லை என்பது விசிட்டாத்வைதம் என்பதன் சொற்பொருள் ஆகும்.

விசிட்டம் என்பதற்குக் கூடியிருப்பது எனப் பொருள் கொண்டு, தனக்குச் சரீரமாகிய உயிர்ப் பொருள்கள், உயிர் அல்லாத பொருள்களோடு கூடியிருக்கிற இரண்டற்ற பொருள் எனவும்,

விசிட்டனது அத்துவிதம் என ஆறாம் வேற்றுமைத் தொகையாக்கி, சேதன அசேதனங்களைச் சரீரமாகவுடைய பரம்பொருளினது இரண்டாவது இல்லாமையைச் சுட்டும் சமயம் விசிட்டாத்துவிதம் எனவும் பொருள் கொள்வர்[16].

ஆக, உயிரையும் உலகையும் தனக்குச் சரீரமாகவுடைய பரம்பொருள் இரண்டல்ல, ஒன்றுதான் என்பதே விசிட்டாத்துவைதம் என்பது தேர்கிறது.[7].

அத்வைதக் கொள்கையிலிருந்து மாறுபடல்

“பழுதையில் பாம்புத் தோற்றம்போல, உலகம் பொய்த்தோற்றம் கொண்டது. கனவில் காணப்படும் பொருள்கள் உண்மையில் இல்லாதவையாவது போல், உலகமும் உலகப் பொருள்கள் யாவும் இல்லாதவையே. சீவாத்துமாக்களும் இல்லை. பிரம்மம் ஒன்றே மெய். பிரம்மத்தை மாயை மறைக்கிறது. அதனால் மாயை தன்னை உலகமாகவும் உயிர்களாகவும் மயக்குகின்றது. இது மாயையால் ஏற்பட்ட அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம் அகன்று, நானே பிரம்மம் என்று தன்னைப் பிரம்மமாக உணர்வதே உண்மை ஞானம். இந்த ஞானம் ஏற்பட்டால், சீவர்கள் பிரம்மத்தோடு ஐக்கியமாகி விடுகிறார்கள். இதுவே மோட்சம். பிரம்மத்திற்கு வடிவமும் இல்லை. குணமும் இல்லை” என்பவை சங்கரர் கண்ட அத்வைதத்தின் முக்கியக் கொள்கைகள் ஆகும்[18].

பிரம்மத்திற்கு வடிவம் உண்டு. குணங்கள் உண்டு. விபூதிகள் என்னும் ஐசுவரியங்கள் (செல்வம்) உண்டு. [18அ] மாயை பிரம்மத்தை மறைக்கும் ஆற்றல் உடையதன்று. மாயை பிரம்மத்திற்கு வசப்பட்டது. மாயா சத்தியால்தான், பிரம்மம் உலகைப் படைத்தழிக்கின்றது. பிரம்மம் வேறு. சீவர்கள் வேறு. சீவ ஈசுவரர்களைப் போலவே அசித்து எனப்படும் உலகமும் சத்தியம், நித்தியம். சீவர்களும் அசித்தும் பிரம்மத்திற்குச் சரீரம் (உடல்) பிரம்மம் சரீரி (உயிர்). இத்தகைய அந்தப் பிரம்மம் திருமகளுக்கு உறைவிடமான நாராயணனே. உயிர்கள் யாவும் அவனுக்கு அடிமைகள். அவன் அருளாலே சரீரத் தொடர்பைக் கழித்து, அவனை அடைவதே மோட்சம், அதற்குப் பக்தி வழிப்பட்ட பிரபத்தியே (சரணாகதியே) உபாயம்[19] என்பது விசிட்டாத்துவித நெறியின் தொகுபொருள் ஆகும்.

முப்பொருள்

இந்த விசிட்டாத்துவித நெறி, அ) தத்துவம் (மெய்ப்பொருள்), ஆ) இதம், (நெறி), இ) புருடார்த்தம் (பேறு) எனும் மூன்று பகுப்பினை உடையது. அவற்றுள் தத்துவம், சித்து, அசித்து, இறைவன் எனும் மூன்று கூறுகளாகப் பிரியும்.

"நம் தரிசனத்துக்குத் தத்துவங்கள் மூன்று" என்பது நம்பிள்ளை ஈடு[20] "முத்திக்கு அருள் சூட மூன்றைத் தெளி" என்பது தேசியப் பிரபந்தம். பா.1.

இம்முப்பொருள்களும் 'தத்துவத் திரயம்' எனப்படும்.

"திருநாரணன் எனும் தெய்வமும் சித்தும் அசித்தும் என்று
பெருநான் மறை முடி, பேசிய தத்துவம் மூன்று"

என்று தத்துவத்திரயத்தில் (பா.1) வேதாந்த தேசிகர் பேசுவர்.

ஐசுவரியங்களை உடையவள் என்னும் பொருளைத் தன்னுள் அடக்கியது ஈசுவரன் எனும் சொல். சித்து, அசித்து ஆகிய ஐசுவரியங்களை, பொருள்களைத் தன்னகத்தே கொண்டவன் ஈசன் என்பது இச்சொல்லின் பொருள் ஆகிறது.

"மோட்ச மடைய விரும்பும் வைணவனுக்குத் 'தத்துவத்திரய ஞானம்' வேண்டும்"[21] என்பார் பிள்ளை லோகாச்சாரியார்.

இவற்றுள், சித்து என்பது சீவான்மாக்களின் தொகுதி ஆகும்.

அசித்து என்பது, மக்கள் விலங்கு முதலியவற்றின் அறிவற்ற உடல்கள், உலகிலுள்ள ஏனைய பொருள்களின் தொகுதிகள் (அசேதனம்) ஆகும்.

ஈசுவரன் என்பது இறைவனைக் குறிப்பதாகும்.

விசிட்டாத்துவிதத்தில், இம்மூன்றும் நிலையானவை. இந்த முப்பொருள்களுள் இறைவனுக்கும் மற்ற இரு பொருள்களுக்குமிடையே உள்ள உறவு முறைகளை விளக்குவதே விசிட்டாத்துவிதத்தின் உயிர்க்கொள்கைகளில் ஒன்றான 'உடல் உயிர்க் கோட்பாடு' (சரீர,சரீரி பாவம்) ஆகும்.

அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள், இறைவன் ஆகிய முதற்பொருள் மூன்றுள், அறிவுள்ள பொருளும், அறிவில்லாப் பொருளும் இறைவனுக்கு உடலாகின்றன என்கிறது விசிட்டாத்துவிதம்[22]. எனவே, இறைவனை யொழிய உலகிற்கும் உயிருக்கும் தனியிருப்பும் தனிச் சார்பும்

இல்லை[23]. உயிருக்குரிய சுதந்திரம் உடலுக்குக் கிடையாது. எனவே, உபநிடதங்கள் உள்ளவை பல அல்ல, உள்ளது ஒன்றுதான் (ஏகம் சத்) என்றதன் கருத்து, ஒன்று தான் சுதந்திரமுடைய பொருள் என்பதாகுமே அன்றி, உள்ளது ஒன்றுதான், ஏனைய யாவும் பொய் என்பதாகாது'' என்பர் விசிட்டாத்துவைதிகள்[24]. இந்த நுண்ணிய வேறுபாடே அத்துவைதத்திற்கும் விசிட்டாத்துவிதத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் தலைசிறந்தது எனலாம்.

இறைவன் உலகில் காணும் எல்லாப் பொருள்களிலும் உயிராக இருக்கிறான். அவன் இல்லாத பொருள் உலகில் இல்லை என்பது, இவ்வுடல் உயிர்க் கோட்பாட்டால் விசிட்டாத்துவைதம் உலகுக்குக் கூறும் உயர் கருத்தாகும்.

வைணவ தத்துவங்கள் 26

உலகப் படைப்பைப் பற்றி உரைப்பவர்கள், உலகத் தோற்றத்திற்குக் காரணங்களாக இருப்பவற்றைத் 'தத்துவங்கள்' என்பர்.

சைவர்கள் முப்பத்தாறு தத்துவங்களால் உலகம் ஆனது எனக் கருதுவர்.

உலகம் இருபத்துநான்கு தத்துவங்களால் உருவானது என்பது வைணவக் கொள்கை.

இருபத்து நான்கு தத்துவங்களால் ஆன உலகில் வாழ்வது இருபத்தைந்தாவது புருட தத்துவமாகிய ஆன்மா, அதற்கும் மேலான தத்துவம் பரம் பொருளாம். அதற்கு மேல் ஒரு தத்துவம் இல்லை என்பதனை,

"ஐயஞ்சாகிய தத்துவம் தெரிந்து, அறிந்து, அவற்றின்
மெய் எஞ்சாவகை மேல் நின்ற நினக்கு மேல் யாதும்
பொய் எஞ்சா இலது என்னும் ஈது அருமறை புகலும்" [24அ]

என்று தெளிவுற வரையறுப்பார் கம்பர்.

வைணவ தத்துவங்கள் இவ்வாறு நம்மாழ்வார் காலத்தே வரையறுக்கப்பட்டிருந்தன என்பதனை,

"பொங்கு ஐம் புலனும், பொறி ஐந்தும், கருமேந்திரியம், ஐம்பூதம்
இங்கு இவ் உயிர் ஏய் பிரகிருதி, மான், ஆங்கார மனங்களே" [24ஆ]

எனும் திருவாய்மொழிப் பாசுரமும் தெளிவுறுத்தும்.

"ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி, அல்லவற்று ளாயுமாய் ஐந்தும்
மூன்றும் ஒன்றும் ஆகி நின்ற ஆதிதேவனே"

என்பது திருமழிசையாழ்வார் திருவாக்கு. (திருச்சடந்த.3)

ஐந்து பூதங்கள், ஐந்து அறிகருவிகள், ஐந்து செயற்கருவிகள் இவற்றிற்கு மூலமாக ஐந்து நுண்பொருள்கள் (தன்மாத்திரைகள்), இவற்றோடு மனம் ஒன்று, முனைப்பு (அகங்காரம்), மான் (மகான்), விளக்கமில் பகுதி (அவ்யக்தம்) என்பவை மூன்று - ஆக இவ்விருபத்து நான்கு தத்துவங்களால் ஆகியது உலகம். இருபத்தைந்தாவது தத்துவம் உயிர் (ஆத்மா, புருடன்), இருபத்தாறாவது தத்துவம் உயிர் (ஆத்மா, புருடன்), இருபத்தாறாவது தத்துவம் இவற்றையெல்லாம் உள்ளிருந்து இயக்கும் இறைவன் (பரம புருடன்) என்பது வைணவக் கொள்கையாகும். இருபத்து நான்கு தத்துவங்களும் அவற்றால் ஆகிய மூலப் பகுதியும் (பிரகிருதி) 'அசித்து' எனப்படும் அறிவில்லாப் பொருள்களாகும். இருபத்தைந்தாவது தத்துவமாகிய புருடன் (உயிர்) 'சித்து' எனப்படும் அறிவுடைப் பொருளாவான். இருபத்தாறாவது தத்துவமாகி நின்று இவற்றை வேறு வேறு உடல்களில் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் 'ஈசுவரன்' எனப்படும் இறைவன் முழு ஞான அறிவினன்" என்பவை தத்துவங்கள் பற்றிய வைணவக் கோட்பாடாகும்.

ஈசுவரன் எனும் சொல் ஐசுவரியம் எனும் வடசொல்லிலிருந்து பிறந்த தத்திதாந்த நாமம் ஆகும். அதன் பொருள் அசித்தையும் சித்தையும் செல்வமாக உடையவன் என்பதாகும்.

இந்த இருபத்தாறு தத்துவங்களையும் மூன்றாகத் தொகுத்து தத்துவத் திரயம் என்பர். முதல் 24 தத்துவங்களையும் அசித்து ஆகவும், இருபத்தைந்தாவது தத்துவமாகிய ஆன்மா சித்து ஆகவும், இருபத்தாறாவது தத்துவமாகிய இறைவன் ஈசன் ஆகவும் ஆகி, இவ்விருபத்தாறு தத்துவங்களும் தத்துவத் திரயம் எனும் மூன்றினுள் அடங்கும்.

இறைவனின் ஐவகை நிலைகள்

உயிர்க் குலத்தை உய்விக்க இறைவன் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐவகை நிலைகளை மேற்கொள்கிறான்[26]. இதனைப் 'பஞ்ச கதித்துவம்' என்பர் வைணவ மெய்யியலார்.

பரம்

தன் கருணையே காரணமாக, உருவம் இல்லாத குறையைப் போக்கிப் பரம பதத்திலே திவ்விய மங்கள உருவில் இறைவன் எழுந்தருளி யிருப்பது பரத்துவம்.

இதனை "அருமறை 'பரம்' என்று ஓதும் நன்னிலை" என்பார் கம்பர்[26அ].

இப் பர நிலையில் இருக்கும் பெருமானை மகாவிஷ்ணு அல்லது பர வாசுதேவன் என்பர். இப்பரமபதம் 'நலம் அந்தம் இல்லதோர் நாடு', [26ஆ] 'நித்திய விபூதி' எனப்படும். இது மற்றைய உலகங்கள் எல்லாவற்றினும் மூன்று மடங்கு பெரியது ஆதலின் 'திரிபாத் விபூதி' எனவும் படும். (திரிபாதம் - மூன்று கால், முக்கால் பங்கு).

வியூகம் (வெளிப்பாட்டு நிலை)

நான்கு சுவர்க்கும் நடுவே அமைந்துள்ள தண்ணீர் போல, பரமபத நிலையில் இறைவனை அடைவது அனைவருக்கும் எளிதில்லாமல் போகிறது. இக்குறையைப் போக்க இறைவன் எடுப்பது வியூகம். இதனை 'வெளிப்பாட்டு வடிவநிலை' என்பர்[27]. அணி வகுப்பு நிலை எனவும் குறிப்பதுண்டு[28]. வியூகம் என்பதற்கு, பிரிந்து நிற்றல் என்பது பொருள்[29].

பாற்கடலில் இருக்கும் இருப்பு இது. வெள்ளரித் தோட்டம் இட்டவன் குடிசை கட்டிக் கொண்டு அதனைக் காப்பது போல, பாற்கடலில் ஆதிசேடப் படுக்கையில் வீற்றிருந்து கொண்டு இறைவன் உலகு உயிர்களைக் காக்கும் நிலை இது என்னும் ஈடு[30]. இங்கே இறைவன், வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற வடிவுகளிலே பிரிந்து நின்று முத்தொழில்களையும் புரிகின்றான்.

இவர்களை, "செங்கட்காரி, கருங்கண் வெள்ளை, பொன்கட் பச்சை, பைங்கண்மால்"[30அ] எனப் பரிபாடல் குறிப்பிடும்.

வாசுதேவனை, 'செங்கட்காரி' என்றும், சங்கருடணனை 'கருங்கண் வெள்ளை' என்றும், பிரத்தியும்னனை 'பொன்கட் பச்சை' என்றும், அநிருத்தனை 'பைங்கண்மால்' என்றும் பரிபாடல் பேசுகிறது. (பரி பாடல்-3)

விபவம் (அவதாரம்)

மேற்கூறிய வியூக நிலையும் மக்களால் அடைய முடியாததாகவே, இறைவன் அவதாரம் எடுத்துத் "தீயோர் இறந்துக நூறி, தக்கோர்

இடர்துடைத்தேக" (கம்ப: 5885) எந்நின்ற யோனிகளிலுமாய்த் தன் கருணையால் பிறப்பது விபவம் என்னும் அவதார நிலை.

அந்தர்யாமித்துவம் (உள்ளத்துள் உறைநிலை)

அந்தர்யாமித்துவம் (உள்ளுள் உறைநிலை) அவதாரமும் அவ்வக்காலங்களில் உள்ளோர்க்கே பயன் தருவதால், எல்லோரும் உய்ய, எப்போதும் உயிர்களின் உள்ளங்களில் இறைவன் உறைவது 'அந்தர்யாமித்துவம்' என்னும் உள்ளுள் உறைநிலை யாகும்.

அர்ச்சை

உள்ளுள் இறைவன் உறைவதை யோகத்தால் தான் காண முடியும். யோக நெறியோ எல்லோர்க்கும் எளிதொன்று அன்று. இக்குறையையும் போக்க, வீடுகளிலோ, கோயில்களிலோ விக்கிரக வடிவில் இறைமை காட்சி நல்குகிறது. "மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்" இங்கு வந்து கால் தரை தோய" (கம்ப: 4089) நீராடல், பூச்சூடல், உடுத்தல் முதலிய அர்ச்சகர் இட்ட வழக்காய் இருப்பது அர்ச்சை நிலையாகும்[31].

இவற்றை 'பூகத ஜலம்' (பூமிக்குள் இருக்கிற நீர்) போலே அந்தர்யாமித்துவம், ஆவரண (புற உலக) ஜலம் போலே பரத்துவம், பாற்கடல் நீர் போலே வியூகம், பெருக்காற்று நீர் போலே விபவம், அதிலே தேங்கிய மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்"[32] என அழகுற உவமை கூறி விளக்கும் ஸ்ரீ வசன பூஷணம்.

மேலே கூறிய ஐவகை நிலைகளிலும், 'அகல கில்லேன் இறையும்'[33] என்று அலர்மேல் மங்கையாகிய திருமகள், இறைவனுடன் பிரியாமலே இருப்பாள். பகவான் ஒருவனைத் தவிர மற்றைய அனைவரையும் அடிமை கொண்டவள் பிராட்டி. பிராட்டி பகவானுக்கு மட்டுமே அடிமை. இறைவன் யாருக்குமே அடிமையல்லன். உயிர்களின் பிழைகளைப் பொறுப்பித்துக் காத்தருளுமாறு பெருமானிடம் பரிந்துரை (புருடகாரம்) செய்து சேர்ப்பிப்பவள் பிராட்டி[34].

மந்திரங்கள் மூன்று

முத்தியை அடைய விரும்புகின்றவன் மூன்று வைணவ இரகசிய மந்திரங்களையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். 1. திருமந்திரம், 2. துவயம், 3. சரமசுலோகம் எனும் இம்மூன்றையும் ஆசாரியனிடம் பொருள் தெரிந்து தினமும் ஓதி ஆராதிக்கக் கடமைப்பட்டவர்கள் வைணவர்கள். இம்மந்திரங்களை 'இரகசியத் திரயம்' என்பது வைணவ வழக்கு.

'ஓம் நமோ நாராயணாய' என்பது திருமந்திரம். 'உயிர்களையும் உலகங்களையும் தன்னிடம் கொண்டுள்ள நாராயணனுக்கே நான் அடிமை' என்பது இத்திருமந்திரத்தின் தொகு பொருள்.

அர்த்த பஞ்சகத்தைச் சுருக்கமாய்த் தெரிவிப்பது இத்திருமந்திரம். (வார்த்தா மாலை) நாராயணன் - எனும் சொல் நாரம் + அயநம் எனப் பிரியும். நாரம் என்பது உலகு, உயிர்க் கூட்டம் முழுவதையும் குறிக்கும்.

இச்சொல் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகி நாரங்களாகிய உலகு, உயிர்க் கூட்டங்களைத் தன்னகத்தே கொண்டவன் என்றும், நான்காம் வேற்றுமைத் தொகையாகி, நாரங்களாகிய உலகு, உயிர்க் கூட்டங்களுக்குத் தான் இருப்பிடமானவன் என்றும் பொருள் படும்.

இதனைக் கம்பர் இவ்வாறு கூறுகின்றார். "தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து, அவை தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்" (6.2.47)

இந்த நாராயணன் தான் ஒப்புயர்வற்றவன். அவன் அனைவர்க்கும் தன்னிகரற்ற தலைவன், நாயகன் என்பதனைக் கீதை வாயிலாகச் செப்புவார்.

"நாராயணனே தனிநாயகனே"

"ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே

ஸ்ரீமதே நாராயணாய நம" என்பது துவயம். பெரிய பிராட்டியாரும் ஈசுவரனுமான சேர்த்தியில் என்றும் கைங்கரியத்தைப் புரிவேனாக" என்பது இந்தத் துவய மந்திரத்தின் பொருள்.

"சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேவம் சரணம் விரஜ
அஹம் த்வா சர்வபாபேப்யோ மோட்ச யிஷ்யாமி மாசுச"

இது சரமசுலோகம். இந்தக் கீதைச் சுலோகத்தில் அருச்சுனனுக்குக் கீதையின் சுருக்கத்தைக் கடைசியாகக் கண்ணன் உரைத்ததால் இது 'சரம சுலோகம்' எனப் பெயர் பெறுகிறது. (சரமம்-இறுதி)

"எல்லாத் தர்மங்களையும் விட்டு, என்னையே உபாயமாகப் பற்று. நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன. கலங்கற்க" என்பது இச் சரம சுலோகத்தின் பொருள்[35].

இவை வைணவ உலகின் 'தத்துவங்கள்' ஆகும்.

இதம் (நெறி)

இனி, தத்துவம், இதம், புருடார்த்தம் எனும் வைணவப் பகுப்புகள் மூன்றில், இரண்டாவதாகிய 'இதம்' என்பது நெறி எனப் பொருள்படும்.

இறைவனை அடைய, சாதனமாக அநுட்டிக்கப் பெறும் உபாயம் அல்லது நெறியாக வைணவம், பக்தி நெறி, பிரபத்தி நெறி என இரண்டையும் ஏற்கிறது. கரும யோகம், ஞான யோகம் என்ற நெறி இரண்டினையும் பக்தியோக நெறியின் படிநிலைகளாகவே வைணவம் கருதுகின்றது[35அ]. கருமம், ஞானம், பக்தி எனும் நெறிகள் யாவற்றையுமே சரணாகதியெனும் பிரபத்தி நெறியில் கொண்டு சேர்ப்பதுவே விசிட்டாத்வைதத்தின் தனிச் சிறப்புக் கோட்பாடு எனலாம்.

கரும யோகம்

இறைவனை ஏத்துதல், திருத்தலங்களைத் தரிசித்தல், அறம் புரிதல் போன்றவை எல்லாம் கரும யோகங்களாகும். யாதொரு பலனையும் எதிர்பாராமல் செய்யப் பெறும் (நிஷ்காமிய) கருமத்தால் மனம் தூய்மையடைகின்றது. ஆன்மா தியானத்தில் அழுந்த இது வழி செய்கின்றது[36].

ஞான யோகம்

கரும யோகத்தால் தூய்மையடைந்த ஆன்மா ஞான யோகத்தில் தியானத்தில் ஆழ்கிறது. ஆன்மாவாகிய தன்னை உணர்கின்றது. இதன் தொடர்ச்சியில், தன்னைத் தந்தானையும் ஆன்மா உணர்கிறது. இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோகங்கள் ஞான நிலைக்கு உதவுவதால், ஆன்மாவின் அலைதல் நின்று அமைதி கிட்டுகின்றது[36அ]. இதனை 'ஞானத்தால் நன்குணர்ந்து' என்பார் பூதத்தாழ்வார்[37].

செயல்களால் செய்யும் வழிபாடு கருமயோகம். இடையறாத சிந்தனையால் செய்யும் வழிபாடு ஞான யோகம். கரும யோகத்தால் மனம் ஒடுங்கிய நிலையில் ஞான யோகம் சித்திக்கிறது.

"உள்ளம் உரைசெயல், உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து, இறை உள்ளில் ஒடுங்கே"

எனும் திருவாய்மொழி (1.3.8) இத்தகைய ஞான யோகத்தையே குறிப்பிடுகிறது. இராமாநுசர் போன்றவர்களும் ஆத்ம தியானம் அல்லது உபாசனை என்பதையே 'ஞானம்' எனக் குறிப்பிடுவதாகக் கூறுவர். பிறர் (அத்வைதிகள்) கூறுவது போன்று, நிவர்த்தி அல்லது துறவு நெறி நின்று மேற்கொள்ளும் தத்துவ விசாரமோ, நிர்க்குணப் பிரம்ம உபாசனையோ இங்கு ஞான யோகம் எனக் கூறப்படவில்லை. இறைவனிடம் பெரும் பத்திமைத் திறத்தை விளைவிக்கும் உபாசனையே 'ஞான யோகம்' என்பர் எனும் டாக்டர் ப. அருணாசலம் அவர்களின் விளக்கம் இங்கு நினைவு கூரத் தக்கது[37அ].

பக்தி யோகம்

ஞான யோகத்தில் முடிநிலையில் தோன்றுவது பக்தி யோகம். ஞான யோகத்தில் உயர் நிலையில், எல்லா உயிர்களிடையேயும் ஊடுருவி நிற்கும் பரமான்மாவின் சாயல் தோன்றும். இந்த ஞான நிலைக்கு அடுத்த நிலையே பக்தி யோகம். ஞான யோகத்திற் போலவே பக்தி யோகத்திலும் அட்டாங்க யோகம் உண்டு.

"எமநியம ஆசனங்கள் இயல் ஆவி புலன் அடக்கம்
தமதறியும் தாரணைகள், தாரையறா நினைவொழுக்கம்
சமமுடைய சமாதி நலம் சாதிப் பார்க்கு இலக்கு ஆகும்
அமரர் தொழும் அத்த கிரி அம்புயத்தான் ஆரமுதே"[37அ].

என்பார் வேதாந்த தேசிகர். தியான நிலையில்தான், ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகிறது. இது ஞான நிலையின் இறுதிப் படியும் பக்தி நிலையின் முதற்படியுமாகும். ஞானமே பக்தியாக முதிர்கிறது[37ஆ].

கரும யோகம், ஞான யோகம் இரண்டுமிருந்தால் பக்தி யோகம் தானே வரும்[37இ].

'ஞானம் கனிந்த நலம்'[38] என்று இராமாநுச நூற்றந்தாதி இதனைக் குறிப்பிடும்.

இந்தப் பக்தி பரபக்தி, பரஞானம், பரமபக்தி என மூன்று படி நிலை வளர்ச்சியும் பெறுகிறது[39].

"பகவானோடு கூடினால் இன்புறுவது, பிரிந்தால் துன்புறுவதாய் இருக்கை பரபக்தி; 'அந்தமில் இன்பத்து அடியாரோடிருந்தமை' (திருவாய் 10.9.11) என்கிறபடியே பரம பதத்திற் போலே இறைவனை எங்கும் பரிபூரணமாகக் காண்கை பரஞ்னம், அவனை அனுபவிக்கப் பெறாவிடில், நீரைப் பிரிந்த மீனைப் போலே உயிர் இழக்கும் படியிருக்கை பரமபக்தி; பரபத்தி முதலான இம்மூன்றையும் சாத்திரங்கள் ஞானம், தரிசனம், பிராப்தி என்று முழங்குகின்றன"[39அ] என்கின்ற வைணவச் சான்றோர் ஒருவரின் விளக்கம் இங்கு அறிதல் தகும்.

பிரபத்தி அல்லது சரணாகதி நெறி

பக்தி நெறியை எல்லோராலும் மேற்கொளல் இயலாது எனக் கண்ட வைணவச் சான்றோர்கள், உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதோர் எனும் வேறுபாடின்றி, எல்லோரும் இறைவனை அடைய, மேற்கொள்ள வல்ல நெறியொன்றை ஆய்ந்து, வேதத்தில் மறைந்திருந்த

பிரபத்தியென்னும் சரணாகதி நெறியினைக் கண்டுபிடித்தனர். தூய மனத்தோடு, "கைம்முதல் இல்லேன், நீயே கதியென, இறைவனைப் பெரு நம்பிக்கையோடு பற்றிக் கொள்வது இது. பிரபத்தி என்பதற்கு நன்றாகப் பற்றிக் கொள்ளுதல் என்பது பொருள். நல்லோர்க்கும் தீயோர்க்கும் இதுவே நன்றாம். நாரணற்கே அடைக்கலமாய் நண்ணுவாரே"[40] என்று தேசிகப் பிரபந்தம் இந்நெறியைப் போற்றும்.

புருடார்த்தம் (பேறு)

தத்துவம், இதம், புருடார்த்தம் எனும் வைணவ மெய்ப்பொருட் பகுப்பில் இறுதியதாகிய புருடார்த்தம் என்பது - புருடன் அடையத்தக்க வீடுபேற்றினைக் குறிக்கின்றது.

உயிரின் பயணத்தில் இதுவே இறுதி நிலை. இந்த வீட்டின்ப நிலை, இறைவனுக்கு உயிர்கள் புரியும் கைங்கரியமாய் முடிகிறது என்பது வைணவக் கோட்பாடு.

தலைவனாகிய இறைவனுக்கு அவன் உகக்கும் (அடிமைத்) தொழில் புரிந்து, அதனால் அவன் உகக்கும் உவப்பைக் கண்டு ஆன்மா உகப்பதே ஆன்மாக்களுக்குக் கிட்டும் பேறு என்பது வைணவத்தின் முடிபு. உயிர்கட்குச் செய்யும் நற்செயல்கள் யாவுமே இறைவன் உகக்கும் செயல்கள் ஆதலால், மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வதே உயிர்கள் அடையும் இறுதிப் பேறு என வைணவப் பெருநெறி ஆன்ம நேயமே வைணவத்தின் எல்லைக் குறிக்கோள் என்று அறுதியிட்டு நிறைவு பெறுகிறது.

உயிரின் இறுதி நிலையிலும் தன்னலத்தை வேர் அறுப்பது வைணவத்தின் தனித்தன்மை எனலாம். தன்னலம் அறுப்பதே மோட்சம், பெறத்தக்க பேறு என வைணவத் தத்துவம் இறுதி முடிவாகக் கொள்வதை இங்கு தெள்ளத் தெளிவாக உணரலாம்.

'யாருக்கு வைணவத்துவம் உண்டு?' என்று நம்பிள்ளை தம் ஆசாரியராகிய நஞ்சீயரைக் கேட்டருள, அவர் அளித்த விடை வைணவத்தின் சாரம் முழுவதையும் பிழிந்து வைத்துள்ளது.

பிறர் அநர்த்தம் (துன்பம்) கண்டால், ஐயோ என்று இரங்குவானாகில், அவன், நமக்குப் பகவத் சம்பந்தம் உண்டு என்று இருக்க அடுக்கும். (தகும்)

"இத்தனையும் வேண்டும் பட்டுக் கிடப்பானுக்கு" என்று இருந்தானாகில் அவன் "நமக்கு, பகவத் சம்பந்தமில்லை" என்று இருக்க அடுக்கும்" (ஈடு 1.2. முன்னுரை)

பாம்பின் வாயில் உள்ள முள்ளை எடுத்தார் ஒரு வைணவ அடியார் என்பதும், பாம்பின் வாய்த்தேரை கூப்பிட, "ஐயோ, யாரை நினைத்துக் கூவுகிறதோ? என்று மயங்கி விழுந்தார் பட்டர் என்பதும், இந்த ஆன்ம நேயத்தின் முற்றி முதிர்ந்த நிலை என்பது அல்லாமல் வேறு என்ன?

உயிர்கள் இவ்வுலகத் தொடர்பறுத்து, பத்தர் நிலையிலிருந்து முத்தர் நிலை எய்தி, அர்ச்சிராதி கதி வழிச் சென்று, நலமந்தம் இல்லதோர் நாடாகிய பரமபதம் அடைந்து, இறைவனின் திருவோலக்கம் கண்டு, அவன் முகமலர்த்திக்கேற்ற பணி புரிந்து மகிழ்வதே வீடு. இதுவே, பரம புருடார்த்தம் என முடிவு கொள்கிறது வைணவ மெய்ப்பொருள்[41].

இதுகாறும் கூறிய வைணவ மெய்ப்பொருள்களை வைணவ ஆசாரியர்கள், ஐந்து பகுப்பாகப் பகுத்து, அவற்றிற்கு 'அர்த்த பஞ்சகம்' எனப் பெயரிட்டுள்ளனர்.

இவ்வைந்தின் வகையான இறை இயல்பு, உயிர் இயல்பு, நெறி இயல்பு, தடை இயல்பு, பேற்றின் இயல்பு எனும் ஐவகை இயல்புகளையும் அறிந்து பின்பற்ற ஒவ்வொரு வைணவரும் கடன் பூண்டவர். இவற்றை அறிந்து பின்பற்றும் ஞானத்தை 'அர்த்த பஞ்சக ஞானம்' என்பர்[42].

திருவாய்மொழி முழுவதும் இந்த அர்த்த பஞ்சக ஞானத்தை இயம்புவதே[43].

"மிக்க இறை நிலையும், மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும், தடையாகித் - தொக்குழலும்
ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் சடகோபன்
யாழின் இசை வேதத் தியல்[44].

என்பது திருவாய்மொழித் தனியன். திருவாய்மொழி மட்டுமன்றி, எல்லா இதிகாசங்களும் இந்த ஐந்நிலைகளாகிய அர்த்தபஞ்சகத்தை விளக்குவதே என்பது வைணவச் சான்றோர்கள் கருத்தாகும்.

அடையத் தகுந்த பரம்பொருளின் சொரூபத்தையும், அடையும் உபாயத்தையும், அடைவதற்குப் பலத்தையும், அப்படியே அடைவதற்கு விரோதியையும் இதிகாச புராணங்களுடன் கூடின எல்லா வேதங்களும் கூறுகின்றன" என்று பெரிய வங்கிப்புரத்து நம்பி அருளிச் செய்ததாக நம்பிள்ளை திருவாய்மொழி ஈட்டின் மகாப்பிரவேசத்தில் மொழிவார்[45].

"இந்த இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணத்தில் இராமனுடைய கதையால், பரம்பொருள் இயல்பும், இலக்குவன் முதலியோர் வரலாற்றால் சீவாத்தும இயல்பும், தேவர்கள், முனிவர்கள், வீடணன் முதலியோர்

வரலாற்றால் நெறியின் இயல்பும், இராணவன், கும்பகர்ணன் முதலியோர் வரலாற்றால் விரோதி (தடை) இயல்பும், இராமனைப் பற்றியோர் அடைந்த பயனால் கைங்கரியமாகிற பேற்றின் இயல்பும் விளங்குகின்றன" என்று திருவாய்மொழி ஈடு முதலிய வைணவ நூல்கள் பலவும் கூறி நிற்கும்[46].

இவ்வைந்தின் இயல்பிற்குள் வைணவக் கோட்பாடுகள் அனைத்தும் தொகை, வகை, விரியாய்ச் சுற்றிச் சூழ்ந்துள்ளன[47].

எனவே, இந்த ஐந்து நிலைகளும் கம்பர் காவியத்தில் அமைந்துள்ள பாங்கினை விளக்குவதே இந்த நூலின் நோக்கம். இந்நூலில், இனி வரும் பக்கங்களில் இந்த ஐந்து நிலைகளின் விளக்கமாக விரிவாக்கமாகக் கம்பரின் இராம காதை அமைந்து விளங்கும் பாங்கை, இனிக் காண உள்ளோம்.

2

இறை இயல்பு

வைணவ நெறியில் அர்த்த பஞ்சகம் எனும் ஐவகை நிலையில், முதலிடத்தில் நிற்பவன் இறைவன். அவன் உயிர்களை ஆட்கொண்டு உய்விக்க ஐவகைத் தோற்ற நிலைகளை (பஞ்ச கதித்துவம்) மேற்கொள்கிறான் என்பது வைணவ சித்தாந்தம்.

அந்த ஐவகை நிலைகளும், பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை எனப் பெயர் பெறும்.[1]

பரம்

பரமபதத்தில் நித்திய சூரிகள் புடை சூழ உள்ள பர வாசு தேவ நிலை பரம் ஆகும்.

வியூகம்

உயிர்களின் குறை கேட்கத் திருப்பாற் கடலில் ஆதிசேடன் மேல் பள்ளி கொண்டுள்ள நிலை வியூக நிலை யாகும்.

விபவம்

இவ்வாறு குறைகேட்ட இறைவன் அக்குறை களைய எடுக்கும் அவதாரங்கள் விபவம் ஆகும்.

அந்தர்யாமித்துவம்

உயிர்கள் ஒவ்வொன்றையும் சரீரமாகக் கொண்டு, தான் அவ்வுயிர்களின் உள்ளே குடிகொண்டு விளங்கும் நிலை அந்தர்யாமித்துவம் ஆகும்.

அர்ச்சை

திருக்கோயில்களிலும் இல்லங்களிலும் திருவிக்கிரக நிலையில் விளங்குவது அர்ச்சை நிலையாகும்.

இறைவனின் இந்த ஐவகை நிலைகளைச் சுட்டும் நீர்மைக்கு ஐவகை நீர்நிலைகளையே உவமையாகக் காட்டி விளக்குவர் பெரியோர். புறக்கடல் நீர், கடல் நீர், ஆற்று நீர், மடு நீர், ஊற்று நீர் எனும் ஐவகை நீர்நிலைகள், இறைவனின் இந்த ஐவகை நிலைகளையும் விளக்கும் உவமைகளாகத் 'திவ்வியார்த்த தீபிகை' குறிப்பிடும்[2].

விடாய்த்தவனுக்கு அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற (ஆவரண) புறக்கடல் நீர் போல – இவ்வுலகிற்கு அப்பாற் பட்டிருக்கிற நிலை பரத்துவம். இந்த ஆவரண நீரை, 'அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து அப்பினால் ஆடும்'[3] என இரணியன் வதைப் படலத்தில், 'அப்புறத்து அப்பு' எனக் குறிப்பிடுவார் கம்பர்.

இத்தகைய பரத்துவ நிலைபோல, அதிகத் தொலைவின்றி அண்டத்துக்குட்பட்டிருந்தும், விடாய்த்தவனுக்குக் கிட்ட அரிதாய் இருக்கும் பாற்கடல் போல், சென்று காண அரிதாம்படி இருக்கிற நிலை வியூகம் ஆகும்.

அருகிலிருந்தும் அக்காலத்தில் இருந்தவர்கள் மட்டும் பயன்படுத்தத் தக்கதாய், பிற்பட்டவருக்கு அரிதான பெருக்காறு போல் இராமன், கண்ணன் முதலிய அவதாரங்கள் ஆன நிலை விபவம் ஆகும்.

விடாய்த்தவனுக்கு வேறிடந் தேடிப் போக வேண்டாதபடி நிற்கிற இடத்திலேயே உண்டாகியிருப்பது ஊற்று நீர். ஆயினும், கொட்டும் குந்தாலியும் கொண்டு தோண்டினால் அல்லது குடிக்கக் கிடையாதபடி பூமிக்குட் படிந்து கிடக்கும் நீர் அது. அதுபோன்றது அந்தர்யாமித்துவம்.

கண்டு பற்ற வேண்டும் என்ற ஆசையுற்றவனுக்கு இதயத்திலே இருக்கச் செய்தும் கண்ணுக்குப் புலனாவதின்றி, அட்டாங்க யோகம் முதலிய யோக முயற்சியிலே காண வேண்டியிருக்கும் இந்த நிலை அந்தர்யாமித்துவ நிலை என்பர்.

விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி, பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போல, கோயில்களிலும் இல்லங்களிலும் எல்லோர் கண்ணுக்கும் இலக்காம்படி நிற்கிற நிலை அர்ச்சை எனப்படும. இது, அர்ச்சகர் இட்ட வழக்காய் இருத்தலினாலும் அர்ச்சிக்க உரியதாயிருத்த லாலும் அர்ச்சை எனப் பெயர் பெற்றது என்பர்.

இந்த ஐவகை நிலைகளிலும் இறைவன் இயங்குவதைக் கம்பர் தம் காவியத்தில் அமயம் வாய்க்கும் போதெல்லாம் ஏற்ற பெற்றி இயம்பிச் செல்கின்றார்.

ஒரே பாடலில் ஐவகை நிலையும்

கம்பர் ஒரு பாடலில் இவ்வைவகை நிலையினையும் குறிப்பிடும் இடமும் உண்டு.

"எழுவாய் எவர்க்கும் முதலாகி, ஈறோடு இடையாகி எங்கும் உளையாய்!
வழுவாதவர்க்கும் வரம்ஈயவல்லை; அவரால் வரங்கள் பெறுவாய்
தொழுவாய் உணர்ச்சி தொடராத தன்மை யுருவாய் மறைந்து துயரால்
அழுவாய் ஒருத்தன் உளைபோலும் ஆர் இவ்வதிரேக மாயை யறிவார்[4]."

இப்பாடலில், 'எழுவாய் எவர்க்கும் முதலாய்' என்பதனால் இறைவனின் பரத்துவ நிலை கூறப்படுகிறது. 'மூலமே இல்லா முதல்வனே'[4அ] என்பார் வேறிடத்தும். இந்நிலையே பரநிலையாகும்.

'வழுவாது அவர்க்கு வரம் ஈய வல்லை' என்பதனால் பாற்கடலில் பள்ளிகொண்டு வரம் ஈயும் வியூக நிலை கூறப்படுகிறது. மக்கள் குறைதீர்த்துக் காக்க வேண்டும் என்று பாற்கடலில் வந்து பள்ளிகொண்ட ஓலக்கமே வியூகம் ஆகும்.

'அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை மலையென விழி துயில் வளரும் மாமுகிலை, அரக்கர் கொடுமை தீர்ப்பன் என்றுரைத்த வாய்மையனை' திரைகெழுபயோததி துயிலும் தெய்வவான் மரகத மலையினை வழுத்தி' தேவர்கள், முனிவர்கள் சிரகமலம் குவித்து இருந்தபோது, அவன் வந்து தோன்றினான் எனத் திருவவதாரப் படலத்தில் கம்பர் கூறியுள்ளமை இந்த வியூக நிலையை விளம்பும் காட்சியே.

முனிவர், தேவர் முதலியோர்க்கு வரம் ஈயவல்ல பரம்பொருளா யிருந்தும், அவரால் வரங்கள் பெறுவாய்! தொழுவாய் என்பதனால், விபவம் எனும் அவதார நிலை கூறப்படுகிறது. வருணனை வழிவேண்டல், சுக்கிரீவனிடம் உதவி வேண்டல், முனிவர்களிடம் ஆசி வேண்டல் முதலிய

இராம அவதாரச் செயல்களை உட்கொண்டு, "வரங்கள் பெறுவாய்! தொழுவாய்" என்கின்றார்.

வியூகத்தில், தப்பாது குறை நேர்வார்க்கும் முறை நேர்வார்க்கும் வரம் ஈய வல்ல பெருமான், விபவம் எனும் அவதார நிலையில்தான், தன் உயர் நிலையில் தாழ்ந்து, கீழ் இறங்கி, ஆற்றல் அற்றவன் போல் முனிவர் முதலியோரிடம் தொழுது வரம் பெறுவான் ஆதலின், "வழுவாது அவர்க்கும் வரம் ஈயவல்லை; அவரால் வரங்கள் பெறுவாய்; தொழுவாய்" என்று அவதார நிலையை இங்கு தெளிவுறச் சுட்டினார்.

'இடையாகி எங்கும் உளையாய்' என்பதனால், எங்கும் உள தன்மையாகியே அந்தர்யாமித்துவம் கூறப்படுகிறது.

இடையாய் இருத்தல் என்பது பொருள்களின் நடுவாகிய மனத்தில் ஊடுருவியிருத்தல். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி; அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது' என்பார் மணிவாசகரும். இதுவே உள்ளிருப்பு நிலை என்னும் அந்தர்யாமித்துவம்.

'உணர்ச்சி தொடராத தன்மையுருவாய்' என்பதனால், உணர்ச்சியற்ற கல்லாய்ச் செம்பாய் உருவெடுத்திருக்கும் அர்ச்சாவதாரம் கூறப்படுகிறது. அர்ச்சை என்பதற்கு உணர்ச்சி தொடராத தன்மையுடைய உருவில் மறைந்திருத்தல் என அழகுற விளக்கம் தந்தார்.

பரம்

இந்நிலையில் இராவணனுடைய தீமையின் கொடுமைக்கு அஞ்சி, வானவர்கள், துதிக்கையில், பர வாசுதேவனாகிய பரமபத நாதனின் கோலம் கம்பரால் இவ்வாறு வருணிக்கப்படுகிறது:

"கருமுகில் தாமரைக் காடு பூத்து, நீடு
இருசுடர் இருபுறத்து ஏந்தி, ஏந்து அலர்த்
திருவொடும் பொலிய ஓர் செம்பொன் குன்றின் மேல்
வருவ போல் கலுழன் மேல் வந்து தோன்றினான்"[5]

கருமுகில் ஒன்று தாமரைக்காடு பூத்துக் கிடப்பதுபோல், சங்கு சக்கரம் என்னும் திவ்விய ஆயுதங்களோடு, சூரிய சந்திரர்களை இருமருங்கும் ஏந்தி நிற்பதுபோல் அவற்றை ஏந்தி, மலர்மேல் வாழும் மங்கையாகிய பிராட்டியோடும் பொலிந்து, செம்பொற் குன்றம் போன்ற கருடன் ஏந்தி நிற்க, இறைவன் தோன்றியதாகக் கம்பர் கூறும் இந்நிலையே பரத்துவக் கோலம் ஆகும்.

பரமபதத்தின் இருப்பிடம், 'வானோர் உலகின் மேல் உலகு'[6] எனக் கம்பரால் சுட்டப்படுகிறது. 'அருமறை பரம் என்று ஓதும் நன்னிலை'[6அ] என்றும் தெளிவுற மேலும் இதனைக் குறிப்பிடுவார்.

அப் பரநிலையில், பரமபத நாதன் ஆதிசேடனாகிய திருவணையில் வீற்றிருக்கும் கோலம் உடையவன். அந்த ஆதிசேடனே தம்பி இலக்குவனாகப் பிறந்துள்ளான் என்பதனை,

"அன்னவற்கு இளல்தன்னை அருமறை பரம் என்றுஓதும்
நன்னிலை நின்று தீர்ந்து நவையிலா உயிர்கள் தோறும்
தொல்நிலை பிரிந்தான் என்னப் பல்வகை நின்ற தூயோன்
இன் அணை, என்று யாரும் இயம்புவர்'

என்பதனால் கம்பர் குறிப்பிடுவார்.

அருமறை 'பரம்' என்று ஓதும் அந்த நன்னிலையில், ஆதிசேடன் எனும் அணையின் மேல் இறைவன் வீற்றிருக்கும் இடமே வைகுந்தம்.

"திருவோலக்க மண்டபத்திலே, மையத்தில் தூவப் பெற்ற உதிரிப் பூக்களால் பல நிறம் கொண்ட பெரிய திருப்பள்ளிக் கட்டிலாயிருக்கிற திருவநந்தாழ்வான் மேலே, செழிப்புக் குறையாத (து) வைகுண்டம் என்னும் திவ்விய லோகம்"[6ஆ] என்று எம்பெருமானார், தமது ஸ்ரீவைகுண்ட கத்தியத்தில் குறிப்பிடுவார்.

இதே பாடலில், "நவையிலா உயிர்கள் தோறும் தொல்நிலை திரிந்தான் என்னப் பலவகை நின்ற தூயோன்" என்பது உயர்ந்த பரநிலையிலிருப்பதற்கு மாறாய், தாழ்ந்த உயிர்களின் உள்ளங்கள் தோறும் நினைந்த வடிவில் இருப்பான் என்று இறைவனின் அந்தர்யாமித்துவம் குறிப்பிடப்படுவதும் காண்க.

இவ்வாறு உயிர்களின் உளந்தோறும் இருப்பினும் அவ்வுள்ள அழுக்குகள் அவனைச் சாரா என்பதனை யுணர்த்தத் 'தூயோன்' என்கின்றார்.

"சுவண வண்ணனொடு கண்ணன் இரு தோள்கள் பொலிய
அவண விண்ணிடை எழுந்து படர்கின்றவன் அறம்
சிவண வன்னசிறை முன் அவரோடு ஏகு செலவத்து
உவணன் என்னும் நெடுமன்னவனும் ஒத்தனன்"

முன்னம், பரம பதத்தில், அந்த வாசுதேவ சங்கர்சண மூர்த்தியாகிய இருவரோடு செல்லுவதை இயல்பாக உடைய கருடாழ்வானைப் போல,

இராம லக்குவரைத் தோளில் கொண்ட விராதன் விளங்கினான் என்பதனால், இங்கும் அந்தப் பரநிலை சுட்டப்படுவது காணலாம். வாசுதேவ, சங்கர்சணர் இருவரும் திருமாலின் பஞ்ச வியூக மூர்த்திகளில் சிறந்தவர் என்பதும், அவர்கள் இருவரும் பரம பதத்துக்கு அடிக்கடி எழுந்தருளுபவர்கள் என்பதும் இதனாற் புலனாம்.

வியூகம்

உயிர்களின் துயர் கேட்கைக்காக, பரம பதநிலையிலிருந்து பாற்கடலில் இறைவன் திருக்கண் வளர்வது வியூகம் (வெளிப்பாட்டு நிலை) எனப்படும். இவ்வியூக நிலை, பலப்பல இடங்களில் இக்காவியத்துள் சுட்டப்படும்.

“திரைகெழு பயோததி திகழும் தெய்வவான் மரகதமலை” எனப் பாற்கடலில் பள்ளி கொண்ட வியூக நிலை சுட்டப்படுகிறது.

“அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரும் மாமுகில்
கொலைத் தொழில் அரக்கர் தம் கொடுமை தீர்ப்பன்”[9]

என்பதனால் பாற்கடலில் ஆதிசேடன் மேல் அறிதுயில் அமர்வதும், அங்கு, உயிர்களின் முறையீடு கேட்டு வரம் ஈவதும் சுட்டப்படுகின்றன.

“ஆரா அமுதா அலைகடலில் கண் வளரும் நாராயணன்”[10] என்பாள் மண்டோதரியும்.

தன்னால் படைக்கப்பட்ட பிரமன் முதலானோர்கட்கு, எளிதில் பற்றப் படுதற்காகத் திருப்பாற் கடலில், திருவனந்தாழ்வான் மேல் பள்ளி கொள்வான் இறைவன்.

‘பள்ளியாவது பாற்கடல் அரங்கம்’ என்னும் பெரிய திருமொழிப் பாசுரத்துக்குப் பெரியவாச்சான் பிள்ளை கூறும் உரை இது:

“பிரம்மா ஆதியர்களுக்கு அடையத் தக்கவனாய்க் கொண்டு, கண் வளர்ந்தருளுகிறது திருப்பாற்கடல் படுக்கை. அவ்வளவு சென்று கிட்ட மாட்டாத சம்சாரிகளுக்குக் கோயில்” (திருவரங்கம்).

“பயிரைச் செய்து, செய்த்தலையிலே (வயலருகே) உழவன், குடி கிடக்குமாறு போன்று, படைக்கப்பட்ட பொருள்களைப் பாதுகாப்பதற்காகத் திருப்பாற்கடலில் கண் வளர்ந்தருளுகிறான் வியூக நிலையில்” என்பது நம்பிள்ளை ஈடு[11].

"என்னையாளுடைய ஐயன் கருடன்மேல் எழுந்துபோய பின்னர்"[12] என்று வியூக நிலையில் வரமீந்தபின் பரநிலைக்கு எழுந்தருள்வதும் கவிஞரால் கூறப்பட்டுள்ளது.

விபவம் என்னும் அவதாரம்

எல்லாரினும் யாவற்றிலும் உயர்வற உயர்ந்த நலமுடைய இறைவன், தன்னைத் தாழவிட்டுக் கொள்ளும் நிலை விபவம் எனப்படும் அவதார நிலையாகும்.

இவ்வைவகை நிலைகளுள் இவ்வவதார நீர்மையை இன்றுள்ளாரும் திளைத்து மகிழும்படி உணர்த்தி நிற்பதே கம்பரின் இராமாயண காவியம். இக்காவியத்திற்கு அவர் இட்ட பெயர் 'இராமாவதாரம்'[13] என்பதே என்பதனால், அவதார நிலையில் அவர் கொண்ட நெஞ்சத்தீடுபாடு புலனாம்.

"பெரியவன் தாழ்ச்சி ஆகையாலே, மேலிருந்து கீழிறங்குவதாகிய இவ்வவதார நிலையில், மிகமிக ஈடுபாடுற்று 'எத்திறம்!' என்று தாழ்சசி பொறுக்கமாட்டாமல் ஆழ்வாராதியர் இரங்குவர்"[14].

இருகை முடவரும் யானையேறலாம்படி, யானை, தன்னைத் தாழவிட்டுப் படிந்து நிற்கும் நிலை அவதாரம் என்று உவமிக்கும் ஈடு[15].

அவதாரத்திற் குரிய காரணங்கள்

இறைவனுடைய அவதாரத்திற்கு மூன்று காரணங்கள் கூறப்படு கின்றன. நல்லோரைக் காத்தல், அல்லோரை அழித்தல், அறந்தலை நிறுத்தல் என்பவை அவை. இம்மூன்றனுள், நல்லோரைக் காத்தல் எனும் செயலே அவதாரத்திற்குரிய இன்றியமையாத நோக்கம் என்பர்[16].

அல்லோரை அழித்தலும் அறங்காத்தலும், நல்லோரைக் காத்தலிலேயே அடங்கி விடுவனவாகும். இறைவன் இவ்விரண்டையும் பரமபதத்திலிருந்தே நினைவின் அளவாலேயே (சங்கல்ப மாத்திரையாலேயே) செய்ய இயலும்.

'கூராழி வெண்சங்கேந்திக் கொடியேன் காணவாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'[17] என்பது போன்று, அவன் திருக்கோலம் காண விழையும் அன்பர்களுடைய ஆசையை நிறைவேற்ற அவதாரம் நேர்கிறதாம். இக்கருத்தை,

"மனத்தினின் உலகெலாம் வகுத்து, வாய்ப்பெயும்
நினைப்பினன் ஆயினும், நேமியோடு வேறு

எனைப்பல படைக்கலம் ஏந்தி, யாரையும்
வினைப் பெருஞ்சூழ்ச்சியிற் பொருது வெல்லுமால்”[18]

என்று கம்பர் கூறுவார்.

ஆதலால், நல்லோர்களாகிய அன்பர்கள் (பக்தர்கள்) விருப்பத்தை நிறைவேற்றி, அவர்களைக் காப்பதே இறையவதாரத்தின் முதன்மை நோக்கம் ஆகிறது. இக்கருத்தை யுட்கொண்டே,

“அறத்தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறத்தெரிந்து உலகோர் பூணச் செந்நெறி செலுத்தி, தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர் துடைத்தேக ஈண்டுப்
பிறந்தவன் தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பார்”[19]

என்று, ‘தக்கோர் இடர்துடைத்தேக ஈண்டுப் பிறந்தவன்’ எனக் கூறி, அவதாரத்தின் உயிர்நிலை சுட்டப்படுகிறது. நல்லோரைக் காப்பதே இறைவனின் நோக்கம். அந்நோக்கம் நிறைவேறச் செயல்படுகையில், எதிர்ப்படும் களைகளை அகற்றுவதும் அவதாரத்தின் செயலாகிப் போகிறது.

“சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு
ஆதியஞ் சோதியுருவை அங்குவைத்து இங்குப் பிறந்த
வேதமுதல்வன்”[19அ]

என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

அவதாரமும் தவமும்

இராவண வதத்தின் பொருட்டு, மனிதனாகப் பிறப்பது என்று திருவுளம் கொண்டது பரம்பொருள்; மாநிலம் புரப்பதற்கு மகன் வேண்டும் என்று யாகம் புரிந்தான் தசரதன். மனிதனாகப் பிறப்பது என்ற அவதார நோக்கிற்கு மன்னன் முயற்சியை வாய்ப்பாகக் கொண்டது கடவுட் கருணை[20].

ஆகவே, மனித முயற்சியைக் கால்கொண்டு, கடவுட் கருணை இறங்குகின்றது எனும் அவதார நுண்பொருளும் இங்கு வெளிப்படுகிறது.

“மண் வயிற்றில் அடக்கிய மாயனைத்
தன் வயிற்றில் அடக்கும் தவத்தினாள்”[21]

கோசலை என்பதனால், இறைவன் அவதாரம் எடுக்குங்கால், தன்னை மகனாகப் பெறப் பெருந்தவம் புரிந்தார் வயிற்றினைத் தேர்ந்தெடுத்துப் பிறக்கின்றான் என்பது தெரிகிறது.

“என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்”[22] “மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே”[23] என்னும் ஆழ்வார்களின் கருத்துக்களும் இங்கு நினைவு கூரத் தக்கன.

இடை நிகழ்ந்த இராமாவதாரம்

இராமாவதாரம் பரசுராம அவதாரம் பலராம அவதாரம் எனும் இரண்டு இராமாவதாரங்களுக்கு இடையே நிகழ்ந்ததனால், “இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை”[24] எனச் சிறப்பிக்கப்படுகிறது. அவதாரத்தின் சிறப்புக் கருதி, தசரத இராமனுடைய கதைக்கே ‘இராமாவதாரம்’ எனும் பெயர் நிலைத்திருப்பதை உணரலாம்.

பலராம, பரசுராம அவதாரங்கள் இறைவனின் ஏகதேச அம்சங்கள் மட்டும் அமைந்து, ஆவேசம் மிகுந்தவையாதலால், ‘ஆவேசாவதாரம்’ என்றும், இராமாவதாரமும், கண்ணன் அவதாரமும் இறைவனின் அம்சங்கள் முழுவதும் நிறைந்தவை யாதலால் அம்சாவதாரம் என்றும், பூரணாவதாரம் என்றும் கூறப்படும்[25].

அவதாரம் - உடைமையைத் தேடல்

இறைவனின் பிறவிக்குக் காரணம் அவனது விருப்பம்; உயிர்களின் பிறவிகளுக்குக் காரணம் அவை செய்த வினைகள்.

உயிர்கள் பிறப்பிக்கப் பிறக்கும்; இறைவன், பிறப்பிப்பார் இல்லாமல் பிறப்பான். ஏனெனில் அவன் ‘மேலொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள்.’[26]

‘எந்நின்ற யோனியுமாய்’[27] எண்ணற்ற பிறப்புக்களை அவன் எடுப்பது உயிர்கள் மாட்டு அவன் கொண்ட கருணையின் காரணத்தால் ஆகும்.

‘பிறவாப் பிறப்பிலை; பிறப்பித்தோர் இலையே’[28] எனப் பரிபாடல் கூறும். இதனையே ‘கருணையிற் பிறந்தான்’[29] என்பார் கம்பர்.

உயிர்கள் அனைத்தும் இறைவனின் உடைமைகள். இவ்வுடைமைகள் அறியாமையென்னும் மாயையில் சிக்குண்டு, உடையான் பிடியிலிருந்து தப்பி, உலக இருளில் மூழ்கித் துயர் உறுகின்றன. இவற்றை மீட்டுத் தன்பக்கம் கொணர்ந்து சேர்க்கும் பொறுப்பு உடையானுக்கு உரியது ஆகிறது. துயருறும் இவற்றை மீட்க வேண்டும் என்னும் மாளாக் கருணையால், இறைவன் உலகிற் பிறக்கிறான். இதுதான் அவதாரம் ஆகிறது.

நல்லோரை ஏற்றல்

அவதாரத்தை, நல்லோர்களையெல்லாம் இறைவன் தன்பால் அழைத்துக்கொள்ளக் கிட்டுகிற ஒரு வாய்ப்பாகக் பயன்படுத்திக் கொள்கிறான்.

கும்பகருணனை அழைக்குமாறு வீடணனை அனுப்புகின்றான் இராமபிரான். வீடணன் சென்று, "வேதநாயகனே என்னைக் கருணையால் வேண்டிவிட்டான் காதலால் உன்பால் வைத்த கருணையால்"[30] என்பான். அறத்தை விரும்புகின்ற ஆன்மாக்களைத் தன்பால் சேர்த்துக் கொள்ள இறைவனுக்குள்ள துடிப்பை இங்கு காண்கிறோம்.

'இதனையே எதிர் சூழல் புக்குத் திரிவது'[31], 'ஒருவனைப் பிடிக்க ஊரை வளைப்பது'[32] என்னும் தொடர்களால் வைணவ மரபு சுட்டும்.

> **"எதிர்சூழல் புக்கு எனைத்து ஓர் பிறப்பும் எனக்கே அருள் செய்ய**
> **விதிசூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் திரிவிக் கிரமனையே"**

(திருவாய் 2:7:6)

"எதிர் சூழல் புக்கு ஒருவனைப் பிடிக்க நினைத்தவன் அவன் போம் வரம்புக்கு எதிர்வரம்பே வருமாறு போன்று, இவர் பிறந்த பிறவிகள் தோறும் தானும் எதிரே பிறந்து வந்தான்"

(ஈடு 2:7:6)

என்பது திருவாய் மொழியும் அதற்கு நம்பிள்ளை வரைந்த உரை விளக்கமும் ஆகும்.

நல்லோர் உள்ளம் வருந்தாமற் காத்தல்

கும்பகருணன் வர மறுத்ததை வீடணன் வந்து கூறியபோது, இராமபிரான்,

> **"ஐய, நின் எதிர் நும்முன்னோனை**
> **எய்து இறத் துணித்து வீழ்த்தல் இனிதன்று என்று**
> **இனைய சொன்னேன்; செய்திறன் இனி வேறுண்டோ?"[33]**

என்பான்.

"உன் கண்ணின் முன்னால், உன் தமயனைக் கொன்று வீழ்த்தல் இனிய செயல் அன்றாதலால், கும்பகாணனை நம்பால் அழைக்குமாறு அவனிடம் உன்னை அனுப்பினேன்; இப்போது அவன் மறுப்பதால் இனி என் செய்ய இயலும்?" என்பான் இராமன்.

நல்லோராகிய தன் அடியார்கள் உள்ளம் வாடப்பொறாத இராமனின் நயத்தக்க நனிநாகரிகம் இங்கு வெளிப்படுகிறது.

இவ்வாறே, நரசிங்க அவதாரத்திலும், இரணியனை, மகனாகிய பிரகலாதன் கண்முன் கொல்ல நேர்ந்ததற்கு இரங்குவான் நரசிங்கப் பெருமான்[34] என்பார் கம்பர்.

"உந்தைய உன்முன்கொன்று, உடலைப் பிளந்து அளையச்
சிந்தை தளராது, அறம் பிழையாச் செய்கையாய்!
அந்தம் இலா அன்பு என் மேல் வைத்தாய்! அளியத்தாய்!
எந்தை இனி இதற்குக் கைம்மாறு யாது?" என்றான் கம்ப - 6.3.166

"அயிரா இமைப்பினை ஓர் ஆயிரம் கூறுஇட்ட
செயரின் ஒருபொழுதில், நுந்தையை யாம் சீற,
உயிர் தேடுவேம் போல், உடல் அளைய, கண்டும்
செயிர் சேரா உள்ளத்தாய்க்கு என் இனியாம் செய்கேம்?"
கம்ப - 6.3.167

பக்தனாகிய பிரகலாதன் கண்முன், அவன் தந்தையைக் கொன்று தீர்த்த செயலுக்கு இறைவன் வருந்திய வருத்தம் இப்பாடல்களில் கம்பரால் பதிவு செய்யப்பட்டுள்ளமையைக் காணலாம்.

அவதாரங்களின் எளிமையும் அருமையும்

"இறைவனுடைய மேன்மை தரை (அளவு) காணலாம்; நீர்மை தரை காண ஒண்ணாதது"[35] என்று அவன் எளிமையை எண்ணி வியப்பர் பெரியோர்.

ஆனால், இந்த அவதாரங்களில், இறைவன் எளியனாய் நிற்பதும் உண்டு; அரியனாய்ப் பரத்துவ நிலை காட்டலும் உண்டு; இதனை, 'நிலை வரம்பில'[36] என்பார் நம்மாழ்வார்.

"தேர்ப்பாகனாய்த் தாழநிற்கச் செய்தே விசுவரூபமும் காட்டும்; ஏழு வயதிலே கோவர்த்தன மலையையும் தரித்துக் கொண்டு நிற்கும்; ஒன்றிலும் ஒரு நியதில்லை. காத்தலுக்கு உறுப்பாம் அத்தனையே வேண்டுவது. ஏதேனுமாக (பரத்துவமோ சௌலப்பியமோ) அமையும் இவனுக்கு"[37] என்று 'நிலைவரம்பில' என்னும் நம்மாழ்வார் தொடரை விளக்குவார் ஈட்டின் ஆசிரியர்.

இதனால்தான், இராமன் எழுபது வெள்ளம் குரங்குப் படையைத் துணை கொண்டும் இலங்கைப் போர் புரிவான்; யாரும் துணையின்றி, ஒரு வில் மட்டுமே துணைகொண்டு, மூல பலமெனும் ஆயிரம் வெள்ளம்

அரக்கர் சேனை யடங்கலையும் ஒருவனாக நின்று, பொருது வென்று, ‘கூட்டொருவனையும் வேண்டாக் கொற்றவன்’[38] (அசகாய சூரன்) என்னும் சொல்லை நிறுவவும் செய்வான்.

காரணம் பற்றாத கருணை

ஒரு காரணமும் பற்றாமல் அவதாரத்தில் அருள் புரிந்து கொண்டே நிற்கிறான் இறைவன்.

விரும்பாமல் இருக்கவும் மார்க கடுப்பால் தரையிலே பாலைப் பீச்சும் தாயாரைப் போன்று[39], தானாகவே வந்து அருள்கொட்டிய வண்ணம் அவதாரத்தில் பயணத்தைத் தொடர்கின்றான் இறைவன். “வானின்றிழிந்து வரம்பிகந்த மா பூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உடலும் உணர்வும் போல் உள்ளும் புறனும் உளனாய்த் திரிந்து”[40], அயோத்தி தொடங்கித் தென்னிலங்கை வரை அறக்கருணையும் மறக்கருணையும் காட்டிப் புரிந்த இராமபிரானின் செயல்கள் அனைத்தும், மார்க் கடுப்பால் தரையில் பீச்சிய தாய் செயலையே ஒப்பதாவதை உணரலாம். குகன், தண்டகாரணியத்து முனிவர்கள், விராதன், கவந்தன், சபரி,சரபங்கர், சுக்கிரீவன், அனுமன், வீடணன் முதலியோர்க்கு வலியச் சென்று இராமன் அருளியது மார்க் கடுப்பால் பாலைப் பீச்சிய தாய் செயலேயாகும்.

அவதாரத்தின் விருப்பம்

இறைவன் பரம பதத்தில் வாழ்வதிலும் மண்ணுலகில் துயரால் வருந்தும் மக்களிடையே வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றான். அவன் தனித்திருப்பதை விரும்புவதில்லை. உயிர்கள் துன்புறும்போது, தானும் அவற்றோடு சேர்ந்து துன்புறுகின்றான்[41]. “அந்தப் பரம்பொருள், உயிர்க் கூட்டம் எல்லாம் பிரகிருதியில் இலயப்பட்டிருக்கும் (ஒடுங்கியிருக்கும்) காலத்தில், தான் தனியாக இருந்து கொண்டு, துக்கத்தையடைந்தான்”[42] என்னும் மகோபநிடதம்.

“வேலையும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்”[43] “மேலொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள் வில்லும் தாங்கிக் கால் தரைதோய வந்து கட்புலக்குற்றது”[44] என்பார் கம்பர். இவ்வாறே வானை விட்டு, மண்ணை இறைவன் விரும்பி வந்து அவதரிக்கும் காரணத்தை ஈடு பின்வருமாறு கூறுகிறது.

“பரமபதத்தில், தன்னில் குறைந்தார் இல்லாமையாலே அவ்விடத்தை விட்டு, நல்ல படுக்கையும், போகத்துக்கு ஏகாந்தமானவற்றையும் காற்கடைக்

கொண்டு (புறக்கணித்து), குழந்தையினுடைய தொட்டிற் காற் கடையிலே கிடக்கும் தாயைப் போலே, காப்பாற்றுவாரை விரும்புபவர்களான இம்மக்கள் இருக்கிற இடம் ஆகையாலே அவன் விரும்பி வசிக்கும் இம்மண்ணுலகம்''[45].

அவதாரமே குணங்கள் ஒளிரும் இடம்

பரமபதத்திற் காட்டிலும் குணங்கள் ஒளிவிடும் இடம், அவதார இடமாகிய இம்மண்ணுலகம் என்பர். அங்கு தன்னைக் காட்டிலும் குறைந்தார் இல்லாமையால், குணங்கள் பகல் விளக்குப் போலே ஒளிமங்கி இருக்கும்; இங்கு இருட்டறையில் விளக்குப்போலே,[46] குணங்கள் விளங்கி நிற்கும் என்பார் திருப்பாவை உரையாளர்.

"அங்கு மேன்மையே உண்டு; நீர்மை (சௌலப்பியம்) இல்லை; அது, இறைவன் கும்பீடு கொண்டிருக்கும் இடம்; இது, இறைவன் கும்பிடும் இடம்"[47]. ஆகவே, "அவன் பிறந்த பின்பே பெருமேன்மையை அடைகிறான்''[48] என்று அவதாரத்தின் பெருமையை வேதம் கூறும்.

"பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்''[49], "நின் புகழில், வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு வைகுந்தம் என்றருளும் வான்''[50] என்பார்கள் ஆழ்வார்கள்.

இவற்றையெல்லாம் அகத்தடக்கிய கம்பர் பெருமான்,

"ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்றிவர்களாதி
வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா"[51]

எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் எனலாம்.

"உடைமைக்கு ஒரு முழுக்கு; உடையானுக்கு ஒன்பது முழுக்கு" எனும் வைணவ வழக்கு, இந்த அவதாரக் கோட்பாட்டைத் தெளிய விளக்குகிறது. "பிரஜை விழுந்த கிணற்றில் ஒக்க விழுந்தெடுக்கும் தாயைப் போலே" என்று உரையாசிரியர்கள் இதனை உவமிப்பர்[51அ].

கிணற்றுள் வீழ்ந்த பொருளை, அதனையுடையவன், பன்முறை மூழ்கி மூழ்கி, எடுத்தே தீர்வதுபோல், சம்சார சாகரம் எனும் உலக பந்தத்தில் மூழ்கிக் கிடக்கும் உயிர்களை, உடையவனாகிய ஈசன் எடுத்துக் கரை சேர்க்க முயலும் முயற்சிக்குப் பெயர் அவதாரம் ஆகிறது. ஈசன் உடையவன், நாம் அவன் உடைமைகள் ஆவதனை, நவவித சம்பந்தத்துள் உடையான் - உடைமைக் கோட்பாடும் கூறும்.

அவதாரமும் பயனும்

இந்த அவதாரங்களைத் தவறாகப் பயன்கொள்வோரும் உண்டு. "அறவோர் சிலர் ஏரி கல்லினால், ஏரியில் தலைகீழாகப் பாய்ந்து சேற்றிலே தலையை முங்கிப் பட்டுப்போகா நிற்பர் சிலர். நீர் வேட்கையுடையார் ஏரியில் வேட்கை தீர நீர் பருகிப் போவார்.

"விளக்கை ஏற்றினால் அதிலே விட்டில் முதலிய சில பொருள்கள் விழுந்து முடிந்துபோம். சிலர் அதன் ஒளியிலே உய்வு பெறுவார்கள். இறைவன் ஏரியும் விளக்குமாகத் தன் கருணையினால் அவதரிக்கின்றான்" என்பார் நம்பிள்ளை[52].

இறைவனாகிய தடாகத்திலும் விளக்கிலும் பயன்பெற்றுய்ந்து போனவர்கள் அயோத்தி கிட்கிந்தை வாசிகள், வீடணன், சுக்கிரீவன், குகன், சரபங்கர், சபரி, தண்டகாரணிய முனிவர்கள் முதலானோர் ஆவர்.

இலங்கை அரக்கர்கள், வீடணனை ஒழிந்த இராவணன் குடுமபத்தினர் முதலியோர் தடாகத்தையும் விளக்கையும் தவறாகப் பயன்கொண்டு அழிந்தவர்கள்.

இதற்கான காரணங்களையும் நம்பிள்ளையே கூறுவார்; "நல்வினையற்ற மக்கள், இராமன், கண்ணன் முதலிய அவதாரங்களைத் தமது பிறவியினைப் போன்ற பிறவியாம் என நினைந்து கேடுறுவர்". "வள்ளலைப் பாவியேம் மனிதன் என்று கொண்டு எள்ளலுற்று இழிந்தனம் எண்ணிலாம்" என்று கம்பன் காட்டும் வருணன் வருந்துவான்[52அ]. நல்வினை வாய்ந்த பெரியோர்கள், "அரியன் எளியனாகப் பெற்றோமே என்று அவனை அடைந்து உய்வு பெறுவர்".

"சர்வேசுவரன் அரியன் என்றால், சம்சாரத்தில் ஆள்பற்றாது (சேராது) என்று அவன் எளிமையை விளங்க விரித்துச் சொல்லிக்கொண்டு போந்தோம். அதுதானே, இவர்களுக்கு இத்தனை எளியனோ? என்று விடுகைக்கு உடல் (காரணம்) ஆயிற்று; அவ் எளிமைதானே ஆதரிக்கைக்கு உடல் (காரணம்) ஆயிற்று உமக்கு ஒருவருக்குமே!" என்று எம்பாரைப் பார்த்து உடையவர் அருளிச் செய்தார் எனும் ஐதிகமும் இங்கு நோக்கத்தக்கது[53].

மண்ணுலகின்மேல் இறையின் பேர் அன்பு

இறைவன் மண்ணுலகைக் காக்கும் அருமையை, வராக அவதாரத்தில் உலகைக் காக்க முயன்ற முயற்சியைக் கொண்டு அறியலாம் என்பர் வைணவச் சான்றோர்.

"அரவாகிச் சுமத்தியால், அயல் எயிற்றின் ஏந்துதியால்,
ஒருவாயின் விழுங்குதியால், ஓர் அடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை; இஃதறிந்தால் சீறாளோ
மருவாரும்துழாய் அலங்கல் மணிமார்பின் வைகுவாள்?"[53]

"பூமிப்பிராட்டியைக் காக்க நீ இப்பாடு படுவதைக் கண்டும், நின் இன்னொரு பிராட்டியாகிய திருமகள் உன்பால் எவ்வாறு ஊடிச் சீறாமல் இருக்கின்றாள்?" என்று நயந்தோன்றக் கேட்கின்றார் கம்பர்.

"கிடந்துஇருந்து நின்று அளந்து கேழலாய்க் கீழ்ப் புக்கு
இடந்திடும்; தன்னுள் கரக்கும்; உமிழும்;
தடம் பெருந்தோள் ஆரத்தழுவும்; பார் என்னும்
மடந்தையை; மால் செய்கின்ற மால் ஆர் காண்பாரே[55]"

என்னும் நம்மாழ்வார் கூற்றை இங்கு கம்பர் அடியொற்றியுள்ளார் எனலாம்.

வராக அவதார நுண்பொருள்

உருவால் அடையும் உயர்வு உயர்வல்ல; பண்பினால் செயற்கரிய செயலினால் பெறும் உயர்வே உயர்வு என்ற உயர் கருத்தை அறிவுறுத்தும் அவதாரம் வராக அவதாரம். அன்பு செலுத்தும் அடியார்களுக்கு எந்த வடிவமும் இனிய வடிவமே என்ற கருத்தை உணர்த்துவதற்காகப் பன்றியின் உருவில் பரமன் தோன்றினான்.

"நேராய் உள்ள அம்பு உயிர்களைப் போக்கும்,
கோணலாய் உள்ள கலப்பை உயிர்களை ஆக்கும்"

(திருக் – 279) என்பார் வள்ளுவனாரும்.

பூரணாவதாரத்திடம் பொறுப்பினைத் தரல்

ஆவேச அவதார மூர்த்தியாகிய பரசுராமன், மன்னர் தருக்கை அடக்கி முடித்தவுடன், தன் பொறுப்பு முடிந்ததனால், தன் ஆற்றல் முழுவதையும் தவத்தையும் பூரண அவதாரமாகிய இராமபிரானிடம் கொடுத்துவிட்டுச் செல்பவனாகக் காட்டப்படுகிறான்.

"நீ இங்கு யாவாக்கும் ஆதி, யான் அறிந்தனன்"[56], "நீ மின்னுடைய நேமியான் ஆதல் மெய்ம்மை"[57] எனப் பரசுராமன் வாயாலேயே இராமன் பரத்துவம் உணர்த்தப்படுகிறது. "எண்ணிய பொருள் எலாம் இனிது முற்றுக, யாவர்க்கும்; களைகண் ஆகிய புண்ணிய! விடை எனத் தொழுது போயினான்" பரசுராமன் என்பதனால் பூரணாவதாரத்திடம் அம்சாவதாரம் உலகு காக்கும் பொறுப்பினை ஒப்படைத்துச் செல்லல் காணலாம்.

வாமன அவதாரத்தின் நுண்பொருள்

வாமன அவதாரத்தில் குறுகிய வடிவினனாய் வந்த இறைவன் உயர்ந்தோங்கிய வடிவினன் ஆகிறான்.

"பயந்தவர்களும் இகழ் குறளன் பார்த்து எதிர் வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்"[58] என்பது கம்பர் வாக்கு.

வாமன அவதாரம்

உலக மக்களின் நலனில் பங்கேற்பது பக்தனின் கடமை. அதற்கு யார் தடை செய்தாலும் பொருட்படுத்தாது தொடர்ந்து உதவிய வண்ணமிருந்தால் இறைவனின் பாத பங்கயப் பேறு கிட்டும் என்பது வாமனாவதாரம் காட்டும் நுண்பொருள் ஆகிறது. ஆசாரியனாகிய சுக்கிரன் தடுத்தும் நற்செயலாகிய ஈகையை நல்கியவண்ணமே இருந்தான் மாவலி.

இறைவன் பாத பங்கயத்திற்குத் தன் தலையைக் காட்டி அதனை மூன்றாம் அடி நிலமாய் ஏற்க வேண்டிய மாவலிக்குச் சிரஞ்சீவிப் பட்டம் ஈந்தான் பெருமான். இன்றும் திருமால் கோயில்களில் எம்பெருமான் கதையையும் தண்டத்தையும் தரித்துக்கொண்டு துவார பாலகனாய் நிற்கிறான் மாவலி என்பர். "ரக்ஷா வாமனா!" என்பார் சுவாமிதேசிகன். (காப்பதற்காக வந்த வாமனனே)[58]

"திருப்பாற்கடலிலே (வியூகத்தில்) உயிர்களைக் காத்தல் செய்யப் பெறாமையாலே, பனிப்பட்ட மூங்கில் போலே சாய்ந்து கிடந்தவன், மாவலியாலே நோவுபட்ட தேவர்களின் கூக்குரல் கேட்டவுடன், சூரிய கிரணம் பட்ட மூங்கில் போலே ஓங்கினான்[59]. பிறர் காரியம் செய்யப் பெறுகையாலே வளர்ந்தருளினான் அன்றோ வாமனன்" என்று வைணவச் சான்றோர் "வியந்து அவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்" எனும் கம்பர் கருத்தை விளக்குவது போல் உரை எழுதியுள்ளனர். "ஓங்கி உலகளந்த உத்தமன்"[60] என்றார் ஆண்டாள் நாச்சியாரும்.

உயிர்களைக் காக்கும் வாய்ப்பு வராத போது, சுருங்கிக் கிடக்கும் பெருமான், காக்கும் வாய்ப்பு வரும் போது உவகையால் உயர்ந்தோங்குகிறான் என்பதும் வாமனாவதார நுண்பொருள் ஆகிறது.

விலக்காமையையே ஏதுவாகக் கொண்டு, வசிட்ட சண்டாள வேறுபாடற உலகெலாம் தன் திருவடிபட வைத்த கருணை அவதாரம் இது என்பர் பெரியோர்.

"மாவலி தரும் துயர் பொறாமல், இந்திரன் கண்ணீர்கொண்டு, வாமனனாகச் சுருங்கினான் எம்பெருமான். மாவலி நீர் வார்த்தவுடன்,

உண்டான ஆனந்தத்தாலே திருவிக்கிரமனாக வளர்ந்தான்''[61] என்றெல்லாம் ஈடுபடுவர் வியாக்கியானகர்த்தர்கள்.

வாமானாவதாரத்தை, "அற்புதரே அறியும், தன் சிற்பதம்''[62] என்று கூறுவதனால் அதனுள் ஒரு தத்துவம் உறைந்துள்ளதைக் கம்பர் குறிக்கின்றார் என்பது தெளிவு.

சித்து, அசித்து என்ற இரண்டையுமே எண்ணியிருந்தான் மாவலி. இவ்விரண்டால் ஆனதே உலகம் என்றெண்ணி, மூன்றாவதாயுள்ள இறைவனை மறந்து, இவையிரண்டையும் அடக்கி ஆட்கொண்டு விட்டதாக ஆணவம் ஓங்கி, இவற்றிற்குத் தானே தலைவன் என்றெண்ணி, தானம் வழங்கத் தொடங்க, என்னோடு சேர்ந்து மூன்றாக ஆனது இவ்வுலகம் என்று இறைவன் காட்டியதே மாவலி வரலாறு என்பர் வைணவப் பெரியோர்கள்.[63]

உலகளந்த உத்தமன் (திருவிக்கிரமன்) முதலடியில் அசித்துச் சார்ந்த இவ்வுலகை ஏற்றான்; இரண்டாமடியில் சித்துச் சார்ந்த அவ்வுலகை ஏற்றான்; மூன்றாவது தத்துவமான ஈசுவரன் என்பவன், மாவலியாகிய தனது ஆளுகையில் இல்லை என்பதையும், அவனைத் தானமாகத் தருதற்குத் தன்னால் இயலாமையையும் தெரிந்து தலைகுனிந்தான் மாவலி. தானே ஈசுவரன் என்று தன் முழு வடிவமும் காட்டி ஏற்றான் இறைவன். மூவுலகிற்கும் தானே தலைவன் என்பதனை ஈசுவரன் இவ்வவதாரத்தால் காட்டி விட்டான். இவற்றையெல்லாம் உளங்கொண்டே கம்பர், "அற்புதன் அற்புதரே அறியும் தன் சிற்பத மெய்க்கொடு சென்றான்'' என்கின்றார்.

நரசிம்ம அவதாரத்தின் நுண்பொருள்

இறைவனின் எங்கும்நிறை பண்பையும், அன்பர்க்கு அல்லன புரிவாரைக் கடிந்து, அவர்க்கு ஆவன புரியும் அவன் ஆனைச் செயல் களையும் (அருஞ்செயல்கள்) உணர்த்துவது நரசிங்க அவதாரம். இவ்வ வதாரம் இரணியன்வதைப் படல வடிவில் கம்பரால் உணர்த்தப்படுகிறது.

பகவான் தன் வாக்கைக் காப்பாற்றாமல் விட்டாலும் விடுவான். தன் அடியார்களின் வாக்கைக் காப்பாற்றாமல் விட மாட்டான். மா பாரதப் போரில், "ஆயுதம் எடுக்க மாட்டேன்'' என்று கண்ணன் சபதம் செய்கிறான். ஆனால், இன்று கண்ணனை ஆயுதம் எடுக்க வைப்பேன் என்று வீடுமர் சபதம் இடுகிறாா. வீடுமர் சபதம் வென்றது; கண்ணன் ஆயுதம் எடுத்துப் பொய்யன் ஆனான். (வில்லி)

பக்தனின் (பிரகலாதனின்) வாக்கைக் காப்பாற்ற இறைவன் எந்த இடத்திலும் எந்த உருவத்திலும் தோன்றுவான் என்பதைக் காட்டும் அவதாரம் நரசிங்க அவதாரம்.

விகார உருவமில்லாமல் காட்சி தரும் கண்ணுக்கினிய எம்பெருமான், அடியார்களைக் காப்பதற்காக அடையும் (வராகம், நரசிங்கம் முதலிய) விகார உருவங்களுக்கு எல்லையே இல்லை என்பதைக் காட்டும் அவதாரம் நரசிங்க அவதாரம்.

"கரந்த சில் இடந்தொறும், இடந்திகழ் பொருள்தொறும், கரந்து எங்கும் பரந்துளன்" (திருவாய்) இறைவன் என்றும், எங்கும் உள்ளுறை பொருளாய் (அந்தரயாமியாய்), வெளிஎங்கும் நிறைந்துள பொருளாய், (சர்வ வியாபியாய்) நிறைந்துள்ள தத்துவத்தைக் காட்டிடுகிறது நரசிங்க அவதாரம்.

இந்த நர சென்மத்தில் பிறவி யெடுத்த நமக்கு, சிங்கத்தின் இயல்பான குணமாம் ஆண்மையினை யளித்து, எதிர்பாராது தீய சக்திகளால் தோன்றும் சிக்கல்களைத் தக்க சமயத்தில் தீர்க்க நல் அறிவினை நல்குமாறு இறைவனைப் பிரார்த்தித்தால் நாம் தீயவற்றை வெல்லலாம் என்று உணர்த்துகிறது நரசிங்க அவதாரம்.

உள்ளுறை நிலை (அந்தர்யாமித்துவம்)

இறைவனின் ஐவகை நிலைகளுள், உயிர்களின் உள்ளத்துள் உறைவது ஆகிய உள்ளுறை நிலை மிக நுண்ணிய நிலையாகும். "உணர்வொடு ஊனுடை உயிர்தொறும் உறைபவன்"[64] என்பது கம்பர் வாக்கு. உடலுடைய உயிர்கள்தொறும் உணர்வெனும் அறிவுக்குள் உறைபவன் இறைவன் என்பது அந்தர்யாமித்துவ நிலையால் சுட்டப்படுகிறது.

"உளந்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும் இடம்"[65] என்பது திருவருட்பா.

ஊன் என்பது புற உடலையும், உணர்வு என்பது சூக்கும உடலாகிய மனத்தினையும் குறிக்கும். தூல உடலுக்குள் உள்ள சூக்கும உடலாகிய மனத்துக்குள் உறைபவன் இறைவன். மனம் சூக்கும உடல் எனப் பரிமேலழகரும், "மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல்? பிறப்பறுக்கல் உற்றாக்கு உடம்பும் மிகை" என்னும் திருக்குறள் உரையிற் கூறுவார்.

"உடம்பு என்ற பொதுமையின், உருஉடம்பும் அருஉடம்பும் கொள்ளப்படும். அருஉடம்பாவது பத்து வகை இந்திரிய உணர்வோடும், ஐவகை வாயுக்களோடும் காமவினை விளைவுகளோடும் கூடிய மனம்; இது நுண்ணுடம்பு" என்பது அவர் உரையாகும்.

'மலர்மிசை ஏகினான்'[67] என்னும் குறளின் தொடர்க்கு, "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண், அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேருவான்" என் அப்பரிமேலழகரே உரை வரைந்துள்ளது

அந்தர்யாமித்துவம் ஆகிய இறையின் உள்ளுறை நிலையைச் சுட்டுவதேயாம்.

"எள்ளுறையும் ஒழியாமல் யாண்டையினும் உளனாய்த் தன் உள்ளுறையும் அழகனைப் போல்"[68] என்று வேறிடத்தும் இக்கருத்தை உவமையால் கூறுவார் கம்பர். எள் முனையளவும் நீங்காமல் தன் மனமுழுதும் நிறைந்திருக்கிற இராமபிரானைப் போல் இலங்கை முழுவதும் ஓரிடம் நீங்காமல் அநுமன் தேடினான் என்பது இதன் பொருள்.

உள்ளுறை நிலை பற்றி உபநிடதம்

"அணுவுக்கு அணுவாயும் பெரிதுக்குப் பெரிதாயும் உள்ள பரமாத்மா, இந்தச் சீவனுடைய உள்ளத்தில் உறைகிறது"[69]

"எல்லா உயிர்களிடத்தும் இருதய குகையில் புகுந்துறையும் இப்பரமாத்மாவை எவன் உண்டாய பொருள்கள் அனைத்துள்ளும் காண்கிறானோ, அவனே உண்மையைக் காண்கிறான்"[70], "எது இருதய குகையில் புகுந்துறைகின்றதோ, எது தோன்றும் பொருள் ஒவ்வொன்று டனும் தோன்றுகின்றதோ அது நாம் ஆராயும் பொருள்[71]".

"ஆசை நீங்கியவன் இந்தப் பரமாத்மாவைக் காண்கிறான். அப்போது சோகமற்றவனாய், அந்தக் கரணங்களின் தெளிவாய், உள்ளுள்ள இந்த ஆத்மாவின் பெருமையையும் காண்கிறான்[72]".

இந்த உபநிடக் கருத்துக்களே 'சாணினும் உளன்'[73] எனப் பிரகலாதன் வாயிலாய்க் கம்பரால் வெளியிடப்படுகிறது.

'ஆசை நீங்கியவன் பரமாத்மாவை அறிகிறான்'[74] எனும் உபநிடதக் கருத்தின்படி உலகின் ஆசைகளையெல்லாம் வேரோடு நீத்த பிரகலாதன் அந்தக் கரணங்களின் தெளிவாய் இறைவனைக் கண்டு, "எங்கண்ணால் நோக்கிக் காணற்கு எங்கணும் உளன்"[75] என உரைத்தான். இதனால் உபநிடதங்களில் தெளிவே இரணியன் வதைப் படலம் என்பது தெளியலாம். உபநிடதம் எனும் சொல்லையே இப் படத்தில்தான் முதன்முதலாகக் கம்பர் குறிப்பிடுகின்றார்[75அ].

"ஆரைச் சொல்லுவது அந்தணர் அருமறை? அறிந்தோர்
ஓரச் சொல்லுவது எப்பொருள்? உபநிடதங்கள்
தீரச் சொல் பொருள், தேவரும் முனிவரும் ஒப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது பிறிதும் ஒன்று உளதோ?"

"அளவையான் அளப்பரிது; அறிவின் அப்புறத்து
உளவையாய் உபநிடதங்கள் ஓதுவ"

என்பவை கம்பர் வாக்கு[75ஆ] - 6.3.62

நான்முகன் முதலிய சராசரங்கள் அனைத்தின் உள்ளத்தின் உள்ளுள்ள பள்ளத்தில் பூத்த மனத்தாமரையில் உறைபவன் இறைவன்.

"பண்டை நான்முகனே ஆதி சராசரத்து உள்ளப் பள்ளப்
புண்டரிகத்து வைகும் புராதனா"[76]

என்பார்.

"வெள்ளத்து வாழ்வானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்துள் உள்ளான் என்று ஓர்"[77]

என்பார் பூதத்தாழ்வார்.

உள்ளுறை நிலையின் சிறப்பு

உலகின் இயல்பாக, சிறிய பொருள் பெரிய பொருளில் அடங்கும்; பெரிய பொருள் சிறிய பொருளில் அடங்காது. ஆனால், உலகில் உள்ள பொருள்களிலெல்லாம் பெரிய பொருளான, மகத்தினும் மகத்தான, அதைவிடப் பெரிய பொருள் என்று ஒன்றே இல்லாத பெரிய பொருளான பரம்பொருளாம் இறைவன், சிறியவற்றுள் எல்லாம் சிறியதான அணு அளவினதான மனத்தின் உள்உறைகின்றான். அப்படி உள் உறையும்போது, (பெரியதிற் பெரியதாகிய) தன் தன்மை (குணம்) மாறாமல் உள்உறைகின்றான். தான் உள் உறைகின்ற பொருளின் தன்மையை ஏற்காமல் உள் உறைகின்றான். இந்த வியபைக் கம்பர் வெளியிடுகின்றார். "தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற சுடரே"[78] என்பது இவ்வியப்பின் வெளிப்பாடு.

உள்ளும் புறமும் உளவாதல்

உயிரின் உணர்வாய் உள்ளிருந்து இயங்குபவன் இறைவன். அவன் உணர்விலும் உள்ளான்; உணர்வு உறையும் உயிரிலும் உள்ளான்; உயிர் உறையும் உடலிலும் உள்ளான்; உடல் உறையும் உலகிலும் உள்ளான்; இவ்வுலகுகள் உறையும் பிரபஞ்சத்திலும் உள்ளான். இப்பிரபஞ்சங்கள் அனைத்தும் உறையும் பரமபதத்திலும் உள்ளான்.

இறைவன் உறையும் நம் உணர்வை நோக்குகையில் உயிர் புறமாகிறது; உயிரை நோக்குகையில் உடல் புறமாகிறது; உடலை நோக்குகையில் உலகம் புறமாகிறது; உலகை நோக்குகையில், வான் (பிரபஞ்சம்) புறமாகிறது. வான்வெளியே நோக்குகையில் அவை உறையும் பரமபதம் புறமாகிறது. பரமபதத்தை நோக்குகையில் பரம்பொருள் புறமாகிறது.

இவ்வாறே, உள்முகப் பார்வையில் பரம்பொருளை நோக்கப் பரமபதம் உள் ஆகிறது. பரமபதத்தை நோக்க வான் உலகம் உள்ளாகிறது; வானில்

மண் உள்ளாகிறது. மண்ணில் உடல் உள்ளாகிறது. உடல்களில் உயிர் உள் ஆகிறது; உயிரில் உணர்வு (மனம்) உள் ஆகிறது; உணர்வில் இறைவன் உள் ஆகிறான். இக்கருத்தினை,

> "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
> ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறனும் உளன்
> என்ப"[79]

என்று சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றார் கவிஞர்.

இங்கு, "என்ப" (என்று உரைப்பார்கள்) என உரைக்கும் வினைமுற்றிற்கு,

"உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் நிறைந்துளன்"[79அ] என்று உரைப்பார்கள் (ஆழ்வாராதியர்) என்பது தோன்றா எழுவாயாக நிற்கின்றது எனலாம்.

ஆகவே, இறையாற்றலின் எங்கும் நிறை தன்மையையும், உள்ளுறை தன்மையையும் கம்பர், பின்வரும் அடைவில் கண்டிருக்கின்றார் எனலாம்; இறை → உணர்வு (அறிவு) → உயிர் → உடல் → உலகு → வான் → வெளி → பரமபதம்.

இவ்வடைவு இறையாற்றல் வெளிமுகமாதலைக் குறிக்கும். இதனைச் 'சிருட்டி' என்பர்.

உலகு இறைவனாய் வெளிப்படு நிலை இது.

பரமபதம் → வான்வெளி → உலகம் → உடல் → உயிர் → உணர்வு → இறைவன் எனும் அடைவு இறையாற்றல் உள்முகமாதலைக் குறிக்கும். இதனை 'இலயம்' என்பர்.

உலகு, இறைவனால் ஒடுங்கும் நிலை இது. உயிர்களும் உலகமும் எழுதிய திரைச்சீலைச் சுருட்டி வைத்திருப்பது போன்றது 'இலயம்' என்றும், அதனை விரித்து வைப்பது போன்றது சிருட்டி என்றும் உரைப்பார் வித்யாரண்யர்.

"உள்ளும் புறமும் உளன்" என்பதற்கு இவ்வடைவில் நோக்குகையில் முழுப் பொருளும் உணர முடிகிறது.

"எதை ஆராய்ந்தாலும் எங்கிருந்து புறப்பட்டாலும் இறுதியில் இறைவனோடுதான் போய் மோதுகிறோம்" என்பது இராமகிருஷ்ணர் திருவாக்கு.

இதனையே "அண்டத்தில் உள்ளது பிண்டத்திலே; பிண்டத்தில் உள்ளது அண்டத்திலே" எனும் உலகியற் பழமொழியும் உணர்த்தும்.

"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப் படர்பொருள் முழுதும் ஆய் அவை அவை தொறும் உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் நிறைந்துளன்"[80] எனும் நம்மாழ்வார் பாசுரத்திற்கு, கம்பர் அளித்த விளக்கம் 'வான் நின்று இழிந்த' என்னும் கம்பர் பாசுரம் எனலாம்.

இறைவன் அந்தர்யாமியாய் உள்ளுறைவதை, மாயையால் மறைக்கப்பட்ட உயிர்கள் அறிவதில்லை. இருப்பினும் யோகிகள் தம் யோகத்தால் மாயைத் திரையை விலக்கி உள்ளுறை இறையைத் தரிசிக்கின்றனர்.

"அளிக்கு நாயகன் மாயை புக்கு அடங்கினன் எனினும்
களிப்பில் இந்தியத்து யோகியைக் கரக்கிலன்"[81]

என உள்ளுறை நிலையாகிய அந்தர்யாமித்துவத்தை மாயைத் திரையை விலக்கி உணரவல்லவன் யோகி என்று இங்கு கம்பர் உணர்த்துகின்றார்.

உயிரின் உள்ளிருந்து, கரணத்திற்கு வெளியே இருக்கும் அறிவை, உள்ளும் புறமும் உளவாகும் இறைத்தன்மையை மேலும் விளக்க மாக்குகின்றது இப்பாடல்:

"மண்ணின் நின்று, மேல் மலர் அயன் உலகுற வாழும்
எண்ணில் பூதங்கள், நிற்பன, திரிவன இவற்றில்
உள்நிறைந்துள; கரணத்தின் ஊங்குள; உணர்வின்
எண்ணுகின்றது இவ்வெட்டெழுத்தே பிறிதில்லை"[82]

உயிரின் உள்ளுறைந்து, அந்தக்கரணங்கள், புறக்கரணங்கள் வழியே நிலைத்திணை இயங்கு திணையாகிய உயிர்களுக்கு உணர்வாகிய அறிவை நல்கிக் கொண்டிருப்பது பரம்பொருள் என இதனால் உணர்த்தப்படுகிறது.

வைணவத்தின் உயர் கொள்கை

"ஆராயின், நான்முகன் படைப்பில், மண்ணில், வானில் அனைத்துயிர்களிலும் இறைவன் உள் இல்லாத பொருள்களை யாம் கண்டதில்லை"[84] என்பது கம்பரின் கொள்கை வெளிப்பாடு; எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் வைணவத்தின் உயர்கோட்பாடாகிச் சிறக்கிறது இது. பிற மதங்களிலும் இக்கொள்கை ஆங்காங்கே இலைமறை காயாகக் கூறப்படினும், வைணவத்திற் போல, எல்லாப் பொருள்களிலும் இறைவன் உறைவதை, இறைவனின் ஐவகை நிலைகளுள் ஒன்றாகக் கூறப்பட்டிருப்பது பிற சமயங்களில் காணல் அரிதெனவே கூறலாம்.

"தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் எவையும் தாங்குவான்" கம்ப - 6.3.5

"உன்னின் பிறிது ஆயினவோ உலகம்?
பொன்னின் பிறிது ஆயினவோ பொற்கலங்கள்?"

என்பவையும் கம்பர் வாக்குகளாம். கம்ப - 6.3 : 112

அர்ச்சை

"குணபூர்த்தியுள்ளது ஆகையாலே ஐவகை நிலையிலே அர்ச்சை இறைவனின் கருணைக்கு எல்லைநிலம்"[84அ] என்பது வார்த்தாமாலை.

இறைவனின் ஐவகை நிலைகளுள் ஒன்றாகிய அர்ச்சாவதார வழிபாடு, அயோத்தியில் இருந்ததாகக் கம்பரால் குறிக்கப்படுகிறது. இராமன் முடிசூட உள்ளான் என்ற செய்தியறிந்ததும், கோசலை சுமித்திரையுடன் "மின்னும் நேமியன் மேவிடம்" ஆகிய திருக்கோயிலை வணங்கச் சென்றாள் என்கிறார் கவிஞர்பிரான்.

"மேவி மென்மலராள், நிலமாது எனும்
தேவிமாரொடும் தேவர்கள் யாவர்க்கும்
ஆவியும் அறிவும் முதல் ஆயவன்,
வாவிமாமலர்ப் பாதம் வணங்கினாள்"[85]

என்பதனால் அயோத்தியில் திருமால் திருக்கோயில் இருந்தமை தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது. அங்கு, கோசலை இறைவனை வணங்கி, நான்மறைப்படி பூசனைகள் புரிந்து அங்கிருந்த நற்றவத்தோர் எல்லார்க்கும் கன்றுடைய பாற்பசுக்களை வழங்கியமை குறிப்பிடப் படுகிறது.[86]

இராமன் வசிட்டனுடன் சென்று ஆயிரம் மௌலியான் தானம் (இடம்) சென்று நாகணை வள்ளலைப் புண்ணியப் புனல் ஆட்டி, சாத்திர வல்லோரால் பூசனை புரிந்து வணங்கினமை குறிக்கப் பெறும்.[87]

எனவே, "ஆழ்வார்கள் பெருமளவில் போற்றிப் பரப்பிய அர்ச்சை என்ற உருவ வழிபாட்டு நெறியைக் கம்பன் அயோத்தியில் வைக்க வில்லை" என்ற 'வான்மீகியும், கம்பனும் கண்ட சமூகங்கள்' என்ற நூலாசிரியரின் கருத்துப் பொருந்துமாறு இல்லை[88].

அயோத்தியில் இராமன் வணங்கிய திருவுருவம், அவன் குல முதல்வனாகிய இட்சுவாகுவால் இறைவனிடமிருந்து பெற்ற குலதனம் என்பது,

"கோதறு தவத்துத்தன் குலத்துளோர் தொழும்
ஆதியஞ் சோதியை அடிவணங்கினான்"[89]

என்பதனால் சுட்டப்படுகிறது.

அந்த இட்சுவாகு தவஞ்செய்து பெற்ற மூர்த்தியே இராமனால் இறுதியில் வீடணனுக்கு அளிக்கப்பட்டவன், அரங்கத்தைப் பிரிய மனமில்லாமல், இலங்கை செல்லாது திருவரங்கத்தில் தங்கிவிட்ட அரங்க நகர் அப்பன் அவனே என்பதும் தெளிவுறக் குறிக்கப்படுகிறது.

'இச்சுவாகு குலதனம்' என்றே திருவரங்கத்தை 'ஸ்ரீரங்க மகாத்மியம்' குறிப்பிடும்.

"பிணியரங்க வினையகலப் பெருங்காலம் தவம் பேணி
மணியரங்கு நெடுமுடியோய்; மலர் அயனே வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம் காண
அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்"[90]

இப்பாடலுக்கு நயவிளக்கம் தருவதுபோல் அமைந்துள்ளது பெரியவாச்சான் பிள்ளையின் கீழ்வரும் தனிச்சுலோக வியாக்கியானப் பகுதி.

"நீண்டதோர் ஏணிவைத்து ஏறவேண்டும்படி இப்படி எட்டாக் கொம்பாய், எட்டாநிலமாகிய பரமபதத்திலே இருக்கும் குறையில்லாதபடி, அணித்தாயிருக்கும் அரங்கத்திலே சுலபனாகி எழுந்தருளியிருப்பவன்"

'அணியரங்கன்' என்று கம்பர் கூறியதை அணிமையரங்கன் என்று பொருள்கொண்டு எழுதியது இந்நயம் எனத் தோன்றுகிறது.

மேலும் பெரியவாச்சான் பிள்ளை கூறுவார்:

"பயிருள்ள இடத்தில் குடிசை கட்டி வாழ்ந்து பயிரை ரட்சிப்பவர்களைப் போல, ஜீவப் பயிர்களை ரட்சிப்பதற்காக வந்து, பழம்புனத்திலே படுத்துக் கிடக்கும் 'பக்தியுழவனா' யிருப்பவன். போவதும் வருவதும் இல்லாதபடி எழுந்திருக்க ஒண்ணாத 'பெரும்பாயல்' படுக்கையிலே நிலையாகச் சாய்ந்தவன்"[91]. கம்பரின் இப்பாடலை வெளிப்படையாகக் குறிப்பிடாவிடினும் இதனை மனங்கொண்டே இந்நயவுரை எழுந்தது எனத் தெளிவுறத் தெரிகிறது.

'பெரும் பாயல்' எனும் கவிச்சக்கரவர்த்தியின் தொடரை, வியாக்கியான சக்கரவர்த்தி அப்படியே எடுத்தாண்டிருப்பது பேருவகை தருகிறது. இவையெல்லாம் அர்ச்சை நிலை பற்றிய அழகுக் குறிப்புகள் ஆகின்றன.

இறைவனின் அழகுகள்

இறைவனுக்கு வடிவம் உண்டு எனத் திடமாகக் கூறும் வைணவம். இறைவனின் அழகினைப் பலபடப் பாராட்டிப் பேசுவது வைணவ மரபு - அதனை வடிவழகு என்றும் குண அழகென்றும் இரு வகையில் அடக்கலாம். வடிவழகை 'ரூப சௌந்தர்யமெ'ன்றும்; குண அழகைக் 'குண சௌந்தர்யம்' என்றும் குறிப்பிடுவர். 'வீர சௌந்தர்யம்' எனப்படுவதும் குண அழகில் அடங்கும்.

கண்டதும் கவர்வது உருவ அழகு; அதன் பின்னர்க் கவர்வது குண அழகு.

இறைவனின் உருவப் பேரழகே, முதலில் உயிர்களைக் கவர்கிறது என்பது வைணவக் கொள்கை. அர்ச்சாவதார இறைவனின் திருமேனியழகைப் பலபடப் பாராட்டி உருகுவர் வைணவச் சான்றோர்.

இராமாநுசர், அரங்கனின் கண்ணழகினைக் காட்டி, வடுக நம்பியை உலகியலிலிருந்து ஆட்கொண்டார் என்று குருபரம்பரை கூறும்[92].

இராமன் என்பதற்கு 'அழகன்' என்பதே பொருள். "அல்லை யாண்டமைந்த மேனியழகன்"93 என்பார் கம்பர். 'மேனியழகன்' என்பது ரூப சௌந்தர்யன் என்பதன் மொழி பெயர்ப்பாதல் காணலாம்.

"உள்ளுறையும் அழகன்"[94] என்பதனால், உயிர்களின் உணர்வுகளுக்குள்ளே, தன் பரம கருணையால், அந்தர்யாமியாய் உறையும் இறைவனின் குண அழகு கூறப்படுகிறது.

காளிதாசனும், இரகுவமிச காவியத்தில் அழகுடைமை பற்றி இராமன் எனப் பெயரிட்டனர் என்பார்[95].

இராமனது வடிவழகு, குண அழகு, ஆற்றல் அழகு இம்மூன்றையும் அவனது திவ்விய சரிதத்தில் வைத்து விளக்குவதே இராமாயணம் என்பார் வையாபுரி பிள்ளை அவர்கள்[96].

"அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?"[96]

என்று சீதைக்குச் சொல்வது இராமனுக்கும் பொருந்தும்.

உலகப் பொருள்கள், உயிர்கள் அனைத்தின் அழகுகளும் அழியுந்தன்மையன, என்றும் அழியாத் தன்மையால் இராமனின் தெய்வ அழகு இவற்றிலிருந்து வேறுபடுகிறது.

"ஐயோ, இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்"[98], "அந்தமில் அழகன்"[98அ] என்பன இக்கருத்தைச் சுட்டும் தொடர்கள் ஆகும்.

ஒளிமயமான உருவ அழகு

"வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய"[99] இராமன் வனஞ்சென்றான். இதற்கு விளக்கம் அளிப்பாரைப் போல, பெரியவாச்சான் பிள்ளை கூறுவார்.

"அறிவுள்ள சேதனரையும் அறிவற்ற அசேதனங்களையும் ஈடுபடுத்துகிற இராமன், ஒளியின் இருப்பிடம் ஆகையாலே, ஒளி மினுக்கத்தை (துணுக்கை)ப் பெற்றிருக்கும் நயனேந்திரியத்தைக் கொண்டு போனதில் தவறு என்ன?"[100] என்பார்.

பரஞ்சோதி நீபரமாய் நின்இகழ்ந்து பின்மற்று ஓர்
பரஞ்சோதி இன்மையின், படி ஓவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படர்உலகம் படைத்த எம்
பரஞ்சோதி! கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே

என்பது நம்மாழ்வார் இறைவன் மேனியழகின் வசப்பட்டு பரவசமாய் உருகி உரைத்த திருவாய்மொழிப் பாசுரம் ஆகும்.

திருமேனியழகால் உயிர்களைக் கவர்தல்

"கடலோ, மழையோ, முழுநீலக் கல்லோ, காயா நறும் போதோ
படர்பூங் குவளை நறுமலரோ, நீலோற் பலமோ, பானலோ
இடர்சேர் மடவார் உயிர் உண்பது"[101].

திருமேனியின் அவயவ அழகால், இறைவன் ஆன்மாக்களைக் கவர்கின்றான் என்பது உணர்த்தியபடியிது. 'கோலங் காண் படலம்'[102] என ஒரு படலமே இதற்கு என ஒதுக்குவார் கவிஞர்.

திருமேனியழகால் உயிர்களைக் கவர்தல் 'தேஜஸ்' என வடமொழியிற் குறிக்கப்பெறும். இதற்குப் பிறரை வெற்றி கொள்ளும் வல்லமை என்பது பொருள்[103]. பகவான் எனும் சொல் குறிப்பிடும் அறுவகைக் குணங்களில் இதுவும் ஒன்றாகும்.

இராமபிரானின் திருமேனிப் பொலிவால் தன்நிலையழிந்து,

"எவன் செய இனிய இவ்வழகை எய்தினான்? இவன் தவம் செயத் தவம் செய்த தவம் என்?"[104] இவன் இடையிற் பொலியும் வற்கலை நோற்றன; பொற்கலை நோற்றில போலும்"[105] என்று ஏங்குவாள் சூர்ப்பநகை.

"யவ்வனம், வடிவழகு, மென்மை, பலம், கண்ணழகு – என்னும் குணக் கூட்டங்களாகிற இரத்தினங்களை முடிந்திருக்கும் துணியிருக்கிற படிகாண்!"[106] என்று சூர்ப்பநகை இராமனைப் பற்றிக் கரனிடம் கூறியதாகப்

பெரியவாச்சான் பிள்ளை கூறுகிறார். "வற்கலையர், வார்கழலர், மார்பில் அணிநூலர், விற்கலையர், வேதம் உணர்நாவர், தளிர் மெய்யர்"[107] எனச் சூர்ப்பநகை இராவணனிடம் கூறினாள் என்பது கம்பர் திருவாக்கு. "அழகிய உடம்புகளுக்கு எதுதான் அலங்காரமாகாது?"[108] என்று சாகுந்தலம் கேட்கும்.

"தண்டக வனத்துறை தவத்துளோர் எலாம்
கண்டனர் இராமனை, களிகதும் சிந்தையார்"[109]

என்பார் கம்பர்.

"வறுத்த வஸ்துக்கள் போலே கடின இருதயரான ரிஷிகளும் உட்பட ஈடுபடும்படியாயிருக்கும் அம்மரவுரியும் மான்தோலும்"[110] என்பார் பெரியவாச்சான் பிள்ளை.

இராமனோடு ஒப்பிடுகையில் "நாய் எனத் தகுதும் அன்றே காமனும் நாமும்"[111] என்பான் இராவணன். "ஐம்புல இன்பங்களிலே ஈடுபாடு உடையவனாய்; அவற்றின் வடிவிலே துவக்குண்டிருக்கிற என்னை, அவ்வடிவை நாய்க்கிடாய் என்னும்படியான உன் வடிவைக் காட்டிக் கொண்டு போக வேண்டும்" என்று இதே கருத்தை வேறோர் வடிவில் ஈடு பேசும்[112].

பிறருக்கு அமைய இயலாத மேனிநலம் உடையான் என்பார், இராமனை 'அமைவருமேனியன்'[113] என்பார்.

"எழுதரிய திருமேனிக் கருங்கடல்"[114]

"எழுதலாங்கொல் அம்மன்மதனால்"[115]

"ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்"[116] என்பனவும் ஈங்கு நினைவு கொள்ளத்தக்கன.

எல்லை காணா அழகு

அவன் அழகு கண்டு முடிய ஒண்ணாத எல்லையற்றது. "வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?" "தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்"[117], "அவயவங்களின் சோபையை (கூட்டை) அனுபவிக்கலாம் என்று பாரித்துக் கண்ணாகிற ஓர் அவயவத்தில் இழிந்தால் அதைவிட்டு வேறிடத்தில் கண் வைக்க முடியாதன்றோ" என்னும் தனிச்சுலோகம்[117அ]. இதனையே "தாள் கண்டார் தாளே கண்டார்" என்றார் கம்பர் பெருமானார்.

“கடலுக்குள் பட்டதொரு துரும்பு; ஒரு திரை ஒரு திரையிலே தள்ளக் கிடந்து அலையுமாறு போன்று, ஓரழகு ஓரழகிலே தள்ளக் கிடந்து அனுபவிக்கிறார்” என்று “முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ!” எனும் திருவாய்மொழிப் பாசுரத்தில் அனுபவிப்பார் நம்பிள்ளை. (திருவாய் 3.1.1) இதனால்தான் “ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்து, வாள் கொண்ட கண்ணார்” ஆகிய அயோத்தி மகளிர் அவன் வடிவினை முடியக் காணாது தவித்தனர்.

“கடலருகே சென்று நின்றால், தன் கண்களாலே முகக்கலாம் அளவே காணல் கூடும். அப்படியே அழகருடைய அழகும் நுகர்வார் நுகர்வுத் திறத்தின் அளவே அன்றி முடிய நுகர்ந்தார் ஒருவரும் இல்லை” என்பது நம்பிள்ளை திருவுள்ளம். (ஈடு 3.2 அவதாரிகை)

அழகையே ஆயுதமாகக் கொண்ட இராமனால் அரக்கர் சேனைகள் அழிக்கப்பட்டன[118]. இராமன் அழகே, சூர்ப்பநகை வாயிலாக ஆட்கொண்டு, இராவணன் முதலிய அனைவர் அழிவிற்கும் முதற் காரணமாய் நின்றது. உகவாதாரை அழித்து, உகந்தாரை வாழ்வித்து, தான் என்றும் அழியாமல் வாழ்வது அந்தத் தெய்வீகப் பேரழகு ஆதலால் அது, ‘அந்தமில் அழகு’[119] எனப்படுகிறது.

பகைக் குடும்பமும் பாராட்டும் அழகு

இராமனுடைய எழிலை வர்ணித்து மகிழ்வதில் இராவணக் குடும்பம் விஞ்சி நிற்கிறது.

“ஆரா அமுதாய், அலைகடலிற் கண் வளரும்
நாராயணனே என்றிருப்பேன் இராமனைநான்”[120]

என மண்டோதரி, ஆரா அமுதனின் கண்வளர் அழகில் கசிந்துருகுவாள்.

“மாரர் உளரே இருவர்?”[121] என்று ஏங்குவாள் சூர்ப்பநகை. ஒரு மன்மதனே உண்டு, இராம இலக்குவர் என இரண்டு மன்மதர்கள் எப்பொழுதிருந்து தோன்றினர்? என்பது அவள் வினா.

“மன்மத மன்மதனான இவருடைய திருமேனியின் ஒரு பகுதியிலிருந்து, தோன்றுகையால் அன்றோ அவனுக்கு, (மன்மதனுக்கு) அவ்வழகும் உண்டாயிற்று! அழகு வேண்டியிருப்பவர்களுக்கு அவர்களிடம் யாசித்துக் கொண்டுபோக வேண்டும்படி யன்றோ அவர்களிடம் அழகு நிறைந்து வழிகிறது!”[122] என்பார் பெரியவாச்சான் பிள்ளை.

அழகின் எல்லை நிலம் இராமன்

சூர்ப்பநகை, "உருவினுக்கு உலகமூன்றின், இருதிறத்தார்க்கும் செய்த வரம்பு இவர்"[123] என்பதனால், இராமனும் பிராட்டியும் அழகின் எல்லை நிலம் ஆவர் என்பது உணர்த்தப்படுகிறது.

"இவளுக்கு (சூர்ப்பநகைக்கு) அங்க பங்கம் பிறந்ததேயன்றி ஆசாபங்கம் பிறக்கவில்லையாதலால் இங்ஙனம் இராமனின் வடிவழகில் ஈடுபடுகிறாள். விருப்புடையர் ஆனாலும், வெறுப்புடையர் ஆனாலும் இந்த (பகவத்) விஷயத்திலே அகப்பட்டவர்களுக்கு இதுவன்றோ காரியம்"[124] எனும் பெரியவாச்சான் பிள்ளை வாசகங்கள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

தாமரைக் கண்ணன்

'தாமரைக் கண்ண"[125] என்று இராமன் கண்களைத் தாமரையோடு ஒப்பிடுவார் கம்பர். திருமாலின் கண்களைத் தாமரையோடு ஒப்பிடல் மரபு. 'தாமரைக் கண்ணான் உலகு'[126] என்று வள்ளுவரும் இத்தொடரால் திருமாலைக் குறிப்பிடுவார்.

"அப்பரம் பொருளுக்கு, சூரியனால் அலர்ந்த தாமரை போன்ற இரு கண்கள் உள"[127] என்று சாந்தோக்கிய உபநிடதத்தில் குறிக்கப்படுகிறது.

வடிவழகும் குணவழகும்

சில இடங்களில் வடிவழகைக் குண அழகு வெல்வது குறிக்கப்படுகிறது. "யார்க்கும் செப்பருங்குணத்து இராமன்," அரச பாரத்திலிருந்து விடுதலை பெற்று, காடேக ஏவியவுடன், முன்பு செந்தாமரைக்கு ஒப்பாய் இருந்த முக அழகு[128] துன்பத்தை இன்பமாய் ஏற்கும் குண அழகால் வெல்லப்பெற்றுத் தோற்றுப்போய்,

"திருமுகச் செவ்வி நோக்கின், ஒப்பதேமுன்பு, பின்பு அவ்வாசகம் உரைக்கக் கேட்ட அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது"[129] எனக் கம்பரால் பேசப்படுகிறது.

அவன், "சேவகச் செய்தி கண்டால் நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும்"[130] என்னும் இராவணன் கூற்றால், இராமனின் வீரசௌந்தரியம், இராவணனை நாயாக்குகிறது. அவன் உரூப சௌந்தரியம் காமனை நாயாக்குகிறது. இங்கு இரு அழகும் ஒத்தவை யாக்கப்படுகின்றன.

"மாரர் உளரே இருவர் ஓர் உலகில் வாழ்வார்?
வீரர் உளரே அவரின் வில் அதனின் வல்லார்?

ஆர் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா?
ஓர் ஒருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்"[131]

இங்கு உருப சௌந்தரியமும் வீர சௌந்தரியமும் போட்டியிடு கின்றன.

இராமனின் வீர சௌந்தரியம், உயிர்கட்குப் பெருந்துயர் செய்து வாழ்ந்த இராவணன் முதலியோரை அழித்ததனால் சுடர் விடுகிறது. இதனால், 'வன்திறல் மைந்தர்'[132] என்பார் கம்பர்.

பேராற்றல் படைத்த இராவணனை வென்ற ஆற்றல் யாராலும் புரிதற்கு அரியதெனக் கருதி, இளங்கோவடிகள் இராமனை, 'அருந்திறல்'[133] என அவன் ஆற்றலையிட்டே, அன்மொழித் தொகையாகப் பெயரிட்டுச் சிறப்பிப்பார்.

இரு அழகாலும் உயிர்களைக் கவர்தல்

இறைவனாலும் திருத்த ஒண்ணாதபடி, தனக்குத் தானே உரியதாய், பிறர்க்கு உரியது அல்லாததாய் இருப்பது நெஞ்சம். அதனைத் தனது சீலம் முதலிய குணங்களாலும் வடிவழகாலும் தனக்கே உரியதாம்படி செய்கின்றான் இறைவன்.

"நிகரில் அவன் புகழ்பாடி இளைப்பிலம்
பகலும் இரவும் படிந்து குடைடிந்தே"[134]

என்பது நம்மாழ்வார் வாக்கு. அவர் இரவும் பகலும் இறைவன் குணவழகைப் படிந்து குடைந்தாடித் திளைப்போம் என்பார். 'படிந்து குடைதல்' என்னும் இந்த ஏகதேச உருவத்தைக் கம்பர் முற்றுருவகமாக்கி "அவர் நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ"[135] என்றார்.

"தாம் தாம் அகப்பட்ட குணங்களைச் சொல்லி, 'நான் முந்துறச் சொல்ல, நான் முந்துறச் சொல்ல' என்று பிணங்கி, நித்தியசூரிகள், சன்னி சுரம் வந்தவர்களைப் போன்று அடைவு கெடக் கூப்பிடுகின்ற குணங்கள் வந்து சேருகைக்கு இருப்பிடமானவன். இரத்தினாகரம் (மாகடல்) போலக் குணங்கள் சேருகைக்குக் கொள்கலமானவன்"[136] என்ற நம்பிள்ளை வாசகங்கள் இங்கு நினைவுகூரத்தக்கன.

வைணவம் காட்டும் இன்றியமையாக் குணங்கள்

இறைவன் குணங்கள் அற்றவன் என்ற அத்வைதக் கருத்தை மறுத்து, அவன் எல்லையற்ற அளக்க இயலாத குணங்களின் கடல் என்று கூறுவது வைணவ மரபு.

கம்பர் ஓர் அழகிய உருவகத்தால், இறைமைக் குணங்களின் அளக்க இயலா மகோன்னதத்தை நம் மனக்கண்முன் கொண்டுவர முயல்கிறார்.

உலகத்தையே அளக்கும் கருவியாகிய நாழியாகக் கொண்டு, நான்முகனையே அளப்பவன் ஆக்கி, பற்பல ஊழிக்காலங்கள் அளந்தாலும் அளக்க முடியாத குணங்களையுடையவன் இறைவன் என்கின்றார் கம்பர்.

“நாழி நவைதீர் உலகுஎலாம் ஆக
நளினத்து நீதந்த நாயகனார் தாமே
ஊழிபலபலவும் நின்று அளந்தால் என்றும்
உலவாப் பெருங்குணத்து எம் உத்தமனே!”

என்று சரபங்கன் பிறப்பு நீங்கு படலத்தில் இந்திரன் இறைவனின் அளக்க இயலாப் பெருங்குணத்தைச் சுட்டுவான்.

இறைவன் குணக்கடல் ஆயினும், அவன் உயிர்கள் மாட்டுக் காட்டும் குணங்களில் ஒன்பது குணங்கள் மிகமிக இன்றியமையாதவையெனப் ‘பரந்த ரகசியத்தில்’ பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுகிறார்[137].

அ. வாத்சலியம், ஆ. சுவாமித்துவம், இ. சௌசீலியம், ஈ. சௌலப்பியம், உ. சர்வஞ்ஞுத்துவம், ஊ. சர்வகதித்துவம், எ. (எல்லாம் நிறைந்த) பூரணத்துவம், ஏ. சர்வ சாமித்துவம், ஐ. இரக்கம் (கருணை) என்பவை அவையாம்.

இவை ஒன்பதும் கம்ப இராமாயணத்தில் இராமபிரானிடம் பொலிந்து நிற்பதைக் காணலாம்.

அ. அன்றீன்ற கன்றினுடைய அழுக்கை நாவால் நக்கி, சுவைப் பொருளாக உண்டு, கன்றைப் பேணும் தாய்ப்பசு. (வத்சம்-கன்று) அதுபோன்று கோது நீக்கிக் குணம் கொண்டு உயிர்களைப் பேணும் பண்பு வாத்சல்யம் ஆகும். “காதலிமாட்டு அழுக்கு உகப்பாரைப் போல”[138] என்று இக்குணத்தில் ஈடுபடுவார் நம்பிள்ளை.

சுக்கிரீவன் வாலியாகிய தன் தமையனைக் கொல்ல விரும்புகின்றவன்; அவனை நம்மோடு சேர்த்தல் தகாது என இலக்குவன் உரைக்க, “எழில்தோள, இப்பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ? மெய்ம்மை உற்றார் சிலர்; அல்லவரே பலர்; அற்றார் நவை என்றலுக்கு ஆகுநர் ஆர் கொல்”[139] என்று சுக்கிரீவனை இராமன் ஏற்பது குற்றங்களைக் குணமாகக் கொள்ளும் இறைவனின் வாத்சல்யப் பண்புக்குத் தக்க ஒரு சான்றாகும்.

சுக்கிரீவன் கார் காலம் கடந்தும் இராமனைப் பனியிலும் குளிரிலும் நடுங்க வைத்து, கூறிய நாளில் வாராத பெருங்குற்றம் புரிந்தான்.

இலக்குவன் உயர்த்தியபின், இராமபிரானின் திருவடியில் வீழ்ந்து செய்ததற் கிரங்கினான், பிழை பொறுக்க வேண்டினான்.

"நீ பிழையுணர்ந்து வருந்துவதே, என்பால் நீ கொண்டுள்ள அன்பிற்குச் சான்று, என் தம்பி பரதனைப் போன்று அன்பு கொண்டுள்ள நீ எனக்குக் காட்டில் கிடைத்த பரதன், அவன் நாட்டில் உள்ள பரதன், வருந்தற்க" என்று பெருமான் சுக்கிரீவனைத் தேற்றுதலும், குற்றங்களைக் குணமாகக் கொள்ளும் வாத்சலியப் பண்பிற்குச் சான்றாகும்.

"பரதன் நீ, இனையன பகரற் பாலையோ?[140] என்பது இராமனின் வாத்சலியக் குணம் சுட்டும் மறக்க இயலா வாசகமாகும்.

மானால் வஞ்சிக்கப்பட்டபோது, சீதையைத் தனியாக விட்டுவந்த இலக்குவனை இராமன் வெகுளவில்லை. இலக்குவனை வைது அனுப்பிய சீதையையும் குற்றம் கூறவில்லை. "வினைப்பயனால் வருவதறிந்து தடுக்கும் வகையற்றேன், "முந்தே தடுக்க ஒழியாது எடுத்த வினையேன்"[141] என்று, சீதையும் இலக்குவனும் புரிந்த வழுவைத் தன் மேல் ஏற்றுக் கொள்கிறான். தன்னைப் பதினான்கு ஆண்டுகள் காடேக வைத்த கைகேயின் குற்றத்தையே குணமாகக் கொண்டு "தீயள் என்று நீ துறந்த என் தெய்வம்"[142] என்று கைகேயியைத் தன் தெய்வமாகக் கொண்டது இவ்வாத்சலியப் பண்பின் வெளிப்பாடேயாம்.

ஆ. சுவாமித்துவம்

இறைவனைப் பெறுதல் உயிர்கட்குப் பேறு என்று கொள்ளாமல், உயிர்களைப் பெறுதல் இறைவனுக்குப் பேறு என்னும்படி உயிர்களைக் காக்கும் பண்பு சுவாமித்துவம் எனப்படும்[143].

அயோமுகிப் படலத்தில், இராமன், இலக்குவன் வாராமை கண்டு, "நீ என்னைப் பிரியாமல் இத்துணை நாள் இருந்ததனா லன்றோ, தந்தையைப் பிரிந்தும், சனகியைப் பிரிந்தும், உலகைப் பிரியாமல் நான் உயிரோடிருந்தேன். நீ பிரிந்தபின் இவ்வுலக வாழ்வு இனி வேண்டேன்"[144] என இராமன் உயிர் நீக்கத் துணிவது, உயிர்களைப் பெறுதலையே பேறு எனக் கொண்டவன் இறைவன் எனும் சுவாமித்துவப் பண்பினுக்குத் தக்கதொரு சான்றாகும்.

மகுட பங்கப் படலத்தில், இராவணன் மேல் பாய்ந்த சுக்கிரீவன் மீண்டு வாராமை கண்டு, "உன்னை இழந்தபின் சீதையை அடைந்துதான் எனக்கு

என்ன பயன்?''[145] என்று இராமன் புலம்புவது இப்பண்பிற்கு மேலும் ஒரு சான்றாம். இறைவனைப் பெறுவதனை, உயிர்கள் பேறென்று நினைக்க, உயிர்களைப் பெறுவதனை இறைவன் பேறு என்று நினைக்கிறான்.

"நான் உன்னை யன்றி யிலேன் கண்டாய் நாரணனே,
நீ என்னை யன்றி இலை"[145அ]

என்பார் ஆழ்வாரும்.

"இறைவனின் அடியார்களைத் துன்புறுத்தல் எம்பெருமான் திருமார்பிலே, திருக்கண்மலரிலே கோலிட்டு நலிதல் போலாம்'' என்பது வடுக நம்பியின் வார்த்தை.

மரத்துக்கு வாட்டம் வந்தால் முதலில் கொழுந்து வாடும். அதுபோல் அடியார்களுக்கு வாட்டம் வந்தால் எம்பெருமான் முதலில் வாடுவான் என்பதை, 'ஆயர்கொழுந்தாய்' (திருவாய் 1.7.3) என்று நம்மாழ்வார் காட்டினார்.

அடியார்களை உயிராகக் கொண்டவன் எம்பெருமான் என்பதை, 'பத்தர் ஆவி' (பெரிய திரு 7.10.1) என்று பெயரிட்டுக் காட்டினார் திருமங்கையாழ்வார்.

''ஞானியானவன் எனக்கே உயிர் போன்றவன்
என்பது என் சித்தாந்தம்'' (கீதை 7.18)

''நல்லோர்களான என் அடியர்களைப் பிரிந்து
என் உயிரையும் வேண்டேன்''

''பாண்டவர்கள் எனக்குப் பிராணனாக இருப்பவர்கள் அன்றோ?'' (பார.உத். 91.23) என்னும் வார்த்தாமாலையின் வார்த்தைகள், இறைவனின் இந்த மாண்பினை உணர்த்தும் மகத்தான வார்த்தைகள்.

எம்பெருமான் இங்கே வந்து அவதரிக்கைக்கு ஏது என்? என்ன, பாகவத அபசாரம் பொறாமை!'' என்று வகுளாபரண சோமாசியார்க்கு, தெய்வ வாரியாண்டான் விடையிறுத்ததாக வார்த்தாமாலை (வார்த்தை-284) கூறும்.

இவையெல்லாம் இறைவன் அடியவர்களைச் சொத்தாகக் கொண்டவன் (சுவாமித்துவம் - சொத்தாகக் கொள்ளும் தன்மை, சொத்துக்களை யுடைமை) என்பதற்குரிய சான்றுகளாகி நிற்கின்றன.

இ. சௌசீலியம்

பெரியவன் சிறியவனோடு ஒரு நீராகக் கலந்து பரிமாறுகை சௌசீலியம் ஆகும்[146].

"குகனொடும் ஐவரானோம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்"[147]

என்று, உடன் பிறவாத் தாழ் குலத்தவரை இராமபிரான் தன் உயர்குலத்தோடு ஒக்க எண்ணி, உடன்பிறந்த தம்பியரோடு இணையாக்கியது இறைவனின் சௌசீலியம் என்னும் இவ்வுயர் பண்பிற்கு உயரிய சான்றாகும்.

உயிர்கள் இராமனிடம் எவ்வாறு அன்பினையுடையனவோ, அவ்வாறே இராமனும் மன்னுயிர் அடங்கலுக்கும் அன்புடையவனாய் உள்ளான் என அயோத்தி அவையோர் கூறுவர்:

"நிமிர்ந்த மன்னுயிர்க்கு, எனையவாம் அன்பினன் இராமன், அனையவாறு அவற்கு அன்பின அவையும்"[148] என்பார் கவிஞர்பிரான்.

ஈ. சௌலப்பியம்

அணுக ஒண்ணாத வைகுந்தம் முதலிய இடங்களில் இராதே யார்க்கும் அணுக எளியனாய்ச் சுலபனாயிருக்கை சௌலப்பியப் பண்பாகும்[149]. சுலபம் எனும் சொல்லிலிருந்து தோன்றியது சௌலப்பியம்.

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி
ஆலமும் கடலும் கைலைப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்"[150]

"மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில் ஒன்றேந்திக்
கால்தரை தோயநின்று கட்புலக் குற்றதம்மா"[151]

என்னும் இவை போன்றவை சுலபனாய் நிற்கும் இறைவனின் சௌலப்பியப் பண்பிற்குச் சான்றாம்.

நினைப்பதற்கும் எட்டாத மனோதீதன், காலமும் கணக்கும் கடந்த காலாதீதன், ஆதிஅந்தம் அற்ற அதீதப் பரமபொருள், தரைப்புழுதி தோய பதினான்காண்டுகள் காட்டில் திரிந்த அருஞ்செயலை விடச் சுலபனாந் தன்மைக்கு வேறு சான்றுகள் எதற்கு?

உ. சர்வஞ்ஞத்துவம்

எல்லாவற்றையும் எப்போதும் ஒரே சமயத்தில் இயல்பாகவே அறிதல், எல்லாம் அறிதல் சர்வஞ்ஞத்துவம் ஆகும்[152]. சீதை, தன்னோடு வனம் வருவேன் என்று வற்புறுத்திப் பிடிவாதம் புரிகையில்,

> "விளைவு உன்னுவாய் அல்லை; போத அமைந்தனை யாதலின்
> எல்லையற்ற இடர்தருவாய்"[153]

என்று இராமன் உரைப்பது, எல்லாவற்றையும் எப்போதும் உணரும் சர்வஞ்ஞத்துவப் பண்பிற்குச் சான்றாகும்.

வனம் ஏகுக என்று கைகேயி கூறியவுடன் வண்டியில் பூட்ட இருந்த ஒரு காரேறு (காளை) அருளாளன் ஒருவனால் அவிழ்த்து விடப்பட்டதை ஒத்த மகிழ்வோடு இராமன் வனம் ஏகினான் என்பது அவன் எல்லாம் அறியும் தன்மைக்கு மற்றுமொரு சான்றாகும்.

மேல் விளைவறியாததுபோல் வஞ்ச மானின் பின்போதல், சீதையை நினைத்து அழுதல் முதலியவெல்லாம் தானான தன்மை மறைத்து, தான் எடுத்த தன்மைக்கேற்ப நடந்து, அவதார நோக்கம் முற்றுவித்தற்கே யாம். மணம் முடிந்தவுடன், தன் தாய் கோசலையை முதலில் வணங்காது கைகேயியை முதலில் இராமன் வணங்கியது, அவதார நோக்கம் நிறைவேற, இவளே உதவப் போகிறாள் என்னும் நிறை ஞானத்தால் என்க[153அ].

ஊ. சர்வ சக்தித்துவம்

பிறரால் செய்ய இயலாத செயல்களையும் மிக எளிதில் புரிய வல்லவனாயிருக்கை சர்வ சக்தித்துவம் எனும் பண்பாகும்[154].

இராமன், வருணனை வெகுண்டு, ஓர் அம்பால், எழு கடலையும் வறளச் செய்து அண்டமூலத்துக்கப்பால் உள்ள ஆழியையும் கொதிக்கச் செய்தது.[155] ஒரு வில் கொண்டே ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனையாம் மூல பலத்தை முடித்தது போன்றவை இந்தச் சர்வ சக்தித்துவம் எனும் பண்பாகும். "வியப்பாய வியப்பில்லா மெய்ஞ்ஞான வேதியன் (திருவாய் 3.1.11) என்பர் நம்மாழ்வார். மற்றவர்களுக்கு வியப்பாய் இருப்பதெல்லாம் இவனுக்கு இயல்பாக இருக்கும் என்று இத்தொடருக்கு உரை கூறுவார் நம்பிள்ளை. நான் ஆட்சி புரியப் பிறந்தவன் அல்லன், ஒரு (தீய) ஆட்சியை முடிக்கப் பிறந்தவன் என்று உணர்வுடையோர் உணர்ந்து கொள்ளப் பிறந்ததல்லவா இராமனின் அந்த மகிழ்ச்சி?

எல்லாம் நிறைந்த பூரணத்துவம்

(அவாப்த சமத்த பூரணத்துவம்) உலக உயிர்களிடம் ஒரு பிரதிப்பயனை எதிர்பார்க்க வேண்டாதபடி, எல்லாவற்றாலும் பூரணனாயிருக்கை இப்பண்பாகும்[157]. தேவர்களும், முனிவர்களும், நல்லோரும், அறமும் வாழவேண்டி, கருணை ஒன்றே மூலமாகக் கொண்டு, எவ்விதப் பயனும் எதிர்நோக்காமல், இராவண வதம் புரிந்தது இப்பண்பிற்கு ஏற்ற சான்றாகும்.

"அவன் கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்"[158]. அப்படியிருந்தும், தன் மனைவியை மீட்க, எழுபது வெள்ளம், வானர சேனையின் உதவி கேட்டுப் பெற்று, இராவண வதம் புரிந்தமை, அவனின் விளையாட்டுச் சுவை (லீலாரசம்)யை விளக்க எழுந்ததாகும். "வீயாத பெருமாய விளையாட்டாகும்"[159]. மேலும் வானரங்கள் அனைத்தும் முந்தைய தேவர்கள் ஆதலின், அறங்காத்தலில் அவர்கள் பங்கு பெற்றுப் பேறு பெற அளித்த அரிய வாய்ப்பும் அதுவாகும்.

ஏ. சர்வ சாமித்துவம்

உயிர்களுடைய காரியங்களைத் தன்னுடையவையாக நினைக்கும்படியாக இவர்களை உடையனாயிருக்கும் தன்மை சர்வ சாமித்துவமாகும்[160]. தண்டகாரணிய முனிவர்கட்காக, இராவணனை வதைப்பேன் எனச் சூளுரைத்ததும்[161], சுக்கிரீவன் வருத்தம் கண்டு "தலைமையோடு நின்தாரமும் உனக்கின்று தருவேன்"[162] என்றதும் இவைபோன்ற பிறவும் இறைவனின் சர்வ சாமித்துவம் எனும் இப்பண்பிற்குச் சான்றாகும். உடைமை ஊனமுற்றால் உடையவனுக்கு வருத்தம் நேருதல் இயல்பு. "உடைமைக்கு ஒரு முழுக்கு, உடையானுக்கு ஒன்பது முழுக்கு" எனும் முதுமொழியும் இக்குணம் பற்றி எழுந்ததேயாம்.

ஐ. இரக்கம் (கருணை)

பிறருடைய துக்கத்தைப் பொறுக்க மாட்டாம லிருக்கை இரக்கமாகும். பரதன், சடாயு, சீதை, இலக்குவன், சுக்கிரீவன் முதலியோர் துயர் கண்டு இராமன் வடித்த கண்ணீர் இவ்விரக்கப் பண்பிற்குச் சான்றாகும்.

"என்தாரம் பற்றுண்ண, ஏன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான்; கொலையுண்டு நீ கிடந்தாய்,
வன்தோள் சிலை ஏந்தி, வாளிக் கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன்; நெடுமரம் போல் நின்றேனே"

(சடாயுவதை)

சடாயுவின் துயர் கண்டு பொறுக்க முடியாக் கருணை யுள்ளமுடைய இராமபிரான். நான் நெடுமால் அல்லன், நெடுமரம் நான் என்று கருணையால் உருகுகிறான்.

இராமாயண காவியம் முழுவதுமே அவன் நல்லோர் மாட்டுக் கொண்ட இரக்கத்தின் வெளிப்பாட்டுருவம் ஆதலைக் காணலாம். உலகப் படைப்பும் ஒடுக்கமும் இறைவனின் இரக்கத்தின் வெளிப்பாடே.

"இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகெலாம் ஈன்று மீளக்
கரக்கும் நாயகன்"[163]

என்பார் கம்பர்.

இறைவனின் பல்வகைப் பண்புகளில் தலைசிறந்து நிற்பது கருணையே. "பேரளிக்குப் பிறந்த இல் ஆயினான்"[164] (அளி – கருணை) என்பதனால், கருணை பிறந்த இல்லமே இறைவன் என்கின்றார் கம்பர். "கருணையின் நிலையம் அன்னான்"[165] என்றும் அவர் குறிப்பிடுவார்.

இறைவன் தன் அளவிறந்த கருணையினால் உயிர்களைக் காக்கவே நினைக்கின்றான். அழிக்க நினைக்கையில் எல்லையற்ற துயர் உறுகிறான். அழிக்கும் நினைவு அவனுக்கு நீரிலே நெருப்பு எழுவது போன்று தன் இயல்புக்கு மாறான செயல், வந்தேறி. அழிக்க நினைக்கையில், ஆயுதம் எடுத்து அழிக்க ஆற்றலற்றவனைப்போல் நடுங்குகின்றான். உயிர்களை அழிக்கும் நிலை, தவிர்க்க முடியாமல் நேர்ந்து விடுகின்றபோது, இயன்ற அளவும் தவிர்க்கப் பார்க்கிறான். இந்த நிலையை உணர்த்துவதே, முதல் நாள் போரில், "இன்றுபோய் நாளை வா"[166] என இராவணனை அனுப்பிய நிகழ்ச்சியாகும்.

இக்கருத்தை நம்பிள்ளை இவ்வாறு குறிப்பிடுவார்:

"கடலை அணை செய்து, ஊரை முற்றுகையிட்டு, பின்னை அங்கதப் பெருமாளையும், தூதனுப்பி, எதிர்க்க வேண்டாவென இணங்க வேண்டி, அதையும் ஏற்க மறுத்து, கையிலே வந்து அகப்பட்டவனை, அரக்கர் தலைவனான இராவணனே, போரில் அடிபட்ட 'நீ போ' - அனுமதி தருகிறேன், இலங்கைக்குள் சென்று, சிரமத்தைப் போக்கிக் கொண்டு, வில்லோடும் தேரோடும் கூடினவனாய் மீண்டும் வா; அப்போது தேரில் இருக்கிற என் வலிமையைப் பாராய் என்று தப்பவிட்டது, இன்னம் ஒரு கால் அவன் மனம் திருந்தி, தவறு உணர்வானோ என்ற ஆசையால். அவன் அதர்மத்தில் முற்றி நின்று, அழிந்தே தீருவேன் என்று மறுநாளும் வந்தபோது, கண்ணும் கண்ண நீருமாய் அன்றோ கொன்றது[167]".

"வீடணனே யாயினும், இராவணனே யாயினும் அழைத்துக் கொண்டுவா" என்று காக்கும் கருணை அலையெறியக் காத்திருக்கின்றான் அவன். "நான் இரண்டு துண்டாக வெட்டுப்படக் கடவேன்; அப்பொழுதும் வணங்க மாட்டேன்" என்னும் உறுதியோடே நிற்கில் முடித்து விடுவான்"[168] என்பார் நம்பிள்ளை.

"என் வாளினைத் தொழுவது அல்லால், வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ?"[169] என்று இரணியன் கூறுவதாகக் கம்பர் கூறும் வாசகத்தை மனத்திற்கொண்டு வரைந்த வரிகளாக இவை தோன்றுகின்றன.

"இன்றுபோய் நாளை வா" எனும் கருணைத்திறம், பரிமேலழகர் நெஞ்சும் கவர்ந்ததால், "இலங்கையர் வேந்தன், போரிடைத் தன் தானை முழுதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலை நோக்கி, அயோத்தியர் இறை, மேற்செல்லாது, 'இன்றுபோய் நாளை நின் தானையோடு வா' என விட்டாற்போல்வது"[170] என (இக்கருணத் திறம்) எடுத்தாளப்பட்டது.

தீனர்களுக்கும் புண்ணுற்றோர்களுக்கும் இறைவன் தன் கருணையால் காக்கும் இரட்சகன் ஆகிறான் என்பாராய், "கழிநெடும் புண்ணுளோர் ஆருயிர்க்கு அமிழ்தமே போலுவார்"[171] என்கின்றார்.

"நீதி யார் கருணையின் நெறியினார் நெறிவயின் பேதியா நிலைமையார்"[172] என்பதனால், கருணை யென்பது நீதி நிறைந்த நெறியிற் செல்வது என்பதும், அக்கருணை நெறியிலிருந்து எது நேரினும் மாறுபடா நிலையினையுடையவன் இராமன் என்பதும் சுட்டப்படுகின்றன.

உலகளந்த கருணை

"உரியது இந்திரற்கு இது என்று உலகம் ஈந்துபோய்
விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினான்
கரியவன்; உலகெலாம் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டவே"[173]

மாவலிபால் சென்று, தனக்குரிய பொருளாகிய உலகை, அவனிடம் இரந்து பெற்று, மூவுலகும் அளந்து சலித்த தாளிணைகள் சிவந்திருந்தன; திருமகள் திருக்கரங்கள் அவற்றைப் பற்ற அவை மேலும் சிவந்தன என்று இறைவனின் அடிமலர்களின் மென்மை (மார்த்துவம்) உரைக்கப்படுகின்றது. உலகளந்த திருவடிகளை, ஆழ்வார்களும் ஆசாரியர்களும் நினைந்து நினைந்து உருகுவர்;

"நாய்ச்சிமார் தொடும்போதும் பூத்தொடுமாறு போன்று கூசித்தொடும் திருவடிகளைக் கொண்டன்றே காடும் ஓடையும் அளந்து கொண்டன"[174] என்று ஈடுபடுவார் நம்பிள்ளை.

“நன்மை தீமை பாராதே எல்லார் தலைகளிலும் திருவடிகளைக் கொண்டுவந்து வைக்கும் காரணம், எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன் ஆதலால்”[175] என்பதும் அவர் உரை.

இறைவனின் ஈசத்துவமும், அகடித கடநா சாமர்த்தியம் எனும் செயற்கரும் செயல் செய்யும் சக்தித்துவமும், எளிவரும் நீர்மை எனும் சௌலப்பியமும், ஔதாரியம் எனும் வண்மையும், காம்பீரியமும், குலஒழுக்க வேற்றுமையின்றி அனைவராலும் அடையத்தகும் சாம்யமும், உயிர்காக்கும் கருணையும் ஆகிய பற்பல குணங்கள் ஒருங்கிணையும் செயல் உலகளந்த செயலாகும்.

“மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி சேப்ப”[176] என்று இளங்கோவடிகளும் உலகளந்த இச்செயலில் ஈடுபடுவார். அடியளந்தான்”177 என்று வள்ளுவரும் இதனால் பெயரிடுவார்.

கருணாயங் கடல்

“தருண மங்கையை மீட்பதோர் நெறி தருகென்னும்
பொருள் நயந்து நன்னூல் நெறி யடுக்கிய புல்லில்
கருணையங்கடல் கிடந்தது கருங்கடல் நோக்கி,
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி”[178]

சீதையை மீட்கும் வழியைக் காட்டுக என்று, வேத விதிப்படி, சுருங்கிய தருப்பைப் புல்லின்மேல், கருணைக் கடலாகிய இராமபிரான், கருங்கடலை நோக்கி, விதிப்படி வருண மந்திரம் ஓதிக் கிடந்தானாம்.

மனித உருக்கொண்ட இறைவன், மனிதர்க்கு வழி துலக்கி, வாழ்ந்து காட்ட அவதரித்தவன் ஆதலால், அளவற்ற ஆற்றல் உடையான் ஆயினும், தன் ஆற்றல் அனைத்தையும் அடக்கி, வேதநெறிகளை மீறாது, வருணனைச் சரண் புகுந்து, சரணாகதியைப் புறக்கணித்தால் எத்தகைய இறைச் சீற்றத்தற்கு ஆளாக நேரிடும் என்பதை உலகுக்கு உணர்த்துவான் போல், வருணனைக் கடல் கடக்க வழிவேண்டி, தருப்பைப் புல்லின் மேல் படுத்துக் கிடந்தான்.

இங்கு அவனது அளவற்ற கருணை புலப்படுகின்றது எனக் காட்ட, “கருணையங்கடல் கிடந்தது கருங்கடல் நோக்கி” என அழகுறக் குறிப்பிடுகின்றார் கம்பர்.

கம்பரின் இச்சொற்றொடரில் ஈடுபட்ட நம்பிள்ளை, தம் பேருரையில், “ஒரு கடல் ஒரு கடலோடே பொறாமை கண்டு கிடந்தாற்போல இருக்கை; “கருணையங்கடல் துயியன்றனன் கருங்கடல் நோக்கி” என்னும்படி

யன்றோ"[179] என்று, கம்பரின் இவ்வடிகளையே மேற்கோளாக எடுத்துக் காட்டுவார்.

அவதாரம் - கருணையின் வெளிப்பாடு

இறைவனின் பிறவிகள் கருணையின் வெளிப்பாடே என்பார், "கருணையிற் பிறந்தான்" [180] என்பார்.

மேன்மையும் கருணையும் இறைவனிடத்திலே தங்கியுள்ளன. ஆனாலும், இறைவனிடம் கருணையே விஞ்சி நிற்கிறது; மேன்மை கழற்ற ஒண்ணாமையாலே கிடந்தது"[181] என்னும் ஈடு.

"இது எப்படித் தெரிகிறது எனில், தலைவனாய் இருப்பான் ஒருவனுக்கு, அடியர்களை அழைத்துக் காரியம் கொள்ளலாயிருக்க, நெடுந்தெருவே போகின்றவர்கள், தான் இருக்கிற முடுக்குத்தேடி வந்தபோதே, தண்ணளியே விஞ்சி நிற்கும் என்பது தெரிவதுபோல, விண்ணிலிருநதே நினைப்பால் எல்லாவற்றையும் முடிக்கவல்ல இறைவன், மண்ணில் அவதாரமாய்த் தோன்றி மண்ணுளார் படுவதெல்லாம் படுவது அவன் கருணையின் காரியம் அவதாரம் என்பதைத் தெரிவிக்கும்"[181அ] என்பார் நம்பிள்ளை.

கருணை - பொருள் விளக்கம்

தனக்கொரு பலனை எதிர்பாராமல் பிறர் துன்பம் போக்க விரும்புகை அல்லது பிறர் துன்பம் பொறாமை, அல்லது பிறர் துன்பம் கண்டு துன்புறுகை என்று காருண்யம் எனும் கருணைக்குப் பொருள் விரிப்பர்[182].

மனிதர்களுக்குத் துன்பம் கண்டால் அவரிலும் இரு மடங்கு துன்பம் அடைந்தான் இராமன்[183]. ஆதலினால்தான்,

> "எதிர் வரும் அவர்களை எமையுடை இறைவன்
> முதிர்வரு கருணையின் முகமலர் ஒளிரா
> எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்?
> மதிதரு குமரரும் வலியர் கொல்?"[184] என்று வினாக்களை
> அடுக்குவான் இராமபிரான்

என்பார் கவிஞர்பிரான்.

இராமன் எதிர் வருபவர்களையெல்லாம் கருணையினால் வினாவுவான். எதிர் வருபவர்கள் பேசுமுன், இவன் முந்துறப் பேசி, அவர்கள் துன்புற்றால் துன்புற்று,

அவர் துன்பம் கண்டு துன்புற்று, அத்துன்பம் பொறாமல், அவர் துன்பம் போக்க விழைதல் ஆகிய கருணைக்குரிய மேற்கூறிய மூவகை விளக்கமும் இராமனுக்குப் பொருந்துவது காணலாம்.

இதனால், மக்கள் துயர் நீக்க முந்துறப் பேசுகின்றவன் எனும் பொருளில் 'பூர்வபாஷி' என்று இராமனுக்கு ஒரு பெயர் உண்டு என்பர்[185].

பிறர் துன்பம் பொறாக் கருணை

பரதன் மணி முடி சூடாமல் சடை முடி சூட நேர்ந்தமைக்கு, எண்ணி எண்ணி ஏங்குவான் இராமன். தான் முடிசூட இயலாமை அவன் துயர்க்குக் காரணமாகவில்லை.

"உரங்கொள் தேமலர்ச் சென்னி உரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பிவனைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு
இரங்கி ஏங்கியது எண்ணி இரங்குவாள்"[186]

இராமபிரானின், தன் துயரிலும் பிறர் துயர் கண்டு கரைந்துருகும் காருணியப் பண்பு இங்கு வெளிப்படல் காணலாம்.

பகைவர்க்கும் இதம்புரியும் கருணை

இராவணனின் ஒற்றர்கள் பிடிபட்டபோது, அவர்கள் ஒற்றறிய வாய்ப்பளிக்கச் சொல்லி, எத்துயரும் இனி யடையாமல் பத்திரமாக அவர்களை அனுப்பி வைத்த இராமனின் பாங்கு, வீடணனையே கண்ணீர் விட வைத்தது.

"அகனுறப் பொலிந்த வள்ளல் கருணைகண்டு அழுத
கண்ணன்"[187]

என்பார் கம்பர். பக்தர்கள், இறைவனின் கருணைப் பெருக்கைக் கண்டு அழுதுருகியவையே அனைத்துத் துதிப் பாடல்களும் என்பதும் இங்கு நினையத் தகும்.

உலகுயிர் ஓம்பும் கருணை

"ஈன்ற அந்தணன் படைக்கலந் தொடுக்கில் இவ்வுலகம் மூன்றையும் சுடும், ஒருவனால் முடிகிலது"[188] என்பது இராம வாசகம். "இந்திரசித்தோடு அமையாமல், நம்மை எதிர்க்காத உலகம் மூன்றையும் அழித்து விடுமாதலால், பிரம்மாத்திரத்தை அவன் விடினும், அதைத் தடுப்பதே யன்றி, நீ பிரம்மாத்திரத்தை விட்டு விடாதே" எனும் இலக்குவனுக்கு உரைத்த

இராமனின் அறிவுரை, அவன் உலக உயிர்கள் மாட்டுக் கொண்டுள்ள கருணைத் திறத்தின் வெளிப்பாடு காட்டும்.

தான் துன்புறும் காரணம்

இறைவன் துன்புறும் உயிர்களின் உள்ளிருந்தாலும் அவனைத் துன்பம் தீண்டுவதில்லை. அத்தகையவன், தந்தையைப் பிரிதல், தலைவியைப் பிரிதல், தம்பியைப் பிரிதல், தன் அடியார்களைப் பிரிதல் முதலியவற்றிற்காகத் துன்புற்றான் என்பது இறைமைத் தன்மைக்கு மாறுபடாதோ எனும் ஐயத்தை உளங்கொண்டு, தேவர்கள் வாயிலாக அதற்கு விடை தருகின்றார் கம்பர்.

இறைவன் துன்பம் தீண்டப் பெறாத தூய உடம்பினன் (அப்பிராகிருத சரீரி) ஆனாலும், அவன் துன்புறுவதுபோல் தோற்றம் அளிப்பதெல்லாம் இன்ப விளையாட்டு (லீலாரசம்). இவ்வாறு துன்பமுறுதல் எதற்காக வென்றால், அவன் துன்பத்தை விளையாட்டென்றறியாத உயிர்களுக்கு, பெரியோன் அடையும் துன்பம் காரணமாக அன்பு விளையும், அது முற்றி அருளாய் விளையும், அது, முற்றித் தூய ஞானம் விளையும். அந்த ஞானத்தால் உயிர்கட்குப் பேறு கிட்டும்.

இவற்றை உளங்கொண்டே, இறைவன் உயிர்கள் மாட்டுக் கருணையால் கசிந்து துயருறுகிறான் என்பார்.

"துன்பவிளையாட்டிதுவேயும் உன்னைத் துன்பத் தொடர்வின்மை
இன்பவிளையாட்டாம், எனினும் அறியாதேமுக்கு இடருற்றால்
அன்புவிளையும்; அருள்விளையும்; அறிவுவிளையும் அவையெல்லாம்
முன்பு பின்பு நடுவில்லாய்! முடிந்தால் அன்றி முடியாவே!"[189]

எனும் அரிய கவிதை இதனைச் சுட்டும்.

"வீயாத பெருமாய விளையாட்டு" (விராதன் வதை 53)

"இறப்பதே, பிறப்பதே எனும் விளையாட்டு இனிது இந்தாய்"

(மேற்படி 50) எனவும் மேலும் பிறவிடங்களிலும் கம்பர் பெருமான் இக்கருத்தை வலியுறுத்துவர்.

கருணை விழிகள்

கருணையே வடிவு கொண்டவை இறைவனின் திருவிழிகள்

"கருணை தாம் எனக் கொண்டன; கொடுப்பன"[190]

என்பதனால், அக்கண்கள் உயிர்களின் கருணையை ஏற்கவும் வல்லன; உயிர்கட்குக் கருணையைக் கொடுக்கவும் வல்லன என்பது உணர்த்துகின்றார்.

அவற்றில் சீற்றம் தோன்றினால், அதுவும் உயிர்களைத் திருத்திப் பணிகொள்ள வந்த மறக்கருணை எனக் கொள்ளல் வேண்டும்.

இறைவனின் மறக் கருணை

தீநெறிச் செல்லும் உயிர்கள், அவை எடுத்திருக்கும் உடலோடு இணைந்திருப்பதனால்தான், இத்தீச் செயல்களைப் புரிகின்றன. உடலுக்காக உயிர்கள் புரியும் பாவங்களைத் தடுக்க வேண்டும் என்னும் கருணையினால் இறைவன், உயிர்களை அவை எடுத்த உடல்களினின்றும் பிரிக்கின்றான்.

காரணம் அற்றபோதே, காரியம் அறுமாதலின்[191], அவதாரங்களில், போரை வாயிலாகக் கொண்டு, பாவம் புரியும் உயிர்களின் உடலை உயிரினின்றும் பிரித்து, அவ்வுயிர்களை மேலும் பாவம் செய்யாமல் தன் கருணையினால் தடுக்கின்றான்.

அன்பர்களை அளிப்பது அறக் கருணை,

அறங்கடந்தோரை அழிப்பது மறக்கருணை.

"குழந்தை கண்ணைக் குத்திக் கொள்ளாமல் கையில் உள்ள கோலைப்பிடுங்கி வைக்கும் தாய் போலே, மேலும் தீமை செய்யாதபடி அவர்களுடைய உடலை அழிப்பது மறக்கருணை, இரண்டும் அவன் கருணா காரியமே யாகும்[192]" என்பர் பெரியோர்.

"அறனும், ஆர்வலர்க்கு அருளும் நீ
திறன் இலோர்த் திருத்திய தீது தீர்கொள்கை
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ"[193]

என இவ்விரு கருணைகளையும் பரிபாடல் சுட்டி நிற்கும்.

இவற்றையெல்லாம் உளங்கொண்டே,

"பாவம் நீ, தருமம் நீ, பகையும் நீ, உறவும் நீ"[194] என்றும், "நல்வினையே நோக்கி, நின்றாரைக் காத்தி, அயலாரைக் காய்தி, நிகரில்லாத் தீவினையும் நீ தந்தது அன்றே"[195] என்பார் கம்பர். "வணங்க மாட்டேன் என்பவரை யன்றோ எதிர்ப்பது?"[196] என்பர் வைணவச் சான்றோர்.

இதனை, "ஓடியா உள்ளமோடு உருத்து"[197] என்னும் பரிபாடல். பணியாத உள்ளங்களோடு உருத்தெழுகின்றான் இறைவன்.

மகளிர் ஊடலினும் வணங்க மறுப்பவர்கள் இரணியனும்[198], இராவணனும்[199].

"கும்பிட்டு வாழகில்லேன்"[200] என்று கொள்கை அறிவிப்புச் செய்தவன் கும்பகர்ணன். எனவே, இவர்களையெல்லாம் மறக் கருணையினால் இறைவன் ஆட்கொள்ள வேண்டியதாயிற்று.

கருணையே உயிர்புகுந்து தடவியது

சானகியை மனச் சிறையில் கவர்ந்த காதல் உள்ளிருக்கும் எனத் தேடி, அதனை அறவே அழித்து, அவனுடைய பாவத்தை நீக்க இராமசரம் முனைந்தது. அவன் உயிருக்குள், எள்ளிருக்கும் இடமுமின்றித் தேடி, அவன் பாவ நினைவுகளை அழித்து விட்டதால், "மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான் உயிர்துறந்த முகங்கள்"[201]

"மனத்தீமை சிதைந்து வீழ்ந்தான்"[202] ஆதலின் இராவணன் மாட்டு இராமன் காட்டியது மறக் கருணையாகும்.

இவ்வாறே, சூரபதுமன் மாட்டு, முருகன் காட்டியது மறக் கருணை எனத் தெய்வமணி மாலையில் இராமலிங்க வள்ளற் பெருமான் குறிப்பர். "ஈனமங்கே செய்த தாருகனை யாயிர இலக்கமுறு சிங்க முகனை, எண்ணரிய திறல் பெற்ற சூரனை மறக்கருணை ஈந்து பணிகொண்டு"[203] என்பது வள்ளற் பெருமான் வாக்கு.

அரக்கரைத் தேவர் ஆக்கிய கருணை

"கரக்கும் மாயமும் வஞ்சமும் களவுமே கடனா
இரக்கமே முதல் தருமத்தின் நெறி யொன்றும் இல்லா
அரக்கரைப் பெருந்தேவர்கள் ஆக்கின, அமலன்
சரத்தின் வேறினிப் பவித்திரம் உளதெனத் தகுமோ?"[204]

வீரப்போர் இயற்றிய அரக்கர்களுக்கெல்லாம், அவ்வீரம் ஒன்றையே மூலகாரணமாகக் கொண்டு, மேலும் அவர்கள் பாவ வினைகள் புரிதற்கின்றித் தன் தூய சரத்தின் மறக்கருணையால் கொன்று, அவர்களைத் தேவர்கள் ஆக்கினான் இராமன் என்கிறார் கவிஞர்பிரான். ஏதோ ஒரு காரணத்தை யிட்டு, உயிர்களை மேல்நிலைக்கு ஆக்கும் அவன் கருணைத் திறம் சுட்டியவாறு இது.

கண்ணீர் பொறுக்காத கருணை

"இராமபிரான் பிரிவால் யானை, குதிரை, பசு, கன்று முதலிய உயிர்கள் அனைத்தும் அயோத்தியில் கண்ணீர் வடித்தன"[205] என்பார்.

பரதன், இராமனைக் கூட்டிவரத் தனியாகவோ, தம்பி சத்துருக்கனனோடோ செல்லாது, நால்வகைப் படைகளோடும் அயோத்தி மக்களோடும் புடைதிரளச் சென்றான் என்கிறார் கம்பர்[206]. இப்படிச் சென்றதற்கு ஒரு நுட்பமான காரணம் கூறும் ஈடு:

"நம் ஒருவர் முகத்தில், கண்ணில் கண்ணீர் கண்டால், பொறுக்க மாட்டான் இராமபிரான். தம்மைப் பிரிந்த பிரிவு பொறுக்க மாட்டாமல், கண்ணும் கண்ணீருமா யிருப்பார், இத்தனை பேரைக் கண்டால் மீளாரோ? என்னுங் கருத்தாலே, போருக்குப் போவாரைப் போன்று, யானை, குதிரை, அகப்படக் கொண்டு போகிறான் (பரதன்) அவற்றுக்கும் அவ்வாற்றாமை யுண்டு ஆகையால்"[207]

உயிர்த் தொகைகளின் கண்ணீர் பொறுக்க மாட்டாதவன் இறைவன் என்னும் கருணைப் பண்பு இந்நிகழ்ச்சி வாயிலாய்ச் சுட்டப்படுகிறது.

எளிமை

கருணைக்கு அடுத்ததாகப் பாராட்டப் பெறும் இறைப்பண்பு எளிமையாகும். இறைவனின் எளிமைத் தன்மை, இட எளிமையாகுகையில் சௌலப்பியம் எனவும், குண எளிமையாகுகையில் சௌசீலியம் எனவும் சுட்டப்படுவதுண்டு.

"கருணைக்கு நீந்த அரிய நிலையம்"[208] என இறைவன் விளங்குவதற்கு, இந்த எளிமைப் பண்பே, அவனைச் சாத்தியன் ஆக்குகின்றது.

"அவதார சரித்திரங்களையே விவரிக்கும் இதிகாசம், பரம புருடனுடைய எளிமைப் பண்பையே விவரிப்பது" என்பர்.[209]

இட எளிமையாவது, அணுக ஒண்ணாத வைகுந்தம் முதலிய இடங்களில் இராதே, அருகேயிருக்கை[210]. பணியரங்கப் பெரும் பாயற் பரஞ்சுடர் ஆன பரமபதநாதன், யாம் காண அணியரங்கம் வந்தது[211] இவ்விட எளிமை சுட்டுவதாகும்.

"மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக் கால் தரை தோய வந்து கட்புலக் குற்ற தம்மா"[212]

"இரு நிலத்தவோ நின் இணையடித் தாமரைகள்?"[213]

என்று கம்பர் பெருமானார் நெஞ்சுருகுவது இந்த இட எளிமைப் பண்பைக் கண்டு எழுந்ததேயாகும்.

"தீயோர் இறந்துக நூறித் தக்கோர் இடர் துடைத்தேக ஈண்டுப் பிறந்தவன்"[213அ].

என்பது இறைவன் குண எளிமைப் பண்பைக் குறித்து நிற்பதை யுணரலாம்.

"மூவுலகும் ஈரடியால் முறைதிறம்பா வகை முடித்துத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போய் மடியத் தொல் லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே?
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே?"[214]

என்று வேற்றுச் சமயத்தாராகக் கருதப்படும் இளங்கோவடிகள், இராமன், தம்பியொடும் கான்போந்து சேவடி சேப்ப நடந்து, பெருவலி கொண்ட இலங்கையை மதில்களோடு மாண்பழியச் செய்ததைக் குறித்து உருகுவது, இறைவனின் இடஎளிமை, குண எளிமையாகிய இருபண்புகளையும் சுட்டி நிற்பதை உணரலாம்.

நீர்மை

பெரியவன் சிறியவனோடு ஒரு நீராகக் கலந்து பழகுதலை நீர்மை[215] என்பர். நீர் பள்ளம் பாய்ந்தோடி வளமாக்குதல்போல், தன்னில் தாழ்ந்தாரிடம் விரைந்தோடிக் கலக்கும் இறைவனின் இப்பண்பை நீர்மை என்பது பொருந்துவதே, சௌலப்பியம், சௌசீலியம் இரண்டையும் சேர்த்து எளிமை எனச் சில இடங்களிலும், நீர்மை எனச் சில இடங்களிலும் வேறுபாடு இன்றி வழங்குவதும் உண்டு.

குகன், சபரி, சரபங்கர், சுக்கிரீவன் முதலியோரிடம் நடந்து சென்று இராமன் நலஞ்செய்து வாழ்வித்தது இவ்விரு பண்புகளாகிய எளிமையும் நீர்மையும் பொங்கும் இடங்களாகும். இறைவனை "எளிவரும் இயல்பினன்"[216] என்று ஏத்துவர் நம்மாழ்வார்.

தன் மாட்டு அன்புடையாரிடத்து, தானும் அன்புடையவனாயிருத்தல், ஒரு குணம் அன்று; எல்லோர்க்கும் ஒவ்வொரு காலத்தில் எளிமை கூடும்; இவனுக்கு எளிமை இயல்புப் பண்பு (சொரூபம்) என்று அறிவிக்கவே" எளிவரும் இயல்பினன்"[217] என்றார் என்னும் நம்பிள்ளையின் நயம் இங்கு கருதத்தக்கது.

இறைவன் ஒருவனை அடியனாக ஏற்கையில், இவன் பிறவியாலும் தொழிலாலும் ஞானத்தாலும் உயர்ந்தான் ஒருவன்; இவனிடத்தில் அந்தரங்கத் தொண்டினைக் கொள்வோம்; இவன் அவற்றால் தாழ்ந்தவன்; இவனிடத்தில் புறத்தொழில் கொள்வோம் என்பவை இல்லாதவன். இதனைக்

"கொள்கை கொளாமை இலாதான்" எனும் தொடரில் ஈடு கூறும். இராமனிடத்தில் இப்பண்பு குடி கொண்டிருந்தமையால்தான் சீதையைத் தேடிக் காண்பதாகிய அந்தப்புரக் காரியத்திற்கு, இளையபெருமாள் ஆகிய தம்பி இலக்குவன் ஆகியோர் இருக்கவும், வானரங்களாகிய சுக்கிரீவனும் அவன் அடியனாகிய அநுமனும் அனுப்பப்பெறும் பேற்றினைப் பெற முடிந்தது[219] என்பது நம்பிள்ளையின் திருவுள்ளம். இறைவனுடைய மேன்மையை எல்லை காணவும் கூடும், அவன் நீர்மைக் (எளிமை)குணம் தரைகாண (எல்லை காண) இயலாது என்பது நம்பிள்ளை திருவுள்ளம் 3.1.4

பத்துடை யடியவர்க் கெளியவன்

உயிர்கள் கர்மங்கட்குக் கட்டுப்பட்டு இருத்தலைப் போன்று, இறைவன் அடியார்கட்குக் கட்டுப்பட்டு இருப்பவன். "நான் உன்னை யன்றி யிலேன் கண்டாய்! நாரணனே நீ என்னை யன்றியிலை". நிலா, தென்றல், சந்தனம் என்னும் இவை, பிறர்க்கேயாக இருக்குமாறு போன்று, தன் செயல்கள் அனைத்தையும் பிறர்க்கே ஆக்கி வைப்பவன் இறைவன்[220].

சுக்கிரீவன் இராமன் வலிமைமேல் ஐயங்கொண்டான். அதற்கு வெகுளாது அவன் விருப்பப்படி மராமரம் எய்து காட்டினான் இராமபிரான்.

"மராமரம் எய்த மாதவன்"[221] என்று நம்மாழ்வார் இச்செயலை ஏத்துவார். "மகாராசர் (சுக்கிரீவன்) வாலி மிடுக்கையும், பெருமாள் மென்மையையும் நினைத்து, 'நீர் வாலியைக் கொல்ல மாட்டீர்' என்ன, 'நான் (கொல்ல) வல்லேன்' என்று மழுவேந்தி (சத்தியம் செய்து)க் கொடுத்துக் காரியம் செய்யும் அன்புடையவன். இப்படி அடியாரை ஏற்றுக்கொண்டு அவர்கள் பேற்றுக்குத் தான் தொழில் செய்யுமவன்" என்று பத்துடை யடியவர்க்கு எளியனாகும் அவன் வித்தகத்தை வெளியிடும் ஈடு[22]. (பத்து – பக்தி, அன்பு)

உலகையெல்லாம் ஊழிக்காலத்தே தன் உதரத்துள் பொதிந்து வைத்திருக்கும் செயற்கரிய செயல் புரியும் இறைவனை, கோசலை, தன் திருவயிற்றுள் பொதிந்து வைத்திருந்தாள் என்பதனால், பத்தியுடைய அடியார்க்கு அவன் எளியனாந்திறம் சுட்டப்படுகிறது.

"ஒருபகல் உலகெலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக் குணர்வரு மவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து, எழில்காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை"[223]

என்பது கம்பர் வாக்கு.

“மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!”[224] என்று குலசேகராழ்வாரும் இவ்வெளிமையில் ஈடுபடுவார்.

இராமன் 12 மாதங்கள் கோசலா தேவியின் மணிவயிற்றில் கருவிருந்தான் என்பது வைணவச் சான்றோர் கருத்து. அவள் திருவதரத்தின் குளிர்ச்சியால் இன்னும் இருதிங்கள் இருந்துவிட்டுப் போவோமே என்று இருந்து விட்டான் என்பது அவர்கள் நயமொழி. அக்கருத்தைக் கம்பரும் ஏற்கிறார் என்பதை வெளிப்படுத்த மேற்பாட்டில் ‘ஒரு பகல் உதரத்துள் பொதிந்து’ என்கிறார். தேவர்களுக்கு ஒரு பகல் நாள் (ஒரு தேவ நாள்) நம் ஒரு வருடம் 12 மாதங்கள்.

அன்பிற்கெளியன்

உலகில் கிட்டும் எத்தகைய அரிய பொருள்களும் இறைவனுக்கு அரியவை யாகா. அவை அவன் தந்தனவே. எனவே, அரிய பொருளைத் தந்து, உலகினரை வசப்படுத்துவதுபோல் இறைவனை வசப்படுத்துதல் இயலாது. பொருள்களால் வசப்படுத்த இயலாத இறைவன், அப்பொருள் களைத் தர நினைக்கும் அன்புக்கு வசப்படுகிறான். ஆதலால்தான், பக்தனின் உள்ளத்தூறும் அன்பின் அடையாளமாகக் கொணரும் இலை, தழை, மலர் முதலிய எவையும் அவன் உகப்புக்கு உரியன வாகின்றன.

விதுரர் தந்த பழத்தோலும், குசேலர் கொணர்ந்த அவலும், சபரி கொடுத்த எச்சிற்கனி விருந்தும், கண்ணப்பர் எச்சில் ஊனும் பரம்பொருளுக்குச் சமமாகவே காட்சி தருதல் இதனால்தான்.

“கள்ளார் துழாயும் கணவிரையும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால்”[225]

எதுவாயினும் இறைவனுக்குப் படைக்க நினைக்க முந்தவேண்டும் என்னும் பெரியதிருமொழி. இந்த மேற்கோளைச் சுட்டிய ஈடு, கண்டங் கத்தரிப் பூ இறைவனுக்கு ஆகாதென்று விதிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு ‘அது இறைவனுக்கு ஆகாது என்பதால் விலக்கப்படவில்லை; பறிக்கும் அன்பர் கைகளில் முட்குத்தும் என்பதால் விலக்கப்பட்டது[226] என்று குறிப்பிடுவது இறைவனின் எளிமையை வைணவ மரபு எவ்வாறெல்லாம் மேம்படுத்தி மகிழ்கிறது என்பதை விளக்க உதவும்.

“பரிவதில் ஈசனைப் பாடி, விரிவது மேவல்உறுவீர்,
பிரிவகை இன்றி நன்னீர்தூய்ப், புரிவதுவும் புகைபூவே”[227]

எனும் நம்மாழ்வார் இறைப் பூசனையின் எளிமை பற்றிக் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"ஒருவன் அதிகமான பொருளைக் கொடுத்தால், அதற்காக அவன் பக்கல் அன்புடையவனாய் இருப்பானாகில், அரிதில் அடையத் தக்கவன் என்று அடையப் படுபவனுக்குக் குற்றமாம். ஆகவே, குற்றங்களுக்கு எதிர்த் தட்டானவன் (ஹேயப் பிரத்தியநீகன்) எனும் ஈசன் இயல்புக்கு இது மாறுபடும்"[228] எனும் ஈட்டின் அரிய விளக்கமும் இங்கு நினையத்தகும்.

குகனுக்கு எளியன்

குகன் கொணர்ந்த மீனும் தேனுமே இராமனின் உள்ளம் உவந்து போவதற்கு உரிய காரணப் பொருள்கள் ஆகிவிட்டன. அவையே குகனின் உள்ளத்தில் பெருகிடும் பக்திப் பெருக்கை அளக்க அவனுக்குப் போதிய அளவு கோல்களாகிப் போயின.

"அரிய, தாம் உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே!
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும்
உரியன; இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ? என்றான்"[229]

உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் தெரிதரக் கொணர்வதுதான் கையுறைப் பொருள்கள் என இங்கு விளக்கப்படுகிறது. இறைதிருக் கோயில்களுக்கு வெற்றிலை, பழம் முதலிய கையுறைகள் இன்றும் கொண்டு செல்வதற்கு இங்கு பொருள் கூறுகிறான் இராமன்.

"நாம் இட்டது கொண்டு மனம் நிறைந்தவன் ஆக வேண்டாதபடி, எல்லாம் நிறைந்தவன் ஆதலாலே, நம்பக்கம் பெற்றது கொண்டு சந்தோஷிக்கும்"[230] என்னும் ஈடு.

"யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியோடு படைக்கிறார்களோ, அத்தூய மனத்தானது அன்பளிப்பை நான் (இன்புடன்) அருந்துகின்றேன்"[231] என்பது கீதையில் கண்ணன் வாக்கு. "இதனால் பொருள்களின் உயர்வு தாழ்வு பார்க்கின்றான் இல்லை; இடுகிறவன் நெஞ்சிலே ஈரம் பார்க்கின்றான்" எனும் ஈடு.[232] "தூய்மையான மனம் ஒன்றே வேண்டுவது"233 எனும் கீதைக் கருத்தையே குகனை இராமன் ஏற்ற பாங்கிற்கு மூலமாகக் கொள்கிறார் கம்பர்.

"தேவா, நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாய் அடியேன்"[234]

என்றான் குகன்.

பெரியோரது உயர்வும், தம் தாழ்வும் தோன்றுமாறு வைணவ பக்தர்கள் உரையாடுகையில், தம்மை, "நாயிந்தே, நாயிந்தே"[235] என்பர். நாயின் தே

என்பதன் திரிபு நாயிந்தே என்பதாகும். நாய் போன்றவனுக்குத் தேவனே என்பது அதன் பொருள். "தேவா, நாய் அடியேன்"[236] என்று குகன் கூறுவது அம்மரபை நினைவூட்டுகிறது. உண்மைப் பக்தனுக்கு உரியவையான குகனின் இப்பணிவும் அடக்கமும் அடியேன் என்ற சரணாகதிச் சொல்லும் இராமனை நெக்குருகச் செய்து விட்டன. அவன் தேனும் மீனும் காணிக்கைப் பொருள்களாகக் கொண்டு வந்துள்ளமையறிந்த பெருமானின் உள்ளம் நீர்ப்பண்டமாய் உருகிப் போயிற்று.

உள்ளத்து அன்பினால், அமைந்த காதல் (பரமபக்தி) அரியதாம். உள்ளிருக்கும் அந்த அன்பினை வெளிப்படுத்துகிற இப்பொருள்கள் எவ்வளவு சிறியவையாயினும் சீரியவையே. அன்பில் நனைந்த பொருள்கள் அழுக்ககன்று தூய்மை ஓங்குவனவாய் ஆகிவிடுகின்றன.

அவன் கொணர்ந்த பொருள்களை, (மீனும், தேனும்) இராமன் விரத வேடம் பூண்டிருத்தலால், வாயால் உண்ண இயலாது போயினும், மனத்தால் உண்டதாகக் கொள்ளுமாறு வேண்டுவது, மேற்சொன்ன கீதை வாக்கியக் கருத்தினை, ஒரு நிகழ்ச்சியில் வைத்துக் காட்ட கம்பர் முனைந்த ஒரு முயற்சியே எனக் கருத இடம் தருகிறது.

அமிழ்தினும் இனிய பொருள் யார்க்கும் என்றும் யாரிடமிருந்தும் இதுவரை இராகவனுக்குக் கிட்டவில்லை; இன்று இராமனுக்குக் குகனிடம் இருந்து கிட்டியது என்பார் "அமிழ்தினும் சீர்த்த வன்றே"[236அ] என்றார் கம்பர்.

தாழ்ந்தாருக்கு எளியன்

உயர்ந்தோன் தாழ்ச்சியாகிய இந்நீர்மை இராமனின் வாழ்க்கை முழுவதும் பரந்து நிறைந்திருப்பதைக் காவியம் முழுவதும் காணலாம்.

"குகனொடும் ஐவரானோம் முன்பு; பின் குன்றுசூழ்வான்
மகனொடும் அறுவர்ஆனோம்; எம்முழை அன்பின்வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்"[237]

எனும் இராமனின் கூற்று, பெரியோன் தாழ்ந்தாரோடு புரையறக் கலக்கை என்னும் நீர்மைப் பண்பின் வெளிப்பாடே. "இளையவர்கட்கு அருளுடையாய் இராகவனே தாலேலோ"[238] என்பார் குலசேகராழ்வார். இளையவர் என்பதற்குத் தம்பியர் எனும் பொருளோடு இளைத்தவர்கள் எனும் பொருளும் உண்டு.

இறைவனின் குணங்களைச் செயற்படுத்திக் காட்டுவதற்கே அவதாரங்கள் என்பது இங்கு தெளிவுறுகிறது.

“தம்பியர் அல்லது தமக்கு வேறுயிர் இம்பரின் இல்லென எண்ணி ஏய்ந்தவன்”[239]

இங்கு தம்பியர் என்பது, இறைவனைவிட வலுக்குறைந்த தீனர் அனைவரையும் குறிக்கும் குறியீடாக இலங்குகிறது எனலாம்.

தன்னிலும் குறைந்த தம்பியரே உயிர் என வாழ்ந்தது அயோத்தி வாழ்க்கை.

தாழ்ந்தகுல மானுட வேடனும் தம்பியே எனத் தொடர்ந்தது ஆரணிய வாழ்க்கை.

மானிடரிலும் தாழ்ந்த விலங்கினமும் (குரங்கினமும்) தம்பியே எனத் தொடர்ந்தது கிட்கிந்தை வாழ்க்கை.

மானுடர், விலங்கு இரண்டினத்திலும் கொடிய அரக்க சாதியிலும் தம்பி (வீடணனைக்) கண்டது இலங்கை வாழ்க்கை.

உடற்பலம் நிறைந்து அறிவு குறைந்த மனிதர் (குகன்)

உடல் வலு, அறிவு வலு ஆகிய இரண்டும் குறைந்த வானரர் (சுக்கிரீவன்), உடல், அறிவு என இரு வலிவும் நிறைந்தும், இரக்கம் எனும் அருள் வலு குறைந்த அரக்கர் (வீடணன்) ஆகிய எவரும் இறையருளுக்கு அப்பாலார் அல்லார் என்பது இராமன் உடன்பிறவாத மூவரைத் தம்பிர் ஆக்கிய தகவால் விளங்கும். ஆன்மநேய ஒருமையே இறைவனின் இலக்கு என்பது இங்கு வெளிப்படையாகிற பாங்கைக் காணல் ஆகும்.

“பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதி மார்காள்,
இழிகுலத் தவர்களேனும் எம்மடியார்க ளாகில்
தொழுமின் நீர் கொடுமின் கொண்மின் என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய் போன்ம் மதில்திரு அரங்கத் தானே”[240]

“தமர்களைப் பழிப்பராயின், சாதி அந்தணர்களேனும் அவர்கள்தாம் புலையர் கண்டீர்”[241] எனும் தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்குகள் இங்கு சிந்திக்கத் தக்கன்.

சாதி இனப் பாகுபாடற்றுத் தொண்டக் குலமே தொழுகுலம் என்று மக்களின் மனத்தே விரியும் ஆன்ம நேயத்தை வைத்து உயிர்களுக்கு மதிப்பளிக்கும் வைணவக் கோட்பாடு, உடன் பிறவாதவர்களை, அன்பை வைத்துத் தம்பியராக்கிய, இராமனது நீர்மையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது இங்கு தெளிவாகும்.

குடும்ப நண்பன்

இராமன், தன்னைப்போலவே சுக்கிரீவனும் மனைக்குரிய துணைவியைப் பிரிந்துள்ளான் என நினைத்து அவன் குடும்பத்துள் தன்னை ஒருவனாய்ப் பிணைத்துக் கொண்டு, அவளை மீட்டுத் தருவதாக ஆணையிடுகின்றான்[242]. இது மாந்தர்களோடு வேற்றுமையின்றி இரண்டறக் கலந்து அவர்தம் இன்ப துன்பங்களை ஏற்கும் இறைவனின் நீர்மைப் பண்பிற்குத் தக்க சான்றாகிறது.

"உன்னைப் பிரிந்தபின் எனக்குச் சீதையால்தான் என்ன பயன்?" என்று சுக்கிரீவனை நினைந்து இராமன் உருகுவது[243] மாந்தர்களோடு புரையறக் கலந்திருத்தலைத் தன் பேறாக நினைந்திருக்கும் இச் சீல குணத்தை வெளியிடுவதேயாம்.

தீனருக்கெளியன்

"ஏதிலாரும் எளியர் என் றாரையும் தீதுதீர்ப்ப தென்சிந்தைக் கருத்தரோ"[244] எனும் இராமனின் வாக்கால் தீனர் தயாளனாகும் நீர்மைப் பண்பு வெளிப்படுகிறது.

"நடந்த கால்கள் நொந்தவோ"[245] என்று திருமழிசை ஆழ்வாரும் இறைவனின் இந்த எளிய நீர்மைகண்டு அவதாரங்களிற் பட்ட துயர்களுக்காக இரங்குவார்.

"ஏன் பள்ளி கொண்டீரையா?[246] எனும் இராம நாடகப் பாடலும் தீனர் தயாளனாகும் திறம் போற்றி எழுந்தது.

அயோத்தி மக்கள் எதிர் வருகையில் அவர் பேசுவதற்கு முன்பு பேசி, "எதுவினை? இடர்இலை? இனிதுநும் மனையும்? மதிதரு குமரரும் வலியர்கொல்?"[246அ] என நலம் உசாவுவதும், தாழ்ந்தோரிடம் ஓடிக் கலக்கும் இந்நீர்மைப் பண்பின் வெளிப்பாடேயாம். இறைவனுக்கு வைணவம் இன்றியமையாதவை எனக் கருதும் இக்குணங்களும் இன்னபிற பண்புகளும் இராம காதையில் தொட்ட இடமெல்லாம் கொட்டிக் கிடக்கின்றன. சான்றாகச் சில காணல் ஆகும்.

குணக்கடல்

"அவன் நற்குணக் கடல் ஆடுதல் நன்று"[247] என இறைவனின் குணங்களை அளத்தற் கருமையால் கடலாக உருவகிப்பார் கம்பர். திவ்விய கல்யாண குணங்கள் என்னும் வைணவத் தொடரை "நற்குணக்கடல்" என்று பெயர்த்துள்ளார் கம்பர்.

இவ்வாறு, இறைவன் குணங்ளை எல்லையற்றதாகவும், கடலாகவும் கூறுவது வைணவத்தின் புகழ்பெற்ற மரபு ஆகும்.

“குணங்களின் குவியலாக விளங்குபவன் பரமாத்மா”[248]

“காம்பீரிய குணத்தில் கடலைப் போன்றவன் இராமபிரான்”[249]

“எல்லாக் கல்யாண குணங்களுக்கும் அமுதக் கடலாயிருப்பவன் பகவான்”[250]

“பெரிய மலையானது, தாதுக்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருப்பது போலே, நற்குணங்களுக்கெல்லாம் பெரியதோர் இரத்தினாகரம் (மா கடல்) ஆக இருப்பவன் இராமபிரான்”[251] என்பர்.

இம்மரபினை உளங்கொண்ட கம்பர், “உலகங்களையெல்லாம் நாழியாகக் கொண்டு, நான்முகனே முன்வந்து அளக்க முயன்றாலும் இறைவன் குணங்களை அளக்க முடியாது. அவன் தோற்பான்”[252] என்று சரபங்கர் வாயிலாய்க் குறிப்பிடுவார்.

“பகைவர்களை அம்பாலே அழிக்கும்; அடியார்களைக் குணத்தாலே அழிக்கும்”[253] என்னும் ஈடு.

அடியாரின் செருக்கு முதலிய தீய குணங்களைத் தன் எளிமை முதலிய நற்குணங்களால் இறைவன் அழிக்கின்றான்.

“எல்லையற்ற கல்யாண குணங்களையுடையவன்”[254] எனும் வைணவ மரபுச் சொற்றொடரை, “அந்தமில் பெருங்குணத்து இராமன்”[255] என்று கம்பர் மொழி பெயர்ப்பார். “ஏத்தரும் பெருங்குணத்து இராமன்”[256] என்பதனால் இறைவனின் குணங்கள் உரைக்க அரியன என்பது தெளிவு.

புகழிற் பெரிய குணம்

“தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான்”[257] உலகியல் மாந்தர்க்கு, குணத்தளவைக் காட்டிலும் புகழ் அளவு உயர்ந்திருத்தல் இயல்பு. இறைவனுக்கோ, புகழ் அளவைக் காட்டிலும் குணத்தின் அளவே உயர்ந்திருக்குமாம். இறைவனின் குணங்கள், புகழின் எல்லையிலும் நீண்டவை. அவை புகழில் அடங்கா என்பது இதன் பொருள்.

“ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப்
புகழ்வு எல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கு என்றே
காட்டுமால் பரஞ்சோதீ!”

(திருவாய் 3.1.2)

என்னும் நம்மாழ்வார் திருவாக்கு இங்கு நினையற்பாலது.

அவன் "நற்குணக்கடல் ஆடுதல் நன்று" என்று காவியத்தைத் துவக்குவதால், இறைவனுடைய குணங்களை நுகர்ந்து திளைத்ததன் விளைவாகக் கம்பர் இக்காவியம் இயற்றினார் என்பது தெளிவு. இராமபிரானின் குணக்கடலில் ஆடி, நான் எல்லா நன்மைகளும் பெற்றேன், நீங்களும் இக்கடலாடி எல்லா நன்மைகளும் பெறுங்கள் என்பது கவிஞர் கூறும் உட்பொருள்.

இறைவனின் குணக் கடலாடியதன் போக்குவீடே இக்காவியம் என்பது வெளிப்படை.

"இனிய மன்னுயிர்க்கு இராமனிற் சிறந்தவர் இல்லை"[258] அவனை, "உண்ணும் நீரினும் உயிரினும் உவந்தனர் மக்கள். மன் உயிர்க்கெல்லாம் தசரதன் எவ்வளவு நல்லனோ அவ்வளவு நல்லனாயிருந்தான் இராமன் என வசிட்டர் இராமபிரானின் குணமேன்மை சுட்டுவார்"[258அ].

"திருவயோத்தியிலும் கோசல நாட்டிலும் உள்ள நிலையியல், இயங்கியற் பொருள்கள் அனைத்தும் இராமபிரானுடைய குணங்களையே நுகர்ந்து அதனாலேயே தரித்திருந்தன" என்று ஈடு கூறும்[259] இராமன் முகத்தில் "சினம் உண்மை தெரிந்ததில்லை"[260] மாறாக, பெருந்தாமரைக் கண்ணில் அருள் இருந்ததை அனைவரும் பார்த்தனர்.[261] "அவன் அருளின் ஆழியான்"[262], "அருளுடை வீரன்"[263], "அவ்வியம் அவித்த சிந்தை அண்ணல்"[264].

"இராமன் நடையையும் கண்ணன் மொழியையும் கைக்கொள்க" என்பது உலக வழக்கு. "நடையின் நின்றுயர் நாயகன்"265 என இராமன் ஒழுக்கப் பண்பால் உயர்ந்தவன் என்பது சுட்டப்படும். "மண்ணிடை யாரே இராகவன் அன்றி மாதவம் அறத்தொடும் வளர்த்தார்"[266] எனக் கேட்பார் கம்பர். இவ்வாறு குணக்குன்றாய் விளங்கியதால், "ஒரு பகல் பழகினார் உயிரை ஈயும்"[267] திறம்பெற்றான் இராமன். இறைவனின் குணத்தொகுதி, உயிர்களை ஈர்க்கும் திறம் இவ்வாறு சுட்டப்படுகிறது.

மெய்ப்பொருள்

இறைவன் என்றும் உள்ள நித்தியப் பொருள் ஆவதால், என்றும் இருப்பது எனும் பொருள்படும் 'சத்' எனும் சொல்லால் பரம்பொருளை மறை குறிப்பிடும். என்றும் இருப்பதை மெய் என்பது தமிழ் வழக்காதலின், 'சத்' எனும் இறைச் சொல்லை 'மெய்ப்பொருள்' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

"விராவி அளித்தருள் மெய்ப் பொருளுக்கே
இராமன் எனப் பெயர் இட்டனர்"[268]

என்பார். வள்ளுவனாரும், "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்"[269] என்பார். "மீளாத வேத முடிவின்கண் நின்னை மெய்யாக மெய்யின் நினையும்"[270] என்று வேதம் சத் (மெய்) எனக் குறிப்பதைக் கம்பர் குறிக்கிறார்.

சத்தியத்துவம்

இவ்வாறு 'சத்' எனும் அடியில் தோன்றி, எப்பொழுதும் விகாரமற்ற தாயிருக்கும் பண்பு 'சத்தியத்துவம்' எனும் குணமாகும்.

"மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகம்"[270அ]

என்று கம்பர் குறிப்பிடுவது, விகார மற்ற தாயிருக்கும் சத்தியத்துவம் எனும் இறைப் பண்பினை விளக்குவதேயாம்.

என்றும் இருப்பவன்

ஓம்தத் சத் என்பது ஓர் உபநிடத வாக்கியம்[270ஆ]

ஓம் - பிரணவம்; தத் - அது; சத்- என்றும் இருப்பது ஓம் எனும் பிரணவப் பொருளாயிருக்கும். அதுவே என்றும் இருப்பது எனும் இத்தொடரின் கருத்தினை, "எற்றை நாளினும் உளன் எனும் இறைவன்"[271] எனும் அடியில் குறிப்பிடுகிறார் கம்பர்.

இந்த உபநிடதத் தெளிவின் விளக்கமே இரணியன் வதைப் படலமாக உருப்பெறுகிறது. இறைவன் ஒருவனைத்தவிர, இரணியனும் என்றும் இருக்க முடிவெடுத்து வரம் பெறுகிறான்[272]. நீர், நெருப்பு, உள், வெளி, மண், விசும்பு முதலிய எப்பொருளாலும் சாவு வரக்கூடாதென[273] வரம் பெற்று நிமிர்ந்தான். ஆனால், "மிகை செய்வார் வினைகட்கெல்லாம் மேற்செய்யும் வினையம் வல்லான்"[274] இறைவன் ஆதலின் இவன் வரம் அனைத்திலும் தப்பி அவனை முடித்த தன்மை, இறைவன் ஒருவனே என்றும் இருப்பவன் என்னும் உண்மையை உணர்த்துவதாம்.

எங்கும் நிறை தன்மை (சர்வ வியாபகத்துவம்)

இறைவனின் எங்கும் நிறை தன்மையை இயம்புவதே பிரகலாதன் வரலாறு.

"சாணினும் உளன்; ஓர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்"[275]

என்பது பிரகலாதன் வாக்கு. இவ்வரலாறு எங்கும் நிறைதன்மையெனும் இக்கருத்தைச் சுட்டுவதேயென நம்மாழ்வாரும் குறிப்பிடுவார்:

"எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப
அங்குஅப்பொழுதே அவன் வீயத் தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே"[276]

"ஒரு பொருளே பல பொருள்களில் குறைவறப் பரந்திருக்கும் என்றால், அது கூடுமோ என்ன, 'கெடுவீர்காள்!' அவன் சர்வகத்துவத்தை இசையாத இரணியன் பட்டது படாதே கொள்ளுங்கோள் என்றார்"[277] என்பது இப்பாசுரத்திற்கு நம்பிள்ளை தரும் கருத்துரையாகும்.

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும்பிரான்"[278]

என்பது திருவாய்மொழி. இக்கருத்தையே,

"மாநிலம் சேவடியாக, தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக,
விசும்பு மெய்யாக, திசை கையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக,
இயன்றவெல்லாம் பயின்று (பரந்து) அகத்தடக்கிய
வேதமுதல்வன்"[279]

என்று பெருந்தேவனாரும் கூறுவார்.

இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் இறைவன் பரவியுள்ளான் எனும் நம்மாழ்வார், பெருந்தேவனார் கருத்துக்களே கம்பர் கருத்தும் ஆதல் காணலாம். இதுவே, வைணவத்தின் சரீர-சரீரிக் கொள்கையாக வளர்ச்சி பெற்றது எனலாம். தொட்ட தொட்ட இடமெல்லாம் இறைவன் தோன்றுவான் என்று பிரகலாதன் கூறுவது, இக்கொள்கையின் வெளிப்பாடேயாம்.[280]

"இவ்வுலகமெல்லாம் என்னால் வியாபிக்கப்பட்டிருக்கிறது"[281] "யாது ஒன்று இருக்கிறது, அது என்னையன்றி இல்லை" எனும் கீதைக் கருத்துக்களும் "உயிர்களைப் படைத்து அவற்றுள் அநுப் பரவேசித்து, அறிவுடைய பொருள், அறிவில் பொருள் (சித்து, அசித்து) ஆனார்"[282] எனும் தைத்திரீய உபநிடதக் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

வேதத்தின் பொருள் ஆனவன்

"ஆதி அந்தம் அரியென யாவையும்
ஓதுவார் அலகில்லன; உள்ளன
வேதம் என்பதன் மெய்ந்நெறி நன்மையன்"[283]

என்னும் கம்பர் வாக்கு வேதங்காட்டும் மெய்ப்பொருளே இறைவன் என்பதனை உணர்த்தும்.

"வேதத்தின் ஆதியில் எந்த ஒலியானது சொல்லப்பட்டதோ, வேதத்தின் அந்தத்திலும் எது நிலைநிற்கிறதோ, அதன் காரணமாகிய அகாரத்தில் ஒடுங்கின அந்த ஓங்காரத்திற்கு அர்த்தமாயிருப்பவனே இறைவன்"[284] என்பது நாராயண சூக்தம். இந்த நாராயண சூக்தம் யசுர் வேதத்தில் தைத்திரீய உபநிடதத்தில் உள்ளது[285].

இவ்வாறு நாராயணன் புகழ் சொல்லும் நாராயண சூக்தம் அந்தணர் ஓதும் நான்மறையில் உள்ளது என்பது கம்பர் அறிந்தது ஒன்றாதலின், "யாரைச் சொல்லுவது அந்தணர் அருமறை?"[286] என அறி வினாவில் பிரகலாதன் திருவாயால் வினவுகின்றார்.

"ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத்தெவ் வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை"[287]

எனும் நம்மாழ்வார் கருத்தும்

"எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்"[288]

எனும் கீதைக் கருத்தும் இங்கு நினையத்தக்கவை.

இந்த வேதக்கருத்தையும் கீதைக் கருத்தையும் ஆழ்வார் கருத்தையும் உளங்கொண்ட கம்பர், "ஆதியந்தம் அரியென யாவையும் ஓதுவார்"[289] என்றார்.

"மறையின் வாழ்வு"[290] என்றும், "மறையில் கூறும் எள்ளல் ஆகாத மூலத்து யாதுக்கும் முதலாய் உள்ள வள்ளல்"[291] என்றும் மேலும் ஓதுவார் கம்பர்.

ஓம் எனும் பிரணவம் அ+உ+ம் எனும் மூன்று எழுத்துக்களின் சேர்க்கை என்பர். இவற்றுள் 'அ' இறைவனையும், 'ம்' உயிர்களையும், 'உ' உலகினையும் குறிக்கும் என்பது வைணவ முன்னோர் கண்ட முடிபு. கீதையில் பகவான் ("அக்ஷராணாம் அகாரஸ்மி") "எழுத்துக்களுள் நான் அகரமாக இருக்கின்றேன்" என்று அறிவிக்கின்றான்.

இதனை ஏற்றுக் கவிஞர், பின்வருமாறு எடுத்தாளுகிறார்.

—

“உயிர்களின் முதலில் வைத்ததோர் எழுத்தினன்” (யுத்த 3794)

“ஓம் எனும் ஓரெழுத்து அதனின் உள்ளுயிர் ஆம் அவன்” (யுத்த 205)

“ஓம் அ(வ்) இராமர் “விராதன் வதை 30

ஓம் என்னும் பிரணவத்தில் உள்ள “அ” இராமன் என்று விராடன் வாயால் உரைக்க வைக்கிறார் கவிஞர்.

இறைவன் பிரணவ வடிவினன், அதனுள்ளும் ‘அ’ வாக இருப்பவன் என்பதனை, உவமை விளக்கம் கூறு முகத்தால் பரிமேலழகரும் அகர முதல எழுத்தெல்லாம் எனும் முதற் குறளுக்கு விளக்க உரை கூறுகையில் இவ்வாறு கூறுவார்:

“அகரத்திற்குத் தலைமை விகாரத்தால் (செயற்கையால்) அன்றி, நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வான் அன்றி இயற்கையுணர்வால் முற்றும் உணர்தலானும் கொள்க”

வேத விழுப்பொருள்

பரம்பொருளை, ஒரு வேதம், ‘எல்லையில்லாத பலவாக இருக்கும்’ என்று சொல்லும், மற்றொரு வேதம், பல அன்று ஒரே பொருள்தான் என்று சொல்லும்; வேறொரு வேதம், ‘தடையில்லாது அகக் கண்ணால் தொடரப் பாடுதற்குரிய ஒளி’ என்று சொல்லும்; வேறொரு வேதம்; ‘புறக்கண்ணால் காண்பதற்குரிய சூரிய ஒளியால் வானத்தைப் பொருந்திய இடமாகக் கொண்டுள்ளது’ (சூரியநாராயணன்) என்னும். இவ்வாறு நான்கு வேதங்களும் முடிவு இன்னது என்று அறியாமல், ஒருமுறை ‘ஆனந்தமான பொருள்’ என்று சொல்லும்; மற்றொரு முறை, ‘மனம், மொழி, மெய்களுக்கு அப்பாற்பட்டது அப்பொருள்’ என்று சொல்லும். உன் மிகப்பெரிய இம்மாயை அறியவல்லார் யார்?[292] என்று நாக பாசப் படலத்தில் கருடன் கேட்பதன் மூலம் வேதங்களில் எங்கும் விரிந்து கிடப்பவன் பரம்பொருளே என உணர்த்துவார் கம்பர்.

வேதத்தின் கூறான உபநிடத்தால் உணர்த்தப்படுபவன் இறைவன் என்பான் பிரகலாதன்[293].

“ஆரைச் சொல்லுவது அந்தணர் அருமறை? அறிந்தோர்
ஓரச் சொல்லுவது எப்பொருள்? உபநிடதங்கள்
தீரச் சொல் பொருள்”

பரம்பொருள் என்பது பிரகலாதன் வாக்கு.

“மகா நதியானது மலைக் குகையில் கிடக்குமாப் போலே உபநிடதங்களிலே காணலாயிருக்கும் வஸ்து”[294] என்கிறது திருப்பாவை வியாக்கியானம். “வேதங்கள் எல்லாம் நாராயணனைப் பேசுபவை”[295]. “உளன் சுடர்மிகு சுருதியுள்”[296], “மறையாய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே”[297] என்னும் தொடர்களும் இங்கு நினைவு கூரத்தக்கவை.

வேதமும் அறிய அரியான்

வேதம் ஓதுந்தோறும் ஓதுந்தோறும் அறிவை நல்குவது; அந்த வேதமும் முழுவதும் அறிந்து கொள்ள இயலாதவன் இறைவன்.

வேதம் அசேதனப் பொருள் ஆதலின், அறிய இயலாமை கூடும்; அதனைக் கற்றுத் துறைபோய, வேதத்தின் தலைவனாகிய நான்முகனால் அறிய இயலுமோ எனின், அவனாலும் அறிய இயலாதவன் இறைவன்.

“ஓதிஓதி உணருந்தொறும் உணர்ச்சிஉதவும்
வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதிதேவர்”[298]

எனவே, இறைவன் அறிய இயலாதவன் என்பதையே வேதம் அறிகிறது[299]. ‘எல்லையில் மறைகளாலும் இயம்பரும்பொருள்[299]’. வேதத்திற்கு உறுதியாக ஓர் அறிவு உண்டு. அது பரம்பொருள் அறிய இயலாதது என்பதை அறிந்து வைத்திருப்பது.

“உயிரின் தன்மை மன அறிவினால் அறியக்கூடியதாக இருக்கும்; இறைவன் தன்மை அங்ஙன் இராது” ஆயின், “மிகத் தூய்மையோடு கூடிய மனத்தால் அறியப்படுகிறான் இறைவன்” எனும் வேத வாக்கியத்தோடு முரணாகாதோ? என்னில், “இவ்வளவு மாத்திரமும் அல்லன்; இப்படிப் பட்ட பொருள் வேறு இல்லை[300]” என்று அறிந்தால் அறியலாம். அன்றி, ‘இப்படிப்பட்டது, இவ்வளவினையுடையது’ என்று வேதத்தால் அளவிட்டு அறிய முடியாது. ஆதலால் அணு அளவினையுடையதான ஆத்மாவை அறியுமாறு போன்று, எங்கும் பரந்திருக்கிற (விபுவாய் உள்ள) இறைவனை அறியப் போகாது[301] என்னும் ஈட்டின் விளக்கம் இங்கு உணர்த்தற் பாலது. “விராவரும் புவிக்கெலாம் வேதமே அ(ன்)ன இராமன்” (2.166) என்பார் கம்பர்.

இராமனின் ஒழுக்கமே வேதம் விதித்த ஒழுக்க நெறியென்பது கம்பர் கருத்து.

“நின் செய்கை கண்டு நினைந்தனவோ நீள் மறைகள்?
உன் செய்கை அன்னவை தாம சொன்ன ஒழுக்கினவோ?”[301அ]

என்று வியப்பான் கவந்தனும். "வேத விதிகளும் உன் மனத்தை, உன் அடியார்களின் கம்பீரமான மனத்தைப் பின்பற்றுகின்றன"[302] என்பார் ஆளவந்தார்.

ஔதாரியம்

அடியார்க்கு வழிவழியாக உதவி, இன்னும் என் செய்வேன் என்று ஏங்கி இருத்தல் இறைவனின் ஔதாரியம் எனும் குணமாகும்[303].

சனகன் முதலிய ஞானவான்களிருக்க, இட்சுவாகு குலத்தில் திருமால் அவதரித்தான். இட்சுவாகு, பல காலம் திருமாலைத் தவம் பேணி வழிபட்டான். இறைவனின் சிறந்த மூர்த்தமாகிய அரங்க நாதனைத் தன் வழிபடு மூர்த்தமாகப் பெற்றான். அம்மூர்த்தம் அவன் வழி வந்தோர்க்கெல்லாம் குலதனம் ஆயிற்று. அம்மூர்த்தியே, இராமனால் தரப்பெற்று, காவிரிக் கரையைப் பிரிய மனமில்லாமல் அரங்கத்திலேயே தங்கி அரங்கநாதன் ஆனான்.

"இட்சுவாகு காலம் தொடங்கி, தசரதன் வரையிலும், மன்னர்கள் யாவரும் அரங்கநாதனைத் தொழுது வந்த வைணவ உத்தமர்களாதலின், அந்த இட்சுவாசு வமிசத்தில் பிறந்தது பகவான் உகப்பினால் என்பார் கம்பர்"[304].

"பிணியரங்க வினையகல, பெருங்காலம் தவம் பேணி, யாம் காண, அணியரங்கம் தந்தான்"[305] என்று குலமுறை கிளத்துகையில், இட்சுவாகு புகழ் கூறுவார் கம்பர். இதனால், அடியார்களின் வழிவழி வருபவர்க்கும் உதவும் இறைவனின் உதார குணமாகிய ஔதாரியம் விளங்கும். பிரகலாதனிடம், நரசிங்கப் பெருமான், "அந்தமிலா அன்பு என்மேல் வைத்தாய் அளியத்தாய், எந்தை இனி இதற்குக் கைமாறு யாது என்றான்"[305அ] என்பதும் அடியார்க்கு இன்னும் என் செய்வேன் என்று ஏங்கி இருக்கும் உதார குணத்திற்கு உவமையாம்.

"உன் அடியார்க்கு என் செய்வேன் என்றே இருத்தி நீ"[305ஆ] என்று நம்மாழ்வாரும் இக்குணத்தை ஏத்துவார்.

"வட்டிக்கு விட்ட கடன் போல், திரௌபதி, மன்றத்தில் அழைத்த குரல் என் மனத்தை உலுக்கிக் கொண்டே உள்ளது." நேரில் போய் உதவ முடியவில்லையே என்ற கண்ணனின் ஏக்கம் இறைவனின் உதார குணத்தை விளக்கும்.

மேலும், அனுமனுக்கு மூவுலகத்தையும் பரிசாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்று பிராட்டி ஏங்கிய நிலையினையும் இங்கு ஒப்பிட்டு மகிழலாம்.

"உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தனி
விலையிலாமையும் நோக்கினன் மேல் அது
நிலை இலாமை நினைந்தனன் உன்னை என்
தலையினால் தொழ வேதகும் தன்மையோய்"

(மீட்சிப் 28) எனும் பிராட்டி கூற்றிலிருந்து தான், "தலையலாற் கைம்மாறிலேன்" வைணவ வழக்குத் தோன்றியிருத்தல் கூடும்.

முடிவற்ற தன்மை (அநந்தத்துவம்)

எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருப்பது, அநந்தத்துவம் எனும் இறைப்பண்பாகும்.

"சாணினும் உளன், ஓர்தன்மை அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்"[306]

என்று பிரகலாதன் இறைவனின் பண்பாக உரைப்பது அநந்தத்துவம் என்னும் இறைப்பண்பினைக் குறிப்பதாகும். இப்பாடல் இறைவனின் இடங் கடந்த தன்மை சுட்டுவதாம்.

"முன்பு பின்பு இருபுடை எனும் குணிப்பு அருமுறைமை" (மீட்சிப் 101) என்பது இறைவனின் இடங்கடந்த பெருநிலை சுட்டுவது.

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய்
காலமும் கணக்கும் நீத்த காரணன்"[307]

என்பது காலங்கடந்த இறைவனின் அநந்தத்துவத்தைக் குறிப்பதாகும்.

ஞான மயன்

இறைவன் முழுஞான வடிவினன். இதனை "நன்றாய ஞானத் தனிக் கொழுந்தே"[308] என்பதனால் கம்பர் குறிப்பிப்பார். உயிர்கள், ஞானத்தோடு அஞ்ஞானமும் கலந்தவையாயிருக்க, இறைவன் ஞானம் மட்டுமே உடையவன் என்பது குறித்தவாறு. "மாசூணாச் சுடர் உடம்பாய் மலராது, குவியாது, மாசூணா ஞானமாய் முழுவதுமாய் முழுது இயன்றாய்" என்பதனால் இறைவனின் அறிவு, மாசுண்ணாத பேரறிவு என்று நம்மாழ்வாரும் குறித்தார். (அறிதுயில்) யோகத் துயில் புரியும்போதே, தன் முற்றுணர்வினால் எல்லா நிகழ்ச்சிகளையும் அறியவல்ல சோதி வடிவினன் என்பாராய்க் கம்பர்,

"துயில்வுழி உணர்தரு சுடர்ஒளி ஒருவன்"[309]

என்கின்றார். "ஞான மூர்த்தி"[310], "அறிவின் உம்பரான்"[311], "அறிவின் தனிநாயகன்"[312], "அறிவினுக்கு அறிவாய் நின்றான்"[313] எனவும் இறைவனின் ஞானநிலை கம்பர் பெருமானால் சுட்டப்படுகிறது.

உயிர்கள், எல்லாவற்றையும் அறிதல் இயலாது; எப்போதும் அறிதலும் இயலாது; இறைவனால் இவை இயலும். "துயில்வுழி உணர்தருசுடர்ஒளி"[314] என்பதனால் எப்போதும் அறிதலும், "நீயறிதி எப்பொருளும்"[315] என்பதனால் எல்லாவற்றையும் அறிதலும் உணர்த்தப்படும். "எவன் யாவற்றையும் பொதுப்பட அறிந்தவன்; தனித்தனி அறிந்தவன் - அவன் இறைவன்"[316] என்பது முண்டகோபநிடதம்.

"உப்புக்கட்டி உள்ளும் புறமும் உப்புச் சுவையாகவே இருப்பது போன்று, இறைவனுடைய திருமேனியும் உள்ளும் புறமும் ஞானமயமாகவே இருக்கும்"[317] என்னும் பிரகதாரண்ய உபநிடதக் கருத்தினை, "சித்தென அருமறைச் சிரத்தில் தேறிய தத்துவன்"[318] எனக் கம்பர் குறிப்பிடுகின்றார். (சித்து - அறிவு, ஞானம்) அருமறைச் சிரம் - உபநிடதம் (வேதாந்தம்)

இறைவன் இன்ப மயன்

இராமன் என்னும் சொல்லுக்கு இரமிக்கச் செய்பவன் என்பது பொருள். "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்"[319] என்பதனால் ஆண்டாள் இராமன் எனும் சொல்லை 'மனத்துக்கினியான்' என மொழி பெயர்த்தார் என்பது தெளிவு.

கம்பர். "இனிய சிந்தை இராமன்"[320] என்று குறிப்பதனால், இராமனின் மன்னுயிர்க்கு இனியனாந் தன்மை இயம்பப்படுகிறது. "கற்றவர் கற்றிலாதவரும் உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உகப்பார்"[321] எனக் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாய்"[322] இறைத்தன்மை இலங்குவது சுட்டப்படுகிறது.

இங்கு. "உண்ணும் சோறும், பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்"[323] எனும் ஆழ்வார் வாக்குக் கருதத் தக்கது. ஆழ்வார் உண்ணும் சோறு முதலியவற்றை இறைவனுக்குச் சமமாகக் குறிப்பிடுகையில், உண்ணும் நீரினும் அவனையே உகப்பர் என்று கம்பர் ஒரு படி உயர்த்திக் கூறியுள்ள திறம நோக்கலாம். நீர், உடல் வாழ உதவும்; உயிர், உடல் வாழ உதவும்;அந்த உடலும் உயிரும் ஆகிய இரண்டும் வாழ உதவுபவன் இறைவன் என்பது கம்பர் கருத்தால் காணலாம்.

வேண்டுதல் வேண்டாமை யிலான்

இறைவன் எவ்வுயிர்களிடத்தும் விருப்பு, வெறுப்பு அற்றவன். அவனுக்குப் பகைவரும் இல்லை; நண்பரும் இல்லை. உயிர்களே, தத்தம் வினை வேறுபாடுகளால் அவனுக்குப் பகையாகவும், நட்பாகவும் மாறிக் கொள்கின்றன.

ஒருதன்மைத்தாய்க் காய்கின்ற வெயிலில், எலும்பற்ற உயிர்கள் தாமாகச் சென்று சாதல் போல,[324] உயிர்கள் தத்தம் செயல்களால் வாழவும் அழியவும் செய்கின்றன. இக்கருத்தைக் கம்பர்,

"மேவாதவர் இல்லை; மேவினரும் இல்லை"325 எனும் கூற்றால் உணர்த்துவார். "வேண்டுதல் வேண்டாமை இலான்"[326] என்பார் வள்ளுவரும். "நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடு"[327] அவன்.

இவ்வாறு, தம் செயல்களால் தீயவையாகிற உயிர்கள், மேலும் தீயன செய்யாமல் தடுப்பதற்குத் தம் மறக் கருணையால், அவ்வுயிர்களின் உலக வாழ்வை முடிக்கின்றான்.

இதனை, "யாவருந் தனக்கு அடியரேயாயினும் நல்லோரைக் காத்துத் தீயோரை அழிக்கும் கொள்கைக்கேற்ப, அசுரர்களும் கடல் கடைந்தனர் ஆயினும், அவர்கட்கு அமுதம் ஈயாமல், அமரர்களுக்கே அதனை ஈந்தான்"[328] எனும் இந்திரன் கூற்றாய்க் கம்பர் கூறுவதை உணரலாம்.

இறைவனின் நடுநிலைமை என்பது, தீமைகளைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பதும், அதனை வளர விடுவதும் அன்று என்பது இதனால் உணர்த்தப்படுகிறது.

"தாழ்ந்தவன் என்று ஒருவனை ஏற்றுக் கொள்ளாது விடுதலும், உயர்ந்தவன் என்று ஒருவனை ஏற்றுக் கோடலும் இல்லாதவன் இறைவன்"[329] என்னும் ஈடு.

"கொள்கை கொளாமை யிலாதான்
எள்கல் இராகம் இலா தான்"

என்பது திருவாய்மொழி (1:6)

இறைனுக்கு ஆன்மாக்கள்பால் உண்டான சம்பந்தம் பொதுவானதாக இருக்கும். "வானவர்க்கும் தானவர்க்கும் அவனே தெய்வம்"[330], "உம்பர்க்கும் உனக்கும் ஒத்து உலகெங்கும் பரந்துளான்"[330அ] என்பான் இரனியனிடம் பிரகலாதன். "நினக்கு மாற்றோரும் இலர்; கேளிரும் இலர்"[330ஆ] எனும் நான்காம் பரிபாடல்.

விலக்காமையே வேண்டுவது

ஏற்றுக் கொள்ளும் ஓர் ஆன்மாவின் உறவு, இறைவனை விட்டு விலகும் ஓர் ஆன்மாவினிடமும் இறைவனுக்கு உண்டு. ஆகவே, அவன் யாரையும் புறக்கணிப்பதில்லை. புறக்கணிப்பன ஆன்மாக்களே என்பது வைணவக் கொள்கை[331]. ஆதலால், இறைவன், உயிர்கள் தன்னை விலக்காமை தனக்கு வேண்டுவது என அருள்புரியக் காத்திருக்கிறான்.

கும்பகர்ணன் இறைவனை விடுகின்றவன் ஆனாலும், இறைவனை விலக்காதவன் ஆகையால், இறுதியிலும் வீடணனை விட்டு அழைப்பு விடுத்தான் இராமன்.

இராவணனும் இறைவனை விடுகின்றவனே ஆயினும், அவனுக்கு இறுதியில் வீடணனை விட்டு அழைக்காமைக்குக் காரணம், அவன் இறைவனை விலக்கியவன். கும்பகர்ணன் விலக்காதவன். அறத்தையும் அறத்தின் நாயகனான இறைவன் பெருமையையும் விலக்காமல் உணர்ந்தவன் கும்பகர்ணன். விலக்காமையே வேண்டுவது எனும் வைணவக் கொள்கை இங்கு சுட்டப்படுகிறது.

“நினைவருந் தகையர் நம்வினையினால் மனிதராய் எளிது நின்றார்”[332] என்பர் கம்பர். சீவர்கள் அவரவர் செயலாலேயே உயர்வும் தாழ்வும் பெறுகின்றனர். இறைவன் சாட்சிப் பொருளாக நிற்கிறான்[333]. வீடணன் நல்வினையால் இராமன், அவன் முன் வந்து நின்றான். இராவணன் தீவினையால், இராமன் அவன் முன் வந்து நின்றான்.

இறைவனை, வீடணன் தானும் தன் இனமும் வாழப் பயன் கொண்டான். இராவணன், தானும் தன் இனமும் வீழப் பயன்படுத்திக் கொண்டான். குளத்தைப் பயிர்செய்யப் பயன்படுத்தினான் வீடணன். அதனைத் தற்கொலைக்குப் பயன்படுத்திக் கொண்டான் இராவணன்[334].

இறுதி வந்து இயைந்த போது வாலி, இறையாற்றலை உணர்ந்தமையால் வாழ்த்தி வணங்கி வீடு பெற்றான். “யான் தவமுடைமையால், இவ்விறுதி வந்து இயைந்தது; யார்க்கும் சான்றென நின்ற வீரன், தான் வந்து வீடு தந்தான்”[335] என்னும் வாலி வாக்கு இவ் விலக்காமைப் பண்பை விளக்குவதேயாம்.

முதற் குணன் இறைவன்

சத்துவம், இராசதம், தாமதம் எனக் குணங்கள் மூவகைப்படும். தெய்வங்கட்கும் இக்குணங்கள் உண்டு என்பர். இக்குணங்கள் உயிர்கட்கு மாறி மாறி வரும் இயல்புடையவை[336]. ஆனால், இறைவன் மாறா

இயல்புடையவனாதலால், உயர்குணம் ஆகிய சத்துவ குணமே மாறா வடிவாய் இருப்பவன் இறைவன் என்பது வைணவக் கொள்கை[337], இதனை "மூன்றனுள், முற்குணத்தவரே முதலோர்"[338] எனும் தொடரில் கம்பர் குறிப்பிடுகிறார்.

"சத்துவ குணத்தில் நிலைபெறுகிறவன்" எனும் பொருளுடைய 'ஸத்வத்ஸ்தாய நம'[338அ] எனும் விஷ்ணு சகஸ்ரநாமச் சுலோகம் இங்கு கருதத் தக்கது. அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப் பொருள்கள் மூன்றும் முறையே சத்துவம், இராசதம், தாமதம் எனும் முக்குணங்களால் ஆனவை. இம்மூன்று குணங்களுக்கும் முறையே உரியதாக அரி, அரன், அயன் என ஒரு பரம்பொருள் மூன்றாகப் பிரிகிறது[339] எனும் பரிமேலழகர் கருத்து வைணவக் கருத்தே யாதல் தெளியலாம். இதனால், சத்துவ குணத்தன் திருமால் என்று கம்பர் கூறுவது, வைணவ மரபு வழிப்பட்ட கருத்தே யாதல் காணலாம்.

ஒன்பான் உறவு (நவவித சம்பந்தம்)

இறைவனுக்கும் உயிர்கட்கும் ஒன்பது வகையான உறவு உண்டு என வைணவம் குறிக்கும். கம்பரும் இவ்வுறவுகளைப் பற்றித் தம் காவியத்தில் பலவிடங்களில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சுட்டிச் செல்கிறார். "பழைய நின்னோடு உறவுள தன்மையெல்லாம் உணர்த்துவென்; அரக்கனோடு அம் மறவினை முடித்த பின்னர்"[339அ] என்று கருடனும் கூறுவான். சில சான்றுகள் மட்டும் இங்கு தரப்படுகின்றன.

சுமித்திரை இலக்குவனைத் 'தம்பி என்னும் படிக்கன்று; அடியாரின் ஏவல் செய்தி'[339ஆ] என்பான். இது வைணவம் சுட்டும் ஆண்டான்-அடியன் உறவு முறை ஆகும். "ஆண்டான் அடிமைத் தொழில் ஆற்றி, என் ஆற்றல் கொண்டே, மீண்டால் நுகர்வென் நின்விருந்து" என்பான் மைந்நாகத்திடம் (339இ) அநுமன்.

இராமன் வனஞ்சென்றபின், கோசலம் உயிர் நீத்த உடல்போல் காட்சி தந்தது என்பார்[139இ]. இது, (ஆத்ம-ஆத்மீ) பாவம் எனும் உடல் உயிர்ப் பாவம் எனும் உடல் உயிர்த் தொடர்பாகும். "ஏனை நிற்பவும் திரிபவும் இரங்கின; யாவும் ஞானநாயகன் வடிவமே யாதலின் நடுங்கி"[339ஈ] என்பார். உடலை உயிர் தாங்கி நிற்பது போல் இறைவனாகிய உயிர் உலகாகிய உடலைத் தாங்கி நிற்கிறது. இதனை ஆதார, ஆதேய உறவு என்பர். ஆதாரமாகிய நூல் அசைந்தால், நூலால் கோக்கப் பெற்றுள்ள மணிகள் அத்தனையும் அசைவது போல், இறைவன் நடுங்க ஆதேயமாகிய சராசரங்கள் யாவும் நடுங்கின எனும் கவிஞர் கருத்து ஆதார-ஆதேய உறவைத் தெளிவுறச் சுட்டி நிற்கிறது.

"நற்றாதையும் நீ; தனிநாயகன்நீ;"[339உ] என்னும் இலக்குவன் கூற்றால், பிதா-புத்திர உறவும்; ஆண்டான்-அடியான் உறவும் சுட்டப்படுகின்றன. "மன்னுயிர் அனைத்தும் தானே வருவித்து வளர்க்கும் மாயன்"[339ஊ] என்பது காப்பான்-காப்புறுவான் உறவு சுட்டும். "சுருதி நாயகன் வரும் வரும் என்பதோர் துணிவால், கருதி மாதிரம் அனைத்தையும் அளந்து,"[339எ] பிராட்டி காத்திருந்தாள். இதனையே நாயகன்-நாயகி உறவு என்பர்.

"சித்தென அருமறைச் சிரத்தில் தேறிய தத்துவம் அவன்"[339ஏ] (தேறிய-தெளியப்படுகின்ற) என்பார் கம்பர். இங்கு இறைவன், ஞானம் எனும் அறியப் படுபொருள் ஆவான் என்பதனால், உயிர்கள் அறிபொருள்கள் ஆகின்றன. இதனை ஞாத்ருஞேய பாவம் எனும் அறிவான்-அறிபொருள் உறவு என்பர். தாய் வாங்கித் தந்த நாட்டை, பரதன் வனம் ஏகித் தந்து வந்தது இறைவன் ஒருவனே உடைமைக்குரியவன், உயிர் உட்பட எல்லாப் பொருள்களும் அவன் உடைமைகள் என்பதை உணர்த்தும் உடையான்-உடைமை உறவு ஆகும். "ஒன்றிய யோகமும் போகமும் ஒத்தார்"[339ஐ] எனும் இடத்தில் நுகர்வான்-நுகர்பொருள் உறவு எனும் போக்த்ருவ-போக்கிய உறவு சுட்டப்படுகிறது.

அறத்தின் காவலன்

"அறங் காத்தற்கு உனக்கொருவர் ஆரும் ஒரு துணையின்றிக் கறங்காக்கும் எனத் திரிய நீயேயோ கடவாய்?"[340] என்று விராதன் வாயிலாய்க் கம்பர் கேட்பார்.

எங்கெங்கெல்லாம் அறத்திற்குக் குறையுண்டாகிறதோ அங்கங்கெல்லாம் கறங்கெனத் திரிந்து விரைந்து சென்று காப்பவன் இறைவன். "அறங்காக்க யுகந்தோறும் பிறக்கிறேன்"[341] எனும் கீதைக் கருத்தும் இதுவே.

அவனுடைய (உயிர்) காத்தல் தொழில் என்பது உண்மையில் அறங்காத்தல் தொழில்தான். அறம் அழிகையில் உயிர் அழிவு தோன்றுகிறது; ஆகவே அறம் காப்பது உயிர் காப்பது ஆகிறது.

"தருமத்தின் தலைவர்தாமே காவற்குப் புகுந்து நின்றார் காகுத்தவேடம் காட்டி"[342] என்பதும் இக்கருத்தை வலியுறுத்துகிறது. "அறத்தினுக்கு ஆருயிர்த் துணைவன்"[343], "அறம் வளர்க்கும் கண்ணாளன்"[344], "அறம்செய் காவற்கு அயோத்தியில் தோன்றினான்"[345] என்பன போன்ற பிறவும் இக்கருத்தை அரண் செய்வன. வேறெவையும் நோக்காமல் தருமம் ஒன்றை மட்டும் நோக்குதலே இறை இயல்பு. "தருமம் நோக்கிய தோன்றல்"[345அ]. இறைவனே அறத்திற்கு நாயகன் ஆதலால், அவன் செயல்கள் எல்லாம் அறம் ஆகின்றன; அவன் வாசகங்கள் எல்லாம்

அறத்தின் வாசகங்கள் ஆகிவிடுகின்றன. இதனால், அவன் வாலியை மறைந்து நின்று கொன்ற செயலும் அறமாகிப் போவதை உணரலாம் என்பர் வாலி வழக்குரைப்பார் சிலர்.

"தீயன இராமனே செய்யுமேல் அது
தாய் செயல் அல்லவோ?"

என்பதும் இக்கருத்தால் என்க.

பிறவிக் கரை யேற்றுபவன்

"மறப்பரோ நின்தன்மை? அதுவாகில் மற்றவர்போல் பிறப்பரோ."[346] என்பான் விராதன். இறைவன் குணங்களை மறவாமல் சிந்திப்பவர் பிறவிப் பிணி நீங்குவார். "இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீத்துவார்"[347] என்பது வள்ளுவர் வாக்கு. சேர்தல் - இடைவிடாது நினைத்தல் என்பர் பரிமேலழகர். கம்பரும் இதே பொருள் கொண்டார் என்பதற்கு, "மறப்பரோ நின்தன்மை?" எனும் தொடர் சான்றாகும்.

"மைந்தன் இருதாள் ஒருநாளும் மறவாதாரே பிறவாதார்"[348] என்பார் வில்லியும்.

"பனிநின்ற பெரும்பிறவிக் கடல் கடக்கும் புணைபற்றி
நனிநின்ற சமயத்தோர் எல்லோரும் நன்று என்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி"[349]

என்று விராதனும் போற்றுவான். இறைவன் அடிபற்றினால் துயர்தரும் பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம் என்பது சமயங்களின் ஒப்பற்ற தத்துவம். அத் தத்துவத்தின் தலைவன் நீயல்லனோ? என்பது விராதன் கருத்தாகும்.

விதிக்கும் நாயகன்

விதியை யாராலும் வெல்லல் இயலாது. விதியே, எல்லோரையும் எல்லாவற்றையும் வெல்லவல்லது என்பன சமண, பௌத்த மதக் கருத்துக்கள் ஆகும்.

இறைவன் விதிக்கும் மேலானவன்; விதியும் அவன் ஆணைக்குட்பட்டதே என்பன வைணவ, சைவ சமயக் கருத்துக்கள் ஆகும். இறைவன் விதிக்கும் மேலாணையிட வல்லவன் என்பதனை, "மேல் நின்ற விதிக்கு(ம்) நாயகன்"[350] என்னும் கம்பரின் தொடர் சுட்டும். தவம், வரம், ஆயுள் முதலிய விதியின் கூறுகள் யாவும் இறைவன்முன் செயலிழக்கும்.

"நோற்ற நோன்பு, உடைய வாழ்நாள், வரம் இவை நுனித்தவெல்லாம்
கூற்றினுக்கன்றே! வீரன் சரத்திற்கும் குறித்தது உண்டோ?"[351]

என்பது சீதை கூற்று.

"விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி" என்பது இலக்குவனின் கூற்று. (நகர் நீங்கு 130)

இக்கருத்தினையே,

"இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு"[352]

என்பார் வள்ளுவர்.

வல்வில் நாயகன்

ஓர் அம்பால் பல பொருள்களைத் துளைக்கும் ஆற்றலுடையார்க்கு 'வல்வில்' எனும் அடையினைப் பெயரோடு சேர்த்தல் தமிழ்மரபு. இதற்கு 'வல்வில் ஓரி'[353] என்று வழங்குதல் சான்றாகும். ஓரி, ஓர் அம்பால் பல உடல்களைத் துளைத்தவன். இராமன், "உலையுருவக் கடலுமிழ்கண் தாடகைதன் உரம்உருவி, மலையுருவி, மரம் உருவி, மண் உருவுமாறு ஒரு வாளி"[354] எய்ததனால் அவனை 'வல்வின் இராமன்'[354அ] என்பார் கம்பர்.

திருத்தக்க தேவரும்[355] திவ்விய கவியும்[356] திருமங்கை மன்னனும்[357] இராமனின் இவ்வாற்றலைப் போற்றுவர்.

ஒன்றாயிருக்கும் புத்தக ஏடுகள் பலவற்றைத் துளைத்துச் செல்லும் ஒரு பூச்சியை, "இராம பாணப் பூச்சி" என்று இன்றும் அழைப்பது, இராமனின் வல்வில்லின் பேராற்றல், தமிழ் மக்கள் நெஞ்சில் எவ்வாறு ஆழப்பதிந்த ஒரு செயலாய் இருந்தது என்பதற்கு ஓர் அசைக்கவொண்ணாச் சான்றாகும்[358].

இராமாயணம் முழுவதுமே இராமனது மாசற்ற பெருவீரத்தை விளக்கும் ஒரு நிகழ்ச்சித் தொகுப்பே எனலாம். இதனைக் "காசில் கொற்றத்து இராமன் கதை"[359] (கொற்றம் - வீரம்) என்று கம்பர் கூறுவதால் உணரலாம். இராமன், "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்"[360] என்று யார் ஒருவர் சகாயமும் வேண்டாத அசகாய சூரன் என்பார் கம்பர்.

"குன்றனைய தோளில் கொற்றத்தையே தரும் ஒற்றைவில்லைத் தாங்கினான்; அதனால் இனி உலகம் தாங்கப்படும் என்று, அவன் தனி வீர விற்பெருமை சுட்டப்படும்"

"குன்றனைய தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்"

என்பது கவிஞர்பிரான் வாக்கு.

தியாகையர் 'ஒகபாண'[362] என்று இதனை உரைப்பர். நான்கு பூதங்களின் வலிமைகளையும் ஒருங்கே பெற்றவன் எனப்படும்[362அ] வாலியின் மார்பில், இராமனின் அம்பு "காரும் வார்சிலைக் கதலியின் கனியினைக் கழியச் சேரும் சூசியிற் சென்றது"363 என்பதனால், பூத பௌதிகப் பொருள்களின் வலிமை, இறையாற்றலின்முன் எவ்வளவு வலுவற்றதாகி விடுகிறது என்பதனை உணரலாம்.

வேறுபாடற்ற பண்பு (அபேதத்துவம்)

இறைவனிடத்திலேயே அண்ட சராசரங்கள் யாவும் தோன்றுகின்றன; ஒடுங்குகின்றன.

"பெருங்கடலில் முளைத்தெழும் நீர்க்குமிழிகள் போல, பேரண்டங்கள் பலவும் உன்னிடத்தில் தோன்றி, உன்னிடத்திலேயே மறைந்து விடுகின்றன. உன் செயல்களை யார் அறிய இயலும் என்று கவந்தன் வாயில் வைத்துக் கேட்கிறார் கவிச்சக்கரவர்த்தி.

"நிற்கும் நெடுநீத்த நீரில் முளைத்தெழுந்த
மொக்குளே போல முளைத் தெழுந்த அண்டங்கள்
ஒக்க உயர்ந்து, உன்னுளே தோன்றி ஒளிகின்ற
பக்கம் அறிதற்கு எளிதோ பரமேட்டி?"

(கவந்த-46)

தோன்றி ஒடுங்கும் இச்செயல்கட்கு, கடலும் அலையும் உவமையாக வைணவக் கோட்பாட்டில் கூறப்படும். கடலிலிருந்தே அலை எழுகிறது. அக்கடலிலேயே அது அடங்கியும் விடுகிறது.

"வேலையும் திரையும் போல்வேறுபாடு இலான்"[364] என்பார் கம்பர். திருமழிசையாழ்வார் பாசுரமும் இக்கருத்தினைக் கூறும்:

"தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்து இறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே"[365]

அலைகளுக்குள்ளே கடல் என்பது நாரங்களை இருப்பிடமாக உடையவன் என்றும், கடலுக்குள்ளே அலை என்பது நாரங்களுக்கு

இருப்பிடமாக உடையவன் என்றும் கூறும் நாராயண மந்திரப் பொருளைச் சுட்டும். "பொன்னுளே தோன்றியது ஓர் பொற்கலனே போல்கின்றேன்" என்பான் நான்முகனும், (இரணியன் வதை 160). பொன்னுக்கும் அதனில் வேறாகாத நகைகட்கும் உள்ள அபேதசம்பந்தம் போல, இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள சம்பந்தம் வேறு பிரித்தறிய முடியாத வேறு பிரித்தறிய இயலாத தொடர்பு (அபேத சம்பந்தம்) என்பது.

"நான் உன்னையன்றி இலேன் கண்டாய், நாரணனே
நீ என்னை யன்றி இலை"

(நான்முகன் திரு-7)

என்னும் திருமழிசைப்பிரான் திருவாக்கு, இந்த அபேத சம்பந்தம் சுட்டுவதேயாம்.

கண்ணன் எனும் பெயர்

உடலின் இயக்கத்திற்குக் கண் இன்றியமையாதது ஆவதுபோல, உலகின் இயக்கத்திற்கு இறைவன் இன்றியமையாதவன் என்பதனைக் கண்ணன் எனும் பெயர் சுட்டும்.

"யாதிலும் உயர்ந்தோர் தம்மை
யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள்
உணர்த்தி விட்டான்"[366]

என்பார் கம்பர்.

"விண்ணிடை, இம்பர், நாகர், விரிஞ்சனே
முதலோர்க்கெல்லாம் கண்ணிடை ஒளி"

(கம். 3.276)

என்றும் குறிப்பிடுவர்.

"காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண்ணாகி" எனக் கவந்தனும் துதிப்பான். (கவந்த-42)

"தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் கண்ணாயிருப்பவன்" என்று வேதம் முழங்கும்.

"கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு"[368அ]

என்பார் வேதம் தமிழ் செய்த மாறன்.

"கண்ணில்லாவிடில் எப்படிச் செயல் புரிவது அரிதோ, அப்படியே நித்திய சூரிகளோடு நித்திய சம்சாரிகளோடு வாசியற (வேற்றுமையின்றி) இவனில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது."

"நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே"[367] என்னும் திருவாய்மொழிக்கு உரை தருவார் நம்பிள்ளை. இவ்வைணவக் கருத்தினையெல்லாம் உட்கொண்டே, கம்பர், "யாதினும் உயர்ந்தோர் தம்மை யாவர்க்கும் கண்ணன் என்று ஓதிய பெயர்" என்றார் எனலாம். இங்கு நம்மாழ்வாரை, "யாதினும் உயர்ந்தோர்" எனக் கம்பர் குறிப்பிடுவதால், அவர்மாட்டு கம்பர் பெருமான் வைத்திருந்த பெரும் பற்றும் பெருமதிப்பும் புலனாகும்.

ஆயிரம் நாமத்து ஐயன்

கம்பர், இறைவனை "ஆயிரம் நாமத்து அண்ணல்"[368], "ஆயிரம் நாமத்து அரி"[369], "ஆயிரம் பெயருடை அமலர்"[370] எனப் பலமுறை குறிப்பிடுவர். மாபாரதத்தில் வரும் 'விஷ்ணு சகஸ்ரநாமம்' எனும் திருமாலின் ஆயிரம் பெயர்களைக் குறிப்பிடும் பகுதியைக் கம்பர் நன்கு அறிந்திருந்தார் என்பது இதனால் உணரக்கூடும். விஷ்ணு சகஸ்ரநாமம் எனும் இந்நூலுக்கு, பட்டர் என்னும் வைணவ ஆசாரியார், வியாக்கியானம்[372] வரைந்துள்ளமையும் இங்கு கருதத்தக்கது.

அடியார் துயர் பொறாமை (சௌகார்த்தம்)

"அராவணைத் துயிலும் அண்ணல் காலம் ஓர்ந்து அற்றம் நோக்கி இராவணன் உயிர்மேல் உய்த்த திகிரி"[373] என்று கம்பர் ஓரிடத்தே குறிப்பிடுகிறார். இராவணன், திருமாலும் தனக்குப் புறங்காட்டியதாகக் கூறுவதற்கெல்லாம் இங்கு விடை தருகிறார். இறைவன், இராவணன் பாவம் முற்றட்டும் என்று காலம் பார்த்துப் பொறுத்திருந்தான் என்பது இங்கு சுட்டப்படுகிறது.

தன்னை வருத்துவாரைப் பொறுப்பான்; தன் அடியாரை வருத்துவாரைப் பொறான் இறைவன் என்பது வைணவக் கொள்கை. இராவணன் தன்னை வருத்தும் போது பொறுத்திருந்த இறைவன், தன் அடியார்களான தேவர் முனிவர்களையும், சான்றோர்களையும் வருத்தும்போது, பொறாது அவதாரமெடுத்து அவனை அழிக்க வந்துள்ளான் என்பதனை, "காலம் ஓர்ந்து அற்றம்நோக்கி இராவணன் உயிர்மேல் உய்த்த" என்பதனால் சுட்டுகிறார். இரணியன் தன் நாமமும் இல்லாமல் தன் ஆட்சியில் அழித்ததை இறைவன் பொறுத்தான். ஆனால், தன் அடியானான பிரகலாதனை அழிக்க நினைத்ததைப் பொறுக்காமல்

நரசிம்மமாய் அவதரித்துப் பொங்கி அழித்தான் இறைவன். சிசுபாலன், தன்னை யிகழ்ந்ததைப் பலமுறை பொறுத்தான். தன் அன்பர்களாகிய பாண்டவரையும் வீடுமரையும் இகழ்ந்ததை நொடிப் பொழுதும் பொறுக்காமல் அழித்தான்.

"அவதாரத்தில் புரிந்த ஆனைச் செயல்கள் எல்லாம் அவன் அடியார் துயரைப் பொறாமையாலே"[374] என்னும் ஈடு. இதனையே அடியார் துயர் பொறாமை (சௌகார்த்தம்) என்னும் பண்பாகக் குறிப்பிடுவர்.[375]

மாதுரியம்

பால் போல், இனிமையும் தந்து, நோய்க்கு மருந்துமாவது மாதுரியம் எனும் பண்பாகும்[376]. "பிணி அரங்க, வினையகலப் பரஞ்சுடரை யாம்காண அணியரங்கம் தந்தான்"[376அ] என்பதனால் அரங்கநாதன் கண்ணுக்கினிய காட்சியழகினை நல்கி, "பிணியரங்க" என்பதனால் (அரங்க - அழிய) பிறவிப் பிணிக்கு மருந்துமாகிறான் என்று கம்பர் கருதி, அவன் மாதுரியப் பண்பைக் குறிப்பிட்டிருப்பது காணலாம்.

"இறைவனுடைய குணங்களும், திவ்விய மங்கள வடிவமும், ஆயுதங்களும், இருப்பிடமும் (பரமபதமும்) அவனுக்கல்ல; பக்தர்களுக்காகவே"[377] என்று ஜிதந்தே தோத்திரம் சொல்கிறது. இறைவனின் குணங்களும் வடிவமும் பாலாய் இனிக்கும்; அவன் திவ்விய ஆயுதங்கள் காட்சிக்கினியவை ஆவதோடு மருந்தாய், பகைத்துயர் தீர்க்கவும் வல்லவையாய் இருப்பதை இராமன் செயல்களால் தெளிய உணரலாம்.

பகவன்

"பகவன் என்பதற்கு ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரம், தேசசு (ஒளி) எனும் அறுவகைக் குணங்களும் உடையவன் என்பது பொருள். (பகம் - ஆறு)

"ஆள யாவுனக் கமைந்தன? மாருதம் அமைந்த
பூளை யாயின; இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நவின்றனன்; நாகிளங்க முகின்
வாளைதாவுறும் கோசலநாடுடை வள்ளல்"[378]

இந்த முதல் நாள் போர்ப் படலப் பாடலில், பகவன் என்பதற்குரிய மேற்சொன்ன அறுவகைக் குணங்களும் வெளிப்படல் காணலாம்.

அறத்தின் முன்னால் பாவம் பூளையாகும் என்பதனை உணர்ந்து, அதனை உணர்விக்கும் ஞானமும், இராவணனை வெல்ல உள்ள ஆற்றலும் (சக்தியும்), "அரனிருந்த மலையெடுத்தானை"[379] தோற்பிக்கும் ஆற்றலைப்

பொதிந்து வைத்துள்ள உடல், உளம் இரண்டின் பலமும், "நினைந்தவெல்லாம் தரும் கற்பக நாடாகிய"[380], "கோசல நாடுடை வள்ளல்" என்பதனால் ஈசுவரத்துவம் நிறைந்த ஐசுவரியமும், நிலை வேறுபடற்குரிய காரணமிருந்தும் வேறுபடாத் திண்மையாகிய வீரமும், இத்தனை குணங்களும் நிறைந்து பிறர்க்கும் வழிகாட்டும் ஒளி (தேஜசும்) யும் ஆகிய பகவானுக்குரிய ஆறு குணங்களும் இப்பாடலில் வெளிப்படல் காணலாம்.

இல்லை உண்டு என்ன நிற்பவன்

"பல்லியல் நெறியில் பார்க்கும் பரம்பொருள் என்ன, யார்க்கும்
இல்லை உண்டு என்னநின்ற இடையினுக்கு இடுக்கண்
செய்தார்"[381]

இங்கு, இல்லையென்பது போல் இடை தோன்றினும் இடையென ஒன்று இருந்தே தீருவதுபோல் இறைவனும் இல்லையோ என்னுமாறு தோன்றினும் உளன் என்பது கருத்தாதல் காண்க. "கடவுளை உள்ளபடி அறிதல் உண்டானால் அவன் உள்ளவன் ஆகிறான்; அவனை உள்ளபடி அறிதல் என்பது இல்லையானால் அவன் இல்லாதவன் ஆகிறான்"[382] எனும் தைத்திரீய உபநிடதக் கருத்து இங்கு விளக்கமாதல் காணலாம்.

உளன் எனில் உளன் அவன்; உருவம் இவ்வுருவுகள்;
உளன்அலன் எனில் அவன் அருவம்; இவ்வருவுகள்;
உளன்என, இலன்என இவைகுணம் உடைமையில்
உளன், இருதகைமையோடு ஒழிவிலன் பரந்தே

- திருவாய் (1:1:9)

என்னும் நம்மாழ்வார் பாசுரத்தை அடியொற்றி வருகிறது. பின்வரும் கம்பர் திருப்பாட்டு:

"ஒன்றே என்னின் ஒன்றேயாம்; பலவென்றுரைக்கின் பலவேயாம்;
அன்றேஎன்னின்அன்றேஆம்; ஆம்என்றுரைக்கின் ஆர்ஆம்;
இன்றே என்னின் இன்றேஆம்; ஊதென்றுரைக்கின் ஊரீ தஆம்;
நன்றேநம்பி குடிவாழ்க்கை;"[383]

பேருருவன்

எண்ணிறந்தவர்களாகிய அசுரர்கள், குதிரைச் சம்மட்டி கொண்டு, பிரகலாதனை அடித்துத் துன்புறுத்தியபோது, தன்னைக் காக்கும் திருமாலின் கரங்கள், இவர்கள் கரங்களைவிட எண்ணிறந்தவை; "கையாயிரம் அல்ல;

கணக்கில''[384] என்று நினைந்து, இறைவனின் பேருருவினை எண்ணியிருந்தான் பிரகலாதன் என்பார் கம்பர்.

"புருஷ சூக்த"த்தில் கணக்கற்ற கைகளையுடையவனாகத் திருமால் குறிக்கப்படுவதை[385] இது நினைப்பிப்பது.

"ஆயிரம் விரிந்த கைம் மாய மள்ள!
பதினாயிரம் கை முதுமொழி முதல்வ!
நூறாயிரம் கை ஆறு அறிகடவுள்!
அனைத்தும் அல்ல பல அடுக்கு ஆம்பல்
இனைத்தென, எண் வரம்பறியா யாக்கையை!"[386]

எனப் பரிபாடலில், சங்ககாலத் தமிழர் பாடிய திருமாலின் முதன்மையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர் கம்பர் என்பது இதிலிருந்து விளங்குகிறது[387].

மூலபலப் போரில், அரக்கர்களின் ஆயிரமாயிரம் கைகளைச் செயலறச் செய்து, இராமன் தன் இரு கைகளால் வெற்றி ஈட்டினான் என்பார் கம்பர். ஆயிரம் கைகள் செய்தன, அமலன் செங்கை ஆயிரம் கையும் கூடி இரண்டுகை ஆனதன்றே - (மூலபல. 218.) இறைவனின் ஆயிரமாயிரம் கைகளும் இராமனின் இரு கைகளாக வந்துள்ளன என்று கம்பர் பெருமான் நயமாகச் சுட்டியுள்ள திறம் காண்க.

அறிய அரியான்

கவந்தன் துதியில், "ஆண் பாலோ, பெண் பாலோ அப்பாலோ எப்பாலோ"[388] என்று கம்பர் குறிப்பதனால், உலகம் பிரித்து வழங்கும் ஆண் பால், பெண் பால், அலிப்பால் முதலிய இலக்கண வரம்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் இறைவன் என்பதனை உணர்த்துகிறார். இது, நம்மாழ்வார் திருவாய்மொழியில், "ஆணல்லன்; பெண் அல்லன்; அல்லா அலியும் அல்லன்"[389] எனும் பாசுரக் கருத்தை அடியொற்றியது.

"ஒருவன் தன் வாக்கால், பரம்பொருளைப் பற்றிப் பேசுங்கால், பெண் ஆண் அலியாகவும் இல்லை"[391] என்பது பாகவதம்.

பட்டர் இவ்வாறு உரை கூறி வருகையில், தமிழ்ப் புலவர் ஒருவர், "ஆண், பெண், அலி எனும் மூன்றின் படியும் அல்லனாகில், சொல்லப்படுகின்ற பொருள் சூனியமோ பின்னை?" என்று கேட்க, ஆண் அல்லன், பெண் அல்லள், அலியும் அல்லது என்னாமல், அல்லன்; அல்லன், என்றே கூறுகின்றார். ஆதலின், இறைவன் புருட உத்தமன் (ஆண்பாலினன்) என்பதனை, அச்சொற்கள் தாமே தோற்றுவித்தன"[392] என்று ஈடு உரைக்கும்

ஐதிகம், "அப்பாலோ எப்பாலோ" என்ற கம்பர் வியப்புக்கு விடை தருவதாக அமைந்துள்ளதாகக் கருதலாம். இதனால், 'கடவுளுக்கு வடிவம் உண்டு, அவன் புருட உத்தமன், எனும் வைணவக் கோட்பாடு வெளிப்பட்டு நிற்றல் காணலாம்.

"யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்
யாருமோர் நிலையன் என அறிவெளிய வெம்பெருமான்"[393]

என ஏத்துவார் நம்மாழ்வார். யாராலும் ஆண் பாலோ, பெண் பாலோ, அப்பாலோ என அறிய அரியவனாய் நிற்கிற எம்பெருமான், ஆண் பாலாகிப் புருடோத்தமன் வடிவில் அறிய எளியவனாய் நிற்கிறான் என்பது கருத்து. "யாருமோர் நிலையன்" என ஆண் பால் விகுதியில் நம்மாழ்வார் கூறியுள்ளமையை நோக்கலாம்.

வெளிப்படத் தோன்றாமை

"உலகுதந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள்உற்று
உலைவிலா உயிர்கள்தோறும் அங்கங்கே உறைகின்றானும்
மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும் மற்றும் கேளாய்
அலகில் பல்பொருளும் பற்றி முற்றிய அரிகாண் எந்தாய்"[394]

என்பார் கம்பர் பெருமான்.

உலகங்களைப் படைத்தவன் இறைவன், வினை வேறுபாடுகட்கு ஏற்ப, நால்வகைக் கதிகளில் உயிர்களைப் பிறப்பிப்பவன் இறைவன். பின்பு அவ்வுயிர்களுக்குள் உள்ளுறைந்து அவை செய்யும் செயல்களுக்குச் சாட்சியாக நின்று பார்த்து வருவானும் இறைவன். மலரின் மணம் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும் வெளிப்பட்டுத் தெரியாது, உள்ளுறைந்து எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவனும் அவன் என்பதனால், உலகும் உயிரும் தந்தும் அவன் வெளிப்படாப் பண்பு விளக்கப்படுகிறது.

"நால் நெடுந் திசை முகன் அகத்தும், நம்மனோர்க்கு உன்னரும் உயிருளும் ஒக்க வைகுவார்" (சித்திர கூட. 42) என்று வெளிப்படாப் பண்பை வேறிடத்தும் விளக்குவார் கம்பர்.

ஏழுலகாளி

இவ்வுலகாளும் ஒரு மகனைத் தசரதன் கேட்க, ஏழ் உலகும் ஆளும் ஒரு மகனாக வருகிறேன் என்று வந்து பிறந்தான் இறைவன் என்பர் கம்பர்.

"இவ்வுலகொன்றுமோ? உலகம் ஏழும் ஓம்பிடும் வன்றிறல் மைந்தன்" ஆகப் பிறந்தான் என்பர்.[395] "மாதவன் திசை பத்தொடும் வரம்பிலா

உலகிற்கு ஏகநாதன்" என்று மேலும் குறிப்பார் கம்பர் பெருமான். ஏழுலகாளும் சக்கரவர்த்தியாக இறைவனைக் குறிப்பது வைணவ மரபு. பரம்பொருளான திருமாலை, சக்கரவர்த்தினியோடு வீற்றிருந்து, ஒரு சாம்ராச்சியம் ஆளும் சக்கரவர்த்தியாகவே கொண்டு நம்மாழ்வார் கூறும் இடங்கள் உண்டு[396].

"வீற்றிருந்து ஏழ் உலகுந் தனிக்கோல் செல்ல வீவில் சீர்
ஆற்றல் மிக்காளும் அம்மானை"397

"இன்பம் பயக்க எழில்மலர் மாதரும் தானும் இவ்வே ழுலகை
இன்பம் பயக்க இனிதிருந்தாள்கின்ற எங்கள் பிரான்"398

என்னும் திருவாய் மொழிப் பாசுரங்களை இங்கு நினைக.

மாறா இயல்பினன்

மாறுதலை இயல்பாகக் கொண்ட உலகத்தின் எல்லாப் பொருள்களிலும் மாறாது உறைபவன் இறைவன்.

சித்து, அசித்துக்குள்ளிருந்து பரிணமிக்கும் இறைவன், அவ்வாறு தான் ஒருபோதும் பரிணமியாதவன் என்பது வைணவக் கோட்பாடுகளுள் ஒன்று. இதனைப் "பேதியாது நிமிர் பேதஉருவம் பிறழ்கிலா ஆதிதேவர்"[399] என்பார் கம்பர்.

"ஓங்கி உலகளந்த உத்தமன்" – "ஓங்கி" – விகாரமற்றதான அப்ராக்ருத சரீர மன்றோ விகாரத்தையடைந்தது. சம்சாரிகளின் விகாரம் கர்மானு குணமாகையாலும், தமக்காக ஆகையாலும் தோஷத்தைக் கொடுக்கும்; இவனுடைய விகாரம் கிருபையினால் ஆகையாலும் பிறர்க்காக வாகையாலும் குணத்தைக் கொடுக்கும்" என அவன் எடுக்கும் அவதார வேறுபாடுகள் உலகுக்கு நன்மைதர எடுப்பவை; அவை உயிர்களின் குண வேறுபாடுகள் போன்றவையல்ல என்று திருப்பாவை வியாக்கியானம் (திருப்பாவை, பாடல் 3) புகலும்.

"தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னையொன்றும் கலத்தல் இன்மையின் தூயதாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி, எஞ்ஞான்றும், ஒருதன்மைத்தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்றார்"[400] என்று இறை யியல்புரைக்கும் பரிமேலழகர் உரை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"இறைவன், இவ்வுலகைப் படைக்கும்போது, யாதொரு விகாரமும் அடைவதில்லை"[401] என்பது தத்துவத் திரயம்.

சிலந்தி, தன் உருவத்திற்கு எவ்வித விகாரமும் இன்றி, நூலினை உண்டாக்கி, மீண்டும் தான் வெளிப்படுத்திய நூலை, உள்ளே இழுத்துக் கொள்வது போன்று, இறைவனும், தன் உண்மை வடிவுக்கு எந்த விகாரமும் இன்றியே, அண்டங்களைப் படைத்து மீண்டும் அவற்றைத் தன்னுள் அடக்குவன் என்னும் வைணவக் கோட்பாட்டை,

"அண்டம்பலவும் அனைத்துயிரும் அகத்தும் புறத்தும் உளவாக்கி
உண்டும் உமிழ்ந்தும் அளந்திடந்தும், உள்ளும் புறத்தும் உளவாகிக்
கொண்டு சிலம்பி தன் வாயில் கூர்நூல் இயையக் கூடியற்றிப்
பண்டும் இன்றும் அமைக்கின்ற படியை ஒருவாய் பரமேட்டி"[401அ]

என்பார் கம்பர்.

"ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்பாவம் ஸர்வ ஸக்திக்குக் கூடா தொழியாதிறே"[402] என்பது தத்துவத் திரயம்.

"சின்னூல் பலபல வாயால் இழைத்துச் சிலந்தி பின்னும்
அந்நூல் அருந்தி விடுவதுபோல அரங்கர் அண்டம்
பன்னூறு கோடி படைத்து அவை யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர்"[403]

என்பது திருவரங்கத்து மாலை.

தன் தன்மை தான் அறியான்

இறைவனை வேதம், "அவன் தானும் தன் நிலை அறிவானோ? அறியானோ?" (ஸோ அங்க வேத யதிவா நவேத) என்கிறது என்பர் பெரியோர்.

இதனால், நம்மாழ்வார்,

"தனக்கும் தன் அறிவரியான்" (திருவாய்-8.4.6) என்று பரமனைப் பாடுவார்.

அவர் கருத்தை அப்படியே அடிஒற்றிக் கம்பர், "தனக்கும் தன்னிலை அறிவரும் ஒரு தனித் தலைவன்" (இரணியன் வதை-33) என்று பிரகலாதன் வாயிலாக அறிவிப்பார்.

வினைகள் தோயாதவன்

பரம்பொருள், உலகில் வினைகள் பல புரியினும், அவை அவனிடம் தோய்வதில்லை, ஒட்டுடன் பற்றின்றி யுள்ளான் என்பதனை, "தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற சுடரே"[404] என்று இந்திரன்,

வாயிலாய்க் குறிப்பிடுகின்றார் கம்பர். இறைவன் எல்லா உயிர்களுக்குள்ளும் உயிராக இருப்பினும், சரீரத்தினுடைய தேய்தல் முதலிய நிலை மாறுபாடுகளோ, உயிர்களுடைய இன்ப துன்பங்களோ அவனைப் பொருந்துவதில்லை.

“உள்ளுளன் புறத்துளன்; ஒன்றும் நண்ணலன்”[405] என்பது கம்பர் வாசகம். “புலன் அலன்”[406] எனும் தொடரில் நம்மாழ்வார் இதனைக் குறிப்பதாக ஈடு கூறும். இது உபநிடதக் கருத்துமாகும்.

“நமாம் கர்மாணி லிம்பந்தி” (கீதை 4.14) என்னும் கீதை.

“பரமான்மா, சீவான்மா என்று கூறப்படும் இருவர், சிறந்த ஞான ரூபமான சிறகுகளை யுடையவர்களாய், ஒத்த குணங்களையுடைய வர்களாய், உடையவன் உடைமை என்ற உறவுகளையுடையவர்களாய், சரீரமான ஒரே மரத்தினைப் பற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவனான சீவான்மா, இருவினைப் பயன்களை நுகர்ந்து கொண்டிருக்கிறான்; மற்றொருவனாகிய பரமான்மா அப் பயனை நுகராதவனாய் விளங்கிக் கொண்டிருக்கிறான் என்பது மறைமொழி” என்னும் ஈடு.[407]

உலகியல் பாதியாதவன்

“தாமரைப் பூவும் முள்ளிப் பூவும் மலர்வதும், மாங்கனியும் எட்டிப் பழமும் பழுப்பதும், சூரிய வெப்பத்தாலும் ஒளியாலுமே. எனினும் அவற்றின் குணங் குறைகள் சூரியனைத் தொட மாட்டா.”

“அனைத்தையும் ஆத்மாவிலும், ஆத்மாவையே அனைத்திலும் காண்பவன் எதில் வேற்றுமை காண்பான்? எதை வெறுப்பான்? அவனுக்குத் துன்பமேது? மயக்கமேது?”[408] இவ்வுபநிடதக் கருத்தின் விளக்கமாக, முடிசூட்டும் செய்தியும், அது துறக்கும் செய்தியும் அறிவிக்கப்பட்டபோது இராமன் நடந்து கொண்ட பாங்கு சுட்டி நிற்கிறது:

“இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கெளிதோ? யாரும்
செப்பருங்குணத்து இராமன் திருமுகச்செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு, பின்பு அவ்வாசகம் உரைக்கக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா”[409]

பூக்களின் மலர்ச்சியும் வாடலும் சூரியக் கதிரால் ஆயினும், அம்மலர்ச்சியும் வாடலும் அக்கதிரவனைச் சிறிதும் பாதிப்பதில்லை என்னும் உபநிடதக் கருத்துக்கு இலக்கணமாகிறான் இராமபிரான். உலகு நிகழ்வுகள் இறைவனால் நிகழ்பவை; ஆனால் உலக நிகழ்வுகள் அவனைப்

பாதிப்பதில்லை என்னும் வைணவக் கோட்பாடு இராமன் வாழ்வில் இந்நிகழ்வால் தெளிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு, உலக நிகழ்வுகள் இறைவனைப் பாதியாமைக்கு ஈடு இவ்வாறு விளக்கம் கூறும்:

"ஆத்மாவிற்கு இன்ப துன்பங்கள் இல்லாமல் இருக்கவும், இச்சரீரத்தினுடைய சேர்க்கையால் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. அப்படி இறைவனுக்கும் இச்சரீரச் சேர்க்கையால் இன்ப துன்பங்கள் கூடாவோ எனின் கூடா. அதற்குக் காரணம் உட்புகுதற்கு உளதாய காரண விசேடம். ஆத்மா, கர்ம மடியாகப் பிரவேசிக்கின்றது. இறைவன் இவற்றுக்குள் திருவருள் காரணமாகப் பிரவேசிக்கின்றான்"[410] என்று, இறைவன் பாதிக்கப்படாமைக்கு அழகிய விளக்கம் கூறும் ஈடு. இதனை, மேலும் ஓர் உவமை வாயிலாய் அது விளக்கும். "சிறைக்கூடத்தில் சிறையனும் (கைதி) கிடந்தான்; அரசகுமாரனும் (சிறையதிகாரி) கிடந்தான். சிறையன் கர்ம மடியாகப் பிரவேசிக்கையாலே துக்கத்திற்கு ஏதுவாயிற்று. அரசகுமாரன் இச்சையாலே (மேற்பார்வையிடப்) பிரவேசிக்கையாலே போக ரூபமா யிருந்தது"[411]

"ஆத்மாவும் இறைவனும் ஒரு சரீரத்தைப் பற்றித் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுள் ஆத்மாவானது, கர்ம பலத்தை அனுபவிக்கிறது. இறைவன் கர்மபலத்தை அனுபவியாமல் மிக அதிகமாகப் பிரகாசிக்கிறான் என்பது மறைமொழி (இருக்கு வேதம்)"[412]

ஆதியந்தம் அற்றவன்

"முன்னிலன்; பின்னிலன்"[413] என்னும் கம்பர் கூற்றால் இறைவனின் ஆதியந்தம் அற்ற தன்மை சுட்டப்படுகிறது. "எல்லா உயிர்களின் உள்ளத்துறையும் ஆன்மா நானே. உயிர்களின் ஆதியும் நடுவும் இறுதியும் நானே"[414] எனும் கீதைக் கருத்தைத் தழுவியது இது.

வேள்வியின் நாயகன்

இறைவன் கீதையில், "நானே மந்திரம்; நானே வேள்வி; நானே ஆகுதி" (அஹம் மந்த்ர; அஹம் யக்ஞ; அஹம் ஆஜ்யம்.) (கீதை-9.16)

"அஹம் ஹி சர்வயக்ஞானம் போக்தா" எல்லா வேள்வியும் நானே; எல்லா வேள்வியின் அவியுணவும் நானே" (கீதை-9.24) என்கின்றான் கண்ணன்.

கம்பர் இக்கருத்துக்களை அப்படியே மொழி மாற்றம் செய்வது போல் பிரகலாதன் வாய்வழித் தருகிறார்.

"மந்திரம் மாதவம் என்னும் மாலைய;
தந்துறுபயன் இவை முறையின் சாற்றிய;
நந்தல் இல தெய்வம் ஆய்நல்கும் நான்மறை
அந்தம் இல்வேள்விமாட்டு அவிசும் ஆம் அவன்"

(இரணியன் வதை-65)

இறைவன் வேள்வியின் அவியுணவேற்கும் யக்ஞ புருடன். அவியுணவேற்று, கருதியவற்றை உதவியருள்கிறான்; "நவைதீர், அதவமாய் நறுநெய் உண்டு உலகில் அன்பர் கருதிற்று உதவுசேவடி அமலன்"[415] என்பது விராதன் மொழி. வேள்வி நாயகன் எனும் பொருள் தரும் 'யக்ஞ புக்' என்பது விஷ்ணு சகஸ்ர நாமச் சுலோகங்களுள் ஒன்று.[416]

குற்றங்களுக்கு எதிர்த் தட்டானவன்

இறைவன் எக்குற்றமும் தன்னைச் சாராதிருக்கும் தன்மையன் (ஹேயப்பிரத்ய நீகதை) என்று குற்றமில்லாமையையே இறைவனின் குணங்களில் ஒன்றாகக் கூறும் ஈடு[417]. இதனை நிகழ்ச்சி ஒன்றன் மூலம் விளக்குவார் கம்பர். கன்னி மாடத்தில் கண்டு தான் காதல் கொண்ட சீதை, ஒரு கால் முன்பே மணமானவளாயிருந்தால், பிறர் மனை விரும்பிய பெரும் பாவத்திற்குத் தான் ஆளாக நேரிடும் எனும் நினைவு இராமன் உள்ளத்தில் ஒரு கணம் தோன்றுகிறது. அந்நினைவிற்கு மறு நினைவும் உடனே அடுத்த கணம் அவன் உளத்தே மலர்கின்றது.

என் மனம் விரும்புவன நினைவன எல்லாம் நல்லனவாகவே இருக்கும்; குற்றம் உள்ளவற்றை என் மனம் என்றும் நினையாது; விரும்பாது. ஆகவே, "பாகுபோல் மொழிப் பைந்தொடி (சீதை) கன்னியே ஆகும்; இதற்கு ஐயம் உண்டாங் கொல்"[418] என இராமன் துணிவதாகக் கூறுவது, இறைவன் குற்றங்களுக்கு எதிர்த்தட்டானவன் என்னும் குணத்தை விளக்க எழுந்த நிகழ்ச்சியாகும். இக்கருத்து வான்மீகத்தில் கூறப்படவில்லை.

பரதனும் "தீயன இராமனே செய்யுமேல் அது தாய் செயல் அல்லவோ"[419] என்று துணிவதும் இறைவனுடைய குற்றங்கட்கு எதிர்த்தட்டாகும் குணத்தை விளக்குவதேயாம்.

"இதயம், தூயதானால், தெளிந்தபுத்தி தோன்றும்; புத்தி தெளிவுற்ற இடத்தில் தீயன செய்தல் இயலாது"[420] என்பது கீதைக் கருத்து. இதனால், சான்றோர்க்கு மனச்சான்றே பிரமாணம் என்பது விளங்குகிறது. மனம், வாக்கு, காயங்களில் ஒரு வழிப்பட்டிருத்தல் எனும் "ஆர்ஜவ" குண வெளிப்பாடாகவும் இந்நிகழ்ச்சி விளங்குகிறது.

உலகு ஈன்ற பேரொளி

இறைவன் உலகனைத்தையும் படைத்த பேரொளி வண்ணன். பிரபஞ்சத்திற் காணும் பேரொளியில் எல்லாம் சிறந்த பேரொளியாய் அவன் இலங்குகிறான். ''சோதி'' (3.11.73); ''சோதிச் சுடர்ப்பிழம்பு'' (3.11.75); ''சோதி வள்ளல்'' (6.600) பரஞ்சுடர் (6.4052) என்று கம்பர் பெருமான் பல இடங்களில் இறைவனின் சோதி வடிவைக் குறிப்பிட்டு மகிழ்வார். நம்மாழ்வார் கருத்தும் இது.

> பரஞ்சோதி நீ பரமாய் நின்இகழ்ந்து பின்மற்று ஓர்
> பரஞ்சோதி இன்மையின், படிஓவி நிகழ்கின்ற
> பரஞ்சோதி நின்னுள்ளே படர்உலகம் படைத்தஎம்
> பரஞ்சோதி! கோவிந்தா! பண்புஉரைக்க மாட்டேனே!
>
> - திருவாய்-3.1.3

''இறைவனாகிய விஷ்ணு சூரிய மண்டலத்தின் நடுவே சோதிச் சுடர்ப் பிழம்பாய், சூரிய நாராயணனாகத் திகழ்கிறான்'' என்று ரிக் வேதம் கூறும். இதனை,

> "சோதி நீ, சோதிச் சுடர்ப் பிழம்பும் நீ என்று
> வேதம் உரை செய்தது"

என்று கவந்தன் வாயிலும்,

> "இருள் காடு சாய்க்கும் மண்டலத்து உறையும் சோதி"

என்று வருணன் வாயிலும் வைத்து இயம்புகிறார் கவிச்சக்கரவர்த்தி.

தன்னைப் படைத்ததுவும் தான்

> "தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
> பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும்பெருமை
> உன்னைப் படைத்தாய் நீ என்றால், உயிர்படைப்பான்
> என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்தாமோ?"[422]

என்பது நரசிங்கத்தைப் பிரமன் துதிப்பதாகும். இதுவரையிலும் உலகில் தோன்றியிராத நரசிங்க வடிவத்தை நீ படைத்துக் கொண்டிருக்கிறாய். இச்செயல் உலகத் தோற்றத்திற்கு முன்னும் உன்னை நீயே படைத்துக் கொண்டாய் என்பதற்குப் போதிய சான்றாதாரம் ஆகிறது என்பது முதல் இரண்டடியின் கருத்து.

''விஷ்ணுவானவன் சூக்குமமான சித்து அசித்துக்களோடு கூடின தன்னைப் படைப்புக் காலத்தில் தூல சித்து அசித்துக்களோடு

கூடினவனாகப் படைக்கின்றான். காப்பாற்றப்படுகிற பொருளான தன்னைக் காப்பாற்றுகின்றான்; பிரளய காலத்தில் தான் அழிக்கப்படுகின்றான்; தான் அழிகின்றான்''[423] என்பது விஷ்ணு புராணம்.

''அவனே படைக்கப்படுகின்றான்; அவனே படைக்கின்றான் அவனே பாதுகாக்கின்றான்; அவனே பாதுகாக்கப்படுகின்றான். அவனே அழிக்கின்றான்; அவனே அழிக்கப்படுகின்றான்[422] என்பது பிரமாணம்.

''உயிர் பரம்பொருளின் கூறேயாகும்; அது பரம்பொருளின் வேறாகவும், ஒன்றாகவும் சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது''[425] என்னும் கருத்துக்கள் தன்னைப் படைத்ததுவும் தானே எனும் கூற்றுக்கு விளக்கமாய் அமைவதைக் காணலாம். இங்கு, இறைவனைப் படைத்தவன் யார்? எனும் பல்லாண்டு காலமாகப் பலர் கேட்டு வரும் கேள்விக்குக் கம்பர் தெளிவான விடையிறுத்திருப்பது காணலாம். அவனைப் படைத்தவனும் அவனே.

''தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாய்த் தான்தோன்றி
முனிமாப்பிரம்ம முதல் வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம்''

– திருவாய்-8.10.7

என்ற நம்மாழ்வார் கருத்து, கம்பரின் இக்கொள்கைக்கு மூலவேராகும்.

எல்லாம் வல்ல பரம்பொருளுக்குத் தன்னைத் தானே படைத்துக் கொள்ளும் திறன் மட்டும் வாய்க்காதோ? எல்லாம் வல்ல திறமைகளுள் தன்னைத்தானே படைத்துக் கொள்ளும் திறமையும் அடங்கும் என்பது கம்பர், நம்மாழ்வார் ஆகிய இரு பெருமக்கள் கருத்து ஆகிறது.

உயிர்க்குலத்தின் வித்து

''யச்சாபி ஸர்வபூதானாம் பீஜம்'' - ''எல்லா உயிர்களையும் தோற்றுவிக்கும் வித்து நானே'' (கீதை 10.39) என்பான் கீதையில் கண்ணன்.

''எழுத்தியல் நாளத்தின் எண்இலா வகை;
முழுத்தனி நான் முகன் முதல முற்று உயிர்
வழுத்து அரும்பொருட்டு அது''

என்ற கீதைக் கருத்தை அப்படியே தருகிறார் கம்பர் பெருமான். (பொருட்டு – விதை; பொருளைத் தருவது)

"யாவகை உலகமும் யாவரும் இல்லா
மேல் வரும் பெரும் பாழ்க் காலத்து
இரும் பொருட் கெல்லாம் அரும் பெறல் தனிவித்து
ஒரு தான் ஆகித்
தெய்வநான் முகக் கொழு முளை யீன்று
முக்கண் ஈசனொடு தேவுபல நுதலி
மூவுலகம் விளைத்த உந்தி மாயக் கடவுள்"

என்ற நம்மாழ்வாரின் திருவாசிரியம் (4) கம்பருக்கு மூலக்கருத்தை நல்கியது எனலாம்.

"வித்தின்றி விளைவதொன்றில்லை; வேந்த நின்
பித்தின்றி உணர்தியேல்"[426]

என்பார் கம்பர்.

இந்த உவமையால் மூலகாரணப் பொருளாகிய கடவுள் ஒருவரில்லாமல், இந்தப் பிரபஞ்சம் தோன்றாது என்று கூறுகிறான் பிரகலாதன்.

"நான் உலகம் முழுவதின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம்"[427]

"எல்லா உயிர்கட்கும் வித்து எதுவோ அது நான்; என்னை யன்றி இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்களாய் வாழ்வது ஒன்று மில்லை"[428] எனும் கீதைக் கருத்துக்கள் இங்கு பேசப்படுகின்றன. "தோன்றுரு எவையும் அம்முதல்"[429] என்பார் வேறிடத்தும். "ஆதிபகவன் முதற்றே உலகு"[430] எனும் திருக்குறள் கருத்தும் இதுவாதல் காணலாம்.

ஆகவே, அவன் உலகப் பொருள்கள் அனைத்திற்கும் மூலப்பொருள். மூலப்பொருளே அசைந்தால் அதனைச் சார்ந்துள்ள பொருள்கள் யாவும் அசைந்தே தீரும். நூலால் சேர்க்கப்பட்ட மாலையில், அந்நூல் அசைந்தால் மாலையில் உள்ள எல்லா மணிகளும் அசைந்தே தீரும். வீழ்ந்து கிடக்கும் சடாயுவைக் கண்ட இராமபிரானின் உள்ளம் வெகுளியால் நிலை திரிகிறது. உலகின் மூலகாரணப் பொருளாகிய இராமபிரானின் மனம் அசைகின்றபோது, ஊழிக்காலம் போல் உலகப் பொருள்கள் யாவும் அசைந்தன; மேல் இருப்பவை கீழாகவும், கீழிருப்பவை மேலாகவும் உலகம் நிலை திரிந்தது என்கிறார் கம்பர்.

"நீலமேனி அந்நெடியவன மனநிலை திரிய
மூல காரணத் தவனொடும் உலகெலாம் முற்றும்

காலம் ஆம் என, கடையிடு கணிக்க அரும் பொருள்கள்
மேல கீழுற, கீழனமேலுறும் வேலை"

(கம்ப. சடாயு - 75)

"வீரன் எண்ணரும் பொருள்கள் யாவும் என்பது தெரிந்தது"

(சடாயு - 75)

உலகுக் கெல்லாம் கலங்கலில் காரணம் (6.2.776)

என்பவையும் இக்கருத்தேந்தி நிற்கும் கம்பர் பெருமானின் காவிய வரிகள்.

வாழ்நாளும், வாழ்பொருளும் அளிப்பவன்

வினைவசத்தால் பிறக்கும் உயிர்கட்குத் தநு கரண புவன போகங்களை இறைவனே நல்குகின்றான்; அவ்வவற்றின் பரிபாகத்திற்கேற்ப அவை வேண்டுவனவற்றை அவன் அளிக்கின்றான்; அவற்றைப் பெற்று உலகில் வாழும் நாட்களையும் அவனே அளிக்கின்றான். அவனுக்கு எப்பொருளும் வேண்டியதில்லை. வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கின்றான். ஊனும், உயிருமாய் உயிர்க்குள் உயிராய், உணர்வாய் ஆணாய்ப் பெண்ணாய், அலியாய் நிற்பான் அவன். இக்கருத்துக்களை,

"வாணாள் அளித்தி; முடியாமல் நீதிவருநாளும் நிற்றி; மறையோய்
பேணாய் உனக்கோர் பொருள்; வேண்டுமென்று பெறுவான் அளித்தி;
பிழையோய்
ஊணாய் உயிர்க்கும் உயிராகிநிற்றி; உணர்வாய பெண்ணின் உருவாய்
ஆணாதி மற்றும் அலியாதி யார் இவ்வதி ரேக மாயை அறிவார்?"[431]

எனும் பாடலால் உணர்த்துகின்றார் கம்பர். எனக்கு மூவுலகத்திலும் யாதொரு கடமையும் இல்லை. நான் பெற்றிராத பேறும் இல்லை. எனினும் நான் தொழில் இயற்றுகிறேன்" எனும் கீதையின் (3.2) கருத்தை இங்கு மொழிகிறார் கம்பர்.

எண்ணிலா வடிவினன்

இறைவனுக்கு வடிவமில்லை என்னும் கருத்தை மறுக்கும் வைணவம்.[431அ] அவனுக்கு எண்ணற்ற வடிவங்கள் உண்டு என்பது வைணவ சித்தாந்தம் "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவொடு விரைந்து சேறலின் 'மலர்மிசை ஏகினான்' (திருக்குறள் 3)" என்பார் பரிமேலழகரும். "தமர்உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே" என்பார் முதல் ஆழ்வாரும்.

கம்பரும் எண்ண முடியாப் பொருள்களுள் ஒன்றாக ஈசன் எடுக்கும் வடிவங்களைச் சேர்த்துள்ளார்:

ஈசன் மேனியை, ஈரைந்து திசைகளை ஈண்டு, இவ்
ஆசில் சேனையை, ஐம்பெரும் பூதத்தை, அறிவை,
பேசும், பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாசமாலையாய்! யாவரே முடிவெண்ண வல்லார்

(கம்ப. 4.12.36)

இக்கருத்தினையே,

"ஒன்றாகி மூலத்து, உருவம் பலவாகி"

(3.2.30)

என்பார் சரபங்கர் வாக்கிலும்.

"ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன்"

(திருவாய் 1.3.7)

என்னும் நம்மாழ்வார் கருத்தினை இங்கு அடியொற்றி உள்ளார் கம்பர் எனலாம்.

"ஆதிகாலத்தில் ஒன்றே யாகி யிருந்தது, பலவாகக் கடவேன்" என்று பரம் பொருள் தன் திருவுள்ளத்தில் நினைத்து, பலவாகியது எனும் உபநிடதக் கருத்தே "ஒன்றாகி மூலத்து, உருவம் பலவாகி" எனும் சரபங்கர் வாக்காகக் கம்பரால் வெளிப்படுத்தப் பட்டிருத்தலைக் காணலாம்.

அனைத்தும் அவன்

ஆன்மா கண்ணிற் காண இயலாதது. ஆதலால், அதற்குப் பெயரிடல் இயலாது. கண்ணன், குமரன் முதலிய பெயர்கள் உயிர்களுக்காகாமல் அவ்உயிர்கள் தாங்கிய உடல்களைச் சுட்டுவதைக் காணலாம். எனினும் அப்பெயர்கள் உடலை மட்டும் குறிக்காமல் உடம்பிலுள்ள உயிரையும் சேர்த்து வழங்கி வருவதைக் கூர்ந்து நோக்கின் உணரலாம்.

இவ்வாறே, மண், விண், நீர், காலம் முதலான அறிவற்ற அசேதனப் பொருள்களைச் சுட்டும் பெயர்களும், கண்ணன், குமரன் முதலிய சேதனப் பொருள்களைச் சுட்டும் பெயர்களும், அவற்றுக்குள் ஆன்மாவாய் இலங்கும் இறைவனாகிய பரம்பொருளையே சுட்டுகின்றன என்பது வைணவ

நெறி. இவ்வாறு நோக்குகையில், உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் இறை வடிவமே ஆகின்றன.

இந்தக் கருத்து, உலக சமத்துவத்தையும், உயர்வு தாழ்வற்ற சமுதாயத்துக்கு அடிப்படையையும் காட்டுகின்றது. இது வைணவத்துக்குரிய தனிச் சிறப்புகளில் ஒன்று. இதனை, "நீயாதி பர(ம்)பரமும் நின்னவே யுலகங்கள்"[432] என்று கம்பர் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார். இதனை நம்மாழ்வார்,

"நாம், அவன் இவன், அது இது உது எது
தாம் அவர் இவர் உவர், அவள் இவள் உவள் எவள்
வீம் அவை இவை உவை இவை நலம் தீங்கு அவை
ஆம் அவை ஆயவை ஆய்நின்ற பரரே"[433]

எனும் பாசுரத்தில் அறுதியிடுவர்.

பரம் பொருள்

எவ்வுலகமும் பொருள்களால் நிரம்பியவை. அவற்றில் உள்ள எல்லாப் பொருளிலும் சிறந்த பொருள் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா? அது எது? அப்பொருள் தான் இறையெனும் பொருள்.

தனக்கு மேலும் ஒருபொருள் உள்ளது எனக் கொள்ளும் பொருள் இறைத்தன்மைக்குரியது ஆகாது. பரம் எனும் சொல் ஒப்பு, உயர்வு அற்றது என்னும் பொருள் தருவது. உச்சத்தரம் (Superlative degree) குறிக்கும் சொல் அது.

"மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்" என்பது பரம்பொருள் என்பதற்குக் கம்பர் தரும் இனிய விளக்கம்.

அந்தப் பரம்பொருள் ஆகிய இறைவன் ஒருவனே என்பது வேதம் கண்ட முடிபு என்று கம்பர் கண்டு கூறுகிறார்.

"முன்பு பின்பு இருபுடையெனும் குணிப்பரு முறைமைத்
தன் பெருந்தன்மை தாம்தெரி மறைகளின் தலைகள்
மன்பெரும் பரமார்த்தம் என்றுரைக்கின்ற மாற்றம்
அன்ப! நின்னையல்லால் மற்று இங்கு யாரையும் அறையா"[434]

சித்து ஆகிய உயர்திணையுயிர்களில் உயர்ந்த பொருள் ஆனவன் இறைவன் எனக்குறித்த கவிஞர், அஃறிணைப் பொருள்களாகிய அசித்துப் பொருள்களிலும் அவனே உயர் பொருள் என்கின்றார்.

"எனக்கும் எண்வகை ஒருவற்கும், இமையவர்க்கிறைவன்
தனக்கும், பல்பெருமுனிவர்க்கும் உயிருடன் தழீஇய
அனைத்தினுக்கும் நீயேபரம் என்பதை அறிந்தார்
வினைத்துவக்கு உடைவீட்டருந் தளை நின்று மீள்வார்"[435]

சடப்பொருள்கள், சித்தோடு இணைந்து கூடியிருககிற பொருள்களே ஆதலால், அவையனைத்தும் அடங்க உயிருடன் தழீஇய அனைத்தினுக்கும் அவனே பரம்பொருள் என அறுதியிட்டமை காண்க.

ஒருவரை ஒரு பெயர் சொல்லிக் கூப்பிட்டால், அவர் அப்பெயருக்கு உண்மையில் உரியவர் ஆனால், கூப்பிட்டவரிடம் ஏன் என்று கேட்பது இயல்பு. அப்போது, அப்பெயர் அவருக்கே உரியது என்பதும் கேட்டவனுக்குத் தெளிவாவதும் இயல்பு. கசேந்திரன் என்னும் யானை, "அடுத்த பெருந்தனி மூலத்து அரும்பரமே பரமே" என்று கூப்பிட்டது. பரமே என்று கூப்பிட்ட குரலுக்கு, ஏன்?" என்று பரம(பத)நாதன் வந்து கேட்டான். எனவே உலகின் மூலப் பரம்பொருள் இறைவன் ஆகிய இவனே என்பது தெளிவாயிற்று.[436]

"கடுத்த கராம் கதுவ, நிமிர் கையெடுத்து, மெய்கலங்கி,
உடுத்ததிசை அனைத்தினும் சென்று ஒலிகொள்ள, உறுதுயரால்
அடுத்த பெருந் தனிமூலத்து அரும்பரமே, பரமே!" என்று
எடுத்த ஒரு வாரணம் அழைப்ப, நீயோ அன்று ஏன்? என்றாய்.
(கம்ப. 3.1.49)

இவ்வாறாக, கம்பர் பெருமான் கண்டு காட்டும் இறையியல்புகள் அத்தனையும், வைணவ சித்தாந்தப் பேருலகில் வடிவம் பெற்றுள்ளவையே என்பதனை இவ்வியலால் அறிந்தோம்.

இனி உயிர், நெறி, தடை, பேறு ஆகியவற்றின் இயல்புகள் பற்றிக் கம்பர் பெருமானாரும் வைணவ சித்தாந்தப் பேருலகும் ஒருங்கிணைந்து கையிணைத்துச் செல்லும் நேர்த்தியை அடுத்த இயல்களில் காண்போம்.

3

உயிர் இயல்பு

உயிர்ப்படைப்பின் காரணம்

இறைவன் உயிர்களை உலகில் தோற்றுவிப்பதற்கான காரணம், உயிர்கள் உய்ய வேண்டும்; உயர்வு பெற வேண்டும் என்னும் பரம கருணையே.

"இரக்கம் வந்து எதிர்ந்து காலத்து, உலகெலாம் ஈன்று மீளக் கரக்கும் நாயகன்"[1] என்று உலகு உயிர்த் தோற்றங்களுக்குக் காரணம் கூறுகின்றார் கம்பர். சாங்கியர் கூறுவதுபோல், உலகு. உயிர்த்தோற்றங்களுக்கு, அறிவற்ற மூலப்பகுதியும் புருடனுமே காரணமாம்[1அ] எனும் கூற்றை மறுத்து, இறைவனின் பரம கருணையே காரணமாம் எனும் வைணவக் கோட்பாடு, இங்கு ஐயத்திற்கிடமின்றி நிறுவப் பெறுகிறது. (உலகு, உயிர்த்தோற்றம் பற்றிய சாங்கியக் கருத்துக்களையும், கம்பர் கருத்துக்களையும் பிற்சேர்க்கையிற் காணலாகும்)

"அந்தப் பரமபுருடன் தன்னந் தனியனாய் இருந்த காலத்தில், மகிழ்ச்சி கொண்டான் இலன்"[2] என்பது மகோப நிடத வாக்கியம். இறைவன் உயிர்களை ஒடுக்கி இருக்கும் இலயகாலத்தில் எல்லாப் பொருள்களும் தத்தமது பெயரையும், உருவத்தையும் இழந்து, பரம் பொருளினுடைய பெயரும் உருவமுமேயாய், அறிவில் பொருளாய்க் கிடந்தாற்போலே, சர்வேசுவரனான தானும் இவற்றைப் பிரிந்து, அசித்தைப் போன்றவனான தன்மையில் இருப்பான்"[3] என்பார் நம்பிள்ளை. "நான் (உருவோடு) இல்லாத

அன்று, ஒரு காரணமும் இல்லாமலேயே என்னை உண்டாக்கினை நீ"[4] என்னும் ஈடு.

இவ்வாறு, இறைவன் உயிர்கள் மாட்டுக் கொள்ளும் இரக்கத்தாலேயே உலகும் உயிரும் தோற்றம் கொள்கின்றன; ஒடுக்கம் கொள்கின்றன என்னும் வைணவத்தின் கருத்து வேத அடிப்படை கொண்டது.

"உலகத்தைக் கடவுள் ஏன் படைக்கிறான்? ஏன் அழிக்கிறான்? என்ற வினாவிற்கு, இறைவனின் விளையாட்டு என்றும், இறைவனின் பொழுதுபோக்கு என்றும் சிலர் விடையிறுப்பர். இவ்விரு கருத்துக்களையும் எடுத்துக் கூறிய உபநிடதம், இரண்டையும் மறுத்துப் படைப்பதும் அழிப்பதும் அவனுக்கு இயல்பான ஒன்று என்று கூறியது. தமிழ்நாட்டு வைணவ ஆசாரியர்கள் இதற்கு ஒரு படி மேல் போயினர். கருணையின் உருவாகவே உள்ள இறைவன் செய்யும் எச்செயலும் கருணையின் செயலாகத்தான் இருக்க முடியும்? ஆகவே, படைப்பதோ, காப்பதோ, அவன் கருணையினால்தான்"[4அ] என்பார் அக்னி ஹோத்திரம் தாதாச்சாரியார்.

இந்தத் தமிழ்நாட்டு வைணவ ஆசாரியர்கள் கருத்தை, கம்பர் அப்படியே ஏற்றுக் கொண்டவர் என்பது "இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகெலாம் ஈன்று மீளக் கரக்கும் நாயகன்"[4ஆ] என்றதனால் தெளிவாகிறது.

உயிர்கள் ஞான மயமானவை

உயிர்கள் ஆதியில் ஞானமயமானவை. இடையில் வந்த பேதைமையின் மயக்கால் அவை மாசடைகின்றன. பம்பை நீர் தூயதாயினும் இடையில் வந்த பாசத்தின் சேர்க்கையால் தூய்மை கெட்டுத் தெரிகிறது[5] என்னும் உவமையால் இது விளக்கப்படுகிறது.

ஓர்ந்துணர்ந்து என்றும் உள்ளதாகிய பரம்பொருளை உணராதவர்கள், விபரீத ஞானத்தால் இடர்ப்படுவார்கள். பம்பை நீர், தனக்கென ஒருநிறமில்லாமல், "சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால், ஓர்ந்துணர்வில்லவர் உள்ளம் போன்றிருந்தது"[6] என்பது கம்பர் வாக்கு.

பேதைமையால் வரும் பிறப்பு

ஓர்த்து உள்ளம், உள்ளதாகிய மெய்ப்பொருளை யுணரின் பிறப்பில்லை[7] என்னும் திருக்குறள். பிறப்பு, பேதைமை என்னும் விபரீத அறிவால் தொடர்கிறது. "பேதைமைத்தாய் வரும் பிறப்பு"[8] என்று இதனால் கம்பர் குறிப்பிடுகிறார்.

முன்பே முடிவானவை பிறப்பும் இறப்பும்

உயிர்களின் பிறப்பும் இறப்பும், பிறப்பதற்கு முன்பே, அதன் மூல வினைகளால் முடிவு செய்யப்பட்டுள்ள வண்ணமே நிகழ்கின்றன. "தோன்றலும் இறத்தல் தானும், துகள்அறத் துணிந்து நோக்கின், மூன்றுலகத்தினோர்க்கும் மூலத்தே முடிந்ததன்றே"[9] என்பது கவிஞரின் தெளிந்த கருத்தாகும். (மூலம் - சஞ்சிதவினை)

உயிரின் அடிப்படை இயல்புகள் இரண்டு

வைணவம் உயிர்களின் இயல்புகளில் மிகவும் வற்புறுத்திப் பேசுபவை அடிமைத்திறமும், தற்சுதந்திரமின்மையும் (பாரதந்திரியமும்) ஆகும்.

இவை இரண்டும் இராமாயணத்தில் முறையே இலக்குவனாலும் சீதையாலும் உணர்த்தப்படுகின்றன. அடிமைத்திறம் (சேஷத்துவம்) ஆவது, இறைவன் தன் விருப்பப்படி செய்யும் காரியங்களுக்கு உயிர்கள் தகுதியாக இருத்தல் ஆகும்.

பாரதந்திரியமாவது, இறைவன் தன் விருப்பின்படி செய்யும் காரியங்களுக்கு உயிர்கள் பயன்படுதல் ஆகும். அதாவது தற்சுதந்திரம் அறுதல் ஆகும்.[10] ஆகவே, உயிர்கள் தம் விருப்பப்படிச் செயல் புரியும் சுதந்திரம் அற்றவைகள். இறைவன் மட்டுமே தன் விருப்பப்படி செயல் புரியும் சுதந்திரம் உள்ளவன்.

உயிர் ஞானமும் ஆனந்தமும் உடையது. இவை மட்டும் ஆன்மாவின் இயல்புகள் எனக் கொண்டால், இவையிரண்டும் இறைவனுக்கும் உரியவை. ஆகவே, ஆன்மாவின் தனித்துவத்தை அவை சுட்டா. 'அடிமைத்தன்மை' எனும் இயல்பை மட்டும் கொண்டால் இத்தன்மை அறிவற்ற அசித்துக்கும் உரியது. ஆதலால், ஆன்மாவின் தனித்தன்மைக்கு இதுவும் பொருந்தாது.

ஆதலால், ஞான, ஆனந்தத்துடன் கூடிய அடிமைத் தன்மையே ஆன்மாவின் இயல்பு என்ற விளக்கமே பொருத்த முடையது என்று அண்ணங்காராச்சாரியார் (ஸ்ரீ வசன பூஷண தாத்பர்ய சாரம்) குறிப்பிடுவர்.

> **"செய்த்தலை எழுநாற்றுப் போல் அவன் செய்வன**
> **செய்து கொள்ள" என்று இருக்கை**
>
> (பெரியாழ் 3.7.9)

உயிர்களின் இயல்பாதல் பெரியாழ்வாரின் இப்பாசுரத்தில் தெளிவாம். எங்கு நடுவானோ? எங்கு அறுப்பானோ? அது நெல்லின் விருப்பின்படி நடப்பது அன்று; உழவன் விருப்பம் அது; இறைவன் உழவன்.

"பரதனை, வான் தொடர் பேரரசு ஆண்ட மன்னன்" என்று மீட்சிப் படலத்தில் கம்பர் குறிப்பிடுகின்றார். அதற்கு உரையாக, பரம பதத்தை யடைதற்குச் சுலப மார்க்கமாகிய (பாரதந்திரிய மென்னும்) பெரிய அரசாண்ட அரசன் என்று பொருள் கூறலாம் எனும் வை.கு.கோ உரை இங்கு நினையத்தக்கது. இதனால் இறைவன் அருகே கொண்டு சேர்ப்பது நம் சுதந்திரம் அன்று, நம் அடிமைப் பண்பே அவனிடம் சேர்க்க வல்லது என்பது புலனாம்.

இலக்குவன் - அடிமைத்திறம்

"நார்உள தனுஉளாய்! நானும் சீதையும்
யார்உளர் எனின் உளேம்?"[11]

எனத் தன் தற்சுதந்திரமின்மையைக் குறிப்பிட்டு, அடிமை செய்ய இராமனுடன் புறப்பட்டான் இலக்குவன். கிங்கரர் (வேலையாள்) போல் தற்சுதந்திரம் அற்றுப் பணிபுரிதலின் பெயர் கைங்கரியம். "இளைய பெருமாளைப் போலே கைங்கரிய லட்சுமி உடையவர்கள் ஆய்ப்பாடிப் பெண்கள்"[12] என்னும் திருப்பாவை உரை.

"தானும் ஓர் அரச குமாரனாயிருந்தும், அடிமை செய்வது இழிதொழில் என்று நினையாமல், "நான் எல்லா அடிமையும் செய்வேன்" என்று, "இவன் தமயனுக்கு அடிமை செய்தபடி யென்" என்று உலகமெல்லாம் ஆச்சரியப்படும்படியான கீர்த்தியை உடையவர் (இலக்குவர்)"[13] என்னும் தனிச் சுலோக வியாக்கியானம்.

"தம்பியென்னும் படிக்கு அன்று; அடியாரின் ஏவல் செய்தி"[14] எனக் கம்பர் இவ்வடிமைத் திறம் பற்றிச் சுமித்திரை வாயிலாய்க் கூறுவார். "தாவில் எம்பி கை சாலை சமைத்தன!"[15] என இலக்குவன் அடிமைத்திறன் பற்றி இராமனும் வியப்பான்.

"பயிலும் காலம் பத்தொரு நாலும் படர்கானத்து
அயில்கின்றேனுக்கு ஆவன நல்கி, அயிலாதாய்!
வெயில் என்றுன்னாய், நின்று, தளர்ந்தே மெலிவெய்தித்,
துயில்கின்றாயோ?"[16]

என இலக்குவன் உண்ணாமல் உறங்காமல், வெயிலால் உலர்ந்து மெலிந்து புரிந்த கைங்கரியம் இராமன் திருவாயால் புகழப்படுகிறது.

"மெல்லடி இளையவன் வருட வீரன் (இராமன்) எல்லையில் துயரொடு இருந்து சாய்ந்தனன்"[17] என்று இலக்குவன் இராமன் பாதம் வருடிய கைங்கரியம் குறிப்பிடப்படுகிறது. திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டும்

மெல்லடி வருடலை, அவள் இல்லாதபோது, இலக்குவன் புரிந்தான் என்பதனால், இலக்குவனையும் இலக்குமியையும் கைங்கரியம் புரிவதில் ஒன்றாக்கி, இலக்குவனுக்குக் 'கைங்கரிய லட்சுமி'' எனும் பெயரீந்து வைணவ உலகம் மகிழ்கிறது. இலக்குவன் என்பதன் பெண்பால் இலக்குமி என்று கருதுமாறு, இலக்குவனின் இறை கைங்கரியம் என்னும் அடிமைத்திறம் இலங்குகின்றது.

"இந்த நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல்செய் அடியன் நான்"[18] என்றே கிட்கிந்தையில் தன்னைப் பற்றிக் கூறுகிறான் அவன். தம்பி என்று கூறவில்லை. "தம்பி என்னும் படிக்கன்று; அடியாரின் ஏவல் செய்தி" எனும் சுமித்திரை கூற்று மெய்ப்பிக்கப்படுகிறது. "அடிமை செய்யப் பெறாவிடில் உயிர் தரியேன்"[19] என்பது பக்குவம் பெற்ற உயிர்களின் நிலை.

"நீருள எனின் உள மீனும் நீலமும்
யாருளர் எனின் உளேம் யானும் சீதையும்"[19அ]

என்பதனால் இலக்குவனின் இந்நிலையால் பிரியில் தரியாமை உணர்த்தப் படுகிறது.

"வந்தனன் அடியேனன், வருந்தல் வாழிநின்
அந்தமில் உள்ளம்"[20]

என்று தலைவன் உள்ளம் வருந்தாதவாறு கைங்கரியம் புரியும் இலக்குவனின் அடிமைத்திறம் உணர்த்தப்படுகிறது. அவன் புரிந்த அடிமைகளைப் பட்டியலிட்டு நெகிழுவார் பெரியவாச்சான் பிள்ளை:

"வேட்டையாடப் போகும் இடத்தில் கையும் வில்லும் கொண்டு அடிமை செய்தும், காயும் கிழங்கும் வெட்டுமிடத்தில் மண்வெட்டியும் கூடையும் சுமந்து அடிமை செய்தும், பரண சாலையைக் கட்டும் போதும், மலைத் தாழ்வரைகளிலே சலக்கிரீடை பண்ணும்போதும், மரவுரியைப் பிழிந்து உலர்த்தியும், இராட்சதர்களுடன் யுத்தம் செய்யும்போது பிராட்டிக்குக் காவலாய் இருந்தும், இராமனும் பிராட்டியும் தூங்கும்போது, துட்டப் பிராணிகளும் துட்ட சுபாவமுள்ள இராட்சதர்களும் அணுகாதபடி கையில் வில் கொண்டு காத்தும் பணி புரிந்தான் இலக்குவன்"[21]

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமைசெய்ய வேண்டும்"[21அ]

என்னும் வைணவ நெறிக்கு இலக்கணமாய் "மனையும் வாழ்வும் உறக்கமும் மாற்றிய"[21ஆ] இலக்குவன் வாழ்வு அமைகிறது.

தன் உயிரைப் புறக்கணித்துப் பணிபுரிந்தவன் இலக்குவன். காளிந்தி நதியைக் கடக்க, மாணைக் கொடியால் தெப்பம் இயற்றி, இராமனையும் சீதையையும் தெப்பத்தின் மேல் அமாத்தி, தெப்பத்தைத் தள்ளியவாறே அந் நெடுநதியை இரு கையால் நீந்திக் கடக்கிறான் இளையவன்.[21இ]

அவன் சாலை சமைத்த நேர்த்தி, "என்று கற்றனை நீ இது போல்?"[22] என்று இராமனை வினாவ வைத்தது. இராமனையே, 'துன்று தாமரைக் கண்பனி சேரா' வைக்கிறது இலக்குவனின் கைங்கரியம். இராமன் உறங்க மெல்லிய தளிர்களைப் பரப்பி வைக்கும் அந்தக் கரங்கள்.[23]

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு

கைம்மாறு கருதாது இலக்குவன் புரிந்த இத்துணை கைங்கரியங் களையும் எண்ணி எண்ணி ஏங்கிய இராமன், அண்ணனுக்குத் தம்பி பணிபுரிவது இந்நாட்டு மரபாதலால், மறுமையில் அவன் அண்ணனாகத் தான் தம்பியாகப் பிறக்க வேண்டும்; பிறந்து இக்கைங்கரியங்களை இராமனாகிய தான் இலக்குவனுக்குத் திரும்பிச் செலுத்த வேண்டும் என்று இராமன் கூறுமளவுக்கு இலக்குவன் அடிமைத்திறம் உயர்ந்தோங்கி நிற்கிறது.[24]

"அறப்பால் உளதேல் அவன் முன்னவனாய்ப்
பிறப்பால் உறின், வந்து பிறக்க"[24அ]

இராமபிரானின் இந்த வேண்டலின் விளைவே கண்ணனாகப் பிறந்த அடுத்த அவதாரத்தில் பலராமன் முன் பிறக்கக் கண்ணன் பின் பிறந்தான். படுக்கையை முன் அனுப்பிவிட்டுப் படுக்கைக்குரியான் பின் போதல் போல என்று உவமித்து மகிழ்வார்கள் ஆசாரியர்கள்.

எனவே, இறைவனுக்கு உயிர்கள் புரியும் கைங்கரியத்திற்கு எல்லை நிலம் ஆகிறான் இலக்குவன்.

மீட்சிப் படலத்தில் தசரதன் இலக்குவனைத் தழுவி, மண் திணிவாய்க் கிடந்த இலக்குவனின் சடைக்கற்றையைப் பார்த்துத் தயரதன், தன் கண்ணீர் வெள்ளத்தால் கழுவி விட்டு உரைப்பான். "இராம சேவையால், உன் பிறவியை நீக்கிக் கொண்டாய்; இராமனுக்கு என் ஆகுமோ என்று நினைத்து நினைத்து என் நெஞ்சில் கிடந்த என்றும் ஆறாத பெரும் புண்ணை, நீ இராமனுடன் உடன் தொடர்ந்ததனால் மருந்தாகி ஆற்றினாய்"[25] என்று போற்றுவான்.

"தாழ் இருஞ்சடைகள் தாங்கிப் பூழிவெங் கானம் நண்ணு"[26] என்று கைகேயி இட்ட ஆணையால் சடைமுடி தாங்கியவன் இராமன்.

இளையபெருமாளுக்குச் சடைக்கற்றை தாங்கு என்றெல்லாம் ஆணை எதுவும் இல்லை. இராமன் மீதுற்ற பரிவால், சேவை செய்ய எழுந்த துடிப்பால், இலக்குவன் தானாகச் சடைமுடி தரித்தவன். அது தியாகச் சடை இதனை நினைந்து தசரதன் இலக்குவனின் அந்தத் தியாகச் சடைக்கற்றையைக் கண்ணீரால் நீராட்டினான்.

இலக்குவன், சேவைக்குப் பொருள் கூறி, சேவையினால் பெறலரும் பேறெல்லாம் உயிர்கள் பெறல் கூடும் என்பதற்குச் சான்றாக நிற்பவன்.

"கைதவம் இயற்றி, யாண்டும் கழிபெருங் கணக்கில் தீமை
வைகலும் புரிந்துளாரும் வான்உயர்நிலையை, வள்ளல்
எய்தவர் பெறுவர்; என்றால் இணையடி இறைஞ்சி, ஏவல்
செய்தவர் பெறுவது ஐயா, செப்பலாம் சீர்மைத்தாமோ?"[27]

என்னும் வாலி கூற்று, இலக்குவனை நினைந்து கூறியதாகவே தோன்றுகிறது.

"அநுட்டிப் பார் இல்லாமையாலே, இறைவனுக்கும் உயிர்களுக்கும்

இடையே உள்ள இந்த ஆண்டான்-அடிமை நிலையை

இறைவனே மறந்து கைவிட்டிருக்க,

"உன் தன்னோடு உற்றோமே ஆடுவோம்;
உனக்கே நாம் ஆட் செய்வோம்"

என்று அவனுக்கும் ஓதுவித்தாள் ஆண்டாள்.

என்று இந்த அடிமைத்திறத்தைச் சிறப்பிக்கும் திருப்பாவை வியாக்கியானம்.

சனகியின் தற்சுதந்திரம் இன்மை (பார தந்திரியம்)

உயிர்களின் அடிப்படைப் பண்புகள் இரண்டில் ஒன்றாகிய பார தந்திரியம் என்பது, தற்சுதந்திரமின்றி அவனிட்ட வழக்காயிருத்தலைக் குறிக்கும்.

சீதை, அசோக வனத்தில், பெருந்துயருற்று, "சுருதி நாயகன் வரட்டும்"[28] என்று, தான் எச்செயலும் புரியாது, அவன் வருகை நோக்கியே காத்திருந்தாள். தனக்கேதும் ஆற்றலின்மை காரணமாக, அவள் செயலிழந்து இருக்கவில்லை. "எல்லை நீத்த உலகங்கள் யாவையும் சொல்லினாற் சுடும்"[28அ] ஆற்றல் பெற்றவள் அவள்.

தான் தன் சொல்லால் இலங்கையை எரித்து மீண்டிருந்தால், அது சீவர்கள் தற்சுதந்திரமுடையவர்கள் என்றாகி விடும். அவனிட்ட

வழக்காயிருக்கும் பார தந்திரியப் பண்பை மீறிய செயலாகும் அது. ஆகவே, ''தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்''[29] என்று சீதை பொறுமை பூண்டாள்.

"உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்"

என்பார் நம்மாழ்வார் (திருவாய் 5.8.3)

இது, உயிர்கள் அவனிட்ட வழக்காயிருத்தல் எனும் பார தந்திரியப் பண்பை உணர்த்துவதாகும்[29அ] என்று கருதுவார் நம்பிள்ளை.

இறைவனும் உயிர்களும்

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாட்டை வார்த்தா மாலை என்னும் வைணவ நூல் கீழ்வருமாறு வகைப்படுத்தும்:

''ஈசுவரன் காப்பவனாயிருக்கும்; ஆண்டானாய் இருக்கும்; காரணமாயிருக்கும்; சரீரியாய் இருக்கும்; தாரக (தாங்குபவன்)னாயிருக்கும்; வியாபகனாயிருக்கும்; நியமிப்பவனாயிருக்கும், சுதந்திரனாயிருக்கும், சரண்யனாயிருக்கும்; சேவிக்க வல்லனாயிருக்கும்; பல சொல்லி என்? நாயகனாயிருக்கும்.

''உயிரோ காக்கப்படுவதாயிருக்கும்; அடிமையாயிருக்கும்; காரியமாயிருக்கும்; சரீரமாயிருக்கும்; தரிக்கப்படுபொருளாயிருக்கும்; வியாப்பிய மாயிருக்கும்; நியமிக்கப்படுவதாயிருக்கும்; சுதந்திரமில்லாத பரதந்திரியமாயிருக்கும்; சரணாகதனாயிருக்கும்; சேவகனாயிருக்கும்; பல சொல்லி ஏன்? அடியனாயிருக்கும்''[30]

''நாயினேன் உன் பின், தனி நின்றபோதும், அடித்தொழில் புரிவேன்''[31] என்னும் அநுமன் வாக்கால், உயிர்களின் பிரியாது புரியும் அடிமைத்திறம் தெளிவுறச் சுட்டப்படுகிறது.

உயிர் காக்கப்படுவதாயிருக்கும் என்பதனை, ''வையம் ஏழும் ஓர் ஏழும் ஆருயிரோடு வழங்கும்''[32] என்பதனால் அறியலாம்.

''உயிர் அடிமையாயிருக்கும்'' என்பதனை, ''ஆளாற்றல் காட்டேனேல் அடியேனாய் முடியேனே''[32அ], ''நடித்துவாழ் தகையதோ அடிமைதான்''[33] என்பன போன்ற கம்பர் தொடர்களால் அறியலாம்.

''உயிர் காரியமாயிருக்கும்'' என்பதனால், உலக காரணன் இறைவன்; அவன் ஆக்கிய காரியம் உலகம் என்பதனை, ''உலகம் யாவையும் தாம்உள வாக்காலும்''34 என்பதனால் கம்பர் உணர்த்துவார்.

“உயிர் சரீரமாயிருக்கும் என்பதனால், அவன் சரீரியாகிறான். “வையம் ஏழும் ஓர் ஏழும் ஆர் உயிரோடு கூட வழங்கும் அம் மெய்யன்”[35] என்பதனால் உயிர் சரீரம்; அவன் சரீரி என்பது தெளிவுற உணர்த்தப்படுகிறது. அவன் தாரகன் ஆகிறான். “வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன்”[36] என்பதனால் உலகமும் உயிரும் தாங்கப்படுபவை; அவன்தாங்குபவன் என்பது உணர்த்தப்படுகிறது. “உயிர் எலாம் உறையும் ஓர் உடம்பும் ஆயினான்” என்பதனால் அவன் தாங்கி நிற்கும் தாரகன் எனத் தெளிவுபட உணர்த்தியுள்ளார்.

“உயிர் வியாப்பியமாயிருக்கும்” என்பதனால், அவன் வியாபக (எங்கும் நிறைபவ) னாயிருக்கிறான். இறைவன் நிறைபவன்; உயிர் அவன் நிறையப் படுபொருள் என்பதனை, “ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறனும் உளன்”[37] என்பதனால் உணர்த்துவார்.

“உயிர் நியமிக்கப் படுவதா யிருக்கும்” என்பதனை, “பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம் கலங்குவது எவரைக் கண்டால்”[38] என்பதனால் அவனே அனைத்தையும் நியமிப்பவன்; உலகமும் உயிர்களும் அவனால் நியமிக்கப்படுபவை என்பது போதரும்.

உயிர் பரதந்திரியமாயிருக்கும் என்பது,

“காட்டுவாய் உலகம்; காட்டிக்காத்து அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய்; உண்பாய் நீயே; உனக்கும் ஒண்ணாதது உண்டோ?
தீட்டுவான் பகழி ஒன்றால் உலகங்கள் எவையும் தீய
வீட்டுவாய் நினையின், நாயேற்கு இத்தனை வேண்டுமோதான்”[39]

என்பதனால், இறைவன் சர்வசுதந்திரன் என்பதும், உயிர்கள் தற்சுதந்திரம் அற்ற பரதந்திரிய இயல்பு கொண்டவை என்பதும் உணரலாம்.

“உயிர் சரணாகதனாயிருக்கும்” என்பதனை “அன்னவர்க்கே சரண் நாங்களே”[40] என்பதனால் உணர்த்துவார்.

“இறைவன் சேவிக்க வல்லனாயும் உயிர் சேவகனாயுமிருக்கும்” என்பதனை,

“எல்லீரும் அவ்விராம நாமமே சொல்லீர்; சொல்லின் எனக்கோர் சோர்விலா நல்லீரப் பயன் நண்ணும்”[41] என்றும், “அன்னை நீ; அத்தன்நீயே; அல்லவை எல்லாம் நீயே”[42] என்றும் பல இடங்களில் உயிர்கள் இராமனைச் சேவித்தவாற்றால் உணரலாம். (சேவித்தல் - அடிமையாயிருத்துதல்; ஏத்துதல்)

இவ்வாறு, உயிர்கட்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு, பிரிக்க இயலாததாய் இருப்பதனை உளங்கொண்ட, திருமழிசை ஆழ்வாரும்,

"நான் உன்னையன்றி இலேன் கண்டாய்; நாரணனே
நீ என்னை அன்றி இலை"[43]

எனத் தெளிவாக்கினார்.

பக்குவம் உற்ற உயிர்கள்

இடைவிடாப் பிறவிகளால் உயிர்க்கு இயல்பாய் உள்ள தர்ம பூத ஞானம் ஒளிர்ந்து, அவிச்சை எனும் பேதைமை பைப்பய நீங்கப் பெற்ற உயிர்கட்கு, இறைக்காட்சி எய்துகையில், கண்ணீர் சுரக்கும்; உடல் புளகம் போர்க்கும். இவைபோன்ற மெய்ப்பாடுகளைக் கொண்டே அவை இறைப் பக்குவம் உற்ற உயிர்கள் என்பதனை உணர்ந்து கொள்ளலாம். இராமனைக் கண்ட அயோத்தி மக்கள் இந்நிலை அடைந்தனர்.

"ஆரணம் அறிதல் தேற்றா ஐயனை அணுகநோக்கிக்
காரணம் இன்றியேயும் கண்கள் நீர் கலுழ நிற்பார்"[44]

இதனால்தான்,

"நற்பால் அயோத்தியில் வாழும் புற்பா முதலாப்
புல்லெறும் பாதியாக நற்பாலுக் கேக"[45]

முடிந்தது.

"காலமாய்க் கணித்த நுண்மைக் கணக்கையும் கடந்துநின்ற
மூலமாய் முடிவிலாத மூர்த்தி இம்முன்பன் என்பார்"[46]

இராமனைப் பரம்பொருள் என்று, பக்குவநிலை எய்திய அயோத்தி மக்களால் உணர முடிந்தது. பக்குவம் உறாத இலங்கைவாழ் அரக்கர்களால் மனிதன் என்றே உணர முடிந்தது.[46அ]

தண்ட காரணிய முனிவர்கள், இராமனை "எங்கள் செல்கதி வந்தது" என்று ஏமுற்று அண்மினர், "பண்ணின் நோக்கும் பராஅமுதைப் பசுங்கண்ணின் நோக்கி"[47] உள்ளம் களித்தார்கள். ஆடினர்; பாடினர்; தாமரைக் கண்ணனைக் கண்ணினால் மொண்டு, மதுர வாரி அமுதென மாந்தியதாகக்[48] கூறுவதும் பக்குவ உயிர்களின் மெய்ப்பாடு சுட்டுவதாம்.

இராமனைக் கண்ட அநுமன், "அன்பினன் உருகுகின்ற உள்ளத்தனாய்", "என்பெனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவில் காதல்; அன்பினுக்கு அவதி இல்லை அடைவென்கொல்"[49] என்று

தவித்தமையும், வீடணன், “கண்மழைத் தாரைகான்ற; அங்கமும் மனமதென்னக் குளிர்ந்தது; அவ்வகத்தை மிக்குப் பொங்கிய உவகையென்னப் பொடித்தன வுரோமப் புள்ளி”[50] என்னுமாறு நின்றதும் பக்குவ உயிர்களின் மெய்ப்பாடு சுட்டுவதே.

மூவகைச் சீவர்கள்

உயிர்கள் பத்தர், முத்தர், நித்தியர் என மூவகைப் படுவர் எனப் பகுப்பது வைணவ மரபு.[51] தொடர்ந்து வருகின்ற, முடிவற்ற சம்சாரத்தில் பிணைக்கப் பட்டிருப்பவர்கள் பத்தர்கள் எனப்படுவர். பதினான்கு உலகங்களாகிய அண்டங்களில் பிரமன் முதல் புழுக்கள் வரை உள்ள உயிர்கள் அனைத்திலும் பத்தர்கள்[52] உளர். (பத்தர் - கட்டுண்டிருப்பவர்)

தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்கிற பிரிவினை யுடையவர்கள் பத்தர்கள்.

“மரம் முதலானவைகளுக்கும் சிறிது அறிவு இருக்கிறது. வளர்வதற்கு வேண்டிய நீரை எடுத்துக் கொள்வதில் அதற்குத் தகுந்த அறிவிருக்கிறது. பிராணன் இல்லாதவைகளில் அறிவு குறைவு”[54] என்று விஷ்ணு புராணம் கூறும். இவ்வகையான எவ்வுயிரும் காக்கும் ஆன்மநாயகன் என்பதனால்தான், இராமன்பிரிவால், அயோத்தியில் உள்ள தாவர சாதிகளும் வாடின[55] என்பார் கம்பர்.

“ஆவும் அழுத; அதன் கன்றழுத: அன்றலர்ந்த;
பூவும் அழுத; புனற்புள் அழுத; கள்ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத கால்வயப்போர்
மாவும் அழுதன; அம்மன்னவனைப் மானவே”

என்று கம்பர் தாம் நெஞ்சுருகி, நம்மையும் உருக்குவார்.

பத்தர்களுள் இருவகை

பத்த ஆன்மாக்கள் சாத்திரங்களுக்கு உட்பட்டன; உட்படாதன என இருவகையின. மனிதரும் தேவரும் சாத்திரங்கட்கு உட்பட்ட முதல் வகையினர்; விலங்குகள் முதலியன இரண்டாவது வகையின[56]. சாத்திரங்களுக்கு உட்படாதன.

இதனால்தான், இராமன் சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்த குற்றத்தினை வாலிமேல் சாட்டுகையில், வாலி வானரங்களாகிய எங்கட்குச் சாத்திரநெறி இல்லை என்று மறுக்கிறான்.

"மணமும் இல்லை; மறைநெறி வந்தன
குணமும் இல்லை; குலமுதற்கு ஒத்தன
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்"[57]

என்பான்.

இதற்கு மறுமொழியாக இராமன்,

"நலங்கொள்தேவரின் தோன்றி நவைஅறக் கலங்கலா
அறநல்நெறிகாண்டலில் விலங்கலாமை விளங்கியது"[58]

என்று வாலி கூற்றை மறுப்பான். மனிதர்க்கும் விலங்கிற்கும் இடைப்பட்ட பரிணாம இனம் வானரம் என்பதை, வால் + நரம் = வானரம் என்னும் சொல்லாட்சி சுட்டும். விலங்கு, மனிதர் என்பதற்கு உடல் தோற்றம் காரணம் அன்று; சாத்திரங்கட்குக் கட்டுப்படுதல், கட்டுப்படாமையாகிய மனப்பான்மையே காரணம் என்பது இராமனால் உணர்த்தப்படுகிறது.

"மனுவின் நெறி புக்கதேல் அவ்விலங்கும் புத்தேளிர்"[59] என்பான் இராமன்.

சாத்திரங்கட் குட்பட்டவரும் இருவகையார்

தேவர், மனிதர் எனும் பத்த இன உயிர்களுள்ளும் முத்தியை விட்டு, அறம், பொருள், இன்பங்களை மட்டுமே பெறுதற்கு உபாயங்களை மேற்கொள்பவர், போக விருப்பினர் எனப்படுவர்.

இப் போக விருப்பினரும் பொருளும் இன்பமும் விரும்புவோர் என்றும், அறத்தை விரும்புவோர் என்றும் இருவகைப்படுவர் என்று யதீந்திர மத தீபிகை கூறும்.[60]

இவர்களுள் பொருளும் இன்பமும் விரும்பும் முதல் வகுப்பினர் உடலையே உயிராக எண்ணுபவர். இரண்டாம் வகையினராகிய அறவிருப்பினர், யாகம், தானம், தீர்த்த யாத்திரை முதலாகிய தாமங்களைச் செய்பவர்கள். இவர்கள் உடல் வேறு, உயிர் வேறு என்றும், உலகத்தைக் காட்டிலும் வேறான, மேலான உலகம் உண்டு என்றும் நம்புவர். அறவிருப்பினர் 'தர்மார்த்திகள்' என்றும், பொருளின்ப விருப்பினர் 'அர்த்தார்த்திகள்' என்றும் பெயர் பெறுவர்.[61]

அறவிருப்பினரும் துன்பம் நீங்க அறம் நாடுவோன், செல்வம் ஓங்க அறம் நாடுவோன், ஞானம் பெற அறம் நாடுவோன் என மூவகைப்படுவர். இவர்களை ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஞ்ஞாசு எனும் வடமொழிப் பெயர்களால் கீதை சுட்டும். இவர்களுள் ஆர்த்தனும், அர்த்தார்த்தியும்

புபுட்சுகள் எனவும், ஜிஞ்ஞாசு முமுட்சு எனவும் கூறப்படுவர். இவ்வுலக இன்பம் விரும்புவோர் புபுட்சுகள்; அவ்வுலக இன்பம் விரும்புவோர் முமுட்சுக்கள் எனப்படுவர்.[62] மோட்ச விரும்பிகளுக்கு வழிகாட்டும் வைணவ சாத்திர நூலுக்கு 'முமுட்சுப்படி' என்பது பெயர்.

வைணவம் காணும் உயிர் இனத்தின் இப் பகுப்புக்களுள், அயோத்தியில் வாழ்ந்த தசரதன், இராமன், அவன் தம்பியர், அயோத்தி மக்கள் முதலியோர் அற விருப்பினராகக் காட்டப்படுகின்றனர்; இலங்கையில் வாழ்ந்த இராவணன், அவன் குடிமக்கள் முதலியோர் பொருள், இன்ப விருப்பினராகக் காட்டப்படுகின்றனர்.

"தனியறத்தின் தாயே, தயாநிதியே, அந்தோ இனிவாய்மைக்கு ஆருளர்"[63] என்று அயோத்தியின் தலைவன் தசரதன் புகழப்படுவதனால், அங்கு மக்களும் தலைவனும் அறம் விரும்பி வாழ்ந்த பாங்கு உணர்த்தப்படும்.

உயிர்களின் பிரிவுகள்

பத்தர், முத்தர், நித்தியர் எனும் மூவகைச் சீவர்களுள், பத்தர் சம்சாரத்துள் உழன்று, இறையடியடைய இயலாது உழல்பவர்கள்; "பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"[65] என்பார் கம்பர்.

முத்தர், சம்சாரத் தளை யகன்று, இறையடிப்பேறு (வீடு) அடைய இருப்பவர்கள். "முத்த ரானவர் இந்நிலை மொழிகுவர்"[66] என முத்தரைக் குறிப்பார் கம்பர்.

நித்தியர், சம்சாரத் தளையே இன்றி, வீடுபேறடைந்து, இறை கைங்கரியமே புருடார்த்தம் என்று இறைவன் அடியருகேயே இருப்பவர்கள். இவர்கட்குப் பெயரே நித்தியசூரிகள். நிலைத்து இறையருகே இருக்கும் சுரர்கள் என்பது இப்பெயரின் பொருள் ஆகும். இவரை 'அதிதேவர்'[67] என்பார் கம்பர். "தேவ அதிதேவர் பலராலும் முந்து திருநாமம் ஓது செயலோய்" என்பது கவிஞர்பிரானார் வாக்கு.

இம்மூவகைப்பட்ட உயிரினத்தினரும் கம்பர் காவியத்தில் காட்டப்படுகின்றனர். கூனி, கைகேயி முதலியோர் சம்சாரத்தில் உழல்கிற பத்தர் வகையினர். அநுமன், வீடணன், குகன் முதலியோர் தளையகன்று இறையடியடைய உள்ள முக்தர்கள் ஆவர்.

இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோர் இறைவனின் சயனமும், திவ்வியாயுதங்களும் ஆகிய நித்தியசூரிகள் எனும் நித்தரில் அடங்குவர்.

இங்கு பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய வார்த்தா மாலையின் 13-14ஆம் வார்த்தையின் கருத்து நினைவில் கொள்ளத்தக்கது.

உலகம் யாவையும் இறைவனுக்கு உடைமை, அடிமை; இவ்வுலகில் வாழ்வோர்கள் பத்தர், நித்தர், முத்தர் என மூவகையர், அவருள் பத்தர் இரு வகையர். முமுட்சுகளும் (முத்தியை விரும்புவோர்) சம்சாரிகளும். இவ்விரு பாலரிலும் அகங்காரம், மமகாரம் (யான், எனது) கழிந்திருப்பாரும், அகங்கார மமகாரங்களில் அகப்பட்டோம் என்றிருப்பாரும் அகங்கார மமகாரங்களோடு உடன்பட்டிருப்போரும் என மூவகையர் உளர். இவருள் அகங்கார மமகாரங்கள் கழிந்திருப்போர் நித்தரும் முத்தரும். அகப்பட்டோம் என்றிருப்போர் முமுட்சுக்கள்; உடன்பட்டிருப்போர் நித்திய சம்சாரிகள். இதில் அகங்கார மமகாரங்கள் கழிந்திருப்போரை எம்பெருமான் தன் இனிமைப் பொருளுக்கு விஷயமாக்கும். அகப்பட்டோம் என்றிருப்பாரைத் தன் இரக்கத்துக்கு விஷயமாக்கும். (இரங்கி, முத்தர்கள் ஆக்குவான்)

அகங்கார, மமகாரங்களுக்கு உடன்பட்டிருப்போரைத் தன் லீலைக்கு விஷயமாக்கும். (யான், எனது, எனும் பற்றுள்ள சம்சாரிகளை, படைத்தல், காத்தல், அழித்தல் முதலான செயல்களுக்கு உட்படுத்தித் தன் விளையாட்டுச் சுவையை (லீலா ரசம்) அனுபவிக்க வைப்பான்.

"ஆச்சான் பிள்ளை கோஷ்டியில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரள இருந்து, தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்ய வேணுமென, அருளிச் செய்தபடி, நாம் லீலைக்கு விஷயமோ? இரக்கத்துக்கு விஷயமோ? என, "உடன்பட்டிருந்தோமாகில் நாம் லீலைக்கு விஷயமாகிறோம்; அகப்பட்டோம் என்றிருந்தோமாகில் இரக்கத்துகசு விஷயம் ஆகிறோம் என்றருளிச் செய்தார்" என்ற நயமிகு வார்த்தையும் கருதற்பாலது.

அஃறிணையும் முதலிகள்

புனித இடங்களில் இருக்கும் மரங்கள் முதலிய அஃறிணைப் பொருள்களும் உயர்ந்த தேவர்கள் என்பது வைணவ மரபு. பரமபதத்தில் வாழும் பெருமாள் அடியார்கள் உகந்ததொரு பொருளைத் திருமேனியாய்க் கொண்டு நிற்பதுபோல, அவனைப் பரமபதத்தில் கண்டு உகந்த வண்ணமே இருக்கும் நித்திய சூரிகளும் அவதார காலத்தே இங்கே வந்து தாவரங் களாகவும் இயங்குதிணையாயும் நிலைத்திணையாயும் விலங்குகளாயும் அவனை விட மாட்டாதே நிற்பார்கள்.

"இயல்பாய் அமைந்த அடிமைத்திறமுடைய நித்தியசூரிகளும், சம்சாரத்தளை நீங்கப்பெற்ற முத்தர்களும், பாவங்கள் எல்லாம் நீங்கி,

இனிமேல் சரீர சம்பந்தம் இல்லையென்னும்படி முடிவான முமுட்சுக்களும் ஆகிய இவர்கள், மனிதப் பிறவியையும், விலங்கின் பிறவியையும், தாவரப் பிறவியையும் விரும்பினவர்களாய்க் கொண்டு திருவரங்கத்தை என்றும் பற்றி யிருக்கின்றார்கள்.[67அ]

"இராமாவதாரத்திலும், ஒரு இலக்குவன் முதலியோர், வானரங்களின் உருவத்தையடைந்த தேவர்கள், வீடணன் முதலியோர் இப்படி இறைவனைப் பற்றிக் கிடந்தார்கள். அதிலும் நடையாடித் திரிகின்றவர்கட்கு அகன்று போவதற்கும் தகுதி உண்டு. தாவரங்கட்கு அதுவும் இல்லையன்றோ" என்று வைணவ அன்பர்கள் அர்ச்சாவதாரத்தில் உள்ள திருக்கோயில்களின் அருகே அமைந்துள்ள தாவரங்களையும் உயர்ந்தோராகப் போற்றுவர். இதனை, "போயின திசைகள் தோறும் மரனொடு புல்லும் எல்லாம் சாய்வுறும் தொழுவ போன்று"[67ஆ] என்று கம்பர் கிட்கிந்தா காண்டத்தில் குறிப்பர்.

இவை வனம் ஏகும் இராமனைத் தரிசிக்க வந்த நித்தியசூரிகள் என்பது கம்பர் குறிப்பு. மரங்களையும் உயர்ந்தோராக நேசிக்கும் வைணவத்தின் மாண்பு இதனால் வெளிப்படல் காணலாம்.

திருவேங்கடத்திலிருந்து போசல நாடு புறப்பட்ட அநந்தாழ்வான், வழியே கட்டமுதுண்ண அமர்கையில், அதில் உள்ள எறும்புகளைக் கண்டு, திருவேங்கடத்தில் உறைய வந்த நித்திய சூரிகளை இங்கு கொண்டு வந்துவிட்ட பாவம் புரிந்தேனே என்று பதறி, மீண்டும் அவ்வெறும்புகளை வேங்கடம் கொண்டு சென்று விட்டு வந்ததாகக் குருபரம்பரை கூறும் சரிதம் நினையற்பாலது.[67இ] இவையெல்லாம் வைணவம் காட்டும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கு ஒளி சிந்தும் முத்திரைச் செய்திகள் ஆகும்.

இலக்குவன் முதலியோர் நித்தியர்கள். வானரங்களின் உருவத்தை யடைந்த தேவர்கள் முத்தர்கள். வீடணன் முதலியோர் முமுட்சுக்கள்.

"வானுளோர் அனைவரும் வானரங்களாய்க்
கானினும் வரையினும் கடிதடத்தினும்
சேனையோடு அவதரித் திடுமின் சென்றென
ஆனனம் மலர்ந்தனன் அருளின் ஆழியான்"[67ஈ]

"வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளைஞர்கள் எனஅடி பரவ, ஏகிநாம்
வளைமதில் அயோத்தியில் வருதும் என்றனன்"[67உ]

இவ்விரு பாடல்களிலும் தேவர்களே வானரங்கள் ஆயினர் என்பதும் சங்கு, சக்கரம், ஆதிசேடன் ஆகிய நித்திய சூரிகளே பரதன், சத்துருக்கன், இலக்குவன் ஆயினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வானரங்களை முதலிகள் என்பதும் சங்கு, சக்கரம் ஆதிசேடனை சக்கரத்தாழ்வார், சுதர்சன ஆழ்வார் அனந்தாழ்வார் என்பதும் வைணவ மரபு.

நித்திய சூரிகளே தம்பியர்

இராமனும், இலக்குவனும் "இன்னுயிர் ஒன்றே; மூலத்து இருவரும் ஒருவரே"[67அ] என்பார் கம்பர். பகவானும் பாகவதரும் இருவரும் இறுதியில் ஒரு தகுதியினை அடைவர் என்பது குறிப்பு. இருவரும் ஒருவருக்கொருவர் உயிராகி வாழ்வதால் "இன்னுயிர் ஒன்றே" எனப்படுகிறது. "உன்னது என்னது ஆவியும், என்னது உன்னது ஆவியும்" என்பார் நம்மாழ்வார். மூலம் என்பது பரமபதத்தைக் குறிப்பது. இறுதியில் தொண்டால் சிறந்த உயிர்கள், இறைவனுடன் சாமீப்பியம எனும் சமீப நிலையை அடையும் என்கின்ற வைணவக் கொள்கை இங்கு சுட்டப்படுகின்றது. தொண்டால் உயர்ந்து, என்றும் இறைவனோடேயே உறையும் உயிர்கள் 'நித்திய சூரிகள்' எனப்படுவர். ஆதிசேடன், சங்கு, சக்கரம் ஆகிய திவ்விய ஆயுதங்களின் அவதாரமாகிய இராமனின் தம்பிகள் மூவரும் தொண்டால் உயர்ந்த நித்திய சூரிகளாகிய ஆன்மக் கூட்டமேயாவர். இந்த நித்திய சூரிகள் 'அதிதேவர்' எனவும், 'தேவர்கள் தொழும் தேவர்' எனவும் கூறப்படுவர்.

இந்த நித்திய சூரிகள் தொண்டாலும் தியாகத்தாலும் இந்த நிலையினை அடைபவர்கள். பிற தேவர்கள், தாம் பண்ணிய புண்ணியம் நுகர்ந்து முடிந்தவுடன் மீண்டும் பிறவியெடுப்பர். ஆனால், நித்திய சூரிகளோ என்றும் இறைவன் திருமுன்பு அவனை நுகர்ந்தும் அவன் உகக்கும் கைங்கரியம் புரிந்தும் விரும்பின் அவதார காலங்களிலும் அவனுடன் வாழ்ந்து அவனுடனேயே இருப்பர். நித்திய சுரர்கள், நிலைத்த தேவர்கள் என்பதே நித்திய சூரிகள் என ஆயிற்று. இவர்கள் நிலைத்த தேவர்கள் என்கையில், மற்றையோர் நிலையாத்தேவர்கள் என்பதாயிற்று.

எவர், எவர், எத்தகைய தியாகம் புரிந்தோர் நித்தியசூரிகள் ஆகும் தகுதி படைத்தோர் என்பதனை, இராமபிரான் திருவாக்கால், கம்பர் உணர்த்துகிறார்.

"ஆவுக்கு ஆயினும், அந்தணர்க்காயினும்
யாவர்க்கு ஆயினும், எளியவர்க்கு ஆயினும்

சாவப் பெற்றவரே தகை வான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவர்"

(67 ஏ.சி)

அரக்கர் ஆகும் உயிர்கள்

உயிர்கள் தம் செயல்களால் தமக்குத் தாமே வலையிட்டுக் கொள்கின்றன; பிற உயிர்களை அவையும் தம்போன்று வாழ உள்ளவை என்று நினையாது வருத்திக் கொன்று உண்கின்றன; இது, அறப்பயனை அறிந்து ஓராதார் செயல் ஆகிறது. இவ்வாறு அறம் வழுவியோர் அரக்கர் ஆகின்றனர்.

"மறுக்கி வல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்பார்
அறப்பொருளை அறிந்து ஓரார்; இவையென்ன உலகியற்கை"[67எ]

என்று வியப்பார் நம்மாழ்வார். இராவணன் வாழ்வும் இவ்வாறே இருப்பதைக் கம்பர் காட்டுகின்றார்.

"தேசியைச் சிறையில் வைத்தான்; தேவருக்கு இடுக்கண் செய்தான்;
பூசுரர்க்கு அலக்கண் செய்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே ஆண்டான்
வாசவன் திருவும் கொண்டான்; வழியலா வழிமேற் சென்றான்"[67ஐ]

"இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர் ஆயினர்"[67ஒ] என்று இவற்றால் கம்பர் குறிப்பிடுவர்.

உயிர்களின் அரக்கத்தன்மை

பிறப்பால் அரக்கர் என்பதனைவிட, உயிர்கள் இரக்கமற்ற போதுதான் அரக்கத்தன்மை அடைகின்றன என்பது கம்பர் கருத்து. தாடகை, அவள் மக்கள் ஆகியோர் இயக்க குலத்தைச் சேர்ந்தவர்கள். அழிவன செய்ததால், அகத்தியன் சீற்றத்தால் அரக்கராயினர்[67ஒ] என்று கம்பர் கூறுவதால், குணத்தாலும் செயலாலுமே உயிர்கள் உயர் நிலையினையும் தாழ்நிலையினையும் எய்துகின்றன என்பது தெளிவாக்கப்படுகிறது.

"அழிவன செய்தலால் அரக்கர் ஆகியே
இழிகென உரைத்தனன்"[68]

"அரக்கர்களாயினர் அக்கணத்தினில்"[69]

என்பது கம்பர் வாக்கு.

"இரக்கம் என்றொரு பொருள் இலாது அறத்தின் நீங்கினர் அரக்கர்"[70] என்பதோடு பாவத்தையே விரும்பிச் செய்கின்றவர்களும் அரக்கர் ஆகின்றனர் என்பார்.

"அறத்தைத் தின்று அரும்பாவத்தைப் பருகிவே றமைந்த
மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தை மணம்புணர் மணாளர்"[71]

என்பதனால் இரக்கமிலாதவர், பாவம் புரிபவர் யாவரும் அரக்கர் எனும் உயிர்ப் பிரிவில் அடங்குவர் என்பது கம்பர் கருத்தாதல் காணலாம்.

"மனித சாதி இரண்டே வகையில் உளது. அது பிறவியினாலும் இல்லை. கோரப்பல், பெரிய மீசை, முட்டைக்கண் போன்ற பயங்கர வடிவங்களாலும் இல்லை. குண இயல்பினால் அசுர சாதி, தேவ சாதி என்று அது இரண்டு வகையினது ஆகிறது.

"இரணியன் அசுரன்; அவன் பிள்ளை பிரகலாதன் தேவன், இராவணன் அசுர இயல்பினன், அவன் தம்பி வீடணன் தேவ இயல்பினன். தேவேந்திரன் தேவன்; அவன் பிள்ளை சயந்தன் காகாசுரன். பகவத் பத்தியும் நல்லொழுக்கமுமே தேவ இயல்பை ஆக்குகின்றன. அவற்றுக்கு மாறானவை அசுர வியல்பாய் முடிகின்றன. தேவருள் அசுரரும், அசுரருள் தேவரும் உண்டாவது புதுமையில்லை"[72] என்னும் வைணவ ஆன்றோர் கருத்து இங்கு கருதத் தகும்.

பக்தியே உயிர்களின் சிறப்பு

வைணவம் பத்தி ஒன்றையே கைம்முதலாகக் கொண்டு உயிர்களை வகைப்படுத்தும் மரபினையுடையது.

"மிக உயர் குலத்தோரும் மிகத் தாழ்குலத்தோருமான திருமால் அடியார்கள் பலர், திருவரங்கப் பெருமான் திருமுன்றிலில் சாதி வேற்றுமையற, ஒருங்கு குழுமி, ஒருவரை ஒருவர் தெய்வ சமானமாகக் கருதி, வழிபட்டு வந்தனர். அக்குழுவினருள் அத்தகைய வேற்றுமை பாராட்டுதல் மிகப் பெரியதோர் அபசாரமும் இழுக்குமாகக் கருதப்பட்டு வந்தது"[73] என்று தமிழறிஞர் மு. இராகவையங்கார் கூறுவர்.

"அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள்"[74] என்பார் திவ்விய கவியும். அற்றவர் என்பதற்குச் சாதி, குலம், பிறப்பு என்னும் வேற்றுமை யற்றவர் என்பது பொருளாகும். பத்தி பெரிது; குலம் பெரிதன்று என்பது திருமாலடியாரான தொண்டர்களின் கொள்கை.

"பாதியாய், அழுகிய கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்

ஆதியாய் அரவணையாய் என்பராகில்
அவரன்றோ யாம் வணங்கும் அடிகள் ஆவார்"

"சாதியால் ஒழுக்கத்தால் மிக்காரேனும்
சதுர் மறையால் வேள்வியால் தக்காரேனும்
போதில் நான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே"[75]

என்னும் வைணவச் சான்றோர்கள் கருத்துக்களை உளங்கொண்டு நோக்கும்போது, குகன், சுக்கிரீவன், வீடணன் முதலியோரை இராமனின் தம்பியராகக் கம்பர் காட்டியதன் பின்னணி நன்கு புலனாகும். சபரி ஒரு வேட்டுவச்சி. அவளிடம் இராமன் உண்ட விருந்தும்; அவளுக்களித்த பேறும்; சாதிகுலம் பாராது அன்புநெறியையே சார்கின்ற வைணவ நெறியைச் சுட்டுவதே.[76]

ஆதிதேவர்

"தேவாதிதேவர் பலராலும் முந்துதிருநாமம் ஓதும் முதலோய்"[77] என்பதனால் தேவர், அதிதேவர், ஆதிதேவர் என்று மக்களில் உயர்ந்த தேவ நிலையைப் பிரிப்பது கம்பர் கருத்தாகத் தெரிகிறது. இதுவே வைணவக் கருத்துமாம்.

துறக்க உலகில் உள்ளவர்களைத் தேவர் என்பர். இவர்கள் ஈட்டிய வினை நுகர்ந்து முடிந்தபின் மீண்டும் மண்ணில் பிறக்க உரியர்.

அதிதேவர் என்பவர்கள் நித்தியசூரிகள் என வைணவ மரபில் குறிக்கப்படுவர்.[77அ] தேவாதிதேவர் என்னும் தொடரில் உள்ள அதிதேவர் இந்த நித்தியசூரிகளே. இவர்கள் பரமபதத்தில் இறைவனை இடைவிடாது நுகர்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள், மீண்டும் மண்ணில் பிறப்பதில்லை. தங்கள் விருப்பத்தால் பிறப்பினும் மீண்டும் பரமபத வாசிகளே யாவர்.

இந்த அதிதேவர்கட்கும் தலைவனாயுள்ள இறைவனைக் கம்பர், "ஆதிதேவர் அவர் எம் அறினுக்கு அறிவரோ"[78] என்பர்.

விஷ்ணு சகஸ்ரநாமத்தில் 'ஆதிதேவாயநம' - தேவர்கள் அனைவருக்கும் முந்தியவர்[79] எனும் சுலோகக் கருத்து இங்கு கையாளப்பட்டுள்ளது எனலாம். "அனைத்துத் தேவர்கட்கும் முந்தியவர்"[80] என்னும் புருஷ சூக்தம்.

"அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி
இவர்இவர் எம்பெருமான் என்று - சுவர் மிசைச்

சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி உருவே முதல்"[81]

என்பார் பொய்கையாழ்வார்.

"முதலாவார் மூவரே, அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்"[82] என்பதும் இங்கு ஒருபுடை ஒப்பு நோக்கத் தக்கது.

மக்கள் - தேவர் - அதிதேவர் - ஆதிதேவர் என ஒருவரிலிருந்து ஒருவர் உயர்ந்து, உயிர்ப் பயணத்தின் இறுதிநிலை சுட்டுவது கம்பர் கருத்தாதல் தெரிகிறது.

கதை மாந்தர்களின் தத்துவப் பொருள்கள்

இராமாயணம் என்னும் அற்புதமான நாடகம் இன்றைக்கும் ஓயாமல் நடந்து கொண்டிருக்கிறது. அன்று அந்த நாடகத்தைக் கண்கூடாக நடத்திக் காட்டவந்த கதை மாந்தர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தத்துவத்தின் சார்பாளராகவே தோன்றியுள்ளனர்.

இராமன் பரமாத்மாவின் வடிவம்; சீதை சீவான்மாவின் வடிவம்; இராவணனோ மனத் தத்துவத்தின் வடிவம்.[83]

"வையம் தந்த நான் முதன் மைந்தன் மகன் மைந்தன்,
ஐயன் வேதம் ஆயிரம் வல்லான் அறிவாளன்"

என்பார் கம்பர் காட்சிப் படலத்தில். இராவணன் குலத்தில் யார்க்கும் கீழ்ப்பட்டவன் அல்லன்; நான்முகனின் கொள்ளுப் பேரன்; அறிவாளன்"[84]

அவன் உடன் பிறந்தாரில் தாமத குணத்தோடு கூடிய மனத் தத்துவமே கும்பகருணன். வீடணன் முற்றிலும் சத்துவ குணமய மானவன்; இராவணனோ இராசத குணத்தோடு கூடிய மனத்தின் உருவக புருடன்.[85]

ஆன்மாவின் பஞ்சமய கோசம்

ஆன்மா பல கவசங்களால் மூடப் பெற்றுள்ளது. கவசம் அல்லது கோசம் என்ற சொல்லிற்கு 'உறை' என்பது பொருள்; முதலில், புறத்தே உள்ள கோசமே இவ்வுலகமாகும். இது. உணவினால் ஆனதால் 'அன்னமயகோசம்' என்று பெயர் பெறும். இதற்கு உள்ளே பிராணமய கோசமும், இதற்கும் உள்ளே ஆனந்தமய கோசமும் உயிரிடத்தே அமைந்துள்ளன[86] என்று தைத்திரீய உபநிடதம் புகலும்.

ஆன்மாவானது பிரகிருதி (உலகு) யாகப் பரிணமிக்கும்போது, முதலில் அது ஆனந்தமய கோசமாகிறது. அதினின்று அறிவு (விஞ்ஞான)

மயகோசம் வருகிறது. விஞ்ஞான மய கோசததினின்று மனமய கோசம் உருவெடுக்கிறது. ஆதலால், மனமானது ஆன்மாவுக்குக் கொள்ளுப்பேரன் என்னும் முறையைப் பெறுகின்றது. பிரம்மா ஆன்ம இனத்தின் பிரதிநிதியாகிறான்.[87] பிரம்மாவுக்கும் இராவணனுக்கும் உள்ள உறவே ஆன்மாவுக்கும் மனத்திற்கும் உள்ள உறவாகிறது. மனத் தத்துவம் ஆன்மாவுக்குப் பேரன் முறையாவதையே, “வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்”86 எனும் கம்பர் தொடர் நுட்பமாக நினைவூட்டுகிறது. பிரம்மன் ஆன்ம இனத்தின் தலைவன் என்பதனை ‘வையம் தந்த நான்முகன்’ எனும் தொடர் சுட்டுகிறது.

கருமேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்கள் வாயிலாக, மனம் செயல் புரிகின்றது. ஆகவே, இராவணன் பத்துத் தலைகளை யுடையவன் ஆகிறான்.

எப்பொழுது மனம் எதை எண்ணுகிறதோ, அப்பொழுதே அது எண்ணப்பட்ட பொருளின் வடிவை எடுத்துக் கொள்கிறது. இராவணனும் தான் விரும்பும் வடிவத்தை எடுத்துக் கொள்ளும் இயல்பினன். ‘காமரூபர்’ என்பது அரக்கர்களுக்கு ஒரு பெயர். சூர்ப்பனகை தன்னைக் காமரூபி என்றாள். விரும்பும் வடிவை எடுப்பவள். இராவணன் துறவி வடிவில் வந்து சீதையைக் கவர்ந்தான்.

கண் இல்லாதவனுக்குக் கேட்கும் ஆற்றல் மிகுகிறது; காது இல்லாதவனுக்குப் பார்க்கும் சக்தி வலுப்பெறுகிறது. எனவே, ஒரு பொறியை அடக்கி விட்டால் மனத்தின் ஆற்றல் மற்றொரு பொறியில் மிகைபடத் தோன்றும். எல்லா இந்திரியங்களையும் அடக்கி விட்டால் மனம் பேராற்றல் பெறுகிறது. இப்பேருண்மை, பொறிகளையடக்கி இராவணன் செய்த தவம் விளக்குகிறது. நான்முகன் அவன் முன்தோன்றி வரம் அருளினான் என்பது பிரபஞ்சத்தில் எதையும் சாதிக்கும் ஆற்றல் மனம் அடக்கியவனுக்கு வந்துவிடும் என்பதைக் குறிக்கிறது.[89]

உயிர்களின் பிரிவுகள் சில

இராவணன், கருடர், நாகர், யட்சர், தைத்தியர், தானவர், அரக்கர், தேவர் ஆகியோர் எல்லாம் தன்னைக் கொல்ல இயலா வரம் பெற்றான். மனிதரால் கொல்ல இயலாத வரம் அவன் கேட்கவில்லை.”[90]

மனத்தை வெல்ல அல்லது கொல்ல எந்தத் தேவனுக்கும், இராட்சதனுக்கும், தானவனுக்கும், தைத்தியனுக்கும், யட்சனுக்கும் இயலாது. மனிதனாகப் பிறப்பவனே மனத்தைக் கொல்ல வல்லவனாகிறான். மனித இராமனாலேயே, மனத் தத்துவனாகிய இராவணனைக் கொல்ல முடிந்தது.

இந்த நுட்பத்தை உள்ளடக்கியே, கம்பர்பெருமான் "வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா"[91] என்று வியந்து போனார்.

மனம் மாய்ந்த இடமே முத்தி. மனம் ஒடுங்கிய இடமே இறைவனின் சந்நிதானம். இதனால்தான் எண்ணரிய பிறவிகளுள் மனிதப் பிறவி மாண்புடையதாகிறது.[92] தெய்வம், மனம் இதமான (மன இதன்) மனிதனாகி, மனம் இதமாகாது, உயர் பிறப்பில் பிறந்தும் அரக்கனான இராவணனைக் கொன்றது. மன அடக்கத்தின் பெருமைகள் முழுவதும் அறிந்து வரங்கள் பல பெற்று உயர்ந்த இராவணன், மீண்டும் மனம் அடங்கா நெறிப் பிறழ்வால் மாண்டான்.

"பூஉளோன் ஆதியாக, புலன்கள்போம் நெறியில்போகாத்
தேவரோ, அவுணர்தாமோ, நிலைநின்று வினையின் தீர்ந்தார்?"[93]

"இப்பெருஞ்செல்வம் நின்கண் ஈந்த பேரீசன், யாண்டும்
அப்பெருஞ்செல்வம் துய்ப்பான் நின்று மாதவத்தின் அன்றே"[94]

"மீனுடை நெடுங்கடல் இலங்கை வேந்தன் முன்
தானுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வதுஓர்
மானுட மடந்தையால்"[95]

எனும் இக்கருத்துக்களால் இராவணன் சீதையாலும், வீடணனாலும் உணர்த்தப்படுகின்றான்.

இராம, இராவணப் பெயர்க் காரணங்கள்

உலகங்களையெல்லாம் தன் செயலால் மகிழச் செய்பவன் (இரமிக்கச் செய்பவன்) இராமன் எனப்பட்டான்.

உலகங்களையெல்லாம் தன் செயலால் அழச் செய்கிறவன் இராவணன் எனப்பட்டான். இராவணன் என்பதற்குப் பேரொலி இட்டு அழுபவன், அழச் செய்பவன் என்பது பொருள்.

"அண்டத் தளவும் இனைய பகர்ந்தழைத்துப்
பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்"[95]

என்பது கம்பர் வாக்கு.

மனம், நன்னெறியிற் செல்லாது, தீநெறியில் சென்றால், உலக உயிர்கட்கு எத்தகைய துயரங்களைச் செய்து இறுதியில் அழியும் என்னும் உயிர் இயல்பின் தத்துவ உண்மை இராவணப் படைப்பால் உணர்த்தப்படுகிறது.

இராவணன் பெயரைக் கேட்டால் முனிவர்கள் நடுங்கினர் என்பது, அல்லலுற்ற, அமைதியுற்றிருக்க விரும்பும் நல்லவர்களை அலைக் கழிப்பதில் மனத்திற்குள்ள ஆற்றல் இயம்பப்படுகிறது.[96] இலங்கை வேந்தனின் மூவுலகத் திக்கு விசயம், மூவுலகங்களிலும், மனம் எளிதாகச் சென்று வரும் இயல்பினை உணர்த்துவது.[98] மனத்தின் ஆற்றல் அண்ட கோளங்களையும் ஆக்கிரமிக்க வல்லது. அதனால், அதனைச் செருக்குறாமல் காக்க வேண்டும். செருக்குற்றுத் தெய்வ ஆற்றலோடு மோதுகையில், அது தோல்வியுறுகிறது என்பதனை, இராவணன் கயிலையைத் தூக்க முயன்று தோற்று அவமானமுற்ற நிகழ்ச்சி சுட்டும்.[99]

இராவணன் எப்படி, தக்க முறையில் சிவபூசனை பண்ணி, தனது ஆற்றலைத் திரும்பவும் பெற்றான் என்பது தேவாரத்தில் பல பதிகங்களில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. கம்பர் பல இடங்களில் கயிலையை எடுத்த இந்நிகழ்ச்சியினைச் சுட்டியுள்ளார். மனத்தை நெறிப்படுத்தின் இறையருள் வாய்க்கும்; நெறிப்படுத்தா தொழியின் இறையருள் தேய்க்கும் என்பதனை இந்நிகழ்ச்சி சுட்டும்.

இராவணன், ஏராளமான மங்கையரைப் பிடித்துச் சிறை வைத்தான். அதற்கு இரு காரணங்கள் உள. ஒன்று காமம்; மற்றொன்று பிறரை அடக்கி, துன்புறுத்தி, போர் புரிந்து, வெற்றி கொள்வதில் அவனுக்குள்ள வெறி, மனத்தில் எழும் காமத்தாலும், வன்முறை இச்சையாலும், ஆணவத்தாலும் உயிர்கள் அழிவைச் சந்திக்கின்றன எனும் பேருண்மையை இந்நிகழ்வுகள் உணர்த்தி நிற்கும். உரியதல்லாததை உரியதாக்க நினைத்துச் செயல்படுமபோது மனம் சாபங்களுக்கும், உயர்ந்தோர் சீற்றங்களுக்கும் ஆளாகிறது என்பது வேதவதியை வலியக் கவர்ந்ததால் இராவணன் சாபம் பெற்ற நிகழ்ச்சி உணர்த்து.[100]

சீவான்மாவின் உருவகம் சீதை

சீவர்கள் எல்லாம் சீதா தேவியின் அம்சங்களாவர். மனம் எனும் இராவணன், உயிர்களை இறைவனிடமிருந்து பிரித்து வைக்கிறான்.

உயிர்கள் பாவ நெறியால், பத்து மாதப் பிறப்புச் சிறையில் அடைபடலே சீதையின் பத்துமாத அசோக வனச் சிறை வாழ்வு. தாமத குணமும், இராசத குணமும் சிறைப்படுத்தி நிற்கையில், உயிரின் விடுதலைக்குச் சத்துவ குணம் உதவுவதே வீடணக் குடும்பத்தின் செயல்கள்.[101]

"நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்"[101அ] காணாத சத்துவ குடும்பம் வீடணக் குடும்பம் என்பார் கம்பர்பிரான்.

ஆன்ம விடுதலைக்கு, இறைவனின் அருள் உதவ உள்ளது என ஆசாரியன் காட்டக் காண்பதே அனுமன் சீதைக்குக் கணையாழி கொடுத்த செயலாகும். பாவச் செயல்கள், உயிர் இறைவனை அடைந்து விடாமல் தடுத்து நிற்பதே அரக்கியர் விழித்திருந்து சனகியைப் பாதுகாப்பது ஆகும். ஆசாரியன் வருகையால் பாவச் செயல்கள் செயலிழக்கத் துவங்குவதே அரக்கியர் தூக்கம். இறைநாம செபம், பாவங்களைச் செயல் மடியச் செய்வதே அநுமன் செய்த விஞ்சைவினை (மந்திரம்).[102] இறைவனை யடைய விரும்பும் உயிர்கட்குச் சத்துவ குணம் அருகிலிருந்து உதவும் என்பதன் உருவகமே திரிசடைப் பாத்திரம்.

தர்ம பூத ஞானம்

தர்மம் என்பது பண்பு; பூதம் என்பது வடிவு; ஞானம் என்பது அறிவாகும். எனவே, உயிரின் பண்பு வடிவான அறிவே தர்மபூதஞானம் ஆகும்.

ஆன்மா, தன்னை உணரும்; அறிவு தன்னை உணராது. இதுவே, உயிர்க்கும் அறிவிற்கும் உள்ள வேற்றுமை. இறைவன், இறைவி, நித்தியசூரிகள், முக்தர்கள் ஆகியோரின் அறிவு தூய்மையான முழு வடிவம் பெற்றது. தளையுண்ட ஆன்மாக்களாகிய பத்தரிடம் அவித்தை சூழ்ந்திருப்பதால் அறிவு குறையுடையதாகிறது. "பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"[103] என்பதில் பத்த ஆன்மாக்களின் அறிவுக்குறை கம்பரால் சுட்டப் படுகிறது.

இந்த அறிவுக்குறை நீங்க, இறைவன் அருள் வேண்டும். அவன் அருள் ஒளி வீச்சால் உயிர்களின் ஞானக் குறை நீங்குவதால், "ஆதிதேவன் எம் அறிவினுக்கு அறிவரோ"[104] என்கின்றார் கம்பர்.

இறையாற்றல் அறிவிக்கும்

அறிவின் பணி, உலகப் பொருள்களை விளக்கம் பெறச் செய்வது. பொருள்களையும் அறிபவனையும் அறிவு இணைக்கின்றதே தவிர, அவற்றை உண்டாக்குவது இல்லை. அறிவை யறியும் வழிகளான அளவைகளை மூன்றாகக் கொள்கிறது விசிட்டாத்துவைதம்.

புலக்காட்சி எனப்படும் காட்சியளவை, உணர்தல் எனப்படும் கருதல் அளவை, பெரியோர் உரை எனப்படும் ஆகம அளவை எனும் மூன்று அளவைகளையே அறிவையடையும் வழிகளாக வைணவம் ஏற்கிறது.[105]

இம்மூன்றாலும்கூட முழு அறிவையும் உயிர்கள், தம் முயற்சியால் பெற்றுவிட இயலாது என்று கம்பர் சுட்டுகின்றார்.

“காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண்ஆதி”[106] என்கின்றார் அவர்.

காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் இடையில் ஒரு கண்ணாக இறைவன் நின்றால் மட்டுமே முழு ஞானம் எனும் மெய்ஞ்ஞானம் தோன்றும் என்பது அவர் கருத்து.

“காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே”[107]

“அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்”[108]

“அவன் அருளாலே அவன்தாள் வணங்கி”[109]

எனும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் கம்பர் கருத்தோடு இணைந்து நிற்பதை இங்கு காணலாம். இறையருள் இன்றேல், உலகக் காட்சியில் திரிபுக் காட்சி என்னும் விபரீத ஞானம் பெற்று, பிறழ உணர்ந்து, உயிர்கள் இராவணன் இரணியன் போன்று துயருற நேரிடும்.

உயிருள் உறைவது அறிவு

மணியிலிருந்து, அழுக்கைக் கழுவுவதனால், ஒளியானது புதிதாக உண்டுபண்ணப் படுவதில்லை. அப்படியே மன அழுக்குகள் நீங்கும்போது, ஆன்மாவுக்கு, ஞானம் புதிதாக உண்டாவதில்லை. முன்பே உள்ளிருந்த ஒளியும் ஞானமும் அழுக்கு நீக்கத்தால் ஒளிரத் தொடங்குகிறது.

கிணறு தோண்டுவதலால், நீரானது உண்டு பண்ணப்படுவதில்லை, உள் உள்ள நீரே வெளிப்படுகின்றது. “தொட்டனைத்தூறும் மணற்கேணி”[109அ] எனும் உவமையால் வள்ளுவனார் உயிரினுள் அறிவுள்ளது; அது தோண்டுவதனால் வெளிப்படுகின்றது எனத் தெளிவாக்கியுள்ளார்.

இல்லாத எதையும் எப்படியும் உண்டாக்கிவிட இயலாது என்பது சற்காரிய வாதம்.

“ஞானத்தை மறைக்கும் தீச்செயல்கள் படிப்படியாக மறைந்தால், அது காரணமாக அஞ்ஞானம் முதலான கெட்ட குணங்கள் படிப்படியாக நீங்கும். அப்போது ஞானம் முதலிய ஆன்ம குணங்கள் ஆன்மாவின் உள்ளிருந்து வெளிப்படுகின்றனவே ஒழிய, புதிதாக உண்டுபண்ணப் படுவதில்லை. அவை ஆத்மாவுக்கு முன்பே நித்தியமாயிருப்பவை”[110] என்னும் விஷ்ணுதர்மம்.

மனமே, மனிதர்கள் உலக பாசத்தால் கட்டுப்படுவதற்கும் உலக பாசத்தினின்றும் நீங்குவதற்கும் காரணமாக இருக்கிறது. இக்கருத்தை, ஈடு இவ்வாறு விளக்கும்:

"உயிர்களும் அழிவற்றவை; ஞானமும் அழிவற்றது. ஆகையால், அறிவின்மை முதலிய குற்றங்கள் உயிர்களைச் சார்ந்தவையும் அல்ல; ஞானத்தைச் சார்ந்தவையும் அல்ல, உயிரினுடைய தர்மபூத ஞானத்திற்குத் தோற்றம் மறைவுகளை வழங்குவது, ஞானம் பரவுதற்கு உள்ள மனத்தைப் பற்றியே யாம். ஆக, ஞானம் செல்லுவதற்கு வழியாக உள்ள மனத்தினைப் பற்றிக் கிடக்கின்ற குற்றங்கள், யோக நூல்களிற் கூறுகின்ற முறையிலே, வெளிப்பொருள்களில் ஈடுபட்ட மனத்தை, உட்பொருளை நோக்கச் செய்து, இயமம், நியமம் முதலிய முறைகளைக் கொண்ட அளவில் அழியக் கடவது"[111] இவ்வாறு, ஆன்மாக்கள், மன அழுக்கு நீங்கி அவற்றின் பண்டைய தன்மையை எய்தி, முழுஞான மயமாய், ஞான மயனான இறைவனை எய்தும் பெருநிலையை, அகலிகைக்கு இடையில் வந்த சாபம் நீங்கி, பழைய நிலையினை எய்தி, அவள் இராமன் முன் நின்றமைக்கு உவமித்து விளக்குகின்றார் கம்பர்.

"கண்ட கல்மிசை காகுத்தன் கழல் துகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கு அற, வேறுபட்டு, உருவம்
கொண்டு, மெய் உணர் பவன் கழல்கூடியது ஒப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள்"[112]

உயிர், ஆதியில் ஞானமயமானது; இடையில் வந்த பேதைமையின் மயக்கால் மாசடைகின்றது எனும் கருத்தை, பம்பை நீர் தூயதாயினும் இடையில் வந்த பாசத்தின் சேர்க்கையால் தூய்மை கெட்டுத் தெரிகிறது என்று முன்பும் உரைப்பார் கம்பர்.

உண்மையறிவு கிட்டாமையால், அவித்தையால், புரியும் வினைகளால் உயிர்கட்குப் பலப்பல பிறவிகள் உண்டாகின்றன. பல பிறவிகள் எடுப்பதனால் உயிர்கள் தாம் ஈட்டிய வினையின் பயன்களை நுகர்ந்து, உண்மையறிவினை மெல்ல மெல்ல எட்டுகின்றன.

பிறவிகள் பலவாதல்

இம்மெய்யறிவினைப் பெறுவதற்காகவே, தேவர், மனிதர், விலங்கு, தாவரங்கள் எனும் நாற்கதியிலும் பிறந்து உழன்று திரிகின்றன உயிர்கள்.

"உயரும் சார்பிலா உயிர்கள் செய்வினைப்
பெயரும் பல்கதிப் பிறக்கும்"[113]

என்கின்றார் கவிஞர்பிரான் கம்பர்.

சோலைகளிலும், பூங்காக்களிலும், நீர்த்தடங்களிலும் புகுந்து திரியும், சரயு நதிக்கு உயிர் உடல்கள் தோறும் பிறந்து திரியும் நிலையை

ஒப்பிடுகின்றார்.[114] வினையாவது தேவரை மனிதர் ஆக்குகிறது; மனிதரை இழிகுலம் ஆக்குகிறது; இழிகுலத்தை மிருகமாக்குகிறது; மீண்டும் மாந்தராக்குகிறது; தேவராக்குகிறது; இதற்கு, "முல்லையைக் குறிஞ்சியாக்கியும், மருதத்தை முல்லையாக்கியும், புல்லிய நெய்தலைப் பொருவரு மருதமாக்கியும் செல்லும்" சரயு நதி உவமையாகிறது.[115]

"திறந்து கிடந்த வாசல்கள் தோறும் நுழைந்து திரியும் பொருள் போல, ஓர் உயிரே, பல சரீரங்களை எடுக்கின்றன - கர்ம வேறுபாட்டினால்" என்பது நம்பிள்ளை ஈடு (1.2.2) "ஓதிய உடம்பு தோறும் உயிர் என" உலவியது சரயு நதி என்பது கம்பர் வாக்கு.

உயிரின் பயண இலக்கு

பள்ளத்துப் பாயும் நீர்போல், உயிர்களின் மனங்கள் எல்லாம் இராமனை நோக்கி ஓடின[116] என்பதால் உயிர்களில் பயணம் இறுதியில் சென்றடையும் இடம் சுட்டப்படுகிறது. ஆன்ம நதிகள் யாவும் இறைமை யெனும் பெருங்கடலில் அடைக்கலம் ஆவதே, உயிர்ப்பயணத்தின் இலட்சிய இலக்கு என்பது இங்கு உணர்த்தப்படுகிறது.

உயிரும் கரணங்களும்

உயிர் ஆகிய புருடன் உடம்பில் உள்ளவரையிலும் மான், அகங்காரம், சித்தம், புத்தி முதலிய அந்தக் காரணங்கள் பணிபுரியும்; புருடன் வெளியேறியவுடன் அவை செயல்படா என்னும் தத்துவ உண்மை,

"உயிர் இறப்புற்ற காலை, உள்நின்ற உணர்வினோடு
செயிர் அறுபொறியும் அந்தக் கரணமும் சிந்தும்"[117]

என்பதனால் சுட்டப்படுகிறது. உடல் எனும் புரியில் (கோட்டையில்) வசிப்பவன் புருடன் ஆகிறான். கோட்டையில் உள்ள மன்னன் வெளியேறினால் கோட்டை நாசமடைவது போன்று உடலும் புறக்கரணங்களும், அகக்கரணங்களும் உயிரின் வெளியேற்றத்தால் அழிந்தொழிகின்றன.

ஆன்ம ஞானத்தின் அருமை

மெய்ம்மையான ஆன்ம ஞானம் இல்லாத அறிவு, சீவர்களை வினைகளிலே புகுத்தி, பிறவிகளை மேன்மேலும் பெருகச் செய்யும்.

"மெய்யுற உணர்வுசெல்லா அறிவினை, வினையின் ஊக்கும்
பொய்யுறு பிறவி"[118]

உயிர்கள் படைக்கப்படுவதில்லை

"உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள்ளூற்று உலைவிலா உயிர்கள்தோறும் அங்கங்கே உறைகின்றானும்"[119]

என்பதனால் உயிர்கள், இறைவனைப் போல் அநாதியானவை என்னும் வைணவச் சிந்தாந்தக் கருத்துக்கு மாறாக, உயிர்களையும் இறைவனே உலகைப்போல் படைக்கின்றான் எனப் பொருள் தோன்றுமாறு உள்ள இடங்கட்கு எல்லாம் இங்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது.

உயிர்கள் அனாதியானவை; அவை இறைவனால் படைக்கப்பட்டவை அல்ல என்பது 'உலைவிலா உயிர்கள்' என்பதனால் சுட்டப்படுகிறது.

இறைவன் தன் அளப்பரிய கருணையினால், சூக்கும உருவிற் கிடந்த உயிர்கள் தோற்றப்படும் பொருட்டு பருவுடல் தந்து, அவை உலவி வாழ உலகு தருகின்றான். அவன், உரைமெழுகிற் பொன்போல, சூக்குமத்திற் கிடந்த அணு வடிவினவாகிய உயிர்கட்கு, தனு, கரண, புவன போகங்களைத் தந்தது மட்டுமல்லாமல், அவற்றின் உள்ளிருந்து, அந்தர்யாமியாய் அவற்றைக் கண்காணித்தும் வருகின்றான் என்பது,

"உலைவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்றானும்" என்பதனால் உணர்த்தப்படுகிறது.

"மன்னுயிரெல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன்"[120] என்று வேறிடத்தும் உரைப்பான். 'தானே வருவித்து' என்பது சூக்கும உடலிலிருந்து உயிர்கட்குத் தூல உடம்பு கொடுத்தலைக் குறிக்கும். 'வருவித்து' என்பதனால், முன்பே (சூக்கும உருவில்) இருந்ததை வரவழைக்கிறான் என்பது போதரும். ஒருநிலையிலிருந்து இன்னொரு நிலை அடைதலே உயிர்களின் சிருட்டி எனவும், மறைவு எனவும் குறிக்கப்படுகிறது. கதிரவன் "வரம்பில தோற்ற மாக்கள் இறக்குமாறு இது என்பான்போல் முன்னைநாள் இறந்தான்; பின்நாள் பிறக்குமாறு இது என்பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன்"[121] என்பதும் இக்கருத்தை உணர்த்தும். சூரியன் மறைவதும் இல்லை; பிறப்பதும் இல்லை; உலகச் சுழற்சியால் பிறப்பதும் இறப்பதும் போல நாள் தோறும் தோன்றுகிறான் என்னும் நுண்ணிய கருத்தைப் 'பிறவா வெய்யோன்' எனும் அடையால் குறித்தார். உயிர்களும் பிறப்பதும் இல்லை; இறப்பதும் இல்லை. அவை எடுக்கும் உடல் தோற்றங்கட்கே பிறப்பும் இறப்பும் சூக்கும், தூல நிலைகளில் தோன்றுகின்றன என்றவாறு.

உயிர்களும் ஒழுக்கமும்

உயிர்கள் உயர்நிலை அடைந்திருப்பினும் ஒழுக்க நிலை தவறின் கீழ்நிலை அடைதல் தவிர்க்க இயலாதது என்பதை உணர்த்துவனவே அகலிகை, விராதன், கவந்தன் வரலாறுகள். உயிர்கள் செய்ததற்கு இரங்கி இறைவனைப் போற்றின் இறையருள் கிட்டும்; மீண்டும் அவை தாம் இழந்த உயர்நிலையை அடையலாம் என்பதை யுணர்த்துவனவே இவர்களின் சாப விமோசனங்கள். உயிர்கள் தாழ்கதியில் இருப்பினும், உயர் ஒழுக்கம் பூணின், உயர்நிலை அடைதல் தவிர்க்க இயலாதது என்பதை உணர்த்துவனவே, சடாயு, சம்பாதி முதலியோர் வரலாறுகள்.

உண்மைக் கல்வி

உயிர்கள் இறைவனை அடைய நெறிகாட்டும் கல்வியே கல்வியாகும். அந்நெறி காட்டாக் கல்வி கல்வியாகாது.

இராவணன் ஆயிரம் வேதம்வல்ல அறிவாளன் ஆயினும், கல்விக்குரிய நல்ஒழுக்கம் பேணாமையின், 'கல்விநோக்கா மதியிலி'[123] என அவனை உவமிப்பார் கம்பர்.

இங்கு, "கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தன்"[124] எனும் ஆழ்வார் வாக்கு நோக்கத்தக்கது.

"கல்லாதவர் இலங்கை - குளவிக்கூடுபோலே கல்லாதவர் எல்லாம் திரண்டு வாழும் இலங்கை. கற்றவனான வீடணன் ஒருவன் இருக்கக் கண்டு, பொறுக்காமல், அவனையும் விரட்டி விட்ட அறிவு கேடர்க்கு இருப்பிடமான இலங்கை" என்று இத்தொடர்க்கு வியாக்கியானம் விரிவுரை தருவது உணரத் தக்கது.

"இராவணனைக் கல்வி நோக்கா மதியிலி" என்று குறிப்பித்த கம்பர், வீடணனைக் "கல்விக்கண் மிக்கான்"[127] என்று குறிப்பிடுவார். இந்தக் கருத்தை அப்படியே ஏற்று, "கற்றவனான வீடணன் ஒருவன்" என்று பெரியவாச்சான் பிள்ளை மேற்காணும் தொடரில் குறிப்பிட்டிருப்பது உணர்ந்து உணர்ந்து மகிழத் தக்கது.

கல்வியாவது, "மோட்சத்திற்கு உபயோகப்படுவதேயாகும், அது மோட்சத்திற்கு உறுப்பான பரம்பொருள் அறிவு. இலங்கையில் உள்ளார்க்கு அது இல்லை யென்பது பிரசித்தமன்றோ"[125] என்று இதனை மேலும் அவ்வியாக்கியானம் விளக்கும். வைணவ உலகு உயிர்கட்கு எதனைக் கல்வியாகக் கருதிற்று என்பதனை இது நன்கு விளக்கும்.

"கற்றதனால் ஆய பயன்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"[126]

எனும் வள்ளுவர் கருத்தும் இங்கு இணைவது காணலாம்.

உயிர்களின் ஒழுக்கநெறிக்கு ஏற்ற பெயர்கள்

கதை மாந்தர் சிலர்க்கு வைணவம் இட்டு வழங்கி வரும் காரணப் பெயர்களான பரியாயப் பெயர்கள், உயிர்களை அவற்றின் ஒழுக்க நெறியை வைத்து வைணவம் பகுத்துப் போற்றும் அருமையை விளக்கும்.

சுக்கிரீவனை 'மகராசர்' என்பதும், சடாயுவைப் 'பெரிய உடையார்' என்பதும், பரதனைப் 'பரதாழ்வார்' என்பதும், சத்துருக்கனனைச் 'சத்துருக்கன ஆழ்வார்' என்பதும், வீடணனை 'விபீடணாழ்வார்' என்பதும், அநுமானை '(சிறிய) திருவடி' என்பதும், இலக்குவனை 'இளையபெருமாள்' என்பதும் வைணவ மரபாகும்.[127]

வணங்காமுடி மன்னனாகிய இராவணன் முடியினைக் கவர்ந்து வந்த அருஞ்செயலால்[128] சுக்கிரீவன் 'மகராசர்' எனப்படுகிறான். சடாயு தசரதருக்கும் கிட்டாத சரமகிரியை என்னும் இறுதிச் சடங்கினை. இராமபிரான் திருக்கைகளால் செய்யப்பெற்ற பெரும்பேறு பெற்றமையால்[129] பெரிய உடையார் ஆயினார். ஆழ்வார்கள் என்று குறிக்கப்படும் பரதன், சத்துருக்கனன், வீடணன் மூவரும் இறைவனுக்காக இவ்வுலகியற் பொருள்களின் தொடர்பை மட்டுமின்றி உடல் தொடர்பாகிய தாய், தமையன், சுற்றம், மனைவி, மக்கள் அனைவரையும் துறந்து இராம பக்தியில் ஆழ்ந்தார்கள். "உனக்கே நாம் ஆட்செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்று"[130] என்று இறைபக்தியில் ஆழ்ந்து வாழ்ந்தவர்கள். பந்த பாசமாகிய உடல் தொடர்பை வெறுத்தலாகிய செயற்கருஞ் செயலைச் செய்தவர்களை, இறைவனின் பெருமையில் மட்டும் விரும்பி ஆழ்வார்களை 'ஆழ்வார்கள்' எனப் பொருத்தமுறச் சுட்டி மகிழ்கிறது வைணவ உலகம். குகனும்[131] இலக்குவனும்[132] காக்குங் கடவுளாகிய பெருமாளையே கங்கைக் கரையில் காத்த பெரும் ஆள்கள் ஆதலால் 'குகப் பெருமாள்', 'இலக்குமணப் பெருமாள்' எனக் கூறப்பட்டனர் எனலாம். அங்கதன் இராமன் தந்த உடைவாளையேந்திக் காத்ததனால் "அங்கதப்பெருமாள்" ஆனான்.

இராமனின் திருவடிகளை, பெரிய திருவடியாகிய கருடனைப்போல் யுத்தம் நிகழ்ந்த காலத்தில் சுமக்கும் பேறு பெற்றதால் திருவடி என அநுமன் பொருத்தமுற அழைக்கப் பெற்றான் எனலாம். "திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான்"[133] என்பது கம்பர் வாக்கு. கருடன் 'பெரிய

திருவடி' யாதலால், அநுமன், 'சிறிய திருவடி' எனப் பொருத்தமுற அழைக்கப் பெற்றான். 'ஈன்றவள் பகைவன்' என்று பரதனுக்கு ஒரு பெயர் இடுகிறார் கம்பர். "தொடக்கறுத்தோர் சுற்றம்" (3.2.27) என்று திருவாய் மொழி இறைவனுக்கு ஒரு பெயரிடுதலை இங்கு ஒப்பு நோக்கலாம்.

உயிர்கள் பல

"நில்லா உலகின் நிலைநேர் மையினால்
வல்லாரும் உணர்ந்திலர்; மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமர!"[133அ]

உலகம் அநித்தியம்; உயிர்கள் நித்தியம் (மன்னுயிர்) என்பதும், கோடி கோடி உயிர்வருக்கம் இவ்வுலகில்கூடி நிறைந்துள்ளன என்பதும் இங்கு தெளிவுறச் சுட்டப்படுகின்றன. (மன்னுயிர் - நிலைத்த உயிர்)

உயிர்கள் பல இல்லை; ஒன்றே; பிரம்மமும் உயிரும் ஒன்றே எனும் அத்துவைதக் கருத்து, இங்கே மறுக்கப்பட்டு உயிர்கள் பல அவை அழிவற்றவை; என்னும் விசிட்டாத்துவிதக் கருத்து இங்கு நிலைநாட்டப்படுகின்றது. இங்கு "வல்லாரும் உணர்ந்திலர்" என்னும் தொடரில், "வல்லார்" என்று கம்பர் அத்துவைதிகளைக் குறிக்கின்றார் என்று தெரிகிறது.

சேதன மன்னுயிர்

உயிர்கள் அறிவை யியல்பாக உடைய சேதனம் (சேதநம் - அறிவு) என்று வைணவக் கோட்பாடு கூறும். வைணவ மரபில் அடிக்கடி வழங்கப்படும் சேதனர் என்னும் சொல்லை உயிரோடு சேர்த்து, "சேதன மன்னுயிர்"[134] என்றே கம்பர் குறிப்பிடுகிறார்.

இதனால், உயிர்கள் ஞானமயமானவை; நிலைத்தவை என்னும் வைணவக் கருத்துக்கள் "சேதனம்", "மன்" என்னும் அடைமொழிகளால் (சேதனம் - அறிவுடைப் பொருள். மன்னுதல் - நிலைத்திருத்தல்) நன்கு சுட்டப்படுகின்றன.

ஆதி யந்த மற்றவை

வந்த முறையாகிய ஆதியும், முடிவாகிய அந்தமும் அற்றவை உயிர்கள் என்பது இராமன் வாயாலேயே சுட்டப்படுகிறது. .

"முறையும் முடிவும் இலைமொய் உயிர் என்று
இறைவன் இளையானொடும் இயம்பினனால்"[135]

இங்கு உயிர் அனாதி யெனும் வைணவக் கருத்துக் குறிக்கப்படுகிறது.

பின்னமாய் ஒன்றாதல்

உயிர்கள் "பின்னமாய் ஒன்றாதல், பிரிந்தேயோ? பிரியாதோ?"[136] என்பது விராதன் கூற்று.

பின்னமாய் ஒன்றாதல் என்பது உயிர்களை உடலாய்க் கொண்டு இறைவன் உள்ளுறைகிறான் என்னும் விசேடமான அத்துவிதத்தை, விசிட்டாத்துவத்தை, (சிறப்பான இரண்டன்மைக்) கொள்கையைச் சுட்டுவது.

பின்னமாய் ஒன்றாதல், சிருட்டி லயங்களையும் சுட்டுகிறது. உயிர்களையெல்லாம் உடல் தந்து உலகுக்கு அனுப்பும்முன்பு, ஒவ்வொன்றாய், ஆனால், உரைமெழுகில் பொன்போல் அவை, ஒன்றாய் உறைந்திருக்கும். இலய காலத்தில் சூக்கும வடிவில் ஒட்டியிருந்த உயிர்கள் சிருட்டியில் உடல்தோறும் பின்னப்பட்டு, தனித்தனி வடிவம் பெறுகின்றன. உடல் பெற்று இறைவனிடமிருந்து வேறுபட்டுப் பிரிந்தாலும் இறைவன் அவ்வுடல் உயிர்களுக்குள் அந்தர்யாமியாய் உள் இருத்தலின் அப்போதும் அவன் உயிர்களைப் பிரிவதில்லை. இதனைப் "பின்னமாய் ஒன்றாதல் பிரிந்தேயோ பிரியாதோ?" எனக் கவிதை நயமுற வினாவுகின்றார் கம்பர் பெருமான். "விசிஷ்டஸ்ய அத்துவிதம்" எனும் சொல்லின் பொருளை ஓரடியில் கவிச்சுவை பட விளக்கியுள்ள திறம் இங்கு காணலாம்.

உயிர்ப் பயணத்தின் இறுதி

உயிர்கள் ஞானத்தாலும் யோகத்தாலும் சேவையாலும் தெய்வ பதவி எய்தலாகும் என்பது கம்பர் கருத்தாதல் தெரிகிறது.

ஞானமும் தவமும் யோகமும் நிறைந்த வசிட்டரை மும்மூர்ததிகளுக்குப் பின்வரும் நான்காவது மூர்த்தி என்று குறிப்பிடுகிறார்.

"தேவரும் முனிவரும் உணருந் தேவர்கள்
மூவரின் நால்வனாம் முனி"[137]

வசிட்டன் என்கின்றார்.

ஞான பலத்தாலும் தியாக ஈட்டத்தாலும் யோக நலத்தாலும் சேவை வலத்தாலும் அனுமான் நாலாவது இறைவர் பதவிக்கு உரியவன் ஆகின்றான் என்கின்றார் கவிஞர்பிரான்.

"இறைவர்கள் மூவர் என்பது எண்ணிலார் எண்ணமேதான்
அறைகழல் அநுமனோடு நால்வரே தெரியின்"[138]

என்பது அநுமன் நான்காவது இறைவன் என்பதைக் கம்பர் குறிப்பிடும் இடமாகும். உயிர்கள் தம் ஞானத்தாலும் தவத்தாலும் யோகத்தாலும் தியாகத்தாலும் எய்துவது தெய்வ நிலை என்பது இங்கு தெளிவாகக் காணலாம்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”[139]

எனும் வள்ளுவர் கருத்தோடு இது முழுவதும் இணைவதனைக் காணலாம்.

எனவே, உயிர்களின் பயணம் தெய்வநிலை அடைதலில் நிறைவுறுகிறது. இறைவனின் கருணையில் பிறப்பெய்துகிற உயிர்கள், இறைநிலை அடைதலில் தம் பயணத்தை முடித்துக் கொள்வதாகக் கம்பர் காட்டும் பாங்கு இதனால் தெளிவாம்.

4

நெறி இயல்பு

ஐவகை நெறிகள்

பிறவியால் துன்புறும் உயிர்கள், இப்பிறவிச் சூழலிலிருந்து மீண்டும் உயிர்ப் பணத்தின் இறுதிக் குறியாகிய முத்தியையடைய அவை செல்ல உரிய நெறிகளை, கருமயோகம், ஞானயோகம், பத்தி யோகம், பிரபத்தியெனும் சரணாகதி, ஆசாரிய அபிமானம் எனும் ஐவகையாகக் கொள்கிறது வைணவ சமயம்.

இவ்வைந்தனையும் பக்தி, பிரபத்தி என்ற இரண்டில் அடக்கிக் கூறுவதும் உண்டு. கருமம், ஞானம், பத்தி ஆகிய மூன்று நெறிகளைப் "ப்க்திநெறி" என்றும் பிரபத்தி, ஆசாரிய அபிமானம் என்னும் இரண்டனையும் "பிரபத்திநெறி" என்றும் கூறுவது வைணவ மரபு.[1]

கருமயோகம்

வைணவம், கீதை சொல்லும் நிட்காமிய கருமத்தையே கருமயோகம் எனக் கருதுகிறது. விரதம் இருத்தல், புண்ணியத் துறைகளில் சென்று படிதல், வேள்வி செய்தல், மந்திரம் ஓதல் முதலியவையும் கருமயோகத்தில் அடங்கும். பரம் பொருளிடம் காட்டும் பத்தியின் ஒரு பகுதியாகவே கருமயோகமும் வைணவத்தில் கருதப்படும்.[2]

மாலை புனைந்தேத்தல், வேள்விசெய்தல், தந்திர வழிபூசை செய்தல் மந்திர நாம செபங்கள் என்னும் செயல்களால் மனம் ஒடுங்கி நிற்றல் ஆகியவற்றையும் கரும யோகம் எனக் கருதுகிறார் பொய்கை யாழ்வார்.

"சொல்லும்தனையும் தொழுமின், விழும் உடம்பு
செல்லும்தனையும் திருமாலை - நல்லிதழ்த்
தாமத்தால், வேள்வியால், தந்திரத்தால், மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று"[3]

என்பது அவர் வாக்கு.

இறைத்தொண்டு, மனம் ஒடுங்கி அட்டாங்க யோகத்தில் ஈடுபடவும், அதன் வழி, தரும பூத ஞானத்தை (சீவனிடம் காணப்படும் அறிவை) ஆன்மா அடையத் துணை செய்யவும் வல்லது. கரும யோகத்தைச் செயல்களால் செய்யும் வழிபாடு என்பர்.[4]

ஞானயோகம்

செயல்களால் செய்யும் வழிபாடான கருமயோகத்தால், அதில் அடங்கும் அட்டாங்க யோகத்தால், மனம் ஒடுங்கிய நிலையில் ஞானயோகம் சித்திக்கிறது. இதனைத் "தொக ஒருங்கிய ஞானம்"[4-அ] என்பார் கம்பர்.

"உள்ளம், உரை, செயல் உள்ள இம்மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை உள்ளில் ஒடுங்கு"[5]

என நம்மாழ்வார் குறிப்பிடுவது இந்த ஞானயோகமே. இராமாநுசரும், ஆத்ம தியானம் அல்லது உபாசனை என்பதையே 'ஞானம்' எனக் குறிப்பிடுகிறார்.[6] அத்வைதிகள் கூறுவதுபோல், துறவு நெறி நின்று மேற்கொள்ளும் தத்துவ விசாரமோ, நிர்க்குணப் பிரம்ம உபாசனையோ இங்கு ஞானயோகம் எனக் கூறப்படுவதில்லை. இறைவனிடம் பெரும் பத்திமைத் திறத்தை உருவாக்கும் உபாசனையையே 'ஞானயோகம்' என்கிறது வைணவம்.

பக்தியோகம்

கரும, ஞான யோகங்களின் வளர்ச்சியாலும், இறையருளாலும் ஒருவனுக்குப் பக்தியோகம் கைகூடுகிறது. கருமயோகத்தால் விளைந்த ஞான அனுபவத்தால் சீவன் தனக்குள்ளே இறைவனைக் காண்கிறான். அதனால் உயிர்க்கு ஏற்படும் கனிவே பக்தியாகிறது. கருமம் → ஞானம் → பக்தி என்பது நெறியின் சூத்திரமாகிறது.

"கரும ஞானங்களால் அலங்காரம் பண்ணப்பட்ட மனத்தை யுடையவனுக்கு" என்கிறபடியே, அவை இரண்டும் உண்டானால் வருவதுவே யன்றோ பக்தி– முற்பிறவியில் கர்மங்கள் முடிந்த அளவிலே

மரணம் உண்டானால் அடுத்த பிறவியிலே ஞானம் உண்டாகக் கடவது. ஞான கர்மங்கள் உண்டானால் பக்திகூடி அல்லது நில்லாது. (ஈடு.5.7.1)

"பக்தி கூடியல்லது நில்லாது" என்றது, "பக்திச்ச ஞான விசேஷ" என்றும், "ஞானம் கனிந்த நலம்" என்றும் சொல்கிறபடியே, ஞானத்தின் பரிபாகம் பக்தியாகையாலே, ஞானம் பக்தியோடு கூடியதாகவே யிருக்கும் என்றபடி... (ஈடு - புருஷோத்தம் நாயுடு அடிக்குறிப்பு) பக்தியானது, கரும ஞான யோகங்களை அங்கமாகக் கொண்டு, தான் அங்கியா யிருக்கும்.

செயல்களால் செய்யும் வழிபாடாகிய கரும யோகத்திற்கும் இடைவிடாத சிந்தனையால் செய்யும் ஞான யோகத்திற்கும் வேறாக, இதயம் கனிந்து நின்று செய்யும் வழிபாடு பக்தியோகம் ஆகிறது. இப்பக்தி என்பது அடிப்படையான மனித உணர்ச்சியைப் புறக்கணிப்பதன்று. தன் சகோதர மனிதனிடம் அன்பு காட்டாதவனை 'பக்தன்' என முடியாது என்பது வைணவ நெறி.

"பிறர் நோவு கண்டவிடத்து ஐயோ என்று இரக்கம் பிறக்குமானால் நமக்குப் பகவத் சம்பந்தம் உண்டு என்று தெரிந்து கொள்ளலாம். 'இத்தனையும் வேண்டும் அவனுக்கு' என்ற நினைவு எழுமானால் நமக்கு பகவத் சம்பந்தம் இல்லை என்று தெரிந்து கொள்ளலாம்"[7] எனப் பக்திக்கும் பக்தனுக்கும் இலக்கணம் வகுக்கும் மரபினையுடையது வைணவ சமயம். இதனால், சகோதர மக்களிடம் இதயக் கனிவு இல்லாதவர்களுக்கும் இறைவனிடம் பக்தி பிறக்க முடியாது என்ற உறுதியினை வைணவம் கொண்டிருப்பது நன்கு விளங்கும்.[8] இதனால்தான் சகோதரர் அல்லாதவரையும் சகோதரர் ஆக்குகிறது இராமாயணம்.

ஆயிரக்கணக்கான பிறவிகளில் தவமும் ஞானமும் சமாதியும் பழகுவதால், மக்கள் பாவம் தேயப் பெறும்போது பக்தி பிறக்கிறது.[9]

ஐம்பொறி வழிபட்டு, முத்தி நெறியறியாது உலக விடயங்களில் சென்று திரிகின்ற மனம், அவற்றால் அடிபட்டு உணரத் தொடங்கி, முத்தி நெறியினையடைய ஒருமுகச் சிந்தனையுண்டாகி, இறைவனை யுணர்ந்து, முன்பிறவிகள் பலவற்றில் சிறிது சிறிதாக இறைவன் மேல் உண்டான அன்பின் தொகுப்பால் இறைவனையறிந்து தொழத் தொடங்குகிறது. அதனால் விராதன் இராமனைத் தொழத் தொடங்கினான் என்கின்றார் கம்பர்.[9-அ]

"பொறியின் ஒன்றி அயல்சென்று திரிபுந்தி உணரா,
நெறியின் ஒன்றி நிலைநின்ற நினைவு உண்டதனினும்

பிறிவில் அன்பு தனி பண்டுடைய பெற்றி தனினும்
அறிவு வந்ததுவ நம்பனை யறிந்து பகர்வான்”

(கம்ப. 3.1.47)

பிரபத்தி நெறி

இறைவனிடமே அன்பு பூண்டிருக்கை பக்தி; இறைவனையே உபாயமாகக் கொண்டிருக்கை பிரபத்தி.[10]

இறைவன் நாம் சென்றடைகிற இலக்காகக் குறியாக உள்ளான் என்பதோடு, அவனே அக்குறியை அடையும் நெறியாகவும் உள்ளான் என்று உணர்ந்து கடைப்பிடிப்பது பிரபத்தி யெனப்படும் சரணாகதி நெறியாகும். இந்நெறி கரும ஞான பக்தி நெறிகள்போல, கடைப்பிடிப்பதற்கு அரியதாக அன்றி எளிதாக இயங்குவது. ஆண், பெண், உயர்ந்தோர், தாழ்ந்தோர், சாதி குலம் பிறப்பென்னும் வேறுபாடுகளின்றி அனைவரும் கடைப்பிடிக்க வல்ல எளிய நெறி இது.

“எல்லா அறங்களையும் வாசனையற விட்டு, என்னையே சரணாகப் பற்று; உன்னைப் பாவங்கள் அனைத்தினின்றும் விடுவிக்கிறேன்; துயருறாதே, முக்குண மயமாயும், தெய்வீகமாயுள்ள எனது இம்மாயை தாண்டற்கரியது. என்னைச் சரணாகப் பற்றியவனே அதனைத் தாண்டுவான்”[10-அ] என்னும் கண்ணனின் கீதை வாக்கியங்களாகிய சரமசுலோகங்களை மூல மந்திரமாகக் கொண்டு இயங்குவது சரணாகதி நெறி.

ஆசாரிய அபிமானம்

சரணாகதி நெறி சார்ந்த பிரபந்நனால், நேராகப் பகவானையடைய முடிவதில்லை. பகவானிடம் பரிந்துரை செய்ய, பரிந்துரைப்பான என்னும் ஒரு புருடகாரி தேவைப்படுகிறான். அப் புருடகாரி அவனுடைய குரு ஆகிறார். அவர் மூலமாக அவன் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகிறான். தன் முயற்சி என்ற சுமையைக் குருவின் மேல் சுமத்தித் தனக்காகப் பரிந்து பேசும்படி அவரை வேண்டிக் கொள்கிறான். ஆகவே, ஆசாரிய அபிமானமும் ஒரு வகையில் (பிரபத்தியின்) சரணாகதியின் விரிவாகவே உள்ளது. வைணவ சமயத்தில், சரணாகதித் தத்துவத்தில் ஒரு புதிய, சிறந்த பகுதியாக ஆசாரிய அபிமானம் விளங்குகிறது.

இந்த ஐவகை நெறிகளும் ஏற்ற பெற்றி கம்ப ராமாயணத்தில் காணப்படுவதை இவ்வியல் ஆய்கிறது.

நெறிகளின் மூலம் வேதம்

இறைவனை அடையும் நெறியை வேதமே உலகிற்குக் கொடுத்தது. "வேதநூல் மரபிற்கேற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும்."[11] என்பதனால் இதனைக் கம்பர் சுட்டுவார்.

"மறையில் கூறும் எள்ளல் ஆகாத மூலத்து யாதுக்கு முதலாய் உள்ள வள்ளல்"[12] என்பதனால் வேதம் இறைநெறியையே மூலமாகக் கொண்டது தெளிவாம். இதனால்தான் "தக்க நெறி"யும்[13] எனத் திருவாய் மொழித் தனியன் இந்நெறியைத் தகுதி அடையோடு சுட்டும். வேதம், மக்கட்கு ஆகாத, அடாத நெறி எதையும் இயம்பாதது. அந்த வேத நெறியை விடாமல் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டு அரசியல் புலமை நிரம்ப நாடாண்ட வேந்தர் வேந்தன் தசரதன். இத்தகைய வேதநெறி தவறாத வித்தக வயலில் தான் வேதநாயகன் ஆன இராமனாகிய அறக்கன்று முளைக்க முடிந்தது என்பது கம்பர் பிரானுடைய கருத்து.

"அடா நெறி அறைதல் செல்லா அருமறையறைந்த நீதி
விடா நெறிப் புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர்வேந்தன்"[13-அ]

என்பது தசரதன் பற்றிய கம்பர் வாக்கு.

இராமன் நெறியே வேதம்

இராமன் நடந்த நெறியே வேதநெறி என்பது கம்பர் துணிபு.

"நின்செய்கை கண்டு நினைந்தனவோ வேதங்கள்
உன் செய்கை அன்னவைதாம் சொன்ன ஒழுக்கினவோ"[14]

என்பதனால் இக்கருத்தைச் சுட்டுவார். இதனால்தான், இராமனே வேதம் எனக்கொண்டு, "விராவரும் புவிக்கெலாம் வேதமே ய(ன்)ன இராமன்"[15] என்று துணிவார்.

பயன் கருதாநெறி கருமயோகம்

பயன் கருதாமல் அறச் செயல்களைப் புரிந்து வருதலே கரும யோக நெறியின் சுருங்கிய விளக்கம்.

கருடன், நாக பாசத்தாற் கட்டுண்டார்க்குப் பெறுவதற்கரிய உயிரினை நல்கி, அதற்குப் பரிசும் பயனும் எதிர்நோக்காது சென்றமையைக் கூறும் இராமன், பயன் கருதாப் பணியாகிய கரும யோகத்தின் இயல்பினைச் சுட்டிப் புகழ்கிறான்.

"ஆரியன் அவனைநோக்கி, ஆருயிர்உதவி, யாதும்
காரியமில்லான் போனான்; கருணையோர் கடன்மையீதால்!

பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்தும் என்னார்
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம்"16

என்றான்.

இங்கு, உதவி புரிந்து, அதனால் எக்காரியமும் எதிர்பாராமையும், ஊதியம் கருதிச் செயல் புரியாமையும், கருணையினால் செயல்புரிதலும், மாரிபோல் கைம்மாறு வேண்டாக் கடப்பாடாகச் செயல்களைக் கருதலும் ஆகிய கரும யோகத்தின் செயல்கள் தெளிவுறச் சுட்டப்படுள்ளமை நோக்கலாம்.

கீதையில் கண்ணன், தேக சந்நியாசத்தைக் கூறாமல், கரும சந்நியாசத்தையே கூறுகிறான். ஒருவன் தான் இருக்கும் இடம், நிலைமை, இவைகளுககுரிய கடமையிலிருந்து ஓடிப்போக முயல வேண்டும் என்று கீதை போதிக்கவில்லை.

"தம்முடைய அறிவுக் கூர்மை, திறமை, பண்புகள், நினைவுகள், உணர்ச்சிகள் - இவற்றை ஆண்டவனது அடிமலர்களில் படைத்து, செருக்கோ, தனது செயல்களில் விளையக்கூடிய பயன்களைப் பற்றிய நினைவோ இன்றித் தனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தற்கான நன்றியுணர்ச்சியுடன் இறைவனைப் போற்றியவாறே செயல் புரிவது கருமயோகம்"[17] "உலகின் கருமத்தின் நின்ற கவிசேனை வெள்ளம்"[17-அ] என்பதிலும் கருமயோக நெறியின் நுண்பொருள் சுட்டியுள்ளவை காண்க. கம்பன் காவியத்தில், இராமனைச் சூழ்ந்த நற்பாத்திரங்கள் அனைவரும் இக்கரும யோக நெறிப்படியே செயல்படுகின்றனர். அவர்கள் யாரும் தம் செயல்களுக்குப் பயன் பெறக் கருதவில்லை. மாறாக, இச்செயல் செய்ய வாய்ப்பு நல்கிய இறைவனுக்கு நன்றியே செலுத்துகின்றனர்.

கருமயோகி சனகர்

"சனகர் முதலானோர் கர்மத்தினாலே சித்தி யடைந்தனர்"[18] என்பது கீதை. கம்பர், சனகன் கர்மயோகி எனும் கருத்தைத் தெளிவுறக் குறிப்பிடுகிறார். சீதை, அசோக வனத்தில், ஒரு தீங்குமின்றி இருந்ததற்கு, கரும யோகத்தை இறைவனை யடையும் வழியாகக் கொண்ட தந்தை சனகன் புரிந்த அக்கரும யோகத்தின் பலன்கள் தாம், அவளைக் காத்தனவோ என்னும் கருத்தில் "சனகன் நல்வினைக் கருமமே காத்ததோ?"[19] என்று கூறி மகிழ்கிறார்.

இங்கு, நல்வினையெல்லாம் கருமயோகம் என்பது கம்பர் கருத்தாதல் காணலாம்.

சாந்த நிலை கருமயோகம்

தசரதன், இராமனை முடிசூட்டிக் கொள்ள வேண்டும்போது,

"தாதை அப்பரிசு உரை செயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்; கடன் இது என்று
உணர்ந்தான்"

என்பதனால், ஒரு கர்ம யோகிக்குரிய சாந்தநிலை, இந்திரியங்களை வென்ற சிதேந்திரிய நிலை சுட்டப்படுகிறது. இங்கும் கரும யோகத்தைக் கம்பர் கடன் எனும் பெயரால் குறிப்பிடுவதைக் காணலாம். "கடன் என்ப நல்லவையெல்லாம்; கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு"[21] எனும் குறட்கருத்தும் இங்கு நினையத் தகும்.

"எல்லாச் செயல்களும் கடவுளுக்கென்று சமர்ப்பித்துவிட்டு, பற்றுதல் நீங்கி, எவன் செயல் புரிகின்றானோ, அவனைப் பாவம் தீண்டுவதில்லை, - தாமரையிலை நீர்போல"[22] என்பது கீதை. இந்தக் கருமயோகக் கருத்தின் விளக்கமாகவே, இலக்குவன், குகன், அநுமன் முதலியோர் செயல்கள் அமைந்துள்ளன.

இராமன் காட்டிய கருமயோகம்

இராமன் துறையாடினான்; வேத வித்துக்களின் ஆசிரமங்களை நாடினான், உணர்வுடையோர்களால் உணரப்படும் இறைவனைக் கைதொழுதான், எரியோம்பினான், ஞானிகளின் காதலுக்கு அமைந்த விருந்தாயினான்[23] என்பன வெல்லாம் உலகோர் ஒழுக வேண்டிய நெறிகளைத் தான் ஏற்று வாழ்ந்து காட்டியதாகும். இதனையே, இராமன் அவதார நோக்கமாகக் கூறும் சுந்தரக் காண்டப் பாடலில் "உலகம் பூணச் செந்நெறி செலுத்தப் பிறந்தவன்"[24] என்பதனால் சுட்டுவார். மேற்கூறிய இராமன் செயல்கள் எல்லாம் பயன்கருதிச் செய்யாத நிட்காமிய கருமங்களாகும்.

அறநெறிகளே கருமயோகம்

அறநெறிகள் யாவும், செய்தற்குரிய கருமங்கள் ஆதலால், வைணவ நெறிப்படி, அறங்கள் யாவும் கரும யோகத்தின்பாற் படும். "கடன் என்ப நல்லவையெல்லாம்"[25] என்பதனால் நல்ல செயல்கள் அனைத்தும் செய்ய வேண்டிய கருமங்கள் ஆகின்றன என்பதனை யுணரலாம். கரும யோகத்தின் உறுப்பாகிய யோக நெறியின் எட்டு உறுப்புகளுள் முதலாவதாகிய இயமம் என்பது, இவ்வறச் செயல்களையே குறிக்கும்.

"பொய், கொலை, களவே, காமம், பொருள் நசை
இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்"

என்பது அடியார்க்கு நல்லார் மேற்கோள் (சிலம்பு அடியார் நல் உரை 14 ஊர்காண்)

நிட்காமிய கருமமே அறம்

கரும யோகத்தின் பாற்பட்ட அறநெறி, "இம்மைச் செய்தன மறுமைக்குஆம்"[26] எனும் வணிக நோக்கில்லாத நிட்காமிய கரும நெறிப்பட்டது. "ஈறில் நல்லறம்"[27] என்தனால் அறநெறி என்றும் அழியாதது என்பார் கம்பர். "பொன்றாத் துணை"28 என்பார் வள்ளுவனாரும். "வாழ்மைதான் அறம்பிழைத்தார்க்கு வாய்க்குமோ"[28-அ] என்பதனால், அறநெறி வழுவினோர் அனைவரும் அழிவது உறுதி. "பூவின்மேல் புனிதர்க்கேனும் அறத்தினது இறுதி வாழ்நாட்கு அஃது இறுதி"[28-ஆ] என்பது ஆசிரியரின் உறுதியாகிறது.

இராவணன் இவ்வுறுதியை உணராமையாலேயே இறுதியை எய்தினான்.

"அறத்தினால் அன்றி அமரர்க்கும் அருஞ்சமர் கடத்தல் மறத்தினால் அரிது"[29] என்பதனை இராவணனுக்கு உணர்த்த நடந்ததே முதல் நாட்போர். இராமாயணத்தைச் சுருங்கச் சொல்வதென்றால், அறவழி நிற்போருக்கு, (அஃறிணை உயிர்கள் உட்பட) அனைவரும் உதவுவர், அந்நெறி நில்லார்க்கு உற்றாரும் உதவார் என்பதாய் முடிவதை உணரலாம்.

அறங்காக்கவே அவதாரம்

இறைவன் மண்ணிற் பிறப்பதே, அறம் மண்ணில் அழிந்துவிடாமற் காப்பதற்காகவேயாம்.

"மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை யயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் துணி வில்
தூக்கி
அறைகழல் இராமனாகி அறநெறி நிறுத்த வந்தது"[30]

"கீதையில் கண்ணன் அறங் குன்றும்போதெல்லாம் அவதரிப் பேன்"[30அ] என்று உரைப்பது இங்கு உரைக்கப்படுகிறது.

கம்பரும் அறநெறியும்

கம்ப ராமாயணம் போல் அறநெறியை வற்புறுத்தும் காவியம் காணற்கரியது எனலாம். "சிவபெருமானும், முருகப் பெருமானும்

திருமாலும் முதலிய யாவரே யாயினும், யார் அறத்திற்கு எதிர்நெறியிற் செல்கிறார்களோ அவர்களை வேரறுப்பேன், அஞ்சன்மின்"[31] என முனிவர்கட்கு அபயம் அளிப்பான் இராமபிரான்.

"சூர் அறுத்தவனும், சுடர் நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும், ஓம்பியும்
ஆர் அறத்தினோடு அன்றி நின்றார்? அவர்
வேர் அறுப்பன் வெருவன்மின் நீர்"

என்பது இராம வாக்கு.

இதன் விளக்கமாக நிகழ்வதுதான் வாலி வதம். சிவ பக்தனாயிலங்கியும், அறத்தின் பக்கம் சாராது, இராவணனாகிய பாவத்தின் பக்கம் சார்ந்தா னாதலின் வாலி வேரறுக்கப்பட்டான்.

உலகில், "அவ்வவர் துறை தொறும் அறம் திறம்பாதிருப்பரேல்" (கம்ப. மந்தரை[54]) உலகம் இன்னலுறவே வாய்ப்பில்லை என்பது கம்பர் கருத்து.

"அவ்வவர் துறைதொறும் அறம்திறம்பலர்
எவ்விடர் வந்து அடுப்பது?" என்பது தசரதன் வினா.

முனிகுமாரன் சுரோசனனால் தசரதன் சாபம் பெற்ற வரலாறு பல அறங்களை உரைக்கிறது. அது, பெற்றோர்ப் பேணலின் பெருமித உச்சியைத் தொடுகிறது. நற்பிள்ளைமேல் பெற்றோர்க்கு உள்ள பாசத்தின் பேராற்றலை உணர்த்துகிறது. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து வேந்தனும் வெந்து கெடுவான்[32-அ] என்னும் பொய்யா மொழியைப் பொய்யா மொழியாக்குகிறது. சத்தியமே பேசினால், சாபமும் வரமாகும் என்பதனை யுணர்த்துகிறது.[32-ஆ] (முனிமகனைத் தானே கொன்றதாகச் சத்தியம் உரைத்ததனால், பிள்ளைப்பேறு எய்தும் பெருவரம் பெற்றான் தசரதன்)

"சிந்தை தளர்வுற்று அயர்தல் சிறிதும இலனாய், 'மைந்தன் உளன்' என்றதனால் மகிழ்வோடு இவன் வந்தனனால்" என்பது கம்பர் வாக்கு (கம் பா.1692)

"அறம் பிழையாதார்க் கெல்லாம் ஏய்வன நலனே யன்றி, இறுதி வந்தடைவ துண்டோ?"[32-இ] எனும் வினாவில் அறம் பிழைத்தார்க்கு இராவணன் போல் இறுதி வந்து அடைந்தே தீரும் என்பது குறிப்புப் பொருளாய் நிற்கிறது.

“அறந்தலை நின்றார்க்கில்லை அழிவெனும் அறிஞர் வார்த்தை சிறந்தது”[33] என்பது கவிஞர் அறத்தின்பால் வைத்துள்ள உயர்ந்த மதிப்பீடு காட்டுவது.

“அறம் பொன்றுங் கால் பொன்றாத் துணை யென்று” அறத்தை அழியாத துணை யென்று வள்ளுவனார் கூறியிருத்தலால் கம்பர் வள்ளுவனாரை அறிஞர் என்கிற பரியாயப் பெயரால் குறிப்பிடுகிறார் என்று தெரிகிறது.

அறநெறி வழுவியது இலங்கை

அறநெறியில் ஈட்டி, பிறர்க்குக் கொடுத்து வாழ உதவும் செல்வம் புண்ணியக் களஞ்சியம் ஆகிறது. பாவநெறியில் ஈட்டி, ஈயாமல் குவித்து வைத்துள்ள இலங்கைச் செல்வம், இதனால் பாவக் களஞ்சியம் ஆகிறது.

“ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த
பாவ பண்டாரம்”[34]

என இக்கருத்துச் சுட்டப்படும்.

இதனால் ஈயத் தெரியாத மனமுடையார் எல்லாரும் அரக்கர் இனத்தைச் சேர்வர். அவர் ஈட்டி வைப்பது பொருட்களஞ்சியம் அன்று. பாவக் களஞ்சியம் என்பது கம்பர் கருத்தாதல் தெளிவாகிறது.

அறநெறியோடு வாழ்வதே நெடுங்காலம் புகழோடு நிற்க உதவும் நெறி. அது ஒப்பற்ற நெறி. சாதியால் வாழும் நெறி புல்லியது. அது சிறிது காலமே வாழ உதவும் சிறுநெறியாகும்.

“நீதியால் வந்த ஒரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்த சிறு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்த சிறு நெறியறியான் என்தம்பி”[35]

என வீடணன் புகழ் பேசப்படுகிறது.

“நிந்தனை நறவமும் (மதுவும்), நெறியில் ஊன்களும்”[36]

உடல் கொழுக்கத் தின்று கிடந்த இலங்கைநெறி அழிக்கப்பட்டது. “வருந்தி வந்தவர்க் கீதலும வைகலும் விருந்து”[37] மாக வாழ்ந்த அயோத்திநெறி வாழ்வு பெற்றது. இலங்கைக்குள் அறம் புகாமல் அடைக்கப்பட்டதால்,[38] அதனுள் அழிவு புகுவது தடுக்கப்பட முடியவில்லை. “அறம்புகாமல் நின்று அழிந்தது இலங்கை மாநகரம்”

அறமும் அயோத்தியும்

அயோத்தியில், கல்வியெனும் விதையில், கேள்வி எனும் கிளை படர்ந்து, முயற்சியெனும் தழை தழைத்தது; அன்பெனும் அரும்பரும்பி, தருமம் எனும் மலர் மலர்ந்து, முத்தியெனும் கனி கனிந்தது. அதனால், அது இறைவன் இங்கு வந்து வாழ்ந்த மண்ணுலகப் பரமபதம் ஆயிற்று. "ஒண்ணுமோ இதனின் வேறொரு யோகம் உறைவிடம் உண்டென உரைத்தல்?" (நகரப் -5)

"மநுவின்நெறி புக்கதேல் அவ்விலங்கும் புத்தேளிா"[40] என்பதை விளக்குவது கிட்கிந்தா காண்டம்.

"தக்க இன்ன, தகாதன இன்ன என்று ஒக்க உன்னலராகின் உயர்ந்துள மக்களும் விலங்கே"[41] என்பதை விளக்குவது யுத்த காண்டம்.

உயிர் எல்லாப் பொருளினும் சிறந்ததாயினும், அறத்தின் கூறாகிய ஒழுக்கமிருந்தாலன்றி, இம்மை மறுமை வீடுகளிற் பயன்பெறாமையால் உயிரினும் ஒழுக்கம் நன்றாகிறது. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் கருத்து.[42] அதனால் "ஒன்றுரைத்து உயிரினும் ஒழுக்கம் நன்றெனப் பொன்றிய புரவலன்"[43] தசரதன் ஆகிறான். "ஒன்றுரைத்து (வாய்மை தவறாது ஒரு மொழியே உரைத்து) என்றதனால் இராமனுக்குரிய ஒரு சொல், ஓர் இல், ஒரு வில்" என்பவனவற்றுள் "ஒரு சொல்" என்பது தசரதன் பிறப்புரிமையாக இராமனுக்கு வந்தது என்பது புலனாகிறது.

சான்றோர் சொற்கள் அறம்

"சான்றோர் உரைக்கும் நெறியே தருமமாகின்றது. மகுடஞ் சூடுதல் சான்றவர் உரைசெயத் தரும மாயதே"[44] என்பார்.

"அறத்துறை நெறியில் எண்ணித் தீயவர்ச் சேர்கிலாது, செவ்வியோரையே துணையாகக் கொள்ளுங்கள், தாயினும் உயிர்க்கு நலம்பூணும் சவரியை யடைந்து, அவள் காட்டும் நெறியில் செல்லுங்கள்"[45] என்று கவந்தன் இராம இலக்குவரிடம் கூறும் செல்நெறி, வைணவம் உலகிற்குக் காட்டும் செந்நெறியே எனலாம். "தீயவர்ச் சேர்கிலாது" என்பதனால், தீயவன், இராவணனைச் சேர்ந்துள்ள வாலியைச் சேரற்க என்பது கவந்தன் சொற்களில் உள்ள குறிப்புப் பொருள் ஆதல் காண்க.

மாசிலன் ஆதல் அறம்

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்"[46] என்று அற இலக்கணம் வகுக்கும் திருக்குறள். இதற்கு நிகழ்ச்சி விளக்கம் தருகின்றார் கம்பர். நெஞ்சால் பிழை செய்வதே பாவம். நெஞ்சார விரும்பிச்

செய்யாதவை பாவச் செயல்கள் ஆகா. இந்த "நெஞ்சினால் பிழைப்பிலானை நீயழைத்திடுக"[47] என்று அகலிகையைக் கௌதமரிடம் ஒப்படைக்கிறான் இராமன். மன மாசகன்ற நெறி அறநெறி என அகலிகை நிகழ்ச்சி கொண்டு இங்கு விளக்கப்படுகிறது. "மனத்தினால், வாக்கினால் மாசுண்டேன் எனில், சினத்தினால் சுடுதியால் தீச் செல்வா" என்ற பிராட்டி கூற்றும் இங்கு மனங் கொளற்பாது.

அறமும் இறைவனும்

பரதனை இராமன் தழுவியது, கருணையின் மூல வடிவான இறைவன், அறத்தைத் தழுவியது போன்றிருந்ததாம். "நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலைய மாயினான் தயாமுதல் அறத்தினைத் தழுவிற்று, என்னவே"[48] - இங்கு அறமே பரதன் என நிறுவப்படுகிறது. "தள்ளரிய பெருநீதித் தனியாறு புக மண்டும் பள்ளமெனும் தகையானைப் பரதன் எனும் பெயரானை"[49] என்பார்.

உலக வாழ்வில், தள்ளுதற்கரிய நீதிகள் (நியதிகள்) யாவும் இணைந்து அறம் ஆகின்றன. அந்த அறம் இறைவனைத் தழுவி ஒன்றாய் இணைகிறது. இறுதியில் அறமே இறைவன் எனும் சம(சாம்ய) நிலை எய்துகிறது. "அறவாழி யந்தணன்"[50] என்று இறைநிலை குறிக்கப்படுவது இங்கு சிந்திக்கற்பாலது.

அரக்கரும் அறநெறியும்

அரக்கர்களால் புறக்கணிக்கப்பட்டதும், ஆனால் என்றும் அழியாதது மான அறத்தின் தன்மைகளையும், அரக்கர்களால் அறத்திற்கு விளைந்த இன்னல்களையும் காவிய நெடுகிலும் பலவிடங்களில் அடிக்கடி குறித்துச் செல்லுகின்றார் கம்பர்.

அரக்கர்கள் புற வாழ்வின் துறைகள் பலவற்றிலும் மேம்பாடுற்றிருந்த மையும், அவர்தம் உள்ளம் அறத்தின் நீங்கி, மறத்திலும் களியாட்டத்திலும், தற்செருக்கிலும், மூழ்கிக் கிடந்தமையும், அக்காரணங்களால் அவர்தம் அழிக்க முடியாத பெருமைகளை அழித்துக் கொண்டமையும் காவியம் காட்டும் நுண் காட்சிகளாகும்.

அறத்திற்கும் மறத்திற்கும் நடந்த போராட்டத்தின் உச்சநிலை இறுதிக் காண்டமாகிறது. அறத்தின் வெற்றியையும், மறத்தின் சோக முடிவையும் காட்டுவதே காவியத்தின் உயர்நோக்கங்களுள் ஒன்றாகும். இலங்கை மக்களின் அகப்புற வாழ்க்கைகள், ஆன்மீக நாட்டமின்றி, ஆணவத்தின் உச்சநிலையை அடைந்த செய்தி ஊர்தேடு படலத்தில் நமக்குக் காட்டப்படுகிறது.[51] "களிக்கின்றார் அலால் (சீதை சிறைவைக்கப்

பட்டிருக்கிற பாவத்திற்குக்) கவல்கின்றார் ஒருவரைக் காணேன்'' என்பது அநுமன் வாசகம்.

வீடணனும் அறமும்

இந்த அரக்கர் கூட்டத்தாரிடையே ஒத்து வாழ இயலாமல், ஆன்மீக நாட்டமும் அறத்தின் தேட்டமும் கொண்ட வீடணன், அறத்தின் நாயகனான இராமனைப் புகலடைந்தான். வீடணன் அறம்வாழ வேண்டும் என்ற அவாவினாலேயே இராமனைச் சார்ந்தான், தான் வாழ வேண்டியன்று. "அறம் துணையாவ தல்லால் அருநரகு அமைய நல்கும் மறம் துணையாக மாயாப் பழியொடும் வாழமாட்டேன்''[52] என்பது இந்திரசித்திடம் வீடணன் சொன்ன வாக்கு மூலம்.

"அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும் அது அறிந்து, ஞானத் திறத்தினும் உறும் என்று எண்ணித் தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன்''[53] "வெவ்விது பாவம்; சாலத் தருமமே விழுமிது''[54] என்பவை வீடணன் வாழ்வியலில் கண்டு துணிந்த முடிபுகள்.

இருமைக்கும் நலம்பயக்கும் அறம்

வாழ்வின் இம்மைப் பயனாகிய புகழையும் கொடுக்கும் அறம், வாழ்வு முற்றிய பின்பு, வீடு பேற்றினையும் கொடுக்கும் அறம்.

"முன்பு நின்று இசை நிறீஇ, முடிவு முற்றிய
பின்பும் நின்று உறுதியைப் பயக்கும் பேரறம்''[55]

என்பார்.

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு''[56] என்னும் வள்ளுவர் வாக்கை, அப்படியே ஒப்புகிறார் கம்பர் பெருமான்.

அறங்காப்பவனே மாவீரன்

போர்க் களத்தில் பகைவர்க்கு அஞ்சாமல் போர்புரிவான் மாவீரனாக மாட்டான். இறக்கும்படி நேர்ந்தாலும், செல்வம் யாவையும் இழக்கும்படி நேர்ந்தாலும் அறத்தைக் கைவிடாதவனே மாவீரன். அடுக்கிய கோடி துன்பங்கள் நெருக்கினும், மனம் தளராது, அறத்தைப் பின்பற்றுவதே மாவீரனுக்குரிய பண்பாம்.

"நிறப் பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற
மறப் பயன் விளைக்குறும் வன்மை அன்றரோ

இறப்பினும் திருவெலாம் இழக்க நேரினும்
துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே"[57]

தான் எவ்வகையில் வீரன் என்பதைச் சுமந்திரனிடம் இவ்வாறு கூறி விளக்குகின்றான் இராமபிரான்.

இரக்கமே அறம் பிறக்கும் இடம்

ஆன்ம நேயமாகிய உயிர் இரக்கமே அறம் பிறந்து எழுந்து வளர்கின்ற இடம் என்கின்றார் கவிஞர் பிரான்.

"இரக்கம் உளதாகின் அது நல்லறம் எழுந்து வளர்கின்றது"[57-அ] என்பது கவிஞர் வாக்கு.

அட்டாங்க யோகமும் தவமும்

உலகப் பொருள்களில் பற்றுக் குறையக் குறையப் பக்தி மேன் மேலோங்கும். உலகப் பொருள்களின் மேல் ஓடும் பொறிபுலன் ஆசைகளைக் கட்டுக்குள் கொண்டுவருவது யோகம்.

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்டாங்க யோகமும், புறக்கருவிகளையும் அந்தக் கரணங்களையும் அடக்கவல்ல வல்லமை பெறுகிற பொழுது, யோகக் காட்சியில் வள்ளுவர் கூறும் 'வாலறிவு' தோன்றும். அவ்வாலறிவுக்குக் காட்சிப்படுவது இறைக்காட்சி.

"அடக்கும் ஐம்பொறியொடு, கரணத்து அப்புறம்
கடக்கும் வாலறிவினுக்கு அணுகும் காட்சியான்"[58]

என்பது கம்பர் வாக்கு.

இக்காட்சியைப் பெறவே முனிவர்களும் இருடிகளும் முயலும் முயற்சிகள் யாவுமாய் அமைகின்றன. "அணுகும் காட்சியான்" என்பதனால், இவ்வாலறிவாளர்க்கு, மிக அணுக்கமாய் இறைக்காட்சி தோன்றும் என்பது பெற்றாம்.

இந்த யோகத்தின் வளர்ச்சியே தவமாகிறது. இத் தவம் புரியும் முனிவர்கள் தம் நலம் பேணாமல் உலகும் உயிரும் வாழ வேண்டும் எனும் நெஞ்சுடைய அருளாளர்கள் ஆவர். இப் பேரருளாளர்களால் வினைகளையும் வெல்ல லாகும்.

"இழைத்த தீவினைதனைக் கடக்கும் எண்ணுறத் தழைத்த பேரருளுடைத் தவத்தின் ஆகும்"[59] (எண்உற-மதிப்பு மிக) என்பது கவிஞரின் துணிபொருள் ஆகிறது.

கருமமும் யோகமும்

கரும யோகத்தின் பகுதியே தவயோக நெறியாகும். புலன்களைத் தீநெறிச் செல்லாமல் ஒடுக்குதல் யோகம் ஆகும். தீநெறிச் செல்லாமையே கருமயோகம் ஆகும். புலன்களை ஒடுக்குகையில் உயிர்க்குப் பேராற்றல் வந்தெய்துகிறது. "ஐந்தவித்தான் ஆற்றற்கு அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலும்கரி"[60] என்பார் வள்ளுவனார். "அளிக்கு நாயகன் மாயையுக்கு அடங்கினான் எனினும் களிப்பில் இந்தியத்து யோகியைக் கரக்கலன்" (கம்ப. 2056) என்பது கம்பர்வாக்கு. இறைவன் நம் மாயையால் மறைக்கப்பட்டு நம் புலன்களுக்கு மறைந்திருப்பினும் புலன்களை அடக்கிய யோகியர்க்கு அகக் காட்சியில் மறைவதில்லை என்பது இதன் கருத்து.

இந்த யோகப் பயிற்சியால் புலனடக்கம் முற்றித் தியானம் கூடிச் சமாதிநிலை ஏற்படும்போது இறைக்காட்சிகூடும். இறைவனை யறியும் காட்சியே ஞானம் ஆகிறது.[61] இந்த ஞானத்தால் கண்ட இறைவனைப் பிரிய முடியாநிலை உயிர்க்கு ஏற்படுகிறது. இதுவே பக்தி ஆகிறது. இப்பக்தி முதிர்கிறபோது இறைவனிடம் சரண் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

கம்பரும் யோகமும்

கரும யோகத்தின் உறுப்பாகவே தவயோக நெறியை வைணவம் கொள்கிறது. இந்த யோக நெறியும், கம்பர் உளத்தைக் கவர்ந்த நெறியெனத் தெரிகிறது. யோகநெறியை அவர் நன்கு அறிந்தவர் என்பது சுயம்பிரபை வாயிலாகத் தெரிகிறது.

"கருங்கயல்களின் திகழ்கண் மூக்கு நுதி காண"[62] என்பார். இது, யோக நெறியில் கண்கள் இரண்டும் மூக்கின் நுனியை நோக்குமாறு வீற்றிருத்தலைக் குறிக்கும். சுயம்பிரபை வளிநிலை யோக முறையில் மூச்சினை உள்நிறுத்தலாகிய கும்பகத்தில் அமர்ந்திருந்தது இங்குக் கூறப்படுகிறது.

"தாமரை மலர்க்குவமை சால்புறு தளிர்க்கைப்
பூமருவு பொற்செறி குறங்கொடு பொருந்தக்
காமமுதல உற்றபகை கால்தளர, ஆசை
நாமம் மடியப் புலனும் நல்லறிவு நல்க"[63]

இப்பாடலில் யோகத்தால் எய்தும் நன்மைகள் பல தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாற்சரியம், ஆகிய உட்பகைகளை ஒடுக்க யோகம் உதவுகிறது. காமம் வெகுளி மயக்கம்

இவை மூன்றன் நாமம் கெடப் பிறவித் துன்பம் தொலைவது "ஆசைநாமம் மடிய" என்பதனால் சுட்டப்படுகிறது. இவை மடிவதால், புலன்கள் தீநெறிச் செல்லாவாகலின், நல்லறிவு எனும் பரஞானம் தானே கைகூடும் என்பார், "புலன்கள் நல்லறிவு நல்க" என்கின்றார்.

"பொய், கொலை, களவே, காமம், பொருள்நசை இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்"[64] என யோகத்தின் உறுப்பான இயமத்தின் இலக்கணம் கூறப்படுகிறது. சுயம்பிரபை இந்த இயம நெறியில் நின்றாள் என்பதைக் "காமம் முதல் உற்றபகை கால்தளர" என்பதனால் குறிக்கின்றார்.

"பொறி உணர்வெல்லாம் புலத்தில் வழாமல்
ஒருவழிப் படுவது தொகைநிலை ஆகும்"[65]

"புலனும் நல்லறிவு நல்க" என்பதனால், சுயம்பிரபை பிராத்தியாகாரம் என்னும் தொகைநிலை யோக நெறியில் நின்றமை குறிக்கப்படுகிறது.

"வாயுநிற்ப, மனம் நின்று, மனந்தான் நிற்பப் பொறிநின்று,
பாயும்பொறிகள் நிற்ப, இடர்படுபுன் புலன்கள் நின்றனவால்;
ஆயபுலன்கள் நின்றமையால், அகிலம் தோன்றாது உள்ளத்தே
தூய பரமானந்த பரஞ்சோதி தோன்றக் கண்டிருந்தார்"[66]

என்று சிவப்பிரகாச சுவாமிகள், யோகநெறி இறைவனைக் காண உதவும முறையை விளக்குவார். கம்பர் யோகநெறியில் சாதனைகள் செய்திருக்கக்கூடும் என்பதைச் சுயம்பிரபைப் பாத்திரம் உணர்த்துகிறது.

யோகநெறியாளர்கட்குப் புலன்கள் அடங்கிய பிறகு புலன்கட்கு எட்டாக் காட்சி உண்டாதலின் "அடக்கும் வால் உணர்வினுக்கு அணுகும் காட்சியான்"[67] என்பார் கம்பர். "புலனைந்தும் சொலப் படான் அறிவின் மூர்த்தி"[68] என்னும் நம்மாழ்வார் கருத்தினை ஒட்டியதாகும் இது. "கண் காணாக் காட்சி" என்பது உலக வழக்கு.

ஒவ்வோர் உடலிலும் சீவான்மா, பரமான்மா என்னும் இருவர் உளர். இவ்விருவரும் நம் உடம்பின் உள்ளிருந்தும் நம் புறக் கண்களுக்குத் தோன்றுவதில்லை. யோகிகள், தவத்தால் அகக் கண் பெற்றவராதலால், பரமான்மா, சீவான்மா இருவரையும் அவர்களாற் காண இயலுகிறது.

இராவணனுடைய சுகன், சாரன் என்னும் ஒற்றர்கள் இருவரையும் தன் விஞ்சையால் கண்டறிந்த வீடணனை, பரமான்மா, சீவான்மா இருவரையும் தம் யோகக் கண்ணாற் கண்டறிந்த யோகியர்க்குக் கம்பர் உவமிக்கிறார்.

"இருவரை ஒருங்குகாணும் யோகியர் என்ன லானான்"[69]

கரும யோகத்தின் எல்லை கண்டவர்கள், ஞானயோகத்தால் இறைவனைக் காணலாம். "இடையுறு கருமத்தின் எல்லைகண்டவர் கடையுறு நோக்கினால் காணுங் காட்சியான்"[70] "கடையுறு நோக்கு" என்பது ஞானக் காட்சியைக் குறிப்பதாகும்.

இத்துணைச் சிறிய வடிவில் கடல் கடந்தது, "தவத்தின் ஆற்றலாலா? சித்தின் ஆற்றலாலா?"[71] என்று சீதை அநுமனைக் கேட்கிறாள். இதனால் தவமுனிவர்களும், சித்தர்களும், தம் ஆற்றலால் கடல் கடத்தல் முதலிய அருஞ்செயல்களைச் செய்ய வல்லவர்கள் என்பது தெரியவருகிறது.

யோகமும் அட்டாங்க சித்தியும்

அட்டாங்க யோகத் தவம் வல்லார் அப்பயிற்சி நிறைந்தால் அட்டாங்க சித்தி கைவரப் பெறுவர் என்பதும் மேற்கூறிய சீதை கூற்றால் தெரிகிறது.

அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன அட்டாங்க யோக சித்திகள் ஆகும்.

ஆன்மாவைப் போல் அணுவளவாதல் அணிமா, மிகப்பேருரு அடைதல் மகிமா, தன்னுடல் கண்டிப்பின்றாய் கண்டிப்புள்ளவற்றை ஊடுருவிச் செல்லுதல் கரிமா, இலகுவாக ஆதல் இலகிமா, வேண்டுவன அடைதல் பிராத்தி, நிறையுளவாதல் பிராகாமியம், ஆட்சியுளனாதல் ஈசத்துவம், எல்லாந் தன்வசமாக்கல் வசித்துவம் எனப்படும்[72] அட்டாங்க சித்திகள்.

அநுமனும் அட்டாங்க சித்திகளும்

இந்த எட்டுவகைச் சித்திகளும் கைவரப் பெற்றவனாக அநுமன் காட்டப்படுகிறான்.

"மாரி துளிக்கும் தாரை யிடுக்கும் வரவல்லீர்"[73] என்பதனால், அநுமன் மழைத்தாரை இடுக்கிலும் புகுந்து வரவல்ல அணுவளவினதாகும் அணிமா வல்லவன் ஆகிறான். "மேருகிரிக்கும் மீதுற நிற்கும் பெருமெய்யீர்"[74] என்பதனால் அநுமன் பேருரு எடுக்கும் மகிமா வல்லவனாகிறான்.

அங்காரதாரை யெனும் பேரரக்கியின் வல்லுடலைப் பிளந்து வெளி வந்தான்.[75] ஆதலால் அநுமன் ஊடுருவிச் செல்லும் கரிமா வல்லவன் ஆகிறான்.

"பூத்தொறும் வாவிச் செல்லும் பொறிவரி வண்டினைப்போல்," "புகைபுகா வாயிலும் புகுவான்"[76] என்பதனால் இலகுவாகும் இலகிமா வல்லான் அநுமன் என்பதாயிற்று.

“எள்ளுறையும் இடமின்றி யாண்டையினும்”[77] தேடிச் சீதையைக் கண்டு விட்டதனால், வேண்டுவன அடையும் பிராத்தி சித்தி வல்லான் ஆகிறான் அநுமன், மருத்துமலையைத் தாங்கி வந்தவனாதலால்[78] நிறையுடைமை யென்னும் பிராகாமியம் வல்லானும் ஆகிறான். “அறைகழல் அநுமனோடு இறைவர்கள் நால்வர்”[79] என்பதனால் அநுமனின் ஈசத்துவம் புலனாம்.

அரக்கியர் வேண்டத் துஞ்சார், சீதையை அவர் அறியாமல் காண வேண்டும் என ஒரு “விஞ்சை வினை”[80] (வசியம்) செய்து உறங்க வைத்ததனால், அநுமன் அட்டாங்க சித்தியுள் வசித்துவமும் வல்லான் ஆகிறான்.

இதனால் தான், யோகாசாரியனான அநுமனை யோகம் வல்லவர்கள் தெய்வமாக வழிபடும்முறை தோன்றிற்று எனலாம். “இறைவர்கள் மூவர் என்பது எண்ணிலார் எண்ணமேதான் அறைகழல் அநுமனோடும் நால்வரே தெரியின் அம்மா”[81] எனக் கம்பர் வியந்து போற்றுவதற்கும் இதுவே காரணமாகும்.

வேண்டும்போது உயிர்நீத்தல்

யோகத்தால், வேண்டும்போது, உடலிலிருந்து உயிரை நீக்கிக் கொள்ளலாம் என்பதைக் கம்பர் சுட்டுகிறார். ஆனால், அது மிக வருந்திப்பெற வேண்டிய யோக முயற்சிகளுள் ஒன்று என்பதும் குறித்துள்ளார்.

“பின் அவள் உழந்துபெற்ற யோகத்தின் பெற்றியாலே
தன் உடல் துறந்து, தான் அத்தனிமையின் இனிமை
சார்ந்தாள்”[82]

என்பதனால் இக்கருத்துக்கள் சுட்டப்படுவது காணலாம்.

“உழந்து பெற்ற யோகம்” என்பதனால் அதன் அருமை கூறியவாறு.

அயோத்தி மக்களும் நெறிகளும்

அயோத்தி, கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், சரணாகதி எனும் நெறிகளைச் சார்ந்தோர் அனைவரும் வாழும் பரமபதத்திற்கு நிகராகிறது என்கின்றார் கம்பர்.

“தங்குபேர் அருளும் தருமமும் துணையாத்
தம்பகைப் புலன்கள் ஐந்து அவிக்கும்
பொங்கு மாதவமும் ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகலிடமாக

செங்கண்மால் பிறந்து ஆண்டு அளப்பருங்காலம்
திருவின் வீற்றிருந்தனன் என்றால்
அங்கண்மா ஞாலத்து இந்நகர் ஒக்கும்
பொன்நகர் அமரர் நாட்டுளதோ?"[83]

தங்கு பேரருளும் தருமமும் துணையாகத் தான், உயிர் தன் பகைப் புலன்களை அவிக்க முடியும் என்கிறார் முதல் அடியில். அருளும் தருமமும் துணையாகக் கொண்டு பெற்றதற்கு உவந்து, பெரும் பொருள் வெறுத்து, கற்பன கற்று, பெருந்தூய்மை பெற்று, பூசைகளால் வரும் பயன்களையெல்லாம் ஆசாரியனுக்கு அர்ப்பணித்து வாழும் முறைதான் நியமம் என்று யோகநூல் கூறும்:

"பெற்றதற்கு உவத்தல், பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல், கழிகடுந்தூய்மை
பூசனைப் பெரும்பயன் ஆசாற்கு அளித்தலொடு
பயனொடு மரபின் நியமம் ஐந்தே."

(சிலம்பு.அடியார் உரை.14.11)

பகைப் புலன்களை அவித்தலையே இயமம் என்னும் அது. இக்கரும, யோகப் பயிற்சியால் மாதவம் பெறுகிறது உயிர். இத்தவ முயற்சியால் இறைவனைக் காணும் ஞானம் கிட்டுகிறது. இவ்வாறு தவமும், ஞானமும் புணர்ந்தோர் பக்தர் ஆகின்றனர். இந்தப் பக்திதன் யாவர்க்கும் புகலிடம் ஆகும் சரணாகதன் இறைவன் என்ற உணர்வை ஊட்டுகிறது.

எனவே, இறைவனை அடையும் நெறியனைத்தும், இப்பாடலில் சுருங்கச் சொல்லி வைத்திருப்பது உணரலாம்.

ஞான நெறி

இவ்வாறு கருமமும், தவயோகமும் நிறைந்தாருக்கு உயர் அறிவாகிய ஞானம் தோன்றும். முழுஞான நிறைவு எய்தியவுடன், காமம், வெகுளி, மயக்கம் என்ற உயிரின் முப்பகைகளும் அழியும். முப்பகைகள் அழிய அவற்றின் விளைவாய் வரும் வினைகளும் அழியும்.

"பொங்கி முற்றிய உணர்வு புணர்தலும் பகையினொடு
பங்கமுற்ற அளவில் வினை பரிவுறும்"[84]

உணர்வு என்பது அறிவு, ஞானம் என்னும் பொருளது. வள்ளுவர் காமம் வெகுளி மயக்கம் அழியப் பிறவி நோய் அழியும் என்றார். ஆனால், இப்பகைகள் அழியப் பிறவி ஒழியும் என்னாது, கம்பர் இப்பிறவிக்குரிய

பகைகள் அழிந்த பின்பு, பூரண ஞானம் பொலியும். வினைகள் அழியும்; அதனால் பிறவியும் ஒழியும் என்கின்றார்.

மெய்யுணர்வு ஊறிப் பழுத்தால், நிலத்துள் நீர் சுரப்பதுபோல் உயிரினுள் நல்லறிவு சுரக்கும்; அப்படிச் சுரக்கும் அறிவு, இயற்கையறிவு; உயிரின் இயல்பாயுள்ள தர்ம பூதஞானம் கல்வி கேள்விகளானும், அநுபவ ஞானத்தாலும் அது மேலும் மேலும் மாசு நீங்கி முழுஞான நிறைவுறும்போது, உயிர்ப் பகைகளும் பிறவி மூலமாகிய வினைகளும் நீங்கும்.

“ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையார்க்கு, விழைவு வெறுப்பு அவிச்சை யென்னும் இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங் கூடக் கெடுதலான் அவற்றின் வினைப்பயன்கள் உளவாகா”[86] என்பார் பரிமேலழகர்.

இராமனைக் கண்டவுடன், “இருவினையும் நீக்கி, யம திசைக்கண் செலுத்தாது, மீளா நெறியாகிய வீடடையச் செய்யும் தேவர்க்கும் தேவர் இவர்”[87] என்று முடிவு செய்கிறான் அநுமன்.

“துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கி
தென்புலத்து அன்றி, மீளா நெறி உய்க்கும் தேவரோ தாம்?
என்பு எனக்கு உருகுகின்றது, இவர்கின்றது அளவில்காதல்
அன்பினுக்கு அவதிஇல்லை, அடைவுஎன்கொல்? அறிதல்
தேற்றேன்”

என்பது கம்பர் கவிதை.

இத்தகைய மெய்யுணர்வுதான் திரிபுக் காட்சி யென்னும் அவிச்சை நீங்கிய முழு ஞானம் எனப்படும்.

ஞானம், பக்தி பிறப்பிப்பான் இறைவன்

இறைவன் துன்பம் தீண்டப் பெறாத தூயவுடம்பினன். (அப்பிராகிருதசரீரி); ஆனால், அவன் எடுத்த சரீரங்களுக் கேற்ற அவதாரங்களில் பெரும் பெரும் துன்புறுகிறான். இது அவன் இறைத் தன்மைக்கு மாறானது. இதற்கு விளக்கம் தருகிறார் கம்பர்.

“துன்ப விளையாட்டு இதுவேயும்; உன்னைத் துன்பத்
தொடர்வின்மை
இன்ப விளையாட்டாம் எனினும் அறியாதேமுக்கு இடர்
உற்றால்
இன்ப விளையும்; அருள் விளையும்; அறிவு விளையும்”[88]

இறைவன் துன்புறுவதுபோல் தோற்றமளிப்பதெல்லாம் அவன் இன்ப விளையாட்டு (லீலாரசம்). ஆனாலும், அவன் துன்புறுவதைக் கண்டால், அது, அவன் விளையாட்டு என்றறியாத உயிர்களுக்கு, பெரியோன் அடையும் துன்பம் காரணமாக அன்பு (பக்தி) விளையும்; அதுமுற்றி அருளாய் விளையும; அருளில் தூய ஞானம் மலரும். அதனால் மாயையால் மறைக்கப்பட்டிருக்கும் இருள் நீங்கி இறைவனையறியும் ஞானக் காட்சி பயனாய் விளையும்; அதற்காகவே, எடுத்த பிறவிக்கேற்ப, மனைவியைப் பிரிந்தழல், தம்பியைப் பிரிந்தழல் முதலிய துன்புறுதலும் நிகழ்கிறதாம்.

கரும யோக அடிப்படை

"நித்த நியமத் தொழிலராய் உலவும் ஞானத்து உத்தமர்கள்"[89] என்பதனால், ஞானியருக்கும் நித்திய நியம கர்மங்கள் வேண்டற்பாலன என்பது விளங்கும். நியமம் கருமயோகத்தைச் சார்ந்த எண்வகை நியதிகளில் ஒன்று.

"பெற்றதற் குவத்தல், பிழம்பு நனி வெறுத்தல்
கற்பன கற்றல், கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும் பயம் ஆசாற் களித்தலொடு
பயனுடைய மரபின் நியம் ஐந்தே"

என்பதனால் ஞானயோகத்திற்கும் கருமயோக நியமம் தேவை என்பது விளங்கும். எனவே, கருமயோகம் எல்லா யோகத்திற்கும் அடிப்படை என்பது தெளிவு. ஆகையால் யோகநெறிகள் ஒன்றையொன்று சார்ந்து நிற்பதாகக் கொள்ளும் வைணவம். "இந்த நியமத்தால் மனம் தூய்தாம்; மிகத் தூய்மையோடு கூடிய மனத்தால் அறியப்படுகிறான் இறைவன்"[90] என்பது வேத வாக்கியம் என்னும் ஈடு. "நித்திய நியமத் தொழிலாய் உலவும் ஞானத்து உத்தமர்கள்" என்று இந்த ஞானத்தால் இறைக்காட்சி பெற வல்லராய் ஆனமையால், ஞானத்து உத்தமர்கள் எனக் கம்பர் பெருமானால் இவர்கள் போற்றப்படுகிறார்கள். ஞானிகளின் அறிவு பல பொருள்களிலும் செல்லாது ஒரு பொருளினிடத்தே செல்லுதல் போல் குதிரைகளின் பாய்ச்சல் ஒரு முனை நோக்கி இருந்ததாக உவமிக்கப்படுவதால்[91] ஞான நெறியினர் மன ஒருமையினால் இறைவனைக் காணல் சுட்டப்படுகிறது.

பக்தி நெறியின் ஆழம்

"கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாவது பக்தி"[91-அ] என்பார் நம்பிள்ளை. கம்பர் பக்தியை அன்பென்ற சொல்லால் ஆள்கிறார். "என்புதோல் போர்த்த உடலுடைய மனிதர்களுக்கும்; அஃதிலாது ஒளியுடலுடைய தேவர்களுக்கும், மூவுலகத்தினும் வன்புலப் பகையினை

மாய்ப்பதற்கு அன்பின் நல்லதோர் ஆக்கம் இல்லை"[92] என்ற கம்பர் கூற்றால் பக்திநெறியின் மேதகவு பகரப்படுகிறது.

"என்பு தோல் உடையார்க்கும், இலார்க்கும் தம்
வன்பகைப் புலன் மாசு அற மாய்ப்பது ஏன்?
முன்பு பின்பு இன்றி, மூஉலகத் தினும்
அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ?"

என்பது கம்பர் பெருமானின் அன்புநெறி பேசும் அருமை வாக்குகள் ஆகும்.

"முழுவதும் தெரிந்த வற்றால்,
அன்பெனப்ப தொன்றின் தன்மை
அமரரும் அறிந்த தன்றால்"[93]

எனப் பக்தி அமரரும் அறியா ஆழம் உடையடதெனப் பகர்கிறார்.

அதனால், தாம் முழுதும் கூற இயலாமை பிழையாகாது என்கிறார்.

"அழிவில் அன்பெனும் ஆர்அமுது"[94] எனப் பக்தி நெறியின் அழியாத் தன்மை பகரப்படுகிறது. பக்தி நெறியினை, பத்தி என்றும் கம்பர் குறிப்பிடுவார். "பராவரும் சிரத்தை யாரும் பத்தி"[95] எனும் இடத்தில் பக்தி, பகர்தற்கரிய சிறப்புடையது எனவுரைப்பர். 'பக்தி சிரத்தை' என இன்றும் இணைத் தொடராய் வழங்குவது. அன்றும் வழக்கில் இருந்தமையை, "சிரத்தை யாரும் பத்தி" எனும் தொடர் உணர்த்தும். (ஆரும் - நிறைந்த)

பத்துடையடியவர்க்கு எளியவன்

பக்தர்க்கு இறைவன் எளிதில் காட்சி நல்குகின்றான். அஃதில்லாதவர் கட்கு அவன் அரியனிலும் அரியன் ஆகிறான்.

"என் கண்ணால் நோக்கிக் காண்டற்கு எவ்விடத்தும நிறைந்துள்ளான் இறைவன்; ஆனால், அவனிடத்து அன்பின்றிப் பகைமை பூணும் உன் கண்ணால் காண்டற்கு எளியனோ அவன்? அவன்பால் பக்திபூண்ட என் கண்களைப்போல், உன் கண்களையும் பக்திக் கண்களாக்கிப் பார், அவனைக் காணலாம்"[96] எனும் பிரகலாதன் கூற்றால், பக்தனுக்கு இறைவன் எளியனாந் தன்மை இயம்பப்படுகிறது.

"பத்துடை யடிவர்க்கு எளியவன்; பிறர்களுக்கு அரிய
வித்தகன் நம் அரும்பெறல் அடிகள்"97

என்னும் நம்மாழ்வார் வாக்கை விளக்குவது இந்நிகழ்ச்சி எனலாம். இறைவனையே "அடிகள்" எனும் வழக்குண்மை இந்த நம்மாழ்வார்

பரசுரத்தால் விளங்கும். ஆளவந்தார் பெரிய பெருமாளைச் சேவிக்க எழுந்தருளினால், "துரியோதன ஸ்தானம்" என்று திருமுடிப் பக்கத்தில் ஓரிடத்திலும் ஒரு நாளும் எழுந்திருக்க மாட்டார். திருவடிக்குக் கிழக்குக் (கீழ்ப்) பக்கத்தில் அவர் எழுந்தருளியிராத இடமில்லை" என்று பட்டர் அருளிச் செய்வார். (திருமாலை 19 வியாக்)

இந்த ஐதிகத்தால் இறைவனின் திருவடிகள், பக்தனின் உள்ளத்தில் பிடித்திருந்த பேரிடத்தை அறிதல் கூடும். இறைவனின் இத்தகு பெருமைக்குரிய அடிகளைப் பற்றிக்கொள்பவர்கள் அடியார்கள் ஆகின்றனர்.

மூவகைப் பக்தி

இப்பக்தி பரபத்தி, பரஞானம், பரமபக்தி என மூவகையாவதும் உண்டு.[98]

சேர்க்கையில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடைதல் பரபக்தி எனப்படும். இராமனைப் பிரியின் தரியோம்[98-அ] என்று உடன்சென்ற இலக்குவனும் சீதையும் இப்பரபக்தி பூண்டவர்.

நேரிற் காணுவதுபோன்று நெஞ்சில் இறைக்காட்சி பெறல் பரஞானம் எனப்படும் பக்தி(நிலை)யாகும். துயர் வரும்போதெல்லாம் மனக்கண்ணால் இராமனைக் கண்டு வணங்கிச் செயல்பட்ட அநுமன், இறகுபெற்ற சம்பாதி கணையாழி பெற்ற சானகி போன்றோர் இவ்வகைப் பரஞான பக்தியினர்.

கணையாழி பெற்ற சானகி

பிரிவில், இருப்புக்கே கேடுண்டாதல் பரமபக்தியாகும். பதினான்கு ஆண்டுப் பிரிவை, அண்ணன் ஆணையால் தாங்கி, அக்காலம் கழிந்தவுடன், ஒரு நொடியும் தாழ முடியாமல் தீப்புக இருந்த பரதன் பரமபக்தியுடையான். இராமனைப் பிரிந்து வாழமுடியாது உயிர்நீத்த தசரதனும் பரமபக்தி பூண்டவனே. அசோக வனத்தில் உயிர்துறக்கத் துணிந்த சீதையும் பரமபக்தியினர் பகுப்பில் அடங்குவாள். ஆகவே, சீதை பரபக்தி, பரமஞானபக்தி, பரமபக்தி எனும் இருவகைப் பக்தியும் பூண்ட பரம உத்தமை ஆகிறாள்.

இறைகுணத்தில் ஆழ்பவர் பக்தர்

பக்தன் இறைவன் குணங்களில் ஆழ்ந்து மெய்ம்மறப்பவன். திருவாய்மொழி காட்டும் இறைவன் அழகில் ஈடுபட்டுக் கூரேசர் மெய்ம்மறந்தார். சீடர்கள் அதிர்ச்சியடைந்து இராமாநுசரிடம் சென்றுரைக்க, அவர் வந்து "ஆழ்வான்!ஆழ்வான்!" என்று கூவி அவரைத் தட்டி எழுப்பினார். விழித்த கூரேசர் இராமாநுசர் நிற்கக் கண்டு வாய்பொத்தி

நின்றார். அன்றுமுதல் கூரேசர், "கூரத்தாழ்வான்" என்றே அழைக்கப் பட்டார்.[99] இவ்வாறு இறைவன் குண அநுபவங்களில் ஆழ்ந்தவர்களே ஆழ்வார்கள் எனப்படுவர்.

பரதாழ்வான், சத்துருக்கனாழ்வான், விபூடணாழ்வான் என்ற மூவரை மட்டுமே இராமாயண மாந்தர்களில் ஆழ்வார் என்று குறிப்பிடுவது வைணவ மரபு.[100] இம்மூவர்தம் நெஞ்சம் கொண்ட ஈடுபாடும், ஆழும் திறமும் இவ் வழக்கால் வெளிப்படும்.

இறைவனைக் காக்கப் பக்தன் முனைதல்

பக்தி முதிர்நிலை யுறுகையில், இறைவன் பக்தனைக் காக்க வேண்டும் எனும் நிலை மாறி, இறைவனைப் பக்தன் காத்தாக வேண்டும் எனும் துடிப்பு நிலை எய்துகிறது.

பெரியாழ்வார், இதனால்தான் இறைவனைக் காக்கப் பல்லாண்டு பாடினார். அதனால், ஆழ்வார்களில் 'பெரிய' ஆழ்வார் ஆயினார். இதனை மங்களா சாசனம் செய்தல் என்பது வைணவ மரபு. சீதையின் கோலத்தை அசோக வனத்தில் கண்ட பக்தன் அநுமனின் மனநிலை, பெரியாழ்வார் மனநிலையை எய்திவிடுகிறது. மங்களா சாசனம் செய்கிறான்:

"வாழி சானகி! வாழி இராகவன்!
வாழி நான்மறை! வாழியர் அந்தணர்!
வாழி நல்லறம்!- என்றென்று வாழ்த்தினான்
ஊழி தோறும் புதிதுறு கீர்த்தியான்"[101] ,

என்பார் கம்பர்.

"பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! நின்சேவடி செவ்வி
திருக்காப்பு"[102]

என்று இறைவனுக்கு மங்களா சாசனம் செய்த பெரியாழ்வார் மனநிலையை அநுமன் இங்கு அடைந்து விடுகிறான். இராமனைக் காக்கக் குகன் முனைவதும் இது.

ஆசை வேறுபாடு

பக்தர்கள் பக்தியின் நிலைவேறுபாட்டிற்கேற்ப, பக்தர்களின் மன ஆசைவேறுபாடுகளும் நிகழும் என்பார் திருப்பாவை உரையாளர்.

"ஆழ்வார்கள் இளைய பெருமாளைப் போன்று, இறையநுபவத் தையே விரும்பியவர்கள்.

பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் பரதனுக்கு நிகராகி, இறைவனின் நலத்தையே ஆசைப்பட்டவர்.

சத்துருக்கனாழ்வானும் ஆண்டாளும் அடியார்க்கு அடிமை பூணுவதிலே நிலை நின்றவர்கள்"[103] என்பார் அவ்வுரையாளர்.

வீடணனைப் போலவே, "உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று பிறர்க்கடிமை மறுப்பவர்கள், 'அநந்ய சேஷத்துவம்' கொண்டவர்கள், ஆய்ப்பாடிப் பெண்டிர்"[104] எனும் திருப்பாவை வியாக்கியானம் இங்கு நினையத் தக்கது.

சீதை பூண்ட பக்தி நெறி (கற்பு)

அறநெறிப்படி வாழ்ந்து காட்ட இராமன் மண்ணுக்கு வந்தது போலவே சீதையும், பதிபக்தி யெனும் கற்பு நெறிப்படி வாழ்ந்து காட்ட இங்கு வந்தவள். "இற்பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்பது ஒன்றும் கற்பெனும் பெயரதொன்றும் அவள் தோன்றவால் களிநடம் புரிய"[105] வாழ்ந்து காட்டியவள். "குலத்தில் வந்து, இல்லில் மாண்புடை நங்கையர் மனத்தவம் நவிலற்பாலதன்று"[106] எனச் சொல்லின் செல்வனாகிய அநுமன் புகழுமாறு வாழ்ந்தவள். "வனிதையர்க்காக நல்லறத்தின் மாண்பு எலாம்"[107] என்று அவள் பிறத்தலால் அறமுழுவதையும் பெண்ணினம் பெற்றுக் கொண்டது எனக் கூறுமாறு வாழ்ந்தவள். "சோகத்தால் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கொத்த மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்புற்றார்"[108] "சீலம் (கற்பு) இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திரு அவள்."[109] பெண்மை என்று உரைக்கின்ற உடலுக்கு உயிர் அவள்.

இருளில் இராமன் வனத்தில் நடந்து செல்கையில் சீதையின் கற்பு அவனுக்குப் பாதுகாப்பாகக் காத்து உடன் செல்கிறது[110] என்பார் கம்பர். "தையல் தன் கற்பு ஒளி வழிகாட்ட நள்ளிருளிலு ஐயன் நடந்தான்" என்பது கம்பர் கருத்துரை. கண்ணகி கற்பு கண்ணகிக்குத் துணையாயிற்று. "பேணிய கற்பும் பெருந்துணையாக"[111] என்பார் இளங்கோவடிகள். கம்பரோ ஒரு படி மேற்சென்று சீதையின் கற்பு ஐயனுக்குத் துணையாயிற்று என்கிறார்.[112] மகளிர் கற்பு கணவர்க்குக் காவலாம் எனும் பழநெறி இதன் வழியுணர்த்தப்படுகிறது. இன்றும் பரதவரிடையே இந்நம்பிக்கை மேலோங்கியுள்ளதை இங்கு நினைவு கூரல் தகும்.

பக்தியே கற்பு

கணவன்மாட்டு, மனைவி கொள்ளும் மறந்தும் புறந்தொழாப் பக்தி நெறியே இல்லற மொழியில் கற்பு எனப்படுகிறது. பிராட்டியின் பக்தி நெறி, மகளிரின் கற்பு நெறியாகிறது. இக்கற்பெனும் பக்தி நெறியை உலகுக்கெலாம்

உணர்த்தி வாழ்ந்து காட்டிய பெருமாட்டி சீதை ஆகிறாள். இதனால்தான், "தெரிவைமார்க்கொரு கட்டளை யெனநின்ற திருவே"[113] என இராமன், சீதையை அழைக்கின்றான். மங்கையரின் கற்பின் தரத்தை அறிந்து கொள்ள உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல்லாக விளங்குகிறாள் சீதையென்று கருதுகிறது இராமனின் திருவுள்ளம்.

பிராட்டியின் சேர்ப்பிக்கும் தன்மை (புருடகாரம்)

இறைவனோ எதையும் தன்னிச்சையாகச் செய்ய வல்லவன். சேதநனோ, எண்ணிறந்த குற்றங்களையுடையவன். பிராட்டி அவன் சுதந்திரத் தன்மையையும், இவன் குற்றங்களையும் கண்டு, என்னாகப் போகிறதோ என்று தாய்மைத் தன்மை மேலோங்க அஞ்சி, இறைவனின் சின்த்தை வரவிடாமற் செய்ய எம்பெருமாளை ஓர் இமைப்பொழுதும் விட்டுப் பிரியாமல் இருக்கிறாள் என்பது வைணவக் கோட்பாடு. "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறைமார்பா"[114] என்பது நம்மாழ்வார் வாக்கு. (இறையும் - சிறிதும்) இதனை "அறந்திறம்பும் என்று, ஐயன் அயோத்தியில் பிறந்த பின்பும் பிரிவிலள் ஆயினாள்"[115] என்பார் கம்பர். புருடாகார நெறியைக் கம்பர் பெருமான் எத்துணைத் தெளிவாக உணர்ந்திருந்தார் என்பதற்கு இவ்விரண்டடிகளே சாலும்.

இறைவனின் சுதந்திரப் பண்பால் உயிர்களுக்குக் கடுந்தண்டனை தந்துவிடாமல் காப்பதற்கு ஒரு தாயுள்ளம் தேவைப்படுகிறது. அந்தத் தேவையைப் பிராட்டி புருடகாரம் (சேர்ப்பிக்கும் தன்மை, பரிந்துரை) வாயிலாய் நிறைவு செய்கிறது வைணவம்.

"தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனை போலும் செய்கை"[116] என்னும் வாலிவாக்கு பிராட்டி புருடகாரத்தின் பெருமையையே சுட்டுகிறது.

இராமாயணத்தில் பிராட்டி புருடகாரமில்லாதபோதுதான், தாடகை, சூர்ப்பணகை, வாலி, இந்திரசித்து, கும்பகருணன், அக்கன், அதிகாயன், இராவணன் முதலிய அனைவரும் அழிந்தார்கள்[117] என்பர். பிராட்டியைப் புறக்கணித்து, இராமனை நெருங்கிய சூர்ப்பநகை, இராவணன் ஆகியோர் அழிவை எய்தினர். குகன், பிராட்டி புருடகாரத்தால் இராமனை அடைந்து பேறு பெற்றான். சுக்கிரீவன், சீதை வீசிய அணிகலன்களைப் புருடகாரமாக்கி, இராமனையடையும் பேறுபெற்றான். சயந்தன், காகாசுரனாய்ப் பிராட்டிக்கே தவறிழைத்தும் பிராட்டி முன்னிலை கிட்டியதால் உயிர்பிழைத்தான்.[118] இவ்வாறு வைணவம் பிராட்டியையும் (புருடகாரத்தையும்) இறைவனையடையும் தவிர்க்க இயலாத ஒரு நெறியாக்கி மகிழ்கிறது.

இதனால், வைணவம் இராமாநுசர் காலத்திற்குப் பின்பு, திருமகளோடு சேர்ந்த வைணவமாகி, "ஸ்ரீ வைணவம்" எனும் பெயர் பெறுவதாயிற்று.

"திரு இல்லாத் தேவரைத் தேறேன்மின் தேர்வு" என்று திருமழிசை யாழ்வாரும், (நான்முகன் திரு.53)

"திருமங்கை நின்றருளும் தெய்வம்" எனப் பூதத்தாழ்வாரும். (இரண்டாந்திரு -57) இந்தப் புருடாகார நெறியைக் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

"சிபார்சு" எனும் சொல் இந்திய மொழிகளில் பலவற்றில் உண்டென்றும், ஸ்ரீ பார்சவம் (திருமகள் உடன் இருந்து செய்வது) என்னும் சொல்லே திரிந்து, 'சிபார்சு' என வழங்குகிறது என்ற கருத்தும் வைணவப் பெருமக்களிடையே உண்டு.

சுயநலம் பக்தி யாகாது

இராமனைச் சூர்ப்பநகை மிக விரும்பினாள். ஆனால், அவள் விருப்பம் கலப்பற்ற தன்னலத்தால் எழுந்தது. பக்தி, தன்னல மறுப்பில் எழுவது. சீதை, இலக்குவன் இருவரும் தன்னலத்தை அறவே மறந்து அவன் விரும்பும் பணிபுரிய இராமன் பின் வனம் சென்றனர்.

"அந்தோ உன்திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால்
எந்தாய் நான் பட்டபடி இதுகாண்"[119]

என்று சூர்ப்பநகை அழுவது, தன்னலம் சார்ந்த பக்தி என்னாகும் என உலகுக்கு விடுத்த ஓர் எச்சரிக்கை எனலாம். இராமன் திருமேனிக்கு அவள் வைத்த அன்பு, சீதை உட்பட யாரும் தீண்டக்கூடாது எனும் அளவிற்குச் சுயநலம் முற்றிய அன்பு. அது, தண்டனைக் குரியதாகிறது.

இதனால்தான், பரமபதத்திலும் இறைவனையே அநுபவித்துக் கொண்டிருக்கும் சுயநலத்தைப் பேறு எனக்கூறாமல், அங்கும் இறைஉவக்கும் கைங்கரியமாகிய பணிபுரிதலே பேறு என்கிறது வைணவம்.

சாதன, சாத்திய பக்திகள்

பொருட்பெண்டிர் உளம்போலப் பலனைக் கருதிச் செய்யும் பக்தி, சாதனபக்தி, பலனுக்காகச் செய்யாமல் அந்தப் பக்தியே பலன் என்ற உள்ளமுடன் செய்யும் பக்தி சாத்திய பக்தி. தன்னை நுகரும் கணவனுடைய இன்பத்தைக் கண்டு தான் இன்பமடைவது கற்புடைய மனையாட்டியின் உள்ளமாகும். அந்த உள்ளம் செய்யும் பக்தியே சாத்திய பக்தி.[120]

பிரகலாதன் கொண்ட பக்தி இந்தச் சாத்திய பக்தியேயாகும். உனக்கு என்ன வரம் வேண்டும் என நரசிங்கப் பெருமான் கேட்க, அவன் பொன்னும் பொருளும் கேட்கவில்லை; பூவுலக ஆட்சி கேட்கவில்லை; எலும்பில்லாப் பிறவி எய்தினாலும் உனக்குப் பக்தி செய்ய மறவாமல் இருக்க வரந்தருக என்றான்.

"என்பு பெறாத இழிபிறவி எய்தினும் உன்
அன்பு மறவா அரும் பேறுஅளி யென்றான்"[121]

"உலகம் மூன்றினோடு நல்வீடு பெறினும்
கொள்வ தெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே"[122]

என்பார் நம்மாழ்வார்.

"இச்சுவை தவிர, யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்"[123] என்னும் ஆழ்வார் வேண்டல் இச்சாத்திய பக்தியைக் குறிப்பதே எனலாம். இதனை, "வீடும் வேண்டா விறல்"[124] என்னும் சைவம்.

மூவகையால் உளங் கவர்தல்

இறைவன் வடிவழகிலே துவக்குண்டவர்கள், குணங்களிலே துவக்குண்டவர்கள், செயல்களிலே துவக்குண்டவர்கள்[125] எனப் பக்தர்களை மூவகைய ராக்குவார் நம்பிள்ளை.

இதன்படி, குகன் இராமன் வடிவழகிலே துவக்குண்டவன். "கண்ணனைக் கண்ணில் நோக்கிக் கனிந்தவன்"[126] இராமனின் கார்குலாம் நிறத்திற்குக் காதலன் அவன். "நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்க்கிலாக் கள்வன் நான்"[127] என அவன் வடிவழகிற்கு உருகியவன் குகன்.

சுக்கிரீவன், செயல் அழகிலே துவக்குண்டவன். இராமன் ஏழு மாமரங்களை எய்தது கண்டு அவ்வீரச்செயலுக்கு மனம் பறிகொடுத்தவன் அவன்.[128]

இராவணன் தம்பியென்று தெரிந்தும் தன்னை ஏற்றுக் கொண்ட குணம் நினைந்து அக்குணவழகிலே துவக்குண்டவன் வீடணன்.

"பஞ்சு எனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளையன் என்னை வருக என்று அருள்
செய்தானோ?"[129]

என்று இராமனின் குண அழகில் நெஞ்சு பறிகொடுப்பான் வீடணன்.

பக்தன் அனுபவிக்கும் படிநிலைகள்

"பக்தியினால் எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப் பட்டிருக்கும். அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அநுபவித்தல், வடிவழகினை வருணித்து அநுபவித்தல், அவன் உகந்தருளின திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசி அநுபவித்தல் என"[130] என்பார் திவ்வியார்த்த தீபிகையாளர்.

அவனுடைய திருநாமங்களைச் சொல்லி யநுபவித்தவர்கள் அநுமன், சம்பாதி முதலியோர். அவனுடைய வடிவழகினைச் சொல்லி அநுபவித்தவர்கள் அயோத்தி மக்கள், சீதை, குகன், அநுமன் முதலியோர். அவன் உகந்தருளின திவ்விய தேசத்தின் வளங்களைப் பேசி அநுபவித்தவர்கள் விசுவமித்திரர், ஆசிரியர் கம்பர் முதலியோர். அயோத்தியை மிக உயர்வாக எண்ணிப் புகழ்வார்கள் இவ்விருவரும்.

இராமபிரான் திவ்விய தேசங்களாகிய கோசல நாட்டையும், அயோத்தி நகரையும் கம்பர் அநுபவிப்பதன் வெளிப்பாடுதான் நாட்டு நகரப் படலங்கள் ஆயின. சுருங்கச் சொல்லின், அவன் திருநாமம், வடிவழகு, திவ்வியதேசம் என்னும் மூன்றையும் கம்பர் அநுபவிப்பதன் போக்குவீடே இராமாயணம் எனும் இக்காவியம் ஆயிற்று எனலாம்.

இராவணன் புரிந்த பக்தி, சாதன பக்தியாகும். அவனும் பற்றற்றான் பற்றினைத் தவத்தால் பற்றினான். ஆனால் வள்ளுவர் கூற்றின்படி, பற்று விடுவதற்குப் பற்றற்றான் பற்றினை அவன் பற்றவில்லை.[131] தன்னை, தன் வாழ்வை, அதற்குதவும் பொருள்கள்மேல் உள்ள பற்றை அதிகமாக்கிக் கொள்ளப் பற்றினான். அதனால் யான் எனதென்னும் அகப்பற்றும் புறப்பற்றும் அவனிடம் கொழுந்தோடிக் கிளைத்தன. இவற்றிற்கு இடையூறு செய்வாரை யெல்லாம் பகைவர்களாக நினைந்து நினைந்து அழித்தான். ஆகவே, சாதன பக்தியெனப்படும், (காமிய பக்திகள்) இவ்வுலகச் செல்வம்பெற உதவினும், பிறவியின் பயன்பெற உதவுவதில்லை என்பது தெளிவாம்.

பரதனுக்கு நிகரில்லை

பக்தர்களுள் பரதாழ்வானை நிகராவார் ஒருவருமில்லை என்பது வைணவ உலகில் முடிபு.

"இனிமையில் பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள்: பரிசுத்தத்தில் பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள்"[132] என்பார் நம்பிள்ளை. இறைவனைக் காட்டிலும் பக்தனை உயர்த்தும் அற்புதப் பாங்கு இந்து மதத்திற்கே உரிய தனிப்பாங்கு எனலாம்.

இப்படிக் குறிக்கும் இவ்வைணவ மரபின் மூலத்தை எடுத்துக் கொண்டே, கம்பர் பெருமான்,

"நிறைகுணத்தவன் நின்னினும் நல்லனால்"[132-அ]

"ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ"[133]

"எண்ணில்கோடி இராமர்கள் சூழினும்
அண்ணல்நின் அருளுக்கு அருகாவரோ?"

என்று பரதன் புகழை, இராமனைக் காட்டிலும் உயர்ந்ததாக விரித்துரைத் துள்ளார் எனலாம்.

இராமன் பக்திக்குரிய பொருளாவான்; பரதன் அப்பொருளைச் சுவைக்கும் பக்தன் ஆகிறான். கற்கண்டு இராமன் என்றால், அதனைச் சுவைப்பவன் பரதன் ஆகிறான். ஆதலால், இனிமையில் பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள் என்றார் நம்பிள்ளை. கற்கண்டு இனிமையாயினும் நுகர்வார்க்கே அதன் இனிமை புலனாவது உணரலாம். வாலியை மறைந்திருந்து எய்து "வில்லறந் துறந்தேன்" என்பது போன்ற அறம் அல்லாதவை போல் தோற்றப்படும் செயல்களும் பரதனுக்கு இல்லையாதலின் பரிசுத்தத்திலும் பரதனுக்கு நிகராகான் இராமன் எனும் நம்பிள்ளை கூற்று ஆழ்ந்த சிந்தனையில் விளைந்தது என்க." வில்லறந் துறந்தேன்" என்பதன்றோ இராமனின் வாக்குமூலம்!

பரதன் பரம ஏகாந்தி

இந்த பக்தனை, வைணவன், ஏகாந்தி, பரமஏகாந்தி என மூவகையாகப் பிரித்து வார்த்தாமாலை (வார்த்தை - 343) கூறும் கருத்துக்கள் சிந்தை கொள்ளற்குரியன.

பிறர் மனைவி, பிறர் பொருள் இவற்றில் நெஞ்சு ஈடுபட்டால் அவனுக்கு வைணவத்துவம் அடியோடு இல்லை என்பது விஷ்ணு புராணத்தில் யம கீதை முதலானவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் இவ்விரண்டும் இல்லாதவனுக்கே வைணவத்துவம் உண்டு.

இந்த வைணவத்துவம் இருந்தாலும் தன் மனைவியிடமும், தன் பொருளிலும் பற்று இருந்ததாகில், பிற பொருளில் பற்றில்லாமையாலே அந்த வைணவன் ஏகாந்தி யாவானே ஒழியப் பரம ஏகாந்தியாக மாட்டான்.

தன் மனைவியிடமும், தன் பொருளிலும் பற்றறுந்தால் தன்னைத் தானே பரம ஏகாந்தி என்று அறுதியிட்டுக் கொள்ளலாம் என்பது நம்பிள்ளைக்கு நஞ்சீயர் அருளிய வார்த்தை (வார்த்தை:343)

இவ்விலக்கணப்படி, தன் பொருள் என்று தரப்பட்ட அரசச் செல்வத்தையும், தன் மனைவியையும் துறந்து, நந்திக் கிராமத்தில் 14 ஆண்டுகள் பற்றறுத்து வாழ்ந்த பரதன் பரம ஏகாந்தி ஆகிறான்.

பக்தனும் சுற்றமும்

பக்தனுக்கு, உடல் தொடர்புடைய சுற்றங்கள் அற்று இறைத் தொடர்புடைய சுற்றங்களே சுற்றங்கள் ஆகின்றன.

"எந்தையும், யாயும், எம்பிரானும், எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன்; ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்தபோது அலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்கலாது என்றான்"[135]

இப்பாடலின், இறுதி இரண்டின் கருத்தை விளக்குவார்போல் நம்பிள்ளை ஈட்டில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பரதாழ்வானை, துன்பம் எப்போதும் ஆறும் என்று கேட்க, பெருமாளும் தமக்கு வகுத்த முடிசூடி, நானும் எனக்கு வகுத்த முடி (பாதுகை) சூடின் ஆறும் என்றான்"[136]

இதனையே 'அரசு அமர்ந்தான் அடிசூடும் அரசு'[137] என்று குலசேகரப் பெருமாளும் கூறினார்.

உலகத்தில், துயர் தீர்ப்பவராகக் கருதப்படும் தாய், தந்தை, தலைவன், தமயன் ஆகிய அனைத்துச் சுற்றங்களும் ஒன்று சேர்ந்து இறைவன் வடிவில் உள்ளதாகப் பக்தனாக கருதுகிறான்.

அழுக்கடைகின்ற மக்கள் உலகில் சுற்றம் கொள்ளாமல், அழுக்கடையாத இறைவனையே சுற்றமாகக் கொண்டான் பரதன் ஆதலின், "பரிசுத்தத்தில் பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள்" என்றார் நம்பிள்ளை. அழுக்குடைய மனிதர்களைச் சுற்றம் ஆக்குகின்றனன்றோ இறைவன்!

பேராளன் பேர் ஓதல்

இறைவனது குணங்களையெல்லாம் சுருக்கமாக உணர்த்துபவை அவனுடைய பல்வகை நாமங்கள். அவற்றை வாய்விட்டு உரைத்தல் கீர்த்தனம் எனப்படும்.[138]

"நீரிலே புக்கு அழுந்தினாரை நீரைத் தெளித்துப் பரிகரிக்குமாறுபோலே, (காப்பது போல) அவன் திருநாமத்தைச் சொல்லி ஆன்மாக்கள் தெளிவுபெற வேண்டும்"[139] என்னும் ஈடு.

"வந்து இங்கு, எம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர்; இதின்
உதவி உண்டோ?"[140]

என்று அநுமனை இராமன் நாமஞ்சொன்ன நன்றியை நினைந்து, சீதை ஏத்துவாள். இதனால் இறைவன் நாமம் பக்தனுக்கு உணர்வையுருக்கி, உயிர் தளிர்க்கச் செய்யும் என்பதும், பக்தனுக்கு இறைநாமம் கேட்கச் செய்வதைவிடப் பெரிய உதவி ஏதுமில்லை என்பதும் உணர்த்தப் படுகிறது.

"எல்லீரும் அவ்விராம நாமமே
சொல்லீர்; சொல்லின் எனக்கோர் சோர்விலா
நல்லீரப் பயன் நண்ணும்"[141]

என்று சம்பாதி, வானர முதலிகளை இராம நாமம் ஓதவைத்து, இறகுகள் வளரப் பெற்று, சிறகு வானந் தாவப் பறந்து சென்றது, திருப் பெயர் ஓதலின் சிறப்பை விளக்குவதேயாம்.

"நீரைத் தெளித்துப் பரிகரித்தாற் போலே" என்னும் மேற்காணும் ஈட்டின் தொடரை நினைப்பிக்குமாறு போன்று. "நல் ஈரப்பயன் நண்ணும்" எனக் கம்பர் தொடரும் அமைந்துள்ளது கருதத்தக்கது. நாமம் ஓதுதலின் பெருமையை உணர்த்தவே வான்மீகத்தில் இல்லாதிருக்கவும் சம்பாதி நிகழ்ச்சியைக் கம்பர் இங்கு சேர்த்துள்ளார் என்பது வெளிப்படை.

இறைவன் பெயரை நாடோறும் ஓதினால், உயிர்கட்கு வரும் இடையூறுகள் யாவும் அகலும் என்பது கம்பர் கருத்து.

"வாரம் என் இனிப்பகர்வது? வைகலும் அனையான் பேரினால் வரும் இடையூறு பெயர்கின்ற பயத்தால்"[142]

வாச்சியப் பிரபாவத்தைவிட, தாரக மந்திரமான வாசகப் பிரபாவம் உயர்ந்தது எனும் வைணவக் கருத்தால், "பேரினால், வரும் இடையூறு பெயர்கின்ற பயத்தால்" என்கிறார்.

"இராம என எல்லாம் மாறும்; அதில் மாறு பிறிதில்லை" என்று அரக்கர் புரி தீமைகள் அனைத்தும் "இராம" எனும் மந்திரச் சொல்லால் மாற்றிக் கொள்வேன் என்று அங்கார தாரையைக் கொன்று முடிந்த அநுமன் பகர்வான்.

சீதை, இரவுநேரத்திலும் இராம நாம நினைவிலேயே இருந்தாள்.

"இராப் பகல் இல்லாள்"(காட்சிப் - 16) என்பது கம்பர் வாசகம்.

“தாதை சொல்தலை மேற்கொண்ட தாபதன் தரும மூர்த்தி, ஈதைகள் தீர்க்கும் நாமத்து இராமனை எண்ணி ஏங்கும் சீதை” என்பதும் கவிஞர் வாக்கு. (6.18.275) “ஈதைகள் தீர்க்கும் நாமத்து இராமன்” என்பதனால் துன்பங்க்ள் நீக்கும் ஆற்றல் வாய்ந்தது இராம நாமம் என்பது தெளிவு.

பிரம்மாத்திரத்தால் கட்டுண்டு மயங்கிக் கிடந்த அனுமன் முகத்தில் நீரைத் தெளித்து மயக்கம் தெளிவித்தான் வீடணன்.

விழிக்கின்ற போது, வாயில் இராம நாமத்தோடு விழித்தான் அநுமன். அநுமனது இராம பக்தியினும் சிறந்த நாம பக்தியினைக் கண்டு வானத்துத் தேவர் எல்லாம் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர் என்கிறார் கம்பர் பெருமான்.

“பெயர்த்து வாய் புனல் வந்தூற, விக்கலும் பிறந்ததாக
அயர்த்திலன் இராமநாமம்; வாழ்த்தினர் அமரர்
ஆர்த்தார்”6.23.12

“துஞ்சும் போது அழைமின் துயர்வரின் நினைமின்,
துயர் இலீர், சொல்லிலும் நன்றாம்,”

“நஞ்சுதான் கண்டீர் நம் முடை வினைக்கு நாராயணா எனும்
நாமம்”(பெரிய திரு - 1.1.10)

என்று திருமங்கை யாழ்வார் நாமப் பெருமை உரைத்து. மண்ணுலக மக்களை நாராயண நாமத்தை உரைக்குமாறு கைகூப்பிக் கனிந்து வேண்டுதல் இங்கு நினையத்தகும்.

பேர் ஓதலும் பிரகலாதனும்

பக்தியின் ஒப்பற்ற செயலாகிய இப்பேர் ஓதலாலேயே பேறுபெற்றவன் பிரகலாதன்.

“காமம் யாவையும் தருவதும, அப்பதங் கடந்தால்
சேமம் வீடுறச் செய்வதும் செந்தழல் முகத்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்
நாமம்; அன்னது கேள் நமோ நாராய ணாய”143

என்பான் பக்தர் தலைவன் ஆகிய பிரகலாதன். பிரகலாதனைப் பக்தர் தலைவனாகக் கொள்ளுதல் வைணவ மரபு. அதற்கு அவன் இறைவன் பேர் ஓதலில் சிறந்து நின்றதே காரணம் ஆவது இங்கு தெளிவாம். அவனுக்கு வந்த இடையூறுகள் அத்தனையும் இறைவன் பேர் ஓதலுக்கு வந்த சோதனைகளே என்பதனை இங்கு உணர்தல் தகும்.

எட்டெழுத்தலாகிய அட்டாட்சரம் மகா மந்திரமாதலின் வெளிப்படையாக முழுதும் கூறலாகாது என்னும் மரபு பற்றி ஓம் எனும் பிரணவப் பகுதியைக் குறைத்து எட்டெழுத்து மந்திரத்தை இங்கு கூறியுள்ள நுட்பம் உணரத்தக்கது.[144]

மேல், "ஓம் நமோ நாராயண என்று உரைத்து உளம் உருகி"[145] எனும் பாடலிலும் "நாராயணாய" என்பதை 'நராயண' என்று குறைத்துக் கூறியுளளமை கொண்டு, கம்பர் மந்திரங்களை வெளிச் சொல்ல நேர்ந்தால் குறைத்து, மறைத்துச் சொல்லும் வைணவ மரபில் எத்துணை ஆழங்காற் பட்டவர் என்பதை யுணரலாம்.

சைவமும் "சிவாய நம" என்பதனை வாய்விட்டுரைக்கலாகாத சூக்கும பஞ்சாட்சரம் என்று உரைக்கும். ஔவையும் "சிவயநம" என்று சிந்திந்திருப்போருக்கு என்றார். (சிந்தித்தல் - வாய்விட்டுச் சொல்லாமல் மனத்தால் நினைத்திருத்தல்)

கம்பரின் இச்சமய நுட்பம் புலனாகாமையாலோ என்னவோ காளமேகப் புலவர்,

"நாரா யணனை நராயணனென்றே கம்பர்
ஓராமல் சொன்ன உறுதியால் - நேராக
வார் என்றால் வர்என்பேன்; வாள்என்றால் வள் என்பேன்
நார் என்றால் நர்என்பேன் நான்"[146] என்று கூறிப்போனார்.

எட்டெழுத்து மந்திரமே என் உயிர்க்கும் உன் உயிர்க்கும் உலகத்துள்ள எல்லா உயிர்கட்கும் எல்லா நன்மைகளும் பயக்கவல்லது எனப் பிரகலாதன் வாயிலாகக் கம்பர் பெருமான் உலகுக்குக் கூறுகிறார். இத்திருமந்திரத்தின் பெருமையை, "குலந்தரும்"[147] என்று தொடங்கிப் பாடிய திருமங்கையாழ்வாரைப் போலவே, அதன் புகழும் பெருமையும் சிறக்கத் தன் காவியத்தில் கம்பர் உரைத்திருப்பதனால் தான் 'கம்பநாட்டாழ்வார்' எனும் பெயர் கவிஞருக்குக் கிட்டியுள்ளது எனக் கருதலாம். இரணியன் வதைப் படலம் வான்மிகத்தில் இல்லாது இருக்கவும் கம்பர் தம் காதையில் நுழைத்தது பேராளன் பேர் ஓதும் பெருமையினை உலகுக்கு உணர்த்துதற்கே என்பது தெளிவு.

"வனைகழல் இராமன் பெரும் பெயர் ஓதி"[148], அநுமர் அசோக வனத்தில் மறைந்திருந்து சீதையைக் கண்டான். சீதையைக் காணும் பெரும் பயனைத் தந்த இராம நாமம் இங்கு "பெரும் பெயர்" எனப்படுகிறது. "மகாமந்திரம்" என்பதன் மொழிபெயர்ப்பே "பெரும்பெயர்" என்பது ஆகும். "அரும்பெயர் மரபில் "பெரும்பெயர்" முருக!"[149] என்பார் நக்கீர

தேவரும். இராம நாமத்தைக் கம்பர் பெருமான் மகா மந்திரமாகக் கொண்டவர் என்பது இங்கு தெளிவாகிறது.

பேர் ஓதல் தரும் பேறுகள்

"அஞ்சன வண்ணத்தான்தன் பெயர் உரைத்து, அளியை என்பால்
துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம்"[150]

என்பாள் சீதை அனுமனிடம்.

இறப்பின்போது, இராமநாமம் சொல்லக் கேட்கப் பெற்றோர் துறக்கம் எய்துவர் என்னும் வைணவ மரபு இங்கு சுட்டப்படுகிறது. "துஞ்சும் போது அழைமின்; துயர்வரின் நினைமின்; துயரிலீர் சொல்லிலும் நன்றாம்; நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா என்னும் நாமம்"[151] என்பார் திருமங்கை ஆழ்வார். "இறுவரம்பினில் இராமா என்றோர் உம்பர் நிறுவர் என்பது நிச்சயம்"[152] என்னும் இக்காவியத்தின் தனியனும் இம் மரபையுணர்த்தும்.

இறைவன் திருப்பெயர் ஓதல், பிறவித் துன்பமும், அத்துன்பத்திற்குக் காரணமான வினைகளும் நீங்க உதவும்:

"நோய்க்கும் நோய்தரு வினைக்கும் நின்திருப்பெயர் நொடியின் நீக்குவாய்; உனைநினைக்குவார் பிறப்பென நீங்கும்"[153]

"மும்பைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரம்; முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதம், தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்து, "இராம"என்னும்
செம்மைசேர் நாமம்"[154]

என்று இராம நாமம் ஓதலின் பெறும் பயன் முழுவதும் தொகுத்துச் சுட்டியுள்மை காணலாம்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை

போர்க்களத்தில் மயங்கிக் கிடந்த இலக்குவனை, இலங்கைக்கு எடுத்து சென்றுவிட நினைத்து, தூக்கிய இராவணனால் அவனை அசைக்க முடியவில்லை. வெள்ளிமலையை எடுத்து அசைத்தவனுக்கு, இளையவனின இம்மானுட உடல் அசைக்கக் கூடவில்லை. இதனை,

"தொடுத்த எண்வகை மூர்த்தியைத் துளக்கி வெண்பொருப்பை எடுத் தோள்களுக்கு எழுந்திலன் இராமனுக்கு இளையான்"[155] என்பார் கம்பர். ஆனால், அநுமன், மிக எளிதாய் இலக்குவனைத் தாவிப் பாய்ந்து வாவி

எடுத்துச் சென்றுவிட்டான்.

"தொக ஒருங்கிய ஞானம் ஒன்று எவரினும் தூயோன்
தகவு கொண்டது ஓர் அன்பு எனும் தனித்துணை யதனால்
அகவு காதலால் ஆண்தகை ஆயினும், அனுமன்
மகவு கொண்டுபோய் மரம்புகு மந்தியை நிகர்த்தான்"[156]

அநுமன் குட்டியை எடுத்தேகும் குரங்கின் எளிமையில் இலக்குவனை எடுத்தேகினான். அநுமன் ஞானநெறியும் பக்திநெறியும் கைக்கொண்டவன் என்பதனை எவரினும் ஞானம் ஒன்றியவன், அன்பெனும் தனித்துணையுடையான் என்பதனால் குறிக்கப்படுகின்றமை யுணரலாம். இலக்குவன் ஆண்தகை ஆயினும் அகவு காதலால் அநுமன் மகவு கொண்டுபோய் மரம் புகு மந்தியை நிகர்க்குமாறு தூக்கிச் சென்றான் என்பதனால் இறைவன் பக்திப் பிடிக்கு எளியனாகிறான் என்பது உணர்த்தப்படுகிறது.

"பத்துடையடிவர்க் கெளியவன்; மற்றவர்க் கரிய
வித்தகன் நம் அரும்பெறல் அடிகள்"[157]

என்னும் வைணவக் கோட்பாடு ஓர் அழகிய நிகழ்ச்சி விளக்கமாக இங்கு உருவம் பெற்றிருத்தலை உணரலாம்.

ஞான நெறிப்பட்ட பக்தன் பிரகலாதன்

"ஊன் கண்ணார்க்குப் படிமையினும் (அர்ச்சை வடிவிலும்), அந்தணர்க்கு வேள்வித் தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்கு எவ்விடத்தினும் இறைவன் வெளிப்படுகிறான்"[158] என்பராதலின், ஞானியாகிய பிரகரலாதன் "சொன்னவன் தொட்ட தொட்ட இடமெல்லாம தோன்ற"[159] உள்ளான் என்றான். இவ்விளக்கத்தால் பிரகலாதன் ஓதாதுணர்ந்த ஞானியாதல் வெளிப்படை. ஆகவே, அவன் ஞான நெறிப்பட்ட பக்தன் என்பது தெளிவு.

கருமநெறிப்பட்ட பக்தன் குகன்

"செய்ம்முறை குற்றேவல் செய்குதும்; அடியோமை இம்முறை உறவென்னா இனிதுஇரு நெடிதுஎம்மூர்"[160] என்று பணிசெய்யத் துடிக்கும் பக்தனாகிய குகன், கருமயோக நெறிப்பட்ட பக்தன் ஆகின்றான்.

"மேம்பட்ட பக்தியுடையவனுக்குச்
சாஸ்திரமும் இல்லை; முறையும் இல்லை"

(திருவாய் 3.1.2) எனும் நம்பிள்ளை மேற்கோள், குகனின் வாக்காகிய

"இம்முறை உறவென்னா இனிதிரு" என்பதனை அப்படியே தனி வரியாக்கி ஒலிக்கிறது.

அநுமன் மூன்று நெறிவழிகட்கும் உரியவன்

அநுமன் கருமயோகத்தில் அட்டாங்கசித்தி பெற்றவன் என்பதற்கு, "மேருகிரிக்கும் மேலுற நிற்கும் பெருமெய்யோடும், மாரிதுளிக்கும் தாரையிடுக்கும் வரவல்ல சிறுமெய்யோடும்"[161] அவன் இலங்கையில் திரிந்தது சான்றாகும்.

"கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி"162 "தொக ஒருங்கிய ஞானம் ஒன்று எவரினும் தூயோன்"[163] என்பதனால் அநுமனின் ஞானநெறி புலனாம். ஆகவே, யோகநெறியும், ஞானநெறியும், பயன்கருதாப பலபணியால் கரும நெறியும் இணைந்த பக்தன் அநுமன் என்பது விளங்கும்.

இங்கு, "தொக ஒருங்கிய ஞானம்" என்று போகும் போக்கில், மணிச்சுருக்கமாக, கவிஞர் பிரான் ஞானத்தை விளக்கிச் செல்லும் அருமை நெஞ்சிற் பதிக்கத் தக்கது.

உலகிற் பரந்து கிடக்கிற அறிவையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து, அவற்றை ஒருங்குகூட்டி, ஒன்றே (பரம்)பொருள் என உணர்வது ஞானம் என்று ஞானத்தின் பரப்பை மூன்றே சொற்களால் முடித்து வைத்திருக்கும் கவிஞர் திறத்தை எவ்வளவு போற்றினும் தகும்.

பல்லாண்டு பயின்று அறிந்த முடிவை, பெருங்கவிஞர்கள் ஓரிரு சொற்களில் வைத்து உரைத்துப் போய்விடுவர் என்பதற்கு

"தொக ஒருங்கிய ஞானம்" என்ற மூன்று சொற்களில் ஞான வரம்பினைத் தொட்டுச் சுட்டி யுள்ளதற்கு இத்தொடரைவிட வேறு என்ன சான்று வேண்டும்? "ஒன்றாகக் காண்பதே காட்சி" என்பார், ஔவைத் தாயும் (காட்சி - ஞானம்)

ஞானநெறிப்பட்ட பக்தன் வீடணன்

"உம்பர் மந்திரிக்கும் மேலா ஒருமுழம் உயர்ந்த ஞானத் தம்பி"[164] மூதுணர்வின் மிக்கான்[165]; "மேதாவிகட் கெல்லாம் மேலான மேன்மையான்"[166] எனக் கம்பர் வீடணனைக் குறிப்பிடுவதால், வீடணன் ஞான நெறிப்பட்ட பக்தன் என்பது தெளிவாம்.

ஆசாரிய அபிமான நெறிப்பட்டவன் சுக்கிரீவன்

சுக்கிரீவன் இராமன் ஆற்றலில் ஐயங் கொள்கிறான்; அநுமனால் இராம பிரானின்பால் கொண்ட ஐயம் நீக்கப்பட்டபின் தெளிவு கொள்கிறான். இங்கு, பத்தநிலையில் (பத்தம்-கட்டு) கட்டுண்டிருந்த ஓர் உயிர், ஆசாரியனால் நெறிகாட்டப்பட்டு, ஆசாரிய அபிமான நெறியால் முத்தநிலையை அடைகிறான். "அன்னை யொப்புடைய நின்அடியார்க்கு அடியன் யான்"[167] என்று சுக்கிரீவன் குருவின் அடியார்க்கடியான் எனும் தாசானுதாசன் ஆகிறான். ஆதலால், சுக்கிரீவன், ஆசாரிய அபிமானம் எனும் நெறிப்பட்ட பக்தன் ஆதல் தெளிவு. இங்கு அவனுக்கு ஆசாரிய நிலையில் நிற்பவன் அநுமன்.

எல்லோரும் சரணாகதியடைந்தவர்கள்

பிரகலாதன் முதலிய இவர்கள் அனைவருமே இறுதியில் சரணாகதியினையே சார்நெறியாகக் கொள்கின்றனர். பிரகலாதன், குகன், அநுமன், வீடணன், சுக்கிரீவன் முதலியோர் வெவ்வேறு நெறிப்பட்ட வராயினும் இறுதியில் இறைவனைச் சரணாகதி யடைந்தே பேறு பெற்றார்கள் என்று கம்பர் உணர்த்துவதால், எல்லா நெறியும் சரணாகதி நெறியில் சங்கமம் ஆகின்றன என்று கூறாமல் கூறிச் சரணாகதி நெறியின் பெருமையை உணர்த்துவதே இக்காவியத்தின் பாவிகம் என்பது தெளிவு ஆகிறது.

பக்தியின் மெய்ப்பாடுகள்

"என்பு எனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவில் காதல் அன்பினுக்கு அவதி இல்லை; அடைவென்கொல் அறிதல் தேற்றேன்"[168] எனும் இராமனைக் கண்ட அநுமன் கூற்றால, பக்தி இறைவனைக் காண உதவும் என்பதும், பக்தி உடலும் என்பும் உருகச் செய்யும் மெய்ப்பாடுகளைக் கொண்டது என்பதும், அநுமன் அத்தகைய மெய்ப்பாடுகளை அநுபவித் துணர்ந்த பரமபக்தன் என்பதும் வெளிப்படை. இராமனைக் கண்ட வீடணனும் இத்தகைய மெய்ப்பாடுகளை அடைகிறான்.

> **"முன்புறக் கண்டிலென்; கேள்வி முன்பு இலென்**
> **அன்புறக் காரணம் அறிய கிற்றிலென்**
> **என்புறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்**
> **புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால்"[169]**

என்று வீடணன், அநுமன் அடைந்த பக்தியின் மெய்ப்பாடுகளையே அடைவதால் அவனும் பரமபக்தன் என்பது தெளிவாம்.

"துன்பு தோன்றிய பொழுது உடன் தோன்றுவான்; எவர்க்கும்
முன்பு தோன்றலை அறிதற்கு முடிவு என்?" என்று இயம்ப,
"அன்பு சான்று" என உரைத்தனன்; "ஐய! என் யாக்கை
என்பு தோன்றல; உருகின" எனின், பிறிது எவனோ?" (நட்புக்: 386)

இப்பாடல் இராமனை முழுமுதல் தோன்றல் என்று கூறுகிறது. சான்று ஏன்? எனச் சுக்கிரீவன் வினாவ, அநுமன், அதற்கு "அன்பு சான்று". என்உடல் எலும்பு இல்லையெனும்படி உருகிப் போனதும் உரிய சான்று என உரைத்துள்ளமை உணர்க.

"உடல் எனக்கு உருகுமாலோ" (திருமாலை.19) எனும் தொண்டர் அடிப்பொடியாழ்வாரின் வாக்கும், "சேதநன் உருகினால் ஆச்சரியம் இல்லை. அதை அநுபவிக்கமாட்டாத ஜடமான சரீரம் உருகாநின்றது" எனும் அதன் வியாக்கியானமும் இங்கு சிந்திக்கத் தக்கது.

இங்கு "அடியார்க்கு அடியன்" (கம்ப 4:4:8) என்று சுக்கிரீவன் குறிப்பிடுகையில், வைணவ நெறியின் சிறப்புக்குரிய பகுதி ஒன்று போகும் போக்கில் சுட்டப்பட்டிருப்பதை உளங்கொளல் வேண்டும்.

'ஆண்டவனுக்கு நாம் அடிமை' என்ற எண்ணம் மனிதனின் நான் எனும் அகந்தையைப் போக்கும். அகந்தை போன இடத்தில் அமைதி பூக்கும். "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு ஏற்றும் விளக்கே" என்பார் குமரகுருபரர்.

கடவுளுக்கு மட்டும் அடிமை என்று நினைத்தால் அது கருத்தளவில் நின்றுவிடும் ஒன்றாய்விடும். அப்படி யல்லாமல், அடியார்க்கும் அடியாராக இருப்பது செயலளவில் இடம்பெற்று உள்ளத் தூய்மையை உண்டாக்கும் என்பதால், தொண்டருக்குத் தொண்டராவதை வைணவம் சிறப்பாகக் கருதும்.

தங்களை 'அடியேன்', 'தாசன்', 'தாசானுதாசன்', 'தொண்டர் அடிப்பொடி' என்று அழைத்துக் கொள்வதில் வைணவர் பெருமைப்படுவர்.

பகவத் பக்தி, பாகவத பக்தி, ஆசாரிய பக்தி ஆகிய மூன்றும் வைணவர்களுடைய மூன்று லட்சியங்கள் எனும் அடையாளமாகத்தான், வைணவர்கள் 'தாசநாமம்' சூட்டிக் கொள்கின்றனர்.

இங்கு, சுக்கிரீவன், அநுமன் என்னும்ஆசாரியனுக்கு அடியன் என்று பெருமிதம் கொள்கிறான்.

இந்தப் பெருமிதம், வைணவ உலகு குலதனமாக வழிவழியாக அடைந்து வரும் பெருமிதம் ஆகும்.

இருவர் பெற்ற சிரஞ்சீவிப் பட்டம்

பரம பக்தியை அநுமன், வீடணன் ஆகிய இருவரும் அடைந்த தனாலேயே இவ்விருவரும் காலத்தை வென்று நிற்கும் சிரஞ்சீவித்துவப் பதவி யடைகின்றனர்.

"ஏழினோடு ஏழாய் நின்ற உலகும் என்பெயரும் எந்நாள் வாழும்நாள் அன்று காறும் வாழ"[170] வீடணன் சிரஞ்சீவியாக அருள்புரியப் படுகின்றான்.

"உலகம் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றெென இருத்தி"[171] என அநுமனும் சிரஞ்சீவித்துவம் அருளப் பெறுகின்றான்.

இதனால் பரம பக்தியின் முடிவு அழியாநிலையை எய்துவிக்கும் என்பது உணர்த்தப்படுகின்றது.

சரணாகதி - கதைப்போக்கில் சரணாகதி

"இராமாயணம் அர்த்த பஞ்சகத்தை நன்கு விளக்கிக் கூறுவதாயிருப்பினும், சரணாகதி என்னும் உபாயத்தை (நெறியை) விளக்கக் கூறுவதிலேயே அது மிக்க நோக்குடையது. இதனாலேயே இது, "சரணாகதி சாத்திரம்" என்னும் பெயர் பெற்றிருக்கிறது."[172] என்பர். "சரணாகதியே இராமாயணத்தில் முக்கியமாய் அறிவதாகும்."[173] என்பார் பெரியவாச்சான் பிள்ளையும். வீடணன் அடைக்கலப் பகுதி 'சரணாகதி உபநிடதம்'[174] எனப்படுகிறது.

சரணாகதி நெறி இவ்விதிகாசம் நெடுகிலும் சுட்டப்பட்டு, வீடணன் அடைக்கலத்தில் நிறைவுறுகிறது. கடலிற் கலக்க ஓடும் ஓர் ஆற்றின் நீள்பாதையில, இடையிடையே ஆங்காங்குள்ள மக்கள் பயன்கொள்ளுமாறு துறைகள்பல அமைந்திருக்குமாறுபோல, வீடண சரணாகதி யென்னும் இலட்சியப் பகுதிக்கு முன்பு, ஆங்காங்கு சில அடைக்கல (சரணாகதி) நிகழ்ச்சிகளும் சுட்டப்படுகின்றன.

காவியத் தொடக்கத்தில் பரம பதத்தில் அரக்கர் கொடுமைக்கு அஞ்சி, பாற்கடலில் பள்ளி கொண்ட இறைவனிடம் தேவர்கள் அடைக்கலம், புகுவர்.[175] இராமன் சரணாகத "கராமலையத் தளர் கைக்கரி எய்த்தே வத்சலனாய்ப் பிறப்பெடுக்கிறான் என்பதை உணர்த்துவார்போல, "அராவணையில் துயில்வோய் அளி"[176] என்று கசேந்திரன் எனும் யானைக்குச் சரணாகதி அருளிய திருமால் தான் இராமனாகப் பிறந்தான் என்பர் கம்பர்.

தேவேந்திரனின் அடைக்கலம் ஏற்றுத் தசரதன் சம்பாராசுரனைக் கொன்ற வரலாறு.[177] புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க

பெருந்தகையான "சிபி"யின் வரலாறு[178] ஆகியவை அடைக்கலம் காத்தல் இட்சுவாகு குலதனமாக வருவது என்பதனை யுணர்த்தும். தாடகையை வதம்புரிய விசுவாமித்திரர் தசரதனிடம் அடைக்கலம் புகுவார்.[179] தசரதன் இராம இலக்குவரை அவரிடம் அடைக்கலம் ஈவார்.[180] அப்படலத்திற்கே "கையடைப் படலம்" என்பது பெயராம். (கையடை - அடைக்கலமாகத் தருதல்)

சரணம் என்பது பாதத்தை யடைதல் எனும் பொருளாதலால், அகலிகை சாபநீக்கமும்[181] சரணாகதி சுட்டுவதே. நோக்கமின்றிச் சரணடைவு நேர்ந்தாலும் பலன் உண்டு என்பது இதன் நுண்பொருள் ஆகும். தசரதன் பரசுராமனிடம், "இவனும் எனதுயிரும் நினதபயம் இனி"[182] என்று சரண் புகுகிறான். சரணாகதியை ஏற்காததால் பரசுராமன் மானபங்க முறுகிறான்"[183]

தசரதன், கைகேயியிடம், "உன் அபயம் என் உயிர்"[184] என்றான். சரணாகதி மறுத்ததால், "வசைவெள்ளம் நீந்தாளாய்"[185] கைகேயி "பழிவளர்க்கும் செவிலி"[186] யாகிப் போனாள்.

கானகம் ஏகிப் பரதன் இராமனிடம் சென்று சரணடைகிறான். பெறுதற்கரிய திருவடிப் பேறு (பாதுகை) கிட்டுகிறது.[187] "இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி"[188] என்று வீடணன், வேண்டிப் பெறும் பேறான திருவடிப் பேறு பரதனுக்குக் கிட்டுகிறது. இதனால், "எண்ணில்கோடி இராமர்கள் சூழினும்"[189] நிகராகாத புகழ், பரதனுக்குக் கிட்டுகிறது.

"தேவா, நின்கழல் சேவிக்க வந்தனன்"[190] எனக் குகன் அடைந்த சரணாகதி அவனைத் "தீராக் காதலன்"[191] என்று இராமன் திருவாயால் கூறவைத்து, அவனை "யாதினும் இனிய நண்ப"[192] னாக்கித் தம்பி யாக்கிற்று. தண்ட காரணிய முனிவர்கள் "அருளுடை வீர நின் அபயம்"[193] எனச் சரண் புகுந்தனர். அதனால் அவர்கள் 'மூன்று லோகமும் மூடும் காரிருள் ஆகிய அரக்கர் துயர்' நீங்கப் பெற்றனர். "சித்திர கூடத்தில் சிறுகாக்கையொன்று முலை தீண்டி, அத்திறமே இராமா"[194] என்று அடைக்கலம் அடைந்ததால், கொடும்பழி புரிந்தும் உய்தி பெற்றது.[195]

மிகுபல முடையனாயும் வாலி அடைக்கலம் புகாமையால் அழிந்தான்; அவனிலும் எளிய சுக்கிரீவன் அடைக்கலப் பேற்றால், [196] இராமபிரானுக்குத் தம்பியாகி "மகாராசன்" ஆனான். வருணன் அடைக்கலம், இறைவன் சினத்தையும் ஆற்றவல்லது சரணாகதி[197] என்பது உணர்த்தும்.

இறுதியில், வீடணன் சரணாகதி நிகழ்கிறது. இந்நிகழ்ச்சியைச் சொல்லவே, இராமாயண இதிகாசம் எழுந்தது; மற்றைய நிகழ்வுகள் யாவும்

இதனை உருவாக்க உதவிய அங்கங்கள் என்று பெரியவாச்சான்பிள்ளை கூறும் கருத்து[198] ஆழ்ந்த பொருளுடையது.

சரணாகதியின் கூறுகள்

வீடண சரணாகதி, சரணாகதி தருமத்திற்குரிய அத்துணைப் பண்புகளையும் கொண்டிருப்பதே, வீடண சரணாகதி, அனைத்துச் சரணாகதியிலும் மேல் ஓங்கி நிற்பதாக வைணவ அடியார்கள் கூறக் காரணமாம்.

சரணாகதிக் குரிய உறுப்புகள் ஆறு வகைப்படும்.

அ. சாத்துவிக உணர்வில், இறைவன் சித்தத்திற்கு அநுகூலமானவற்றைப் பின்பற்றல். (ஆநுகூல்ய சங்கல்பம்)

ஆ. இறை சித்தத்திற்கு வேறானவற்றைத் துறத்தல் (பிரதிகூல விசர்சனம்)

இ. இறைவன் காப்பான் என்ற பேர் உறுதி. (மகா விசுவாசம்)

ஈ. இறையருளையே வீடு பேற்றுக்கு நம்பியிருத்தல் (கோப்ரத்வ வர்ணம்)

உ. தன்னையே நிவேதனமாக்கல் (ஆத்ம நிட்சேபம்)

ஊ. தன்னால் ஒன்றும் ஆகாமையை வெளிப்படுத்தல் (கார்ப்பண்யம்)

என்னும் ஆறு உறுப்புகள் கொண்டது இந்த அடைக்கல நெறியாகும்.[199]

இவையனைத்தும், வீடணன் அடைக்கலத்தில் அடங்கியுள்ளமையே, இவ்வடைக்கலம் வைணவ ஆசாரியர்களின் உள்ளங்கவர்ந்த ஒன்றாயிருக்கக் காரணமாகிறது. வீடண சரணாகதியில்,

"ஆதி அம் பரனுக்கு அன்பும், நல்லறம்
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்
வேதியர் அருளும்"[200]

வீடணன் தவமிருந்து பிரமனிடம் விரும்பிப் பெற்றுள்ளவன் ஆதலால், வீடணன் இறைவனுக்கு நலமான செயல்களையே விரும்பும் அற்புதன் என்னும் சரணாகதி இலக்கணத்தின் முதற்கூற்று (அநுகூல சங்கற்பம்) வெளிப்படுகிறது.

வீடணன், எத்தனை வகையிலும் தமையனுக்கு உறுதி கூறியும் அவன் ஏற்காததால், உத்தமன் ஆகிய அவன், "இராவணன் திரு நகர் ஒழியப் போயினான்"[201] ஆதலால், அவன் இறைவனுக்கு நலமாகாததை வெறுப்பவன் என்னும் பிரதிகூல விசர்சனம் தெளிவாகும்.

"எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளினைப் புல்லி, இப்பிறவி போக்குதும்"[202] என்னும் பெருநம்பிக்கை உடையானாதலால், வீடணனிடம் இறைவன் காப்பான் எனும் மகா விசுவாச முடைமை தெளிவாம்.

"அரண் பிறிதில்லென அருளின் வேலையைச் சரண்புகுந்தேன்"[203] எனச் சாற்றிச் சரண் புகுந்ததால், பக்தி, ஞானம் முதலிய யோகங்களை யெல்லாம் கைவிட்டு, இறைவன் திருவடிகளே அரண், சரண் என்று சரணாகதி நெறியையே அடைந்ததால் இறையருளையே வீடுபேற்றிற் குரியதென நம்பியிருக்கும் சரணாகதி உபாயம் ஆகிய "கோபிரத்து வர்ணம்" எனும சரணாகதி நெறியின் அங்கம் வெளிப்படுகிறது.

"விழி எதிர் நிற்றியேல் விளிதி"[204] என இராவணன் வெகுள்கையில் தன்னால் இனி ஆவ தொன்றில்லை யென்று இராமனை யடைந்தானாதலான், தன்னால் ஒன்றும் ஆகாமை காட்டும் கார்ப்பண்யம் என்னும் அடைக்கலப் பண்பு வெளிப்படுகிறது.

மனைவி, மக்கள், செல்வம், இல்லம், உறவு ஆகிய தேகாத்தும அபிமானத்துக்குரிய அனைத்தும் துறந்து, தன் உயிரை இராமபிரான் திருவடிகளில் அறங் காத்தலுக்காகச் சமர்ப்பித்தான்[205] ஆதலின், வீடணனின் தன்னையே நிவேதனமாக்கும் ஆத்ம நிட்சேபப் பண்பு வெளிப்படும்.

இங்ஙனம் வீடண சரணாகதி, சரணாகதி நெறிக்குரிய அனைத்து அங்கங்களும் உடையதாய்ப் பொலிகிறது.

இறுதியில், காவலிருந்த அரக்கியரைக் கொல்ல அநுமன் வரங் கேட்கையில், பிராட்டியிடம் "அன்னைநின் பாதமே விடலம்; மெய்ச்சரண்"[206] என அரக்கிகள் அபயம் புகுவர். "இராவணன் சொன்ன செய்த தன்றி" வேறு என்ன தீமை இவர் இழைத்தார்"[207] என்று தேவியால் உரைக்கப் பெற்று, தீய அரக்கிகளையும் வாழ்விக்கிறது சரணாகதி.

சரணாகதியும் நம்மாழ்வாரும்

"தசரதற்கு மகன் தன்னை யன்றி மற்றிலன் தஞ்சமாகவே"[208] என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழியையே, ஆசாரிய வாக்காகக் கொண்டு, அதனை முடிமேல் ஏற்குமாறுபோல், "சரண் நாங்களே"[209] எனத் தொடங்கி இறுதி வரையிலும் காவியத்தின் பாவிகமாகிய சரணாகதி நெறியையே வற்புறுத்திச் செல்கின்றார் கம்பர். சரண் நாங்களே எனும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையால் உலகோரை உளப்படுத்தி உள்ளடக்கி இறைவனிடம் சரண்புக எல்லோரையும் அழைக்கின்றார்; அகப்படுத்துகின்றார் கம்பர்

பிரான். குணக் கடலாகிய இராமபிரானிடம் உலகைச் சரண் புகச் செய்வதே கம்பர் பெருமானின் குறிக்கோள் என்பது இதனால் தெளிவுறும்.

"எல்லா அறங்களையும் துறந்து என்னையே சரணாகப் பற்று; நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் பாதுகாக்கிறேன்; கலங்கற்க"[210] எனக் கீதையில் கண்ணன் உரைத்த சரம சுலோகக் கருத்தினைக் கம்பர் "அறம், தாய், தந்தை, சுற்றமும் மற்றும் எனையல்லால் துறந்தாய்; என்றும் என்னை மறாதாய்"[211] எனுமிடத்தே தெளிவுறச் சுட்டுகின்றார். "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட் செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்று"[211அ] என்பது கோதை திருவாக்கு.

சரணம் புக்கவன் சுற்றமும் காக்கப்படும்

இராமன் குகனின் படை குடிகளை நோக்கி, "உன்கிளை எனதன்றோ"[212] என்கின்றான். இதனால், சரணாகதி யாளனின் சுற்றத்தைக் காக்கும் பொறுப்பையும் இறைவன் ஏற்கின்றான் என்பது பெறப்படும். "உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்"[213] என்று சுக்ரீவனிடமும் பெருமான் உரைப்பான்.

சரணாகதி வினைகளை யறுக்கும்

வீடணன், இராமனிடம் சரணாகதி பூண்டதனால் தீவினைகளை யெல்லாம் இப்பிறப்பிலேயே தீர்த்துக் கொண்டவன் ஆயினான். "திறமென நின்ற தீமை இம்மையே தீர்ந்த செல்வ"[214] என்று கும்பகருணன் வீடணனை அழைப்பான்.

சரணாகதி பூண்டவனின் நல்வினையெல்லாம் அவனைப் போற்றும் அடியார்க்கும், அவன் தீவினையெல்லாம் அவனைப் பழித்தவர்க்கும் சென்றுவிடும் என்பர்.[215] ஆதலால், வினையா லாகும் பிறப்பெடாது அவன் முத்தியுறுகிறான் எனும் வைணவக் கோட்பாடு இங்கு தெளிவுறக் கூறப்படுகிறது.

நல்லாறு சரணாகதியே

சரணாகதி நெறியே உயிர்கள் பூணத் தக்க நன்னெறி என்பது கம்பர் கருத்து. சரணாகதி நெறியைப் பின்பற்றிய வீடணனை "நல்லாறுடை வீடணன் நாரணன் முன் சொல்லாடினான்"[216] என வீடணன் சென்ற நெறி "நல்லாறு" எனக் குறிப்பதனால் இஃது உணர்த்தப்படும்.

"காடுபற்றியும் கனவரைப் பற்றியும், கலைத்தோல்
மூடிமுற்றியும், முண்டித்தும், நீட்டியும், முறையால்

வீடுபெற்றவர், பெற்றதின்விழுமிது என்று உரைக்கும்
மாடுபெற்றனென்; மற்றினி என்பெற வருந்தி"[217]

என மலைகளிலும் வனங்களிலும் திரிந்து, படாதன பட்டுப் பலர் அடைந்த வீட்டு நெறியை, சரணாகதி நெறியால் மிக எளிதாக அடைந்தேன், நான் இனி வருந்திப் பெற என் இருக்கிறது? என இறைவனைச் சரண் அடைந்த பிரகலாதன் கூறும் கூற்றால், சரணாகதி நெறியின் எளிமையும் பெருமையும் மனத்தில் பதியும்படி எடுத்தியம்பப் படுகிறது.

ஆணவமுடையோர் சரண்அடையார்

"தையலைவிட்டு அவன் சரணம் தாழுதல் உய்திறன்"[218] என்று உரைக்க லுற்றும் இராசத குணத்தினனாகிய இராவணன் சரணாகதி செய்யவில்லை.

வீடணன் வாயிலாய்க் கும்பகருணனை இராமபிரானே அழைத்தும், அவனாலும் சரணாகதி செய்ய இயலவில்லை. அவன் தாமத குணமே அதற்கக் காரணம் ஆகும். சத்துவ குணத்தினனாகிய வீடணனாலேயே சரணாகதியடைய முடிந்தது. இதனால், அறஇயல்பு நிறைந்த சத்துவ குணத்தவர்களுக்கே சரணாகதி செய்ய இயலும் என்று இராமாயணம் தெரிவிக்கிறது எனலாம்.

வீடணன் - ஆழ்வான்

"தொடக்கறுத்தார் சுற்றம்"[219] எனப் படுபவன் இறைவன். உலகத் தொடக்கை அறுத்தவர்கட்கு இறைவன் சுற்றம் ஆகிறான். உலகத் தொடக்கை யறுத்து, சரணாகதி அடைந்த வீடணன் இராமனின் ஆறாந் தம்பி யாகிறான். "நின்னொடும் எழுவரானோம்"[219-அ] என்பது இராமனின் வாசகம்.

"விரோதிகளைப் போக்கி பரம பதத்தளவும் கொண்டுபோய் வழி நடத்துவான் அடைக்கலம் பூண்டானை இறைவன்"[220] "அருநிலங்களிலே வழிபோவார் அகப்படை (அந்தரங்கப்படை) என்று, மிடுக்காயிருப்பாரைக் கூட்டிக் கொண்டு தம் கைப்பொருளை அவர்கள் கையிலே கொடுத்து, விரும்பிய நிலத்தில் சென்றடைந்தபோது வாங்கிக் கொள்வாரைப் போலே, உடலைவிட்டு உயிர் பிரிகின்ற காலத்தில், இறைவனின் பக்கலிலே ஆத்மாவை அடைக்கலம் செய்து, பரமபதத்தில் சென்றால், பின்னர் தமக்கு ஆக்கிக் கொண்டவர்கள் ஆழ்வார்கள்" என்பார் நம்பிள்ளை.[221]

இவ்வாறே செய்தவன் வீடணன் ஆதலாலே, விபீடணாழ்வான் என வைணவப் பெருமக்களால் வீடணன் அழைக்கப்படுகிறான்.

வீடண சரணாகதியில் வைணவர்கள் சரணாகதியின் உச்ச நிலை ஒன்றைக் காண்கிறார்கள். சத்தியத்துடனும் தருமத்துடனும் உறவுகொண்ட வீடணன், பொய்ம்மையுடனும் அதருமத்துடனும் தொடர்புகொண்ட இராவணனுடன் உறவை அறுத்துக் கொண்டான். தனக்கு அண்ணனும் இல்லை; அரசனும் இல்லை எனத் துணிந்து இராமனை வந்தடைகிறான். ஆகவே, அரக்கர் குலத்தவன் ஆகிய வீடணன், இராம குலமாகிய இட்சுவாகு குலத்தினன் ஆகிவிட்டான் என்பது வைணவக் கொள்கை.[221-அ]

"ஸ்ரீ விபூஷணனை இராவணன் "குலபாம்சனன்" (குலத்திற்கு அழுக்கு) என்றான்; பெருமாள் இட்சுவாகு வம்சியனா நினைத்து வார்த்தை அருளிச் செய்தார்"[221-ஆ] என்னும் ஸ்ரீ வசந பூசணம். இம்மரபையெல்லாம் உளங்கொண்ட கம்பர், "நீதியால் வந்த ஒரு நெடுந்தரும நெறியல்லால் சாதியால் வந்த சிறுநெறியறியான்"[221-இ] என்று போற்றினார். உடற்பற்றையறுத்து, அறப்பற்றை மேற்கொண்டு, இறைவனைச் சரண் அடைவது, "நீதியால் வந்த நெடுந்தரும நெறி" உடற்பற்றை யறுக்காது உடல் தொடர்புடையாருக்காக அறத் தொடர்பைக் கைவிடுவது "சாதியால் வந்த சிறுநெறி" என்று கம்பர் கருதியது இங்கு தெளிவாகிறது.

"குடியும் குலமும்எலாம் கோகனகை கேள்வன் அடியார்க்கு அவன் அடியேயாகும்"[221-ஈ] எனும் ஞானசாரக் கூற்று அப்படியே பொருந்தும் வாழ்க்கை வீடண வாழ்க்கை.

"பற்றிற்றெல்லாம் பற்றி அவனையும் பெறுகை பத்தி; விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை பிரபத்தி"[221-உ] எனும் வார்த்தா மாலையின் வார்த்தையே வீடண வாழ்வின் இலக்கணம். இராச்சியத்தைப் பகவத் பிரசாதமாக வீடணன் பரதனைப்போல் ஏற்றுக் கொண்டானே தவிர, ஆட்சி பீடத்திலுள்ள ஆசையினால் ஏற்றான் இல்லை.

இதனை, "இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி" என்னும் அவன் திருவாக்கால் கம்பர் பிரான் அழகுற உணர்த்துவார். இளையவனாகிய பரதனுக்கு நீ அளித்த அடிசூடும் அரசை திருவடிப் பேறை எனக்கும் அருளுக" என வீடணன் வேண்டினான் என்பது இதன் பொருள். வேண்டியவாறே வீடணன் இராமன் திருவடி நிலைகளை முடியில் சூடியவாறு பாசறையைச் சுற்றி வந்தான் என்பார் கம்பர்பிரான்.

மேதாவிகட்கெலாம் மேலான மேதை

மறநெறி விலக்கி அறிநெறி காக்க, சரணாகதி நெறியைப் பற்றிய வீடணன் அறிவு, ஒப்புயர்வற்றதாகக் கம்பருக்குத் தோன்றுகிறது. அதனால், "அறிஞரின் மிக்கான்"[221-ஊ] "உம்பர் மந்திரிக்கும் மேலா ஒருமுழம் உயர்ந்த

ஞானத்தம்பி"[221-எ] " மேதாவி யானார்க் கெல்லாம் மேலான மேதையான்"[221-ஏ] என்று வீடணன், அறிவின் திறத்தை உளம் ஓங்கப் பாராட்டுகின்றார் கம்பர். வேறு யாருடைய அறிவையும் வீடணன் அறிவைப் பாராட்டியது போல், கம்பர் காவியம் நெடுகிலும் எங்கும் பாராட்டியதே இல்லை எனலாம்.

வீடணனை "மகா பிராஜ்ஞு" என்று வான்மீகி குறிப்பிடுவதைப் "பெரும் பேரறிவாளன்" எனக் குறிப்பிட்டு பெரியவாச்சான் பிள்ளை அடைகளை விளக்கும் முறை கம்பர் கருத்தை அப்படியே பிரதிபலிக்கிறது.

"அறிவாளன் ஆகையாவது, விலக்க வேண்டியதையும் பற்ற வேண்டியதையும் பிரித்து அறிகை; பேரறிவாளன் ஆகையாவது, விலக்க வேண்டியதை விலக்கி, பற்றவேண்டியதை அறிகை. பெரும் பேரறிவாளன் ஆகையாவது, விலக்க வேண்டியதை விலக்கி, பற்ற வேண்டியதை அடைவதற்குப் பழுதாகாத உபாயத்துவத்தையும் அறிகை"[221-ஐ] என்பார் அப்பெரியார்.

வீடணன் இவையெல்லாம் ஒருங்கே அறிந்தவனாகையால் இப்பெருமக்களால் இவ்வாறு பாராட்டப்படுகிறான் எனலாம். அதனால் கம்பருக்கும் வீடணன் மேதாவி யானார்க் கெல்லாம் மேலான மேதையான்; "அறிஞரின் மிக்கான்" ஆகிறான்.

சரணாகதியும் திருமண்ணிடலும்

இறைவன் திருவடி பட்ட திருமண்ணை நெற்றியில் ஏந்திக் கொள்வதே திருமண்ணிடல் எனும் வைணவக் குறியீடு. இது, அடிசேர்தல் என்னும் சரணாகதியின் குறியீடு ஆகிறது. "வேண்டுதல் வேண்டாமை யிலான் அடிசேர்ந்தார்க்கு"[222] "இறைவன் அடி சேராதார்"[223] என்னும் குறள் அடிகளில் வரும் அடிசேர்தல் சரணகதி நெறியையே குறிக்கிறது எனலாம்.

வேறு ஒரு கதியில்லை; நின் இணையடியே புகல் என்று இறைவன் திருவடிகளை நம்பித் தன்னை ஒப்படைப்பது சரணாகதி ஆகிறது.

"ஆறுநின் திருப்பாதமே சரண்"[224] என்பார் நம்மாழ்வார். (ஆறு - நெறி)

இவ்வாறு அவன் பேர் சொல்லி, இறைவன் பதத்தை ஏந்தும் நாமமிடலைத் "தன் திரு நாமத்தைத் தானும் சாத்தியே"[225] என இராமனும் திருமண்ணாகிய நாமம் இட்டான் எனக் கம்பர் குறிப்பிடுகின்றார். இறைவன் நாமத்தை உரைத்தவாறு திருமண்ணிடல் "நாமமிடல்" எனும் பெயர் பெற்றது. திருமண்ணில் வெளிஇரு கோடும் இறைவன் திருப்பாத வடிவில்

இலங்குவதை இன்றும் வைணவத் திருக்கோயில்கள் பலவற்றில் காணலாகும்.

வாலிவதத்தின் காரணம்

வாலி வதத்திற்குக் காரணமே, அவன் சுக்கிரீவன் சரணடைந்தும் ஏற்காது[225-அ] சரணாகதி தர்மம் கொன்றதே.[225-ஆ] சரணாகதியைக் கொன்றவன் எவ்வழியிலேனும் கொல்லப்படுவான் என்பது வாலிவதம் உணர்த்தும் கருத்தாகும் எனலாம்.

பிழைசெய்தாரையும் பேணுவது சரணாகதி

இராவணனின் ஒற்றர்கள் இருவரைக் கொடியால் கட்டி வந்து இராமன் முன் நிறுத்துகின்றனர் வானரப் படையினர்.

“தாம்பிழை செய்தாரேனும் தஞ்சமென் றடைந்தோர் தம்மை நாம் பிழை செய்யலாமா நலியலீர் விடுமின் என்றான்.”[225-இ] இங்கு பிழைசெய்தார்க்கும் பிழை செய்யாமல் சரணாகதரைக் காப்பது இராமனின் கோட்பாடு என்பது தெளிவுற விளங்குகிறது.

வீடணன் அடைந்த சரணாகதியை ஏற்கக் கூடாது என்று எதிர்த்தவன் சுக்கிரீவன். சரணாகதி பலிக்கத் தடையாக இருந்த பாவம் போக்க, வீடணனை அழைத்து வரும் கைங்கரியத்தைச் சுக்கிரீவனுக்கே அளிக்கின்றான் பெருமான். இதனால், சரணாகதி தடுத்த பாவமும், பாகவத அபசாரமும ஆகிய இருபெரு பாவங்களும் ஒருசேர சுக்கிரீவனிடமிருந்து நீங்கப் பெருமான் அருள் செய்தான் ஆயிற்று.

சயந்தனும் சரணாகதியும்

பிராட்டியின் உடலைத் தீய ஆசையோடு தீண்டினான் இந்திரன் மகன் சயந்தன். இராமன் விட்ட வாளி அவனைத் துரத்தியது. மூவுலகினும் தன் தந்தை தேவேந்திரன் உட்பட அவனுக்கு அடைக்கலந்தருவார் இல்லை. பெற்றோரும் கைவிட்டனர். பிற தெய்வங்களும் கைவிட்டன. இறுதியில் இராமனையே சரண் அடைந்து உய்ந்தான். இந்நிகழ்ச்சியால் உலகு பாடம் பெறுவதற்கு, அடையாளமாக அன்றிருந்து காகங்கட்கு, இருகண்ணிருந்தும் ஒருகண் பார்வையே யுண்டாகுமாறு இராகவன் வாளி செய்தது. “காகம் முற்றும் ஓர் கண்ணிலவாக்கிய வேகவென்றி”[226] என்று கம்பர் இதனைக் குறிப்பிடுவார்.

இந்நிகழ்ச்சி, பலசமய உண்மைகளைச் சுட்டி நிற்பது காணலாம்; குற்றம் புரிய எண்ணும்போதே தேவமகனாகிய சயந்தன் (காக

அசுரனாகிவிடுகிறான். நினைவுகளே தேவ, அசுர, மானுட சாதிகளை நிருணயிக்கின்றன. இயற்கை யுறவினனான இறைவனே உண்மைப் பெற்றோன் ஆகிறான். உடல் தொடர்புப் பெற்றோர்களால் எல்லா இடையூறுகளுக்கும் உதவல் இயலாது. கர்மம் காரணமாக உறவினரான தாய் தந்தையர் முதலானோர் கைவிடும் நிலையிலும் உதவ உள்ளவன் இறைவன். எத்துணைப் பேரளவுள்ள குற்றத்திற்கும் சரணாகதியில் உய்ய வழியுண்டு. இறைவனால் கைவிடப்படின் யாவராலும் காப்பாற்றல் இயலாது. அஃறிணை உயிரானாலும் சரணாகதி கொண்டு உய்யலாம் என்பவற்றையெல்லாம் இச் சயந்தன் நிகழ்ச்சி உணர்த்தி நிற்கிறது.

கம்ப ராமாயணம், சரணாகதி நெறியைச் சாற்ற எழுந்தது என்பதற்கு இச் சிறு நிகழ்ச்சி தரும் பாடங்களே போதுமானவை யெனலாம்.

"கரும ஞான யோகங்களால் அசாத்திய மானதைப் பக்தியோகத்திலே சாதிக்கலாம். அதனாலும் அசாத்தியமானதைப் பிரபத்தியாலே (சரணாகதியாலே) சாதிக்கலாம்"[227] என்னும் வைணவப் பெரியோர் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கற் பாலது.

உயர்நெறி சரணாகதியே

"இற்றைநாள் அளவும் யாரும் இருடிகள், இமையோர்,
ஞானம்
முற்றினார், அன்புபூண்டார், வேள்விகள் முடித்துநின்றார்
மற்றும் மாதவரும் எல்லாம் வாள் எயிற்று இலங்கைவேந்தன்
பெற்றது ஆர்பெற்றார் என்று வியந்தனர் பெரியோர்
எல்லாம்"[228]

இப்பாடலில் முதல் இரண்டு அடிகளில், ஞானம் முற்றினார், அன்பு பூண்டவர், வேள்விகள் முடித்து நின்றார் என்னும் தொடர்களால், முறையே ஞானயோகம், பக்தியோகம், கருமயோகம் ஆகியநெறிகள் பூண்டாரைச் சுட்டி, அவைபூண்ட அனைவரிலும் சரணாகதி நெறியைப் பற்றிய வீடணன் பேறே உயர்ந்தது என்கின்றார் கம்பர். அவன் பெற்ற வேறு பிறர் யார் பெற்றார்? என்று பெரியோர் எல்லாம் வியந்தனர் என்பதனால், பெரியோர் வியக்கும் நெறி, பிரபத்தி நெறியாகிய சரணாகதியே என்ற வைணவக் கோட்பாடு அழுத்தந் திருத்தமாகக் கம்பரால் பதியப்பட்டுள்ளமையை இங்கு உணரலாம். "பெற்றது" என்னும் சொல் வினையால் அணையும் பெயராய்ச் சரணாகதி நெறியையே சுட்டுகிறது என்பதனை, மீந்துள்ள மூன்று நெறிகளை முதல் இரண்டடிகளில் கம்பர் சுட்டியுள்ளதால் தெளியலாம்.

எல்லா நெறியும் சரணாகதியில் வந்து முடியும் என்பதே கம்பரின் கோட்பாடு என்பது இங்கும் தெளிவாதல் காணலாம்.

"பிரபத்தி செய்யாவதனுக்கு மோட்சம் கிடையாது என்பது சாஸ்த்ரார்த்தம், கர்மயோக நிஷ்டனும், ஞானயோக நிஷ்டனும் பக்தியோக நிஷ்டனும் தம்தம் சாதனங்களின் விரோதிகள் (தடைகள்) நீங்குவதற்காகச் சரணமடைய வேண்டும்"[229] என்னும் யதீந்திர மத தீபிகை.

சரணாகதியே காவியப் பாவிகம்

கர்மம், ஞானம், பக்தி ஆகிய முந்நெறியுடையாரையும சரணாகதி நெறிக்கு ஈர்ப்பதே கம்பரின் காவியப் பாவிகமாகும்.

கடவுளை வாழ்த்தும் மூன்று பாடல்களிலும் இக்கருத்தை நுட்பமாக உணர்த்துகின்றார்.

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார்; அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே"

"உலகம் யாவையும் தாமுளவாக்கி, நிலைபெறுத்தி, நீக்கும் அலகிலா விளையாட்டுடைய தலைவர் ஒருவர். அவ்வொருவரிடமே சரணாகதி பூணுங்கள்"[230] என்று சரணாகதி நெறியைச் சுட்டிக் காட்டி காவியத்தின் போக்கைத் தொடக்கத்திலேயே கற்பார்க்கு உணர்த்துகின்றார்.

இரண்டாம் பாடலில், "சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை"[231] என்று ஞானமார்க்கத்தின் அருமையைச் சுட்டி அவனை முழுவது அறிய முயலும் ஞானமார்க்கத்தின் கடுமையை யுரைத்து, அவன் குணக்கடலில் மூழ்கித் திளைக்கும் பக்தி மார்க்கத்தின் ஈடுபடல் நன்று என்று குறிப்பால் உணர்த்துவார்.

"சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணத்தரி தென்னினும் மூன்றினும்
முற்கு ணத்தவ ரேமுதலா மவர்
நற்கு ணக்கடல் ஆடுதல் நன்றரோ"

என்பார்.

மீண்டும் மூன்றாம் பாடலில், இப்பக்தியும் எல்லோராலும் பின் பற்றப்படற்கு அரிய அருமை நோக்கி, சரணம் அடைதலாகிய அவன் பாதம் பற்றலே சிறந்தது என்னும் முதற்பாடலின் கருத்தை மீண்டும்

வலியுறுத்தி வேதம் சொல்லும் "நியாசம்" என்னும் மெய்ந்நெறியாகிய சரணாகதி நெறியையே பின்பற்றுங்கள்.

"வேதம் என்ப மெய்ந்நெறி நன்மையான்
பாதம், அல்லது பற்றிலர் பற்றிலார்"[231]

என்று இறைவணக்கத்திலேயே காவியப் பாவிகம் சுட்டி முடிப்பார் கவிஞர் பிரான். வேதம் என்பது "மெய்ந்நெறி நன்மையன் பாதம்; அவற்றை அல்லது பற்றிலர் பற்றிலார்" என்பது இறைவணக்கத்தின் இறுதித் தொடர். குகன், தண்டக வனத்து முனிவர்கள், சுக்கிரீவன், வருணன், வீடணன் போன்ற பற்றற்றவர்கள் இராமபிரானையே சரணாகப் பற்றிக் கொண்டு உய்வுபெறப் போகிறார்கள்.[232] இதனைத் தொடக்கத்தில் தொகையாகக் கூறி இதன் வகையாகவும் விரியாகவும் இனி வரும் காண்டங்களும், படலங்களும் அமையும் என்பதனைக் கம்பர் குறிப்பாகக் கூறியுள்ளார் என்பது நுணுகி யுணர்வார்க்குப் புலனாகும்.

சரணாகதி எல்லோர்க்கும் பொது

"பிரபத்தி (சரணாகதி)க்குத் தேச நியமமும், கால நியமமும், பிரகார நியமமும் அதிகாரி நியமமும், பல நியமமும் இல்லை" என்னும் ஸ்ரீவசந பூஷணம்"[232-அ]

பக்தி, முதல் மூன்று வருணத்தார்க்கும் என வரையறுக்கப்பட்டது போலன்றி, சரணாகதி எல்லா வருணத்தார்க்கும், ஆண்பால் பெண்பால் ஆகிய, அனைவருக்கும் உரியது. இராமநுசர், முன்பே தூறு மண்டியிருந்த, வேத காலந்தொட்டிருந்த 'நியாசம்' என்னும் இந்தச் சரணாகதி நெறியை வழிதுலக்கி அனைவர்க்கும் திறந்து விட்டார். விசிட்டாத்துவத்தை வரையறுத்த இராமாநுசர், விசிட்டாத்துவித நெறியையே சரணாகதிநெறி என்னுமாறு இச் சரணாகதி மார்க்த்தை விளக்கி எக்குலத்தார்க்கும் எப்பாலருக்கும் இறைத்தொடர்பேற்படும்படி நெறிகாட்டினார் என்று[233] இரகசிய திரய சாரம் இதைக் கூறுகிறது.

"அந்தணர் அந்நியர் எல்லையில் நின்ற அனைத்துலகும்
நொந்தவரே முதலாக நுடங்கி, அனன்னியராய்
வந்தடையும்வகை, வண்தகவேந்தி வருந்தியநம்
அந்தமில் ஆதியை அன்பர் அறிந்து அறிவித்தனரே"[234]

நம்மாழ்வாரும் கம்பரும்

போக்கற்றவனும் கைம்முதல் இல்லாதவனும் உய்தி எய்த வேண்டும் என்ற விரிந்த நோக்கில், நம்மாழ்வா;ா பிரபத்தி நெறி என்பதைத் தக்க

நெறியாக உலகினர்க்கு எடுத்துக் காட்டினார். "நோற்ற நோன்பிலேன்"[234-அ] என்பது அவர் வாக்கு.

கம்பரும் நம்மாழ்வார்போல் பக்தி முதலிய நெறிபூண உரிமையில்லாத நான்காம் வருணத்தவர் ஆதலின், நம்மாழ்வாரைக் குருவாக ஏற்றவர் இது தனியனில் "குருகைநாதன் குரைகழல் காப்பதே"[235] என்பதனால் தெரியலாம். "நம் சடகோபனைப் பாடினையோ" என்று அரங்கநாதன் கேட்க, சட கோப ரந்தாதி கம்பர் பாடினார்[236] எனும் செய்தியாலும் கம்பருக்கும் நம்மாழ்வாருக்கும் உள்ள தொடர்பு உணரலாகும். ஆகவே, கம்பருக்கு நம்மாழ்வாரே ஞானாசிரியர் என்பது தெளியலாம்.

காப்பது சரணாகதியே

"பிரமனாலும் சிவனாலும் வரம்பெற்ற இராவணன், கும்பகருணன் ஆகியோர் அழிவதால் தலைவர்கட்கும், தசரதனுடைய வரலாற்றால் தந்தைக்கும், காகாசுரன் வரலாற்றால் மாபெரும் பதிவிரதையாகிற இந்திரன் மனைவியாகிய சசிதேவி போன்ற தாய்க்கும், வீடணன், கும்பகர்ணன் இந்திரசித்து முதலானோர் வரலாறுகளால் உடன்பிறந்தோர்களுக்கும் புத்திரர்களுக்கும் காக்கும் திறமை யில்லை யாவதை உணர்ந்து, மூன்று உலகங்களிலும் அலைந்து தேடினாலும் இராமனாகிய பரம்பொருளே கதி என்று உணர்ந்து அவனைச் சரணடையுங்கள்[237] என்று இராமாயணம் முறையிடுகின்றது.

ஆசாரிய அபிமான நெறி

ஏதோ ஒரு நெறியில், பயணம் என்று ஒன்றை மேற்கொண்டால் அடையும் இடம் என்று ஒன்றிருத்தல் எவரும் அறிந்த ஒன்று. உயிர்களின் நீண்ட பயணத்தின் எல்லைநிலம் பரமபதம் என்பது வைணவத் துணிபு. இந்தப் பரமபதம் கரும, ஞான, பக்தி யோகங்களால் அடைவதைக் காட்டிலும், சரணாகதி நெறியில எய்துவது எளிது. அச்சரணாகதி நெறியும் ஆசாரியர் ஒருவரிடம் காட்டும் அன்பினால் அடைதல் மிக எளிது என்பது வைணவம் உலகுக்குக் காட்டும் நெறிவிளக்கம் ஆகும்.

ஆசாரிய அபிமானம்

"எம்பெருமானைப் பற்றுகை, அவனைக் குசலப் பிரச்சனம் செய்வதை ஒக்கும். ஸ்ரீவைஷ்ணவர்களைப் பற்றுகை எம்பெருமானுடைய கையைப் பிடித்து நட்புக் கொள்வதை ஒக்கும். ஆசாரியனைப் பற்றுகை எம்பெருமானுடைய காலைப் பிடிப்பதை ஒக்கும்"[238] என்னும் வார்த்தா மாலை.

ஆசாரியனாகிய அநுமனைத் திருவடி என்று கம்பர் சொன்னதன் பொருள் இங்கு மேலும் தெளிவாம்.

கடவுளே தருமம், அவன் தனியாக இருக்கின்றான் என்று ஆசாரியன் அவனுக்கு உலகில் துணையாக நிற்கின்றானாம். ஆசாரியனாகிய அநுமனை, கம்பர் இதனால் "தருமத்தின் தனிமை தீர்ப்பான்"[238-அ] என்கின்றார்.

வைணவம் காட்டும் ஐவகை நெறிகளில் இறுதிநெறி ஆசாரிய அபிமானம்.

"வீட்டினுக்கு அமைவதான மெய்ந்நெறி வெளியிற்றுஆகக் காட்டுறும் அறிஞர் என்ன அன்னவள் கழறிற்றுஎல்லாம் கேட்டனன்"[238-ஆ] என இராமன் சபரி கூறியன வெல்லாம் கேட்டனன் என்பர். இதனால் வீட்டினுக்குரிய மெய்ந்நெறியை, ஆச்சரியன் காட்டுவான் என்னும் ஆசாரிய அபிமான நெறி கம்பரால் தெளிவுறச் சுட்டப்பட்டுள்ளமை காணலாம். வீட்டினையடைவதற்கு உரிய மெய்யான நெறியினை வெளிப்படையாகக் காட்டும் அறிஞர்கள் ஆசாரியர்கள் என்பது கம்பர் கருத்தாதல் இங்கு தெளியலாம்.

ஆசாரியன் இறைவன் ஆகிறான்

ஆசாரியனை, இறைவனுடைய பரம், விபவம், வியூகம், அர்ச்சை, அந்தர்யாமித்துவம் என்னும் ஐவகை நிலைகளுக்கு அடுத்த ஆறாம் வடிவம் எனக்கொள்வது வைணவ மரபு.[239] இதனால், "இறைவர்கள் மூவர் என்பது எண்ணிலார் எண்ணமேதான் அறைகழல் அநுமனோடு நால்வரே தெரியின் அம்மா"[240] என்று கம்பர் ஆசாரியனாகிய அநுமனை மும்மூர்த்திகளுக்கும் அடுத்த நாலாம் மூர்த்தியாகக் குறிப்பிடுகிறார்.

இராமனின் ஆசாரியனான வசிட்டனையும் நான்காவது கடவுளாகக் குறிப்பிடுகிறார்.

"கடவுளாம் எனத் தேவரும் முனிவரும் உணருந் தேவர்கள்
மூவரில் நால்வனாம் முனிவந் தெய்தினான்"[241-அ]

என்பது கம்பர் வாசகம்.

ஆசாரியன் காட்டும் நெறியே பின்பற்றற் குரியது

அறம் அல்லாததனைச் செய்யச் சூழல் எய்தினால், ஆசாரியன் அது செய்க என்று ஏவினால், ஆசாரியர் சொற்களையே வேதம் எனக் கொண்டு அதனைச் செய்து முடிப்பதே அறமாகும்.

"ஐயன் அங்குஅது கேட்டு, அறன் அல்லவும்
எய்தினால் அது செய்க என்று ஏவினால்
மெய்ய! நின் உரைவேதம் எனக்கொடு
செய்கையன்றோ அறம் செய்யுமாறு என்றான்"[242]

வைணவ சமயம் மிகவும் போற்றிக் காக்கும் ஆசாரிய அபிமான நெறியை தாடகையைக் கொல்ல, இராமன் துணிந்தபோது உரைத்த சொற்களில் வைத்துக் கம்பர் இங்கு விளக்கி உள்ளமை காணலாம். "கோசிகப் பெருமானே! பெண்கொலை என்று தயங்கினேன். நீ செய்க என்று கூறுவதனால், ஆசிரியனாகிய உன் உரையையே வேதம் என்று கொண்டு அவளைக் கொல்கிறேன். ஆசாரியர் சொல் மறாமையே அறநெறி" என்கின்றான் பெருமான்.

இறைவனின் புகழ் பெருக்குபவன் ஆசாரியன்

இறைவனின் பெருமையை அறியாது மயங்கும் உயிர்கட்கு, தேன் என இனிக்கும் அவன் செம்மை சேர் புகழை இனிதாக எடுத்தியம்பி உயிர்களை இறைவனிடம் சேர்ப்பிக்கும் பணியைப் புரிபவன் ஆசாரியன். அநுமனைக் கவிக்கூற்றாகக் குறிப்பிடுவதன் மூலம் இக்கருத்தை உணர்த்துவார் ஆசிரியர் கம்பர்.

"செவிக்குத்தேன் என இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன்"[243]

என்பதனால் அநுமன் ஆசாரியன் என்பதனையும் அந்த ஆசாரியன் உலகிற் புரியும் செயலையும் கம்பர் இங்கு நுட்பமாக விளங்க வைக்கின்றார்.

ஆசாரிய அபிமான நெறியில் இராமன்

இராமன், ஆசாரியனாகிய வசிட்டனுக்குப் பணிந்து, கற்பன கற்று, பணிவும் ஒழுக்கமும் பூண்டு, விநய சம்பத்து மிக்கவனாய் வளர்ந்து மக்கட்கு ஆசாரிய அபிமான நெறிகாட்டி நின்றான் என மகிழும் வைணவச் சான்றோர் உலகம்.

"பொறையோடும் திருமணத்தான் (தசரதன்) புதல்வன் என்னும் பெயரே காண்; மறையோதுவித்து இவனை வளர்த்தானும் வசிட்டன்காண்"[244] என்று இராமன் குணத்திற்கும் பெருமைக்கும் புகழுக்கும் ஆற்றலுக்கும் ஆசாரியனாகிய வசிட்டனே மூலகாரணம் என்று கம்பர் இங்கு காட்டும் திறம் காணலாம்.

கண்ணனுக்கு இப்படிப் பட்ட வளர்ப்புமுறை வாய்க்காததாலேயே குறும்பும் வஞ்சமும் மாயமும் வல்லவனாகிப் போனான் என நயம்பட உரைப்பர் வைணவச் சான்றோர்.

“யசோதைப் பிராட்டி, பிள்ளைமனம் கன்றாமல், தீம்பிலே கைவளரும்படி, வளர்த்த மொசுமொசுப்பெல்லாம் பெரிய பெருமாள் (திருவரங்க மூலவர்) பக்கலிலே தோன்றியிருக்கும். வசிட்டாதிகளாலே, நன்கு பயிற்றப்பட்டவனாய் வளர்ந்து வாழ்ந்த விநயமெல்லாம் தோற்றும் படியான சக்கரவர்த்தித் திருமகனை நினைக்கும்படியாயிருக்கும் நம்பெருமானை (திருவரங்க உற்சவரை)க் கண்டால்”[245] என்பது உரை.

இதனால்தான், “கற்பார் இராம பிரானை அன்றி மற்றும் கற்பரோ”[246] என்பார் நம்மாழ்வார்.

“கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா”[247] எனும் பாசுர அடியில், கூனிமேல் உண்டை எய்தவன் இராமனாயிருக்க, கோவிந்தா என்று ஆழ்வார் கண்ணனைக் குறிப்பதேன்? எனும் வினாவை எழுப்பி, “பல்லோர் உள்ளார் பிள்ளைகள் எல்லாம் உன்மேல் அன்றித் தீராது”[248] என்னும் யசோதை மொழியைக் காட்டி, ஊரில் உள்ள அழிம்புகள் எல்லாம் கண்ணனுக்கே சாரும் என்னும் நியதி பற்றி, இச்சிறுகுறும்பையும் இராமன்மேல் சார்த்த மனமின்றி, ஆழ்வார் கண்ணன் மேல் சார்த்தினார் என்று சுவைபடக் கூறுவார் நம்பிள்ளை.[249] இதனால், இராமன் வாழ்ந்து காட்டிய ஒழுக்க நெறியின்பாலும், அதற்கு மூலமாகிய ஆசாரிய அபிமானத்தின்பாலும் வைணவ ஆசாரியர்கள் வைத்திருந்த பெருமதிப்பும் பக்தியும் புலனாகும்.

“இறைவன் ஆசாரியனிடத்திலே கேளாத குறை தீருகைக்காக வன்றோ கேள்விஞான முடைய அறிவுடையார் (முனிவர்கள்) அடியின்கீழ் இராமன் துவண்டு திரிந்தது”[250] என்பார் பெரியவாச்சான் பிள்ளை. இறைவனுக்கே கிட்டாமல், பாகவதர்கட்கே கிட்டும் ஒருதனிப் பேறு ஆசாரிய அபிமானம் என்பது இத் தொடரின் கருத்தாம்.

இராமன், வசிட்டர் விசுவாமித்திரர் முதலியோரிடம் பணிவு பூண்டு கற்பன கற்றது ஆசாரிய அபிமான நெறியின் பெருமையைச் சுட்டுவதற்கே யாகும் என்பது இங்கு தெளிவாகிறது.

“சத்துவம் தலையெடுத்தால், ஒரு சாத்துவிகரோடு தொடர்பு உண்டாம்; சாத்துவிகர் தொடர்பால் ஒரு சதாசிரியனைக் கிட்டுவான்; அவன் தஞ்சமான பொருளை உபதேசிப்பான்; வீடுபேறுபெற ஆசாரியன்

புருடகாரமாவான்”[251] என்று ஆசாரிய அபிமானம் ஒரு நெறியாகும் முறையை விளக்கும் வார்த்தா மாலை.

உருவகத்தில் இலங்கை

“இலங்கை நகரம் உடல் என்றும்; இராவண கும்பகர்ணர் முதலியோர் அகங்கார மமகாரங்கள் என்றும், இந்திரசித்து முதலியோர் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களாகிய குற்றவகைகள் என்றும், இலங்கையில் சிறையிருக்கும் சீதை, சம்சார பந்தத்தில் சிக்கியுள்ள சீவான்மா என்றும், இச்சீவனை வாழ்விப்பவன் ஆசாரியன் என்றும், அத்தகைய ஆசாரிய முறையைப் பாராட்டுவான் அநுமன் என்றும் விளங்குகிறது”[252] என்று “இராமாயண இரகசியங்கள்” என்னும் நூல் சுட்டும்.

அநுமனை ஆசாரியன் எனக் கருதும் பண்பினாலேயே, பின்னால் அநும வழிபாடு நாட்டிற் பெருகிற்று எனலாம். ஆசாரியன்வழி இறைவனையடைதல் எனும் ஆசாரிய அபிமான வைணவ நெறி இங்ஙனம் பரவி வேரூன்றியுள்ளது எனலாம்.

ஆசாரியன் என்பதன் பொருள்

ஆசாரம் என்பது நன்னடத்தை. அதனை யுடையவன் ஆசாரியன். ஆசாரியன் வழி இறைவனை அடைய வேண்டும் என்று வைணவம் வற்புறுத்துவதால், நன்னடத்தையின் வழியாகவே இறைவனை அடைய இயலும் என்பது வைணவத்தின்முடிந்த முடிபு என்பது தெளிவுறும்.

அநுமன் ஆசாரியன் என்பதைச் சுட்டும் முறை

முழு ஞான நாதரை “அறிவின்நாடி” மாருதி மொழியும்[253] என அநுமன் அறிமுகமே, முழு ஞான நாதனாகிய இராமனைத் தனது ஞானத்தால் தெளிந்து, அநுமன் சுக்கிரீவனுக்குச் சொல்லுவதாகத் துவங்கும். ஆசாரியன் ஞானம் வல்லனாய், இறையை ஞானத்தால் உணர்ந்து சேதன மன்னுயிர்க்கு உணர்த்துபவன் என்பது இங்கு நுண்ணியதாய்ச் சுட்டப்படுகிறது. கணையாழியைக் காட்டி உயிர்காத்த அநுமனைப் பாராட்டும சீதைமொழியில், ஆசாரிய இலக்கணங்கள் அனைத்தும் குறிக்கப்படல் காணலாம்:

“மும்மையாம் உலகுக்கெல்லாம் முதல்வற்கு முதல்வன்
தூதாய்ச்
செம்மையாய் உயிர்தந்தாய்க்குச் செயல் என்னால்
எளியதுண்டோ?

அம்மையாய் அப்பனாய அத்தனே, அருளின் வாழ்வே,
இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு
என்றாள்”[254]

“அம்மையாய் அப்பனாய அத்தன்” என்பதனால் ஆசாரியன் உயிர்கட்கு ஆகும் உறவுமுறையும், “அருளின் வாழ்வே” என்பதனால் ஆசாரியனின் பண்பு நலனும், “இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு” என்பதனால் ஆசாரியன் தரும் பேறும், “முதல்வர்க்கும் முதல்வன் தூதாய்ச் செம்மையாய் உயிர் தந்தாய்” என்பதனால் ஆசாரியன் இறைவனுக்கும் உயிர்கட்கும் இடையே பாலமாய் இயங்கி, உயிர்களைச் செம்மை செய்து இணைப்பவன் என்னும் அவன் அருமையும் உய்த்துணருமாறு கூறியுள்ள திறம் காணலாம்.

ஆகவே, கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், சரணாகதி, ஆசாரிய அபிமானம் என்று வைணவம் சுட்டும் ஐவகை நெறிகளே கம்ப ராமாயணத்தில் இறைவனை அடையும் நெறிகளாகக் குறிக்கப் பட்டிருப்பதும், அவற்றுள், சரணாகதி நெறிக்குள்ள ஏற்றமும், ஆசாரிய அபிமான நெறிக்குள்ள ஊற்றமும் கம்பர் கண்ட வைணவப் பேருலகில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளமையை நன்கு உணர முடிகிறது.

5

தடை இயல்பு

உயிர்கள் இறைவனையடைய இடையூறா யிருப்பவைகளை விரோதி எனவும், பகை எனவும், தடை எனவும் வைணவ மரபு வழங்கும்.

இறைவனையும் அவதாரங்களையும் தவறாக நினைப்பது இறைமைப் பகை (பரத்துவ விரோதி) யாகும். தற்சுதந்திரமற்ற, உயிர்கள், தற்சுதந்திரமுடையவையாக நினைப்பது, தானல்லாத உடம்பைத் தான் என நினைப்பது (அகங்காரம்), தனது அல்லாத பொருளைத் தனது என நினைப்பது (மமகாரம்) ஆகிய இவையெல்லாம் உயிரியல்பின் பகை (சொரூப விரோதி)யாகும். தான் புரியும் உபயாங்களே பலன் தருபவை; இறைவன் அல்லன் என நினைப்பது நெறிப் பகை (உபாய விரோதி)யாகும். இவ்வுலகத்தில் உள்ள மனைவி, மக்கள், பொன், பொருள் முதலியவற்றையே பேறாக நினைப்பது, பாகவத அபசாரம் புரிவது, அடியார்களைத் தாழ்ந்த சாதியிற் பிறந்தவராகக் கருதுவதாகிய சன்ம நிரூபணம் முதலியன பேற்றின் பகை (புருடார்த்த விரோதி)யாகும்.[1]

முதலில், தொகையாக இப்பகைகட்குச் சில சான்றுகள் தந்து, பின் கம்பராமாயணத்தில் பரந்து கிடக்கும் இவற்றின் வகைகளை ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

இறைமைப் பகை (பரத்துவ விரோதி)

இராமனை, வருணன் ஏழுநாள் காக்க வைத்தது இராமனை மனிதன் என்று நினைத்ததனால் தான் என்று வானரங்களால் கருதப்பட்டது.

"வள்ளலைப் பாவிதான் மனிதன் என்றுடன்
எள்ளலுற்று, எதிர்ந்திலன் ஏழுநாள் எனாத்
துள்ளலுற்று எழுந்தன குரங்கின் சூழல்"[2]

என்பார் கம்பர்.

இவ்வாறு அவதாரங்களையும் இறைவனையும் தவறாகக் கருதுவதையே இறைமைப் பகை என்று வைணவம் கருதும். இறைவனைத் தம் போன்ற மக்களுள் ஒருவனாகக் கருதுவது பாவம் என்பது தோன்ற, "வள்ளலைப் பாவி தான் மனிதன் என்று உடன் எள்ளலுற்று இகழ்ந்தனன்"[2-அ] என்பதனால் உணர்த்தப் படும்.

உயிரியில்பின்வகை (சொருப விரோதி)

தான் சுதந்திரன்; இறைவனுக்கு அடிமையல்லன் என்று நினைப்பது உயிரியல்புக்குப் பகையாகும். உயிர் இறைவனின் அடிமை என்பது வைணவக் கொள்கை.

"முனைவர், வானவர், முதலினர் மூன்றுலகத்தும்
எனைவர் உள்ளவர் யாவரும் என்இருகழலே
நினைவது; ஓதுவது என்பெயர்;[3]"

என்று மூவுலகும் எனக்கடிமை; நான் நாராயணனுக்கு அடிமையல்லன் என்று இரணியன் நினைத்தமை உயிரியல்பின் பகைக்குச் சான்றாகும்.

நெறிப்பகை

அறநெறியைத் தூற்றி, சரணாகதி நெறியை இகழ்ந்து வீடணனை இகழ்ந்தது போன்ற இராவணன் செயல்கள் நெறிப் பகைக்குச் சான்றாகும். "கும்பிட்டு உய்தொழில் ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன் யான் அது செய்திலேன்"[3-அ] என்பான் இராவணன். இங்கு, வீடணனின் பக்திநெறியையும் சரணாகதி நெறியையும் தகா நெறி என்று இராவணன் இகழ்வது காண்க.

பேற்றின் பகை

தன் மகன் பரதன் வாழ்வே பேறு என நினைத்த கைகேயியும், தமயன் நலமே பேறு என நினைத்த கும்பகருணனும் புருடார்த்த விரோதி எனும் பேற்றின் பகைக்குச் சான்றாவார். இராம இலக்குவரை, "மானுடப் பதர்கள்"[4] என்றும், பாகவதனான அநுமானை, "கூனுடைக் குரங்கு"[5] என்றும் பிறப்புக் காரணமாக இகழ்ந்து இராவணன் கூறியதும் பகவத் அபசாரமும் பாகவத அபசாரமும் ஆகிய பேற்றின் பகைகள் ஆகும்.

இராவணன்-தடைகளின் முழுவடிவம்

இந்நால்வகைத் தடைகளால் கிளைக்கும் தடைகள் பலவாம். சீவர்கள் இறைநெறியிற் செல்ல முக்கியத் தடைகளாய் இருப்பவை இவையென வைணவச் சான்றோர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவர்.6

1. யான் எனது எனும் அகப்பற்றுக்கள், புறப்பற்றுக்கள்.
2. பிற உயிர்களைத் துன்புறுத்தல்
3. பிறரைப் பழித்தல்
4. பிறர் மனை விழைதல்
5. பிறர் பொருள் கவர்தல்
6. உண்ணத் தகாதனவற்றை உண்ணல்
7. பிறவழிகளைப் பற்றுதல்
8. பிறவற்றில் காமம் கொள்ளுதல்
9. இறைவனிடத்தும், அடியாரிடத்தும் அபசாரப் படுதல்

ஆகிய இவைகள், இறைவனை அடையப் பெருந்தடையாக நிற்பவையாம். இவற்றில் முதலாவது உயிரில்பின் பகையாகும். இரண்டிலிருந்து ஏழுவரையானவை நெறிப்பகையாகும். எட்டாவது, இறைவனிடத்து அபசாரப்படுதல் ஆகிய இறைப்பகையாகும். அடியாரிடத்தில் அபசாரப்படுதல் பேற்றின் பகையாகும். இப் பகைகள் அனைத்தும் இராவணன் வாழ்க்கையில் மேலோங்கி நின்றன. அதனால், அவன் அழிவு தவிர்க்க முடியாத தாயிற்று.

> **"மான் என்பது அறிந்த போன மானுடர் ஆவார், மீண்டும்**
> **யான் என்பது அறிந்தால் வாரார்"[6-அ]**

> **"மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை இடிக்க வேண்டின்**
> **நீரினைக் கலக்க வேண்டின்; நெருப்பினை அவிக்க வேண்டின்**
> **பாரினை எடுக்க வேண்டின் பலவினைச் சிலசொல் ஏழாய்!**
> **இராவணற்கு அரிது என்?"[7]**

என்னும் இராவணன் கூற்றால் அவனுடைய யான் எனும் அகப்பற்று வெளிப்படும்.

"தேவதேவியர் சேவடி கைதொழும் தாவில் மூவுலகின் தனிநாயகம்"[48] எனக்குரியது என்பதனால் இராவணனுடைய எனது

என்னும் மமகாரம் ஆகிய புறப்பற்றுப் புலனாம். இவை, இராவணனின் உயிரியல்புப் பகையின் ஊற்றத்தை உணர்த்தும்.

"தேசியைச் சிறையில் வைத்தான்; தேவருக்கு இடுக்கண் செய்தான்
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே ஆண்டான்;
வாசவன் திருவும் கொண்டான்; வழியலா வழிமேற் சென்றான்"

என்பதனால், இராவணன் வழியலா வழிமேற்சென்று உங்களைத் துன்புறுத்தியதால் நெறிப் பகை பூண்ட கொடுமையின் அளவு தெரியலாகும்.

"பித்தனாகிய ஈசனும் அரியும் என்பேர்கேட்டு எய்த்த
சிந்தையர்"[10]

"ஊனவில் இறுத்து ஓட்டை மாமரத்துள அம்பு ஓட்டிக்
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து உயர்வனம் குறுகி,
யான் இழைத்திட இல் இழந்து, இன்னுயிர் சுமக்கும் மானுடன்"[11]

என்பவனவற்றால், இராவணனின் பிறர்பழி தூற்றும் ஆற்றலும் இறைப்பகை புரியும் ஆற்றலும் தெளிவாம்.

தன் காரியம் நிறைவேறலுக்காகப் பிறரைப் புகழ்வான் இராவணன், "எனக்கு நிற்க, மற்று என்னோடு இங்கு ஒரு வயிற்றுதித்த உனக்கும் மானிடர் வலியரோ"[12] என வீடணனை அவன் வினவலால் இதனை உணரலாம். வீடணன் தன் செயலுக்கு உதவாத போது அவனை எப்படியெல்லாம் பழித்தான் என்பதனை மந்திரப் படலத்தில் காணலாம்.

"மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் அந்த
எயிலுடை இலங்கைநாதன் இதயமாம் சிறையில் வைத்தான்"[13]

என்பதனால், பிறர்மனை விழைதல் எனும் இராவணன் புரிந்த நெறிப்பகை புரியும்.

"ஆசையின் அளவும் எல்லா உலகையும் தானே ஆண்டான்; வாசவன் (இந்திரன்) திருவும் கொண்டான்"[14] என்பதனால், அவன் பிறர்பொருள் கவர்தலின் வெறி வெளிப்படும்.

"மன்னுயிர் புடைத்துத் தின்றான்"[15] என்பதனால் உண்ணத் தகாதவற்றை உண்ணும் இராவணனின் வழக்கம் புலனாம்.

அறவழியை இகழ்ந்து, சரணாகதி நெறியைத் தூற்றி வீடணனை இகழ்ந்ததனால்[16] பிற வழிகளைப் பற்றும் அவன் நெறிப்பகை தெளிவாம்.

இலங்கைக்குள் அறம் புகாமல் அவன், அடைத்துவைத்து, வீதி வீதியாய், தேவசாதி மகளிரைச் சிறைப்படுத்தி நுகர வைத்திருந்ததனால் பிறவற்றில் காமங்கொள்ளும் குணமுடையஅவன் பண்பு வெளிப்படும்.[17]

“கொச்சைத் துன்மதி”[18] என இறைவனையும் “வஞ்சனை மனத்தினை, பிறப்பு மாறினை; என நஞ்சென இகழ்ந்து, விழிஎதிர் நிற்றியேல் விளிதி”[19] என்று இறை அடியனாகிய வீடணனையும் இகழ்ந்ததனால் இறைவனிடத்தும் அடியாரிடத்தும் இராவணன் புரிந்த பகவத் அபசாரமும் பாகவத அபசாரமும் ஆகிய பேற்றின் பகை புலனாம். எனவே இராவணன் வாழ்வே தடைகளின் முழுவடிவம் என்பது புலனாம்.

தேகாத்மாபி மானத் தடை

உயிர்களிற் பலவும், உலகில் தாம் உடலோடு தோன்றுவதற்குக் காரணமானவன் இறைவன் என உணராமல், தம் தாயும் தந்தையுமாகிற பெற்றோர்களே காரணமானவர் எனும் விபரீத உணர்வாகிய மாயையில் மூழ்கியுள்ளன. நான்முகன் முதற்கொண்டு, தன்னைத் தான் அறியும் தத்துவ உணர்வு இன்மையினால் எழும் திரிபுக் காட்சியால் இவ்வாறு பிறழ உணர்ந்து இவ்வுலகில் பிறந்து சலிக்கின்றனர்.

“என்னைத்தான் முதலாகிய உருவங்கள் எவையும்
முன்னைத் தாய் தந்தை எனும் பெரு மாயையின் மூழ்கித்
தன்னைத்தான் அறியாமையாற் சலிப்பவர்; சலந்தீர்ந்து
உன்னைத்தாதை யென்று உணர்குவ; முத்திவித்து”[20]

என்பது நான்முகன் போற்றல் ஆகும்.

இம்மாயை நீங்கி இறைவனையே தந்தையென்று உணருங் காலையில், உயிர்கள் முத்திக்கு வித்தாய் வீடுபெறுகின்றன என்று நான்முகன் போற்றுகின்றான்.

“தாய் தன்னை யறியாத கன்றில்லை; தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகின் ஐய
நீயறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலையறியா;
மாயம் ஈது என்கொல்?”[21]

என்பான் விராதனும்.

உலக உயிர்களின் தாயும் தந்தையும் ஆவான் இறைவனே என்றுணராமல், எடுக்கும் சனனந்தோறும்; உலகுக்கு வருதற்கு வாயிலாய் உள்ள உடலின் தாய் தந்தையரையே பெற்றோர் என்று கருதும் உயிர்கள்,

மாயையில் மூழ்கிப் பிறவிக் கடலில் உழன்று கிடப்பவை. இந்நினைவு இருக்கும்வரை அவை வீடு பெறும் வாய்ப்பில்லை.

இராமனையே தாயும் தந்தையுமாகக் கருதிய பரதன், இலக்குவன் முதலியோர் செயல்கட்கு, இங்கு விளக்கம் கிட்டுகிறது. "பெற்றாயும் நீயே பிறர் இல்லை"[22] என்பது இலக்குவன் வாசகம். "எந்தையும் யாயும் எம்பிரானும் எம்முனும் அந்தமில் பெருங்குணத்து இராமன்"[23] என்பது பரதன் வாசகம். தற்காலத் தாய் தந்தைப் பற்றினை விடுத்து, உயிர்களின் முதல் தாய் தந்தையாகிய இறைவனை உள்ளபடி உணரவே உயிர், பிறப்பு நீங்கி முத்திக்கு வித்தாகும் என்றுவாறு. இவ்வுடற்பற்று நீங்காமையே உயிர்ப் (சொரூப விரோதி) பகையாகும்.

தசரதன் இழப்பு

"தேகாத்மாபிமானம் சுதந்தரியாபிமானமும் உடையோன் செயல், தசரதன் கைகேயிடம் நடந்து கொண்டது. அக்காரணத்திலேயே பரமபுருடனான இராமபிரானை அநுபவித்து வாழப் பெறாது முடிய நேரிட்டது."[24] கைகேயியின் பால் தசரதன் கொண்ட பற்றே அவன் இராமனை இழக்கக் காரணமாயிற்று.

"சக்கரவர்த்தியைப் போலே இழக்கைக்கு உறுப்பு"[25] என்று இதனைக் குறிப்பிடுவர். "மற்றதில் பற்றுள்ளவனுக்கு பரமன் கிடைக்கவே மாட்டான்; பற்றற்றவனே பரமனைப் பெறலாம்"[26] என்பர் இராமாயண சார ஆசிரியர்.

தொடக்கறுத்தார் சுற்றம்

உலகியற் பந்த பாசங்கள் என்னும் தொடக்கினை அறுத்தார் சுற்றமாக இறைவன் ஆகிறான் என்பதனை, "தொடக்கறுத்தார் சுற்றமே"[27] எனும் சரபங்கர் வாக்கால் உணரலாம். உலகச் சுற்றங்களின் பாசபந்தம் அறாதவர்க்கு, இறைவன் சுற்றம் ஆவதில்லை என்பதனை, கும்பகருணன் இராமன் அழைத்தும வாராமல், தமையனின் பாசம் அறாமல் மாண்டு மடிந்த நிகழ்ச்சி உணர்த்தும்.

உலகியல் சுற்றத்தை மறந்து, இராமனை அடைந்த குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் தொடக்கறுத்தார் ஆவர். ஆதலால், அவர்கள் இராமனின் சுற்றம் ஆயினர். தொடக்கறுத்தல் என்பது, தானல்லாத உடம்பைத் தான் என்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை எனது என்றும் கருதி, அவற்றின்கட் பற்றுச் செய்வதாகிய அறியாமை (அவிச்சையெனும் மாயை) நீக்கத்தைக் குறிப்பதாகும்.

சொரூபப் பகையாகிய இவ்வறியாமை, ஆசிரியர்பாற் பெற்ற உறுதி மொழிகளானும், யோகப் பயிற்சியானும் யான் எனது அன்மை தெளிகையானும் நீங்கும்[28] என்பார் பரிமேலழகர்.

உடல்தடை

உடல் தொடர்பாகிய பிரகிருதி சம்பந்தம் பேற்றுக்குத் தடையாதல் சரபங்கர், சபரி சடாயு முதலியோர் உடலை உகுத்துப் பேறு பெற்ற நிகழ்ச்சிகள் உணர்த்தும். "பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பு (மிகை)"[29] தடை என்பது இதனால் உணர்த்தப்படுகிறது.

பிழைக் காட்சித் தடை

"அலங்கலில் தோன்றும் பொய்ம்மை யரவெனப்
பூதம்ஐந்தின்
விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்
கலங்குவது எவரைக் கண்டால்? அவர்நம்மைக் கைவில்
ஏந்தி
இலங்கையில் பொருதார்அன்றே மறைகளுக்
கிறுதியாவார்"[30]

மாலை, பாம்பாகப் பிழைக்காட்சியில் தோன்றுவதுபோல, ஐம்பூதங்களின் பஞ்சீகரணச் சேர்க்கையால், இவ்வுலகமானது ஐம்பூத வடிவமாகவோ, இதனை ஆக்கியவன் வடிவமாகவோ தோன்றாமல், உலகப் பொருள்களின் வடிவமாகத் தோன்றுகிறது. மனத்தில் உலகியற் கூறு, மேலோங்கி நிற்பதால், இப்பிழைக்காட்சி தோன்றுகிறது. மனத்தில் பஞ்ச பூத காரணனான இறைக்காட்சி தோன்றுகையில் உலகானது, ஐம்பூதம், பஞ்சீகரணம் இறைவன் ஆகியவற்றின் வடிவாக விளங்கித் தோன்றும்.

மறைகளின் எல்லை நிலமான இறைவன் மனத்தே ஒளி தரின், இருள்நீங்கி ஒளிகண்டவுடன், மாலையில் தோன்றும் பொய்யறிவுப் பாம்பு மறைதல் போலே, பேதைமைக் காட்சி மறையும்; அப்போது, பூதம் ஐந்தின் வேறுபட்ட பரிணாம வளர்ச்சிக் கூட்டின் பெருக்கம் இவ்வுலகம் என்பதும், இதற்கு மூலகாரணம் இறைவன் என்பதும் தோன்றும் என்பது மேற்காணும் "அலங்கலில் தோன்றும் பொய்ம்மை யரவு" எனும் நுட்பம் செறிந்த பாடலின் பொருளாகும்.

இப்பாடல், நுட்பமாக விசிட்டாத்துவிதக் கருத்தினைக் கூறுவதேயன்றி, அத்துவிதக் கருத்தைக் கூறுவதன்று என்பது நுணுகி நோக்கில் புலனாம்.

பஞ்சீகரணக் கோட்பாடு

உலகின் தோற்றத்திற்குப் பஞ்சீகரணமே காரணமாகும் என்பது வைணவக் கோட்பாடு. பருப் பொருள்களான நிலம், நீர், தீ, காற்று, வெளி முதலியவை தன் மாத்திரை (பஞ்சபூதங்களின் நுண்கூறு) நிலையிலிருந்து ஐவகை நிலைகளில் மாற்றம் (பஞ்சீகரணம்) பெற்று வந்தவையாகும்.

தன் மாத்திரையின் இயல் இருப்பு முதல்நிலையாகும். இது முதலில் இரண்டாகப் பிரிகின்றது. பின்னர் அதன் ஒரு பகுதி நான்காகப் பிரிகின்றது. இந்நான்கு பகுதிகளும் பின்பு ஏனைய தன்மாத்திரைகளுடன் இணைகின்றன. அதே போன்று அவற்றிலிருந்து ஒவ்வொரு பகுதியும் முதல் தன்மாத்திரையுடன் இணைகின்றன. இறுதிநிலையில் ஒரு குறிப்பிட்ட தன்மாத்திரையில் அதன் பாதி இயல்பும், மற்றொரு பாதியில் ஏனைய தன்மாத்திரைகள் எட்டில் ஒரு பகுதியாகவும் இணைந்திருக்கும். இதுவே, காணப்பெறும் பருப்பொருள்களாகும்.[31]

இதனையே, "பஞ்சீகரணமாவது, ஐம்பெரும் பூதங்களையும் கட்டுதல். கட்டுதலாவது, ஆகாசம் முதலிய பூதங்கள் ஐந்தனையும் தனித்தனியே இரண்டு கூறாக்கி, அவற்றில் ஒவ்வொரு கூற்றை நான்கு கூறாக்கி, மற்றைப் பூதங்களில் ஒவ்வொரு கூறு கட்டிவிடுதல். இதனால் எல்லாப் பூதங்களிலும் எல்லாக் குணங்களும் கலந்து நிற்கும்"[32] என்னும் ஈட்டின் குறிப்புரை.

இதன் விளக்க வரைபடம் பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

"மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்து, ஒரு திரவியமாக்கிச் சுவர் இடுவாரைப் போலவே, ஈசுவரன் இவற்றை (தன்மாத்திரைகளை) யெல்லாம் தன்னிலே சேர்த்து ஓர் அண்டமாக்கி, அதுக்குள்ளே சதுர்முகனைச் சிருஷ்டித்தருளும்"[33] என்பது தத்துவத் திரயம்.

"நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"[33-அ] என்பது தொல்காப்பியம். "அளிக்கு நாயகன் மாயைபுக்கு அடங்கினன் எனினும் களிப்பில் இந்தியத்து யோகியைக் கரக்கிலன்" (கம்ப. 2056) என்பது கவிஞர் வாக்கு.

மாயை

உயிரியல்பின் (சொரூபப்) பகையாகிய மாயை எனும் திரிபுக் காட்சி, (விபரீதஞானம்) இறைநெறிக்குத் தடையாகி நிற்கிறது. மாயை, அவிச்சை, திரிபுக் காட்சி, விபரீத உணர்வு, மயக்கு என்பன ஒரு பொருட்சொற்கள்[33-ஆ] என்பார் பரிமேலழகர்.

"பித்தமயக்காம் சுறவு எறியும் பிறவிப் பெரிய கடல் கடக்க
உய்த்து மீண்ட நாவாயில் தாமும் போவார் ஒக்கின்றார்"[34]

என்பார் கம்பர்.

கடலில் அகப்பட்டவரைச் சுறா மீன்கள் கொன்று தின்ன முயல்வது போலப் பிறவிச் சுழலில் அகப்பட்ட ஆன்மாக்களை மாயை என்பது ஈடேற ஒட்டாமல் துன்புறுத்துகிறது. உயிர்க்கு இயல்பாகிய ஞானத்தை மயக்கி, மெய்ப்பொருளைப் பொய்ப் பொருளாகவும், பொய்ப்பொருளை மெய்ப்பொருளாகவும் பிறழ உணர்விப்பது இதன் இயல்பு. பித்தர்கள் இயல்பு இப்படிப் பிறழ உணர்வது ஆதலால், "பித்தமயக்கு" என்கின்றார். இதனைத் "திரோதான சக்தி" என்னும் சைவசித்தாந்தம்.[35] "பொய்ந்நின்ற ஞானம்"[36] என்று ஆழ்வார்கள் உரைப்பார்கள்.

பிறவியெனும் பெருங்கடற் பயணத்தில், உயிர்கள் தாமே நீந்திச் செல்வது அரிது. நீந்தலாகாப் பெருமையும், உயிரின் வலிமையிலாச் சிறுமையும் மட்டுமே பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்கு அருமை யாவதில்லை. விபரீத ஞானமாகிற திரிபுக் காட்சியென்னும் சுறாவின் தாக்குதல்கள், நீந்தும் உயிர்களால் தாங்க இயலாதவை யாயுள்ளன. ஆதலால், ஒரு நாவாய் இன்றியமையாத தாகிறது. இறைவன் திருவடிகள் பிறவிப் பெருங்கடல் கடக்க நாவாயாக உதவுகின்றன. இறை திருவடிப் புணையைப் பற்றி, பிறவிப் பெருங்கடற் பயணம் புறப்படுவோர், விபரீத ஞானச் சுறாவின் அபாயத்தினின்று தப்புவது மட்டுமின்றி, பயணத்தில் மெய்வருத்தம் மிகுதியின்றியும், பாதுகாப்போடும் செல்லலாகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேராதார்"[37]

எனும் குறளில் ஏகதேச உருவகமாகக் குறிக்கப்பட்டுள்ள கருத்தை, சுறா, நாவாய் என மேலும் விரித்து, முற்றுருவகமாக முற்றுவித்துள்ள கவிஞரின் திறம் இங்கு நோக்கத் தக்கது. தசரதனுக்கு இராமன் திருவடிகள் நாவாய் ஆயின. தசரதன் மனைவியர்க்கு, தசரதனே கடவுள் ஆதலால், அவன் அடிகளே நாவாயாகின்றன. தயரதன் உயிரைக் கரைசேர்த்து மீண்ட உடலாதலால், "உய்த்து மீண்ட நாவாய்" என்கின்றார் கம்பர். இப்பாடல் தசதரனோடு உயிர்துறந்த அவன் மனைவியர்களைப் பற்றியது.

மடமை இருள்-தடையாதல்

இவ்வுலகத்தில் உயிர்கள் அறியாமை இருளில் கிடந்து உழல்கின்றன. இவ்விருளிற் செய்வது இன்னதென அறியாமல், பாவச் செயல்களைப் புரிந்து, அவ்வுலகத்திலும் போய் நரகமெனும் இருளில் கிடந்து

தவிக்கின்றன. இப்படி வினைப்பயனை எத்தனை எத்தனை பிறவிகளில் பிறந்து இவ்வுயிர்கள் அநுபவிக்க இருக்கின்றன என்பதை எண்ண இயலாது என்று இரங்குவார் கம்பர்.

> "இவ்வுல கத்தினும் இடரி னேகிடந்து
> அவ்வுலக கத்தினும் நரகின் ஆழ்ந்து, பின்
> வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்
> எவ்வள விற்செலவு எண்ண லாகுமே?"[38]

என்பது கம்பர் வாக்கு.

இராவணனின் விபரீத ஐய அறிவுகள்

இராவணனுக்குத் திருமகளே சீதையாய் வந்துள்ளாள் என மாலியவான் முதலியோர் உரைத்தும் ஐயம் நீங்கவில்லை. "செந்திரு நீர் அல்லீரேல், அவளும் வந்து ஏவல் செய்யும்"[39] என்பதனால், அவன் ஐயம் புலனாம். அவன், குற்றியோ, மகனோ, இப்பியோ, வெள்ளியோ எனும் ஐயவுணர்வினன் ஆகிறான். இராமனையும் வெறும் மானிடன் என நினைக்கும் விபரீத அறிவினன் ஆகின்றான். விபரீத உணர்வும் ஐய உணர்வும் மெய்ஞ்ஞானம் பெறத் தடையாகும்[40] என்பார் பரிமேலழகர்.

இரணியனின் விபரீத ஞானம்

> "செய்த மாதவம் உடைமையின் அரிஅயன் சிவன் என்று
> எய்தினார்பதம்; இழந்தனர்; யான்தவம் இயற்றி
> பொய்யில் நாயகம் பூண்டலின்; இனி அதுபுரிதல்
> நொய்யதாகும்"[41]

என்பது இரணியன் கூற்று.

தன் கருமங்களாலேயே ஆன்மா ஏற்றம் பெறுகிறது; கடவுள் என்று ஒன்று இல்லை என்று இங்கு இரணியன் கூறுகின்றான். மும்மூர்த்திகளும தன்போன்று மாதவம் செய்து உயர்ந்தவர்களே என்பது இரணியன் கருத்து. இதனை மறுத்துப் பிரகலாதன் கூறுவான்.

> "வேத வேலையின் கரையுளது; யாவரும் கற்கும்

பிரையுளது"[42] பரஞானத்தால் அறியக்கூடியதே பரம்பொருள். அப்பரம்பொருள் ஞானம் இன்றேல், உலோகாயதமான அபரஞானக் கல்வி அறிவைத் திரியச் செய்வதாகும். இரணியன் வேதத்தின் கர்மகாண்டத்தைக் கற்று, ஆணவம் மிக்கு, பரம்பொருளைப் பற்றிய திரிபுணர்ச்சி (விபரீதஞானம்) பெற்று, தான் அப்பரம் பொருளினும் மிக்கவன் என்ற அகந்தையினால் உரைத்ததைக் கேட்ட பிரகலாதன், இறைஞானம் அற்ற

வெறும் கல்வியினால் தந்தையின் அறிவு திரிந்திருக்கிறது, "பிரையுளது" என்று கூறியுள்ளான். எனவே, இராவணன் வேதம் கற்றும் இரணியனைப் போலவே பிறழ உணர்ந்து இறைஞானம் பெறாதவன் ஆகிறான். அவனைக் "கல்லா மதியிலி" என்பார் கம்பர்.

வாலியின் திரிபுக் காட்சி

வாலி, முதலில் யான் எனது என்னும் செருக்கு மிக்கானாய், இராமன் செயல் தவறு என அகங்காரத்தால் வாதித்தான். இராமனின் மெய்க்காட்சியில் இவை இரண்டும் உடனே விலகின. "வந்தேறி"[43] யான அகங்கார மமகாரங்க்ள் விலகியவுடன் வாலி பண்டை வண்ணமாய் மாறினான். தன், ஆவிபோம், வேலை வாய் மெய்யறிவு தந்து[44] இராமன் உதவியதற்கு நன்றி தெரிவித்து சுக்ரீவன், அங்கதன் முதலியோரைம இராமனிடம் அடைக்கலப் படுத்தினான்.

"தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்"[45] உருவெடுத்தாற் போன்றுள்ளவன் இறைவன். அவனுடையநெடிய நோக்கும் அறக்கருணையாலும் மறக்கருணையாலும் உயிர்கட்கு அவன் நலஞ்செய்யும் மாண்பும், உயிர்களால் முழுதும் உணரப்பட இயலாதவை.[46] இறைவனின் செயல்கள் சில, தீமைபோல் தோன்றினும் மக்களை நன்னெறிப்படுத்தும் தாய் செயல்களே அவை என்றுணர்ந்த வாலி, "உண்டபேதைமை மயக்குஅற, முன்னிருந்ததில் வேறுபட்டு, புதுவடிவம் கொண்டவனாய் மெய்யுணர்பவன் கழல்" கூடினான். "யான் எனது என்னும் செருக்கு அறுப்பார் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுவர்"[47] ஆதலால், "அநநிலை துறந்து, வானோர்க்கு அப்புறத் துலகன் ஆனான்"[48] என்று வாலி மோட்சம் கூறுகிறார் கம்பர்.

மாயப் பிறவிக்கு உவமை

மாயைத் தொடர்பால் பல்வேறு பிறவிகளில் உழன்று, பின் ஆன்ம ஞானம் அடைந்தோர், அப்பிறவிச் சுழலின்றும் விடுபட்டு, முன்நிலையை அடைவதுபோல், பல்வேறு ஆயுதங்களாய் வடிவெடுத்திருந்த எஃகு, அநுமன் மூட்டிய தீயால் உருகி வடிவிழந்து பழைய வடிவமுற்று மூலப்பொருளான இரும்புத் துண்டுகளாகக் கிடந்தனவாம்.

"எஃகெலாம் உருகித்
தொல்லை நன்னிலை தொடர்ந்த பேருணர்வினர்
தொழில்போல்,
சில்லியுண்டையிற் றிரண்டன படைக்கலத் திரள்கள்"

என்பார் கம்பர்.

அவிச்சை

"அவித்யை எனப்படும் அஞ்ஞானம், கர்மம், வாசனை, ருசி, பிரகிருதி சம்பந்தம் எனப்படும் உடல்களோடுள்ள தொடர்பு ஆகியவை அநாதிகாலமாக இறைவனைப் பெற முடியாமல் தடுத்துவரும் தடைகள் ஆகும்"[50] என்பர் வைணவப் பெரியோர்.

"இவை நாத்திக வாதம் முதலானவை செய்து, இறைவனிடத்திலேயே அபசாரப் படும்படியாகவும், அவனடியாரிடத்திலே அபசாரப் படும்படியாகவும், அவனையும் அவனடியார்களையும் மிகவும் துவேசிக்கும்படியாகவும் கூடச் செய்துவிடும். இவை இறைவனை யடையப் பெருந்தடைகள்"[51] என்பர்.

இராவணனும், இரணியனும் செய்த செயல்கள், மேற்கூறிய கூற்றுக்களை மெய்ப்பிக்கப் போதுமானவை.

"அவித்தை யாவது, அகங்கார மமகாரங்கள். அகங்காரமாகிறது ஒரு சண்டாளன். மமதையாகிறது அச் சண்டாளனுக்கு மனைவி. விருப்பு வெறுப்பு (ராகத்வேஷங்கள்) இவர்களுடைய பிரஜைகள் ஆகின்றன. இவ்வகங்காரம் ஒன்றையும் கொல்ல இவையத்தனையும் நசிக்கும். எங்ஙனேயெனில், (மமதை) பதிவிரதையாதலாலே சிசுக்கள் நாக்கு வற்றி நசிக்கும்"[52] என உவமை காட்டி விளக்குவார் பின்பழகிய பெருமாள் ஜீயர்.

"அகங்காரமாகிய ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்துமாவிற்கு அழியாத பேர் "அடியான்" என்றிறே"[53] என்பது பிள்ளை லோகாசாரியார் வார்த்தை.

வில்லை முறித்த செய்தி கேட்டவுடன் பிராட்டி, நேற்று, தெருவில் கண்டு, தன் கருத்தில் அமர்ந்து கொண்டவனே இன்று இந்த வில்லை முறித்தவன் என்று மயக்கந் தீர்ந்து மகிழ்வு கொண்டாள் என்பதற்கு, அவிச்சை நீங்கியவுடன் அகத்தில் உள்ள பரம் பொருள் காட்சி தருவதனை உவமை யாக்குகின்றார் கவிஞர் பிரான்.

"கணங்குழை கருத்தில் உறை கள்வன் எனலானாள்
வணங்கு வில்இறுத்தவன் எனத்துயர் மறந்தாள்
அணங்குறும் அவிச்சை கெட, விஞ்ஞையின் அகம்பாடு
உணர்ந்தறிவு முற்றுபயன் உற்றவரை ஒத்தாள்

(கோலங்காண்-39)

அவிச்சை யென்கிற, அஞ்ஞானம் கெட, விச்சை யென்கிற தத்துவ ஞானத்தால், மனத்திலுள்ள பரம்பொருளின் தன்மையைக் கண்டறிந்து, அவ்வறிவு முதிர்வதனால் ஆகிற பயனால் முத்தி யுலகத்து அந்தமில்லாப்

பேரின்பம் அடைந்தவரை ஒத்தாள் பிராட்டி என்னும் இக்கருத்தால், அவிச்சை எனும் மாயை எவ்வாறு உயிர்கள் இறைவனை யடையத் தடையாயுள்ளது என்பது தெளிவுறக் காட்டியுள்ள திறம் காண்க.

பிறவியின் தடை

நிலையாப் பொருள்களை நிலையினவெனக் கொண்டு அவற்றைத் தேடவும் தொகுக்கவும் மிகவருந்தி, பண்டே அவன் தொண்டுக்காம் உயிரைத் தன்னது என்னும் களவு செய்து, மிகப்பெரும் பாவம்தேடி, நரகிற்புகப் பண்ணுவது பிறவி. ஆகவே, பிறவியையும் ஒரு விரோதி எனக் கருதுகிறது வைணவம். "நில்லாதனவற்றை நிலையினவாகக் கருதும் புல்லறிவாண்மையை"[54] வளர்க்குமிடமாகப் பிறவியிருப்பதால், இவ்வாசையை வளர்க்கும் பிறவியைத் தடையாக வைணவம் கருதுகிறது.

"மால்தரு பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு"[55] என்பதனால் பிறவியின் இயல்பும் அதற்கு மருந்தும் சுட்டுகின்றார் கம்பர். மயக்க அறிவைக் கொடுப்பது பிறவி. அதற்கு மருந்தாக வாய்ப்பது இறைவன் மலர் அடி வணங்கல்.

அகங்காரம் தடையாகும் காரணம்

"உயிர்கள் எல்லாம் இறைவனுக்கு அடிமை; தமக்குத் தாமே உரியனவாய் நிற்கும் சுதந்திரம் அவற்றிற்கு இல்லை; இறைவனுடைய சுதந்திரத்தை நீக்கி, இராவணன் முதலியோர் 'நான் சுதந்திரன்' என்று கூறிக் கேட்டினை அடைந்தது போன்று உயிர்க்குக் கேட்டினை விளைத்துக் கோடலின் அகங்காரத்தை ஒழித்தல் வேண்டும். "பண்டேஉன் தொண்டாம் பழஉயிரை என்னது என்று கொண்டேன்"[56] என்பார் திவ்விய கவியும்." எ;னனும் ஈட்டின் குறிப்பு இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.[57]

இராவணனின் இராசத குணம்

"அகங்காரத்தை வளர்ப்பதாகிற இராசத குணமும், செயலின்மைமைய வளர்ப்பதாகிற தாமத குணமும் சத்துவ குணமுடைய இறைவனை யடையத் தடையாகின்றன. "இராசத குணத்தை இந்திரியங்களைக் காத்து வெல்ல வேண்டும்; இல்லையேல், பகுத்தறிவை அழித்து அது அழிவை உண்டாக்கும்"[58] என்னும் பகவத்கீதை. இராவணனிடத்தில் நிகழ்ந்தது இதுதான். அவன் அகங்கார மமகாரங்கட்குக் காரணமான இராசதகுண வடிவினன். இராவணன், தன் வாழ்வின் தொடக்கத்தில் புலனடக்கத்தால் கொள்ளும் பயன் எல்லாம் கொண்டான்; தவம் பல புரிந்து வரங்கள் பலபெற்று வாழ்வில் ஒரு மாபெரும் இடத்தைப் பிடித்தவன். வரங்கள்

பெற்று முடிந்ததும், புலன்களைக் கட்டவிழ்த்துவிட்டு, வரம்பின்றி வாழத் தொடங்கினான்.

தொடக்கத்தில், புலன்களைக் கட்டி யாண்ட இராவணனை, அவன் வாழ்வின் இறுதியில், புலன்கள் அவனைக் கட்டியாளத் தொடங்கின. அத்தகு செய்கைகள் அழிவைத்தரும எனும் சீதையின் வாசகம் அவன் வாழ்வில் நிருபணம் ஆயிற்று. தவத்தால் பெற்ற வரங்களை வீணாய் அழிக்க வேண்டா என வீடணன் எடுத்துக் காட்டியும் ஏற்க மறுத்தான். இடிக்குநர் யாருமில்லாமல் புலன்வழியேபோய் அழியாதே எனச் சீதை அறமுரைத்தாள். அறத்துறை கேட்ட இராவணன் இருபது நயனத்தையும் மின் திறப்பதுபோல் விழித்து வெகுண்டான்.[58-அ] புலன் வழி வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்ற ஆசாரியனும், கட்டுப்படுகின்ற மாணவத் தன்மையும உயிர்கட்கு இல்லாதுபோனால், இராசதகுணம், ஆன்ம வாழ்வை நாசமாக்கிவிடும்.

கோசலம் இலங்கையைப் போல் இல்லாமல் இந்திரியங்களாகிய ஐம்பொறி வாளிகளும் (அம்புகளும்) நெறியின் புறஞ்செலாமல் வாழும் மாந்தரைப் பெற்றிருந்தமையால் அது மண்ணுலக பரமபதம் ஆயிற்று.

"ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண் எனும்
பூசல்அம்பும் நெறியின் புறஞ்செலாக் கோசலம்"[59]

என்பார்.

"இராமர் தமோகுண இராட்சசனாகிய கும்பகருணனையும் ரஜோகுண இராட்சசனாகிய இராவணனையும் அழித்து, சத்துவ குணமாகிய வீடணனைச் சிங்காதனத்தில் ஏற்றுகின்றார்"[60] எனும் மொழியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இவையெல்லாம் இறைவனுக்கு அடிமை எனும் எண்ணம் இலாத உயிர், உயிர் இயல்புக்கு மாறாகப் புரிந்த தடைகளின் விளைவுகளாகும்.

இராவணன் செருக்கு

இராவணன் அழிவுக்கு, தான் எனும் அகந்தையே காரணம். "என்னையே நோக்கி நான் இந் நெடும் பகை தேடிக் கொண்டேன்"[60-அ] என்பான் அவன். "அடுக்கும் ஈது அடாது என்று ஆன்ற ஏதுவோடு அறிவுகாட்டி இடிக்குநரையெல்லாம்"[60-அ] அகங்காரத்தால் அவன் ஓட்டிவிட்டான். அவன் மந்திரச் சுற்றத்தில் உள்ளவர்கள் எல்லாம் அவன் எண்ணியதையே உயர்ந்தது என்று கூறி அவனை முடித்தவர்கள். ஆகவே,

இராவணன் முடிவு தவிர்க்க ஒண்ணாததாயிற்று. அதற்கு அவனே காரணம் என்பது சீதையின் வாக்கு.

"இடிக்குநர் இல்லை, உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்றபோது முடிவன்றி முடிவது ண்டோ?"[61]

என்பாள் சீதை.

இக்கருத்தை ஸ்ரீவசன பூஷண சூரணையும் கூறும்; "தன்னைத் தானே முடிக்கையாவது, அகங்காரத்தையும் விஷயங்களையும் (ஐம்புல இன்பங்களையும்) விரும்புகை"[62] என்னும் அது.

"அகங்காரம் அக்னிபரிசம்போலே"[62-அ] என்பார் அந்நூலாசிரியர். "நெருப்பினுடைய சேர்க்கையானது, அது சேர்ந்த இடம் எங்கும் சுட்டு உருவழிக்குமாறுபோலே, இதுவும் (அகங்காரமும்) சேர்ந்தாரைக் கொல்லியாய் ஆன்ம சொரூபத்தை நேராக அழித்துவிடும்"[62-அ] இராவணன், தான் மட்டுமின்றி தன் இனத்தையும் அழித்து மடிந்ததற்கு இங்கு விளக்கம் கிட்டுகிறது. "பிறர்மனை விழைவான் கிளையோடும் கெடுவான்" என்பது இராவணனை உளங்கொண்ட உலகியற் பழமொழி.

அகங்காரம், மமகாரம்

யான், எனது என்ற அகப்பற்று, புறப்பற்றுக்கள் இரண்டும் "சம்சார பீஜங்கள்" (விதைகள்) எனப்படும். அதாவது, அவையிரண்டும் பிறவித் துயரைத் தோற்றுவிக்கும் விதைகள் ஆகின்றன. இவையிரண்டும் உள்ளவரையிலும் எத்தகைய அறிவுடையோரும் பிறவித்துயர் அழிந்து இறைவனடி சேரார்.

"உயிர் அல்லாத சரீரத்தில் உயிர் என்ற புத்தியும், தன்னைச் சார்ந்தன அல்லாதவைகளில் தன்னுடையவை என்னும் புத்தியும் அறிவின்மையாகிற மரம் தோன்றுவதற்கு இரண்டு விதைகளாக இருக்கின்றன என்பது விஷ்ணு புராணம்" என்னும் ஈடு (1.2.3)

"இரண்டு மரங்கள் சேர நின்றால், ஒன்றிலே தொளைத்துப் பெருங் காயத்தை வைக்கச் சிலநாள் வரை ஒன்றுபோல் நின்று, பின்னர்ப் பட்டுப் போகும் ஒன்று. அப்படியே யான் எனது என்னும் செருக்கு விடத்தக்கது என்னும் நினைவு உண்டாகத் தன்னடையே சம்சாரம் அடிஅற்று நிற்கும்" என்னும் நம்பிள்ளையின் விளக்கம் சிந்தைகொள்ள உரியது.

"யான், எனது என்னும் செருக்குக் கிடக்கப் பிராயச் சித்தம் செய்தல் என்பது, மிகத்தாழ்ந்த பொருளை உள்ளே வைத்து, மெழுக்கு ஊட்டினதைப் போன்றதாகும்" என்னும் ஈடு (1.2.11)

"யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன்"[63] என்பது கம்பர் வாக்கு. "நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து இறைசேர்மின்" [64] என்பார் நம்மாழ்வார்.

"யான், எனது என்னும் தன்மைப் பெயர்களை, செருக்கினைப் புலப்படத்தும் அச் சொற்களைத் தாம் தம் திருவாயால் கூறுவதற்கு அஞ்சி, நீர், நுமது என்கிறார்; கூறின் நாக்கு வேம் என்பது கருத்து" என்னும் நம்பிள்ளையின் உரையும் இங்கு நினைவு கொள்ளற் குரியது.

இந்த யான் எனது என்னும் இரு செருக்கும் அழிந்தவன் பரதன். தனக்குத் தந்த செல்வத்தை ஏலாது, அது இராமனுடையது என ஒப்படைக்க ஓடினான் அவன். யான் எனது என்னும் செருக்கறுப்பவனுக்கு, தானும், உலகச் செல்வம் யாவும் இறைவனுடையவை என்னும் எண்ணம் உண்டாம் என்பதும் பரதன் செயல்களால் விளங்கும்.

இறையடிமை - பிற அடிமைகளை நீக்கும்

"ஈசுவரனுக்கு அடிமைப்பட்டிருப்பவன் மற்றவர்களுக்கு அடிமைப் பட்டிருப்பதிலிருந்து மீண்டவன் என்றும், 'தேகமே ஆத்மா' என்று அபிமானிக்கையாகிய அகங்காரத்தினின்று மீண்டவன் என்றும், அவன் எம்பெருமானுடன் உறவுடையவன் என்றும், அவனுக்கும் அவனடியார்களுக்கும் அடிமைப் படுகையே இயல்பாக உள்ளவனென்றும சேதனன் தன்னைப் பற்றி அநுசந்திக்க வேண்டும்"[65] என்பர். பரதன், குகன், வீடணன், அநுமன் முதலிய இராமயணக் கதை மாந்தர்கள் இக் கருத்துக்களை, தம் வாழ்க்கையின் மூலம் நிறுவிக் காட்டவே வாழ்ந்து முடிந்தவர்கள் ஆகின்றனர். குகன், சுக்கிரீவன், அநுமன், வீடணன், அங்கதன், சாம்பன் முதலியோர்கள் உயிர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரண புருடர்கள் எனக் கம்பர் குறிப்பிடுகின்றார்:

"இன்னுயிர்த் துணைவர் தம்மைக் காட்டினான்:
இருவர்தாளும்
மன்னுயிர்க்கு உவமை கூற வந்தவர் வணக்கம் செய்தார்"66

ஆணவம் தருவது அறிவு

உயிர்கள் வாழ்வில் வெற்றிமேல் வெற்றி யடைகையில், அவ்வெற்றியால் வரும் செருக்கை அடக்கி வெல்வது மிக அரிதாகிறது என்பதை இரணியன், இராவணன் செருக்குகள் உணர்த்தும். எவ்வகையில் முயன்றேனும் இச்செருக்கை உயிர்கள் அடக்கி யாளவேண்டும்; இன்றேல் இரணிய, இராவணர்களின் முடிவு தவிர்க்க முடியாதது.

"மூவரை வென்று மூன்று உலகும் முற்றுறக்
காவலின் நின்று தம் களிப்புக் கைம்மிக வீவது முடிவு"[67]

என ஆணவ மாந்தரின் முடிவு கம்பரால் சுட்டப்படுகிறது.

யான் எனது என்ற அகப் புறப் பற்றுக்களின் செருக்கினால் நிறைந்து களம்புகுந்த இராவணன், இந்திரசித்து இருவரும் முதல்நாட் போர்களில் இறை ஆற்றலோடு மோதி இராமபிரானின் வலிமையை உணர்கின்றனர். இறை ஆற்றலின் பெருமையை உணர்ந்து தங்கள் சிறுமையை அறிகின்றனர். செருக்கழிவு நிகழ்ந்தவுடன் சிறிது ஞானம் உறுகின்றனர். இராமன் இறைவனே எனச் சிந்தைசெய்ய முற்படுகின்றனர். இது, "யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன்"[68] எனும் கம்பரின் தத்துவ வாசகத்தை அப்படியே மெய்ப்பித்துக் காட்டுகிறது.

ஆனால், மின்னல் கீற்றினைப் போல் தோன்றிய இறைஞானத்தை அவர்களின் தடித்த ஆணவம் மீண்டும் எழுந்து அடக்கிவிடுகிறது. அதனால் அவர்கள் அழிவு நேர்கிறது. கந்தபுராணத்தில் சூரபதுமனும் இந்நிலையையே அடைவான். "தடுத்தது மானம் ஒன்றே" என்பார் கச்சியப்ப சிவாசாரியார். (கந்தபுராணம்)

முக்குறும்பு

கல்வி, சாதி, செல்வம் என்ற மூன்றும் உயிர்களின் மனத்தில் யான், எனது என்னும் அகங்கார மமகாரங்கள் எழக் காரணமான மூல விதைகள் ஆகின்றன வாதலால், இந்த மூன்று செருக்குகளையும் முக்குறும்பு எனக் குறிப்பிடுவது வைணவ மரபு. இம் முக்குறும்பினையும் அகற்றியவர்ளே தொண்டக் குலத்தில் சேர்க்கப்படும் தகுதியுடையவர்கள். இம் முக்குறும்பும் நம்மை வஞ்சித்துப் படுகுழியில் வீழ்த்திவிடும் என்பர். "வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடந்த எம்கூரத்தாழ்வான்"[69] என்பார் திருவரங்கத்தமுதனார்.

உயிர்கள், இம் முக்குறும்பாம் தடைகளைக் கடந்தாக வேண்டும். இத் தடைகளைக் கடந்தவர்களை இறைவன் உறவினன் ஆக்குவான் எனக் காட்டவே, வேடன், விலங்கு, அரக்கன் ஆகிய குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோரைத் தம்பியர் ஆக்கிக் காட்டினான் பெருமான்.

குகன், கல்விக் குறும்புக்கு இடமில்லாத கானவன் ஆகவும், சுக்கிரீவன் செல்வக் குறும்புக்கு இடமிலாத தீனன் ஆகவும், வீடணன் சாதிக் குறும்புக்கு இடமில்லாத அரக்கனாகவும் இருக்கையில் இராமனால் ஆட்கொள்ளப்பட்டு, உறவினர் ஆயினர்.

இராமாநுசர் குளித்து வருகையில், பிராமணர் அல்லாத உறங்கா வில்லி தாசர் தோள் மேல் கையிட்டுவரும் பழக்கத்தையுடையவர். ஏன் என வினவுகையில், "ஜன்மம் உயர்ந்திருக்கச் செய்தே தாழ நில்லா நின்றோமே! என்கிற அபிமானம் உண்டே நம் எல்லோருக்கும்; அக்குறையும் இல்லாதவர் இவர்"[70] என்று விடையிறுத்ததாகக் குருபரம்பரை கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

செல்வக் குறும்பு

வஞ்ச முக்குறும்புகளில் செல்வச் செருக்கு, மற்ற கல்வி, சாதி எனும் இரு செருக்குகட்கும் வழியில்லாதவர்கள் மனத்தில்கூட வந்து எழுந்து நிற்றல் காணலாம். செல்வச் செருக்கு மிகக் கொடியது. இதை ஒழிக்க, செருக்கிற்கு மூலமான உலகப் பொருள்களை இறைவனிடம் அடைக்கலமாக ஒப்படைத்து, இவையனைத்தும் உன்னுடையவை; நான் செருக்குக் கொள்வதில் பொருளில்லை என அவன் திருவடிகளில் முன்வைத்துப் பணிந்து செருக்கழிவதே, இறைவனுக்குப் படைக்கும் அடியுறையாகிய காணிக்கைப் பொருள்களைத் திருக்கோயில்கட்குக் கொண்டுசென்று படைப்பதின் உட்பொருளாகும்.

வருணன், முத்து, மணி, முதலிய கடல்படு பொருள்களால் வந்த செல்வச் செருக்கழிந்தேன் என்பதற்கு அடையாளமாகவே, முத்து மாலையொன்றை, இராமபிரானின் திருவடிகளில் வைத்து வழிபட்டான்.

"பாய் இருள்சீக்கும் தெய்வப் பரிதியைப் பழிக்கும் மாலை
மா இருங்கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து,
தீயன சிறியோர் செய்தால் பொறுப்பதே பெரியோர் செய்கை
ஆயிரம் நாமத்தைய! சரணம் என்று அடியில் வீழ்ந்தான்"[70-அ]

வணங்கலும் வணக்கலும்

ஆணவச் செருக்கால், வணங்கமாட்டேன் என்பவரையே இறைவன் வணக்குகின்றான்.[71] இதனை, "ஒடுங்கலில் உள்ளமொடு உருத்து" என்று பரிபாடல் கூறும். இராவணனும், இரணியனும் மகளிர் ஊடலிலும் வணங்காதவர்கள்.[72] "கும்பிட்டு வாழகில்லேன்"[73] என்று கொள்கை அறிவிபபுச் செய்து அழிந்தவன் கும்பகர்ணன். இவர்கள் செயல்கள், இறைவனை யடைய அகந்தை, எத்தகைய தடையாக உள்ளது என்பது உணர்த்தும்.

உயிர்கள் உய்திபெற, இறையாற்றலின் பெருமையினையும் தமது சிறுமையினையும் ஓயாது நினைவு கொள்ள வேண்டும். அப்போதுதான், உயிர்களிடம் ஆணவம் மேல எழாமல், அடக்கம் கால் கொள்ளும்.

இவ்வாறு, உயிர்கள் தம்மைத் தாழ்த்திக் கொள்வதனை "நைச்சியாநுசந்தானம்" என்பது வைணவ மரபு. தன்னை வியந்து தருக்கலால் ஆணவம் மிக்கோங்கும்; அதன் விளைவு அழிவாகும்.

சூரிய சந்திரர்களை இராவணன் தன் இலங்கைமேல் வரவிடாத செருக்கும், தேவர்களையும் தேவமாதர்களையும் முறைபோட்டுவந்து பணி செய்ய வைத்திருந்த குறும்பும்[74], வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்[75] மேலும் மேலும் அவன் ஆணவத்தை வளர்க்க உதவினவேயன்றி, பணிவுபெற உதவ வில்லை.

"பெருக்கத்து வேண்டும் பணிதல்"[76] எனும் அறமொழி இராவணனிடம் செயலிழந்தது. பெருக்கத்து வேண்டும் நிமிர்தல் என்பதே அவன் கொள்கை ஆயிற்று. இறையாற்றல், உயிராற்றலைவிட மேம்பட்டது எனக் காட்டவே, முதல்நாட் போரில் அவனுக்குத் தோல்வியைச் சுவைக்கத் தந்து "இன்று போய் நாளை வா"[77] என இயம்பியதாகும். இராவணன் ஆணவத் தடிப்பு அவ்வரிய வாய்ப்பையும் பயன்கொள்ள மறுத்து அழிந்தது. அவன் ஆணவம் சூரிய சந்திர மண்டலம்வரை பாதித்தது என்பது; "வெஞ்சினத்து அரக்கன் ஆண்ட வியன்நகர்மீது மேவ நெஞ்சயிர்த்து ஒதுங்குகின்ற நிறை மதியோன்"[78] "கதிரவன் ஒளிபுகான்" என்பவற்றால் விளங்கும். "இருசுடர் இலங்காப் பெருமூதிலங்கை"[80] என இக்கருத்தைப் "புறத்திரட்டும்" புகலும்.

காமம், வெகுளி மயக்கமும் குறும்பே

கம்பர், காமம், வெகுளி, மயக்கத்தையும் குறும்பு என்றே காட்டுவார். உயிர்க்கு வரும் காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குறும்பும் போக்கியதால் அத்திரி எனப்பட்டான் என அத்திரி முனிவர் பெயருக்குக் காரணம் கூறுவார்.

"காமம் முதலாம் முக்குறும்பு அற எறிந்த

வினையாள் முனிவன்"[81] இந்த முக்குறும்பினையும் அற எறிந்தவனை வினைகள் ஆளா; வினைகளை அவன் ஆள்வான் என்றார். "தவஞ்செய் வோர்கள் வெருவரச் சென்று அடை, காம, வெகுளி"[82] யென்பார் கோசிக முனிவர்.

"வெள்ள நீர் உலகினில், விண்ணில், நகரில்
தள்ளரும் பகைஎலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரின் கரந்துறை காமம் ஆதி ஆம்
உள்உறை பகைஞருக்கு ஒளித்து வாழ்வெனோ?"

(கம்ப:1330)

இங்கு காமம் முதலாகிய முக்குறும்புகளை கள்ளர் போன்று உள்ளத்திற்குள் ஒளிந்து வாழும் பகைவர்கள் என்று தசரதன் வாயிலாகக் கவிஞர் உணர்த்தி நிற்றல் காண்க.

திரிதண்டத்தின் பொருள்

மூன்று மூங்கில் கம்புகளை ஒன்றாக இணைத்துக் கட்டிய தண்டம் ஒன்றினை வைணவத் துறவிகள் கொண்டு செல்வர். இவர்களைத் திரிகண்ட சந்நியாசிகள் என்றும், முக்கோற் பகவர் என்றும் வழங்குவர். தொல்காப்பியம்[83], கலித்தொகை[84], முல்லைப்பாட்டு[85], வில்லிபாரதம்[86], அரிச்சந்திர புராணம்[87] ஆகிய நூல்களில் இம்முக்கோற் பகவர் சுட்டப்படுகின்றனர். 'முக்கோற் பகவரை வினாதல்' என்னும் துறையொன்றும் கோவை நூல்களில் பயில்கிறது.

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முப் பகைகளை அடக்குவதற்கு அடையாளமாக இம்முக்கோல், வைணவத் துறவிகளால் ஏந்தப்படுகிறது. இராவணன் இம் முப்பகை தவிர்த்த துறவிபோல் திரிதண்டமேந்தித் தோன்றினானாம்.

"முளைவரித் தண்டு ஒரு மூன்றும்; முப்பகைத்
தளை யரி தவத்தவர் வடிவும் தாங்கினான்"[88]

இந்த வேடம் மட்டுமே தரித்துக் கொண்டு பூதங்கள் ஐந்தும் அகத்தே நக வஞ்ச மனத்தனாய்[89] தவம் மறைந்து அல்லவை செய்தொழுகும் காம வேடனாய்[90], உயிரின் விரோதிகளாகிய காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை மனத்தில் தேக்கி வைத்தவனாய் இயங்கியதனால்தான் இராவணன் அழிந்தான் என அவன் கூடா ஒழுக்கமும் அதன் இழிவும் இங்கு சுட்டப்படுகின்றன. "முப்பகைத் தளையரி தவத்தவர்" என்பதனால், இவை மூன்றும் பகையாகும் நெறித்தடை என்பதும், இவற்றை வெல்லத் தவம் வேண்டும் என்றும் கவிஞர் கருதுவது வெளிப்படை. சித்து, அசித்து, ஈசன் எனும் முப்பொருள் உண்மை குறிப்பதாகவும் முக்கோலைக் கொள்வது உண்டு. ஆனால் முப்பகை வென்றதன் குறியீடாகவே முக்கோல் விளங்குகிறது என்பது கருத்தாதலை இப்பாடலின் சொற்போக்கு தெளிவுற உணர்த்தி நிற்றல் காண்க.

இந்த வைணவ திரிதண்டிகளுக்கு மாறாக, அத்வைதிகள் உயிரும், இறைவனும் ஒன்றே எனும் ஏக தண்டேந்தும் வழக்க முடைய ராதலால் "ஏக தண்டியர்" எனப்படுவர்.

குணங்களின் தடை

வாலி, இராமனைக் கண்டதும் பேசும் முறைக்கும், இராமன் உரையாடிய பின் பேசும் முறைக்கும் இடையே உள்ள பெருத்த வேறுபாட்டிற்குக் காரணம் இராமனின் திருமுன்பு அவன் ஆணவம் அவனை அறியாமல் நழுவிப் போனதே ஆகும் என்றோம். இக்காரணத்தை ஈடு தெளிவுற விளக்கும்.

"இராசத தாமத குணங்களால் மேலிடப்பட்டபோது, செருக்குக் கனத்திருக்குமாறு போன்றே, சத்துவம் தலைஎடுத்தபோது, பகவானுடைய குணங்களை அநுபவித்துக் கட்டுக்குலைந்து உருகுகிறபடியும் கனத்திருக்கும்"[91] வாலியின் மன மாற்றத்திற் குரிய தெளிவான காரணம் இங்கு கிடைக்கின்றது.

இராவணனோடு சேர்ந்து மேலும் ஆணவச் செருக்குற்று, பாவத்தின் பாரத்தால் அழிந்து போவதற்கு முன்னரேயே, இறைவன் மறக்கருணையால், அவனுக்கு மரணம் தந்து ஆட்கொண்டமையால் "யான்தவம் உடைமையால் இவ்விறுதிவந்து இயைந்தது"[92] என்கின்றான் வாலி.

இறைவன் உயிருக்குள் உயிராய் நின்று, உயிர்கள் புரியும் செயல்கள் அனைத்திற்கும் சாட்சியாக நின்று பார்த்த வண்ணம் உள்ளான். ஆணவம் அகன்று, தன்னை யுணர்ந்து தலைவனை யுணரும் நிலையடைவார்க்கு அத்தகையோர் புரிந்த பாவங்களைப் போக்கி, இறைவன் தன் அடிக்கீழ் ஆக்குகின்றான் எனும் அரிய கருத்தை வாலிவதை நிகழ்ச்சி உணர்த்தும்.

"யார்க்கும் சான்றென நின்ற வீரன்
தான் வந்து வீடுதந்தான்"[93]

உயிர்கட்கு வீடு நல்குவதற்காகவே அவன் பிறக்கின்றான் என்பதனை, "தான் வந்து வீடு தந்தான்" எனும் சொற்போக்கு உணர்த்தும். "யார்க்கும் சான்றென நின்ற வீரன்" என்பது, எல்லாவற்றையும் வேறுதுணையின்றி நேரில் காண்பவர் எனும் பொருள் உடைய "சாக்ஷிணே நம:"94 என்னும் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாமத்தின் 15ஆம் மந்திரத்தின் பொருளை யுடையது.

இரணியன் வகுத்த நெறி

வேதம் உரைக்கும் நெறியில் செல்வதே வாழ்க்கை. இந்த நெறியை மட்டும் ஏற்று, இறைவனைச் சாருதல் எனும் குறியை அடைவதைச் சாங்கியம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் ஏற்பதில்லை. இரணியன் வாயிலாகக் கம்பர் இக்கருத்தை வெளியிடுகிறார்.

"ஆதியந்தங்கள் இதனின் மற்றில்லை; பேருலகின்
வேதம் எங்ஙனம் அங்ஙனம்; அவை சொன்னவிதியால்
கோதில் நல்வினை செய்தவர் உயர்குவர்; குறித்துத்
தீது செய்குவர் தாழ்குவர், இது மெய்ம்மை"[95]

என்பது இரணியன் வாதம். "இரணியன், வேதத்தின் கர்ம காண்டத்தை ஏற்று, ஞானகாண்டத்தைப் பழிக்கின்றான். வேதம் சொன்ன நெறிப்படி நல்வினை செய்தவர் உயர்குவர்; தீவினை செய்தவர் தாழ்குவர்; ஆதியும் அந்தமும் இந்த வினைக் கொள்கையைத் தவிர வேறில்லை என்கின்றான்" எனும் உ.வே.சா. பதிப்புக் குறிப்பும் இங்குஒப்பு நோக்கத் தக்கது.

இந்த இரணியன் கூற்று, சாங்கியம், பௌத்தம், சமணம் ஆகியவற்றின் வினைக் கொள்கையோடு ஒருசார் ஒப்புமை யாதல் காணலாம். கம்பருக்கு இக்கருத்து உடன்பாடில்லை என்பது, இக்கூற்றை அவர், இரணியன் வாயிலாக வெளிப்படுத்துவதி லிருந்து உணரலாம். இரணியன் நெறி. இறைமைப் பகையும், நெறிப்பகையும் ஆவது உணரலாம்.

மனமும் தடையும்

இராமனின் அம்பு, பிராட்டியை மனச்சிறையில் கவர்ந்த காதல் உள்ளிருககும் என நாடி, இராவணன் உயிர் புகுந்து தேடி[96] அத்தீய ஆசையை அழித்தபின், "மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான் உயிர் துறந்த முகங்கள்"[97] என்பார்.

இராம பாணத்தால், தடைகளாகிய மாசு கழுவப் பட்டதனால் தான் இராவணன் முகங்கள் மும்மடங்கு பொலிந்தன என உணர்கிறோம்.

"வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க, மனம்
அடங்க, வினயம்வீய,
தெம்மடங்கப், பொருதடக்கைச் செயல் அடங்க, மயல்
அடங்க, ஆற்றல் தேய
தம் அடங்கு முனிவரையும்தலை அடங்கா நிலையடங்க,
சாய்த்தநாளின்
மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான் உயிர்துறந்த
முகங்கள் அம்மா"[98]

இராவணனிடத்தில் எத்துணை அடங்கல்கள் நிகழ்ந்தபின், அவன் முகங்கள் மும்மடங்கு பொலிந்தன என உணர்த்த "அடங்க, அடங்க" என வினையெச்சங்கள் பலவற்றை அடுக்கிக் காட்டுகிறார் கவிஞர். "அடக்கம் அமரருள் உய்க்கும்"[99] என்பது பொய்யாமொழி. இராவணனின்

அடங்காமையே, "முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் மேனாள் எக்கோடியாராலும் வெலப்படாய் எனக் கொடுத்த வரமும்"[100] வீணே அவமாய் வீழ்ந்தொழியக் காரணமாயின. இறைநெறியடையத் தடுக்கும் தடைகளின் வலுவை, இராமாயணம் இராவணன் வாழ்வில் வைத்து உலகுக்குக் காட்டுகிறது. இராவணனுடைய 'அடங்கா' வினையின் எச்சங்கள் யாவும் "அடங்க" அவன் முகங்கள் "பொலிந்தன" எனும் முற்றாகி முடிகிறது. தீய வினைத் தடைகள் அடங்கினால் உயிர் அமைதியடைகிறது என்பது இதன் பொருள் ஆகிறது.

அரக்க குணத் தடை

அரக்கர் பற்றியும் அவர் அழிவு பற்றியும் குறிப்பிடும்போது, ஓர் இனம் பற்றியும் அதன் அழிவு பற்றியும் சுட்டுவதாக நினைத்தல் சரியான மதிப்பீடு ஆகாது. "இரக்கம் என்று ஒருபொருள் இலாத நெஞ்சினர் அரக்கர்"[101] எனும் கம்பர் வரையறுப்பால், அரக்கராகிய அவர்கள் என்றும் இருப்பவர்; எல்லா இனத்திலும் இருப்பவர்கள் என்பது வைணவம் காட்டும் உண்மையாகும். இரக்கம் அற்றவர் எங்கிருந்தாலும் அரக்கரே என்பது கம்பர் துணிபு.

"அகங்கார மமகாரங்களோடு கூடியவர்களாய், பகவத் பக்தியிலே பகையுள்ளவர்கள் அசுரர்கள் எனப்படுவர். பிரகலாதாழ்வான் இராட்சச யோனியில் பிறந்திருக்கச் செய்தேயும் சாதுக்களுக்கு உவமானமாயிருந்தான். விபீடணாழ்வான் இராட்சச யோனியில் பிறந்திருக்கச் செய்தேயும் 'தர்மாத்மா' எனப்பட்டான். சயந்தன் தேவ யோனியிற் பிறந்திருக்கச் செய்தேயும் ஜாதிபரமன்று; சுயபாவ பரம். எம் பெருமானுடைய சொரூப, ரூப, குண, விபூதி (உலகு)களில் அன்புள்ளவர்கள் தேவரெனப் படுவார்கள். அவற்றிலே பொறமையுள்ளவர்கள் அசுரர் எனப்படுவர்"[102] என்னும் திவ்வியார்த்த தீபிகை இங்கு நினையத்தகும்.

"அழிவன செய்ததால் அரக்கர் ஆயினர்"[103] என்னும் கம்பர் வாக்கிற்கு இங்கு முழுவிளக்கம் கிட்டுகிறது. இறைநெறி அடையத் தாழ்பிறவி தடையாவதில்லை. தாழ்குணங்களே தடையாகின்றன என்பது வைணவம் உலகுக்கு உணர்த்தும் ஒப்புயர்வற்ற கருத்தாதல் தெளியலாம்.

அறநெறி அழித்தல் தடை

உயிர்கள் மண்ணுலகில் மகிழ்ச்சியோடு வாழ உதவுவது அறநெறி. அவ் வறநெறியை அழிப்பவர்களும், அவ்வற நெறியை வளர்ப்பவர்களை அழிப்பவர்களும் இறைநெறியின் இடையில் உள்ள தடைக்கற்கள் ஆவர். இத் தடைகற்கள் அகற்றப்பட வேண்டியவை ஆகின்றன.

தாடகை, "தீதென்று உள்ளவை யாவையும் செய்து முடித்தவள்;104 அதுமட்டுமின்றி, "பெரியாரொடு மறங்கொடு இத்தரை மன்னுயிர் மாய்த்து, நல்அறங் கெடுத்தனள்"[105] அறத்தின் மூர்த்தியாகிய இறைவன் அமைத்துள்ள அறப் பாதையில் செல்லாமை குற்றம்; அங்ஙனம் செல்வாரைத் தடுத்தல் அதனினும் பெருங்குற்றம். ஆதலால் தாடகை அகற்றப்பட்டாள்.

அதர்ம நெறியால் இழப்பு

இராவணனின் நகரையும், செல்வ வாழ்வையும், எழிலின் மேதகவையும் கண்ட அநுமன், இராவணன் அழிவுக்கு வருந்தி, அதர்மத்தால் இத்துணை நலங்களும் அழிந்து போக உள்ளானே என்று உள்ளம் நெக்குருகினான் என்பார் கம்பர்.

"புக்கு நின்றுதன் புலன்கொடு நோக்கினன் பொருவருந் திருவுள்ளம்
நெக்குநின்றனன் நீங்குமன்றோ இந்நெடுநகர்த்திரு என்னா"[106]

என்பது கம்பர் வாக்கு.

"இவ்விராணனிடத்தில் அதர்மம் ஒன்று மாத்திரம் இல்லாதிருந்தால், இவனே தேவாதி தேவனாக விளங்க வல்லவன் என்றாயிற்று அனுமன் பேசினது"[106-அ] என்னும் திவ்வியார்த்த தீபிகை.

ஆணவம் வேரோடு அழிதல்

"மகளிர் ஊடலினும் வணங்காத மகுட நிரை"[107] யுடையோன் என்பதனால், இராவணச் செருக்கின் உச்சி சுட்டப்படுகிறது. அவனே சீதையின்முன், "தேர்றபித்தீர், மதிக்கு மேனி சுடுவித்தீர்... என்னை இன்னல் அறிவித்தீர்"[108] என்று அந்த மகளிர்க்கும் வணங்காத மகுட நிரையை வணங்குவித்து, "முடியின் மீது முகிழ்த்து உயர் கையினனாய்ப் படியின்மேல் விழுந்தான் பழிபாராது"[109] என்பதனால், இராவணன் ஆணவவேரைச் சீதை அசைத்தாள்; இராமன் வேரோடு சாய்த்தான் என்பது பெறப்படும்.

ஆகார விரோதி

குகன் கொணர்ந்த தேனும் மீனுமாகிய உணவை உண்ணாமல் "பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்; எம்மனோர்க்கும் உரியன; இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ"[110] என்று பார்வையால் மட்டும் அர்ச்சாவதாரம்போல் அதனை இராமன் ஏற்றதாக கம்பர் வான்மீகி

சுட்டாதிருக்கவும் குறிப்பது, வைணவம் சுட்டும் சாத்துவிக உணவையே உண்ண வேண்டும் எனும் ஆகார நியதியைக் குறிப்பதாகும். ஊனும் மதுவும் வைணவ ஆகார நியதியில் நீக்கப்பட்டவை.[110-அ]

சுக்கிரீவன் மதுவால் மயங்கி, புரிந்த தீமைகளை உணர்ந்து, மதுவினை மறுத்துக் கூறிய சொற்கள் சாத்துவிக உணவுகளையே உண்ண வேண்ணடும் என்னும் உடையவர் (இராமாநுசர்) வகுத்த ஆகார நியதியை வற்புறுத்துவனவே யாம். ஊன் உணவை "நெறியில்ஊன்" என்பார். மதுவினை, "நிந்தனை நறவம்"[111] என்பார் கம்பர். "நெறியில் ஊன்" என்பதனால் ஊன் உணவு உண்ணல் நெறிப்பகையாகும் எனத் தெளிவுறக் குறிக்கப்படுகிறது.

மதுவின் தீமை

அவித்தை என்னும் பிழை யறிவால் மயக்கம் உற்றுள்ள உயிர்கள், ஏகும் நெறியறியாது பிழைநெறிப்பட்டுப் பெரும் பேதுறுகின்றனர். முன்பே, குழம்பிய மதியுடைய மாந்தர், பேயைப் பேய் பிடித்தாற்போலே, மேலும் மதியை மயக்கும் மதுவை ஏன் உண்டு மயங்குகின்றனர் என வியக்கிறார் கம்பர்.

"மாயையின் மயங்குகின்றோம்; மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்"[112] என்பது கம்பர் வாக்கு. "மது உண்பார்க்குத் தாய்க்கும் தாரத்திற்கும் வேறுபாடு தெரியாது. மது பஞ்ச மாபாதங்களில் ஒன்றாம். தீவினை தரும் மதுவை நீக்குவோரே பிறவித் துயரிலிருந்தும் நீங்குவர். கள் உண்ணும் தீவினை புரிவோர், தீவினைகளை எப்படி அகற்ற முடியும்? பல தீவினைகளுக்கு அதுவே மூலமாகிறது. எரியும் தீயை நெய்யில் அவிக்கும் முயற்சியே மது உண்பார் தீச்செயல் போக்க நினைப்பது. "தன்னைத் தான் உணரத் தீரும் தகையறு பிறவி"[112-அ] என்னும் மறை. தன்நினைவையே மறக்கச் செய்துவிடும் மது உண்போரால் தன்னை யறிவது எப்படிச் சாத்தியப்படும்?" எனக் கேட்கிறார் கம்பர்.

"வஞ்சமும், களவும், பொய்யும், மயக்கமும், மரபில்கொட்பும் தஞ்சம் என்றோரை நீக்கும் தன்மையையும்" மது உண்டாக்கும்.

நஞ்சுகூடக் கொல்லுமேயன்றி நரகத்தைத் தராது. மது இரண்டையும் தரும்.[113] எனும் சுக்கிரீவன் கூற்றால், இறைநெறி பற்றுவார்க்கு, மது எத்தகைய தடைக்கல்லாய் இடைமறிக்கும்; துயர் உறுத்தும் என்பது உணர்த்தப்படுகிறது. இதனால்தான் உடையவர், வைணவர்க்கு ஆகார நியதியினை வகுத்து, சாத்துவிக உணவுகளையே உண்ண வேண்டும் எனக் கட்டளைப் படுத்தினார்.

"ஆகார சுத்தியாலே (உணவுத் தூய்மையாலே) சத்துவ சுத்தி ஏற்படுகிறது; சத்துவத்தினால் ஞானம் ஏற்படுகிறது; ஞானத்தினால் மோட்சம் கிட்டுகிறது" என்பர் வைணவப் பெரியோர்.[113-அ] "பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்"[113-ஆ] என்று குகனிடம் இராமன் கூறியதன் பொருள் இங்கு விளங்குகின்றது.

பரிவோடு தரும் உணவு பரிசுத்த மானதாகி விடுகிறது என்ற ஒரு பொருளும், இம்சையின்றி அன்பில் விளைந்த பொருள்களை பரிசுத்தமா னவை என்று ஒருபொருளும் இத் தொடரில் அமைந்திருத்தல் காண்க.

பெருந்தடையாம் பாவச் செயல்கள்

பரதன், தன் தூய்மையைக் காட்டச் சூளுரைக்கும் பாங்கில், இறைநெறியினை யடையத் தடையாகும் பெரும்பாவங்கள் பல கம்பரில் பள்ளிப் படைப் படலத்தில் தொகுத்துச் சுட்டப்படுகின்றன.

அறங்கெட முயலல், நெஞ்சில் அருள் கொள்ளாமை, பிறர்மனை நயத்தல், பிறரைச் சீறல், உயிர்கொன்று வாழ்தல், துறவிகட்குத் துயர் சூழ்தல், ஆசாரியரை,மகளிரைக் கொலை புரிதல், துளவ மாலை சூடிய திருமாலைத் தலைவன் அல்லன் எனல், அறநெறி வழுவா அந்தணாளர்க்குத் துயரிழைத்தல், மறைகளைப் போற்றாது பொய் என மொழிதல், தாய் பசியில் வாடுகையில் தான் உண்டு மகிழ்தல், தலைவனை வஞ்சித்தல், தஞ்சம் அடைந்தோரைத் தனக்கு அவரால் அழிவு நேரும் எனக் காட்டிக் கொடுத்தல், அறத்தினை மறுத்தல், பொய்ச்சான்று புகல்தல், போருக்கு அஞ்சுதல், இளைத்து வந்தவனுக்கு இடர் இழைத்தல், கன்று சாகுமாறு பால் கறந்துண்ணல், அறமன்றத்தில் பிறர் பொருள் வவ்வல், நன்றி மறத்தல், தன்னைத் துணையென நம்பிவந்த பெண்ணை வழிப்பறிக்கு அஞ்சி விட்டுவிட்டோடல், அயலுளோர் பசித்திருக்கத் தான் சோறுண்ணல், கன்னியைக் கற்பழிக்கக் கருதுதல், குருபத்தினியைத் தீ நோக்கோடு பார்த்தல், அயலவன் நாவில் நீர் ஊறத்தான் உண்ணல், உணவை வீணாக்கல், இரப்பாரை ஏமாற்றல் முதலிய பாவங்களையெல்லாம் புரிந்த பாவியாக நான் ஆவேன்"[114] எனும் பரதன் கூற்றில், பல சமுதாயத் தீமைகள் இறைவனை யடையத் தடையாகும் பாவங்களாகக் குறிக்கப்பட்டிருப்பது காணலாம். இதனால், சமுதாயத்திற்கும் இறைநெறிக்கும் இடையுள்ள நெருங்கிய பிணைப்பினைக் கம்பர் நமக்கு உணர வைக்கின்றார் எனலாம்.

காமம் என்னும் தடை

பாலகாண்டத்தில் இராமன், சீதை இருவரின் தெய்வீகக் காதல் கூறப்படுகிறது. ஆரணிய காண்டத்தில் இக்காதலுக்கு மறுதலையான ஒருதலைக் காமம் கூறப்படுகிறது.

சூர்ப்பனகை இராமன்மேல் கொண்ட காமம் இராட்சதத் தன்மை கொணடது. அயோமுகி இராமன் மேல் கொண்டது பைசாசத் தன்மை கொண்டது. நாட்டரக்கியான சூர்ப்பநகை இராமபிரானை இணங்கவைத்தே அடைய முயல்கிறாள். காட்டரக்கியான அயோமுகியோ வலியக் கவர்ந்து சென்று இன்புற முயல்கிறாள்.

தங்கையாகிய சூர்ப்பநகை செய்த ஒருதலைக் காமத்தையே தமையன் இராவணன் செய்கிறான். "உன்னைத் தனித்து உவப்பாள் மூக்கறைச்சி யன்றோ"[115] என்று சூர்ப்பநகையை இகழும் ஈடு. "ஒருதலையான் இன்னாது காமம்; காப்போலே இருதலையானும் இனிது"[116] என்னும் குறளின் கூற்றுககிணங்கவே, ஒழுக்கக் கேடான ஒருதலைக் காமம் அது கொண்டாரை அழித்து அழிவை எய்துகின்றது. அகலிகை இந்திரன் நிகழ்ச்சியும், வாலி உருமை நிகழ்வும் ஒழுக்கக் கேடான காமத்திற்குச் சான்றாகின்றன. இவற்றின் தொகுப்பாகத்தான்,

"மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல் சங்கையின் றுணர்தி"[117] எனவும்

"தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லையெனின் கடுங்கேடு எனும்
நாமம் இல்லை; நரகமும் இல்லை"[118]

எனவும் கூறப்பட்டுள்ளது. உயிர்கட்கு மரணம் வரும் வாயில்களுள் ஒன்று எனக் காமநோய் இங்கு சுட்டப்பட் டுள்ளமை காணலாம்.

மனமே மூலம்

இராவணன் காம நோயால் வெதும்பினான். தகாத இடத்தில் கொண்ட காமநோய் எனும் விடத்திற்கு மருந்து கிடையாது[119] என்கிறார் கவிஞர். சீதையைத் தாயாக நோக்கி யிருந்தால் இவனுக்கு இந்தத் துயர் தீண்டியிருக்காது.

"பேதாய் பிழைசெய்தனை; பேருலகின்
மாதா அனையாளை மனக்கொடு நீ
ஏதாக நினைந்தனை எண்ணமிலாய்?"[120]

என்னும் சடாயு கூற்றும் இவன் செவியேறவில்லை. சீதையைத் தாயாக நோக்காமல் தாரமாக நோக்கியதால் அவன்பட்ட இன்னல்கள் எண்ண இயலாதவை ஆயின. ஆதலால், உயிர்களாகிய நம் வாழ்வில் அடையும் இன்பமும் துன்பமும், நாம் பொருள்களை மனத்தால் நோக்கும்

தன்மையைப் பொருத்ததே என்னும் ஓர் அரிய உண்மையை இங்கு வெளியிடுகின்றார் கம்பர் பெருமான்.

“இன்பமும் துன்பந்தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே”[121]

“மனமானது அநாதி காலமா யுண்டான பாவ வாசனையாகிற புயற் காற்றாலே சுழற்றி யடிக்கப் பட்டதாய், தனக்கு இருப்பிடமான இருதயக் குகையிலே கணநேரமும் தங்கப்பெறாமல் கண்ட கண்ட விசயங்களிலே மண்டித் திரிவதொரு தத்துவம்”[121-அ] என்னும் பெரியவாச்சான் பிள்ளையின் விளக்கம் இங்கு நினையத் தக்கது.

காமத்தை வெல்லும் மெய்ஞ்ஞானம் இல்லாத மனம், சீதையை விபரீத ஞானத்தால் நோக்கி வீழ்ச்சியைத் தேடிக் கொள்கிறது.

“கருதியது செய்யத் தகாதது ஆயினும், அதனை முடித்தே விடும் மாண்பிறந்த மானத்தால் (பிழைபட்ட மான உணர்வால்) இராவணன் பிறர் மனைவியைக் கொடாமல் அழிந்தான்”[122] என்னும் கௌடீலியம்.

பிறர் தாரத்தைத் தாயாக நினையாமல் தாரமாக நினைத்து அழிந்து போன இராவணனுக்கும் வாலிக்கும் எதிர்நிலைப் பாத்திரமாக, பிறர் தாரத்தைத் தாய் என நினைந்த இலக்குவன காட்டப்படுகிறான். சுக்கிரீவன் பிழையால் வெகுண்டு வந்த இலக்குவனுக்கு, தாரையின் விதவைக் கோலம் தன் தாய்மார்களை நினைப்பூட்டி உருக வைக்கிறது.

“தார்குலம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்”[123] என்பது, இறை நெறி பற்றுவோர், பிற மகளிரையெல்லாம் தாயாக நினைக்க உரியர் என்னும் அருங்கருத்தை உணர்த்தி நிற்கிறது.

மனையாளைத் தவிர்ந்த மற்றை மகளிர் முன்நிற்கையில், தன்னை ஈன்ற தாயின் நினைவு வரவேண்டும். தன் தாயின் ஒரு கூறே முன்நிற்கிறது என்ற எண்ணம் நெஞ்சில் உதிக்க வல்லவனே உண்மையான இறையடியவன் என்று இங்கு உணர்த்தப்படுகிறது. “பிறர் மனையவரைப் பெற்ற தாய் எனவும்” எனும் வீமன் கூற்றும் ஈண்டு நினையற்பாலது. (வில்லி. பழம்பொருந்து)

சீவர்கட்கு, பெண்மையால் வரும் தடையினை எளிதில் வெல்ல அரியதோர் உபாயத்தை இச் சிறு நிகழ்ச்சி விளக்கி நிற்கிறது.

கல்வியும் காமமும்

உயிர்களின் பிற வல்லமைகளையெல்லாம் மாற்றி, தானே வலிமை மிக்க சக்தியாக மேலோங்கி நிற்கும் ஆற்றல் காமத்திற்கு உண்டு.

“வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்தது”[124] என்பார் கம்பர். இராவணனிடத்திலே இதுதான் நிகழ்ந்தது. அவனுடைய நற்குணங்கள் பலவும் காமம் என்னும் பாவம் மேலோங்கி நிற்குமிடத்தில் காலூன்ற இயலாமல் போயின.

“கோபமும் மறனும் வீரக் கொதிப்பும் என்றினையவெல்லாம் பாபம் நின்றிடத்தில் நில்லாத் தன்மை போல்”[125] என்பார் கம்பர்.

இராவணன் சீதைபால் நெஞ்சு பறிகொடுத்து இராப்பகலாக காம நினைவால் மாழ்கினான். மனம் ஓர் உணர்ச்சியின் வசப்பட்டால், அதனை மாற்ற மெய்யறிவு என்னும் தத்துவ ஞானமே உதவ வேண்டும். ஆகவே, ஞானத்தைத் தவிர காம உணர்ச்சியை வெல்ல வேறு வழியே இல்லை.

“கற்றறி ஞானமின்றேல் காமத்தைக் கடப்பதுண்டோ”[126] என்பது கவிஞர் வினா. மெய்ஞ்ஞானம் இல்லார்க்குக் காமம் கடக்க லாகாதது என்னும் இவ்வரிய தொடரால், இராவணன் வாழ்வு முழுவதும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ள திறம் உணரலாம். “காமத்தால் கனலும் செந்தீ, சீலத்தால் அவிவதன்றிச் செய்யத்தான் ஆவதுண்டோ?”[127] என்பார் மேலும்.

“தீராத காமத் தழலைத் தன் செம்மையெனும் நீரால் அவித்துக் கொடுநின்று”[128] என்பார் புகழேந்தியார்.

இராவணன், “காமநோய், கல்வி நோக்கா மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்தது”[129] கற்ற ஞானத்தைப் பயன்படுத்தி விரோதிகளை வெல்ல வேண்டும்; இன்றேல் கற்ற கல்வியால் பயனில்லை. கல்வியால் பயன் கொள்ளாதவர் கல்லாதவனாகிறார். அவர்கள் மறைவாகச் செய்த தீமைகள் வளருமே அன்றி மறையா. இராவணன் கற்றவன். ஆனால் இறைஞானம் அற்றவன். கற்றதற்குப் பின் அறிவது ஞானம். கற்று அறி ஞானம். இராவணன் கற்றதோடு நின்று கொண்டான். ஆதலால், கற்று அறி ஞானம் இல்லாத அவன், கல்வி நோக்கா மதியிலி ஆகி, காமம் எனும் தடையை, வெல்ல இயலாமல் அழிந்தான். “படித்த முட்டாள் இராவணன், படியாத முட்டாள் துரியோதனன்” எனும் உலக வழக்கும் இதனால் ஆயிற்று.

காம உட்பகை

வெளிப்படையாகத் தோன்றாமல், நம் மனத்திற்குள் உட்பகையாகத் தோன்றி ஊறு செய்பவை. காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும் இவை, தமக்கு வசப்பட்டார் வாழ்வை நாசமாக்க வல்லவை.

"கள்வரில் கரந்துறை காம மாதியாம்
உள்ளுறை பகைவரை ஒழிக்க வல்லனோ"[130]

என்பது இப்பகைவர்களின் வலிமையை உணர்த்தும். காமம், உட்பகையாயிருந்து பெருங்கேடு விளைவிக்கும் என்பது இராவணன் வாழ்வால் விளங்கும். புறப்பகை அனைத்தும் வென்று முடித்தவன், காமமாகிய உட்பகையை வெல்ல இயலாமல் அழிந்தான்.

"எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை யுற்றதாம் கேடு"[131]

என்னும் குறள் உட்பகையின் ஆற்றல் உணர்த்தும்.

வாலியானவன், சுக்கிரீவன் பகையால் அழியவில்லை. காமம் எனும் உட்பகையால்தான் அழிந்தானாம்.

"மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின்றுணர்தி; வாலி செய்கையால் சாலும்"[132]

என்பது இராம வாக்கு.

காமம் எனும் உட்பகையை யழிக்கத் தான் இல்லறம் எனும் வரம்பு கட்டினர் முன்னோர். உடல் வலிமை, செல்வச் செருக்கு முதலியவற்றால் இந்த இல்லறக் கோட்டையை அழிக்க முனைவோர் வாழ்க்கையெல்லாம் வேரோடு அழிந்து போகிறது. இராவணன் தரும் பாடம் இதுவாம்.

"மையல் நோய் கொடு முடிந்தவா! என்றுமே வரம்பின்றி வாழ்வானுக்கு உய்யுமாறிலை"[133] என்று கும்பகருணன் வாயிலாக இவ்வரிய கருத்தைக் கவிஞர் பெருமானார் உணர்த்துகின்றார். பஞ்சேந்திரியங்களால் விளையும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பகைகளைக் கடியின், உயிர்கள் உய்வது உறுதி; இவ்வாறு உய்ந்தவர்கள் எண்ணத் தொலையாதவர்.

"ஐந்தொடாகிய முப்பகை மருங்கற அகற்றி
உய்ந்து போயினர் ஊழி நின்றெண்ணினும் உலவோர்"[134]

"மனிதனுடைய கேட்டுக்கு மூலகாரணம் ரஜோகுணம்; அது காமமும் சினமும் ஆகிறது. அதற்கு இரைபோட்டு மாளாது; அது மிகவும் தீங்கிழைப்பது; வாழ்விற்குச் சத்துரு அதுவே என்றறிவாய்"[135] என்று கீதை விளம்பும்.

இராவணன் சினத்திற்கும் காமத்திற்கும் தீனிபோட்டு மாளாமல்தான் அழிந்தான். தனக்கு அறம் சொன்ன தம்பியர், மகன், பாட்டன், சீதை அனைவரையும் வெகுண்டான். வீதி வீதியாக வித்தியாதர, கந்தருவ இன

மகளிரை யெல்லம் வைத்திருந்தும் அவன் காமத் தீஅணையவில்லை. அணைக்க முடியாத அவன் காமத் தீயின் உச்சம் பிராட்டியை நச்சியதில் முற்றி, அவனையே இரையாக உண்டு முடிந்தது.

அசோக வனம் – உலக வாழ்வு

இறையின்பத்தை மறக்கச் செய்து புலன் இன்ப வயப்படுத்த முயற்சிகளே, அசோகவனத்தில் இராவணன் சீதையை மன்றாடி வேண்டும் நிகழ்ச்சிகள் ஆகும். புலன் இன்பத்திற்கு ஆட்படாமல் உயிர்கள் வெல்லும்போது, இறைவனின் அருள், ஆசாரியன் வாயிலாகக் கிட்டும் என்பதை உணர்த்துவதுதான் இராமநாமம் கூறியவாறு அநுமன் அசோகவனத்தில் தோன்றியதாம். அசோக வனம் என்பது உலக வாழ்வின் உருவக வடிவமே.[135-அ]

எத்தனை சோதனை வரினும் உயிர்கள் ஒழுக்கம் தவறாமையே இறைவன் உகப்புக்கு உரியதாகும். மகளிர் ஒழுக்கத்தின் உருவகமே கற்பு. அதன் பெருமை உணர்த்தப்பட்டு, தடைகளை வெல்லும் நெறி, பிராட்டியின் ஒழுக்கத்தால் உணர்த்தப்படுகிறது.

இலங்கையும் அயோத்தியும்

இலங்கை பாவ பண்டாரமாகத் திகழ்ந்தது. காரணம் அங்கு உழைப்பும் முயற்சியும் இல்லாமல் உடல் வன்மையினால் கவர்ந்து கொண்டுவரப் பட்ட பொருள்களை அரக்கர்கள் நுகர்ந்து கொண்டிருந்தனர். அயோத்தியில் அறமும், தொழிலும், முயற்சியும் தானமும் நிறைந்திருந்தன. நாட்டுப்படலம் இதனைச் சுட்டும். இலங்கை வாழ்வோர்க்கு ஈகை என்பதே இன்னதெனத் தெரியாது என்கிறார் கவிஞர்.

"ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டிவைத்த
பாவ பண்டாரம் அன்ன செய்குன்றம் பலவும் பாராய்"[136]

என்பார் கவிஞர் பெருமான். "வருத்தம் ஏது எனின் அது புலவி; வைகலும் பொருத்தமே வாழ்வெனப் பொழுது போக்குவார்"[137] "போக நுகர்ச்சி ஒன்றே அரக்கரது கருமமாயிருந்தது. மகளிரோடு இரவும் பகலும் போகம் நுகர்தல் ஒன்றையே அரக்கர் அனைவரும் கருமமாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு வேறு தொழில் யாதும் கிடையாது"[138] "நெறியின் புறஞ்செலாக் கோசலம்"[139] என்று எடுத்த எடுப்பிலேயே புலன்களை வென்ற மக்களின் நாடு கோசலம் என்று உணர்த்துகிறார் கம்பர். காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனும் அறுவகைக் குற்றமும் இலாதவனே அறவேந்தன் என்னும் அர்த்த சாஸ்திரம்.140

"புலன்களை வென்ற பற்றின்மையும், காம முதலியன இன்மையும் எவன்பால் உள்ளனவோ அவன் சாத்துவிக அரசனாவான். இறுதியில் வீட்டின்பம் எய்துவான்"[141] எனும் சுக்கிர நீதி, சாத்வீக அரசன் தெய்வத் தன்மையையும், இராசத அரசன் மக்கள் தன்மையையும், தாமத அரசன் இராக்கதத் தன்மையையும் எய்துவர்"[147-அ] என்பதும் அது.

நமக்கு ஆற்றலும் மறமும் போதும்; அறம் வேண்டா என ஒதுக்கிவிட்டனர் அரக்கர். "அறத்துறை திறம்பினர் அரக்கர்; ஆற்றலான் மறத்துறை நமக்கென வலிக்கும் வன்மையர்"[142]

புலன் அடக்காமையால் பொன்றல்

உலகை அடக்கி வாழினும் புலன் அடக்கி வாழாமல், செல்வத்தால் செருக்கி, வந்த திருவை இடையே இழப்பர் சிறியர் - இராவணன்போல். "அமைந்து அடங்கி வாழாது, அடாத பொருள் எய்திச் செருக்கி இடையே திருவிழந்த சிறியோர் போன்ற சேதாம்பல்"[143] ஆம்பில் மலரை வைத்து செல்வத்தால் அடங்காது அழிந்த மனிதர்க்குப் புத்தி சொல்லுகிறார் கவிஞர் பிரான்.

"மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்"[144] இராவணன். உலகினையடக்கியும், புலன்களை யடக்காது பிறர்பொருளைத் திருடி, இதயச் சிறையில் வைத்திருந்ததைத் தான் இராமனின் வாளி அவ் விதயத்தைப் பிளந்து எடுத்து வந்தது.

"புலன் ஐந்தும் மேயும் பொறி ஐந்தும் நீங்கி,
நலம் அந்தம் இல்லதோர் நாடு புகுவீர்"[145]

என்பார் கம்பர்.

திருக்கும் தருக்கும்

செல்வம் உள்ளத்தைக் கோணலாக்கிச் செருக்குறச் செய்யவல்லது.

"திருக்குவான் மலி செல்வத்துச் செருக்குவேம் திறந்துக்
தருக்கு மாய்வுறத் தானவர் அரக்கர் வெஞ்சமரில்
இருக்க மாழ்கி நொந்து உனைப்புகல் யாம்புக, இயையாக்
கருக்குள் ஆய்வந்து தோற்றுதி"[146]

"மனத் திருக்குகள் பலவற்றிற்கும் காரணமாகும் செல்வச் செருக்கால் தருக்கித் திரியும் உயிர்களின் தருக்கினை மாய்ப்பதற்காகவே இறைவன் தேவசக்திக்கும் அசுர சக்திக்கும் இடையே மோதலைத் தொடங்கி

வைக்கின்றான். அசுர சக்தியின் ஆவேசத் தாக்குதல்களைப் பொறுக்க முடியாத தேவ சக்தி, இறைவனிடம் சரண் புகுகிறது. அசுர சக்தி இறைவனிடம் சரண் புகுவதில்லை. அந்த அசுர சக்தியை அழித்துச் சரண் புகுந்த தேவ சக்திகளை வாழ்விப்பதற்காகவே தன்னியல்புக்குத் தகாத கருவினுள் எல்லாம் புகுந்து அவதாரம் எடுத்துச் சரணாகதி நெறி காட்டி இறைவன் ஆட்கொள்கிறான் என்று உயிர்இயல்பும், தடைஇயல்பும், இறைஇயல்பும் நெறி இயல்பும், பேற்றின் இயல்பும் இங்கு சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ள பெற்றியை உணரலாம். உன்னையே "புகல்" என்னும் சரணாகதியால் புக என்பதால், நெறியியல்பும், பேற்றினியல்பும் தெளிக."

செல்வமெனும் தடை

செல்வம் இறைநெறியை அடைய உள்ள தடைகளில் மிக வலிய ஒரு தடையாகக் காரணம், உயிரின் இயல்பை அது மாற்றவல்ல வலிமை பெற்றிருப்பதே. செல்வம் மறத்தற்கரிய செய்ந்நன்றியை மறக்க வைக்கம். சீர்மைப் பண்புகளைச் சீரழிக்கும்; அறத்தைப் புறக்கணிக்கும்; அன்பை மறப்பிக்கும்; உதவி செய்தாரின் ஆற்றலையுமே நினைப்பிக்காது; செல்வ வாழ்வு ஒரு போதை போல அறிவைக் கிறங்க வைக்கும் என்பது சுக்கிரீவனின் நன்றி மறந்த வாயிலாய் உணர்த்தப்படுகிறது.[147] இவ்வுலகப் போகப் பொருள்கள், செல்வமும் மதுவும் மங்கையரும் ஆகிய மூன்றும் இறைவனை யடையப் பெருந்தடையாக உள்ள பொருள்களில் சிறந்தவை. சுக்கிரீவன், பெருமாள் புரிந்த செயற்கரும் பேருதவிகளை மறந்து கார்காலம் கழித்தும் வாராமல் களிக்கூட்டத்தில் கிட்கிந்தையில் திளைத்திருந்த நிகழச்சி செல்வத் தடையின் வலிமையினை உணர்த்தும். "அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும் பெறல் அருந்திறப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்"[148] என்பதைக் கைகேயின் வாழ்வும் காட்டிற்று.

பொருளும் காமமுமே உலக இருள்

இவ்வுலகில் இறைநெறியில் ஏக இயலாமல், வழியை மறைத்துச் சூழ்ந்துள்ள இரு இருட் படலங்கள் பொருளும் காமமுமேயாம். ஈகையும் அருளும், காமநீக்கமுமே இவ்விருட்படலங்களை அகற்ற வல்ல ஒளிப்பாய்ச்சல்கள் என்கின்றார் கவிஞர் பிரான்.

"பொருளும் காமமும் என்று இவை போக்கி, வேறு
இருளுண் டாமென எண்ணலர்; ஈதலும்
அருளும் காதலில் தீர்தலும் அல்லதொர்
தெருளுண் டாமென எண்ணலர் சீரியோர்"[149]

காமம் வென்ற அநுமன்

அநுமானை, "நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்"[150] என்பான் சாம்பன். நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்ததே அநுமானின் அளவற்ற பேராற்றற்கு மூலம் என்பது சுட்டப்படுகிறது.

"மான் குளம்பளவுள்ள பெண் உறுப்புக்கு வீடுமனையும் அநுமானையும் தவிர மயங்காதவர்கள் இவ்வுலகில் இல்லை"[151] என்னும் தனிச்சுலோக வியாக்கியானம். நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்தல், நைட்டிகப் பிரம்மச்சரியம் எனப்படும். இதற்கு மறுதலையாக, "உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம் எங்களது[152]" என்று மனம் போனபடி நடந்து மாய்ந்தவன் வாலி.

"இந்திரியங்களை நன்றாக அடக்கி யோகத்தில் நிலைகொண்டு மனத்தை என்னிடம் செலுத்தினால் புலன்கள் வசப்படும். அவனைத்தான் நிலைகொண்ட ஞானம் படைத்தவனாகக் கொள்ளலாம்"[153] என்று கீதை கூறும்.

கீதையின் கூற்றுக்கு இலக்கணமாக அமைந்தது சத்துவ குணமிக்க வீடணன் வாழ்க்கை.

"மனிதன் உலகியற் பொருள்களைக் கருதும்போது, அவற்றில் பற்று உண்டாகிறது; பற்றுதலால் அடங்கா விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தினின்றும் சினம் உண்டாகிறது.[154] சினத்தால் மயக்கம் உண்டாகி, மயக்கத்தால் நினைவு தவறுதல் உண்டாகும். அதனால் அறிந்ததும் அநுபவ ஞானமும் அழிந்து விடுகின்றன. அறிவு அழிந்ததும் மனிதன் நாசமடைகிறான்."[155] மனிதனின் அழிவுக்கு மூல காரணங்களைக் கண்டு சொல்லும் இக்கீதை வாசகங்கள் இராவணன் வாழ்வில் அப்படியே மெய்யாயின; இராவணன் சீதையைக் கண்டதும் அவள்மேல் உள்ள பற்றால் இதயமாம் சிறையில் வைத்தான். இப்பற்றால் அடங்கா ஆசை எழுந்தது; அவ்வாசை நிறைவேறாமையால் சினம் எழுந்தது; சினத்தால் அறிவு மயக்கம் உண்டாயிற்று; தீமை வருகிறது என்று தெரிந்தும் திருந்தும் நினைவு தவறினான்; "நாசம் வந்துற்றபோதும் நல்லதோர் பகையைப் பெற்றேன்"[156] என்றான். வீடணன், கும்பகருணன், மாலியவான், இந்திசித்து முதலியோர் கூறிய அறிவும், அநுபவ ஞானமும் வீணாயின. இறுதியில், கீதையின் வாசகப்படியே பேரழிவைச் சந்தித்தான்.

கீதை யறத்தின் எதிர்மறை வாழ்க்கை இராவண வாழ்க்கை, உடன் பாட்டு வாழ்க்கை வீடண வாழ்க்கை.

பெண்ணும், மண்ணும்

வான் உலக வாழ்வும் வீழ்வும் பெண்பொருட்டால் வரும்; அன்றேல் மண்பொருட்டால் வரும், மண்ணையும் பெண்ணையும் வான வாழ்விற்கும் உரியன வாக்கலாம்; நரக வாழ்விற்கும் உரியனவாக்கலாம் என்பது கம்பர் கருத்தாதல் தெரிகிறது. ஒரு பெண் (கைகேயி) மேல் வைத்த பெரு விழைவால், தசரதன் பட்ட துயர்கள் சொல்லி மாளாதவை. "விண்ணோர்காறும் வென்ற எனக்கு ஓர்பெண்ணால் வந்தது அந்தரம்"[157] என்று அழுவான் அவன்.

மண்மேல் வைக்கும் ஆசையும் துயர் தருவதில் சளைத்த தன்று. "மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும் புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன்"[158] என்பது இராம வாக்கு.

இவையெல்லாம் உயிர், தன்னையறிவதற்கும், தன் தலைவனை யறிவதற்கும் தடையாவதோடன்றி, உயிர்க்குரிய இயல்பாகிற ஆனந்தத்தையும் அழிக்க வல்லது.

உலோபம் எனும் பொருட்பற்று

> "உளப்பரும் பிணிப்பறா உலோபம் ஒன்றுமே அளப்பருங்
> குணங்களை அழிக்கும்"[159]

என்பது கம்பர் வாக்கு. எல்லாப் பற்றுக்களிலும் கொடிய பற்று பொருட்பற்று.

> "பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
> எண்ணப்படுவது ஒன்று அன்று"[160]

என்று இதன் தீமையைக் குறள் பகரும்.

பொருட்பற்று என்னும் தடையினை வெல்லவே ஈகை நெறியினைக் கண்டுபிடித்தனர் முன்னோர். ஆனால், இலங்கை அரக்கர்க்குப் பொருள் ஒருவழிப் பாதையாயிற்று. பொருள் வரவு மட்டுமே அங்கு நிகழ்ந்தது. "ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர்"[161] இவர்கள்.

> "பொருளான்ஆம் எல்லாம் என்று ஈயாது இவறும்
> மருளான்ஆம் மாணாப் பிறப்பு"[162]

என்பதனால் ஈவது தெரியாமல், பொருட்பற்றுள்ளத்தால், பிறழ உணர்த்த மருளால், மாணாப் பிறப்பாம் அரக்கர் இனம் ஆகிப் போயினர் இலங்கை வாழ்வோர்.

உயிர் இரக்கம் இறைவனை யடையும் வழிகளில் சிறந்த பெருநெறி. "சீவகாருண்யமே மோட்சத்தின் திறவுகோல்"[162-அ] என்பது வள்ளலார்

வாக்கு. உயிர் இரக்கத்தை வெளிப்படுத்தும் செயல்களே தானதருமங்கள். தானத்தாலும் தருமத்தாலும் எனது எனும் மமகாரப் பற்று ஒழிகிறது. ஆனால், இலங்கையில் தானமும் இல்லை; தருமமும் இல்லை. அதனால் எனது எனும் மமகாரம் முற்றி இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத நெஞ்சினர்"[163] ஆகிவிட்டனர் இலங்கை வாழ் அரக்கர். அதனால் அவர்கள் களஞ்சியங்களில் நிரம்பிக் கிடந்தவை பொருள்கள் அல்ல; பாவங்களாம்; "ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டிவைத்த பாவ பண்டாரம்"[154] என்பார் கவிஞர் பெருமானார்.

உயிர்களின் இயற்கைப் பண்புகளாகிய இரக்கம், ஞானம், இறையுணர்வு, பணிவு முதலிய குணங்களை வளர்க்காமல், ஆணவம், அடங்காமை, அதிகாரம், இரக்கமின்மை, ஈயாமை முதலிய உயிர்களின் விரோதிகளாகிய வநதேறிகளை வளர்த்தமையால், களை ஓங்கப் பயிர் தேயுமாறு போல, பாவம் ஓங்கி அறம் தேய்ந்து இலங்கை வாழ்வு நசிந்தொழிந்தது.

ஊழ்வினை

ஊழ், இறைப் பாதையில் தடையாவதைக் கம்பரும் ஒப்புகிறார். "ஊழிற் பெருவலி யாவுள"[165] என்ற வள்ளுவர்போல, கம்பரும் "சூழ்வினை நான் முகத் தொருவன் சூழினும் ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற்பாலதோ?"[166] என்று ஊழின் வலிமையை ஒப்புக் கொள்கிறார்.

படைப்பின்போது, இன்னவினை இன்னார்க்கு இன்னகாலத்தே இன்ன பயன் தரும்; இவன் இதனை நுகர்வானாக என வரையறை செய்வது பிரமனின் தொழில். அவனே இரக்கமுற்று, இவ்வினை இவனைச் சாராதொழிக என்று ஆணையிடினும் ஊழ்வினை அவன் ஆணையை மீறிப் பயனை ஊட்டியே தீரும் என்பது மேற்சொன்ன அடிகளின் கருத்து.

வினைத் தடை விலகும்

ஆனால், இறைவன் ஒருவனால் மட்டும் ஊழ்வினையின் பயன் நுகர்வை நிறுத்தி வைக்க முடியும். ஏனெனில் அவன், "விதிக்கும் மேலுளான்"[167] என்பது கம்பர் வாசகம்.

> **"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
> **பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"[168]**

என்பார் வள்ளுவனாரும். இங்குதான், வினைக் கொள்கையை மிக வற்புறுத்தும வைதிக மதங்கள் அவைதிக மதங்களாகிய சமணம், சாங்கியம், பவுத்தம் ஆகியவற்றிலிருந்து வேறுபடுகின்றன என்பது தெளிவாம்.

"நோற்ற நோன்பு, உடைய வாழ்நாள், வரம் இவை நுனித்த எல்லாம்
கூற்றினுக்கு அன்றே, வீரன் சரத்திற்கும் குறித்தது உண்டோ?"

"பெற்றுடைய வாளும் நாளும், பிறந்துடை உரனும், பின்னும்
மற்றுடை எவையும், தந்த மலர் அயன் முதலார் வார்த்தை
வில்தொடை இராமன் கோத்து விடுதலும் விலக்குண்டு எல்லாம்
இற்று உடைந்து இறுதல் மெய்யே; விளக்கின்முன் இருள் உண்டாமோ?"[169]

எனும் சீதை கூற்றே மெய்யாய் நிகழ்ந்தது.

"புரம்பற்றிய போர் விடையான் அருளால்
வரம் பெற்றவும் மற்றுள விஞ்சைகளும்
உரம் பெற்றன ஆவன உண்மையினோன்
சரம் பற்றிய சாபம் விடும் தனையே"

என்று சடாயு கூற்றும் இங்கு எண்ணத்தக்கது. இறை ஆற்றலின் முன், வரபலம், செல்வபலம், ஆள்பலம் முதலிய அத்தனை ஆற்றல்களும் பொடிப் பொடியாகிவிடும் என்பதனை இவையுணர்த்தும்.

முத்திநகர் எய்தத் தடைகள்

இருவினைகளாகிய மிளைக்காடுகளை வெட்டியகற்றி, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைப் பகை அரண்களையும் உடைத்துக் கடந்தால் முத்தி என்னும் தலைநகரைப் பிடிக்கலாம்.

"தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து, முத்தியில்
போவது புரிகுவர்"[170]

"இராசதானியான நகரத்துக்குள் எளிதில் நுழைய இயலாதபடி மும்மதில்களும் அம்மதில்களுக்குப் புறம்பே காட்டரணும் அமைதல்போல, மோட்ச உலகமாகிய நகர்க்குள் எளிதிற் புகமுடியாதபடி, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மும்மதில்களும் அவற்றுக்குப் புறம்பே இருவினைக் காடுகளும் அமைந்துள்ளன" என்பது இப்பாடலுக்கு வை.மு.கோ தந்துள்ள உரையாகும்.

மூவினைத் தடைகள்

வினைகளை வென்றால் உயிர்கள் வீடுபெறும். "வினைகளை வென்று மேல் வீடு கண்டவர்"[171] என்பார். "வினைப்போகமே ஒரு தேகம்"[172] என்பார் பட்டினத்தார். வினைகள் ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என

மூவகைப்படும். இவைகளே பிறப்பிற்கும் மூலம். எனவே, இவை வீடு பேறுற இடை நிற்கும் தடைகள்; கற்கள்.

சஞ்சிதம், அநாதியாய் ஈட்டப்பட்டுக், கருமத்தால் துய்த்ததுபோக எஞ்சியுள்ள வினைகள் ஆகும். பிராரத்தம் என்பது இப்போது துய்க்கப்படும் பழவினைகள் ஆகும். ஆகாமியம் என்பது பிராரத்த வினையைப் புசிக்கும்போது வந்து கூடும் வினைகள் ஆகும். அறச் செயல்களை இடைவிடாது செய்தால், குவிந்து கிடக்கும் சஞ்சித வினைகள் அழியும. அதனால் பிறவி வரும் வழியை அது அடைத்து விடுவதாகிறது. வினையிருந்தால் தான் பிறவி.

"வீழ்நாட் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங்கல்"[173]

என்பது குறள்.

"பிராயச் சித்தம் சஞ்சிதம் தவிர்க்கும்" எனப் பிரபோத சந்திரோதயமும் கூறும்.[174]

அறச் செயல்களில் சிறந்தது சரணாகதி. "எல்ல அறங்களையும் விட்டு என்னையே சரணம் அடை" என்பான் கண்ணன். இதனால் சரணாகதி எல்லா அறங்களிலும் சிறந்தது என்பது போதரும். ஆதலால் சரணாகதி அடைந்த உயிர்களின் சஞ்சித வினையும், ஆகாமிய வினையும் அழிந்துவிடும் என்பது வைணவக் கோட்பாடு. "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்"[175] என்பார் ஆண்டாள் நாச்சியார். சரணடைந்த சுக்கிரீவனிடம் இராமன் இதனைக் கூறுகிறான்.

"முன்னாட் சென்றனபோக, மேல்வந்து உறுவன தீர்ப்பல்"[176] இவ்வாறு தடைகளை அகற்றி, சரணாகதி பூண்ட உயிர்கள் பிறவியை அறுத்துக் கொள்கின்றன; மற்றீண்டு வார நெறியாகிய வீடுபேறு அடைகின்றன என்கிறது வைணவநெறி.

பாகவத அபசாரம்

பாகவத அபசாரத்தை மிகப் பெருந்தடையாக வைணவம் கருதுகிறது. "எம்பெருமானார் தம்முடைய அந்திம தசையிலே, சகல வேதங்களிலும் சகல சாஸ்திரங்களிலும் சகலமான ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தங்களிலும் பார்த்தவிடத்தில், 'ஒரு அதிகாரிக்குத் துவய மொழியப் புருஷார்த்தம் இல்லை; ஆசாரிய அபிமானம் ஒழிய மோட்சோபாயம் இல்லை; பாகவத அபசாரம் ஒழிய மோட்ச விரோதி இல்லை' என்று அருளிச் செய்தார்"[177] என்பதனால் பாகவத அபசாரத்தின் கொடுமை புரியும்.

"பரிகாரம் இல்லாதது பாகவத அபசாரம்"1[77-அ] என்பார் பெரியவாச்சான் பிள்ளை.

"இளைய பெருமாள் விசயத்திலும், அபசாரப்பட்டவர் பிராட்டியே யாயினும் உயிரும் உடலும் போன்ற பெருமாளும் பிராட்டியும் அவ் வபச்சாரத்தின் பயனாகிப் பிரியும்படி நேரிட்டது"[177-ஆ] என்னும் வார்த்தாமாலை, பிராட்டியும், ஆசாரியனும் சேர்ந்து புருஷகாரம் செய்து, கையைப் பிடித்துப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லினும் பிரபந்நன் விஷயத்தில் அபசாரப் பட்டவன் பரமபதம் செல்ல முடியாது"[177-இ] என்னும் கூற்றுக்கள், பாகவதர்கள்பால் வைணவர்கள் கொண்ட பெரும்பற்றும் பாகவத அபச்சாரத்தால் வரும் தீமை பற்றிய எச்சரிக்கையும் சுட்டுவனவாம்.

பிராட்டியின் பாகவத அபசாரம்

பாகவத அபசாரத்தின் தீமையை உலகுக்கு உணர்த்துவதற்காகப் பிராட்டியே அதனைப் புரிந்து பெருந்துன்பம் அடைந்து காட்டினாள். சீதை,

"என்னை நாயகன் இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு அறிவிலள் எனத்
துறந்தானோ?"[178]

என்பதிலிருந்து அவள் கூறும் பழவினைகள் அல்ல என்பது தெளிவு. தெய்வ நாயகிக்குப் பழவினைகள் இல்லை. "முன்னை ஊழ்வினை"[179] என்பது, வனத்தில் இருக்கையில் இலக்குவனைக் கடிந்துரைத்த சொற்களால் ஆம் பயன்கள் என்பது பொருளாகிறது.

"இளவலை எண்ணலா வினையேன் சொன்ன வார்த்தை" என்பது "நின்ற நின் இலை இது நெறியிற்று அன்று" என்று இலக்குவன் ஒழுக்கத்தை ஐயுற்றுக் கூறிய பாகவத அபசாரம் பற்றியதாகும். பகவத் அபசாரத்தினும் பாகவத அபசாரம் கேட்டு அறிவிலள் எனத் துறந்தானோ" என்பதனால், இவள் பகவத் ஞானமும் பாகவத ஞானமும் இல்லாதவள் எனத் துறந்தானோ எனும் பொருளும் தோன்றச் சொல்லமைவு அமைந்துள்ளது உணரலாகும்.

இலக்குவனைத் திட்டிய ஒருசெயல், எண்ணற்ற தீவினைகளுக்குச் சமமமானது எனப் பிராட்டி நினைககிறாள். பரம பாகவதனான இலக்குவனை வைதலாகிய இந்தப் பாகவத அபசாரம் (அடியாரை நிந்தித்தல்), சீதைக்கு இம்மையிலேய பயன் அளிக்க நேர்ந்தது. தெய்வமாதலால், இக்கொடுஞ்செயலுக்கு இப்பிறவியிலேயே பலன் நுகர்ந்தாக வேண்டும். ஏனென்றால், தெய்வத்திற்கு வினைகள் தொடர்ந்து உடன் செல்வதில்லை.

"மிகப்பெரிய அறம் செய்தாரும், மிகப்பெரிய பாவம் செய்தாரும் முறையான் (விதியால்) அன்றி, இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன்களை அனுபவிப்பார்"[180] என்னும் நியதியும் இங்கு கருதத் தக்கது. "நின்ற நின்நிலை நெறியிற்று அன்று"[181] என இலக்குவனின் ஒழுக்கத்தில் ஐயுற்று அவனை வைதாள் பிராட்டி. இராமனைத் தேடிச் செல்கின்றாயா? தீயில் விழவா?[182] என்று பிராட்டி கேட்டதனால், அடியாரை நிந்தித்த அந்தப் பாவப் பயன் இலங்கையில் அக்கினிப் பிரவேசமாக முடிந்தது. இங்கே, தீயில் விழ விரும்பியதால் அங்கேயும் தீயில் விழ நேர்ந்தது. அதே இலக்குவனால் தீயும் மூட்டப்பட்டது; ஒழுக்கத்தை ஐயுற்றதாக இலக்குவனை வைததால், இவள் ஒழுக்கமும் ஐயுற்று வையப்பட்டது. இதனால் அடியாரைப் பழித்த வினைப்பாவம் நுகரப்பட்டு நேராயிற்று.

"சீதை இராமன் மறுக்கவும் வனம் வந்தது பகவத் அபசாரம். இலக்குவனை நிந்தித்தது பாகவத அபசாரம். இவற்றால்தான், பகவானையும், பாகவத கோட்டியையும் பிரிந்து, அரக்கிமார் நடுவில் துன்புற வேண்டிற்று"[183] என்பர் பெரியோர்.

இவ்வாறு, அடியாரை நிந்தித்த கொடுவினை சீதையால் நுகரப்பட்டு நேராயினும், அவள் தீயால் புண்ணுறவில்லை, தீக்கடவுள் புண்ணுற நேர்ந்தது.

தவறான வினைகளை, நற்குணங்களால் வெல்ல முடியும். இதனையே, "வினைகளைக் கற்பின் வென்ற விளக்கு"[184] என்று நுட்பமாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். இங்கு, இப்பொருள் கொள்ளாதுபோயின்,வினைகளை வென்றவள் சீதை என்பது பொருள் இன்றி நின்று வற்றுதல் காணலாம்.

சீதை செயல்கள் யாவும் உயிர்களாகிய நமக்குப் பாடம் புகட்ட வந்த உருவகச் செயல்கள் என்கிறார் கந்தாடை யாண்டார் என்னும் வைணவப் பெருமகனார்.

ஒரு வைணவன் சம்சார மண்டலத்திலே இருக்கும் இருப்பை, பிராட்டி இராமயணத்திலே இருந்து காட்டினாள் என்பது அவர் கருத்து. "மாரீசனால் பிரிக்கப் பட்டபோது, பிராட்டி இளைய பெருமாளைக் குறித்துச் சொன்ன கடுஞ்சொல் பெருமாளைவிட்டு அவளை அகற்றியது போலே, சீவனுக்கும் பாகவத அபசாரம் எம்பெருமானைவிட்டு அகற்றிவிடும். பிராட்டிக்கு இராவணன் முன்னிலை போலே சீவர்களுக்கும் உடல் தொடர்புகள் அஞ்சத்தக்கவை. பிராட்டிக்கு, மிரட்டல் பயமுறுத்தல்களைச் செய்த அரக்கிகள் சகவாசம் போலே, சேதநனுக்கு மனைவி மக்கள் சகவாசம். பிராட்டிக்கு மாரீச தரிசனம் போலே இவனுக்கு உலக விடயங்கள். பிராட்டிக்கு இராவண தரிசனம் போலேவே இவனுக்கு, தசகாரியம்

எனப்படும் கர்ம ஞானேயேந்திரியங்கள். பிராட்டிக்கு திருவடி (அநுமன்) தோன்றியது போன்றது, உயிர்கட்கு ஆசாரியன் தோன்றுவது. பிராட்டிக்கு வீடணாழ்வான் பெண்பிள்ளைகள் உசாத் துணையானாற் போலே, இவனுக்கு வைணவர்கள் உசாத்துணையாவது. பிராட்டிக்கு விரோதியான இராவணாதிகளை அழித்து, பெருமாள் பிராட்டியை எழுந்தருளிவித்துக் கொண்டு போனாற்போலே, இவனுக்கு விரோதியான பிரகிருதி (உலகியல்) சம்பந்த மறுத்து, எம்பெருமான் பரம பதத்திற்கு இட்டுச் செல்வதாகும்''[185] என்பார் அப்பெரியவர்.

இவற்றால், வைணவப் பெருமக்கள், சீதையை ஆன்மாகவும் அநுமனை ஆசாரியனாகவும், அசோகவனத்தை இவ்வுலக வாழ்வாகவும் இலங்கை வாழ்வே தடையாகவும் சிறை மீட்பைப் பரமபதப் பேறாகவும் உருவகித்துக் கண்டுள்ளார்கள் என்பது புலனாகிறது.

இயலின் முடிப்பு

இறைப் பேற்றை நோக்கிச் செல்லும் உயிரின் நெடும் பயணப் பாதையில், இடையே நிகழும் தடைகளும், அவற்றின் இயல்பும், அவற்றை நீக்கும் வழிமுறைகளும் பற்றிக் கம்பர் தம் காவியத்தில் காட்டியுள்ள பாங்கு அவர் எத்தகைய வைணவ ஞானம் உடையவர் என்பதனைத் தெளிவுறக் காட்டி நிற்கின்றது. அர்த்த பஞ்சக ஞானத்தில் இறுதியாக உள்ள உயிர் அடையும் பேறும், அதன் இயல்பும் அடுதத இயலில் நோக்கலாம்.

6

பேற்றின் இயல்பு

அறம், பொருள், இன்பம், வீடெனப் புருடார்த்தம் ஆகிய உயிரடையு பேறுகள் நான்கு என்று ஏற்றாலும் வீட்டினையே பரம புருடார்த்தம் எனக் கொள்வது வைணவக் கோட்பாடு. "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே"[1] என்பது நம்மாழ்வார் உலகிற்குத் தரும் செய்தி. மோட்சத்தையே பரம் புருடார்த்தமாகக் கொண்டாலும் அந்த மோட்சத்தை அடைய உதவும் "கைங்கரியம் அதனோடு பிரிக்க இயலாமல் இருப்பதாய்க் கொண்டு, கைங்கரியமே பரமபுருடார்த்தம், பேறு"[2] என்று விளக்குவர் வைணவச் சான்றோர்.

இக் கைங்கரியம், இறைவனுக்குப் புரியும் "பகவத் கைங்கரியம்" எனவும், அடியார்க்குப் புரியும் பாகவத கைங்கரியம் எனவும் இரண்டு நிலைகளில் விளக்கப்படுகிறது. "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு"[2-அ] என்பதில், பகவத் பாகவத கைங்கரியத்தையே பேறெனக் கொள்ளும் வைணவ நிலை சுட்டப்படல் காணலாம்.[3] "சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூலப்பொருள்கள் நித்தியமானவை. சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு சரீரங்கள். கரும வினைகளால், பிரகிருதி உலகில் பிறந்த சீவர்களின் ஞானரூபம் ஒளிமங்கிக் கிடக்கிறது. பகவானுடைய பேரருளால் கருமம் ஒழிந்து, சுயநிலை பெற்று, சீவன் பரமபதம் சென்று, இறைக் கைங்கரியம், குணாநுபவம் ஆகிய செய்து ஆனந்தம் அடைவது மோட்சம் என்கிறார் இராமாநுசர்"[4] என்று வைணவ நெறியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இப்பகுதி மோட்சம் பற்றி மேலும் ஒரு விளக்கம் தருகிறது.

"மோட்சம் அடைந்தபின்பும் சீவன் தனி நிற்கிறது என்பது விசிட்டாத்துவைதம். ஆனால் ஈசனுடன் பின்னர் சீவன் ஐக்கியமாகிவிடுகிறது என்கிறார் சங்கரர்".[5] ஆகவே, வைணவ நெறிப்படி உயிர் அடையும் பெருநிலை (பதம்) வீடு எனல் ஆகிறது. அடையும் பதங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது ஆதலால் வைகுந்தம், பரம பதம் என்று சிறப்பிக்கப் படுகிறது.

இறைவன் அருளாலே, அடியார்கள் தொடர்பால், உலகியலில் பற்றுக் குறைந்து, ஆசாரியர்களை யடுத்து, அவர்கள் வழியாக இறைவனைச் சரணமடைந்து, புண்ணிய பாவங்கள் கழிந்து, தூல உடம்பை நீத்து, சூக்கும உடலோடு, ஆதி தேவர்கள் வழி நடத்த, அர்ச்சிராதி கதியிற் சென்று, விரஜை நதியில் நீராடி, சூக்கும உடலையும் நீத்து, திவ்விய மங்கள ஒளி யுடலைப் பெற்று, தெய்வ மகளிர் வரவேற்க, வைகுந்தம் புக்கு, திருமாமணி மண்டபத்தில் தேவிமாரொடும் வீற்றிருக்கும் பரவாசுதேனால்,கைகொடுத்து வரவேற்கப் பெற்று, மடியிலிருத்தப் பெற்றபின், தேவர்குழாம் சூழ மாசற்ற சோதி வெள்ளத்தே வாழும் வைகுந்த நாதனை நாளும் அனுபவித்து, அவனுக்கு வழுவிலா அடிமை செய்து வாழும் வைகுந்தம் பரம புருடார்த்தம்[6] என்பது வைணவக் கோட்பாடு. இதுவே பகவத் அநுபவம் எனும் பெரும் பேறாகும்.

"இந்தப் பிரகிருதி மண்டலத்துக்கு மேலே உள்ள பரம பதத்தில் சோதி மயமான பரம்பொருள் வீற்றிருக்கிறான். எப்போதும் ஒக்க விளங்கா நிற்பதாய், எல்லை இல்லாத ஒளி உருவமாய் இருக்கிற பரமபதத்திலே எழுந்தருளி யிருக்கிற ஒப்பற்றவன்"[6-அ] என்னும் ஈடு.

ஒளிமயமான இப் பரமபத உச்சியில் விளங்குவான் இறைவன் என்னும் வைணவக் கருத்தைக் கம்பர் பெருமான்,

"மாசற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும் ஈசற்கும் ஈசன்"[7] என்று வெளியிடுகிறார்.

சத்திய லோகம் முடிவாக உள்ள இவ்வுலகங்கள் எல்லாம் காற் பங்காகவும், மோட்ச உலகம் முக்காற் பங்காகவும் உள்ளமையால் பரமபதத்திற்கு "திரிவாத் விபூதி" என்பது ஒரு பெயராம். (ஈ.டு. 1 பக்.64)

பரமபதத்தின் இந்த அற்புத அமைப்பையும் அருமை பெருமையையும் கம்பர் பெருமான் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிற நேர்த்தி இது வாகும்.

"மண்டலங்கள் மூன்றின் மேல் என்றும் மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரை"

இங்கு உலகங்கள் யாவும் ஒருபங்காகவும், பரமபதம் அவற்றிற்குமேல் மூன்றுபங்ககாவும் அமைந்துள்ள திறத்தை அழகுற விளக்கியுள்ளமை காண்க. இந்த மண்டலங்கள் யாவற்றையும் விட மூன்று மடங்கு மேலாக உள்ள பரமபதத்தில் தாமரை வடிவில் உள்ள திருவோலக்கமோ உன் தங்குமிடம்? என்பது இவ்வடிகளின் பொருள்.

பரமபதத்தின் இருப்பையும் வைணவ மரபுக்கேற்பவே குறிப்பிடுகின்றார். பரமபதம் வானோர் உலகுக்கும், பிரமன் உலகுக்கும்மேல் அமைந்தது. எட்டுத் திசைகளும் பரமபதத்திற்குத் திண் சுவர்கள்; ஏழேழு பதினான்கு உலகங்களும் பரமபதத்தின் வாயிற் கோபுரத்தில் அமைந்த பதினான்கு நிலைகள், சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்கள் விளக்குகள், திருமாமணி மண்டபத்தில், ஆதிசேடன் மீதுள்ள தருமமாகிய பீடத்தின்மேல் பன்னிரு இதழ்த் தாமரையின் கர்ணிகை என்னும் பொகுட்டின்மேல் இறைவன் எழுந்தருளியுள்ளான்.

"எண்திசையும திண்சுவராய் ஏழேழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோவிற் எல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்மேல்,என்றும் மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா"[8]

எனும் பாடல், உயிர்கள் அடையவிருக்கிற பரமபதத்தின் அமைப்பையும் இருப்பையும் குறிக்கிறது. இதனை, "அருமறை பரம் என்று ஓதும் நன்னிலை" என்று மேலும் குறிப்பிடுவார் கம்பர்.

தயரதன் இராமன் தாதை என்பதனால் எய்திய இடம் பரமபதம். அது நான்முகனுக்கும் எட்டாதது என்று குறிப்பிடுகிறார் கம்பர். இராமன் தாதை என்பதனால்,

"புண்டரீகத்தனி முதற்கும் போக்கரு
விண்டுவின் உலகிடை விளங்கினான் அரோ"[9-அ]

இதனால் பரமபதம் பிரமனுக்கும் எட்டாதது, அது திருமால் உலக மாகும் என்பது உணர்த்தப்படுகிறது.

"பண்டுநான் தொழும் தேவரும் முனிவரும் பாராய்
கண்டு கண்டெனைக் கைத்தலம் குவிக்கின்ற காட்சி
புண்டரீகத்துப் புராதனன் தன்னொடும் பொருந்தி
அண்ட மூலத்து ஓர் ஆசனத்து இருத்தினை அழக!"[10]

இதனால், தசரதன் பெற்ற பதப்பேறும் அதன் மாண்பும் குறிக்கப்படுகிறது.

பேற்றின் இயல்பு

"மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன்
தன் அள வுலகம் எல்லாம் தருமமும் எவையும் தானே
என்னினும் அடைந்தோர் தம்மை ஏமுற இனிதின் ஓம்பிப்
பின்னும் வீடு அளிக்கும்"[11]

என்பது கம்பர் வாக்கு.

உயிர்களை இறைவன் ஒடுக்கும் காலத்தில் ஒடுக்கி, படைக்கும் காலத்தில் படைத்து, காத்து, வீடளிக்க உரியார்க்கு வீடளித்து ஓயாது தொழில் புரிந்து வருகிறான். அவன் ஒரு செயலும் புரியாது வாளாவிருப்பினும் கேட்பார் இல்லை. என்னினும் தன்னை உறுதிப் பொருள் எனப் பற்றிய உயிர்களைக் கைவிட மனம் இன்றி, உலகைப் படைத்துக் காத்து அழித்துத் திருத்திப் பணி கொண்டு இறுதியில் மோட்சத்தையும் அளிக்கின்றான் என இறைவனின் முத்தொழில்களுக்கும் தெளிவான விளக்கம் இப்பாடலில் கிடைக்கிறது.

பரமபதம் அயோத்தி

"வானோர் உலகின்மேல் உலகு"[12] என அயோத்தி விளம்பப்படுகிறது. வானோர் உலகு துறக்க பூமியாகும். அதுவேள்வி, தான தருமங்கள் முதலிய நல்வினைகளைச் செய்தால், தாம் செய்த நல்வினைப் பயனாகிய புண்ணியத்தால் விளையும் இன்பத்தை, அப்புண்ணியம் கழியும் காலம்வரை இருந்து நுகர்தற்குரிய இன்ப உலகம். அயோத்தி அதற்கு மேல் அமைந்துள்ள பரமபதத்திற்கு நிகரானது. அது பரம பதநாதனாகிய திருமாலே சீதேவி, பூதேவி, சங்கு, சக்கரம், ஆதிசேடன் முதலான பரிவாரங்களுடன் தாமே விரும்பிவந்து எழுந்தருளியிருக்கும் தலமாகவும், இருவினைப் பற்றும் அற்ற ஞானிகளும் தவத்தோரும் இருக்குந் தலமாகவும் விளங்குவது ஆதலால், வானோர் உலகமாகிய துறக்கத்திலும் அயோத்தி உயர்ந்த தாயிற்று.

பரமபதம், ஒளிஉலகம் என்பதும் அங்கு இறைவன் சோதிப் பெரும்பிழம்பாய் விளங்குகிறான் என்பதும்

"சண்ட வான் கிரணம் தன்னால் தயங்கு இருட்காடு
சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி வள்ளல்"[13]

என்பதனால் விளக்கப்படுகிறது.

பரம பதம் இன்ப மயமானது - காரணம்

“உப்புக் கட்டியானது உள்ளும் புறமும் உப்புச் சுவையுடையதாகவே இருக்கும்; அதுபோன்று இறைவனுடைய மேனியும் உள்ளும் புறமும் ஞானமயமாகவே இருக்கும்”[14] என்று பிருக தாரணிய உபநிடதம் புகலும்.

ஞான மய மானவன் இறைவன். அவன் வீட்டுலகம் இன்ப மயமானதாகவே இருக்கும் என்று தெளிந்தனர். ஞானம் அழியாதது; ‘சத்’தாக (நிலைத்து நிற்பதாக) இருப்பது. நிலைத்து நிற்பவை எல்லாம் அறிவாக இருக்கும்; (சித்தாக இருக்கும்); சித்தாகிய அறிவு ஆனந்த மயமாக இருக்கும். இது, உபநிடதம கண்ட மோட்சப் பேற்றின் இலக்கணம். ஆதலால்தான் சத்து, சித்து, ஆனந்தம் (சச்சிதானந்தம்) எனும் மூன்று சொற்களுக்குள் ஆன்மிகத்தின் முடிவை அறிவித்தன உபநிடதங்கள்.[15] அழிவற்ற ஞானமயமான இன்பம் இறைநிலை என்பது இத்தொடரின் பொருள்.

“மூவாது எந்நாளும் உலகோடு ஏழும் அரசாளும் மேன்மை முதல்வா!
மேவாத இன்பம் அவை மேவி மேவ நெடுவீடு காட்டும் முடியாய்”[16]

எனும் அடிகளில் பரம பதம் என்பதனை, அந்தமில் இன்பத்து அழிவில் நெடுவீடு என்று விளக்குகிறார் கம்பர்.

“மேவாத இன்பம் என்பதனால் இதுவரை உலகில் அடைந்திராத இன்பத்தை, உயிர்கட்குப் பரமபதத்தில் இறைவன் நல்குகிறான் என்பது உணர்த்தப்படுகிறது. மோட்ச வீட்டை ஈடு இவ்வாறு வருணிக்கம்: “பிராட்டி திருவடி, திருவனந் தாழ்வான் இவர்களைப் பரிகாரமாக (சூழ்ந்திருப்பவராய்) உடையதாய், எத்தனையேனும் ஞானமுடையார்க்கும் தன் முயற்சியால் (இறையருளின்றி) அடைய அரியதாய், அவனாலே பெறப் பார்ப்பவர்க்கு வருத்தம்அறப் பெறக்கூடியதாய், சம்சாரத்தின் இன்பங்கள் போலே நிலை யற்றதா யிருக்கை யன்றிக்கே நித்தியமாய், விளக்கமின்றி இருத்தலன்றி மிக்க ஒளியோடு கூடியதாய், துக்கம் கலந்ததாய் அன்றிச் சுகத்திற்கு இருப்பிடமாய், மங்களமாய், உத்தமமாய், அளவுக்கு உட்படாததாய் இருக்கிற(து)”[17] பரமபதம். எம்பெருமானாரின் ‘கத்தியத் திரயம்’[17-அ] இதனை மேலும் விரித்துக் கூறும்.

“இறை நாமத்தால் அடையும் பேறே மிகப்பெரியது என்றால், உயிர்ப் பயணத்தின் இறுதியில், அவனைப் பரமபதத்தில் கண்டவர் அடையும் பேற்றை எண்ண இயலுமோ?” என்று சரபங்கர் பிறப்பு நீங்குமிடத்தே கூறுவார்.

"அண்டமும், அகிலமும் அறிவு அருநெறியில்
உண்டவன் ஒரு பெயர் உணர்குநர் உறு பேறு
எண் தவ நெடிது எனின், இறுதியில் அவனைக்
கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ?"

(கம்ப 2630)

தேவர்களும் முனிவர்களும், வருவது உணரும் தீர்க்க தரிசிகளும் மற்றையோரும் ஞானத்தால் இருவினைகளையும் கடந்து சென்று, அடையக் கருதும் பரம பதப் பேற்றினைச் சரபங்கர் சென்றடைந்தார் என்கிறார் கவிஞர் பிரான்.

"தேவரும் முனிவரும் உறுவது தெரிவோர்
மாவரும் நறுவரை மலர் அயன் முதலோர்
ஏவரும் அறிவினில், இருவினை ஒருவிப்
போவது கருதும், அவ் அருநெறி புக்கான்"

(கம்ப. 2629)

இதனால் மூப்பும் அழிவும் இல்லாத பரமபதம் இறைவன் ஆளுகைக்கு உட்பட்டது என்பதும் குறிக்கப்படுகிறது.

"எந்த இடம் சென்றால் மீட்டும் பிறந்து இறக்கும் உலகத்துக்கு வருவதின்றோ அது பரமபதம்"[18] என்னும் உபநிடதம். "நலம் அந்தம் இல்லாதோர் நாடு"[19] என்பார் நம்மாழ்வார். "அந்தமில் இன்பத்து அழிவில் வீடு"[20] என்பார் பரிமேலழகர்.

"தாமரைக் கண்ணன் என்னும் வள்ளுவன் தொடரை (1103) அப்படியே ஏற்று.

"பேரின்பத்திற்குத் "தாமரைக் கண்ணான் உலகு" என்னக் கடவது அனறோ[21] என்னும் ஈடு. "நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லது ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"[21-அ] என்னும் பரிபாடல்.

"மேவாத இன்பம் உடையது" வீடு என்னும் கம்பர் கருத்தே நம்பிள்ளையின் ஈட்டில் இவ்வாறு விளக்கம் பெறுகிறது.

"எல்லா வகையினும் நன்றானது பரமபதம்; அளவுக்
குட்பட்ட இன்பத்தையுடையது சொர்க்கம்; கலப்பற்ற துக்கமே
யானது நரகம்"[21-ஆ]

சுவர்க்கத்திற்கு அடிப்படையான புண்ணிய மானது சாலில் எடுத்த நீர் போல நுகரக் குறையும் என்னும் ஈடு. (திருவாய் 3.1.1)

உயிரின் மோட்சப் பயணம்

உயிர் தூல சரீரம் விட்டுப் பரமபத மடைதலை வைணவ ஆசாரியார்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

"இராஜ மகரிஷியை அந்தப் புரத்துக்கு அழைத்துச் செல்லும்போது பல்லக்கின்மேல் தட்டுப் பாயிட்டு, பிறர்கண்டபடாமல் அழைத்துச் செல்வதுபோல், தனக்கு மகரிஷிபோல் இருக்கும் இந்த முக்த ஜீவனை, பிறர் கண்படாமல் சூக்கும சரீரத்தை இட்டு மறைத்து, பிரகிருதி சம்பந்தமில்லாத தேசம் புகுவரையில் அழைத்துச் சென்று; அந்தத் தேசத்தின் எல்லையில் உள்ள விரஜா நதியில் இழிந்தவுடன் சூக்கும சரீரத்தை வாங்கிவிடுகிறான்"[22] வீடுபேற்றில் உயிரின் பயணம் பற்றிய இந்த வைணவக் கருத்தை, கம்பர் இரண்டடிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

"உண்ட பேதைமை மயக்கற, வேறுபட்டு உருவம்
கொண்டு அவன் கழல் கூடியது ஒப்ப"[23]

அகலிகை கல்லுருவ மொழிந்து பண்டையுருவில் நின்றாளாம். எம்பெருமான் திருவடி சேர்பவர்களும், கருமம் ஒழிந்து, பிரகிருதி சம்பந்தமாகிய இப் புன்புலால் யாக்கையின் தூல சூக்கும உருவங்களை ஒழித்து, உயிரின் பழைய வடிவமான ஒளியுருவை விரஜா நதியில் குளித்தவுடன் எடுப்பது போல் அகலிகை இராமபிரானுடைய பாத தூளிகையில் குளித்தவுடன் இழிந்த கல் உருவம் நீத்துப் பண்டைய உருவம் எடுத்தார் என்கிறார். பிராட்டி ஆத்மாவின் உருவம் ஆகிறாள். அவளைச் சிறைமீட்டுப் புட்பக விமானத்தில் ஏற்றி இராமன் அயோத்தியை யடைகிறான். அது விரஜா நதியில் குளியல் குளித்த பிறகு உயிர்களை இறைவன் சிவிகையில் அழைத்துச் செல்வதன் உருவக வடிவமே என்கிறார் பெரியவாச்சான பிள்ளை.

"கைக்குழந்தையை அழைத்துச் செல்லும் தாய்போலே, அத்தவாளம் என்னும் உத்தரீயத்தின் தலைப்பாலே நானே அவனை மூடி யணைத்துச் செல்வேன். லங்கா ராஜ்ஜியத்திலிருந்த பிராட்டியைப் புஷ்பகத்தின் மேலே தானே எடுத்து வைத்துக் கொண்டு போனாற்போலே காணும் இவ்வாத்மாவை ஸர்வேச்சுவரன் பரமபதத்திற்கு கொண்டுபோம் படியும்"[24]

"என்றும் நான்முகன் முதல் யாரும் யாவையும்
நின்ற பேரிருளினை நீக்கி, நீள்நெறி
சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடும்
தன்திரு நாமத்தைத் தானும் சார்த்தியே"[24-அ]

இங்கு "நின்ற பேரிருளினை நீக்கி, நீள்நெறி சென்று மீளாக்குறி சேர்த்திடும்" என்பதனால், வினையிருளின் நீங்கிய உயிர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று பரமபதம் அடைவது தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அடிமைநிலை (கைங்கரியம்) இன்பமாவது

பரமபதத்தில் கைங்கரியம் எனும் அடிமைத் தொழில் புரிந்து உயிர்கள் எங்ஙனம் பேரின்பம் உறும் எனும் வினாவை உட்கொண்டு அதற்கு விடை தருகிறது வைணவம். "சீவனும் இறைவனும் ஆகிய இருவரும்" ஞானமயமாயிருக்க, ஈசுவரன் ஆண்டான் என்றும், சீவன் அடியன் என்றும் கூறுவது எப்படி எனின், சீவனுடைய இயல்பும் நிலைகளும், செயல்களும் செயலின்மையும், ஈசுவரன் விருப்பத்திற்கு உட்பட்டவை யகையால், அவன் ஆண்டானாகவும், சீவர்கள் அவன் அடிமைகளாகவும் கொள்ளப் படுகின்றனர். அடிமைநிலை துயர் தருவதன்றோ எனின், எல்லா அடிமைநிலைகளும் துயர் தருவதில்லை. காதலன் காதலிக்கு அடிமை புரிவதும், நல்ல மனைவி கணவனுக்குப் பணி புரிவது மிகுஇன்பம் தரும் செயல்களாவதுபோல், இறைபணி புரிதலே சீவர்களுக்குப் பேரின்பம் நல்கும்"[25] என்பது வைணவ சித்தாந்தம். ஆகவே, கைங்கரியம் பேறு என்பதில் வைணவம் அழுத்தமான ஊற்றம் கொண்டுள்ளது.

"எந்நாள் எம்பெருமான் உன்றனக் கடியோம்
என்றெழுதப்பட்ட
அந்நாளே அடியோங்கள் அடிக்குழல் வீடுபெற்றுய்நாள்"26

என்பார் பெரியாழ்வார்.

பரமபதத்திற்குச் சென்றாலும் தொண்டு செய்தலே யாகில் சொரூபம் (உயிரியல்பு); அதனை இங்கே பெற்ற எனக்குக் குறை உண்டோ?"[27] என்பது ஈட்டின் உரையாளர் நம்பிள்ளை கூற்று.

வழுவிலா அடிமை செய்தல் அவதார காலங்களில் இயலும். ஆனால் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி அடிமை செய்தலுக்குப் பரமபதமே ஏற்றது." அதனால்தான் என்றும் பணிபுரிந்திருக்கப் பரமபதமே உயிர்கள் அடையும் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பது வைணவத்தின் இலட்சியமாகிறது.

கைங்கரியமே பேறு

வானுலகப் பரம பதம் எப்படியிருக்கும் என மண்ணுலகில் காட்ட வந்த இடமே அயோத்தி. யுத்தமற்ற இடம் அயோத்தி. ஆதலால் அயோத்தி என்பதற்குப் பரமபதம் என்பது பொருள். ஆதலால்தான், அயோத்தியில்

வாழ்வோர் அனைவரும் இராம கைங்கரியம் புரிவதையே பேறெனக் கொள்கின்றனர். இராமாயணப் பாத்திரங்களில் நல்லவர் எல்லோரும் இராமனுக்குத் தொண்டு புரியத் துடிப்பவர்கள். அரக்கர்களோ தெய்வங்கள் முதலிய அனைத்து உயிர்களும் தமக்குத் தொண்டு செய்ய விரும்புபவர்கள். வீடணன் இதை ஒவ்வாமல் தெய்வத்திற்கு தொண்டுபுரிய விரும்பியதால் குலத்திலிருந்தும் விலக்கப்பட்டான்.

இராமனை அண்டிய சமுதாயத்தில், நாடாளும் போட்டி யாரிடத்தும் காணப்படவில்லை. பணிசெய்யும் போட்டியினையே காண்கின்றோம். இறுதியில், சத்துருக்கனனை நாடாள வேண்டுகையில், சத்துருக்கனன் கூறிய வாசகங்கள் இதனை மெய்ப்பிக்கும்:

"கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒரு தம்பி; போனவன்தான் வரும் அவதி போயிற்றென்று
ஆனாத உயிர்விடவும் அமைந்தானும் ஒரு தம்பி; அயலே நாணாது
யானாம் இவ்வரசாள்வேன்! என்னே! இவ்வரசாட்சி இனிதே அம்மா"[28]

என்பான் சத்துருக்கனன்.

இலக்குவனுக்கும் பரதனுக்கும் கிடைத்த கைங்கரியப் பேற்றை எண்ணி, அவர்கள் கழித்துப் போட்ட அரசை ஆள்வது வெட்கமுறத் தக்க செயல் என்பது சத்துருக்கனின் கருத்து. இவ்வாறு உலகியற் செல்வத்தை வெறுத்து, கைங்கரியச் செல்வத்தையே பேறாக விரும்புவது வைணவத்தின் போற்றற் குரியதோர் கோட்பாடாகும். "வழுவிலா அடிமை செய்ய வேண்டும்"[29] என்று நம்மாழ்வார் வகுத்த கோட்பாடு இதுவேயாம். தன் நலத்திற்கு அடிமை செய்வது வழுவுடைய அடிமை. உலக நலம் வேண்டி இறைவனுக்கு அடிமை பூணுவது "வழுவிலா அடிமை" என்பது நம்மாழ்வார் கருத்தாகிறது.

"காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன்;
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்"30

என்ற சுக்கிரீவன் ஏக்கத்திலும் இக் கைங்கரியப் போட்டியின் தாக்கத்தைக் காணலாம். "வாளால் மகவரிந் தூட்ட வல்லேன் அல்லேன்"[31] எனும் பட்டினத்தார் பாடலிலும்,அடியார்கள் தொண்டுசெய்யத் துடிக்கும் ஆர்வத்தின் தாக்கத்தைக் காணலாம்.

கைங்கரியத்தின் பயன் கைங்கரியமே

இலக்குவன், கைங்கரியப் பணிக்காக, “மனையும வாழ்வும் உறக்கமும் மாற்றினான்”[32] என்பதனால், அவன் இறைவனுக்காகப் புரிந்த தியாகப் பணிகளின் எல்லை நிலம் உணர்த்தப்படுகிறது. உலகோர் எந்த மூன்றுக்காக வாழ்கிறார்களோ, அந்த மூன்றாகிய மனைவி இன்பம், உலகியல் வாழ்வு இன்பம், உறக்க இன்பம் எனும் மூன்றையும் துறந்த தியாக சீலன் இலக்குவன் ஆகிறான். இராமனும் சீதையும இலக்குவன் தயாரித்து விரித்திருந்த நாணற் பாயில் உறங்கினர். காலைவாய் அளவும் இலக்குவன் இமையாத கண்ணினனாய்க் காவல் காத்து நின்றான். உறக்கம் எனும் நங்கை வந்துற்றபோது, அயோத்திக்குப் பதினான்கு ஆண்டுகள் கழித்து மீண்டும் நான் வந்த அன்று வா என விடைகொடுத்தான்.

“துயிலெனும் அணங்கு வந்து தோன்றலும், அவளை, நாமே
எயிலுடை அயோத்திமூதூர் எய்தும் நாள் எய்துகென்றான்”[33]

இலக்குவன் புரிந்த இத் தியாக கைங்கரியத்தை நினைந்துருகும் வைணவப் பெருமக்கள் “உறங்கா வில்லி தாசன்” என்னும் தாச நாமப் பெயரிட்டு, இளைய பெருமாளாகிய இலக்குவனைக் கௌரவித்தனர். தங்கள் தரிசன நாயகராகிய இராமாநுசரையே “இளையாழ்வார்” என்று ஏத்துவர்.

இலக்குவன், இத்தகைய தொண்டினை என்ன பயன் கருதிச் செய்தான் எனில், மேலும் தொண்டு புரியும் பயனையே கருதிச் செய்தான். வேறு எப்பயனையும் அவன் விரும்பவே இல்லை. கைங்கரியமே பேறு; பேறே கைங்கரியம். பக்தி வேறு ஒன்றை விரும்பாது எனும் வைணவக் கோட்பாடு இங்கு விளக்கமுறுகிறது.

நரசிங்கப் பெருமான் பிரகலாதனிடம் வரங்கேட்கையில் பிரகலாதன் கூறியது இது:

“முன்பு பெறப்பெற்ற பேறோ முடிவில்லை
பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுகுவனேல்
என்பு பெறாத இழிபிறவி எய்தினும் உன்
அன்புமறவா அரும்பேறு அளி என்றான்”[34]

பக்தன் பக்தியைத் தவிர வேறு ஒரு பேறும் வேண்டான் என்பதற்கு இவ்வரமும் சான்றாம்.

“வழிபடும் அன்பேயன்றி வரம் எவன் பெறுவது என்னாத்
தொழுதனன் வழுத்த லுற்றான் தூயபேறிஞன் அம்மா”[35]

என்று இதனைக் கூறி, "தூய பேரறிஞன்" என்று பிரகலாதனைப் பாகவதம் பாராட்டும்.

"நின் மாட்டு யாம் இரப்பது
பொன்னும் பொருளும் போகமும் அல்ல
அன்பும் அருளும்"[35-அ]

என்னும் பரிபாடலும்.

பரமபத சுகம் எதுபோன்றது?

தாய்உரை கொண்டு தந்தை ஏவிய தரணியை "அரசு நின்னதே; ஆள்க"[35-ஆ] என்று இராமன் உரைப்பவும் ஆளாமல், இராமன் பாதுகைக்கே, அரசீந்தான் பரதன். நம்பிள்ளை கூற்று இதற்கான விளக்கத்தைத் தருகிறது: "இவ்வுலகத்தில் தனக்குண்டான சுகத்ரிதத் தனக்கே என்கை நரகசுகம் போன்றது. தனக்கும் எம்பெருமானுக்கும் என்கை, சுவர்க்க சுகம் போன்றது. தனக்கென்கை தவிர்ந்து, பகவானுக்கும் பாகவதர்களுக்கும் என்கை, பரமபத சுகம் போன்றது"[36] தனக்கென்கை தவிர்ந்து தனக்குரிய நாட்டைப் பகவானுக்கும் பாகவதர்க்கும் ஆக்கிய பரதன், பரமபதப் பேற்றினை இங்கேயே எய்தியவன் என்பது இங்கு விளங்கும்.

அயோத்தி பரமபதம்

பரமபதத்தின் உருவகமாகவே அயோத்தி கூறப்படுகிறது என்பது கம்பரின் இறுதிப் பாடலில் சுட்டப்படுகிறது.

"உம்பரோடு இம்பர்காறும், உலகம் ஓர் ஏழும் ஏழும்
'எம்பெருமான்' என்று ஏத்தி இறைஞ்சி நின்று ஏவல் செய்ய,
தம்பியரோடும் தானும் தருமமும் தரணி காத்தான்
அம்பரத்து அனந்தர் நீங்கி, அயோத்தியில் வந்த வள்ளல்"[37]

பகல் விளக்குப் போலே பரமபதம்; இறைவனின் குணம் நடையாடாத இடம்; பணியின்மையினால் அனந்தருக்கு (சோம்பலுக்கு) உரிய இடம். ஆதலால் குணம் நடையாடும் அயோத்தியை, பரம பதமாகக் கொண்டானாம் வள்ளல் குணம் வாய்ந்த பெருமான். இங்கு அவன் கருணையினை வாங்குவார் மிக உளர். ஆதலாலே, வள்ளல் எனும் பெயரால் நினைவூட்டுகின்றார். "கோசல நாடுடை வள்ளல்"[38] என்பார் முன்னும்.

ஈரேழுலகமும் 'எம்பெருமான்' என்று இறைஞ்சி ஏத்தும் இடமே பரமபதம். இங்கும் அதுவே நிகழ்வதால், அயோத்தி பரமபதம் ஆயிற்று என்கிறார். அங்கும் ஈரேழுலகமும் ஏவல் செய்யும்; இங்கும் செய்கின்றன.

அங்கு, தம்பியரோடு, தானும் அறமும் தரணி காத்தலைப் பார்க்க இயலாது.இங்கு அவ்வரிய காட்சியைக் கண்ணுறும் பேறு உண்டு எனக் குறிப்பால் ஒரு வேற்றுமையும் சுட்டி அயோத்தியைப் பரமபதத்திலும் உயர்த்தும் குறிப்பும் இங்கு காணலாம். வைணவம் "எம்பெருமானார் தரிசனம்" ஆதலின், அதனைக் குறிப்பால் நினைப்பிப்பார் போல, "எம்பெருமான்" என்று ஏத்த என்று கம்பர் முடிக்கின்றார் எனலாம். இங்கு, வைணவ உரையாளர்கள் கூற்று ஒன்றும் நினையத் தக்கது.

"பரமபதத்தி லிருக்கும்போது, அங்கு தன்னைவிடக் குறைந்தார் இல்லாமையாலே, குறைந்தார்க்கு அளிக்கையாகிற நிறைவிப் பெறாத குறைவாளனாய் இருப்பான் எம்பிரான். இங்கே வந்த பிறகுதான் இரட்சிக்கத் தகுந்த குறைவாளர்களைக் கூட்டம் கூட்டமாகப் பெற்றுப் பரிபூரணனாய்த் திருவரங்கச் செல்வன் ஆனான்"[39] இக்கருத்தை உணர்த்துவார் போலக் கம்பர், "அம்பரத்து அனந்தர் நீங்கி" எனக் குறிப்பிடும் நுட்பம் உணரத் தக்கது.

இறைக் காட்சியே பேறு

தண்டகாரணிய முனிவர்கள், இராமனைக் கண்டவுடன், "எங்கள் 'செல்கதி' வந்தது"[40] என்பர். இதனால், வான்வழிச் சென்று அடைய வேண்டிய பரமபதப் பொருள் மண்ணுலகத்திற்கு வந்துவிட்டது என்பதனால், இறைவனைக் கண்டு இன்புறுவதும், அவன் உகப்புக்கேற்ற கைங்கரியப் பண்புரிதலுமே பேறு என்பது உணர்த்தப்படுகிறது.

நாங்கள் போகும் இடம் (செல்கதி) இங்கு வந்துவிட்டது என்று முனிவர்களைக் கூற வைப்பதனால், வாழ்வாங்கு வாழ்ந்து, மண்ணுலகையே பரமபதமாக்க விரும்பும் கம்பர் பெருமானின் ஆர்வம் புலனாம். "மானுடம் வென்றது"[41] என்னும் அவர் கூற்றும் இவ் வார்வத்தின் ஊற்றம் காட்டுவதே எனலாம்.

திருமுடி சூட்டு படலத்தில், "தூய வீடணர்க்கும்; சூரியன் மகற்கும் (சுக்கிரீவனுக்கும்), வானர வீரர்க்கும் பிறர்க்கும் நம் நாயகக் கோவிலைக் காட்டுக"[42] என இராமபிரான் கூறுதல், பரமபதத்திலுள்ள திருமணி மண்டபம் காணுதல் போல், பேற்றின் எல்லையைக் காட்டுதற்கான ஒரு குறியீடு எனலாம். இட்சுவாகுவிற்குப் பிரமனால் அளிக்கப்பட்டுத் திருவொடும் பொலியத் தோன்றும் அந்த நாயகக் கோயில், அர்ச்சையில் காணுகின்ற பரமபதக் காட்சியே எனலாம். இவர்கட்குக் காட்டிய அரிய பேற்றால் தியாக சீலர்களாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்களுக்கு வானுறையும் தெய்வக் காட்சிப் பேறு இங்கேயே கிட்டும் என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது எனலாம்.

அடியார் தொண்டும் பேறு

வைணவம் பேறாகக் கருதுவது அவ்வுலகத்தில் உள்ள பரமபதத்தை மட்டும் அன்று. இவ்வுலகத்திலுள்ள பாகவதர்களாகிய அடியார்களோடு கலந்திருத்தல், அவர்கட்குத் தொண்டு புரிதல் ஆகியவையும் பேறே எனக் கருதுகிறது.

வைணவர்கள், பெருமாளை 'உறங்கும் பெருமாள்' என்றும் பாகவதர்களை 'உலாவும் பெருமாள்கள்' என்றும் குறிப்பிடுவர்.[43] இவ்வாறு அடியார்களை உயர்த்துவது வைணவநெறி. பகவானுக்குச் செய்யும் தொண்டினைவிட, பாகவதர்களுக்குச் செய்யும் தொண்டுதான் சிறந்தது என்பது இராமாநுசர் போன்ற ஆசாரியர்களின் கருத்து. அதன் பொருட்டே, குரு உபதேசித்த திருமந்திரத்தை சாதிபேதம் பாராது பலரும் அறியத் திருக்கோட்டியூர்க் கோபுரத்தின் மேலே ஏறிச் சொன்னார் இராமாநுசர்.[44] உயிர்களின் துன்பம் துடைப்பவன்தான் உண்மையான வைணவன்.[45]

"மிலேச்சனும் பக்தன் ஆனால், சதுர்வேதிகளும் அநுவர்த்திக்க (பின்பற்ற, அனுசரிக்க) அறிவு கொடுத்துக் குலதெய்வத்தோடு ஒக்கப் பூசை கொண்டு"[46] என்னும் "ஆசாரிய ஹிருதயம்". பக்தி ஒன்றிருந்தால் தாழ்ந்த குலத்தவனையும் நால்வேதமறிந்தவன் வழிபடும் தகுதி வந்துவிடுகிறது. இதனை அறிவுறுத்தவே, திருப்பாணாழ்வாரை, உலோக சாரங்கர் தோள்மேல் ஏற்றிச் சுமக்க வைத்தான் திருவரங்கநாதன். மாறனேர் நம்பி எனும் தாழ் குலத்துப் பக்தர் இறந்தபோது பெரியநம்பி என்னும் ஆசாரியர், மகன் தகப்பனுக்குச் செய்யும் அந்திமக் கடமைகளைச் செய்தார். தொண்டர்களின் அடிப்பொடி சூடலையே பேறாக விழைந்த ஒருவர், தொண்டர் அடிப் பொடி யாழ்வார் ஆயினார்.

"மெய் யடியார்தள் தம் ஈட்டங் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண்பயன் ஆவதே"[47] "தொண்டர் அடிப்பொடி ஆட நாம்பெறின் – கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவது"[48] "நாத்தழும்பேற நாராயணா என்றேத்தி, மெய்தழும்பேறத் தொழுது ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சம்"[49] "நின்புகழில், வைகுந்தம் சிந்தையினும் மற்றினிதோ, நீயவர்க்கும் வைகுந்தம் என்றருளும் வான்"[50] இவையெல்லலாம், அடியார் இணக்கமும் வணக்கமும் பெரும்பேறு எனும் வைணவக் கோட்பாட்டை உணர்த்தும் அற்புதத் தொடர்கள் ஆகின்றன.

சத்துருக்கனனின் தொண்டு

இவ்வாறு அடியார்க்கு அடிமை செய்தலைப் பேற்றின் கொடுமுடியாய்க் கருதுகிறது வைணவம். "நின்திரு எட்டெழுத்தும கற்று

நான் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை"[51] என்று அடியார்க்கு அடிமையைத் திருமந்திரத்திற்கு அர்த்தமாக அருளிச் செய்துள்ளனர்.[52] "பெறத் தக்க பேற்றிற்கு முதல் எல்லை பகவானுக்கு அடிமை என்ற அளவிலே நிற்றல்; அப்பேற்றிற்கு முடிவின் எல்லை பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் அடிமை அளவும் வருகை"[53] என்னும் ஈடு.

சத்துருக்கனன் பரதனுக்கே அடிமை பூண்டதால் கைங்கரியத்தின் எல்லையைத் தொட்டவன் என்பது எம்பெருமானார் வாக்கு. மாமன் ஊருக்கு வருமாறு பரதனுக்கே அழைப்பு வருகிறது. உறையோடு செல்லும் வாள்போலே, பரதனுக்குப் பணிவிடை புரிய, அழையாமலே சத்துருக்கனனும் உடன் சென்றான். பரதன் என்னும் அடியானின் நிழலாகத் தன்னை அமைத்துக் கொண்டான் சத்ருக்கனன்.[55]

"தேவு மற்றறியேன்"[56] என்று நம்மாழ்வாரையே கடவுளாக ஏற்றுப் பணிபுரிந்து பேறெய்திய மதுரகவியாழ்வாரைப் போன்று, அடியார்க்கு அடிமை பூண்டு பேறெய்திய சத்துருக்கனனைச் சத்துருக்கனாழ்வான் என்று போற்றுவர் வைணவச் சான்றோர்.[57]

பத்துப் பாடல்கள் பாடி, நம்மாழ்வாரைச் சிறப்பித்த மதுரகவி ஆழ்வார், தனித்துத் திருமாலைக் குறித்து ஒரு பாடலும் பாடாதவர் எனினும் ஆழ்வார்களுள் ஒருவர் ஆகிறார். சத்துருக்கனனும், இராமனைப் பற்றி ஒரு வாக்கியமும் பேசாதவன் ஆனாலும், பரதாழ்வானைப் பற்றி அடியார்க் கடியர் எனும் நெறி மேற்கொண்டதால் ஆழ்வான் ஆனான். இவ்வாறு அடியார்க் கடியர் ஆதலே பேறு என்று சத்துருக்கனன் தொடங்கி வைத்த கோட்பாடு, வைணவ சம்பரதாயத்தில் "பாகவத அபிமானம்" ஆகி "ஆசாரிய அபிமானம்" எனும் ஒரு நெறியாகப் பரிணமித்தது.

தொண்டக் குலமே தொழுகுலம்

பகவானை வணங்கி ஏத்தலே பேறாவதைப் போல், பாகவதரை ஏத்தலும் பேறாகிறது. வணங்குதற்கு, அடியார் எனும் தகுதியே போதுமானது; சாதி, குலம், செல்வம் எல்லாம் தேவைப்படாதவை என்பதைப் பரதன் குகன் சந்திப்பில் வைத்துக் கம்பர் விளக்குகின்றார்.

"வந்தெதிரே தொழுதானை வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும அடிபணியும் அவனும் அவன் அடிபணிந்தான்
தந்தையிலும் களிகூரத் தழுவினான்; தகவுடையார்
சிந்தையிலும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்"[58]

எதிரே வந்து தொழுதான் குகன். அடி தொழுத குகனைப் பரதனும் அடி வீழ்ந்து வணங்கினான். நான்முகனும் அடி வணங்கத் தக்க பரதன்,

குகனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் என்பதனால், வணங்குதற்கு அடியார் எனும் தகுதி ஒன்றே போதும்[59] என்பது நிறுவப்படுகிறது.

இங்கு வைணவம் நிறுவிய "தொண்டக் குலமே தொழுகுலம்" என்பது மெய்ப்பிக்கப் படுவதைக் காண்கிறோம். அடிவணங்கலில் ஒருபோட்டி இருப்பதை உணர்கிறோம்.

"கடிதணைந்து வாகீசர் கழல் பணிய மற்றவர்தம் அடிபணியா முன்பணியும் அரசு"[60] என்று அடியார்களிடையே பணிதலில் போட்டியிட்டிருப்பதைச் சேக்கிழாரும் அப்பூதியடிகளார் புராணத்தில் குறிப்பிடுகிறார்.

வயது, செல்வநிலை, சமுதாயத் தகுதி, முதலிய எவையும் தொண்டரின் அன்பிற்கு இடையே நுழைந்து தடையாவதில்லை. "கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறல்"[61] என்று இதனைச் சேக்கிழாரும் குறிப்பிடுவர். இவ்வாறு அன்பு செய்து அன்பு செய்து இவ்வுலகையே மோட்ச வீடு ஆக்கி விடுகிறார்கள் அடியார்கள். இங்கு, வைணவக் குருபரம்பரை நிகழ்ச்சி ஒன்று அடியவர்க் கிடையே யிருந்த பணிவை (நைச்சியாநுசந்தானத்தை) விளங்கிக் கொள்ள உதவும்.

இராமாநுசரைத் திருமலையில் வரவேற்றுக் கூட்டிச் செல்ல அவர் ஆசாரியர் ஆகிய பெரிய திருமலை நம்பியே, ஊர்ப்புறத்து வந்து நிற்பதை உணர்ந்து பதைத்த இராமாநுசர், "யாரேனும் ஒரு சிறியவரை யனுப்பியிருக்க லாகாதா?" என்று விண்ணப்பிக்க, "என்னைவிடச் சிறியார் எங்கும் கிட்டவில்லை" என்றுரைத்தார் திருமலை நம்பி என்பது குருபரம்பரை.[62]

பாகவத அபசாரம்

> "புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையில் புக்கார்
> செவிக ளாற்பல கேட்டிலராயினும் தேவர்
> அளிகொள் நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார்
> கவிகள் ஆகுவர், காண்குவர் மெய்ப்பொருள்"[63]

என்று அடியார்க்கடியர் ஆகிய பாகவதர்கள் பெறும்பேறாக மெய்ப்பொருள் காணுதல் சுட்டப்படுகிறது. அவர்கள் செவிகளாற் பல கேட்கிலர் ஆயினும், நால்வேதத்தில் அகப்பொருள், புறப்பொருள் அறிவார் என அடியார்க்கடியர் பெருமை கம்பரால் அறிவிக்கப்படுகிறது. இறைத் தொடர்பால் இவ்வடியார்கள் வேதக் கருத்துக்கள் அனைத்தும் உணர்கின்றனர். அவ்வடியார் தொடர்பால் அடியார்க்கடியரும் இவ்வனைத்தும் அறிவர்; மெய்ப்பொருளும் காண்பர் என்பது கம்பர் துணிபு.

இறைவனது அவதாரங்களில் புரிந்த ஆனைச் (பெரிய) செயல்கள் எல்லாம் பாகவதாபசாரம் பொறமையாலே நிகழ்ந்தவை என்பர்.[64] "தன் விசயத்தில் அபசாரம் செய்த சிசுபாலாதிகளைச் சக்கரத்தால் தலைகொண்டதுபோலே, நற்கொலையாகக் கொல்லாமல், பாகவதாபசாரம் செய்த பயல் ஆகையாலே, சின்ன பின்னமாக்கி, பல கூறாக வகிர்ந்தது"[65] என்று இரணியன் ஆகம் பிளந்ததற்கு விளக்கம் அளிப்பர் வைணவப் பெரியோர்.

அன்பே அரும்பேறு

இறைவனிடம் செலுத்தும் அன்பையே, பெறுதற்கரிய பேறாகக் கொள்வது, பயன் கருதாப் பக்தியாகி, பேறுகளில் தலையாகிறது.

"வரத, உன் திருவருள், உன் அருகே எப்போதும் இருக்கும்படியானபேறு, உன்னிடம் உண்மையான பக்தி, நல்லடியார் குழாம் - இந்நான்கும் இருக்குமேயானால், இந்தச் சம்சார உலகம்தான் மோட்சம் என்று சொல்லிவிடலாம்"[66] என்பார் வேதாந்த தேசிகர்.

இக்கருத்தை யெல்லாம் உட்கொண்டதுதான் "உன் அன்பு மறவா அரும்பேறு அளி"[67] என்று பிரகலாதன் வேண்டலாம். பிரகலாதனை, இதனால்தான் பக்தர்கள் தலைவன் என வைணவம் உலகம் பாராட்டும். இவன் மாட்டுள்ள பக்திப் பெருக்கால், இவன் பெயர் சொல்லவும் கூசி, பிரகலாதன் எனும் பெயரே கூறாமல் இவன் சரிதத்தைக் கூறி முடித்துள்ளார் கம்ப நாட்டாழ்வார்.

"என்னைத் தொழுதேத்தி எய்தும் பயன் எல்லாம்
உன்னைத் தொழுதேத்தி உய்க உலகெல்லாம்"[68]

என்று, மூவுலகும் தனக்கு அடிமையாதல் போன்று, தனக்கு ஒப்பானவனான பிரகலாதனுக்கும் அவை அடிமை பூணுக என்று, சாயுச்சியும், சாலோகம், சாரூபம், சாமீப்பியம் என்னும் பேற்றில் அடையு நான்கு நிலைகளையும் பிரகலாதனாகிய சிறுவனுக்கு நரசிங்கப் பெருமனார் அளிக்கின்றார்.

வைணவம் ஆண்டானையும் அடியானையும் சமமாக்கும் ஒரு முயற்சி என்பது இங்கு புலனாகிறது. அநுமானை, "உன்னை என் தலையினால் தொழவே தகும்" என்பாள் பிராட்டி.

வைணவத் தலங்களில், ஆழ்வார்கட்கும் ஆசாரியர்கட்கும் இறைவனுக்கருகில் திருவுருவங்கள் வழிபடற்குரியவாறு அமைத்திருப்பதன் நோக்கம் அவர்களும் இறைவனைப் போன்றே பேறளிக்க வல்லவர்கள் என்பதனால் என்பது இங்கு புலனாகும்.

ஆத்மானுபவம் எனும் கைவல்ய மோட்சம்

பிறப்பு, மூப்பு, இறப்புகளிலிருந்து விடுபட்டு, இறைவனை வணங்கி, உலகியல் தொடர்பு நீங்கி, அர்ச்சிர மார்க்கத்தில் சென்று, விரஜையில் நீராடி, சூக்கும உடலையும் நீத்து, விரஜைக்கும் பரமபதத்திற்கும் இடையில் இருக்கும் கைவல்ய உலகை யடைந்து, ஆத்ம தத்துவம் உள்ள அளவு சீரீர மற்றவனாய்ப் பகவதநுபவத்தையும் இழந்து, தன்னைத்தானே அநுபவித்துக் கொண்டிருத்தலை வைணவம் கைவல்ய மோட்சம்[70] என்று குறிப்பிடும்.

இறைவனை அநுபவிக்கும் பண்பும், கைங்கரியப் பேறும் இன்மையால், இம்மோட்சத்தை வைணவ உலகம் போற்றாது தூற்றும். கம்பரும் இந்நிலை உடையாரை வீடுபேறு அடைந்தவர் எனக் குறிக்கலாகாது; அவர்கள் பித்தர்கள் எனத் தூற்றுகின்றார்.

"சித்தென அருமறைச் சிரத்தில் தேறிய
தத்துவம் அவன்; அதுதம்மைத் தாம் உணர்
வித்தகர் அறிகுவர்; வேறுவேறு உணர்
பித்தரும் உளர்சிலர்; வீடுபேறிலார்"[71]

ஞானவடிவம் என்று அறிதற்கரிய வேதாந்தங்களிற் சித்தாந்தப்படுத்திய பரதத்துவம் இறைவனே ஆவான். அத்தன்மைத்தாகிய தமது உண்மை நிலையை தம்மைத் தாம்அறிந்த ஞானிகளே அறிகுவர். தம்மைத் தாம் அறிதல் என்பதனை விபரீத ஞானத்தால் வேறாகப் பொருள் கொண்ட மயக்கறிவாளரும் சிலர் உளர்; அவர்கள் வீடுபேற்றுக் கோட்பாட்டில், தன்னையறிதல் என்பதற்கு ஆத்மா, யோகத்தில் தன்னையே அநுபவித்துக் கொண்டிருத்தல் எனப் பொருள் கொள்ளும் கைவல்லிய மோட்ச வாதிக ளாவார். அவர்கட்கு வீடுபேறில்லை என இப்பாவால் தெளிவுறுத்துகிறார் கவிஞர். தன்னையறிதல் என்பதற்குத் தன் தாழ்நிலை அறிந்து, இறைவன் உயர்நிலையறிதல் என்பது வைணவம் கொள்ளும் பொருளாகும்.

சொர்க்க பதம் அழிவது

இந்திரன், பிரம பதமாகிய சத்தியலோகம் தருதற்கு விரும்ப, அதுவும் அழிவது, அழியாத பரமபதமே வேண்டும் என்று சரபங்கர் இந்திரன் வேண்டலை மறுத்துவிடுகிறார். "சிற்பத் தொழில் நிறைந்த படிமங்கள் அழிவதுபோல் அழியும்"[71-அ] அற்பங் கருதேன்" என்கிறார் சரபங்கர். மற்ற பதவிகள் யாவும் உருவாலும் காலத்தாலும் குணங்களாலும் மாறுபடும் இயல்பின; பரமபதம் அவ்விதமாக மாறுபாடு உறுவதில்லை. பஞ்ச பூதங்கள் அழியினும் அழியாது நிற்கும் நிலைபேறுடையது பரமபதம்.

இவ்வுலகம் பஞ்சபூதங்களால் ஆனது. பரமபதம் பரமேட்டி, புமான், விசுவம், நிவிருத்தி, சர்வம் என ஐந்து சக்திகளால் ஆனது என்பது வைணவ தத்துவம் ஆதலால், "பூதமெலாம் உகினும் மறுகாநெறி" என்கிறார் சரபங்கர்.

"சிறுகா பெருகா நிலையோ திரியா,
குறுகா நெடுகா குணம் வேறுபடா
உறுகால் கிளர் பூதமெலாம் உகினும்
மறுகாநெறி எய்துவென் வானுடையாய்"[71-ஆ]

அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டின் இலக்கணம் கூறுதற்குச் சரபங்கர் சரிதையை பயன்படுத்திக் கொள்கிறார் கவிஞர்.

"தேவரும் முனிவரும் உறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலரயன் முதலோர்
ஏவரு முடிவினில் ஒருவினை ஒருவிப்
போவது கருதும் அவ் அருநெறி புக்கார்"[71-இ]

சரபங்கர் என்கின்றார். இதனால் மலரயன் முதலிய தேவர்கள் இருவினைப் பயனாய் உள்ள நிலைகளை யுடையவர்கள்; அந்நிலைகளும் அழியும் நீர்மைய; அழியா நிலையுடையது பரமபதம் ஒன்றே என்பது குறிக்கப் பெறுகிறது.

பிரமனுக்கும் எட்டாப் பெருநிலை பரமபதம்

இராமபிரானின் தந்தை என்பதால், தயரதன், புண்டரீகத் தனிமுதலாகிய நான்முகன் உலகுக்கும் எய்தற்கரிய திருமாலின் உலகாகிய பரமபதத்திற்கும் இடையிலுள்ள உலகில் வைகினான்.

"எண்தகு குணத்தினான் தாதை என்றலால்,
புண்டரிகத் தனி முதற்கும் போக்கரு
விண்டுவின் உலகிடை விளங்கினான்"[72]

என்பது கம்பர் வாக்கு. நான்முகன் உலகிற்கும் விண்டுவின் உலகுக்கும் இடையே உள்ள உலகு ஒன்றில் தசரதன் தங்கினான் என்பது இப்பாடலின் பொருளாகிறது.

முன்பு, தயரதன் தொழுத தேவர்களும் முனிவர்களும், இப்போது தசரதனைத் தொழுதுய்யுமாறு, பிரம்மலோகத்துக்கு மேலே விளங்கும் உலகொன்றில் தசரதன் வீற்றிருந்தான்.

"பண்டுநான் தொழும் தேவரும் முனிவரும் பாராய்
கண்டு கண்டெனைக் கைத்தலம் குவிக்கின்ற காட்சி

புண்டரிகத்துப் புராதனன் தன்னொடும் பொருந்தி
அண்டமூலத்துக்கு அப்புறத்து இருத்தினை அழக!"[73]

தசரதன் வாழ் உலகு, பிரமன் உலகுக்குத் தரத்தில் சமமானது என்று "புராதனன் தன்னொடும் பொருந்தி" என்பதனால் குறிப்பிட்டார் கவிஞர். ஆனால், நான்முகன் உலகுக்கு அப்பாற்பட்டது அது என்பதனை யுணர்த்த அண்ட மூலத்துக்கு அப்புறத்து இருத்தினை" என்றார். (அண்ட மூலம் - பிரம்ம உலகு) தசரதன் வைகுந்த லோகம் அடையவில்லை; பரதனாகிய பாகவதனை இகழ்ந்ததனால் பரமபத உலகு அவனுக்குக் கிட்டவில்லை எனறு வைணவ ஆசாரியர்கள் கருதுவர். அதனை ஒத்துக் கொள்வார்போல, பிரம்ம லோகத்துக்கும் விண்டுவின் உலகுக்கும் இடையே அவன் தங்கியுள்ளான் என்பது தோன்ற, "புண்டரீகத்தனி முதற்கும், போக்கரு விண்டுவின் உலகு, இடை விளங்கினான்" என்று கம்பர் குறித்திருப்பது அவர் வைணவ ஆசாரியர்கள் கருத்தில் எவ்வளவு ஆழங்கால் பட்டவர் என்பதனை விளக்கி நிற்கிறது.

"கைகேயி இராமபிரானைக் காட்டுக் கனுப்பி, பகவதபசாரம் பண்ணினாளே யானாலும், 'தன்மகன்' என்றாவது, பரம பாகவதனான பரதனிடம் அன்பு வைக்கையாலே, "அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி" என்கிறபடியே, பெருமாளோடு கூட முக்தி யடைந்தாள். தசரதச் சக்கரவர்த்தி, எம்பெருமானிடம் அன்பு வைத்த போதிலும், பரம பாகவதர்களான பரதன் முதலானோரிடம் அப்படி அன்பு வைக்காமையாலே முக்தியடையாமல் சுவர்க்கத்தையே அடைந்தான்"[75] என்று வைணவ ஆசாரியர்கள் சிலர் கருதும் கருத்தையும் ஏற்பார்போன்று சொற்றொடர்களை அமைத்துள்ள கவிஞர்பெருமானின் திறம் நம்மை வியக்க வைக்கிறது.

"இராமன் பத்தினி, செந்தாள் வஞ்சி திறத்து இறந்தவன் வரம்பில் சீர்த்தியொடு உய்ந்தான் அல்லது, உலந்தது உண்மையோ?" என்று சீதை பொருட்டாகத் தன் தம்பி சடாயு மடிந்தது மரணம் என்பது பொய்; வாழ்கிறான் என்பதே மெய் என்கிறான் சம்பாதி.

பிறர் வாழத் தான் உயிர் நீப்பது - மரணம் ஆகாது. மரணமிலாப் பெரு நெறியில் வாழ்வது ஆகும் அது. வாழ்வியல் நெறியில் அதுவும் ஒரு நெறியாகும்.

கம்பர் கண்ட "மரணமிலாப் பெருவாழ்வு" இதுவாகும்.

இறுதிக் காலத்தில் இறைதிரு நாமம் கேட்பது ஒரு பெரும் பேறு என்பது வைணவக் கோட்பாடுகளுள் ஒன்று.

"சரம பருவத்தில் திருநாம சங்கீர்த்தனம் ஒரு புருஷார்த்தம்" (பேறு) என்பர் திருமாலை யுரையில் பெரிய வாச்சான்பிள்ளை.

சம்பாதி இராமநாமம் கேட்ட வாறே விசும்பிற்குச் செல்ல விரும்புவதாகவும், வானரங்கள் அவ்வாறே இராமநாமம் சொல்வதுகேட்டு, இழந்த இறகுபெற்றுச் சம்பாதி விசும்பேகியதாகவும் கம்பர் பெருமான் இவ் வைணவக் கோட்பாட்டை இடமறிந்து தம்காவிய மாளிகையில் இவ்வாறு பதிக்கின்றார்:

"எல்லீரும் அவ் விராம நாமமே
சொல்லீர்; சொல்லின் எனக்கோர் சோர்விலா
நல்லீ ரப்பயன் நண்ணும்; நல்லசொல்
வல்லீர்; வாய்மை வளர்க்கும் மாண்பினீர்! 5.16.48

இங்கு இராமநாமம் "நல்லீரப்பயன்" ஆகிய பரம பதப்பேறு நல்குவதென்பதும், அது சொற்களுட் சிறந்த "நல்லசொல்" என்பதும், அதைச் சொல்வது சத்தியத்தை வளர்த்துக் கொள்ளும் தனிவழி, தருமவழி என்பதும் சுட்டிச் செல்வது காண்க.

மேலும்,

"ஆவுக்கு ஆயினும், அந்தணர்க்கு ஆயினும்
யாவர்க்கு ஆயினும் எளியவர்க்கு ஆயினும்
சாவப் பெற்றவரே, தகைவான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவீர்"

(கம்ப 2652)

"மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள், மாயாது
ஏந்திய கை கொடு இரந்தவர் - எந்தாய்
வீந்தவர் என்பவர், வீந்தவரேனும்
ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே?"

(கம்ப-422)

எனும் பாக்களும் கம்பர் பெருமானின் பிறப்பு இறப்புக் கோட்பாட்டுக் கொள்கைகளை விளக்கி, "மரணமிலாப் பெருவாழ்வுத் தத்துவத்தின் வழிகளைத் துலக்கி நிற்றல் காண்க."

சம்பாதியின் உவகை

சடாயு, இராம சேவையில் அறங் காத்தற் காகத் தன்னுயிர் ஈந்த செய்தி யறிந்த தமயன் சம்பாதி,

"பெற ஒண்ணாததோர் பெற்றி பெற்றவற்கு
இறவு என்னாம்? இதில் இன்பம் யாவதோ?"[76]

என்கின்றான்.

இறையடியார்கள், சேவையால் மரணமுறுவதைவிடப் பெரும் பேறொன்றும் இல்லை எனக் கருதுவர் என்பதை சம்பாதி கூற்று உணர்த்துகிறது. "அடியார்க்கு மரணம் மகிழ்ச்சி யளிக்கும்"[77] என்னும் உபநிடதம்.

சடாயு மரணத்தைத் "தெய்வ மரணம் என் தாதையுற்றது"[78] என யுத்த காண்டத்தில் நினைந்து உருகுவான் இராமபிரான். எனவே, சடாயுவின் மரணம் தெய்வ மரணம் ஆகிறது.

அற வழிப்பட்ட பிறர்க்காக உயிர்வாழ்வது தெய்வ வாழ்க்கை. அத்தகைய பிறர்க்காக உயிர்விடுவது தெய்வ மரணம். தனக்காக உயிர் வாழ்வது அரக்க வாழ்க்கை. தனக்காக உயிர்விடுவது அரக்க மரணம் என்பது கம்பர் கருத்தாதல் இதனால் தெரிகிறது.

"ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும்
யாவர்க்காயினும் எளியவர்க்காயினும்
சாவப் பெற்றவரே தகைவான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவர்"[79]

தியாகத்தால் சாவப் பெற்றவரே, தேவர்தொழும் தேவர்களாய் நித்திய சூரிகளாய்ப் பரமபதத்தில் நிரப்பப் படுவர் என்னும் இராம வாசகத்தால், கம்ப இராமாயணம் எத்தகைய தியாக நோக்கை, தியாக வாழ்க்கையை ஊக்கி நிற்கிறது என்பது நினைந்து மகிழற்பாலது. இங்கு, காந்தியண்ணலின் தியாக வாழ்வு நினைவில் வருகிறது.

கைங்கரியம் தரும் பேறு

தன்னை முழுவதும் இறைவனிடம் ஒப்படைத்துக் கொண்டு, எப்பலனும் எதிர்பாராது, தொண்டு தொண்டிற்காகவே என்று அறங் காக்கக் கைங்கரியம் புரிந்த அநுமனை, ஒப்பற்ற பரம பாகவதனாக ஏற்றிப் போற்றி வணங்கி வழிபடுகின்றது வைணவ மரபு. அவன் பெற்ற பேறு யாரும் பெறாப் பேறாகும். 'விடைகொடுத்த படல'த்தில், எல்லோர்க்கும் பரிசு நல்கிய இராமபிரான், அநுமனுக்கு என்ன தருவது என்று திகைத்துப் போய்த் தன் திருமேனியை தருகிறான். "போருதவிய திண்தோளால் பொருந்துறப் புல்லு"[80] என்று அநுமனுக்குத் தன் திவ்விய தேகத்தையே தந்து விடுவதாகக் கம்பர் குறிக்கின்றார். பிறருக்கு மேனியில் அணிந்த அணிகள் பரிசாக, அநுமனுக்கோ மேனியே பரிசாகிறது!

இதுவரையில், இராமன் அநுமனைத் தழுவியதுண்டு. இப்பொழுது, இராமன் தன்னைத் தழுவுமாறு அநுமனிடம் தன் மேனியைத் தந்துவிடுவதால், அவன் அநுமனுக்குத் தன்னை உடைமை யாக்கியது அறியலாகும்[81] என்பர். சுதந்திரனாகிய பரம்பொருள், தூய தொண்டனிடம் பரதந்திரனாகி, அவனிட்ட வழக்காக மாறிவிடும் அற்புதத்தைக் கம்பர் பெருமான் காட்டி மகிழ்கிறார். நாம் தரிசித்து மகிழ்கிறோம்.

இதனை, ஈடு அழகுற விளக்கும். "மகாத்மாவான திருவடிக்கு என்னால் கொடுக்கப்பட்டது இவ் ஆலிங்கனமே; இவ் ஆலிங்கனமானது, எல்லாவகைச் சொத்தாகவும் உள்ளது"[82] என்கிறபடியே, தான் மகிழ்ந்தார்க்குக் கொடுப்பது திருமேனி" என்னும் ஈடு.[83] தன்னை மகிழ்வித்தார்க்குக் கொடுப்பது வேறு பொருள்கள், தான் மகிழ்ந்தார்க்குக் கொடுப்பது அவன் திருமேனி. "அபுபென் ஆடம்" எனும் ஆங்கிலக் கவிதை இங்கு நினைவில் வருகிறது. கடவுளை விரும்புகிறவர் பட்டியலில் அபுவின் பெயர் இல்லை; கடவுளால் விரும்பப்படுகிறவர்கள் பட்டியலில் அவன் பெயர் முதலில் இருக்கிறது.

"இரண்டு சரீங்களைக் கொடுத்துதவிய மகாத்மாவான அந்த அநுமானுக்கு விலக்காதது ஆகிய ஒரு சமயத்தைப் பெற்று, என்னால் கொடுக்கப்பட்டதான இந்த ஆலிங்கனமானது எல்லாக் கொடைகளுக்கும சமானமாக் கடவது"[84] என்று இராமன் கருதியதாக ஈடு கூறும். சுந்தர காண்டத்தில் சீதையையும் யுத்தக் காண்டத்தில் இலக்குவனையும் உயிர் மீட்டுத் தந்த பெருமைக்குரியவன் அநுமான் ஆதலின், இரண்டு சீரங்களை எனக்குக் கொடுத்துதவிய மகாத்மாவான அனுமானுக்கு என்னால் என் ஒரு சரீரம் மட்டுமே கொடுக்க இயன்றது என்று இராமன் ஏங்கியதாக ஈடு கூறுகிறது.

"மன்னில் தோன்றினோம் முன்னம்; மாண்டுளோம் நின்னில் தோன்றினோம் நெறியில் தோன்றினாய்"[85] என்று கம்பரும் அநுமன் வயிற்றில் இராம இலக்குவர்கள் மீண்டும் பிறந்ததாகக் கூறுவர்.

வீட்டுலகில் சென்று அனுபவிக்க வேண்டிய திருமேனியை அநுமன் தன் கைங்கரிய உச்சியினால் இங்கேயே பெற்றுவிட்டான். மண்ணிலேயே விண்ணின்பம், பயன்கருதாப் பணியாளர்க்குக் கிட்டும் என்பது உணர்த்தப்படும் திறம் இது.

சீதையிடம் அநுமன் பெற்ற பேறு

தன் தொண்டால் இராமனையே திகைக்க வைத்த இத்தகைய பெரும்பேறு பெற்ற அநுமன், பிராட்டியையும் இவ்வாறே திகைப்பிப்பான்.

“உலகம் மூன்றும் உதவற் கொருதனி
விலையி லாமையும் நோக்கினன்; மேல் அது
நிலையி லாமையும் நேர்ந்தனன்; உன்னைஎன்
தலையினால் தொழவே தகும் தன்மையோய்”[88]

“அநுமானே! நீ எனக்கு ஆற்றியுள்ள தொண்டுக்கு ஈடாக இந்த மூன்று உலகங்களையும் பரிசாகக் கொடுக்கலாம். ஆனால், அவை உன் தொண்டின் மதிப்பு அளவுக்கு விலைபோகா. மேலும், என்றும் நிலைத்து நிற்பது உன் தொண்டு. மூன்று உலகங்களோ நிலையாக நில்லாமல் அழியும் தன்மையுடையவை. ஆகவே, உன் தொண்டுக்கு மூன்று உலகங்களையும் கொடுப்பது சரியாகாது. வேண்டுமானால், உன்னை நான் என் தலையினால் வணங்கி எழுந்தால் ஒருவேளை சமம் ஆகலாம்” என்பது பிராட்டியின் கூற்று.

கைங்கரியத்தால் இறைவனை எவ்வாறெல்லாம் உகப்பிக்க முடியும் என்பது அநுமன் வாயிலாய் இங்கு உலகுக்கு உணர்த்தப்படுகிறது. அவன் உகப்பைக் கண்டு உகப்பதே உயிர்களின் பேறு எனும் வைணவ நெறியை அநுமன் வாயிலாய் உலகுக்கு விளக்குகிறார் கவிஞர் பெருமானார்.

அநுமனுக்குப் பரமபதம் பிரம்மபதம்

மூவுலகத்தையும் படைக்கும் தொழிலையுடைய முதல்வனான பிரம்ம தேவனுக்காக ஏற்பட்டுள்ள பிரம்ம பதவியை, இப்பிறவிக்குப் பின்னே, அநுமனுக்கென்று நியமித்து ஒதுக்கி வைத்துள்ளதாக இராமபிரான் அநுமனிடம் கூறுகின்றான்.

“முன்னதாகிய மூவுல காக்கிய முதலோன்
பின்ன தாக்கிய பதம் நினக்கு ஆக்கினேன் பெற்றாய்”[87]

இராமன் தான் எடுத்த தன்மையை மறந்து, தானான தன்மையிற் பேசுமிடங்களில் இதுவும ஒன்று. தான் எடுத்த தன்மையில், அதாவது சக்கரவர்த்தித் திருமகனாய் இருக்கையில் இராமன் பிரம்ம பதத்தையளித்தல் இயலாது என்பது இங்கு கருததாகும்.

அநுமன் பெற்ற பேறுகள்

அசோக வனத்தில் அநுமன் வீசிய மரங்களில் இருந்த பறவைகள் கூட்டோடும் வானம் நோக்கிச் சென்ற செயலை, அவை கூண்டோடு சுவர்க்கம் புகுந்தன என்று இரட்டுற மொழிதலால் கூறுகிறார்.

“தோட்டொடுந் துதைத்த தெய்வ மரந்தொறும் தொடுத்தபுள்தம்
கூட்டொடும் துறக்கம்புக்க; குன்றன குவவுத் திண்டோள்

சேட்டகன் பரிதிமார்பன் சீறியும் தீண்டல் தன்னால்
மீட்டுஅவன் கருணை செய்தால் பெறுமபதம் விளம்பலாமோ"[88]

அனுமன் கோபித்த போதும், அவன் கைகள் தீண்டிய சிறப்பினால் பறவைகள் சுவர்க்கம் புக்கன என்றால், அனுமனால் கருணை செய்யப் பெற்றோர் சுவர்க்கத்திலும் மேலான மோட்ச பூமியை அடைவர் என்பதைக் கூறத்தான் வேண்டுமோ? என்கிறார். அனுமன் திருக்கோயில்கள், வழிபாடுகள் தோன்றுவதற்கான மூலவிதை இப்பாடலில் அமைந்துள்ளமையை நாம் அறிய முடிகிறது.

ஆண்டானாகிய இராமனுக்குரிய வீடருளுதல் எனும் சிறப்புக் குணத்தை அவன் அடியானாகிய அனுமனுக்கும் இங்கு கூட்டி யுரைக்கப் பெற்றுள்ளமை காணலாம். பிரகலாதனுக்கும் இப்பேறு அருளப்பெற்றது.

"என்னைத் தொழுதேத்தி எய்தும் பயன் எல்லாம்
உனனைத் தொழுதேத்தி உய்க உலகெல்லாம்"[89]

என்பது சிங்கப்பிரானின் திருவாக்கு. அனுமனும் பிரகலாதனும் பெற்ற பெருநிலையை, இறைவன் தன்மையை அடைதல், சமமாதல் ஆகிய சாரூபம் சாமீபம் என்னும் வைணவம்.

இப்பெருநிலையை மெய்ஞ்ஞானிகளும் உயர் அன்பர்களும் எய்துதல் கூடும். இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் அவர்கள் புரிதல் கூடும் என்பதனை, தம் அனுபவத்தால் வடலூர், வள்ளற்பெருமானும் கூறுவார்.

"படைத்தல் முதல் ஐந்தொழில் செய்
பணி எனக்கே பணித்திட்டாய்"(திருஅருட்பா:4798)

"அனுமன் ஆராதனையும் பக்தியும் நாட்டிற் பெருகிய காலத்தில் இந்நூல் எழுந்தமையை இப்பாடல் அறிவுறுத்தும்"[90] எனும் உ.வே.சா. பதிப்புக் குறிப்பும் இங்கு நினைவு கூரத்தகும்.

ஆசாரியன் இறைவனோடு சமமாகிறான் என்பதனைக் கம்பர் உணாத்தும் பாங்கு இதுவாகும். "அண்ணல் அவ் அரியினுக்கு அடியவர் அவன்சீர் நண்ணுவர்"[91] என இறைவனின் நிலையை அடியாரும எய்தலாகும் எனும் இக்கருத்தினை மேலும் வலியுறுத்தியுள்ளார்.

"எந்நாளும் உலவாய்நீ என்போல் உளை"[92] எனப் பிரகலாதனும் "உலகம் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி"[93] என அனுமனும், என்றும் இருக்கும் சிரஞ்சீவித்துவம், பெறுதலால், சாயுச்சியும் எனும் பதத்தையும் இருவரும் பெறுகின்றனர். "சித்த மலம், அறுவித்துச் சிவமாக்கிக்

எனையாண்ட அத்தன்'' என்று மணி வாசகரும், ''என்னைச் சிவமாக்கி கொண்டான்'' என்று வள்ளலாரும் இப் பெருநிலையைக் குறிப்பித்துள்ளனர்.

சரணாகதி தரும் பேறு

இராமன் இலங்கைச் செல்வம் தந்ததைக் கொண்டு மகிழாது வீடணன், ''இளையவற் கவித்த மோலி என்னையும் கவிக்க''[94] என வேண்டியது திருவடிப் பேறே பெறத்தக்க பேறு என்பதை உணர்த்தவேயாம். இலங்கைச் செல்வமும் பெற்று, வீட்டுலகச் செல்வமும் அவன் பெறுவது ஈருலகப் பேறாகிய இருமை இன்பங்களும் சரணாகதி பெற்றவனுக்கு உரியவை என்பதை உணர்த்தவேயாம்.

"தேடுவார் தேடநின்ற சேவடி தானும் தேடி
நாடுவான், அன்றுகண்ட நான்முகன் கழீஇய நல்நீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கி, மேல் அமரர் ஆவார்
சூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர்? சொல்வீர்"[95]

தேடுவார் எல்லோரும் தேடியும் கிடைத்தற்கு அரியவை அவன் திருவடிகள். நான்முகனும் அப்படித் தேடி நின்ற சேவடி, வானத்தை யெல்லாம் ஓரடியில் திருவிக்கிரம அவதாரத்தில் அளக்கும்போது, நான் முகனுக்குக் கிட்டின. வான கங்கை நீரினால் அத் திருவடிகளுக்கு நன்னீராட்டினான் நான்முகன். அங்கிருந்து அவன் சேவடி கழுவிய நீரே பூவுலகில் புனித கங்கையாகி, அதில் நீராடுவோர், பாவங்களையெல்லாம் போக்குகின்றது என்றால், அவன் சேவடிகளையே சூடுகின்ற வாய்ப்படைத்த வீடணன் அடைந்த பேற்றை யாரே மொழிய வல்லார்? என்பது கவிஞர் வாக்கு.

இங்கு, வீடணன் பெற்ற திருவடிப் பேற்றின் மேன்மையை விளக்கி வியந்தவாறு காணலாம்.

"இற்றைநாள் அளவும் யாரும், இருடிகள் இமையோர், ஞானம்
முற்றினார், அன்பு பூண்டார், வேள்விகள் முடித்து நின்றார்
மற்றும் மாதவரும் எல்லாம் வாள் எயிற்று இலங்கை வேந்தன்
பெற்றது யார் பெற்றார்? என்று வியந்தனர் பெரியோ ரெல்லாம்"[96]

ஞானம் முற்றினார், அன்பு பூண்டார், வேள்விகள் முடித்து நின்றார் ஆகிய ஞானயோகம் பக்தியோகம் கருமயோகம் வல்லாரைக் காட்டிலும் சரணாகதி நெறி பூண்ட வீடணன் பெற்ற பேறே உயர்ந்தது என்பதனை பெரியோர் வாயில் வைத்துக் கவிஞர் பெருமான் இப்பாடலில் உரைத்துள்ள திறம் காண்க.

பேற்றின் வகைகள்

இராமாயணம் காட்டும் பேறுகளில், தசரதன், சரபங்கர், தண்டகாரணிய முனிவர்கள், சடாயு, வாலி, அநசூயை, சவரி முதலியோர் அடைந்த பேறுகள் "மற்றீண்டு வாரா அந்தமில் இன்பத்து அழிவிலா வீடு" பேறாகும்.

அயோத்தி வாழ் சர அசரங்கள் யாவும் மண்ணிலும் விண்ணிலும் பெறற்கரிய வீடு பேற்றினைப் பெற்றனர். "புற்பா முதலா புல்லெறும்பு" ஆதியாக நற்பால் அயோத்தியுள் வாழும் சராசரம் யாவையும் நற்பாலுக்கு உய்த்தனன்"[97] என்பார் நம்மாழ்வார்.

குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் இறைவனின் அறக்கருணையால் பெறற்கரும் பேறு பெற்றவர்கள்.

பிரகலாதனும் அநுமனும் எந்நாளும் உலவாச் சிரஞ்சீவித்துவம் பெற்றவர்கள். அநுமன் பிரம்ம பதம் அடைய இருப்பவன். பெருமானின் அறக்கருணையால் வீடுபேறு எய்தியவர்கள் பிறவா நெறி எய்தியவர்கள். தங்கள் விருப்பத்தால் மட்டும் பிறக்க உரியவர்கள்; வினைப் பயத்தால் இனி அவர் பிறவார்.

இறைவனின் மறக் கருணையால் வீர சொர்க்கம் புகுந்தவர்கள்,[98] வீரத்தின் பயனையும்[99] புரிந்த பாவத்தின் பயனையும் நுகர்ந்தபின் மீண்டும் பிறந்து, பெருமானின் அறக் கருணைக்கு ஆளாகி, இங்கு மீண்டும் வாராப் பரமபதத்தை இனிமேல் அடைய இருப்பவர்கள்.

"கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"[100]

என்பதனால் கற்றும் மெய்ப் பொருளைக் காணாதவர் மற்றும் ஈண்டு வருவர் என்பது வெளிப்படை. இராவணன் கற்றும் "மெய்ம்மை நோக்கா மதியிலி"[101] ஆனதால் மீண்டும் பிறந்து இறைவன் அறக் கருணைக்கு ஆளாக உள்ளான்.

கற்றறிந்த அறிவால், அற வழி நின்றவர்கள் அறத்தின் நாயகனான இறைவனாம் மெய்ப்பொருளை அடைகிறார்கள். கற்ற அறிவால் நீதிநெறியாகிய அறவழி நில்லாதவர்கள் அறநாயகனாகிய இறைவன் எனும் மெய்ப்பொருளைக் காணாதவர்கள் ஆகின்றனர்.

கைங்கரியமே இறுதிப்பேறு

இவ்வுலகில் உயிர்கட்குப் பயன்கருதாமற் பணிபுரிவதே, அவ்வுலகில் இறைப்பேறு பெறுவதற்கு வாயில் ஆகும் என்பது வைணவ சமயத்தின் உயிர்நிலை யாகும்.

இராமாயணக் கதை மாந்தர்களில் அறம் வாழப் பயன்கருதாப் பணி எனும் மன்னுயிர்த் தொண்டு புரிந்தவர்கள் அனைவரும் இறைத் தம்பதிகளால், மனமார்ந்த பாராட்டுகளைப் பெறுகின்றனர்.

சாலை சமைத்த இலக்குவனுக்கு இராமன் மொழிநத பாராட்டு;[102] "வீடணன் தந்த வெற்றி"[103] என வீடணனுக்குத் தரும் பாராட்டு; "பொருந்துறப் புல்லுக"104 என்று அநுமனுக்கு இராமபிரான் தரும் பாராட்டு; "உன்னை என் தலையினால் தொழவேதகும்"[105] என்று அநுமனுக்குப் பிராட்டி தரும் பாராட்டு;" உன்னைப் பிரிவதாயின் எனக்கு நன்னுதல் சீதையால் தான் என்ன பயன்? என்று சுக்கிரீவனுக்கு இராமன் நல்கும் பாராட்டு ஆகிய இவையெல்லாம் அறம் வாழப் பணிபுரிதலாகிய கைங்கரியமே இறைவன் உகப்புக்குரிய பெரும்பேறு என்னும் வைணவ சமயக் கருத்தைக் கம்பர், உலகுக்குத் தன் காவிய வாயிலாய்க் காட்ட முனைந்த பாங்குகள் ஆகும்.

இறுதியில், இராமன் திருமுடி சூட்டு முடிந்தபின்பு, தன் உயிருக்குயிரான வீடணனை, அநுமனை, சாம்பனை, வாலிசேய் அங்கதனை, சுக்கிரீவனைப் பிரிய இயலாமல் இராமபிரான் நெஞ்சங் கலங்குகின்றான்.

> **"அநுமனை, வாலிசேயை, சாம்பனை, அருக்கன்தந்த**
> **கனைகழல் காலினானை, கருணையம் கடலும் நோக்கி**
> **நினைவதற்கரியது நும்மைப் பிரிக என்றல்; நீவிர் வைப்பும்**
> **எனது, அதுகாவற்கு இன்று என் ஏவலின் ஏகும் என்றான்"[87]**

ஆன்மாக்களைப் பிரிய இயலாமல் தவிக்கும் ஆன்ம நாயகன் இறைவன் என்பது இங்கு விளங்கும். "நான உன்னையன்றி இலேன் கண்டாய்! நாரணனே நீ என்னை யன்றி இலை" (நான்முகன் திரு.7) என்னும் திருமழிசைப் பிரான் திருவாக்கைக் கம்பர் பெருமானார் ஒரு நிகழ்ச்சி வாயிலாக நாடகப் படுத்தியுள்ள திறம் நினைந்து நினைந்து மகிழத்தக்கது.

அநுமன் முதலிய அவர்கள் நலங்கொள்பேர் உணர்வின் (பெருஞானத்தில்) மிக்கோராய் நன்னெஞ்சம் கொண்டோராதலின்.[108] "ஏய செய்தல் கடன்"[109] என்று இராம நாயகனிடமிருந்து பிரியா விடை பெற்றச் சென்றனராம். இறை விருப்பத்தின் வண்ணம் கைங்கரியம் புரிதலும், மன்னுயிர்களைக் காக்கும் அறம் புரிதலுமே உயிர்கள் பெறும் பேறு எனும் வைணவக் கோட்பாடு இறுதிப் பகுதியில் உயிர்களின் முடிந்த குறிக்கோளாகக் கம்பரால் தெளிவுறச் சுட்டப்பட்டிருத்தல் காணலாம். தாம் மட்டும வாழ்வதன்றி, மண்ணுலகம் அனைத்துமே அறநெறிப்படியே வாழவேண்டும்; அதற்குதவ வேண்டும் என்னும் விரிந்து பரந்த அருள்

நிலையே வைணவ சமயத்தில் இறுதி லட்சியமாக இலங்குகிறது என்பதனை இங்கு, கம்பர் மெய்ப்பித்தார் எனலாம்.

வானத்துப் பரம்பொருளை மண்ணுலகுக்கு அறம் நிறுத்தக் கூட்டி வருவதில் தொடங்கிய கம்பர்பெருமானாரின் இராமகாவியம்; காவிய மாந்தர்களையெல்லாம், தெய்விக மனிதர்கள் ஆக்கி, அவர்களை மன்னுயிர்களுக்கெல்லாம் தொண்டு செய்யப் போங்கள் என்று கட்டளை யிட்டு முடிகிறது.

இறை கைங்கரியம் என்பது மன்னுயிர்க்காக்கும் மாண்புறு சேவையே என்று கல்லெழுத்தாய்க் கற்பார் நெஞ்சில் நிலைநிறுத்தி விடை பெறுகிறார் கம்பர் என்னும் கவிச்சக்கரவர்த்தி.

முடிவுரை

இதுவரை இந்நூலால் நாம் உணர்ந்தவற்றை தொகுத்துக் கூறலாம். கம்பராமாயணம் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வைணவ சித்தாந்தக் கோட்பாடுகளையே முழுக்கக் கூறுகிறது.

இறைவனை யடைய வைணவம் இன்றியமையாதவை யெனக் கருதும் ஐவகை ஞானங்கள் எனப்படும் அர்த்த பஞ்சக ஞானத்தின் விளக்கமாகவே கம்ப ராமாயணம் விரிந்திருக்கிறது.

கம்பர், வைணவ ஆசாரியர்களில் கருத்துக்களை நன்கு உணர்ந்து தெளிந்த வைணவப் பேரறிஞர் ஆவார்.

உயிர், தன் இயல்பையுணர்ந்து, தலைவனாகிய இறைவனை உணர்கையில் இறைநெறியை நோக்கிய பயணம் தொடங்குகிறது. தொடங்கிய பயணத்தின் இடையே உலகியல் திரிபுணர்வு முதலான உயிர்ப்பகையாலும், வந்தேறிகளான காமம், வெகுளி, மயக்கம் முதலிய உட்பகைகளாலும் உயிரின் பயணம் தடையுறுகிறது.

இத்தடையை யுடைத்துப் பயணத்தைத் தொடர்தல் உயிரின் கடமை யாகிறது. இதற்கு, இறைவன் அருள் மிகமிக இன்றியமையாதது. அவ்வருள், இரக்கமும் அறநெறிச் செல்கையும் கொண்ட உயிர்கட்கே கிட்டுகிறது.

கரும, ஞான, பக்தியோக முறைகளைக் கைக்கொண்டு அறவழிச் செல்லும் உயிர்கட்கு இறையின் அருள் நோக்குக் கிட்டுகிறது. இந்நெறிகளைக் கைக்கெண்டாலும் இறுதியில் இறைவனைச் சரணடைந்தே அவனை எய்த இயலும்.

மேற்கூறிய கரும, ஞான, பக்தியோக நெறிகள் எல்லோர்க்கும் எளியவையல்ல. சீவர்களின் சிலரே இந்நெறிகளை வழுவாது கடைப்பிடித்தல் இயலும்.

இவற்றின் எய்தற்கு அருமை கருதி, சாதி, இன, மத, பேதமின்றி செல்வர் ஏழையர் பேதமின்றி எவ்விடத்திலும் எக்காலத்திலும் இறைவனை அடைய உரிய நெறியாகச் சரணாகதி நெறியை வைணவச் சான்றோர்கள் கண்டு காட்டியுள்ளனர்.

இதுவே நல்லாறு ஆகும் என்பது நம்மாழ்வார், இராமநுசர் முதலிய வைணவ ஆசாரியர்களின் கருத்தாகும். இதுவே, கம்பர் கருத்தும் ஆகிறது.

உயிர்கட்கும் இறைவனுக்குமாகப் பலன் கருதாமல் பணிபுரிவதே கைங்கரியம். அக் கைங்கரியமே பேறு. அப்பேற்றை அடைவதற்கு இறைவனிடம் அடைக்கலம் புகுதலே உரிய நெறி. அவ்வாறு அடைக்கல நெறியை அடைதற்குப் பக்தி நுழைவாயில்; அந் நுழைவாயிலை அடைவதற்குக் கருமமும் ஞானமும் படிகள்; அந்தப் படிகளை யடைய அறமும் ஒழுக்கமும் இரு கால்க ளாகின்றன என்பவை இக்காவியத்தின் வாயிலாகக் கம்பர் பெருமான் உலகுக்கு உணர்த்தும் அரிய செய்திகள் ஆகும்.

வைணவ சமயம் சார்ந்த இக்கருத்துக்கள், கம்ப ராமாயணத்தில் விளக்கமாக உணர்த்தப்பட்டிருக்கின்றன. இறை இயல்பு, உயிர் இயல்பு, நெறி இயல்பு, தடை இயல்பு, பேற்றின் இயல்பு எனும் ஐவகை இயல்புகளையுமே கம்ப ராமாயணம் விரித்து, நிகழ்வுகளின் வாயிலாகக் காவியமாக்கிக் காட்டி நிற்கிறது.

தெய்வங்களை மானிடராக்கி, மானிடர்களை தெய்வக்ளாக்கி, "மானுடம் வென்றது" என எக்களிக்கும் கவிஞர் பெருமானின் பெருந்திறல் நம்மை வியக்க வைக்கிறது. கம்பர் காட்டும் வைணவப் பேருலகு இவ்வையம் வாழவல்ல வழி துறை யனைத்தையும் தன்னகத்தே பொதிந்து வைத்துத் தளும்பி நிற்கிறது.

"யாரொடும் பகை கொள்ளலர் என்றிடின்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது"

கம்ப ராமாயணம் இன்றைய உலகுக்கு மிகவும தேவையான இந்தப் புனித வாக்கியத்தையும் தன்னுள் பொத்தி வைத்திருக்கிறது.

கம்பர் பெருமானாரின் இக்காவியம் கெட்ட போர்களால் தவிக்கிற இன்றை உலகுக்குப் புத்தி சொல்கிறது.

போர் ஒடுங்கிப் புகழ் ஒடுங்காத ஒருபெரும் பேருலகு நோக்கிக் கம்பர் பெருமானார் மானுடத்தை அழைக்கிறார். கரம்பிடித்துக் கசிந்துருகி "வாருங்கள்! மானுடங்காள்! மண்ணுலகில் வாழலாம்!" என்று மனம் உருகி வேண்டுகின்றார்.

யாரொடும் பகை கொள்ளாது, அந்த பேரன்புப் பேருலகை நோக்கி கம்பர் பெருமானாரின் கரங்களைப் பற்றி அவர் உடன் ஏகுதல் வையத்து வாழ நினைக்கும் மானுடப் பரப்பின் தவிர்க்க இயலாத கடன் ஆகிறது; உய்யும் நெறியாகிறது.

பிற்சேர்க்கை-1

சாங்கியமும் வைணவமும் கம்பரும்

இந்தியத் தத்துவங்களுள் மிகப் பழமை வாய்ந்தது சாங்கியத் தத்துவம் என்பர். உலக வரலாற்றில் முதன் முதலாக மனித சிந்தனையில் சுயேச்சையும் சுய நம்பிக்கையும் காணப்படுவது இந்தத் தத்துவத்தில்தான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். (பிரம்ம ரகசியம் - நல்லபெருமாள்)

வேதங்களைச் சாங்கிய தத்துவம் மறுக்காவிட்டாலும் வேதம் ஒப்புக் கொள்ளும் பரம்பொருளான இறைவனை அது ஏற்றுக் கொள்வதில்லை. சாங்கிய தத்துவத்தை ஒட்டியே யுள்ள தத்துவம் யோக தத்துவம். இரண்டையும் சேர்த்துச் சாங்கிய யோகம் எனக் கூறுவதும் உண்டு. கீதை இப்படித்தான் கூறுகிறது. கம்பர் இவ்விரண்டு தத்துவங்களையும் தெளிய உணர்ந்தவர். சாங்கியத்தின் 25 தத்துவங்களையும் கடந்து யோகத்தின் முடிவில் இறைவன் 26-ஆவது தத்துவமாக உள்ளான் என்று உணர்த்துகின்றார் கம்பர்.

"சாங்கியம் யோகம் என்று இரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன
ஆங்கவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ" (கம்ப: 6.3.60)

சாங்கிய யோகக் கருத்துக்கள், பரிணாமத்தால் வீங்கிப் பெருத்துள்ள உலகப் பொருள்கள் அனைத்தையும் வெவ்வேறாகப் பகுத்து மூலப்பொருள்களைக் காணும் தன்மை வாய்ந்தவை. அப்படிக் காணுங்கால், அக்கருத்துக்களின் மூலப் பகுதிக்கும் மேலான நிலையில் காட்சியளிப்பவன் இறைவன் என்று இங்கு, கம்பர் தெளிவுறுத்துகின்றார்.

"பூதம் ஐந்தின், விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடற்ற வீக்கம் கலங்குவது எவரைக் கண்டால் அவர்" பரம்பொருள் என்று சுந்தர காண்டத்தின் கடவுள் வாழ்த்திலும இக்கருத்தினையே கம்பர் குறிப்பிடுகின்றார்.

25 தத்துவங்கட்கு மேல் ஒன்றும் இல்லை என்பது சாங்கியம். 26ஆவது தத்துவம் ஒன்று உண்டு; அதன் பெயர் பரம்பொருள் என்பது வைணவம்.

நான்கு வேதமும், சாங்கிய மதமும்இணைந்திருப்பதால் பாஞ்ச ராத்திரம் என்ற பெயர் வைணவத்திற்கு வழங்கியதாக மகாபாரதம் சாந்தி பருவம் கூறுகின்றது. ஆகவே சாங்கிய தத்துவத்தை அப்படியே ஏற்று, அதற்கு மேலாக இறைத் தத்துவத்தைக் கண்ட சமயம் வைணவ சமயமாகும்.

"பகுதியின் உட்பயன் பயந்தது; அன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கது
புகுதி இல் லாதவர் புலத்திற்று ஆகுமா?"

இங்கு, சாங்கிய தத்துவத்தின் வளர்ச்சியால் (கம்ப: 6.3.69) வைணவம் உருவானத்தைக் கம்பர் தெளிவுறக் குறிப்பிடுவதைக் காணலாம். மூலப் பகுதியிலிருந்து காரிய உருவமாகிய உலகத்தைத் திருமாலாகிய (பகுதியின் உட்பயன்) பரம்பொருள் தோற்றுவித்தது. அந்த மூலப் பகுதியிலிருந்து (விகுதி) விகாரப்பட்ட பொருள்களின் மிகுதியே இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களும. இவையெல்லாம் (கபிலர் போன்ற) மேலோர்கள் வகுத்துளள தத்துவங்களில் வகுக்கப்பட்டுள்ளன. இது நுண்ணறிவு அற்றோரால் உணரத் தக்க தில்லை என்பது இப்பாடலின் கருத்து. இங்கு கம்பர் மேலும் மேலும் சாங்கிய யோகக் கருத்துக்களை விளக்கி, அவற்றின் எல்லை நிலமாயுள்ள பரம்பொருட் கொள்கையை வற்புறுத்துவது காணலாம்.

செயல்களே அவற்றின் பயனைத் தருகின்றன; யாரும் அப்பயனைக் கொண்டு வந்து தருவதில்லை என்பது சாங்கியக் கொள்கை. அறிவற்ற செயல்கள் எப்படி அப்பயனைச் செய்தானுக்குச் சேர்க்க வல்லது என்னும் வினாவிற்குத் தக்க விடை சொல்ல இயலாததால், நிரீச்சுவர சாங்கியம், பிற்காலத்தில் இறைவனோடு கூடிய சாங்கியம் என்னும் பொருள் தரும் "சேச்சுவர சாங்கியம்" ஆயிற்று. (தமிழும் தத்துவமும், சோ.ந. கந்தசாமி)

கம்பரும் கருமம் அதற்குரிய பயனைத் தானே தர இயலாது. இறைவனே தரவல்லான் எனபதனைத் தெளிவாக உணர்த்துகின்றார். அதற்குக் காரணமும் கூறுகிறார்.

கருமமும் கருமத்தின் பயனும் புருடனாலோ, உலகாலோ வாராமையால் இறைவனால் தரப்படுகின்றன என்பது உணரலாம் இதனை,

“கருமமும் கருமத்தின் பயனும் கண்ணிய தருமுதல் தலைவன்” (கம்ப: 6.3.64) என்று இறைவனைக் கம்பர் விளக்கமாகக் குறிப்பிடுகின்றார்.

சாங்கிய தத்துவத்தில் கடவுளுக்கோ, கருணைக்கோ இடமிலலையாதலால், சிந்தனையாளர்க்கே உரிய பொருளாகப் பரம்பொருள திகழ்ந்து வந்தது. பின்னர், மக்களின் மனக்குறையினை முறையிடும் நிலையில், முழுமுதற் கடவுளின தேவை உணரப்பட்டது. அந்த உணர்வின் பயனாக எழுந்தது வைணவ சமயம். அந்த வைணவத்தின் அடித்தளத்தில் வளர்ந்து எழுந்தவை கம்பரின் தத்துவக் கருத்துக்கள் என்பது தெளிவுறுகிறது.

பரிபாடலுக்கும் திருக்குறளுக்கும் உரை கூறும் பரிமேலழகர் பல சாங்கியக் கருத்துக்கள் தாம் உரை வரைந்த நூல்களின் மூலத்தில் உள்ளமையைக் கூறி விளக்கியுள்ள திறம் காணலாம். கபிலர், தொல்காப்பியர் என்ற பெயரில் சங்கப் புலவர்கள் இருந்துள்ளமையால், கபிலர் கண்ட சாங்கியக் கோட்பாடு சங்க காலத்திலிருந்தே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தமை புலனாகும். மணிமேகலையின் சாங்கியக் கருத்துக்கள், “சமயக் கணக்கர் தந் திறம் கேட்ட காதை”யில் அழகுற விளக்கப் பெற்றுள்மையை டாக்டர் சோ.ந. கந்தசாமி, “தமிழும் தத்துவமும்” என்ற நூலின் தெளிவாக விளக்கியுள்ளமை இங்கு நினையத்தகும்.

கம்பர் பெருமான், வேத உபநிடதங்களிலிருந்தும், பழந்தமிழர் ஞானத்திலிருந்தும் தம் தத்துவக் கருத்துக்களை வடிவமைத்துக் கொண்டவர் என்பது இவற்றால் நன்கு புலனாம்.

பிற்சேர்க்கை - 2

கம்பரின் இறைக்கொள்கை

"இறைவன் ஒருவனே" என்று வேதம் உரைக்கும். "ஏகம் ஸத்" என்பது மறைமொழி. மும் மூர்த்திகளையும் கடவுளாகக் கொள்ளும்போது, வேதம் விதித்த ஏக இறைக் கொள்கைக்கு முரண் தோன்றுவதைக கம்பர் உணர்கிறார்.

ஆகவே, இச் சிக்கலுக்கு விடை காணக் கம்பருக்கு, அவர் ஞான ஆசானாகிய நம்மாழ்வார் உதவுகிறார்.

"யாதும் எவர்க்கும் முன்னோனைத் தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதலை" எனும் நம்மாழ்வார் வாக்கு இச் சிக்கல் தீரக் கம்பருக்குக் கைகொடுத்து உதவுகிறது.

உலகச் செயல்களை நிகழ்விக்க, தானான தன்மையில் காக்கும் திருமாலாகவும், தான்வடிவு எடுக்கும் தன்மையில் அழிக்கும் சிவமாகவும், படைக்கும் நான்முகனாகவும் பரம்பொருளே வடிவெடுக்கிறது என்று இங்கு நம்மாழ்வார் உரைத்தார். இப்படிக் கொள்வதால், வேதம் கூறும் ஓர்இறைக் கொள்கைக்கு முரணிலாமையை உணரலாம். "தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதல்" என்னும் இத்தொடரையே "மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமே" என்று கம்பர் விளக்கினார்.

"முத்தேவரின் மூல முதற் பொருளாம் அத்தேவர் இம் மானுடர்" என்றும், "முப்பரம் பொருளிற்குள் முதலை மூலத்தை" என்றும் பலவிடங்களில் இக்கருத்தை அறுதியிடுவார் கம்பர் பெருமனார். இது, மறைமொழியோடு முரணாது இணைந்து செல்லும் கோட்பாடு என்பதனை,

"மறைகளும் முனிவர்யாரும் மலர்மிசையயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள், வில்லும் தூக்கி
அறைகழல் இராமனாகி, அறநெறி நிறுத்த வந்த
இறை"

என்று அறிவித்தார்.

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்தகாரணன், கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்"

காலாதீதனாகிய பரம்பொருளே, மும்மூர்த்திகளின் உருவங்களையும் விட்டு, வில் ஒன்று மட்டுமே ஏந்திக் கொண்டு, அயோத்திக்கு இராமன் உருவில் எழுந்தருளியுள்ளது என்னுமிடத்தில் கம்பரின் கடவுட் கொள்கை மலை விளக்கமாய் மிளிர்வது காணலாம்.

"அரன் அதிகன், உலகளந்த அரி அதிகன் எனவுரைக்கும்
அறிவிலோர்க்குப் பரகதி சென்றடைவு அரியது"

என்று கம்பர் கூறியுள்ளது சைவர், வைணர் எனும் இருதிறத்தாரையும திகைக்க வைப்பதாகும். கம்பரின் ஓர் இறைக் கோட்பாட்டை வைத்து நோக்குகையில் இத் திகைப்பு நீங்குகிறது.

பரம்பொருளின் அங்கங்கள்போல, அவதார மும்மூர்த்திகள் உள்ளனர் எனும் கருத்தை உளங்கொண்டு நோக்குகையில் கம்பர் கடவுட் கோடபாடு இங்கு மேலும் தெளிவுறுவதைக் காணலாம். அரி என்பது பரம்பொருளின் அவதார மூர்த்தத்தைக் குறிப்பது என்பதை "உலகளந்த அரி" என்பதனால் குறிப்பிடுகின்றார். மாவலியின் ஆணவம் அழிக்க எடுத்து, உலகளந்து தன் பெருமையைக் காட்டிய அவதாரம் அது என்பதனை அவ்வடைச் சொல்லால் உணர்த்துகின்றார். திருமால் அவதார மூர்த்தியாயும் விளங்குவதை,

"திருமால், நான்முகன், செஞ்சடையோன் என்ற இவர்கள் நம்
பெருமான் தனமையை யார் அறிகிற்பார்?"

என்று நம்மாழ்வார் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இங்கு திருமால் தனியாகவும், எம்பெருமான் தனியாகவும் ஆழ்வார் தெளிவுறக் குறிப்பிடுவதனால், திருமால் அவதார மூர்த்தி யென்பதும் எம்பெருமான் பர வாசுதேனாகிய மூலப்பரம் பொருள் என்பதும் நம்மாழ்வார் கருத்தாதல் வெளிப்படை.

காக்கும் கடவுள் அவதாரம் எடுக்கையில், அவதார மூர்த்தியைத் திருமால் என்பது உண்டு என்பது இத்திருவாய் மொழியால் உணரலாம். இதனால்தான்,

"செங்கண்மால், நான்முகன், சிவன் என்றே கொலோ
எங்கள் நாயகனை நினைத்தி ஏழை நீ?"

என்று சீதை கேட்டாள்.

இங்கு, "செங்கண்மால்" என்றது உலகு காக்க எடுக்கும் பரம்பொருளின் அவதாரத்தைக் குறித்தது.

"நேமியோ, குலிசியோ, நெடுங்கணிச்சியோ
தாமரைக் கிழவனோ"

அவ்விராமன் என இராவணன் கேட்ட கேளவிக்கு விடையாக,

"சொல்லிய அனைவரும் அல்லன்; சொன்ன அப்,
புல்லிய வலியனோர் ஏவல் பூண்டிலேன்"

என்று அநுமன் விடையிறுத்தான். பரம்பொருளின் ஆற்றலை ஒப்பிடுகையில் அவதார மூர்த்திகள் புல்லிய வலியினர் ஆகின்றனர். அதனால் தான் இராமனை "மூவரும் அல்லன்" என்பான் அநுமன். மூவரும் இணைந்த மூலப்பொருள் இராமன் என்பதுஅநுமனின் கருத்தால் தெளிவுறச் சுட்டப்படுகிறது.

ஓர் இறைக் கோடபாட்டை உணராதவர்கள், தனித்தனித் தெய்வப் பெயர்சொல்லி, எந்தெய்வம் உந்தெய்வம் என்று தெய்வத்துள் உயர்வு தாழ்வு சொல்லி இடர்ப்படுவர். உடம்பின் அங்கங்கள் ஒன்றுக்கொன்று பெருமை பாராட்டிக் கொள்வது போன்றது இது. உடலின் உறுப்புக்களைவிட உடலே பெரியது. அவதார மூர்த்திகளைவிட அவற்றினை உருவாக்கும் மூலப் பரம்பொருள் பெரியது. இக்கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கியே கம்பர் பெருமான். "அரன், அதிகன், உலகளந்த அரி யதிகன்" என வாதிடுவோரை "அறிவிலார்" என்று வன்சொல் இட்டு உரைத்தார். அவர் பரம்பொருளின் பெருமைகளை அறியாமல் முழுப்பொருளை நோக்காமல் உறுப்புக்களைப் பெரிதென, யானை கண்ட குருடர் போல் வாதிடுவார் ஆதலால், அவாகள பேறெய்த இயலாது என்பார். "பரகதிசென்றடைவரிய பரிசேபோல்" என்பார். இரணியன், "மால்கொல்ல ஆவி தீர்கலென்" என்பான். மூலத்திருமால் வேறாகவும், அவனுடைய அம்ச அவதாரங்கள் வேறாகவும் கூறுவது கம்பநாடர் வழக்கு எனும் உ.வே.சா. பதிப்புக் குறிப்பு இங்கு நினைவு கூரத்தக்கது.

"மால்கொல்ல ஆவி தீர்கலென்" என்னுமிடத்தில் மால் எனும்சொல் அவதார மூர்த்தியைக் குறிப்பிடல் தெளிவு. திருவோடு கூடிய பரவாசுதேவனே பரம்பொருள். அவனே இராமனாக வந்தான் என்பதனை, "செங்கண் விற்கை இராமன் அத்திரு நெடுமாலே" என்பதனால் குறிப்பர். திருமால் என்பது அவதார மூர்த்தியாகிய திருமாலைக் கருதுவது "திருநெடுமால்" என்பது பரம்பொருளாகிய பரவாசுதேவனைச் சுட்டுவது என்பது கம்பர் கருத்தாதல் தெளிவாம். "தோள் கண்டார் தோளே கண்டார்" எனும் பாடலில், "ஊழ்கண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்" என்பார். இங்கு ஊழ்கண்ட சமயத்து என்பது, 'அவதாரம் எடுத்த காலத்து' என்னும் பொருளது. அறங் காக்கும் முறைப்படி அவதாரங்கள் எடுத்த காலத்து என்பதே இங்கு உண்மைப் பொருளாகும். பரம்பொருளின் அங்கங்களாய் அவதாரங்கள் நிகழ்கின்றன. அந்த அங்கங்களையே பரம்பொருளாகக் கருதுவார் போல மிதிலை நகரப் பெண்கள் இராமனின் ஒவ்வோர் அங்கங்களையே கண்டு மயங்கி நின்றார்கள் என்று தன் ஓர் இறைக் கோட்பாட்டை நுட்பமாகவும், தெளிவாகவும் கவிஞர் பெருமானார் உரைக்கின்றார்.

> **"தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனார்க்கும், அயனார்க்கும்**
> **செங்கண் மாற்கும்**
> **ஏவர்க்கும் வலியானுக்கு என்று உண்டாம் இறுதி**
> **என ஏமாப்புற்றேன்**
> **ஆவற்கண் நீ உழந்த அருந்தவத்தின் பெருங்கடற்கும் வரம்**
> **என்று ஆன்ற**
> **காவற்கும் வலியான் ஓர் மானுடன் உளன் என்னக்**
> **கருதினேனோ?"**

என்று மண்டோதரி புலம்புவாள்.

இங்கே, சிவனார்க்கும் அயனார்க்கும் செங்கண்மாற்கும் வலியான் ஒருவன் உளன், அவனே மூன்று கடவுளாய் முளைத்தெழுந்த மூலப்பொருள் அந்த மூலப் பரம்பொருளே மானுட இராமனாய் மண்மிசை நடந்தவன் என்பது தெளிவுறச் சுட்டப்படுதல் காண்க.

> **"சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலோ**
> **அவனோ அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்**
> **தவனோ என்னில் செய்து முடிக்கும் தரன் அல்லன்**
> **இவனேதான் அவ்வேத முதற்காரணன் என்றான்"**

என்றுரைக்கும் இராவணன், பரம்பொருளின் ஆற்றலை இறுதிப் பொழுதில் இவ்வாறு உணர்கின்றான். சிவனோ அல்லன், நான்முகன் அல்லன் என

உரைத்தவன் திருமாலோ அல்லன் என்றும் உரைத்தமை உணரத்தக்கது. அவதார மூர்த்தியாகிய திருமாலோ இவன்? அலலன். நான் பெற்ற மெய்வரங்களை யெல்லாம் அழித்து நிற்க அவனுக்கு ஆற்றலில்லை. ஆம் இவனேதான் வேதங்களால், அனைத்திற்கும் முதற் காரணம் எனக் கூறப்படும் மூலப் பரம்பொருள் ஆவான் என அறுதியிடுகின்றான் இராவணன். இங்கு, இராவணன் வாயில் கம்பர் தம் கருத்தை அறுதியிடுகின்றார் என்று உணர்தல் வேண்டும். "நாராயணனே அனைவர்க்கும் ஆத்மாவாயிருப்பவன்; மற்ற தேவதைகள் எல்லாம் அவனுக்கு அங்கங்கள்" எனும் வேதக் கருத்தை உளங்கொண்டு, "இவனே தான் அவ்வேத முதற் காரணன்" என்று கம்பர் கூறியுள்ளார். பரமன் தான் "ஆழி அங்கமலக் கையான்" ஆயினான்.


"ஆழி அங் கமலக் கையான் ஆகிய பரமன் என்னா ஏழையர் உள்ளம் என்ன இருண்டன திசைகள் எல்லாம்" பரம்பொருள் திருமாலாக ஆகியது என்று கொள்ளாதவர் உள்ளம் அஞ்ஞானத்தால் இருண்டுகிடப்பதுபோல் திசைகள் இருண்டு கிடந்தன எனக் கவிக் கூற்றாய்க் கூறுவதால், மூலப் பரம்பொருளே திருமால் ஆகியது எனும் கம்பர் கடவுட கொள்கை தெளிவாதல் காணலாம். "தழைத்த தண்டுளவினோன் தலைவன் அல்லன்" என்று அழைத்தவன் அடையும் பாவத்தை நான் அடைவேன் ஆகுக எனும் பரதன் கூற்றாலும் மூலப் பரம்பொருளாகிய அத்தலைவன் ஒருவனே திருமாலும் ஆனவன் எனும் இக்கருத்தை விளக்குகின்றார்.

இறைமைத் தன்மை படைத்தல், காத்தல், துடைத்தல் என மூன்று தெய்வ நிலைகளைத் தன்னகத்தே கொண்டதாகும். இம்மூன்று நிலைகளையும் ஒருங்கு கொண்டதே முழுமையுற்ற பரம்பொருள். அதுவே பூரணப் பொருளாக இயலும்.

இராவணன் எண்ணற்ற தவ முயற்சிகளால் வரம்பிகந்த ஆற்றல் பெற்று, நெறிகடந்து வாழத் தொடங்கினான். அவன் அழிக்கப்பட வேண்டியவனாகி விட்டான். அவன் தேவர்களையும் மும்மூர்த்திகளையும் தோற்பிக்கும் அளவிற்குப் பேராற்றல் பெற்றவனாகி விட்டான். எனவே மூவகைத் தெய்வ நிலைகட்கும் ஊற்றாயுள்ள மூல முதற்பொருளே இராமவேடந் தாங்கி, காக்கும் தொழிலையுடைய திருமாலின் அவதாரமாக மண்ணிற் பிறந்தது என்பது கம்பர் கொள்கை.

"இலங்கை வேந்தன், தானுடை வரத்தை யெண்ணித்
தருமத்தின் தலைவர் தாமே
மானுட வடிவம் கொண்டார் என்பதோர் வார்த்தை யிட்டார்."

என்பது கம்பர் வாக்கு. “எக்கோடியாராலும் வெலப்படாய்” என இராவணன் பெற்றுள்ள வரத்தை எண்ணி இந்த வரங்களை யெல்லாம் ஆக்கவும் அழிக்கவும் வல்ல, தருமத்தின் தலைவனாம் பரம பத நாதனாகிய பரம்பொருளே மானிட வடிவம் கொண்டு புறப்பட்டுள்ளான் என்பதனால், வரங்கட்கு நாயகனும், அறத்திற்கு நாயகனுமாகிய பரம்பொருளின் பண்பு இங்கு சுட்டப்படுகிறது.



பரம்பொருளே அறத்தின் நாயகனாதலால் அவன் செயல்கள் எல்லாம் அறங்களாகின்றன. அதனால், வாலிவதமும் அறமாகிப் போவதையுணரலாம்

“தீயன இராமனே செய்யுமேல் அது
தாய்செயல் அல்லவோ”

என்பதும் இதனால்தான். வேறெதையும் நோக்காமல் தருமம் நோக்குவதே பரம்பொருளின் இயல்பு என்பார் “தருமம் நோக்கிய தோன்றால்” என்பார் கம்பர்.

எனவே, அறங்காக்கும் பெருமானாகிய பரம்பொருளாம் ஏக இறைவன், பல அவதாரங்களை எடுக்கின்றான் என்பதும், பரம்பொருள் ஆகிய அவனையே நாராயணன் என வேதம் உரைத்துள்ளது என்பதும் நம்மாழ்வார் போன்றோர் அப் பரம்பொருள் வழிபாட்டையே திருமால் வழிபாடாகக் கொண்டனர் என்பதும் உணர்ந்த கவிஞர் பெருமானார் கம்பர் பரம்பொருளாக அம்மூலத் திருநெடுமாலையே கொண்டார் என்பதும் எல்லாத் தெய்வங்களும் அவன் திருவடிவமே என்பதனால் எந்தத் தெய்வத்தையும் வெறுக்காத பேருள்ளம் கொண்டவர் கம்பர் என்பதும் புலனாகும்.

பிற்சேர்க்கை - 3

உயிர்களின் பகுப்பு


- உயிர்கள்
  - தளைக்குட்பட்டோர் (பத்தர்கள்)
    - புனித நூல்களினால் வழிநடத்தப்படுவோர் (மனிதர்கள், கடவுள்)
      - உலகப் பயன்களை நுகர விழைவோர் (புபுட்சு)
        - பொருள், இன்பம் விழைவோர் (அர்த்தகாமர்)
          - பல கடவுளைச் சார்ந்து நிற்போர் (வேதாந்த பரர்)
          - ஒரே கடவுளைச் சார்ந்து நிற்போர் (பகவத் பரர்)
            - துன்புறுவோர் (அர்த்தர்)
            - அறிவு விழைவோர் (சிக்ஞாசர்)
            - பொருளை நாடுவோர் (அர்த்தார்த்தி)
        - நன்மையை நாடுவோர் (தர்மபரர்)
      - வீடுபேறடைய விழைவோர் (முமுட்சு)
        - தன்னைத் தூயநிலையில் உணர விழைவோர் (கைவல்யபரர்)
        - இறைவனுடன் கூடியிருக்க விழைவோர் (மோட்சபரர்)
          - அன்புவழிப் பட்டோர் (பக்தர்கள்)
            - அன்பினை வழியாக ஏற்றோர் (சாதனை பக்தர்)
            - அன்பினை முடிவாகக் கொண்டோர் (சாத்திய பக்தர்)
          - புகல் வழிப்பட்டோர் (பிரபன்னர்கள்)
            - உறுதிப் பொருள்களை இறைவனிடமிருந்தே பெற விழைவோர் (ஏகாந்திகள்)
              - முன்வினைப்பயன் நுகர்வின் முடிவில் இறைவனுடன் கூடியிருக்க விழைவோர் (திருப்கர்)
              - புகலுறுதி மேற்கொண்டவுடன் இறைவனுடன் கூடியிருக்க விழைவோர் (ஆர்த்தர்)
            - அறிவு, அன்பு மட்டுமே இறைவனிடமிருந்து பெறவிழைவோர் (பரமை கரந்திகள்)
    - புனித நூல்களினால் வழிநடத்தப்படாதவை (பயிரினங்களும், விலங்கினங்களும்)
  - வீடு பேறு பெற்றோர் (முத்தர்) (நித்தியர்)
  - ஒரு பொழுதும் தளைக்குட் படாத நிலையானவர்

நூல்: வைணவ மரபும் மெய்ப்பொருளியலும்

பிற்சேர்க்கை - 4

பஞ்சீகரணம்

தன் மாத்திரைகள்



- வைணவ மரபும் மெய்ப்பொருளியலும்

பிற்சேர்க்கை - 5

நூலடைவு

கோபாலகிருஷ்ணமாசாரியார் வை. மு. கோ. உரை

1. கம்பராமாயணம்

பாலகாண்டம் 7ஆம் பதிப்பு 1964

அயோத்தியா காண்டம் 6ஆம் பதிப்பு 1966

ஆரணிய காண்டம் 4ஆம் பதிப்பு 1965

கிட்கிந்தா காண்டம் 5ஆம் பதிப்பு 1967

சுந்தர காண்டம் 8ஆம் பதிப்பு 1970

யுத்த காண்டம் முதற்பகுதி 6ஆம் பதிப்பு 1970

யுத்த காண்டம் 2ஆம் பகுதி 6ஆம் பதிப்பு 1963

வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் கம்பெனி, சென்னை - 5.

வழி நூல்கள்

2. உ.வே.சா. பதிப்புகள்

பாலகண்டம் 1ஆம் பதிப்பு 1949

அயோத்தியா காண்டம் 1ஆம் பதிப்பு 1951

ஆரணிய காண்டம் 1ஆம் பதிப்பு 1959

கிட்கிந்தா காண்டம் 1ஆம் பதிப்பு 19691

சுந்தர காண்டம் 1ஆம் பதிப்பு 1957

யுத்த காண்டம் முதற் பகுதி 1ஆம் பதிப்பு 1962

யுத்த காண்டம் 2ஆம் பகுதி 1ஆம் பதிப்புபு 1962
யுத்த காண்டம் 3ஆம் பகுதி 1ஆம் பதிப்பு 1963
யுத்த காண்டம் 4ஆம் பகுதி 1ஆம் பதிப்பு 1963
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

3. அக்னி ஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார், வரலாற்றில் பிறந்த வைணவம் 1973 ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.

4. "அண்ணா"

1. ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாம - பாஷியம் 1986
2. உபநிஷத் ஸாராம் 4 தொகுதிகள் 1978
3. புருஷ சூக்தம் 1980
4. திரு அருள்மொழி 1956
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-4.
5. அரங்க. சீனிவாசன் "வைணவ தத்துவஞான அடிப்படைகள்" 1984
பாரி நிலையம், சென்னை.
6. அருணாசலக் கவிராயர். "இராம நாடகம்"
பி. இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை.
7. அருணாசலம்ப.ப. "வைணவ சமயம் - ஓர் அறிமுகம்" 1982
பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.
8. ஆசுகவிராயர், "அரிச்சந்திர புராணம்" 1932
இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை.
9. ஆழ்வார்கள், "நாலாயிரப் பிரபந்தம்" 1952
பி. இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை.
10. இராமஸ்வாமி ராமநுஜதாசர், "ஸ்ரீ வைஷ்ணவம்" 1986
ஆழ்வார்கள் அமுத நிலையம், சென்னை-2.
11. இராமசாமி.மு. "படிவங்கள் எப்படியோ?" 1987
கம்பன் கழகம், இராசிபுரம்.
12. இராமசாமிப் புலவர்.சு.அ. "தொகையகராதி", 1969
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
13. இராமானுஜாசாரியார்.ம.வீ. "ஸ்ரீ மஹாபாரதம்" 1923
கமெர்சியல் பிரஸ், சென்னை.

14. இராமலிங்க சுவாமிகள், "திருவருட்பா" 1972
சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர்.
15. இளங்கோவடிகள் "சிலப்பதிகாரம்" - நாட்டார் உரை 1956
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
மேற்படி நூல், அடியார்க்கு நல்லார் உரை உ.வே.சா. பதிப்பு 1944
கபீர் அச்சுக்கூடம், சென்னை.
16. கதிரேசஞ் செட்டியார். மு. "கௌடில்யம்" இரு தொகுதிகள்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்னை.
16. அ. எம்பெருமானார் "கத்ய த்ரயம்" 1986
ஸ்ரீரங்கம் எம்.எஸ். ராஜகோபாலாசார்யார் தமிழ் மொழி பெயர்ப்புடன் இரண்டாம் பதிப்பு ஸ்ரீ விசிஷ்டாத்வைதப் ப்ரசாரிணி சபா சென்னை-4.
17. கந்தசாமி முதலியார்.ச. "பஞ்ச மய கோச விவேகம்" 1963
பாரி நிலையம், சென்னை.
18. கமலக் கண்ணன். இரா.வ. "உலகப் பெருங்கவிஞர்கம்பர்". 1984
மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
19. காரப்பங்காடு வேங்கடாச்சாரியார்
1. "ஸ்ரீ ராமாயண ஸாரம்" 1984
2. "சீதா சரிதம்"
கோதா நிலையம் வெளியீடு, சென்னை.
20. காளமேகப் புலவர். "காளமேகம் தனிப்பாடல்கள்" 1973
பாரி நிலையம், சென்னை.
21. கிருஷ்ணசாமி அய்யங்கார். எஸ். 1. முதல் திருவந்தாதி வியாக்கியானம்
2. இரண்டாந் திருவந்தாதி வியாக்கியானம்
3. மூன்றாந் திருவந்தாதி வியாக்கியானம்
4. நான்காந் திருவந்தாதி வியாக்கியானம்
5. திருப்பாவை வியாக்கியானம்
6. கத்ய வியாக்கியானங்கள்
7. யதீந்திர மத தீபிகை
8. சாதிமத ஆராய்ச்சி 1977

9. திருப்பல்லாண்டு வியாக்கியானம்
10. பெரிய திருமொழி வியாக்கியானம்
11. ஸ்தோத்திர ரத்ந ஜிதந்தே வியாக்கியானம்
12. திருமாலை வியாக்கியானம்
13. சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் 1984
14. குருபரம்பரா பிரபாவம்.

22. சத்யசாயிபாபா அவதாரமொழி அமுதம் 1971
பிரசாந்தி நிலையம், அனந்தப்பூர்.

23. சிவப்பிரகாச சுவாமிகள் "பிரபுலிங்க லீலை" 1954
மயிலை மடம், மயிலம்.

23.அ. சீத்தலைச் சாத்தனார் "மணிமேகலை" 1955
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

24. சுப்பு ரெட்டியார். ந. "முத்திநெறி" 1982
பாரி நிலையம், சென்னை.

25. சேக்கிழார், "பெரிய புராணம்" 1964
காசி மடம், திருப்பனந்தாள்.

26. சைவ சந்தான குரவர்கள் - "மெய்கண்ட சாத்திரம்" 14, 1972
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

27. ஞானசம்பந்தன்.அ.ச. "கம்பன் - புதிய பார்வை" 1986
வானதி பதிப்பகம், சென்னை.

28. ஞானசுந்தரம், தெ. "வைணவ உரை வளம்" 1989
தாய்மை பதிப்பகம், சென்னை.

29. திருநாவுக்கரசர் "தேவாரம்" 1962
காசி மடம், திருப்பனந்தாள்.

30. திருவேங்கட ஸ்வாமிகள், "பிரபோத சந்திராதயம்" 1913
மீனாட்சி அச்சியந்திர சாலை, பெரியகுளம்.

31. துரைசாமி பிள்ளை ஔவை.சு. "புறநானூறு" உரை 1954
நூற்பதிப்புக் கழகம், சென்னை.

31அ. துர்க்கா தாஸ் ஸ்வாமி, "விஷ்ணு புராணம்" 1955
பிரேமா பிரசுரம், சென்னை.

32. நச்சினார்க்கினயர் உரை. 1. "பத்துபபாட்டு" 1931 கேசரி அச்சுக்கூடம், சென்னை.

2. "தொல்காப்பியம் - அகத்திணையியல்" உரை 1963

3. "கலித்தொகை" 1953

4. சீவக சிந்தாமணி உரை 1953

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

33. நரசிம்மன். பி.ஆர். "வைணவ மரபும் மெய்ப்பொருள் இயலும்" 1987 விஷ்ணு பதிப்பகம், மதுரை.

34. "பட்டினத்துப் பிள்ளையார். திருப்பாடல்கள்" ஆர்.ஜி.பதி. கம்பெனி, சென்னை.

35. பரிமேலழகர். 1. "திருக்குறள் உரை" 1951

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

2. "பரிபாடல்" மூலமும் உரையும் 1918

கமெர்சியல் அச்சுக் கூடம், சென்னை.

36. பார்த்தசாரதி.டி.எஸ். "ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனைகள்" 1976. ஹிக்கின்பாதம்ஸ், சென்னை.

37. பிள்ளைப் பெருமாள் அய்யங்கார். "அஷ்டப் பிரபந்தம்" சே. கிருஷ்ணமாச்சாரியார், சென்னை.

38. பிள்ளை லோகாசாரியார். "ஸ்ரீவசன பூசணம்" 1957 தி.கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்.

39. பின்பழகிய ஜீயர். "வார்த்தா மாலை" எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், புத்தூர், திருச்சி.

40. பி.ஸ்ரீ. "ஸ்ரீராமாநுஜர்". 1973 பாரி நிலையம், சென்னை.

41. புகழேந்திப் புலவர். "நளவெண்பா" 1958 சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

42. புருஷோத்தம நாயுடு. "திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்" 10 தொகுதிகள்

தொகுதி 1 1957

தொகுதி 2 1957

தொகுதி 3 1959

தொகுதி 4 1960

தொகுதி 5 1962

தொகுதி 6 1955

தொகுதி 7 1956

தொகுதி 8 1957

தொகுதி 9 1958

தொகுதி 10 1959

சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

43. பெரியவாச்சான் பிள்ளை, "ஸ்ரீ ராமாயண பாரதாதி தனிச் சுலோகங்கள்" - இரு பகுதிகள்

எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், புத்தூர், திருச்சி.

44. மகாகவி பாரதி, "பகவத் கீதை" 1958

நர்மதா பதிப்பகம், சென்னை.

45. மணவாள மாமுனிகள் - "ஆசார்ய ஹிருதயம்" - இரு பகுதிகள் 1965

சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

46. மணவாளன். கா.சே. "வைணவ சமயச் சான்றோர்களின் வாழ்க்கை அனுபவங்கள்" 1981

ஆனந்த பப்ளிகேஷன்ஸ், சென்னை.

47. முத்துசிவன். ஆ. "அசோக வனம்" 1956

ஸ்டார் பிரசுராலயம், சென்னை-5.

48. ரா. ராகவையங்கார் "ஆழ்வார்கள் காலநிலை" 1985

மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

49. இராதா கிருஷ்ண பிள்ளை. ம. "பிற்கால வைணவம்" 1987

அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை.

50. ராஜகோபாலாச்சாரியார், "கத்ய த்ரயம்" 1986

ஸ்ரீ விசிஷ்டாத் வைத ப்ரசாரினி ஸபா, சென்னை.

51. லக்ஷ்மணன்.கி. "இந்தியத் தத்துவ ஞானம்" 1987

பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

52. வங்கீபுரம் ரங்கசுவாமி அய்யங்கார். "ஸ்ரீமத் இராமாயண ரஹஸ்யங்கள்" 1987

வங்கீபுரம் தேசிகாச்சாரி, திருச்சானூர்.

53. வடிவழகிய நம்பி தாசர், "ஸ்ரீ இராமாநுஜ வைபவம்" 1988
கண்ணன் சுவாமி, சென்னை.

53அ. ஸ்ரீ வாதூல ஸ்ரீநிவாச்சாரியஸ்வாமி "யதீந்திரமதி தீபிகை"
பதிப்பாசிரியர். புத்தூர், திருச்சி.

54. ஸ்ரீநிவாச அய்யங்கார் சி.ஆர். "ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்" -
இரு தொகுதிகள் 1984
தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.

55. ஸ்ரீநிவாச அய்யங்கார் ஸ்வாமி, "புருஷ சூக்த வியாக்கியானம்"
எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், புத்தூர், திருச்சி.

56. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.
1. "இராவண தத்துவம்" 1974
2. "ஸ்ரீமத் பகத் கீதை" 1966
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த் துறை.

57. ஸ்ரீ ராமுலுதேசிகன்.ஏ. "கோதை தமிழ் அமுதம்" 1983
ஆழ்வார்கள் அமுத நிலையம், சென்னை,2.

58. ஸ்ரீ வரதராஜ அய்யங்கார் "பாகவதம்" - ஐந்து தொகுதிகள். 1989
ஆர். கண்ணன் சுவாமி, சென்னை-11.

59. வேதாந்த தேசிகர் "தேசிகப் பிரபந்தம்"
லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை. மூன்றாம் பதிப்பு 1982

தொடர்புள்ள தமிழ் நூல்கள்

1. அரங்கராஜன்.இரா.
"நம்பிள்ளை உரைத்திறன்" 1986

2. இஸ்மாயில் மு.மு. அடைக்கலம் 1989
வானதி பதிப்பகம், சென்னை.

3. கந்தசாமி சோ.ந. "தமிழும் தத்துவமும்" 1976
மணிவாசகர் நூலகம், சென்னை.

4. காரப்பங்காடு வெங்கடாசாரிய சுவாமிகள். "ஸ்ரீ வைஷ்ணவம்" 1976
அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

5. சாண்டில்யன். "மதப்புரட்சி செய்த மகான் ஸ்ரீ ராமாநுஜர்" 1986
வானதி பதிப்பகம், சென்னை.

6. சிவகாமி.ச. "கம்பன் ஆய்வடங்கல்" 1978
தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

7. சுப்பு ரெட்டியார்.ந. வைணவ உரை வளம் 1985
பாரி நிலையம், சென்னை.

8. தேசிகாச்சாரியார் உ.வே. "சித்தாந்த த்ரய ஸங்க்ரஹம்" 1965
விசிஷ்டாத்வைத பிரசாரிணி சபா, மாம்பலம்.

9. நரசிம்ம தாதாசார்யார், "ஸ்ரீ பாஷ்ய ஸாராஸ்வதினி" 1988
ஸ்ரீ ஹயக்ரீவ வித்யா பீடம், சென்னை.

10. ர.சு. நல்லபெருமாள், "பிரும்ம ரகசியம்" 1977
வானதி பதிப்பகம், சென்னை.

11. பி.ஸ்ரீ. "தொண்டக்குலமே தொழுகுலம்" 1959
கலைமகள் காரியாலயம், சென்னை.

12. மதி சீனிவாசன், "சடகோபர் கண்ட சமயம்" 1986
எழுத்தாளர் பதிப்பகம், சென்னை.

13. ராமகிருஷ்ணன் எஸ். 1. "கம்பனும் மில்டனும்" 1970
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
2. "கம்ப சூத்திரம்" 1986
கம்பன் கழகம், சென்னை.

14. "யதீந்திர மத தீபிகை" - ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

15. "ஜீவப் பிரகரணம்"

தொடர்புள்ள ஆங்கில நூல்கள்

1. Aiyar V.V.S. "Kamba Ramayanam - A study" 1970
Bharathiya Vidya Bhavan, Bombay.

2. Manickam V.S.P. "A Glimpse of Tamilology" 1968
The Academy of Tamil Schoolers of Tamil Nadu, Trichy.

3. Parthasarathy.R. "Ramanujacharya" 1969

3a. Ramachandran. Essays of Philosophy
Raman & Co., Madras.

4. Sathiyamoorthi Iyyangar. S. "What is Visistadvaita system of Philosophy?"
Hindu Dharma Paripalana Sabha, Bombay.

5. Shakum Narain - "Symbolisms in Ramayana" 1988
Bharatiya Vidya Bhavan, Bombay.
6. Srinivasa Dasa "Yatindra Mata Dipika" 1978
Sri Ramakrishna Math, Madras.
7. Srinivasa Raghavan. "Visistadvaita" 1985.
Trimala Trupathi Devasthanam, Tirupathi.
8. Subramaniam.K. "Mahavir. Sri.Hanuman" 1987
Sri Ramakrishna Tapovanam, Thirupparaithurai.
9. Thirumani. C. "An Exploration of Origin of Kambaramayanam" 1981
Kovala Nilayam, Trichy.

இதழ்கள்

1. "சப்தகிரி" இதழ்கள் 1989
திருமலை தேவஸ்தான வெளியீடு, திருப்பதி.
2. "திருமால்" இதழ்கள் 1989-90
திருமால் அலுவலகம், சென்னை

1. வைணவ மெய்ப்பொருள்

அடிக்குறிப்புகள்

1. இராமஸ்வாமி ராமாநுஜ தாசர். ஆர். ஸ்ரீ வைஷ்ணவம், பக்-26
2. நம்மாழ்வார் திருவாய்மொழி - 1.1.3.
3. ராதா கிருஷ்ண பிள்ளை.ம. பிற்கால வைணவம், பக்-5.
4. அரங்க சீனிவாசன். வைணவ தத்துவஞான அடிப்படைகள், பக்-21.
5. கந்தசாமி. சோ.ந. தமிழும் தத்துவமும், பக்-339.
6. தொல். பொருள். அகத் 5
7. தொல். பொருள். புறத் 5

7அ. திருவாய் 4.4.8

7ஆ. பெரும்பாண்

8. பரிபாடல் - 1,2,3,4,13,15.

8அ. மேலது

8ஆ. "காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" பெரும்பாண் - 371.2.

"நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்

நான் முக ஒருவற் பயந்த பல்இதழ்த்

தாமரைப் பொகுட்டு. மேலது. 402.4

"செங்கட் காரி கருங்கண் வெள்ளை பொன் கட்பச்சை, பைங்கண் மாஅல்."

பரிபா 3.81-2.

9. கலித் - முல்லைக் 1.3
10. மதுரைக். அடி 591

10அ. திருக்கு 620

10ஆ. மேலது 1103.

10இ. மேலது 1103.

10ஈ. மேலது 627.

10உ. மேலது 626.

11. சிலப் 17. ஆய்ச்சி 35, 37.
12. மணிமே 27.98-99.
13. நாலாயிர. பெரியாழ் - 435.
14. அரங்க சீனிவாசன். வைணவத் தத்துவஞான அடிப்படைகள் பக் 38.
15. சுப்புரெட்டியார்.ந. முத்திநெறி, பக் 39.
16. அரங்க சீனிவாசன். வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், பக் 38-39.
17. நல்லபெருமாள் ர.ச. பிரும்ம ரகசியம், பக் 212.
18. இராமஸ்வாமி ராமாநுஜ தாசர். ஆர். ஸ்ரீ வைஷ்ணவம், பக் 43.

18அ. திருவாய் - 1.1.1.

19. மேற்படி - பக் 46.
20. திருவாய்மொழி 1. பக் 13.
21. ஸ்ரீவசன பூஷணம்.
22. ஞானசுந்தரம்.தெ. வைணவ உரைவளம், பக் 286.
23. நான். திருவந். வியாக். பக் 101.
24. இலட்சுமணன்.கி. இந்தியத் தத்துவ ஞானம் - பக் 330.

24அ. கம்ப 6.37.104.

24ஆ. திருவாய் 10.7.10.

25. ஞானசுந்தரம்.தெ. வைணவ உரைவளம், பக் 282.
26. நரசிம்மன்.பி.ஆர். வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக் 87.

26அ. கம்ப 6.9.8.

26ஆ. திருவாய் 2.8.4.

27. மேற்படி பக் 88.
28. ஞானசுந்தரம்.தெ. வைணவ உரைவளம், பக் 293.
29. அருணாசல கவுண்டர்.கு.

தமிழ்ப்பண்பாட்டில் வைணவம், பக் 36.

30. திருவாய் - 1.1.1.

30அ. பரிபாடல் - 3.81.2.

31. இராமஸ்வாமி ராமாநுஜதாசர், ஆர். ஸ்ரீவைஷ்ணவம், பக் 60.

32. ஸ்ரீவசன பூஷணம். கு.42.

33. திருவாய் - 6.10.9.

34. அரங்க சீனிவாசன் - வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், பக் 206.

35. சுப்புரெட்டியார்ந. முத்திநெறி, பக் 6-7.

35அ. அரங்க சீனிவாசன் - வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், பக் 144.

36. அருணாசலம்.மு. வைணவ சமயம், பக் 50.

36அ. சுப்புரெட்டியார்.ந. முத்திநெறி, பக் 97.

37. இரண்டாந் திருவந்.2

37அ. டாக்டர் ப. அருணாசலம். வைணவ சமயம், பக் 50.

37ஆ. வேதாந்த தேசிகர். தேசிகப் பிரபந்தம் - 254.

37இ. இரண். திருவந். உரை. அவதாரிகை. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் திருவாய் - 5.7.7. விவரணம் பக் 13.

38. இராமநுச. நூற். 66

38. சுப்பு ரெட்டியார்.ந. முத்தி நெறி, பக் 99.

39அ. இரண்டாந் திருவந். அவ தாரிகை. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் விவரணம்.

40. தேசிகப் பிரபந்தம். பக் - 200.

41. சுப்பு ரெட்டியார்.ந. முத்தி நெறி. பக் 144, 145.

42. ஸ்ரீவசன பூஷணம்.கு. ஆசாரிய. 1 பக். 17

43. திருவாய் 1.1. ஈடுமகாப் பிரவேசம் - 1.

44. மேற்படி. தனியன்.

45. மேற்படி 1.1. ஈடுமகாப் பிரவேசம் - 1.

46. ரங்கசாமி ஐயங்கார். இராமாயண ரகசியங்கள், பக் 16.

47. இராகவையங்கார். இரா. ஆழ்வார்கள் காலநிலை - பக் 280.

2. இறை இயல்பு

அடிக் குறிப்புகள்

கம்ப ராமாயண மேற்கோள்களில், (வை.மு.கோ. பதிப்பு) முதல் எண் காண்டத்தையும், இரண்டாம் எண் படலத்யையும், மூன்றாம் எண் பாடல் எண்ணையும் குறிக்கும்.

1. இராமஸ்வாமி இராமாநுஜ தாசர், ஸ்ரீவைஷ்ணவம், பக் 57.

2. அண்ணங்கராசாரியார். திருநெடுந்தாண்டகம் - திவ்வியார்த்ததீபிகை, பக் 50.

3. கம்ப. 6.3.4

4. கம்ப. 6.18.252

4அ. கம்ப. 2.10.43

4ஆ. கம்ப. 1.5.6

4இ. கம்ப. 1.5.11

4ஈ. கம்ப. 1.5.12

4உ. திருவாச 21.1

5. கம்ப. 1.5.12

6. கம்ப. 1.3.2

6அ. கம்ப. 6.9.8

6ஆ. கத்யத் திரயம், பக் 44.

7. கம்ப. 3.1.38

8. கம்ப. 1.5.11

9. கம்ப. 1.5.6

10. கம்ப. 6.36.245

11. திருவாய் ஈடு. 4.3.3
12. கம்ப. 1.5.24
13. கம்ப. தற்சிறப்பு. 11
14. திருவாய். ஈடு. 1.3.1.
15. திருவாய். 1.3. முன்னுரை
16. அண்ணங்கராசாரியார். திரு விருத்தம். திவ். தீபிகை. பக் 7.8
17. திருவாய் 6.9.1.
18. கம்ப. 4.10.98
19. கம்ப. 1.13.81
19அ. திருவாய் 3.5.5
20. இராம கிருஷ்ணன் எஸ்.ஆர். கம்பனும் மில்டனும்
21. கம்ப. 2.1.96
22. பெரியாழ். 1.2.6
23. பெருமாள் திரு. 8.1
24. கம்ப. தற்சிறப்பு. 11
25. கம்ப. 1.12. முன்னுரை
26. கம்ப. 4.7.148
27. திருவிருத். 1
28. பரிபாடல் 3.72
29. கம்ப. 6.21.200
30. கம்ப. 6.15.153
31. திருவாய். ஈடு. 1.7.7
32. திருவாய் 6.3.1
33. கம்ப. 6.15.17
34. கம்ப. 6.3.166
35. திருவாய். ஈடு. 1.3. முன்.
36. திருவாய். ஈடு. 1.3.2
37. திருவாய். ஈடு. 1.3.2
38. கம்ப. 4.7.81
39. திருமா. உரை. 10
40. கம்ப. 2 கடவுள்
41. வான். 2.135
42. திருவாய். 4.10.2.
43. கம்ப. 5.13.80.
44. கம்ப. 4.7.148
45. திருவாய். ஈடு. 4.10.2
46. திருப்பா. வியாக். பக் 28.
47. திருப்பா. வியாக். பக் 28.
48. திருப்பா. வியாக். பக் 28.
49. திருப்பா. வியாக். பக் 28.
50. பெரியதிருவந். 53.
51. கம்ப. 4.3.10.
52. திருவாய். ஈடு. 1.3. முன்
52அ. கம்ப. 6.6.42
53. திருவாய். ஈடு. 1.3. முன்
54. கம்ப. 3.1.58
55. திருவாய். 2.8.7
56. கம்ப. 1.22.37
57. கம்ப. 1.32.38
58. கம்ப. 1.8.35
58அ. தசாவதாரத்துவங்கள். பக் 41
59. திருப்பா. வியாக். பக். 51
60. திருப்பா. பக் 50
61. கம்ப. 1.8.35
62. கம்ப. 1.8.22.
63. சப்தகிரி திருப்பதி தேவஸ்தான வெளியீடு. டிசம். 88
63அ. தசாவதாரத் தத்துவங்கள் பக் 34
64. கம்ப. 6.36.84
65. திருவருட். 5297
66. திருக். பரிமே. 345
67. திருக். பரிமே. 3 உரை.
68. கம்ப. 5.2.234
69. கடோப. 2.20
70. கடோப. 4.6
71. கடோப. 4.7
72. கடோப. 2.20
73. கம்ப. 6.3.124
74. கடோப. 6.14
75. கம்ப. 6.3.29
75அ. கம்ப. 6.3.29
75ஆ. கம்ப. 6.3.62
76. கம்ப. 6.6.70
77. இரண்டாந். 99
78. கம்ப. 3.2.27
79. கம்ப. 2. கடவுள்

80. திருவாய். 1.1.7
81. கம்ப. 2.8.11
82. கம்ப. 6.3.43
83. கம்ப. 2.12.81
84. கம்ப. 6.3.43
84அ. வார்த்தாமாலை. 12 ஆம் வார்த்தை
85. கம்ப. 2.1.95
86. கம்ப. 2.1.97
87. 2.2.23
88. வரதராஜூலு நாயுடு.நா. வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள், பக் 21.
89. கம்ப. 1.21.50
90. கம்ப. 1.11.2
91. தனிச்சு. 1. பக். 129
92. குருபரம்பரா வைபவம், எதிராஜ ராமாநுஜதாசன், பக்.94
93. கம்ப. 2.11.42
94. கம்ப. 5.3.234
95. வையாபுரிப் பிள்ளை.எஸ். தமிழர் பண்பாடு, பக் 159
96. வையாபுரிப் பிள்ளை.எஸ். தமிழர் பண்பாடு, பக் 159
97. கம்ப. 1.20.20
98. கம்ப. 2.6.1.
98அ. கம்ப. 1.10.39
99. கம்ப. 2.6.1
100. தனிச்சு. 1.117
101. கம்ப. 1.10.65
102. கம்ப. 1.20
103. சீனிவாசன். அரங்க.வைணவ தத்துவ ஞான அடிப்படைகள், பக் 137
104. கம்ப. 3.5.18
105. கம்ப. 3.5.22
106. தனிச்சு. 1 பக் 192
107. கம்ப. 3.7.54
108. தனிச்சு.1 பக் 192
109. கம்ப. 3.3.3
110. தனிச்சு. 1. பக் 193
111. கம்ப. 6.15.30
112. திருவாய்.ஈடு. 4.9.6
113. கம்ப. 1.21.74
114. கம்ப. 1.11.20
115. கம்ப. 1.19.25
116. கம்ப. 4.7.78
117. கம்ப. 1.19.19
117அ. தனிச்சு. 1 பக் 188
118. வான். ஆரண்ய. 26.36
119. கம்ப. 1.10.39
120. கம்ப. 6.36.245
121. கம்ப. 3.7.56
122. தனிச்சு. 1. பக் 183
123. கம்ப. 3.5.61
124. தனிச்சு. 1. பக் 176
125. கம்ப. 2.1.72
126. திருக். 1103
127. சாந்தோக்.
128. கம்ப. 2.3.103
129. கம்ப. 2.3.103
130. கம்ப. 6.15.30
131. கம்ப. 3.7.56
132. கம்ப. 1.5.82
133. சிலம்பு. புறஞ். 65. "அருந்திறல பிரிந்த அயோத்தி போல"
134. திருவாய். ஈடு. 1.7.10
135. கம்ப. 1. தற்சி. 1
136. திருவாய். ஈடு. 1.6.4
137. திருப்பா. வியாக். பக் 35
138. திருவாய். ஈடு. 1.7.7
139. கம்ப. 4.7.34
140. கம்ப.4.11.133
141. கம்ப. 3.8.156
142. கம்ப. 6.37.129
143. திருப்பா. வியாக். பக் 36
144. கம்ப. 3.9.70
145. கம்ப. 6.11.38
146. திருப்பா. வியாக். பக் 36

147. கம்ப. 6.4.146
148. கம்ப. 2.1.85
149. திருப்பா. வியாக். பக் 36
150. கம்ப. 5.13.80
151. கம்ப. 4.7.148
152. திருப்பா. வியாக். பக் 36
153. கம்ப. 2.4.233
153அ. கம்ப. 1.21.95
154. திருப்பா. வியாக். பக் 36
155. கம்ப. 6.6.61
156. கம்ப. 6.30
157. திருப்பா. வியாக். பக் 37
158. கம்ப. 4.7.81
159. கம்ப. 3.1.54
160. திருப்பா. வியாக். பக் 37
161. கம்ப. 3.3.19
162. கம்ப. 4.3.75
163. கம்ப. 6.6.62
164. கம்ப. 4.1.33
165. கம்ப. 6.13.2
166. கம்ப. 6.14.256
167. திருவாய். ஈடு. 9.2.10
168. திருவாய். ஈடு. 1.7.10
169. கம்ப. 6.2.146
170. திருக். பரிமே. உரை. 773
171. கம்ப. 4.3.3
172. கம்ப. 4.3.5
173. கம்ப.1.8.38
174. திருவாய். ஈடு. 1.5.3
175. திருவாய். ஈடு. 1.5.3
176. சிலம்பு 17.35
177. திருக். 610
178. கம்ப. 6.6.5
179. திருவாய். ஈடு. 1.2.6
180. கம்ப. 6.21.200
181. திருவாய். ஈடு. 1.2.6
181அ. திருவாய். ஈடு. 1.2.6
182. யதீந். பக் 157
183. வான். 2.42
184. கம்ப. 1.5.134
185. திருவாய். ஈடு. 1.4.1
186. கம்ப. 5.3.25
187. கம்ப. 6.8.29
188. கம்ப. 6.21.81
189. கம்ப. 6.21.227
190. கம்ப. 6.23.66
191. திருக். பரிமே. உரை 249
192. கிருஷ்ணசாமி ஐயங்கார்.எஸ். சாதிமத ஆராய்ச்சி, பக் 21, 22
193. பரிபாடல் - 1.
194. கம்ப. 4.7.121
195. கம்ப. 3.2.30
196. கிருஷ்ணசாமி ஐயங்கார்.எஸ். சாதிமத ஆராய்ச்சி, பக் 41
197. பரிபா. 2.36
198. கம்ப. 6.3.146
199. கம்ப. 3.7.4
200. கம்ப. 6.15.160
201. கம்ப. 6.36.201
202. கம்ப. 6.36.204
203. திருவருட். தெய்வமணி. 21
204. கம்ப. 6.21.111
205. கம்ப. 2.4.100, 102
206. கம்ப. 2.5.2
207. திருவாய். ஈடு. மகாப்பிரவேசம் 3
208. கம்ப. 3.2.27
209. கம்ப. 3.2.27
210. திருப்பா. வியாக். பக் 37
211. கம்ப. 1.11.2
212. கம்ப. 4.7.148
213. கம்ப. 3.2.27
213அ. கம்ப. 5.13.81
241. சிலம்பு. 17 ஆராய்ச்சி. 35
215. திருப்பா. வியாக். பக் 37
216. திருவாய். 1.3.2
217. திருவாய். ஈடு. 1.3.2
218. திருவாய். ஈடு. 1.6.5
219. திருவாய். ஈடு. 1.1.3

220. திருவாய். ஈடு. 1.7.6
221. திருவாய். ஈடு
222. திருவாய். ஈடு.
223. கம்ப. 1.5.103
224. பெருமாள் திரு. 8.1.
225. பெரிய திருமொ. 11.7.6
226. திருவாய். ஈடு. 1.6.1
227. திருவாய். ஈடு.
228. திருவாய். ஈடு. 1.6.1
229. கம்ப. 2.6.43
230. திருவாய். ஈடு. 1.6.3
231. கீதை. 9.26
232. திருவாய். ஈடு. 1.6. முன்
233. திருவாய். ஈடு. 1.6.1
234. கம்ப. 2.6.39
235. குருபரம். சரமோ. பக் 528, 518, 530
236. கம்ப. 2.6.39
236அ. கம்ப. 2.6.43
237. கம்ப. 6.4.146
238. பெருமாள் திரு. 8.9
239. கம்ப. 4.7.26
240. திருமா. 43
241. திருமா. 43
242. கம்ப. 4.3.35
243. கம்ப. 6.11.38
244. கம்ப. 4.7.102
245. திருச்சந்த. 61
246. அருணாசலக் கவிராயர். இராம நாடகக் கீர்த்தனைகள், பக்.10
246அ. கம்ப. 1.5.134
247. கம்ப. 1. தற்சி. 2
248. விஷ்ணுபு. 6.5.885
249. வான். 1.7
250. ஸ்தோத்திர.ர. 18
251. வான்.கி. 16.21
252. கம்ப. 3.2.29
253. திருவாய். ஈடு. 9.6.4
254. திருவாய். ஈடு. மகாப்பிரவேசம் 1
255. கம்ப. 2.9.58
256. கம்ப. 2.12.31
257. கம்ப. 2.12.31
258. கம்ப. 2.1.543
258அ. கம்ப. 2.1.40
259. திருவாய். ஈடு. மகாப்பிரவேசம் 1
260. கம்ப. 6.15.17
261. கம்ப. 2.5.80
262. கம்ப. 4.7.26
263. கம்ப. 3.3.16
26. கம்ப.6.38.27
265. கம்ப. 1. தற்சி. 11
266. கம்ப. 1.3.5
267. கம்ப. 3.8.13
268. கம்ப. 1.5.119
269. திருக். 356
270. கம்ப. 5.3.20
270அ. கம்ப. 5.3.20
271. கம்ப. 6.3.2
272. கம்ப. 6.3.17
273. கம்ப.6.3.16
274. கம்ப. 6.3.147
275. கம்ப. 6.3.124
276. திருவாய் 2.8.9
277. திருவாய். ஈடு. 2.8.9
278. திருவாய் 2.9.6.4
279. நற். கடவுள் 1
280. கம்ப. 6.3.126
281. கீதை. 9.4.10.3
282. தைத்திரிய ஆனந்த். 6
283. கம்ப. தநிசி. 3
284. நாரா. சூக். பக் 3
285. நாரா. பக் 3
286. கம்ப. 6.3.29
287. திருவாய் 3.1.6
288. கீதை. 7.8
289. கம்ப. தற்சி. 2
290. கம்ப. 6.6.70
291. கம்ப. 6.6.71

292. கம்ப. 6.18.285
293. கம்ப. 6.3.62
294. திருப்பா. வியாக். பக் 7
295. நாரா. சூக். பக் 29
296. திருவாய் 1.1.7
297. திருவாய் 3.1.10
298. கம்ப. 3 கடவுள். 1
299. கம்ப. 3. கடவுள். 1.1.19
300. பிருஹ. 4.6.22
301. திருவாய். ஈடு. 1.1.2
301அ. கம்ப. 3.10.49
302. திருப்பா. வியாக். பக் 23
303. திருப்பா. வியாக். பக் 37
304. கம்ப. 1.11.2
305. கம்ப. 1.11.2
305அ. கம்ப.6.3.166
305ஆ. பெரிய திரு. 53
306. கம்ப. 6.3.124
307. கம்ப. 5.13.80
308. கம்ப. 3.2.30
309. கம்ப. 6.36.86
310. கம்ப. 6.37.32
311. கம்ப. 1.6.6
312. கம்ப. 6.36.86
313. கம்ப. 6.3.76
314. கம்ப. 6.36.86
315. கம்ப. 3.1.55
316. ருண்ட 2.7
317. பிருஹ 6.5.23
318. கம்ப. 6.3.61
319. திருப்பா. 12
320. கம்ப. 3.6.187
321. கம்ப. 2.1.42
322. திருவருட். 4128
323. திருவாய் 6.7.1
324. திருக். 77.
325. கம்ப. 3.2.28
326. திருக். 4
327. திருவருட். 4128
328. கம்ப. 3.2.29
329. திருவாய். ஈடு. 1.6.3.
330. ஜிதந்தே 1.2
330அ. கம்ப. 6.3.125
330ஆ. பரிபா. 4.54
331. திருவாய். ஈடு. 1.6.3
332. கம்ப. 6.2.85
333. கம்ப. 4.7.147
334. திருவாய். ஈடு. 1.3. முன்
335. கம்ப. 4.7.147
336. திருக். பரிமே. 423
337. திருவாய். ஈடு. 1.5.1
338. கம்ப. 1. தற்சி. 2
338அ. விஷ்ணு சகஸ். 487
339. திருக். பரிமே. கட. முன்.
339அ. 6.18.270
339ஆ. கம்ப. 2.4.152
339இ. கம்ப. 5.1.61
339ஈ. கம்ப. 2.4
339உ. கம்ப. 2.4.137
339ஊ. கம்ப. 6.4.114
339எ. 5.3.9
339ஏ. 6.3.61
339ஐ. 1.21.86
340. கம்ப. 3.1.50
341. கீதை 4.8
342. கம்ப. 6.9.13
343. கம்ப. 4.4.16
344. கம்ப. 6.36.202
345. கம்ப. 4.11.83
345அ. கம்ப. 2.12.89
346. கம்ப. 3.1.51
347. திருக். 10
348. வில்லி. மூன்றாம். 1
349. கம்ப. 3.1.52
350. கம்ப. 6.13.21
351. கம்ப. 5.4.43
352. திக். 5
353. புறம். 152

354. கம்ப. 1.11.26
354அ. கம்ப. 3.7.14.
"வந்தான் இவனாகும் அவ்வல் வில் இராமன்"
355. சீவக. சிந். 1643.
"மராமரம் ஏழும் எய்த வாங்குவில் தடக்கை வல்வில் இராமன்."
356. திருவரங்கத்து. 41
357. பெரியதிரு. 5.1.4. "அரக்கர் தலைவன்தன் வற்பார்திரள் தோள் ஐந்நான்கும் துணித்த வல்வில் இராமன்."
358. கம்ப.உ.வே.சா.ப. கிட்கிந். 174
359. கம்ப. 1. தற்சி. 4
360. கம்ப. 4.7.81
361. கம்ப. 6.31.346
362. ஸ்ரீ தியாக கீர்த். 232. பக் 173
363. கம்ப. 4.7.57
364. கம்ப. 6.3.77
365. திருச்சந்த. 10
366. கம்ப. 1.19.6
366அ. திருவாய் 1.8.3
367. திருவாய். ஈடு. 2.2.1
368. கம்ப. 6.18.218
369. கம்ப. 6.16.67
370. கம்ப. 2.8.1
371. மகாபா. அனுசா. பக் 873-881
372. விஷ்ணு. சகஸ். முக. 1
373. கம்ப. 3.7.108
374. ஸ்ரீவசன.சூ. 196
375. திருப்பா. வியாக். பக் 37
376. திருப்பா. வியாக். பக் 37
376அ. கம்ப. 1.11.2
377. திருப்பா. பக்
378. கம்ப. 6.14.256
379. கம்ப. 3.5.109
380. கம்ப. 6.37.204
381. கம்ப. 1.20.12
382. திருவாய். ஈடு. 1. பக் 82
383. கம்ப. 6.1. கடவுள்
384. கம்ப. 6.3.114
385. புருஷ.சூ. பக் 7
386. பரிபா. 3.41-45
387. கிருஷ்ணசாமி ஐயங்கார்.எஸ். கம்பனின் சமயம், பக் 111, 112
388. கம்ப. 3.10.44
389. திருவாய். ஈடு. 2.5.10
390. திருவாய். ஈடு. 2.5.10
391. திருவாய். ஈடு. 2.5.10
392. திருவாய். ஈடு. 2.5.10
393. திருவாய். ஈடு. 2.5.10
394. கம்ப. 6.3.120
395. கம்ப. 1.5.82
396. ராகவ ஐயங்கார்.ரா. ஆழ்வார்கள் காலநிலை, பக் 287
397. திருவாய் 4.5.1
398. திருவாய் 7.10.1
399. கம்ப. 3.1. கடவுள்
400. திருக். பரிமே
401. தத்துவத்திரயம். ஈசுவரப்.
401அ. கம்ப. 5.21.226
402. கம்ப. 6.21.226
403. பிள்ளைப். திருவரங்கத்து 42
404. கம்ப. 3.2.27
405. கம்ப. 6.3.75
406. திருவாய் 1.1.3
407. திருவாய் 1.1.3
408. ஈசாவாஸ்ய. 6
409. கம்ப. 2.3.108
410. திருவாய். ஈடு. 3.4.10
411. திருவாய். ஈடு. 3.4.10
412. திருவாய். ஈடு. 3.4.10
413. கம்ப. 6.3.52
414. கீதை. பக். 10.20
415. கம்ப. 3.1.45
416. விஷ்ணு. சகஸ்.சு. 971
417. திருவாய். ஈடு. 1. பக் 66
418. கம்ப. 1.10.147
419. கம்ப. 2.9.62

420. கீதை.பாரதி பதிப்பு. முன்னுரை, பக் 6
421. சீனிவாசன். அரங்க. வைணவ தத்துவஞான அடிப்படைகள், பக் 137
422. கம்ப. 6.3.157
423. திருவாய். ஈடு. 10.10.1
424. திருவாய். ஈடு. 10.10.1
425. திருவாய். ஈடு. 10.10.1
426. யுத்த. கம்ப. 6.3.58
427. கீதை. 7.6
428. கீதை. 10.39
429. கம்ப. 4.1. கடவுள்
430. திருக். 1
431. கம்ப.6.18.254
431அ. ஈடு. 1.1.1. பக் 67
432. ஈடு. 3.1.54
433. திருவாய். 1.1.4
434. கம்ப. 6.37.101
435. கம்ப. 6.37.102
436. கம்ப. 3.1.49

3. உயிர் இயல்பு

அடிக் குறிப்புகள்

1. கம்ப. 6.6.62
1அ. அ. இலட்சுமணன்.கி. இந்தியத் தத்துவ ஞானம், பக் 212
2. ஈடு. 10.10.1
3. ஈடு. 10.10.1
4. ஈடு. 10.10.1
4அ. அக்னிஹோத்திரம் தாதா சாரியார். வரலாற்றில் பிறந்த வைணவம், பக் 186
5. கம்ப. 4.1.2
6. கம்ப. 4.1.2
7. திருக். 357
8. கம்ப. 2.1.33
9. கம்ப. 4.7.147
10. ஆசாரிய 1.46
11. கம்ப. 2.4.157
12. திருப்பா. வியாக். பக் 29
13. தனிச்சு. 1. பக் 97
14. கம்ப. 2.4.152
15. கம்ப. 2.8.52
16. கம்ப. 6.21.209
17. கம்ப. 3.9.94
18. கம்ப. 4.2.31
19. தனிச்சு. 1. பக் 97
19அ. கம்ப. 2.4.157
20. கம்ப. 3.9.83
21. தனிச்சு. 1. பக் 98
22. கம்ப. 2.8.53
23. கம்ப. 3.9.94
24. கம்ப. 3.9.77
24அ. கம்ப. 3.9.77
25. கம்ப. 6.37.126
26. கம்ப. 2.3.107
27. கம்ப. 4.7.134
28. கம்ப. 5.3.9
28அ. கம்ப. 5.6.18
29. கம்ப. 5.6.18
29அ. திருவாய். ஈடு. 5.4.7
30. வார்த்தா. பக் 38-39
31. கம்ப. 6.30.64
32. கம்ப. 2.3.59
33. கம்ப. 5.2.219
34. கம்ப. 5.2.220
35. கம்ப. 1. தற்சிறப்பு
35அ. கம்ப. 2.3.59
36. கம்ப. 1.19.20
37. கம்ப. 2.1.1
38. கம்ப. 5. கடவுள்

39. கம்ப. 6.6.69
40. கம்ப. 1. தற்சிறப்பு
41. கம்ப. 4.16.48
42. கம்ப. 6.6.72
43. நான்முகன். 7
44. கம்ப. 2.3.91
45. திருவாய். 7.5.1
46. கம்ப. 2.3.91
46அ. கம்ப. 6.2.40
47. கம்ப. 2.6.11
48. கம்ப. 2.6.12
49. கம்ப. 4.2.15
50. கம்ப. 6.4.125
51. யதீந்திர ஜீவப்பிர. பக் 185
52. யதீந்திர ஜீவப்பிர. பக் 185
53. யதீந்திர ஜீவப்பிர. பக் 185
54. விஷ்ணு 4.6.7
55. கம்ப. 2.4.102
56. யதீந்திர. பக் 188
57. கம்ப. 4.7.105
48. கம்ப. 4.7.107
59. கம்ப. 4.7.112
60. யதீந்திர ஜீவப்பிர. பக் 189
61. யதீந்திர ஜீவப்பிர. பக் 190
62. யதீந்திர ஜீவப்பிர. பக் 190
63. கம்ப. 2.10.60
64. கம்ப. 5.2.23
65. கம்ப. 1. தற்சிறப்பு. 8
66. கம்ப. 6.37.159
67. கம்ப. 6.18.251
67அ. கம்ப. 4.2.14
67ஆ. 1.5.20.22
67இ. குருபரம்பரா. அநந். பக் 270
67ஈ. கம்ப. 1.5.20
67உ. கம்ப. 1.5.22
67ஊ. கம்ப. 6.23.23
67எ. திருவாய் 4.3.8
67எ. கம்ப. 3.3.21
67ஏ. திருவாய் 4.9.6
67ஐ. கம்ப. 6.13.4
67ஒ. கம்ப. 3.3.12
68. 1.7.34
69. கம்ப. 1.7.35
70. கம்ப. 2.3.12
71. கம்ப. 6.30.6
72. நாராயண ஜீயர் - திருமால் - சூலை இதழ் 1989
73. இராகவையங்கார்.மு. ஆழ்வார் கள் காலநிலை, பக் 242
74. திருவரங்கக். அஷ்டப்பிரபந்தம் பக் 52
75. திருவரங்கக். அஷ்டப்பிரபந்தம், பக்15
76. கம்ப 2. சபரி
77. கம்ப. 6.18. 251. வை.மு.கோ. உரை
78. கம்ப. 3.1.1
79. ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர. பக் 105
80. ஸ்ரீபுருஷ. பக் 46
81. முதல் திரு. 14
82. முதல் திரு. 15
83. சுவாமி சித்பவானந்தர், இராவண தத்துவம், பக் 2
84. கம்ப. 5.4.77
85. சுவாமி சித்பவானந்தர், இராவண தத்துவம், பக் 3
86. கந்தசாமி முதலியார்.ச. பஞ்சமய கோச விவேகம், பக் 40
87. சுவாமி சித்பவானந்தர், இராவண தத்துவம், பக் 3
88. கம்ப. 5.4.77
89. சுவாமி சித்பவானந்தர், இராவண தத்துவம், பக் 8
90. கம்ப. 6.2.102
91. கம்ப. 4.3.19
92. சுவாமி சித்பவானந்தர், இராவண தத்துவம், பக் 9
93. கம்ப. 5.4.53
94. கம்ப. 5.4.54
95. கம்ப. 6.2.77

96. கம்ப. 6.37.143
97. கம்ப. 6.16.87
98. கம்ப. 6.13.4
99. கம்ப. 5.4.45
100. கம்ப. 6.36.222
101. Shakun Narain - Symbolism in Ramayana, P.48
102. நரசிம்மன் பி.ஆர். வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக் 67
103. கம்ப. தற்சிறப்பு. 8
104. கம்ப. ஆரணிய கடவுள்
105. நரசிம்மன் பி.ஆர். வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக் 67
106. கம்ப. 3.10.44
107. திருநா. தேவா. தனித்திரு. 3
108. திருநா. சிவபு. 18
109. திருநா. தேவா. வினா விடை 10
109அ. திருக்கு 396
110. யதீந்திர. தீ. பக் 146
111. திருவாய். ஈடு. 1. பக். 70
112. கம்ப. 1.7.71
113. கம்ப. 1.2.55
114. கம்ப. 1.1.20
115. கம்ப. 1.1.17
116. கம்ப. 1.19.4
117. 6.27.55
118. கம்ப. 3.9.3
119. கம்ப. 6.3.120
120. கம்ப. 6.4.114
121. கம்ப. 2.6.55
122. கம்ப. 5.4.77
123. கம்ப. 3.7.86
124. நான்முகன். 53
125. நான்முகன் வியாக். 53
126. திருக். 2
127. கம்ப. 6.8.30
128. கம்ப. 6.6. மகுட
129. கம்ப. 3.8.221-224
130. திருப்பா. 29
131. கம்ப. 2.6.53, 54
132. கம்ப. 2.11.42
133. கம்ப. 4.17.26
133அ. கம்ப. 3.7.223
134. கம்ப. 3.8.51 (உ.வே.சா. பதிப்பு, கம்பன் கழகப் பாடம்)
135. கம்ப. 3.7.225
136. கம்ப. 3.1.60
137. கம்ப. 2.1.7
138. கம்ப. 6.25.5
139. திருக். 50

4. நெறி இயல்பு

அடிக் குறிப்புகள்

1. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 49
2. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 49
3. முதல் திருவந். 70
4. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 50
5. 4அ. கம்ப. 6.14.213
6. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 50
7. திருவாய். ஈடு.1. பக் 107
8. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 51
9. அருணாசலம். மு. வைணவ சமயம், பக் 51
9அ. கம்ப. 3.1.47
10. கீதை 18.66
10அ. வார்த்தா மாலை பக் 15
11. திருவாய். தனியன்

12. கம்ப. 6.15.141
13. கம்ப. 6.6.71
13அ. கம்ப. 1.18.1
14. கம்ப. 3.10.40
15. கம்ப. 2.2.47
16. கம்ப. 6.18.271
17. சத்திய சாயி அவதாரமொழி அமுதம், பக் 28
17அ. கம்ப. 6.18.265
18. கீதை. 3.20
19. கம்ப. 5.3.75
20. கம்ப. 2.1.72
21. திருக். 981
22. கீதை. 5.10
23. கம்ப. 2.6.26
24. கம்ப. 5.13.81
25. திருக். 981
26. புறநா. 134
2. கம்ப. 1.7.65
28. திரக். 36
28அ. கம்ப. 6.4.11
29. கம்ப. 6.14.252
30. கம்ப. 4.7.132
30அ. கீதை 4.8
31. கம்ப. 3.3.22
32. கம்ப. 2.2.46
32அ. திருக். 899
32ஆ. கம்ப. 2.4.88
32இ. கம்ப. 6.6.80
33. கம்ப. 6.27.58
34. கம்ப. 6.9.45
35. கம்ப. 6.15.357
36. கம்ப. 6.4.100
37. கம்ப. 1.2.36
38. கம்ப. 5.2.23
39. கம்ப. 1.4.75
40. கம்ப. 4.7.112
41. கம்ப. 4.7.112
42. திருக். 131
43. கம்ப. 2.12.24
44. கம்ப. 2.10.14
45. கம்ப. 3.10.56
46. திருக். 34
47. கம்ப. 1.9.85
48. கம்ப. 2.12.55
49. கம்ப. 1.11.27
50. திருக்.8
51. கம்ப. 6.5.2
52. கம்ப. 6.26.173
53. கம்ப. 6.26.177
54. கம்ப. 6.26.172
55. கம்ப. 2.5.29
56. திருக். 31
57. கம்ப. 2.5.20
57ஆ. கம்ப. 6.30.154
58. கம்ப. 2.5.27
59. கம்ப. 2.1.26
60. திருக். 25
61. சிலப். ஊர் காண். அடியார் நல் உரை
62. கம்ப. 4.14.46
63. கம்ப. 4.14.48
64. சிலப். ஊர் காண். அடியார். நல். உரை.
65. சிலப். ஊர் காண். அடியார். நல். உரை.
66. பிரபு, விமலை. 26
67. கம்ப. 2.5.27
68. திருவாய். 3.5.10
69. கம்ப. 6.6.26
70. கம்ப. 6.14.109
71. கம்ப. 5.5.98
72. தொகையக. பக் 100
73. கம்ப. 4.4.12
74. கம்ப. 4.7.12
75. கம்ப. 5.1.82
76. கம்ப. 5.2.140
77. கம்ப. 5.3.234
78. கம்ப. 6.23

79. கம்ப. 6.25.5
80. கம்ப. 5.5.1
81. கம்ப. 6.25.5
82. கம்ப. 3.11.8
83. கம்ப. 1.3.6
84. கம்ப. 4.1.41
85. திருக். 390
86. திருக். பரிமே 360 உரை
87. கம்ப. 4.2.15
88. கம்ப. 6.21.227
89. கம்ப. 5.212.165
89அ. சிலம்பு. ஊர் காண் அடியார் உரை.
90. திருவாய். ஈடு. 1.1.2
91. கம்ப. 1.10.13 "ஞானிகள் உணர்வின் ஒன்றாய் கட்புலத்து இனையவென்று தெரிவில"
91அ. திருவாய் ஈடு. 1.1.1
92. கம்ப. 2.2.26
93. கம்ப. 6.23.4
94. கம்ப. 2.6.14
95. கம்ப. 3.5.52
96. கம்ப. 6.2.121 "என் கணால் நோக்கிக் காண்டதற்கு எங்கணும் உளன்காண்; எந்தை நின் கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ?"
97. திருவாய். 1.3.1
98. முதல் திரு. வியாக். பக் 13
98அ. கம்ப. 2.4.157
"நீருள எனின்உள மீனும் நீலமும்
.... நானும் சீதையும்
யாருளர் எனின் உளோம்?"
99. வை.ச.சா. வா. வரலாறு. பக் 30
100. திருவாய் ஈடு. 10. கண்ணிநுண். தம்பிரான் படி. பக் 90
101. கம்ப. 5.4.23
102. பெரியாழ். 1.1.1
103. திருப்பா. யிாக். பக் 16
104. திருப்பா. வியாக். பக் 59
105. கம்ப. 5.15.62
106. கம்ப. 5.1.72
107. கம்ப. 5.3.74
108. கம்ப. 5.15.67
109. கம்ப. 2.8.16
110. கம்ப. 2.5.48
111. சிலம்பு. 16 கொலைக். 88
112. கம்ப. 2.5.48 வை.மு.கோ. உரை
113. கம்ப. 2.8.33
114. திருவாய் 6.10.10
115. கம்ப. 2.4.225
116. கம்ப. 4.7.78
117. காரப்பங்காடு வேங்கடசாரியார். ஸ்ரீமத் ராமாயண ஸாராம், பக் 41
118. காரப்பாங்காடு வேங்கடசாரியார், சீதா சரிதம், பக் 20
119. கம்ப. 3.5.115
120. ஸ்ரீ ராமுலு தேசிகன். கோதை தமிழ் அமுதம், பக் 120
121. கம்ப. 6.3.169
122. திருவாசி 2
123. திருமா. 2
124. பெரிய பு. திருக்கூட்டச். 8
125. திருவாய் ஈடு. 3.7. முன்
126. கம்ப. 2.6.41
127. கம்ப. 2.6.45
128. கம்ப. 4.4.17
129. கம்ப. 6.4.126
130. திருவிரு. திவ். தீபிகை. பக் 3
131. திருக். 350
132. திருவாய் ஈடு. 3.7. முன்
132அ. கம்ப. 2.4.5
133. கம்ப. 2.11.35
134. கம்ப. 6.37.232
135. கம்ப. 2.9.58
136. திருவாய் ஈடு. 3.7.1
137. பெருமாள். 10.7
138. திருஅருள். பக் 13
139. திருவாய் ஈடு. 4.6.10
140. கம்ப. 5.5.27

141. கம்ப. 4.16.48
142. கம்ப. 2.1.41
143. கம்ப. 6.3.42
144. கம்ப. 6.3.23.வை.மு.கோ. உரை
145. கம்ப.6.3.23
146. தனிப்பாடல், காளமே. 204
147. பெரியதிரு. 1.1.9
148. கம்ப. 5.4.20
149. திருமுரு. அடி 269
150. கம்ப. 5.15.75
151. பெரியதிரு. 1.1.10
152. கம்ப. 1.17
153. கம்ப. 6.36.122
154. கம்ப. 4.4.71
155. கம்ப.6.14.210
156. கம்ப. 6.14.213
157. திருவாய் 1.3.1
158. திருவாய் ஈடு. 3.6.9
159. கம்ப. 6.3.126
160. கம்ப. 2.6.59
161. கம்ப. 4.17.12
162. கம்ப. 4.2.20
163. கம்ப. 6.14.213
164. கம்ப. 6.9.15
165. கம்ப. 6.17.87
166. கம்ப. 6.3.176
167. கம்ப. 4.4.18
168. கம்ப. 4.2.15
169. கம்ப. 6.4.21
170. கம்ப. 6.4.142
171. கம்ப. 5.5.72
172. காரப்பங்காடு வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயண ஸாரம் பக் 34
173. தனிச்சு. 2. பக் 4
174. Srinivasa Raghavan.A. Visistadavita. P 91
175. கம்ப. 1.5.13
176. கம்ப. 1.5.110
177. கம்ப. 1.6.8
178. கம்ப. 1.5.64
179. கம்ப. 1.6.10
180. கம்ப. 1.6.17
181. கம்ப. 1.9.71
182. கம்ப. 1.22.19
183. கம்ப. 1.22.39
184. கம்ப. 2.3.33
185. கம்ப. 2.3.44
186. கம்ப. 2.11.70
187. கம்ப. 2.12.135
188. கம்ப. 6.4.145
189. கம்ப. 6.37.232
190. கம்ப. 2.6.39
191. கம்ப. 2.6.46
192. கம்ப. 2.6.46
193. கம்ப. 3.3.16
194. பெரியாழ். 3.10.6
195. கம்ப. 5.3.28
196. கம்ப. 4.3.25
197. கம்ப. 6.6.67
198. தனிச்சு 2. பக் 5
199. தனிச்சு. 2. பக் 194
200. கம்ப. 6.4.22
201. கம்ப. 6.4.13
202. கம்ப. 6.4.20
203. கம்ப. 6.4.54
204. கம்ப.6.4.9
205. கம்ப. 6.4.36
206. கம்ப. 6.27.33
207. கம்ப. 6.37.34
208. கம்ப. 3.6.8
209. கம்ப. 1. தற்சிறப்பு. 1
210. கீதை. 18.66
211. கம்ப. 6.17.55
211அ. திருப்பாவை. 29
212. கம்ப. 2.7.76
213. கம்ப. 4.3.27
214. கம்ப. 6.15.134
215. திருப வியாக். பக் 79

216. கம்ப. 6.17.55
217. கம்ப. 6.3.31
218. கம்ப. 6.5.18
219. கம்ப. 3.2.27
220. திருவாய் ஈடு. 10.1. முன்
221. திருவாய் ஈடு. 10.1. முன்
221அ. பி.ஸ்ரீ. இராமானுசர், பக் 269
221ஆ. ஸ்ரீ வசன சூ. 231
221இ. கம்ப. 6.15.356
221ஈ. ஸ்ரீ வசன. பக் 185
221உ. வார்த்தா. வா. 67
221ஊ. கம்ப. 6.2.99
221எ. கம்ப. 6.9.15
221ஏ. கம்ப. 6.3.176
221ஐ. தனிச்சு. 2 பக் 39
222. திருக். 4
223. திருக். 10
224. திருவாய் 5.8.10
225. கம்ப. 1.21.49
225அ. கம்ப. 4.7.96
225ஆ. கம்ப. 4.3.62 வை.மு.கோ. உரை
225இ. கம்ப. 6.6.28
226. கம்ப. 5.3.28
227. திவ்வியார். தீ. திருநெடுந். பக் 96
228. கம்ப. 6.4.154
229. யதீந். பக் 199
230. கம்ப. 1. தற்சி. 1
231. கம்ப. 1. தற்சி 2
231அ. கம்ப. 1. தற்சி. 3
232. இராமசாமி.மு. படிவங்கள் எப்படியோ? பக் 16
233. Ramachandran.R.R. ESSAYS in Philosophy
234. Ramachandran.R.R. ESSAYS in Philosophy
235. கம்ப. 1. காப்புமுத. 1
236. கம்ப. 1. நூலா. வர. பக் 11
237. வங்கீபுரம் ரங்கசாமி ஐயங்கார் ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யங்கள், பக் 15
237அ. ஸ்ரீ வசன சூ. 465
238. வார்த்தா. வா. 191
238அ. கம்ப. 4.2.34
23ஆ. கம்ப. 4.11.7
239. இராமச்சந்திரன்.ப. திருவரங்கத் தந்தாதி ஓர் ஆய்வு. பக் 87
240. கம்ப. 6.25.5
241. கம்ப. 2.1.7
242. கம்ப. 1.7.66
243. கம்ப. 5.2.132
244. கம்ப. 1.11.24
245. திருமாலை வியாக் பக். 237-238
246. திருவாய் 7.5.1
247. திருவாய் 1.5.5
248. பெரியாழ் 2.8.5
249. திருவாய் 1.5.5
250. தனிச் 1 பக் 77
251. வார்த்தா பக் 18
252. வங்கீபுரம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்ரீமத் ராமாயண ரகசியங்கள், பக் 15

5. தடை இயல்பு

அடிக் குறிப்புகள்

1. அருணாசலம்.மு. வைணவ சமயம், பக் 123
2. கம்ப. 6.6.42
2அ. கம்ப. 6.6.42
3. கம்ப. 6.3.48
4. கம்ப. 6.2.102
5. கம்ப. 6.15.92
6. விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம், பக் 15

6அ. கம்ப. 5.4.67
7. கம்ப. 3.8.62
8. கம்ப. 5.4.30
9. கம்ப. 6.3.4
10. கம்ப. 6.2.116
11. கம்ப. 6.2.109
12. கம்ப. 6.2.103
13. கம்ப. 6.13.4
14. கம்ப. 6.13.4
15. கம்ப. 6.13.4
16. கம்ப. 3.7.85
17. கம்ப. 5.2.23
18. கம்ப. 6.2.101
19. கம்ப. 6.4.8.9
20. கம்ப. 6.37.103
21. கம்ப. 3.1.55
22. கம்ப. 2.4.137
23. கம்ப. 2.9.58
24. காரப்பங்காடு, வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 28
25. காரப்பங்காடு, வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 28
26. காரப்பங்காடு, வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 28
27. கம்ப. 2.2.27
28. திருக். பரிமே. 346 உரை
29. திருக். 345
30. கம்ப. 5.1.1
31. நரசிம்மன். பி.ஆர். வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக் 103
32. திருவாய் ஈடு. 4.9.8
33. திருவாய் ஈடு. 4.9.8
34. கம்ப. 2.5.73
35. சிவஞா. சித்தி. சுபக். 178
36. திருவிருத். 10
37. திருக். 10
38. கம்ப. 2.12.76
39. கம்ப. 6.16.53
40. திருக். பரிமே. 353 உரை
41. கம்ப. 6.3.54
42. கம்ப. 6.3.54
43. திருவாய். ஈடு. 5.1.5
44. கம்ப. 4.7.121
45. கம்ப. 4.7.119
46. கம்ப. 4.7.119
47. திருக். 346
48. கம்ப. 4.7.152
49. கம்ப. 5.4.35
50. காரப்பங்காடு, வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 24
51. காரப்பங்காடு, வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 24
52. வார்த்தா. வா. 10
53. ஸ்ரீவசன. சூ. 78
54. திருக். 331
55. கம்ப. 4.7.148
56. அஷ்ட நூற்றெட்டு 12
57. திருவாய். ஈடு. 1 பக். 113
58. கீதை. 3.41
58அ. கம்ப. 5.4.60
59. கம்ப. 1.1.1
60. சத்தியசாயி. அருள்மொழி அமுதம், பக் 35
60அ. கம்ப. 6.27.8
61. கம்ப. 5.4.59
62. ஸ்ரீவசன சூ. 184
62அ. ஸ்ரீவசன சூ. 185
62ஆ. ஸ்ரீவசன சூ. உரை
63. கம்ப. 6.25.13
64. திருவாய். 1.2.3
65. விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம், பக் 37
66. கம்ப. 6.37.350
67. கம்ப. 6.2.70
68. கம்ப. 6.25.13
69. இராமாநுச நூற். 7
70. பி.ஸ்ரீ. ஸ்ரீ இராமாநுசர். பக் 230
70அ. கம்ப. 6.6.73
71. கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.எஸ்.

சாதி மத ஆராய்ச்சி, பக் 41
72. பரிபா. 2.36
73. கம்ப. 6.15.1
74. கம்ப. 5.2.12
75. கம்ப. 6.15.1
76. திருக். 963
77. கம்ப. 6.14.256
78. கம்ப. 3.7.106
79. கம்ப. 5.2.23
80. கம்ப. 3.7.107.உ.வே.சா. பதிப்புக் குறிப்பு
81. கம்ப. 3.1.3
82. கம்ப. 1.6.10
83. தொல். மரபு. 70
84. கலி. பாலை. 9
85. முல்லைப். 378
86. வில்லிபா. அருச். தீர்த். 11
87. அரிச்சந். பு. விவாக. 314
88. கம்ப. 3.8.20
89. திருக். 271
90. திருக். 274
91. திருவாய். ஈடு. 1.5.2
92. கம்ப. 4.7.147
93. கம்ப. 4.7.147
94. ஸ்ரீ விஷ்ணு. சகஸ். பக் 65
95. கம்ப. 6.3.53
96. கம்ப. 6.36.239
97. கம்ப. 6.36.201
98. கம்ப. 6.36.201
99. திருக். 121
100. கம்ப. 6.36.198
101. கம்ப. 3.3.12
102. திருநெடுந். திவ். தீ. உரை. பக் 46
103. கம்ப. 1.7.34
104. கம்ப. 1.1.55
105. கம்ப.1.7.62
106. கம்ப. 5.2.205
107. கம்ப. 3.7.4
108. கம்ப. 6.16.11
109. கம்ப. 5.4.37
110. கம்ப. 2.6.43
110அ. ஸ்ரீ வைஷ்ணவம். பக் 138-39.
111. கம்ப. 6.4.100
112. கம்ப. 4.11.89-95
113. கம்ப. 4.11.89-95
113அ. விலக்ஷண மோக்ஷாதிகாரி. நிர்ணயம். பக் 27
113ஆ. கம்ப. 2.6.43
114. கம்ப. 2.9.98-117
115. திருவாய். ஈடு. 10.3.9
116. திருக். 1196
117. கம்ப. 4.9.12
118. கம்ப. 2.2.21
119. கம்ப. 3.7.100
120. கம்ப. 3.8.95
121. கம்ப. 3.7.100
121அ. தனிச்சு.2. பாரதாதி. பக் 81
122. கௌடி 1. பக். 42
123. கம்ப. 4.11.53
124. கம்ப. 3.7.87
125. கம்ப. 3.7.82
126. கம்ப. 3.7.84
127. கம்ப. 3.7.104
128. நளவெ. சுயம். 80
129. கம்ப. 3.7.86
130. கம்ப. 2.1.20
131. திருக். 889
132. கம்ப. 4.9.12
133. கம்ப. 6.15.354
134. கம்ப. 2.1.66
135. கீதை. 3.37
135அ. முத்துசிவன்.அ. அசோகவனம், பக் 10
136. கம்ப. 6.9.45
137. கம்ப. 6.36.234
138. இராமகிருஷ்ணன்.எஸ். கம்பன் கண்ட அரசியல், பக் 20-21
139. கம்ப. 1.1.1

140. கௌர. 1.36
141. கௌர 1.36
142. கம்ப. 1.35
142அ. கம்ப. 4.10.101
143. கம்ப. 3.7.117
144. கம்ப. 3.7.85
145. திருவாய் 2.8.84
146. கம்ப. 6.37.110
147. கம்ப. 4.1.2-6
148. கம்ப. 2.2.70
149. கம்ப. 5.3.98
150. கம்ப. 4.17.15
151. தனிச்சு. 1. பக் 266
152. கம்ப. 4.7.105
153. கீதை 2.61
154. கீதை 2.62
155. கீதை 2.63
156. கம்ப. 6.15.31
157. கம்ப. 2.3.40
158. கம்ப. 6.21.212
159. கம்ப. 1.7.42
160. திருக். 9438
161. கம்ப. 6.9.45
162. திருக். 1002
163. கம்ப. 3.3.12
164. கம்ப. 6.9.45
165. திருக். 380
166. கம்ப. 2.4.167
167. கம்ப. 6.4.60
168. திருக். 5
169. கம்ப. 5.4.43-44
170. கம்ப. 1.7.15
171. கம்ப. 6.2.71
172. பட்டினத். பொது. 8
173. திருக். 38
174. பிரபோ சந்தி. 39.18
175. ஆண்டாள். திருப். 5
176. கம்ப. 4.3.26
177. ஸ்ரீவசன பக். 327
177அ. தனிச்சு. 2. பக் 45
177ஆ. வார்த்தா. பக் 290
177இ. வார்த்தா. பக் 290
178. கம்ப. 5.3.14
179. கம்ப. 5.3.14
180. திருக். 326. பரிமே. உரை
181. கம்ப. 3.8.12
182. கம்ப. 3.8.13
183. காரப்பங்காடு வேங்கடாசாரியார். ஸ்ரீமத் ராமாயணஸாரம். பக் 28
184. கம்ப. 6.16.4
185. வார்த்தா. பக் 269

6. பேற்றின் இயல்பு

அடிக் குறிப்புகள்

1. திருவாய். 10.9.9
2. திருவாய் ஈடு 5.1. முன்.
2அ. பெரியாழ். திருப்பல். 1.1.2
3. அருணாசலம்.மு. வைணவ சமயம், பக் 66
4. ராதாகிருஷ்ண பிள்ளை.ம. பிற்கால வைணவம், பக் 56
5. ராதாகிருஷ்ண பிள்ளை.ம. பிற்கால வைணவம், பக் 56
6. இராமஸ்வாமி ராமாநுஜ தாசர். ஸ்ரீவைஷ்ணவம், பக் 68
6அ. திருவாய். ஈடு. 9.4.6
7. கம்ப. 6.9.7
8. கம்ப. 3.10.46
9. கம்ப. 6.9.8
9அ. கம்ப. 2.12.77
10. கம்ப. 6.37.120
11. கம்ப. 6.4.114

12. கம்ப. 1.3.2
13. கம்ப. 6.6.70
14. பிருஹ. உப. 6.5.23
15. பக. கீதை. சித்ப. முன். பக். 41
16. கம்ப. 6.18.251
17. திருவாய். ஈடு. 2.8.1
17அ. கத்திய. திர. பக். 41-44
18. கம்ப. 6.18.252.
உ.வே.சா. பதிப்புக் குறிப்பு
19. திருவாய் 2.8.4
20. திருக். பரிமே. உரைப்
21. திருவாய். ஈடு. 10.3.2
21அ. பரிபா. 15.15-16
21ஆ. திருவாய். ஈடு. 2.8.10
22. திருவாய். ஈடு. 10.9.10
23. கம்ப. 1.9.71
24. தனிச்சு. 2. பாரதாதி. பக் 87
24அ. கம்ப. 1.21.49.
25. வார்த்தா. வா. 25
26. பெரியாழ். 1.1.10
27. திருவாய். ஈடு. 4.5.1
28. கம்ப. 6.37.223
29. திருவாய். 3.3.1
30. கம்ப. 6.11.40
31. பட்டின. திருக்கா. 3
32. கம்ப. 6.18.153
33. கம்ப. 2.6.50
34. கம்ப. 6.3.169
35. பாக. 7.2.95
35அ. பரிபா. 5 79-80
35ஆ. கம்ப. 2.12.111
36. திருவாய். ஈடு
37. கம்ப. 6.39.37
38. கம்ப. 6.14.256
39. தனிச்சு. 1. பக் 131-132
40. கம்ப. 2.6.10
41. கம்ப. 4.3.19
42. கம்ப. 6.38.16
43. ராதா கிருஷ்ண பிள்ளை.ம. பிற்கால வைணவம். பக். 111
44. வடிவழகிய நம்பிதாசர் ஸ்ரீ ராமாநுஜ வைபவம், பக் 242
"என்னுயிர் ஒன்றும்அன்றோ
இருநரகடையும்? கேட்ட
மன்னுயிர் பலவும் உய்யும்
மந்திரத்துறுதியாலே
நன்னெறியடையும் என்றே நான்
அது செய்தேன்"
45. ராதா கிருஷ்ண பிள்ளை.ம. பிற்கால வைணவம். பக் 112
46. ஆசாரிய பகுதி. 1.2. பக் 182
47. பெருமாள். 2.1
48. பெருமாள். 2.2
49. பெருமாள். 2.4
50. பெரிய திருவந். 53
51. பெரிய திரு. 8.10.3
52. திருவாய். ஈடு. 3.7. முன்
53. திருவாய். ஈடு. 3.7. முன்
54. திருவாய். ஈடு. 3.7. முன்
55. திருவாய். ஈடு. 3.7. முன்
56. திவ்விய. கண்ணிநுன்.2
57. திருவாய். 10.
கண்ணிநுண். தோற்று. பக் 17
58. கம்ப. 2.12.32
59. ஸ்ரீ வசன . 374
60. பெரியபு. அப்பூதி.
61. பெரியபு. திருக்கூட்
62. குருபரம். இளையாழ் 211
63. கம்ப. 6.3.32
64. ஸ்ரீ வசன. சூ. 196
65. மூன்றாந் திருவந். 75 உரை
66. மணவாளன் கா.சே. வைண சா.வா.அநு. பக் 111
67. கம்ப. 6.3.169
68. கம்ப. 6.3.171
69. கம்ப. 6.37.28
70. திருவாய். ஈடு.1.1.1. பக் 62
71. கம்ப. 6.3.61
71அ. கம்ப. 3.2.18
71ஆ. கம்ப. 3.2.20
72. கம்ப. 2.12.77

73. கம்ப. 6.37.120
74. பெருமாள். திரு. 10.10
75. வார்த்தா. 5ஈ. 338
76. கம்ப. 3.8.215
77. கம்ப. 4.16.45
78. கம்ப. 6.4.116
79. கம்ப. 3.3.21
80. கம்ப. 6.39.20
81. கமலக்கண்ணன். இரா.வ. உலகப்பெருங்கவிஞர் கம்பர். பக் 217
82. வான். யுத். 1.13
83. திருவாய். ஈடு. 2.5.2
84. திருவாய். ஈடு. 4.1.5
85. கம்ப. 6.23.111
86. கம்ப. 6.37.28
87. கம்ப. 6.5.72
88. கம்ப. 5.7.43
89. 6.3.171
90. கம்ப. 5.7.43.உ.வே.சா. பதிப்பு. உரைக்குறிப்பு
91. கம்ப. 5.9.36
92. கம்ப. 6.3.170
93. கம்ப. 5.5.72
94. கம்ப. 6.4.145
95. கம்ப. 6.4.153
96. கம்ப. 6.4.154
97. திருவாய். 7.5.1
98. கம்ப. 3.6.123
99. கம்ப. 6.21.111
100. திருக். 356
101. கம்ப. 3.7.86
102. கம்ப. 2.8.53
103. கம்ப. 6.27.71
104. கம்ப. 6.39.20
105. கம்ப. 6.37.28
106. கம்ப. 6.11.38
107. கம்ப. 6.39.32
108. கம்ப. 6.39.33
109. கம்ப. 6.39.33



பேராசிரியர் முனைவர் அமுதன் நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (பொள்ளாச்சி) முதுகலைத் தமிழ்த் துறைத் தலைவர்.

கல்லூரிப் பருவத்திலேயே காவியங்கள் புனைந்தவர். அரிய ஆய்வாளர், அரிய உரையாளர். 'பொருள் இனிது', 'அடிமலரில் கவி மலர்கள்', 'திருமங்கை ஆழ்வார்', 'அறம் எனப்படுவது', 'அருட்செல்வரும் தவச் செல்வரும்' - நூல்களின் ஆசிரியர். 'வேளாள புராணம்','மாம்பழக் கவிச் சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டு' - முதலிய பல நூல்களின் பதிப்பாசிரியர்.

' உடையவருக்கு வாய்த்த திருவரங்கத்தமுதனார் போலக் கம்பருக்கு வாய்த்திருக்கிறார் பொள்ளாச்சி அமுதனார்'.

- முனைவர் ம.ரா.போ. குருசாமி

' பேருழைப்பின் பெட்டகமான இந்நூல் வைணவத்தில் மூழ்கி, கம்பனின் அமுத கலசத்தை எடுத்தேந்தி வந்த புனிதப் பயணம்'.

- கவிஞர் சிற்பி

கவிதா
பப்ளிகேஷன்

ISBN 81-8345-020-2

9788183450201